சித்த மருத்துவாங்கச் சுருக்கம்

ஆக்கியோன் :
டாக்டர் க. ச. உத்தமராயன், எச். பி. ஐ. எம்.
முன்னாள் இந்திய மருத்துவ இயக்குநர்
சித்தர் அறிவியல் மேம்பாட்டுக்குழு உறுப்பினர்

1983

தமிழ்நாடு அரசு சித்த அறிவியல் மேம்பாட்டுக்
குழுவால் வெளியிடப்பெற்றது.

விலை : ரூ. 53-60

சித்த மருத்துவாங்கச் சுருக்கம்

ஆக்கியோன் :

டாக்டர் க. சு. உத்தமராயன், எச்.பி.ஐ.எம்.,

முன்னாள் இந்திய மருத்துவ இயக்குநர்
சித்தர் அறிவியல் மேம்பாட்டுக்குழு உறுப்பினர்

தமிழ்நாடு அரசு

1983

தமிழ்நாடு அரசு சித்த அறிவியல் மேம்பாட்டுக்
குழுவால் வெளியிடப்பெற்றது.

சித்த மருத்துவாங்கச் சுருக்கத்தின் இரண்டாம் பதிப்பின் முன்னுரை.

சித்த மருத்துவாங்கச் சுருக்கத்தின் இரண்டாம் பதிப்பினை எழுதுவதற்கு என்னுடன் இருந்து திருத்திச் சேர்க்க வேண்டுவன சேர்த்தும் நீக்க வேண்டுபவைகளை நீக்கியும் உதவி செய்த காலஞ்சென்ற டாக்டர் வி. விசுவநாதன், எல்.ஐ.எம். முன்னாள் எஸ்.ஓ.எஸ்.டி.பி. அவர்கட்கு என் நன்றி உரியதாகுக.

இந்நூலினை அச்சிடுங்கால் ஏற்பட்ட சில அச்சுப் பிழைகளை திருத்தித் தந்த தமிழ்ப் புலவர் திரு. ம. முத்துச்சாமி அவர்கட்கும்—இந்நூலை அச்சியற்ற ஆர்வத்துடன் முனைந்து செயல்பட்ட தமிழ்நாடு அரசு மக்கள் நலத்துறை செயலர் உயர்திரு. இலட்சுமிகாந்தம் பாரதி, ஐ.ஏ.எஸ். அவர்கட்கும், இந்திய மருத்துவ இயக்குநர் திரு. விஜயபானு, ஐ.ஏ.எஸ். அவர்கட்கும், இதனை நல்ல முறையில் அச்சிட்டு உதவிய தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநர் அவர்கட்கும் என்னுடைய மனமார்ந்த நன்றி உரியதாகுக.

திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

க. சு. உத்தமராயன்.

371B-3--A

பொருளடக்கம்.

தோற்றுவாய்.

வரிசை எண்.	பொருள்.	பக்கம்.
(1)	(2)	(3)

மருத்துவாங்கச் சுருக்கம்

பாயிரம்.

கடவுள் வணக்கம்.

ஆதி யுமையாட் கருள்மருத்து வாங்கத்தை
ஆதி யுமையருளால் அம்புவியுள்—கோதறுநற்
செந்தமிழால் கூறுதற்குச் செம்பவள வேழமுகன்
கந்தமலர்ச் செஞ்சரணே காப்பு.

I. மருத்துவாங்கச் சுருக்கம்.

'மருத்துவாங்கச் சுருக்கம்' என்னும் தொடர், மருத்துவம்+ அங்கம்+ சுருக்கம் என மூன்று சொற்களாலும் இரண்டு சந்தி களாலும் ஆகியது. எனவே, இது 'மருத்துவத்திற்கு இன்றியமை யாத உறுப்புகளை விளக்கும் சுருக்க நூல்' என்னும் பொருளை யுடையது.

'மருத்துவம்' என்பது என்ன?

'மருந்து' என்னுஞ் சொல் வலித்தல் விகாரம்பெற்று மருத்து' எனவாகி, அதைக்கொண்டு செய்யும் செயலை யுணர்த்த 'மருத்து' வம்' என அமைந்தது.

மருத்துவம்: இம்மொழி, (1) நீக்குகை, (2) மாற்று மருந்து, (3) பரிகாரம், (4) வைத்தியம், (5) சிகிச்சை என்கின்ற பொருள் களைப் பயக்கும்.

மருத்துவம், மக்கள் இருவினைக்கு ஏற்ப அடையும் இன்ப துன்பமிரண்டனுள், வெறுக்கத்தக்க துன்பம் மிக்க வன்மைபெற் றிருப்பினும், அதனை வேரறக் களைந்து, எக்காலத்தும் விரும்பத் தக்க இன்ப வாழ்க்கையைப் பெறவும், இதற்கு இடையூறாய் இருக் கின்ற நரை, திரை, மூப்பு, சாக்காடு, என்பவற்றை ஒழிக்கக் கூடிய அறிவைப் புகட்டி உடலை நிலைக்கச் செய்யவும் பயன்படுவது.

'அங்கம்' ஆவது என்ன?

துன்பமற்ற நிலையே இன்பம். துன்பநீக்கமும் இன்பப் பெருக் கும் யாவராலும் எளிதில் அடையக்கூடியவையல்ல. ஏனெனில், துன்பம்—அகம் புறம் என்னும் இருவழியாலெழுந்து, பற்பல வகையான் நிகழும். அவ்வவ்வகைக் கேற்ப அதைக் களைந்தாலன்றி இன்பம் நுகர முடியாது. ஆகவே அவ்வின்பத்தை நுகர மக்கள்

சில பயிற்சிகளைப் பெறல் வேண்டும். அப்பயிற்சிகள் பலவாயி னும், அவை, காப்பு, நீக்கம், நிறைவு' என்னும் மூன்றுள் அடங்கு வனவாம். ஆகையால், இன்பத்தைத் தரும் மருத்துவ அறிவிற் குத் துணையாய், அக்காப்பு நீக்க நிறைவுகளை நிறைவேற்றற்கு முதற்காரணமாயுள்ள பிரிவுகளே—உறுப்புகளே 'அங்கம்' எனப்படும்.

'சுருக்கம்' என்றால் என்ன ?

அவ்வுறுப்புகள் பலபட விரிந்து கிடப்பதால், அவற்றைச் சுருங் கச் சொல்லி விளங்கவைப்பதே 'சுருக்கம்' எனப்படும்.

இதற்குரியவர் யாவர்?

தீவினையை ஒழித்து நல்வினையைக் கைப்பற்றி ஒழுகும் ஆறறி வினையுடைய மனிதரே இதற்குரியராவர்.

இந்நூலின் நோக்கம் யாது?

மக்கள் விரும்பும் இன்பம், (1) சிற்றின்பம், (2) பேரின்பம் என இருவகைப்படும்.

(1) சிற்றின்பம்—சின்னாள் நுகரப்படுவதேயன்றி, எந்நாளும் நுகரப்படுவதன்று.

(2) பேரின்பம்—என்றும் அழியாதது. எக்காலத்தும் நுகரக் கூடியது.

கடவுளருளாற் பெறக்கூடிய இப்பேரின்பத்தை நாம் அடை தற்கு அடிப்படையாயுள்ள—1. அறம், 2. பொருள், 3. இன்பம் எனச் சொல்லப்பட்டவைகளைக் கைப்பற்றி நன்னெறியில் ஒழுக வேண்டும். இது கைவரற்கு மக்களுடம்பே துணைக்கருவியாம். ஆயினும், மக்கள் உடம்போ பிறவி, பிணி, துன்பம் இவற்றால்பற்றப் பட்டதாயும், நிலையற்றதாயும் உள்ளது; இதனால், வீடு பேற்றிற் குரிய முப்பயனையும் பெற இயலாது துன்புறுகிறது. அத்துன்பத் தினின்றும் நீங்கி அப்பயனையடைய நீண்ட ஆயுள் வேண்டும். ஆயினும், அப்பயன், நோயற்ற வாழ்க்கையைப் பொருந்தியும், அந் நோயற்றவாழ்க்கை, நன்னிலையிலுள்ள உடல் தத்துவ மனத்தத்துவ ங்களைப் பொருந்தியும், இத்தத்துவங்கள் வினையைப் பொருந்தியும் நிற்கும். ஆகையால், இவ்வுடலை வன்மையடையச் செய்து கொள் வதற்குரிய வழிகளைக் கூறுவதே இந்நூலின் நோக்கமாம்.

''ஆயுள் மாமறை யேமறை யாமெவ்வா றென்னின்
ஆய வீடடை வோர்கள்மா னிடர்களே யல்லால்
ஏய வேறிலை யவருடல் வீந்திடா தியற்றத்
தூய நன்மருந் துரைத்தலா லாமெனச் சொல்வாய்''

(தேரையர்)

என்பதனாலறிக.

இன்ப துன்பங்களை நுகர்வது எது?

'இன்பத்தையேனும், துன்பத்தையேனும் அல்லது இவ்விரண்டையுமேனும் நுகர்வது எது? உடலா, உயிரா? அல்லது இவ்விரண்டுடன்கலந்து இவைகளாலறியப்படாது பொருந்தி, உயிர்க்குயிராய் விளங்கும் இறைப்பொருளா? என்கிற ஐயங்களும் வினுக்களுமுண்டாகும். சமயந்தோறும் கொள்கைகள் வெவ்வேருய் இருப்பினும் மருத்துவ நூலின் கொள்கை, அவ்வின்ப துன்பங்களை நூகர்வது, உயிருடன்கூடிய உடலேயாகும்.

''வினைப்போகமே ஒரு தேகங் கண்டாய்'' எனப் பட்டினத்தடிகள் கூறியபடி, வினையினுல் ஏற்பட்ட உடல் சடமாதலின், இன்பதுன்பத்தை அது நுகர்தற்கிடமில்லை என்பதேயாம். இனி,

ஓசையைச் செவியால் ஓர்ந்தும்
உருவினைக் கண்ணு லூற்றும்
நாசியாற் கந்தங் கொண்டும்
நாவிஞு லிரதந் துய்த்தும்
பூசிய தோலி ஞலே
புலப்படப் பரிச முற்றும்
ஆசற உடலில் நிற்கும்
அறிவுகாண் ஆன்மாத் தானே.''

என்னும் இச் செய்யுள் உயிரைக் குறிக்கும். அவ் வுயிர் அறிவாகவே இருத்தலின், அவ்வறிவு தனியாய் நின்று அவ்வின்பதுன்பங்களை நுகர்தற்கியலாது. ஆகவே, உடலுடன் கூடிய உயிரே இன்பதுன்பங்களை நுகருந்தன்மையுடையது.

அன்றியும், அவ்வின்ப துன்பங்கள் சடமாதலின், அவை தாமே வந்து உடலில் நுழைந்து, உடலோடுங்கூடிய உயிரானது தம்மை அனுபவிக்குமாறு செய்து, அக்கழிவினுல் ஆன்மாவைத் து ய்மைப் படுத்த அவற்ருல் இயலாது. ஆதலால், உயிர்க்குயிராய் விளங்கும் பரம்பொருளே, அவ்வினைகளை அவ்வுடலோடுங் கூடிய உயிர்க்கு அளவுப்படி ஊட்டி, அதை நுகருமாறு செய்வன். ஆயினும், அவ்விறைவனுக்கு அவ்வின்பதுன்பங்களில் தொடர்பில்லை. ஆனல், அவன் சான்ருய் நிற்பன். இதனை,

வளம்பெறு ஞான வாரிவாய் மடுத்து
மண்ணையும் விண்ணையுந் தெரியா
தளம்பெறுந் துரும்பொத் தாவியோ டாக்கை
ஆனந்த மாகவே அலந்தேன்;
களம்பெறு வஞ்ச நெஞ்சினர் காணுக்
காட்சியே! சாட்சியே! அறிஞர்
உளம்பெறுந் துணையே! பொதுவினில் நடிக்கும்
உண்மையே! உள்ளவா றிதுவே.''

எனத் தாயுமானுர் கூறியவாற்ருனும் அறிக.

இந்நூலுக்கு முதல் நூல் எவை?

இந்நூல் தொகுப்பதற்கு ஆதாரம் முதல் நூலாகிய தென் மொழி மருத்துவ நூற்களே என்பவற்றை,

"நுட்ப மருத்துவ நுட்ப முரைப்பாம்
நுவல்வழி வாகட ருண்மையு மிஃதே
நுதல்விழி யார்முன் நுதலிய திஃதே."

என்று தேரர் கரிசலில் கூறுவதான் அறிக.

தென்மொழி மருத்துவ நூற்கள் யாவை?

அவை, நரை, திரை, மூப்புச். சாக்காடுகளைத் தவிர்த்து, ஆயுளை நீடிக்கச் செய்யச் சிவபெருமானாலும், அவன் வழி வந்தாராலும் தென் மொழியாகிய தமிழில் உரைக்கப்பட்ட மருத்துவ நூற்களேயாம்.

தென்மொழி மருத்துவ நூல் வரலாறு.—இத் தென்மொழி மருத்துவ நூல், சிவபெருமான் உமையவளுக்கும், அவள் நந்திப் பெருமானுக்கும், நந்திப் பெருமான் தன்வந்தரிக்கும், தன்வந்தரி அச்சுவினித்தேவர்கட்கும் இவர்கள் விரிந்த அலைகளையுடைய கடலையுண்ட அகத்தியருக்கும், அவர் புலத்தியருக்கும், அவர் தருமசௌமியருக்கும், அவர் தேரருக்கும், தேரர் தன் வழிவந்த ஏனையர்க்கும் வெளியிடப்பட்டதாய்ச் சொல்லப்படுகிறது. இதனை,

"ஆதிபரை நந்திஅமு தக்கடத்தோ டுதித்தோன்
அச்சுவினித் தேவர்விரி யலைகடலை நுகர்ந்தோன்
கோதிலரும் புலத்தியனும் தருமசவு மியனிக்
குரவரும்"

குறிப்பு.—இதுவன்றி வேறு சில பரம்பரைகளைக் கூறவும் கேட்டுள்ளோம்.

II. சித்த மருத்துவச் சிறப்புகள்.

சித்த மருத்துவத்தின் தொன்மை.—மருத்துவ நூல்களை எழுதிய பெரியார்கள், தங்கள் வழிபடு கடவுளை வணங்கி மருத்துவப் பரம்பரையைக் கூறுகிறார்கள். அஃதாவது, அவர்கள்மருத்துவ நூற்களை எவ்வாறு அடைந்தார்கள் என்பதைச் சுருக்கமாக இயம்பியுள்ளார்கள். வடமொழி நூல்களை எழுதிய வாக்படர் அச்சுவினித் தேவர் முதலிய இருடிகளிடமிருந்து தன்வந்திரி பகவான் வழியாய் ஆயுர்வேதம் வந்தது எனக் கூறியிருக்கின்றார்கள். தென்மொழி மருத்துவ நூல்களை எழுதிய சித்தர்கள் அவை பரமசிவனிடமிருந்து நந்தி வழியாயும் அவரிடமிருந்து அகத்தியர் புலத்தியர் முதலிய சித்தர்கள் வழியாயும் தமக்குக்

கிடைத்தனவென்று எழுதியிருக்கின்றார்கள். இயற்கை, செயற்கை ஒழுக்க வழிகளிற்பயின்ற இக்காலத்து மக்களாகிய நமக்கு இஃது ஒருவிதப் புதுமையாகவே தோன்றுகின்றது. ஏனெனில், 'உருவமாகவும் உருவமின்றியும் எங்கும் நிறைந்தவராய் இருக்கும் கடவுளிடத்திருந்தும், தேவர்களிடத்திருந்தும் அக்காலத்தில் இம் மருத்துவ நூல்கள் தோன்றின, எனின், இக்காலத்துப் பெரும் பாலும் சிதலுக்கு இரையாகிய அம்மருத்துவ நூல்களையெல்லாம் மறுபடியும் அப்பெரியார்கள் ஏன் நமக்கு அளிக்கலாகாது என்றும்; மேற்கூறியபடி கடவுளிடத்திலிருந்து எவ்வாறு இந்த வைத்திய நூல்கள் உண்டாகக் கூடும்? என்றும் கேட்க வழி ஏற்படுதலின், இவையெல்லாம் புராணக்கதையென்றே எண்ணுதற்கு ஏதுவாகின்றன. ஆயினும், மருத்துவத்தில் மிக்க தேர்ச்சிபெற்று, நன்முறையில் ஒழுகி, மேன்மையுடன் புகழ்பெற்று வாழ்ந்த பெரியார்களைக் கடவுளைப் போன்றே போற்றிவாழ்தல் தமிழ் மக்களின் இயல்பாதலை நாம் இன்றும் கண்கூடாகக் காண்கின்றோம். ஆகவே அக்காலத்தில் மிகவும் கீர்த்தி பெற்று வாழ்ந்த மருத்துவப் பெரியார்களைக் கடவுள் எனவே மதித்துக் கூறினர் போலும்!

மருத்துவ நூல்களேயன்றி ஏனைய தமிழ் நூல்களும், தேவர்களிடமிருந்தும், கடவுளிடமிருந்தும் நமக்குக் கிடைக்கப்பெற்றன என்று கூறப்படுவதையும் அறிகின்றோம்.

இக் காலத்துத் தென்மொழி வைத்தியர்கள் யார்?

இக்காலத்தில் தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவத்தைப் பயன்படுத்தி வரும் மருத்துவர்கள், இருபத்தையாயிரவருக்கு மேல் உள்ளார்கள் என அறிகிறோம். இவர்கள் முக்கியமாகத் தென்னிந்தியாவிலும், வடவிந்தியாவின் சில பாகங்களிலும், பர்மாவிலும், இலங்கையிலும் மருத்துவம் செய்து வருகின்றார்கள்.

சித்த மருத்துவ நூற் பெருமை.—சித்த மருத்துவ நூல்கள் மிகவும் பெருமை பொருந்திய தெவ்வாறெனில் அந் நூல்கள் பெருமை வாய்ந்த சித்தர்களால் எழுதப்பெற்றதனாலாம். அவர்கள் காய சித்தியையும் உயிர்ச் சித்தியையும் பெற்று ஞானத்தை அடைந்து, நூல்களை வெளியிட்டார்கள் என்பது கீழ்க்கூறப் படும் செய்யுளால் விளக்கமாகப்புலனாகும்.

''அடைவான ஆயுள்வே தந்தன் னைத்தான்
ஐயருமே அம்மைதனக் கருளிச் செய்ய
நடைவான அம்மையும்நந் திக்குச் சொல்ல
நந்தியுமே சீடர்களுக் கருளிச் செய்யத்
தடைவான தன்வந்தரி அசுவி னிக்குச்
சமரசமாம் அகத்யமுனி தேரை யர்க்கு
நிடைவான ரிஷி தேவர் சொன்ன நூலின்
நேர்மையெல்லாம் விவரமாய் நிகழ்த்தி னேனே.''

என யூகிமுனிவர் கூறியுள்ளார்.

சித்த மருத்துவ முறைகள் மிகவும் சிறந்தவை.—பண்டைக் காலத்தில் இந்தியாவில் வழங்கப்பட்ட மருத்துவ முறைகளை 'ஆயுள் வேதம்' எனவும் 'மருத்துவம்' எனவும் கூறியுள்ளார்கள். இவ்வாறு வழங்கப்பட்டவை வடமொழி, தென்மொழிகளைக் கற்றவர்களால் கற்பிக்கப்பட்டன. சிறந்த முறையில் ஒவ்வொரு வரும் தத்தமக்குத் தெரிந்தவரையில் இம்மருத்துவ முறைகளை விரித்து எழுதியும் வழங்கியும் வந்தனர். இம்முறையில் வட மொழிச் சார்பான ஆயுள் வேதியர்க்கும் தென்மொழிச் சார்பான சித்த மருத்துவர்க்கும் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டன. எங்ஙன மெனில், சித்த மருத்துவர் தமது இடையறு முயற்சியினுல் மருத் துவ முறைகளைச் சிறந்தவகையில் மேம்படுத்தினர். அவர்கள் நோய்கட்கு ஏற்ற மருந்துகளுள் மூலிகைகள் சிறப்புடையவை அல்ல என அறிந்து மேலான வழிகளை ஆராய்ந்து முக்கியமான மருந்துகளை உலோகம், உபரசம், உப்பு, பாடாணம் என்பவற் றைக்கொண்டு செய்து பிணிகளுக்குப் பயன்படுத்தி அழியாச் சிறப்பெய்தி வந்தார்கள். இது பற்றியே தேரையரும்,

' சூதகந்தி தாதுபற்பஞ் சொன்னநாட் டார்சிகிச்சை
ஓதரிய மூலியிம்மண் ணூர்ச்சிகிச்சை—வேதடரும்
சத்திரசா ராக்கினிநி சாசரச்சி கிச்சையென்றே
முத்தரத்த தாகும் மொழி.

(ப.கு.சி.)

எனச் சித்தமருத்துவம் தேவர்கள் எவ்வாறு மேம்பட்டவர்களோ அவ்வாறே மேம்பட்டதெனக் கூறினர்.

சித்தர்கள் பற்பம், செந்தூரம், களங்கு, கட்டு முதலியவைகளைச் செய்யும்விதம்.

தென்மொழி சம்பந்தமான சித்த மருத்துவர்கள், இரசம் உப ரசம், உலோகம், உப்பு, பாடாணங்கள் முதலியவற்றை மருந்து வகையிற் செய்து உபயோகிக்கும் வகையில் மிகவும் உழைத்தார் கள் என்பது அவர்கள்எழுதியநூல்கள்வாயிலாக அறிகின்ருேம். இர சம், கந்தகம், உலோகம், உப்பு, உபரசம் ,பாடாணம் ஆகிய பொருள் களை இம்மருத்துவர், மெழுகுகளாகவும், சுடர்த்தைலங்களாகவும் பதங்கங்களாகவும் கட்டுகளாகவும், சுண்ணங்களாகவும் உபயோகி த்தனர்; இவையன்றி; நெருப்பிற்குப் புகைந்தோடும் இரச உபரச பாடாணங்களை நெருப்பிற்கு ஓடாமற் கட்டுப்படுத்தியும், அவை களைப் பெருந்தீயினுள் அமைத்துப் பற்பசெந்தூர சுண்ணங்களா கச்செய்தும், மங்காப் புகழ்படைத்துத் தீராநோய்களையெல்லாம்

தீர்த்து வந்தனர். இவ்வாறு நெருப்பிற்குப் புகையும் சரக்கு களைப் புகைந்தோடாமல் தடுப்பதற்கு அவர்கள் பயன்படுத்திய வழிகளுட் சில,

(1) ஏகமூலிகைப் பிரயோகம்

(2) மாரணப் பிரயோகம்

(3) திராவகப் பிரயோகம்

(4) செய் நீர்ப் பிரயோகம்

(5) முப்புச் சுண்ணப் பிரயோகம்

என்பவையாம்.

1. ஏக மூலிகைப் பிரயோக விவரம்.—இது சில சரக்குகளை ஐம்பூதக் கூட்டுறவின் முறையே சேர்த்து முடித்து உபயோகிப்ப தாம்.

2. மாரணப் பிரயோகம்.—இது சரக்குகளின் சத்துரு மித்துரு ஆகியவற்றை அறிந்து, ஒரு சரக்கின் சத்துருவால் அதைக்கொன்று அதனுருவத்தை மாற்றிப் பின்னர் அதற்கு வலிமை கொடுக்க வேண்டி மித்துருவை உறவாக்குவதாம்.

3. திராவகப் பிரயோகம்.—இது சில உப்புகளைப் பஞ்சபூத முறையறிந்து ஒருங்கு சேர்த்துத் திராவகப் பானையிலிட்டுத் திரா வகம் வடித்து, அத் திராவகத்தின் உதவியால் சரக்குகளை மடிய வைத்து, பற்ப செந்தூர சுண்ண வடிவாய்ச் செய்துகொள்வ தாம். (உ-ம்.) வெடியுப்புத் திராவகம்.

4. செய்நீர் பிரயோகம்.—இது சில சரக்குகளை முறைப்படி சேர்த்து, நீர் வடிவமாக அவற்றை மாற்றி தீக்குப் புகைந்தோடும் சரக்குகளை ஓடா வண்ணம் தடுப்பதற்கு உபயோகப்படுத்து வதாம். (உ-ம்.) வெடியுப்புச் செய்நீர், அண்ட எருக்குச் செய் நீர்.

5. முப்புப் பிரயோகம்.—இது 'பூநீறு' எனப்படும் ஓர் உப் பைச் சுண்ண வடிவமாக மாற்றி உபயோகிக்கும் முறையாம். பல வகைகளுள் இஃதும் ஒன்றும்.

குறிப்பு:—

சிலர் குருபற்பம் குருதாம்ரம், துரிசுகுரு எனவெவ்வேறு **சுண்ணங்களைத்தாம்** செய்யும் மருந்துகளுல். சேர்த்துச் செய்வர் சிலர், எல்லா மருந்துகட்கும் **வன்மை** கொடுக்கும் பொருட்டுப்பூநீற்றைச் சுத்திசெய்துநெய்ப்புத் **தன்மையைப் போக்கி** உபயோகிப்பதுண்டு.

உடற் சித்தி.

சித்தர்கள் மக்கள் நோயுற்ற காலை அந் நோயைப்போக்கும் மருந்துகளைக் கண்டுபிடித்ததுமல்லாமல் முத்தி பெறும் வழியையும் நாடினுர்கள்; அதாவது உடலானது அழியாதிருக்கும் சாதனங்களைப் பெரிதும் தேடி அடைந்தார்கள். இதைக் குறித்தே

''தேகமியா தேனுமொரு சித்திபெறச் சீவன்முத்தி
ஆகுநெறி நல்லநெறி.''

எனத் தாயுமானவரும்,

''நரைமரண மூப்பறியா நல்லவுடம் பினரே
நற்குலத்தார் என அறியீர்''

எனவும்,

''செத்திறந்து போய்க்கதியைப் பெறநினைந்தே ஏமாந்த
பேதையைப்போல் எனைநினையேன்''

என இராமலிங்க சுவாமிகளும் கூறினுர்கள்.

உயிரும் உடம்பும் சித்தியடைதலையே தேடிய சித்தர்கள், அன்பாலும், யோகவழி நிலையாலும், மணி, மருந்து, மந்திரங்களின் துணையாலும் அமிர்த சித்தியாகிய இறவாத நிலையென்னும் உருவ சித்தியும் அருவ சித்தியும் உருவ அருவ சித்தியும் பெற்றுர்கள்.

இவ்வாறு உடற சித்தி அடைவதற்கு ஏற்ற முறைகளுள் அடங்கிய மருந்துகளின் விவரம் :—

கற்ப முறை.

அவர்கள் மூலிகைகள், இரசங்கள் உப்புகள் உபரசங்கள் முதலியவற்றைச் சிறந்த முறையில் மருந்தாக அமைத்து அவற்றை உடல் அழியாமல் இருத்தற் பொருட்டு உபயோகித்தார்கள். இவ்வாறு உபயோகித்த மருந்துகளையே 'கற்பம்' என்பர்.

மேலும், அப்பெரியார்கள் இரசத்தை மணியாகக் கட்டி, கெட்டியாக்கிஅதனைத் தங்கள் சித்திக்கு வேண்டியவழியில் உபயோகித்தார்கள் என்பதையும் அவர்கள் எழுதிய நூல்கள் வழியாக நாம் அறிகின்றேம். ஐந்து உலோகங்களையும், அவற்றின் உருவ அமைப்பையும் மாற்றி அவை மேம்பாடு அடையும் தன்மையைப் பெறவைக்கும் வல்லமையும் சித்தர்களிடம் இருந்தன என்பதற்கு அவர்களால் இயற்றப்பெற்ற ஏராளமான வாத நூல்களே ஆதாரமாகும். தென்னிந்திய மருத்துவ நூற்களிற் காணப்படும் மருந்து வகைகள் வேறு; வட இந்திய வாகடங்களிற் காணப்படும் மருந்து வகைகள் வேறு; எவ்வாறெனின், தேரையால் கூறப்பட்ட உட்பிரயோக மருந்துகள் முப்பத்திரண்டனுள் காணப்படும் உருக்கு, கட்டு. களங்கு, சத்து முதலியன தென்னுட்டிற்கே சிறப்பானவை.

சித்தர் சரக்கு வைப்பு.

இயற்கையாய்க் காணப்படும் உப்புகள், உபரசங்கள், பாடாணங்கள் முதலியவற்றைச் செயற்கையாய்ச் செய்யும் திறமை தென்னிந்திய வைத்தியர்களிடம் பெரிதும் இருந்து வருகிறது. இவ்வாறுச் செயற்கையாய்ச் செய்யும் முறைகளைப் போகர் ஏழாயிரம், அகத்தியர் அமுத கலைஞானம், சட்டமுனி சரக்கு வைப்பு, பாண்ட வைப்பு என்னும் நூல்களிலும் வேறு சில நூல்களிலும் காணலாம்.

III. ஐம்பூதக் கொள்கையும் மருத்துவத்தில் பொருந்தும் விதமும்.

இந்நிலவுலகில் உருவம் பெற்றும் உருவம் பெறுமலும் நிலை பெற்றுள்ள பொருள்கள் யாவும், இயற்கையாய் உள்ள மூன்று சக்திகளாகிய படைத்தல், காத்தல், அழித்தல் என்ற இவற்றுள் ஒன்ருகிய படைக்கும் வன்மையால் தோன்றி, காக்கும் வன்மையாற் சிலகாலம் நிலைபெற்று, பின்பு அழிக்கும்வன்மையால்அழிந்து மறுபடியும் தோன்றியும் நிலைத்தும் அழிந்தும் இவ்வாறே மாறி மாறி வரும்.

இவ்வாறு கூறப்பட்ட மூன்று சக்திகளையும் ஆன்ருேர் முறையே நான்முகன், விட்டுணு, உருத்திரன் என்று வழங்கினர். இம் மூன்று சக்திகளும் ஓரிடத்தில் ஒடுங்கும். அதனைப் பரப்பிரமம் என்பர். இவ்வாறு படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் இவற்றின் வாயிலாக நிகழும் இவ்வுலகம், ஐம்பூதமயமானது என்பது மரபு. ஏனெனில், மனிதன் உலகத்தில் உள்ள பொருள்கள் யாவற்றையும் தன் ஐந்து இந்திரியங்களைக் கொண்டே அறிகின்ருன் என்பது வெளிப்படை.

பொறி.	பொருள்.	பூதம்.	புலன்.
கண்	உருவம்	தேயு	பார்த்தல்
காது	ஓசை	வெளி	கேட்டல்
வாய்	சுவை	நீர்	சுவைத்தல்
மூக்கு	நாற்றம்	மண்	மோத்தல் (முகர்தல்)
மெய்	ஊறு	வளி	உணர்தல்

இவ்வைம் பொறிகளும், இவற்றின் தொழில்களும் ஒவ்வொரு பூதத்தின் இயற்கையளவாய் உண்டானவை என்பர். இவ்வாறு கூறிய ஐவகைத் தன்மைகள், ஒரு நிலைமையில் நாம் கண்கூடா.. அறியும் வல்லமைக்கு அடங்கியும், வேறு ஒரு நிலைமையில் அவ் விதம் அறியும் வல்லமைக்கு எட்டாத நிலையிலும் இருக்கும். எவ் வாறெனில், மேற்கூறிய பூதங்கள் ஐந்தும் தம்முள் ஒன்றுபட்டு ஒருவிதத் தன்மையிற்கூடி நிற்குங்கால், நமக்குக் கட் புலனுகும், என்பதும், அவ்வாறன்றித் தம்முள் ஒன்றுபட்ட நிலை கெட்டுக் குழம்பி நிற்குங்கால், நமக்குக் கட்புலனுகா என்பதும் அறிவுடை யார்கூற்று. இந்நிலைகளை முறையே பருநிலை (ஸ்தூலஸ்திதி) என்றும் நுண்ணிலை (சூக்கும ஸ்திதி) என்றும் கொண்டனர்.

பரு நிலைகள் யாவும் ஐம்பொறிகளின் வழியாய் அறியப்படு வன. ஆதலால், அவை ஐம்பெரும் பூதங்களினுல் ஆகியவை என்றும் பருநிலைகெட்டு நுண்ணிலையில் இருப்பவையாவும் நுண்ணிய ஐம்பூதங்களினுல் நிலைபெற்று இருக்கின்றன என்றும் அறியவேண்டும்.

இவ்வாறு நுண்பூதங்கள் ஐந்தும் மூலப்பிரகிருதியினிடத்தே தோன்றினவென்று வழங்கும் கொள்கையும் உண்டு. சுருங்கக்கூறு மிடத்து, மூலப்பிரகிருதி யினின்று மாயை தோன்றியது எனவும் கொள்வர். மூலசக்தியினிடத்தே முக்குணமும் உண்டு. அவை சத்துவ, ராஜஸ, தாமஸ குணங்கள் எனப்படும். தாமஸ குணத்தி லிருந்து நுண்ணிய ஐம்பூதங்கள் பஞ்சீகரிக்கப்பட்டு, ஐம்பெரும் பூதங்கள் அல்லது பஞ்சீகரண பூதங்கள் தோன்றின. இவ்வாறு தோன்றினமையால், ஐம்பூதங்களில் மேற்கூறிய முக்குணங்கள் அமைந்திருக்கின்றன.

பஞ்சபூத பஞ்சீகரணம் என்பதியாது?

சூக்கும பஞ்சபூத தன்மாத்திரைகளாகிற ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி ஆகியவற்றுள் ஒன்றிலிருந்து ஒன்று தோன் றியது என்று கொள்வர். இவை யாவும் ஒன்று சேருமிடத்து, நுண்ணிலை கெட்டு, பருப் பொருளாய், ஐம்புலன்கட்குப் புலனு கும். இவ்வாறு இவை ஒன்று சேருமிடத்து, சிலமிகுந்தும் சில குறைந்தும் சேரலாம். ஏற்றத்தாழ்வாய் ஒன்று சேருவதால், ஸ்தூ லப்பிருதிவி பூதமும், ஸ்தூல அப்புப் பூதமும், ஸ்தூல தேயுப் பூதமும், ஸ்தூல வாயுப் பூதமும், ஸ்தூல ஆகாயப்பூதமும் தோன்றுகின்றன.

இவை சேருமாறு :—

பிருதிவி	அப்பு தேயு வாயு ஆகாயம்	அப்பு	தேயு வாயு ஆகாயம் பிருதிவி	தேயு	வாயு ஆகாயம் பிருதிவி அப்பு	வாயு	ஆகாயம் பிருதிவி அப்பு தேயு	ஆகாயம்	பிருதிவி அப்பு தேயு வாயு

இவ்வாறு ஸ்தூலமாய்த்தோன்றும் பூதம் ஒவ்வொன்றிலும் முக்குணமும் முன் எடுத்துக்காட்டியவாறு கலந்திருக்கும். ஸ்தூல பூதங்கள் ஒனறுடன் ஒன்று கலப்பதனுல், உலகத்திலுள்ள பொருள் கள் யாவும் உருப்பெற்று நிற்கின்றன.

ஐம்பூதமயமான உலகப்பொருள்களை வகுக்கும் விதம்.

உலகத்திலுள்ள பொருள்கள் யாவும் ஐம்பூதமயமானவை என் பது தத்துவ நூல்களின் வாயிலாய் நாம் அறியக்கிடப்பினும், அவை இருபெரும்பிரிவில் அடங்கும். அவை: (1) இயங்கும் பொருள், (2) இயங்காப் பொருள் என்பவை.

இயங்கும் இயங்காப், பொருள்களை வகுக்கும் விதம்.

இயங்கும் பொருள்கள் : (1) உயர்திணைப் பொருள்கள், (2) அஃறிணைப் பொருள்கள் என இரு வகைப்படும்.

உயர்திணைப் பொருள்கள் : மக்கள், தேவர், நரகர்.

அஃறிணைப் பொருள்கள்: உயர்திணையல்லாத இயங்கும் பொருள்களும் இயங்காப் பொருள்களுமாம். மேற்கூறிய திணை அளவாய் வகுத்தல் தேரையர் கொள்கை என்பதை, 'அஃறிணை உயர்திணை' ஆகிய இரண்டனுள் அறிமாக்கட்கே நூலமைப்பர் மெய்ப்பிணிக்குள்'' என்பதால் அறியலாம்.

இயங்கும் பொருள்கள் அமையும் விதம்:

(1) நகர்தல்—நகர்வன—பாம்பு முதலியவை.

(2) ஊர்தல்—ஊர்வன—அட்டை முதலியவை.

(3) நடத்தல்—நடப்பன—மிருகங்கள் முதலியன.

(4) பறத்தல்—பறப்பன—பறவை முதலியன.

(5) நீந்துதல்—நீந்துவன—மீன் முதலியன.

இயங்காப் பொருள்கள் : புல், பூண்டு, செடி, கொடி, மரம், உலோகம் முதலியன.

இன்னும் உலகத்தில் உள்ள பொருள்களைத் (1) தாதுப் பொருள் (2) தாவரப்பொருள், (3) சங்கமப்பொருள் என்றும் வகுக்கலாம்.

தாதுப் பொருள்களில் அடங்குவன : இரசம், உபரசம், உப்பு பாடாணம், உலோகம் என்பன.

தாவரப் பொருள்களில் அடங்குவன : மரம், செடி, கொடி' புல், பூண்டு என்பன.

சங்கமப் பொருள்களில் அடங்குவன : நடப்பன, நகர்வன பறப்பன, நீர் வாழ்வன என்பன.

இவ்வாறு கூறிய பொருள்கள் யாவற்றையும் மருத்துவ மாணவன் ஓரளவிலேனும் கற்றறிதல் வேண்டும். சங்கமப் பகுதியைச் சார்ந்த மனித உடல் அமைப்பையும், அதன் தொழில்களையும் விரிவாய் அறிதல் வேண்டும். ஏனெனில், மனிதன் நோயற்ற காலத்து இயற்கையாயிருக்கும் த்ன்மையை அறிந்தாற்றான் நோயுற்ற காலத்துத் தன் இயற்கைக்கு மாறான குணங்களை அறிந்துகொள்ள ஏதுவாகும். மனிதன் அல்லாத மற்றைய சங்கமப் பொருள்களினது அமைப்பையும் அறிதல் முக்கியமானது ஏனெனில், இவற்றுள் சில மருந்துகளுக்குப் பயன்படும். உதாரணமாகச் சில மிருகங்களின் தசை, புனுகு, புனுகுச்சட்டம், கத்தூரி கோரோசனம், பால் முட்டை, முட்டையோடு முதலியவைகளும் உபயோகம் ஆகின்றன. இவையன்றிச் சில உயிர்களினால் மனிதனுக்கு விடம் உண்டாகித் தீங்கு உண்டாகலாம்; அவற்றையும் அறிய வேண்டும்.

தாதுப்பொருள்களும் தாவரப்பொருள்களும் ஏராளமாய் மருந்து வர்க்கத்திலும் பத்திய வர்க்கத்திலும். சேர்கின்றன. ஆகையால், அவற்றையும் நுட்பமாய் அறிதல் வேண்டும். மனிதன் எப்பொருளை அறிவதற்கும் உரிய கருவிகள் ஐம்பொறிகள் என்பதை முன்னமே கூறினோம். அதாவது காதால் கேட்டும், மெய்யால் பரிசித்தும், கண்ணால் பார்த்தும், நாவால் சுவைத்தும் மூக்கால் மோந்தும் அறிந்துகொள்ளலாம். ஆகவே, மேற்கூறிய தாது, தாவர சங்கமப் பொருள்களை ஐம்பூதச் சேர்க்கையால் ஐம்பொறிகளைக்கொண்டே அறிய வேண்டும் என்பது தெளிவு. பெரும்பான்மையும் தாது, தாவரப்பொருள்களை அறிவதற்கு எல்லாப் பொறிகளும் வல்லமையுள்ளன .ஆயினும், ஆன்றோர் அவற்றுள் சிறப்பாய்ச் சுவை அறிவைக் கொண்டே இவற்றைப் பெரிதும் அறிந்து பொருள்களின் சுவையைக் கூறியிருக்கின்றனர். உதாரணமாக: எலுமிச்சம்பழத்தை எடுத்துகொள்வோம். இதை மூக்கினால் மோந்தும், நாவால் சுவைத்தும்,கண்ணால் பார்த்தும் அறியலாம். இவ்வாறிருப்பினும் இவற்றுள் முக்கியமானது சுவையே எனக்கருதி அதன் வழியாய்ப் பதார்த்தங்கட்கு விவரம் கூறுகையில் எலுமிச்சம்பழத்தின் சுவை—புளிப்பு, வீரியம்—சீதம், பிரிவு—புளிப்பு என்பதனால் அவை அளவாக ஒவ்வொரு பொருளின் ஐம்பூதக் கூட்டுறவையும் அறிந்துகொள்ளலாம்.

எவ்வாறெனில், ஒவ்வொரு சுவையும் இரண்டு பூதங்கள் ஒன்று சேர்வதனால் உண்டாகின்றன. சுவையைக்கொண்டே ஒவ்வொரு பொருளின் ஐம்பூதக் கூட்டுறவை அறிவதுபோல வாசனை, நிறம் ஸ்பரிசம் இவற்றின் மூலமாகவும் அறியலாம். எவ்வாறெனில் மணமும், நிற அமைப்பும் ஸ்பரிச வேற்றுமைகளும் பிருதிவி முதலிய ஐம்பூதங்கள் வெவ்வேறு ஏற்றத்தாழ்வாய் அமைவதால் உண்டாகின்றன.

பொருள்களின் ஐம்பூத அமைப்பை அறிவிப்பது சுவையே சுவை (1) இனிப்பு (2) புளிப்பு (3) உவர்ப்பு (4) கைப்பு (5) கார்ப்பு, (6) துவர்ப்பு என அறு வகைப்படும். இனிப்புப் பொருளில் சேர்ந்துள்ள ஐம்பூதங்களுள் பிருதிவி அமிசமும் அப்பு அமிச

மும் அதிகமாயுள்ளன என்பதைக் குறிக்கும். அதுபோலவே புளிப்பு=பிருதிவி+தேயு, உவர்ப்பு=அப்பு+தேயு, கைப்பு=வாயு +ஆகாயம், கார்ப்பு=தேயு+வாயு, துவர்ப்பு=பிருதிவி+வாயு, இவ்வாறு ஐம்பூதங்கட்கும் அறு சுவைகட்கும் உள்ள ஒற்றுமையை அறிகிறோம்.

பொருள்கள் யாவும் குளிர்ச்சியையாவது, வெப்பத்தையாவது பெற்றிருப்பதையறிந்து பொருள்களின் வீரியங்களை இரண்டு பிரிவுகளாய்ப் பிரித்திருக்கின்றனர். அது சீதம், உஷ்ணம் என இருவகைப்படும். தேயு பூதம் மிகுதியாய்ச் சேர்ந்திருக்கு பொருள்களின் உஷ்ண வீரியமும், அது சேராத பொருள்களில் சீத வீரியமும் உணரப்படும். அஃது எங்ஙனமெனில், பிருதிவி+அப்பு=இனிப்பு, பிருதிவி+தேயு=புளிப்பு, அப்பு+தேயு= உவபர்பு, வாயு+ஆகாயம்=கைப்பு, தேயு+வாயு=கார்ப்பு, பிருதிவி+வாயு=துவர்ப்பு எனச் சேரும் சேர்க்கையில் தேயுபூதம் மூன்று சுவையின் சேர்க்கையில் காணப்படுகின்றது. அதாவது புளிப்பு, உவர்ப்பு கார்ப்புச் சுவையுள்ள பொருள்களில் தேயு பூதாமிசம் அதிகமாதலின் உஷ்ண வீரியத்தையுடையன. இவையொழிந்த மற்ற மூன்று சுவைகளும் ஐம்பூதக் கூட்டுறவும், அதனுலாகிய இனிப்பு, துவர்ப்பு, கைப்பு ஆகிய சுவைகளையுடைய பொருள்களும் சீதவீரியம் உடையனவாகும். மேற்கூறியவாறு சுவைவழியாய் ஒவ்வொரு பொருளிலும் ஐம்பூதச் சேர்க்கையை அறிவது ஒரு வழியாகும். இஃதன்றி ஒவ்வொரு பொருளிலுமுள்ள குணத்தின் அளவாகவும் அதனதன் ஐம்பூதக் கூட்டுறவையறியலாம் அஃது எங்ஙனமெனின், ஒவ்வொரு பூதத்திலுமுள்ள குணத்தையறிந்து அதன் வழியாய் அறிதல்.

ஐம்பெரும் பூதங்களின் பண்புகள்.

பிருதிவியின் பண்பு.—மண்ணை அரைத்துப் பற்றிடுவதால் வாதத்தினாலும் செந்நீரினாலும் பிறக்கும் கட்டியாகிய இரணங்களும், வாதப்பொ மலும் போகும்; மேலும், பொன் முதலிய கவர்தற்குரிய பொருள்களும் பிறப்பதற்கு இடமாகும் பாண்டு நோய் உண்டாகும்.

''பூச வீரணம் பொருமல்போம் பொன்முதலாம்
ஆசையுள்ள பண்ட மதிலுண்டாம்—நேசமதாய்த்
தின்றிடிற் பாண்டு செழிக்குமிகத் தேமொழியே!
சென்றுலகில் **மண்**குணத்தைத் தேர்''.

(ப.கு.சி.)

அப்புவின் குணம்.—தண்ணீரினல் கண்காசம், பித்தப்பிரமேகம் உடல் அனல், பித்த குன்மம், வெட்டுக் காயங்களிலிருந்து பெருகும் குருதி சொறி ஆகியவை போகும்; பற்களுக்கு உறுதியும், சுக்கில விருத்தியும் உண்டாகும்.

''காசமறும் தந்தங் கழலாது மேகமுதல்,
வீசு மனல்தணியும் வீரியமாம்—வாசமென
உந்திவளர் குன்ம முதிரஞ் சொறியிவைபோம்
இந்துநறுந் தண்ணீருக்கே.' (ப.கு.சி.)

தேயுவின் குணம்.—நெருப்பினுல் உஷ்ணத்தால் கண்டைக்கால் என்கிற சிறுதொடையில் உள்ள நோயும், உடற் கடுப்பும், வளி வேற்றுமையால் உண்டாகும் பிணிகளும் நீங்கும்.

''கண்டைக்கா னேயுள்வலி காதம்போங் காய்ந்தக்கால்
விண்டே பலபிணியும் விட்டேகும்—விண்டோய்
பொருப்பனைய வட்டமுலைப் பூவையே! நாளும்
நெருப்பி னதுகுணங்காணீ''.

(ப.கு.சி.)

வாயுவின் குணம்.—சீழ் விழும்போது ஆண் குறியின் நாளத்தில் கடுப்பு உண்டாகும். மேக விரணம், உடல் வறட்சி, கண்ணோய் இவைகட்கு ஆகாதாம். ஆனால் மிக்க நீர்வேட்கை உடல் அனல், சோர்வு ஆகியவைகளைத் தணிக்கும்.

''மேகக் கடுப்பை விளைவிக்கும் வீறிநின்ற
தாக மனலிளைப்பைச் சாந்திசெய்யும்—மேகத்தின்
புண்ணோய்க்கும் பொல்லாது பூவையரே! ரூட்சைக்குங்
கண்ணோய்க்கு மாகாது காற்று''.

(ப.கு.சி.)

வெளியின்குணம்.—வெளி, எல்லா உயிர்கட்கும் அடிப்படையாகிய உணவும் பலவகைப்பட்ட மருந்துகளும் மண், நீர், தீ, காற்று முதலிய அளவிற்கடங்காத எல்லாப் பொருள்களும் அடங்குவதற்கும் இடந்தரும்.

''உலகுமன மும்பலவா மோடதியு மண்ணுஞ்
சலமுமன லுங்காலுஞ் சாற்ற—அலகில்
அநந்தம் பொருளு மடங்கவுழி நல்கும்
அநந்தந் தனைக்கண் டறி.'

(ப.கு.சி.

நிறத்தின் வழியாக ஐம்பூதக் கூறுபாடறிதல்

மண் (பிருதிவி)—பொன்னிறம்
நீர் (அப்பு)—படிகநிறம்
தீ(தேயு)—செந்நிறம்
காற்று (வாயு)—நீலநிறம்
வெளி (ஆகாயம்)—புகைநிறம்

உடல் ஐம்பூதர் கூறுபாட்டையும் உடையதெனல்

பாரப்பா பூதமைந்து மண், நீர் தேயு
பரிவான வாகாயமைந்தி னாலே
சேரப்பா சடமாச்சு மண்ணின் கூறு
செறிமயிர்தோல் என்பிறைச்சி நரம்பைந்தாகும்

நேரப்பா அப்புவின்கூ றுதிரமச்சை
நீர்மூளை சுக்கிலமோ டைந்ததாகும்
காரப்பா தேயுக்கூறு, பயமாகாரம்
கடும்சோம்பல் நித்திரைமை துனகளஞ்சே

அஞ்சான வாயுவின் கூ றிருத்தலோடல்
அவை நடத்தல் கிடத்துலுடன் நிற்ற லஞ்சாம்
அஞ்சாகு மாகாயக் கூறு காமம்
அதிகுரோத லோபமத மோகமஞ்சாம்

....

....

....

....

(சதகநாடி.)

பிருதிவியானது : எலும்பு, தோல், தசை, மயிர், நாடி (நரம்பு) முதலிய உடற் கூற்றினை உடையதாய் நாற்கோணம் என்னும் உடற் சக்கரத்தைப் பெற்று, நான்முகனுக்கு இருப்பிடமாய் இருந்து 'ந' என்னும் மூல எழுத்தைப்பெற்றிருக்கும் என்று தத்துவ நூல் கூறும்.

அப்பானது : குருதி, கொழுப்பு, வெண்ணீர், சிறுநீர், மூளை முதலிய உடற் கூற்றினை உடையதாய் மூன்றும் பிறைக்கோணம் என்னும் உடற்சக்கரத்தைப் பெற்று அரிக்கு இருப்பிடமாய் இருந்து 'ம' என்னும் மூல எழுத்தைப் பெற்றிருக்கும்.

தேயுவானது : இறுமாப்பு, சோம்பல், மைதுனம், அச்சம், தூக்கம் முதலிய உடற்கூற்றினை உடையதாய், முக்கோணம் என்னும் உடற்சக்கரத்தைப்பெற்று உருத்திரனுக்கு இருப்பிடமாய் இருந்து 'சி' என்ற மூல எழுத்தைப் பெற்றிருக்கும்.

வாயுவானது : ஓடல், இருத்தல், நடத்தல், கிடத்தல், நிற்றல் முதலிய உடற்கூற்றினை உடையதாய் அறுகோணம் என்கிற உடற்சக்கரத்தைப்பெற்று மகேஸ்வரனுக்கு இருப்பிடமாய் இருந்து 'வ' என்ற மூல எழுத்தைப்பெற்றிருக்கும்.

ஆகாயமானது : ஆசை, உட்பகை, மோகம், மதம், வஞ்சனை முதலிய உடற்கூற்றினை உடையதாய் வட்டமான உடற் சக்கரத்தைப் பெற்று, சதாசிவனுக்கு இருப்பிடமாக 'ய' என்னும் மூல எழுத்தைப் பெற்று இருக்கும்.

மேற்கூறியவற்ருல் நிறம், உருவ அமைப்பு, சிறப்புத்தொழில் மூல எழுத்து முதலியவற்றை அறிந்தோம். இங்ஙனமிருப்பினும் ஒவ்வொரு பொருளின் பண்புகளினின்றும் பூதச் செய்கையை அறிவதற்குக் கீழ்க்குறிப்பிடும் விவரங்கள் பயன்படும்.

ஐம்பூதக் கூறுபாட்டை உடைய பொருள்களின் பண்புகள்.

(a) **மண்கூறுபாட்டை உடைய பொருள்களின் பண்புகள்:** சுமை (பாரம்), பருமன் பெருகியோடக்கூடாத தன்மை, திரட்சி வளர்ச்சி மேன்மை என்பன.

( ) **அப்புக் கூறுபாட்டை உடைய பொருள்களின் பண்புகள்:** குளிர்ச்சி, நெய்ப்பு, மென்மை, தோய்ந்து போதல் தளர்ந்து பெருகல், நனைந்து கசிய வைத்தல், மனக்களிப்பை உண்டாக்கல், சிதறிக் கிடப்பவற்றை ஒன்றுகூட்டுதல் என்பன.

(c) **தேயுக் கூறுபாட்டை உடைய பொருள்களின் பண்புகள்:** வெப்பம், கூர்மை, வரட்சி, தெளிவு, நுண்துகள் (சூக்குமம்), எரிதல், ஒளிர்தல், நிற முண்டாதல் என்பவையாகும்.

(d) **வாயுக் கூறுபாட்டை உடைய பொருள்களின் பண்புகள்:** தளர்ச்சி, வரட்சி எளிமை (இலகு), ஊறு, மனக் கவலை, உடல் வாட்டம் என்பன.

( ) **ஆகாயக் கூறுபாட்டை உடைய பொருள்களின் பண்புகள்:** நுட்பம், தெளிவு, தணிவுத் தன்மையை உண்டாக்குதல், தொளை உடைய பாகங்களை அடைத்தல் என்பன.

பண்புகள்.—பொருள்கள் யாவும் ஐம்பூதச் சேர்க்கையால் தோன்றப் பெறுவன என்பதை முற்கூறினோம். ஒவ்வொரு பூதத்தின் பண்புகளையும், அவற்ருல் நடைபெறும் தொழில்களையும் தோம்; அதன் வாயிலாய், ஒவ்வொரு பொருளின் பண்புகளும் அப்பூதங்களில் அடங்கிய உள்ள பண்புகளேயாகும் என்பதையும் அறிந்தோம். அவை (1) சுமை (பாரம்), (2) நொய்மை, (3) தாழ்த்தல், (4) கூர்மை, (5) குளிர்ச்சி, (6) வெப்பம் (7) நெய்ப்புத்தன்மை, (8) வறட்சி, (9) வழுவழுப்பு, (10) கரகரப்பு, (11) தோயுந்தன்மை, (12) நீர்த்தன்மை, (13) மெத்தென்னும் தன்மை, (14) கடினத்துவம், (15) நிலைவிட்டுப் பெயராத்தன்மை, (16) பெருகி ஓடுந்தன்மை, (17) நுண்மை, (18) பருமை, (19) மாசற்ற தன்மை, (20) தெளிவின்மை என்பவனவாம்.

மேற்கூறிய பண்புகளை உடைய பொருள்கள், மனிதன் உடலில் சேர்ந்து வரும் அளவில் தத்தமற்கேற்ற பண்புகளை உடலில் நிகழ்த்தும்.

அதாவது குற்ற உடற்கட்டுகளை வேண்டும் அளவில் கூட்டியோ குறைத்தோ உடலைப் பாதுகாப்பதன்றிக் கெடுதியையும் விளைக்கும். நோயுள்ளவன் அதனை நீக்கி, உடலை நன்மைப் படுத்தவும் இப்பொருள்கள் தக்க விதமாய்ப் பயன்படும்.

ஒவ்வொரு பொருளும் சில சிறப்புச் செயல்களைப் பெற்றதாய் இருத்தலால் இன்ன நோய்க்கு இன்ன பொருள்களைப் பயன் படுத்தின் நன்மை ஏற்படும் என்பதைச் சித்தர்கள் ஆராய்ந்தறிந் தார்கள். அங்ஙனமே கடுக்காய், சிவதை, நேர்வாளம், கள்ளிப்பால் என்னும் பெருள்கள் உடல் வன்மைக்கு ஏற்றவாறு பயன்படுத்தப்பட்டால் அவை பேதியை உண்டாக்கும் என்பதை அனுபவத்திலும் கண்டறிந்தார்கள்.

இதுபோன்றே, துருசு, மருக்காரை, கடுகு, உப்பு வாந்தியை உண்டாக்கும் செய்கையையும், மற்றப் பொருள்கள் வெவ்வேறு செய்கைகளை உண்டாக்கும் தன்மையையும் அறிந்து பொருள்களின் செய்கைகளைக் கூறியிருக்கின்றனர். அச் செய் கைகளின் விரிவைப் பொருட் பண்பு நூல் கூறும்.

சில பொருள்களின் பண்புகளையும் செய்கையின் இயல்பாய்ச் சிறப்பான சில நோய்களைக் கண்டிக்கும் வல்லமையையும் ஆட்சியில் அறிந்து அவற்றையும் நூல்களில் கூறியிருக்கின்றார் கள், அதாவது, பாண்டு நோயைப் போக்கும் வல்லமை மண்டூரத்திற்கு உண்டு என்றும், சொறிசிரங்கைப் போக்கும் வல்லமை கந்தகத்திற்கு உண்டு என்றும், குன்ம நோயைப் போக்கும் வல்லமை செம்பிற்கு உண்டு என்றும், மூலத்தைப் போக்கும் வல்லமை நாகத்திற்கு உண்டு என்றும் கண்ணோய் கட்குப் பீதரோகிணி சிறந்தது என்றும், மேக நோய்க்கு வங்கமும் அப்பிரகமும் சிறந்தன என்றும், இவ்வாறே ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு பொருள் சிறந்தது என்பதும் பெரியோர்களின் கருத்து.

ஒவ்வொரு பொருளுக்கும் அஃததன் சுவை, வீரியம், பிரிவு, பண்பு, செய்கை, அளவு அதனால் நீங்கும் பிணிகள் ஆகிய வற்றைப் பொருட் பண்பு நூல் விவரித்துக் கூறும்.

ஐம்பூதங்கட்கும் அறுசுவைகட்கும் முக்குற்றங்கட்கும் உள்ள ஒற்றுமையும் வேற்றுமையும்.

ஐம்பூதங்கள்	அறுசுவைகள்	முக்குற்றங்கள்
விண்	இனிப்பு	வளி—வாதம்
வளி	புளிப்பு	தீ —பித்தம்
தீ	உப்பு	ஐயம்—கபம்
நீர்	கைப்பு	
மண்	கார்ப்பு	
	துவர்ப்பு	

இரண்டிரண்டு பூதச்சேர்க்கையால் ஒவ்வொரு சுவையும் உண்டாகிறது. அதுபோலவே, தீக்குற்றம் நீங்கலாக மற்ற இரு குற்றங்களும், இவ்விரண்டு பூதச் சேர்க்கையைப் பெற்றிருக்கின்றன.

இனிப்பு	=மண்=நீர்	வளி=விண்+வளி=வாதம்.
புளிப்பு	=மண்=தீ	தீ+தீ=பித்தம்
உப்பு	=நீர்=தீ	ஐயம்=நீர்+மண்=கபம்.
கைப்பு	=வளி=விண்	
கார்ப்பு	வளி=தீ	
துவர்ப்பு	=மண்=வளி	

மண்ணுடனே புனல் தீக்கால் முறையாகச் சேர்ந்திட்டால்
வருமா மினிப்புத்
திண்ணமிலம் துவர்ப்பிரசம் சதாகதியோ டார்தீவிண்
திடமா முறைப்பும்
எண்ணறிய கசப்புமுண்டாம் தண்ணீரில் தணலிணைப்பால்
எழுமா முவர்ப்பு
உண்ணரிய அறுசுவையின் சிறப்பிதெனுங் குருசித்தர்
உரைத்த மறையே.

(மருத்துவத் தனிப் பாடல்).

விளக்கம் .—பிருதிவி பூதத்துடன், அப்பு தேயு, வாயு என்னும் மூன்று பூதங்களும் முறையாகச் சேர்ந்தால் முறையே இனிப்பு, வலியபுளிப்பு, துவர்ப்பு என்னும் சுவைகளுண்டாகும். வாயுவுடன் தேயுவும் ஆகாயமும் முறையே இணையில் முறையே கார்ப்பு கைப்பு என்ற சுவைகள் உண்டாகும். அப்புவுடன் தேயு கூடினால் உவர்ப்புச் சுவை (உப்பு) உண்டாகும்.

இனிப்பின் இயல்பு.

வாய்க்குள் பசையுண்டாம் வாய்க்குமுடற் கின்பங்கள்
தேய்வில் புலன்கள் தெளி வெய்தும்—வேய் தோளி
இன்சுவையை யீயெறும்பு மேற்கவிழை யுமிது
தின்னு மினிப்பின் சிறப்பு.

(மருத்துவத் தனிப்பாடல்).

பொருள் .—மூங்கிலைப் போன்ற திரட்சியும் மழமழப்புமுள்ள தோளையுடைய நங்கையே! வாய்க்குள்ளே ஒரு வகையான பசையுண்டாதலும், உடற்கு இன்பம் தரவல்லதும் ஐம்புலன்களின் வன்மை குறையாதவாறு தெளிவு தருவதும், ஈக்களும் எறும்புகளும் கூட சளைக்காது உண்ண விருப்பங் கொள்ளுவதுமான சிறப்பியல்யுடையது நாம் உண்ணும் இனிப்புச் சுவையாகும்.

அறுசுவைகளில் இனிப்புச் சுவையே பெரும்பாலும் எல்லாச் சீவனும் தோற்றம் முதல் சுவைக்கத் தலைப்படுகின்றன. ஆகவே இச்சுவையை முதல் சுவை என்று மருத்துவ நூல்கள் கூறும். தவிர, இச்சுவை முதலிரு பூதங்களாகிய பிருதிவி, அப்பு என்னும் மண்ணும் நீரும் கூடுவதால் உண்டாகுமென்பதும் இதனை முதல் சுவையாகக் கூற இடந்தருகின்றது. விசேட காலங்களில் முதலில் உண்ணத் தருவதும் இனிப்புப் பண்டங்கள் என்பதும் இக்காரணம் பற்றியே போலும்.

இனிப்பின் செய்கை.

சனித்தது தொட்டுயிர்க்குச் சாமிய மான
இனிப்புர மேழ் தாதுக் கீயும்—சனுப் பால்

உகவியற்றும் வண்ணமொளி மெய்க்காற்றும் கேசம்
அகவை புலன்பொறி யாயுள்—மிக நீரும்.

காலழல் நச்சுங் கடிதகற்றும் ஈளையும்
சாலக் குருதியுமிழ் காசநோ—யாலவத்தை

கொண்டோர்க் இதமாங் குரல்வளைப் பண்ணியளிக்கும்
தொண்டை துலக்கமுறும் சுண்டியமெய்—கண்டோர்.

வியக்கப் பெருக்கும் மேவும் வழுவழுப்
பியக்கம் உள்ளுறுப் பெங்கும் —நயமாம்

தெளிவா யளவோடு தின்பவர்க்கு நாளும்
எளிதிற் செரியா திது.

[மருத்துவத் தனிப்பாடல்].

பொருள் .—பிறந்தது முதலே மிக்கப் பழக்கமான இனிப்புச் சுவையானது அளவோடு தினமும் உண்பவர்களின் ஏழு உடற் கட்டுகளுக்கும் மிக்க பலம் தரும். தாய்க்குப் பால் மிகவும் உற்பத்தியாகிப் பெருக வைக்கும். தலை முதலான இடங் களில் மயிரும், ஐம்பொறி புலன்களுக்கு ஆயுட் காலமும் வாழ் நாளும் மிக மிக வளர்ந்திடும். வாதத்யையும் (வளி) பித்தத்தையும் நஞ்சுகளின் தன்மையையும் மிக்க விரைவில் நீக்கும். ஈளை நோயும், மிகவும் இரத்தம் துப்பச் செய்யும் இருமல் நோயும் கொண்டு அவத்தையுறுபவர்களுக்கும் மிக்க இதந் தரும். குரல்வளை தெளிவாகப் பாட இயற்றும். தொண்டை சுத்தமடையும். வற்றிய (இளைத்த) உடல் (அந்த நிலையில்) பார்த்தவர்கள் ஆச்சரியப்படும் படியாகப் பருக்கும். உள் ளுருப்புக்களுக் கெல்லாம் வழுவழுப்பும் இயக்கமும் உண்டாகச் செய்யும். நயப்பு தரவல்லதாம். ஆனால் இனிப்புச் சுவை எளிதில் செரியாது (என்றறிக).

மிக்க இனிப்பு சுவையுண்பதன் தீங்கு.

மதுர மதிகம் அருந்துவோர்க்கு
மலியும் நிணமும் கபமுந்தான்

கதுமென் றுடலம் பெருத்துவிடும்
கனலுங் குறையும் செரியாது

பொதுவில் சுரக்கும் மதுமேகம்
புகல்கண் டலங்கல் புரை குழலும்

விதுவின் நுதலாய்ச் சந்நியாசம்
விளையு மெனவே விளம்புவரே.

பொருள்.—இனிப்பு(சுவையுள்ள பொருட்களை) மிகுதியாக உண்பவர்களுக்கு உடலில் கொழுப்பு மிகுதிப்படும். கபதோடமும் கோழையும் அதிகரிக்கும். திடீரென்று உடல் பருத்துவிடும். செரிப்பனல் (ஜடராக்கினி) குறைந்திடும். அக்காரணத்தால் உண்ட குறித்த காலத்திற்குள் சீரணமாகாது. மதுமேகம் என்னும் நோய் உண்டாகும். கண்டமாலை புரைகுழல் சந்நியாசம் (மூளை நரம்பு தகர்ந்து மயக்கம் தரும் நோய்) ஆகிய நோய்கள் சம்பவிக்கும் என்று கூறுவர்.

புளிப்பின் இயல்பு.

உமிழ்நீருற்றை யூக்கு வித்தே
உருற்றுந் தூய்மை வாய்க்குள்ளே

நிமிர்த்தும் உரோமம் பல்கூசும்
நிறையச் சிலிர்க்கும் மெய்முற்றும்

சிமிட்டு நோக்குப் புருவங்கள்
திறமாய்ச் சுருங்கும் புளிப்பென்னும்

அமிலச் சுவையை யறியாதா
ரவனி தனிலே யாருமில்லை.

[மருத்துவத் தனிப்பாடல்].

பொருள் .—வாயினுள்ளே இருக்கும் உமிழ்நீர் ஊற்றுகளை மிகத்தூண்டி நீர் சுரக்கச் செய்யும். உடலில் உள்ள உரோமங்களைக் கூச்சம் ஏற்படச் செய்து செங்குத்தாக நிறுத்தும். பற்கள் கூசும். உடல் முழுமையும் சிலிர்த்துக் கொள்ளும். இமைக்குந் தன்மையுள்ள கண்களும் புருவங்களும் நன்கு சுருங்கிக் கொள்ளும். இது புளிப்பு என்னும் திராவகத்தின் சுவையின் இயல்பு. இதையறிதார் உலகில் யாருமில்லை.

புளிப்பின் செய்கை.

செரிப்பா னெரியைத் தூண்டிவிடும் உணவைச்
சரியாய்ச் செரிப்பித் தூண்விருப் புயர்த்தும்.
இதய வன்மை இதம்பெற இயற்றும்,
பதமாய் வழுவழுத் தழுந்திய மலத்தைப்
பேதித் தியக்கும் சோதியா மக்கி
சீதளப் பரிசம் வெதுப்பா முட்கொளில்
எளிதிற் செரிக்குங் கட்டு னும் வாயுவை
வெளிவிடும் ஐயமும் பித்தமும் அரத்தமும்
சுளித்துப் பிறவிடத் தோங்கிடச் செய்திடும்.
அளவுட னசனத் துடன்கலந் துண்டால்
புளிப்பின் பெருமை புகலவுங் கூடுமோ

[ம.த.பா.]

பொருள் —வயிற்றிலுள்ள சீரணிக்கும் தொழிலை உடைய பித்தத்தைத் (ஜடராக்கினியை) தூண்டும். உணவை நேர்மை யுறச் செரிப்பித்து உணவில் விருப்பத்தை மிகவூட்டும். இதயத் துக்குத் தகுந்த வகையில் வன்மை யூட்டும். வலிந்து வெளியாகாது அழுத்தமாய்த் தங்கிய மலத்தைத் தன் வழு வழுப்புச் சக்தியால் இளக்கி வெளியாக்கும் கண் துலங்கும். தொடுவதற்குப் புறத்தே தட்பமாய் இருக்கமேலும் உட் கொண்டால் வெப்பம் தரும். மிக்க எளிதில் செரிப்பிக்கப் படும். பிற காரணங்களால் ஓரிடத்தில் கட்டுண்ட வாயுவைக் கலைத்து வெளியாக்கும். கபமும், பித்தமும், இரத்தமும் தத்தம் இடங்களை விட்டு வேற்றிடங்களில் சீற்றங் கொண்டுஉலவிடச் செய்யும் (கபப்பிரகோபம், பித்தப்பிரகோபம், இரத்தப்பிர கோபம் என்று கூறப்படும் நிலையை உண்டு பண்ணும் என்க) இப்புளிப்புச் சுவையை உணவுடன் சேர்த்து உண்ணும்போது மேற்படி செயல்களைப் புரிய வல்லது. ஆகையால் புளிப்புச் சுவையின் பெருமையை அளவிட்டுக் கூற இயலாது.

மிகுந்த புளிப்பின் தீங்கு.

சொல்லொணா மெய்த்தளர்ச்சி சோகைசீழ்க் கொப்பு
ளங்கள்
பொல்லாத பாண்டுலர்நா புண்சொறி—தொல்லை
வெப்
பாக்கித் தலைச்சுற்றல் அட்சித் திமிரமுமாம்
மிக்க புளிதின்னில் மெய்க்கு.

[ம.த.பா.]

பொருள்.—விவரிக்க இயலாத அளவுக்கு உடலில் தளர்ச்சி யுண்டாம். (தசைச் தளர்ச்சி, நரம்புத்தளர்ச்சி. மற்று முள்ள தாதுக்களின் தளர்ச்சிகளெல்லாம்). இரத்தம் நீர்த்து

உடலில் ஆங்காங்கு நீர் தேங்கி (இரத்த நாளங்களின் தளர்ச்சியால்) வீக்க நோயாகிய சோகையை உண்டாக்கும். இரத்தம் கேடுற்று ஆங்காங்கு சீழ்க்கொண்ட கொப்புளங்கள் காணும். மிக்க தீங்கான பாண்டு என்னும் இரத்தக் கழிவு நோயை உண்டாக்கும். நாவுலர்தல், புண்கள், சொறிகள் (தோல்நோய்கள்) நீண்ட நாள்பட்ட வெப்பு (புராணச் சுரம்) தலைச் சுற்றல், கண் பார்வையை போக்கவல்ல திமிரமென்னும் கண் வியாதி ஆகியவைகளை உண்டாக்குவது மிக்க புளி தின்பதிலுண்டாம்.

உப்பின் இயல்பு.

கொடிறுவாய் தொண்டை கொதித்தலும் வாய்நீர்
வடிதலும் உப்பால் வரும்.

[ம.த.பா.]

உப்புச் சுவையால் கன்னத்தின் உட்புறத்திலும் வாயிலும் தொண்டையிலும் வெப்ப உணர்ச்சி உண்டாதலும், வாயில் மிகுந்த உமிழ்நீர் ஊறி கட்டுக் கடங்காமல் பெருக் கெடுத்தலும் ஆகும்.

உப்பின் செய்கை.

சிறுக அளவோடு சேர்த்துணத் தேகத்
துறுப்பின் சுருக்கம் ஒழிக்கும்—வறட்சி
அழுக லகற்றும் அசனவிருப் பாக்கும்.
ஒழுகுவியர் வாக்கும் உறும் நெய்ப்—பொழுங்காய்
மலந்தள்ளும் சேதனி தீட்சணியா முப்பின்
நலம் பயக்குஞ் செய்கை நவில்.

[ம.த.பா.]

பொருள் —குறைவாகவும், தக்க அளவோடும் உப்பைச் சேர்க்கக் கூடிய உணவுப் பண்டங்களுடன் சேர்த்து உண்டால் உடலுறுப்புகளில் சுருக்கம் நீங்கும். வறட்சியைத் தரும். அழுகக் கூடிய பண்டங்களில் சேர்த்தால் அவைகளைக் கெடாமல் பாதுகாக்கும் (ஊறுகாய் செய்வது உப்பின் உதவியால் என்பது யாவரும் அறிந்ததே). உணவு உட்கொள்ள விருப்பத்தைத் தரும், உடலில் வியர்நீர் ஊற்றை ஊக்குவித்து வியர்க்கச் செய்யும். உடற்கு நெய்ப்புத் தன்மையை உண்டாக்கும். மலம் குடலில் தங்காமல் ஒழுங்காக வெளியாகச் செய்யும். துர்மாமிச வளர்ச்சிகளைக் கண்டித்து நீக்கும் (சேதனம் என்பதற்கு வெட்டி நீக்கல் என்பது பொருள் தீட்சணி என்பதற்கு மிகுந்த வெப்பத்தை தரவல்லது என்பது பொருள்) இவைகளே உப்பினுடைய நன்மை செய்யும் குணங்களாம் என்பதை அறிவாயாக.

மிகுந்த உப்பின் தீங்கு.

சொட்டை நரைதிரை துட்டநீர் பம்புபுண்
மட்டற்ற நாவறட்சி வாதரத்தம்—குட்டமுண்டாம்
தேகவன்மை தேயும் திருவே தினமதிக
மாகவுப்பை யுண்டார்க் கறி

[ம. த. பா]

பொருள்—திருமகளே, நாள்தோறும் உப்பை மிகுதியாக உண்பவர்க்கு தலைமயிர் உதிர்ந்து சொட்டையாதலும், மயிர் நரைத்தலும், தோலில் மிக்க சுருக்கம் விழுதலும், விடமித்த நீர்ப்பெருக்கால் பரவுகின்ற புண்களும், கட்டுக் கடங்காத நீர் வேட்கையால் நாவறளலும், வாதரத்தம், குட்டம் என்னும் பிணிகளும் உண்டாகும். நாளுக்கு நாள் உடலின் வன்மை குறையும் என்பதனை அறிவாயாக.

கைப்பின் பண்பும் செய்கையும்.

வேறு காரணம் விளைத்த வூண்வெறுப்
போட்டு மியல்பா யேற்க விரும்பாச்
சுவையாம் பித்த மைய விகற்பங்
குடற் புழு குட்டம் கொடிய நஞ்சு
வாய்நீ ரூரல் அழற்சியுந் தணிக்கும்
மெய்நீர்க் கசிவையுந் தடியையுந் தடியும்
ஊண்சலம் மலஞ்சலம் நிணசலம் என்பினுள்
மன்னிய மூளைச் சுரப்பிகள் யாவையும்
வறட்டும் முலைப்பால் மாசறும் அறிவை
வளர்க்கும் மெளிதாம் செரிக்கக் கரகரப்
புளதாம் உளங்கொடு கைப்பை
அளவோடு கொண்டால் அடையும் பயனே.

[ம. த. பா.]

பொருள் .—பல்வேறு காரணங்களால் ஏற்படும் அருசி (அரோசகம்) எனப்பட்ட ஊண் வெறுப் பென்னும் நோயை விரட்டியடிக்கும், யாவரும் இயல்பாய் அருந்த விரும்பாத இந்த சுவையேயாம். பித்தத்தின் தீய மாறுதல்களும், கபத்தின் தீங்குற்ற மாற்றங்களும், குடலில் உண்டாகும் புழுக்களும், குட்டப் பிணிகளும் மிக்க துட்ட விடமும், வாய்நீர்ப் பெருக்கும் மிக்க சூடும் தணிந்திடும். உடலின் சுரப்பிகளின் மிகுதியான சுரப்பால் இடையறாது வழிந்தோடும் நீர்ப் பெருக்கையும், மிகுந்த கொழுப்பின் பெருக்கத்தையும், நீக்கும். தசைகளின் நீர்த்தேக்கம், மல, சிறுநீரின் மிகுதி, கொழுப்பினில் நீர் மல்கல் என்பினுள் பொருந்திய மூளை என்னும் மஜ்ஜை தாதுவில் உள்ள சுரப்பிகள் யாவற்றையும் வறளச் செய்யும். தாய்ப் பாலில் உள்ள ஏதங்களை நீக்கிப் புனிதமுறச் செய்யும். அறிவை வளர்க்கும். கைப்புச் சுவை எளிதில் சீரணமாய் விடும். உள் ளுறுப்புகளில் கரகரப்பை உண்டாக்க வல்லது. கைப் பென்று வெறுக்காமல் விருப்பங் கொண்டு அளவோடு உட்கொள்பவர் அடையும் பயன் இவைகளேயாம்,

மிகக் கைப்புண்பதன் றீங்கு.

அகிலத் தொடர்பா மனைத்து நலிகள்
மனிசர்க்கரம் தாதேழ் மலினம்—நனியெய்தச்
செய்திடுங் கைப்புச் செறிய மிகவுண்ணும்
எய்தா நலமென் றியம்பு.

[ம. த. பா.]

பொருள்.—கைப்புச் சுவையை அடுத்தடுத்து மிகுந்த அளவில் உட்கொள்ளும் மாந்தர்க்கு வாயுவின் தொடர்பான எல்லாப் பிணி வகைகளும், சப்த தாதுக்களின் அல்லலும், மிக உண்டாக்கும். ஆகையால் நன்மையேதும் உண்டாகா தென்று கூறுவாய்.

கார்ப்பின் செய்கை.

நற்பசி யூக்கி நவைகளைப் போக்கிநா
விற்கசி வாக்கிச் சுவையறி—விற்பன்ன
ராக்கி யூண்சீரணம தாக்கியாங் கார்ப்பைச்சீர்
தூக்கியயில் வோர்க்குச் சொல்.

[ம. த. பா.]

பொருள்.—கார்ப்பின் நலந்தீது ஆய்ந்து வரையறுத்து அளவோடு உண்பவர்களுக்கு அச்சுவையானது நல்ல பசியைத் தூண்டுவதாகவும், உடற்குற்றங்களையும் நீக்கி உடற்கு நலம் பயப்பதாகவும், நாவில் பட்டவுடன் நல்லபடியாக உமிழ்நீர் பெருக்கியாகவும், இதை உண்ட மாத்திரத்தில் நாவின் சுவை அறியும் பண்பு மிக்க கூர்மையாய் சுவையறிச் செய்ய வல்லதும், உண்ட உணவை (விரைவில்) செரிப்பிக்கச் செய்யும் ஆற்றலுடையதாகவும் பயன்தர வல்லதாம்.

கார்ப்பின் குணம்.

தொண்டையி லுண்டாம் மிண்டுசெய் பிணிகள்
கண்டுடை வீக்கம் கண்டவர் வெரூஉம்
குட்டங் கொண்டவூண் சட்டமாய்ச் செரியாக்
கெட்ட வுப்பிசம் துட்ட சோகை
நீக்கும் புண்களைப் போக்கும் பருமனாம்
கொழுப்பையும் ஒழுக்கீடில் வழவழுத்திடச் செய்
நெய்ப்பையும் ஒழித்திடும் ஐய விகாரம்
அழித்திடும் நாடி நாள அடைப்பினைக்
கழற்றியே தடம்பெற வியற்றுங் கார்பாஞ்
சுவைதனைக் கணக்கோ டுண்ணில்
நவையிலை நலமாம் நலியிலை நமக்கே.

[ம. த. பா.]

பொருள்.—கார்ப்புச் சுவையை அளவோடு நாளும் சாப்பிட்டு வந்தால் தொண்டயிலே தோன்றும் படியான மிக்க இன்னல் செய்யும் பிணிகளும் கண்கள் தொடை இவைகளில்

காணும் வீக்கந்தரும் பிணிகளும், பார்த்த மாத்திரத்திலேயே அச்சத்தைத் தரவல்ல குட்டப் பிணிகளும், உண்ட உணவு வேளையோடு நியதிப்படி சீரணமாகாமல் (அதனால் வயிற்றில் மிகும் வாயுவால்) வயிற்றில் ஊதலைச் தரும் அகட்டு வாயுப் பிணியும் கேடு விளைவிக்கும் சோகை என்னும் (குருதி குன்றியதால் காணும் மெய் வீக்கம்) பிணியையும் தீர்க்கும் புண்களை ஆற்றி அகற்றும். உடலுக்குப் பருமனைத் தரும் கொழுப்பின் செறிவையும், வழவழுப்புள்ள நெய்ப்பையும் ஒழித்துவிடும். கபத்தின் கேட்டை சிதைத்து விடும். உடலிலுள்ள நாடிகளிலும் குருதி நாளம் முதலான நாளங்களிலும் மலினங்கள் தங்கி அவைகளில் ஓடவேண்டிய நீர்ப் பொருட்களை ஓட வொட்டாமல் அடைத்துக் கொண்டுள்ளவைகளையும் கரைத்து அவ்விடமிருந்து அப்பாற் செல்ல இயற்றியும் நாடி நரம்புகளின் சந்துகளை விசாலிக்கவும் செய்யும். உடலுக்கு யாதொரு தீங்குமில்லை. நோயும் இல்லையாகும். நலத்தை நல்கும்.

மிக்க கார்ப்புண்பதன் தீங்கு.

உண்டாம் மிக்க நாவரட்சி உள்ள வெண்ணீர் போங்குன்றி
கொண்ட மிடுக்குந் தேய்ந்துவிடும் கொஞ்சம் உழைப்பும் மூர்ச்சை தரும்.
எண்ணான் குறுப்புஞ் சூம்பிவிடும் இடுப்பும் முதுகும் நோக் காடாம்
உண்ணும் மிகுந்த காரத்தால் ஓயா நடுக்கந் தோன்று மென்பர்.
[ம.த.பா.]

பொருள்.—கார்ப்புச் சுவையை மிகுதியாக உண்டு வந்தால் மிகுந்த நாவறட்சியுண்டாகும். நல்லபடியாக உள்ள வெண்ணீர் (சுக்கிலம் என்னும் தாது) குறைந்து போகும். (நாளுக்கு நாள் குறைந்து ஆண்மையில்லையாம் என்பது கருத்து). இயல்பாய் ஒருவனுக்கு உண்டான உடல் வலிமை குறைந்து போகும். நாளாவட்டத்தில் சிறிது உழைப்பும் முச்சையுண்டாகும்படி பலவீனம் தரும். முப்பத்திரண்டு உறுப்புகளும் சிறிது சிறிதாகச் சுருங்கி விடும். இடுப்பிலும் முதுகிலும் மிகுந்த நோக்காடுண்டாகும்.

துவர்ப்பின் இயல்பு.

கட்டுவதுசற்றுக் கரகரப் பாக்குவது
திட்டமாய்த் தோற்பதனஞ் செய்வது—மட்டிற்
கொழுப்புநீர் மல்குங் கொழுப்பும் வரட்டல்
தொழிலாந் துவர்ப்புச் சுவைக்கு.
[ம.த.பா.]

பொருள் .—கட்டுக் கடங்காமல் வெளியாகும் மலம், நீர் குருதி, முதலானவைகளைக் கட்டிமட்டுப் படுத்தி நிறுத்துவதும், பொருட்களிலுள்ள இசிவுத் தன்மையையும் நெய்புத்

தன்மையையும் போக்கி அவைகளைக் கரகரப்பாக்குவதும், தோலைப்பதமாக்கும். மிகப் பெருகுகின்ற நிணநீரையும் நிணத்தையும் வறளச் செய்வதும் துவர்ப்புச் சுவைக்குண்டான தொழிலாகும்.

துவர்ப்பின் செய்கை.

குருதி சுத்தி யாக்கும்
கொடிய பித்தம் போக்கும்
பொருதுப் புண்ணை யாற்றும்
பொல்லா வையம் மாற்றும்
மருவு மந்தம் தேக்கும்
வளர்க்கு மாமம் யார்க்கும்
குருவின் குணத்த தாலே
குளிர்ந்த துவர்ப்பின் வேலை.

[ம.த.பா.]

பொருள்.—எல்லோர்க்கும் (துவர்ப்புச் சுவையுள்ள பொருள்களை அளவோடுண்பவர்கள்) இரத்தத்தைச் சுத்தியடைச் செய்யும். பித்தம் கெட்டிருந்து மிக்க துன்பம் விளைப்பதனால் அதைப் போக்கும். இன்னல் தரும் இரணங்களை (விபத்தால் விளைந்ததாயினும், முக்குற்றத்தால் உடலில் தோன்றியதாயினும்) ஆற்றி விடும். கபதோடத்தைப் போக்கி விடும். மந்தத்தை உண்டாக்கி நிலைக்கச் செய்யும்.

ஆதலின் சுவைகளின் பூதச் சேர்க்கையை அறிந்தும், குற்றங்களின் பூதச் சேர்க்கையையறிந்தும், எச்சுவையுள்ள பொருள்களை வழங்கினால் எக்குற்றம் சமப்படும் என்பதையும், எக்குற்றம் வளர்ச்சியடையும் என்பதையும் அறிந்து அதற்குத் தக்க பரிகார முறையை முறைப்படுத்தி அமைக்க முடியும் என்னும் அறிவு, மருத்துவ மாணாக்கனுக்குச் சீரிய முறையில் அமையுமென்பதாம்.

எடுத்துக்காட்டாக, இனிப்புச் சுவையானது மண்ணும் நீரும் கூடி உண்டானது. ஆகவே, இவ்விரு பூதச் சேர்க்கையைக் கொண்டுள்ள ஐயத்தால் வருநோயில் மேற்படி சுவையைப் பயன்படுத்த ஐயம் வளர்ச்சியடையும்; தீப்பூதம் சம்பந்தமுள்ள சுவையுள்ள பொருள்களை வழங்கச் சமப்படும். இதைப் போன்றே புளிப்புச் சுவையையுடைய பொருளைத் தீயால் வந்த நோயில் வழங்க நோய் மிகுதிப்படும் எப்பதையும் அதற்கு எதிர் மாறான சுவையையுடைய பொருளை வழங்க, சமப்படும் என்பதையும் அறியற்பாலனவாம்.

VI. உடற்கூறுகளும் உடற்றத்துவங்களும் உடல் அமைப்பும்.

(அ) தோற்றமும் ஒடுக்கமும் (சிவப்பிரகாசக் கட்டளை)

பரமசிவனுடைய பராசத்தியருளினாலே குடிலையிலே (சுத்தமாயை) நாதந்தோன்றும், நாதத்திலே விந்து தோன்றும் விந்துவிலே சாதாக்கியம் (ஜீவன்முக்தன், சாதகன், இவர்கள் தியானிப்பதற்காக, ஈசானன், தத்புருஷன் என்ற மூர்த்தத்தை அடையுமாறு சத்தியுடன் சேர்ந்ததுமான பரமசிவன்) தோன்றும்; சாதாக்கியத்திலே மகேஸ்வரந் தோன்றும்; மகேசுவரத்திலே சுத்தவித்தை (சிவதத்துவம் ஐந்தில் ஒன்று) தோன்றும். இவை ஐந்தனுள் முன் சொன்ன விந்துவிலே நாலுவாக்கும், ஐம்பத்தோரட்சரமும், எண்பத்தொரு பதமும், இருநூற்று இருபத்து நான்கு புவனமும் சப்தகோடி மகா மந்திரமும், சகலநூற்களும், விஞ்ஞானகலர் (ஒரு மலத்தர்), பிரளயாகலரு (இருமலத்தர்)க்குத் தனுகரான புவன போகங்களும் (உடல், ஐம்பொறி, இடம், இன்பதுன்பங்கள்) சரியை, கிரியை, யோகங் (தவநிலை) களினின்றோர்க்குச் சாலோகம் (கடவுளது உலகத்திருத்தல்), சாமீப்யம் (கடவுளது சமீபித்திருத்தல்), சாரூப்யம் (கடவுளது திருவுருவம் பெற்றிருத்தல்) என்னும் பதமுத்திகளும், பஞ்ச கலைகளும் தோன்றும், இவை சுத்தமாயையின் தோற்றமாம்.

இனி, அனந்த தேவ நாயனாரருளினாலே அசுத்தமாயையிலே நின்று காலமும், நியதியும் (செய் கடன்), கலையும் தோன்றும்; கலையிலே வித்தை தோன்றும்; வித்தையிலே இராகந்தோன்றும்.

இனி, உருத்திரதேவ நாயனாரருளினானே முன் சொன்ன கலையிலே மூலப் பிரகிருதி (உலக காரணமான மாயை) தோன்றும். மூலப்பிரகிருதிலே முக்குணங்கள் தோன்றும். முக்குணங்களும் தோன்றாது நின்றவிடம், அவ்வியக்தம் (வெளிப்படாதது). இந்த அவ்வியக்தத்திலே சித்தமும் (நினைவு) புத்தியும் தோன்றும். புத்தியிலே அகங்காரம் தோன்றும். அதுதான் ‘ யான், எனது’ என்று விகற்பித்து வரும். அதுதான் அகந்தைக்கு வித்தாகும். அதுதான் தைசசாகங்காரம் (அக்கினி சம்பந்தமான அகங்காரம்) என்றும், வைகாரிகாகங்காரம் (சத்துவகுண சம்பந்தமானது) என்றும், பௌதாதிகாகங் காரம் (உலக சம்பந்தமானது) என்றும் மூன்று விதமாயிருக்கும். தைசசாகங்காரத்திலே சத்துவ குணத்தினையுடைய மனமும், புத்தியும், இந்திரியங்களென்னும் பெயரையுடைய சுரோத்திராதிகளைந்துந் தோன்றும். வைகாரிகாகங்காரத்திலே ரஜோ குணத்தினையுடைய கருமேந்திரியங்களாகிய வாக்காதிகள் ஐந்துந் தோன்றும். பௌதாதிகாகங்காரத்திலே தமோ குணத்தினையுடைய தன் மாத்திரைகளாகிய சப்தாதிகளைந்துந்

தோன்றும். சப்தத்திலே ஆகாயந் தோன்றும். பரிசத்திலே வாயு தோன்றும், ரூபத்திலே தேயு தொன்றும், இரசத்திலே அப்பு தோன்றும், கந்தத்திலே பிருதிவி தோன்றும். ஒடுங்குங் காலத்தே தோன்றின அடைவே ஒடுங்கும். இவ்வாறாகவே, திருவாலவாய்க் கட்டளையிலும் தோற்றமும் ஒடுக்கமும் கூறப்பட்டுள்ளன.

வேறு கொள்கை (சிவோற்பத்தி சிந்தாமணி)

''பராபரமாகிய பரமே சுவரன்
தராதலம் படைக்கத் தானினைந் தருளி.''

பராபரத்தில்—பரந்தோன்றி, பரத்தில்—சிவந்தோன்றி, சிவத்தில்—சத்தி தோன்றி, சத்தியிலே—நாதந்தோன்றி, நாத்ததில்—விந்து தோன்றி, விந்துவில்—சதாசிவம் தோன்றி, சதாசிவத்தில்—மகேஸ்வரந்தோன்றி, மகேஸ்வரத்தில்—ருத்திரன் தோன்றி, ருத்திரனில்—விஷ்னுதோன்றி, விஷ்னுவில்—பிரமன் தோன்றி, பிரம்மாவில்—ஆகாயம் தோன்றி, ஆகாயத்தில்—வாயுதோன்றி, வாயுவில்—அக்கினிதோன்றி, அக்கினியில்—அப்பு தோன்றி, அப்புவில்—பிருதிவி தோன்றி, பிருதிவியில்—அன்னந்தோன்றி, அன்னத்தின்கண்ணே—நர—மிருக—பட்சி—தாவர — சங்கமாதிகள் தோன்றின.

இவ்விதமாய்த் தோன்றிய அடைவே நர—மிருக—பட்சி—தாவர—சங்கமாதிகள் அன்ன சத்திலொடுங்கி, அன்னம்—பிருதிவியில் ஒடுங்கி, பிருதிவி—அப்புவிலொடுங்கி, அப்பு—தேயுவிலொடுங்கி, தேயு—வாயுவிலொடுங்கி, வாயு—ஆகாயத்திலொடுங்கி, ஆகாயம்—பிரமாவிலொடுங்கி, பிரமா—விஷ்ணுலொடுங்கி, விஷ்னு—ருத்திரனிலொடுங்கி, ருத்திரன்—மகேஸ்வரத்திலொடுங்கி, மகேஸ்வரன்—சதாசிவத்திலொடுங்கி, சதாசிவன்—விந்துவிலொடுங்கி, விந்து—நாதத்திலொடுங்கி, நாதம்—சக்தியிலொடுங்கி—சத்தி—சிவத்திலொடுங்கி, சிவம்—பரத்திலொடுங்கி பரம்—பாராபரமாகிய பரமேஸ்வரனிடத்திலே ஒடுங்குமென அறிக.

(ஆ) அத்துவாதத்துவம் : (வழி நெறி)

அன்னத்தில்—சாரந்தோன்றி, சாரத்தில்—செந்நீர்தோன்றி, செந்நீரில்—தசைதோன்றி, தசையிலே—கொழுப்புத்தோன்றி, கொழுப்பில்—என்பு தோன்றி, என்பின்—மூளைதோன்றி, மூளையில்—வெண்ணீர் தோன்றியது.

இப்படித் தோன்றிய சுக்கில சோணிதங்கள் அணுவளவுள்ள ஒருருவுபோலப் பாய்ந்து குதித்து, கண்டிப்பும் (தூலரூபத்தின் தன்மை) பேரிகையும் போலக் கண்டித்து, நடுவெளியில் ஒரு சுழுமுனை உண்டாய், அம்முனையிநடுவே ஒரு துவாரம் உண்டாய். அத்துவாரத்தின் நடுவே இரண்டு எழுத்துக்களாலே அபிமந்திரித்து (ஒன்றிலே மந்திர உருவேற்றல்), பிண்டமாகி எழு

மளவில் சுக்கிலம் பெருகில் ஆணாம்; சுரோணிதம் பெருகிற் பெண்ணாம். இந்தச் சுக்கில சுரோணிதங்கள் கலந்து பெருகில் இரட்டைப் பிண்டமாம். அப்பிண்டமானது நீர் வழியே பெருகில் ஊமையாம்; மலத்திடையே யாகில் மந்தனும்.

இப்படிக் கர்ப்பம் தோன்றுங் காலத்தில் 'இரதக் கலை' என்றும் 'இரசக் கலை' என்றும் இரண்டு கலைகளுண்டு.

அவற்றுள் எரிகலையிலே பிராணேந்திரியம் பாயில், இடப் பாகங்கொண்டு கிருமி என்னும் புழுச் சென்று விழுங்காமல் கன்றோடு தாய் சென்று, தொடர்ந்தாற்போல, பிராணவாயுவை ஆத்துமா முன்னிட்டுக்கொண்டு செல்லுமளவில், இதம், அகிதம், என்னும் இரண்டு எழுத்தும் பின்தொடர்ந்து சென்று, அச்சுக்குள் அச்சாக 'அ' என்னும் மூல எழுத்தை அமைத்துப் புகவிட்டு, கிழிச்சிலை வாசல் போலே ஓடி அங்கிஷா என்னும் மந்திரக் கயிற்றாலே சுருக்கிக்கட்டி, சிவாஞ்ஞா சக்கரத்திடையிலே முத்திரையிட்டு, தான் ஒருத்தியாய் நின்று இந்தக் கருவை வளர்க்கும்படியாய்க் கர்ப்ப உற்பவத்தை உதான வாயுவான மூலவாயு வளர்க்கும்.

அஃது எப்படியெனில், 'கர்ப்பாகுதி' என்னும் பவக் கடலில் எண்ணின வாயு வளர்க்கும்.

அஃது எப்படியெனில், எண்ணெயுந் தண்ணீரும், போல நிற்கிற சுக்கில சுரோணிதத்தைப், பாலும் நெய்யும் போலே பாய்ந்தவுடனே, கர்ப்பிக்குங் கருப்பையைச் சுருக்கினாற்போல வாசலை யடைத்துக் கருவை வெளியாக்கி, ஒன்றாந் திங்களில் உதிரத் திரளாய் இருக்கும்; இரண்டாந் திங்களில் கொழுந்து விட்டு அச்சு அமையும்; மூன்றில் மாமிசந் திரண்டு மூட்டு உருவாகும்; நான்கில் தண்டமாய், நரம்பு நாடிகளமையும்; ஐந்தில் பஞ்ச வர்ணமாப், இந்திரியக் கரத்தால் அழியினும் அழியும்; செழிக்கினும் செழிக்கும்; ஆறாம் மாதத்தில் அதிற்புகுந்து ஆமையின் வடிவமுற்று, கால் கைகள் வகுக்கப்பெற்று, ஒன்பது துளைகளும் உண்டாகும்; ஏழாம் மாதத்தில் கர்ப்பத்திலிருந்து எழுந்து முழக்க முற்றுக் கர்ப்பத்தைக் சூழ்ந்து புரளும்; ஏனெனில், (72000) நாடி நரம்புகளும் ஆறாதாரமும், ஐந்து எழுத்தும், ஐம்பத்தோர் அட்சரமும் பஞ்ச பூத தேவதைகளும், சூக்குமத்துடனே கொழுந்து விடப் பேதையாகும். எட்டாம் மாதத்தில் நீட்டி முடக்கித் தாயுண்ட அன்ன சாரத்தைத் தொப்புளின் வழியாய் உண்டு, பிள்ளையினுடல் வளர்ந்து, தாயுடன் தோன்றி உயிருடன்ஆடும்; ஒன்பதில் தலை முதல் கால் அளவும், மயிர்த் துவாரங்கள் உண்டாம்; மயிர்க் குருத்து அறிவுடனே உரங் கொள்ளுகையில், வருத்தம் பொருக்கமாட்டாமல், ஈசுவரனை நோக்கித் தவஞ் செய்து, தொழுகையுடனே பிரிந்து, பிறவியை ஒழித்தருளவேணுமென்று வணங்கி நிற்கும். பத்தாம் திங்களில் நிறைந்த பிண்டமாய், மலைமேல் நின்று தலை கீழாய் விழுபவர்

களைப் போலப் அபானவாயுவின் வன்மையினாலே பூமியில் விழும் அங்ஙனம் விழுந்தும், முன்னுள்ள நினைவுகளை மறவாதிருக்கும். இப்படிப்பிரம சிருஸ்டியினாலே கர்ப்பந்தரித்து வாழ்வு பெறும்.

அப்படிப்பட்ட பிராணவாயு வலப்புறம் ஓடில், ஆண் பிள்ளையாம். இடப்புறம் ஓடில், பெண்பிள்ளையாம்; வாயு இரண்டும் ஏகோபித்து ஓடில், அலியாம்; அதாவது பேடி அல்லது குறியற்றதாம்.

அந்த வேளையிலே நடந்த வாயு, வேற்றுமைப்படாமல் ஐந்து நாழிகையளவும் நடந்து இயங்குமாகில், அந்த பிள்ளைக்கு வயது 100, அந்த அளவு குறையுமாகில், குறைவதற்கேற்பப் பிள்ளைக்கு வயது குறையும். வாயு நிரம்பியோடில், குறைவற்ற அவயவங்களுண்டாகும். அவ்வாயு சிதறியோடில் அவயவங்கள் குறைவடையும். முதன்மையில், கர்ப்பரந்தரதத்தில் போகிக்கும் பொழுது, மூன்று குணத்தில் எது மாதா பிதாக்களுக்கு உண்டாகிறதோ, அது மகவுக்குண்டாகும்.

அந்த வேளையில் வாயு நின்றியங்குமாகில், நிலத்தின் நிறமே பிள்ளையின் நிறமாகும். மாதாபிதாக்களினுடைய மனமும் குணமும் வாயு மொன்றுகுமாகில், அந்தப் பிள்ளைக்கு மிகவும் அறிவுண்டாகும்.

தாய்தந்தையர்க்கு அந்த மூன்று விதமும் சிதறில், பிள்ளை மரித்துப்போம். கர்ப்பாசனத்தை விட்டு, கர்ப்பங்கர வழியிலும், போக்கிலும், அக்கினி மிகுக்கிலும், வாயுகலங்கிலும் மலமாம். ஆண் பெண் இரு பாலார்க்கும் மூலாக்கினி அதிகப்படின், அந்தக் கர்ப்பம் சுவறிப்போம்.

இப்படிக் கன்மானுபவத்திற்கீடாய் எடுக்கப்பட்ட உடலில், முன் சொன்ன வழியே அருந்தின உணவானது முப்பது நாழிகையில் எங்குற்றதெனில், மலமூத்திர ரத்தமாகிய மூன்று கூறாகும் இதில் இராப்பகல் 60 நாழிகையில், மலஜல மென்ற இரண்டு கூறு கழிந்துபோம். மற்றொரு கூறாகிய இரத்த மானது உடலில் தங்கும். அந்த இரத்தமானது, ஏழில் ஒரு பங்கு இந்திரியமாம் ; மற்றப் பங்குகளோ வெனில், தோல், உரோமம், தசை கர்ப்பம், மேதை அஸ்தி, குறும்பி, பீளை, சுக்கிலம், தியம்பு குடல், நரம்பு முதலிய இடங்களுக்கு முறையே ஏழரை நாழிகை வீதம் பரவி நிற்கும்.

இனி இந்தச் சரீரம், இருவினைக் கதவுங்கூட்டி, மூலத்தண்டாகிய நெடுங்கயிற்றை முகட்டு வளையாய்ச் சேர்த்து, பழுவெலும்பாகிய வரிசை யிட்டு, நரம்பாகிய யாக்கையாலே கட்டி உதிரமாகிய ஜலத்தினாலே மண் கூட்டிச் சுவரேற்றி, ரோமமாகிய கற்றையாலே வேய்ந்து, எடுக்கப்பட்ட வீட்டிற்கு நவத்துவார மென்னும் வாசலிட்டு, அச்சமாகிய கதவுகளிட்டு பல்லாகியதாள் பூட்டி, நாவாகிய ஓங்காரம் பாய்ச்சி, பண்டமாகிய பஞ்சேந்திரியங்களுமுடைத்தாய் நிற்கும்.

இவ்வுடலில் பதினாறு கதவு பூட்டிய வீணாத்தண்டு மொழி யென்னும் முச்சாணெலும்பும், முச்சாண் சதையும், அசுருவும், ஆறு தெருவும் ,ஏழு கடலும் எட்டுத்துானும், நான் சாண் பருமனும் எண் சாண் நீளமும், முப்பத்திரண்டு முழ குடலும் இருக்கும்.

இது மூலாதாரத்தைத் தொட்டு ஆஞ்ஞையளவும் பெரிய நரம்புகள் 11,000 ; சிறிய நரம்புகள் 18,000 ; கையிலும் காலிலும் பெரிய நரம்புகள் 7,000 ; சிறிய நரம்புகள் 12,000 ; நாபித்தானத்தில் பெரிய நரம்புகள் 1,000 ; சிறிய நரம்புகள் 2,000 ; நவத்துவாரத்திற்கும் (வாசல் ஒன்பதுக்கும்) பெரிய நரம்புகள் 1,500 ; சிறிய நரம்புகள் 3,500 ; முடிவில் பெரிய நரம்புகள் 3,000 ; சிறிய நரம்புகள் 6,000; எலும்பிலும் குடலிலும் சிறிய நரம்புகள் 7,000; ஆக நரம்பு நாடி 72,000.

இனி, கால்களிலும் கைகளிலும் சந்துப் பொருத்து 69 ; கழுத்திற்குக் கீழ்ச் சந்து 86 ; கழுத்திற்கு மேற் சந்து 3 ; ஆக 158.

மற்றும், நாசியில் நீர் பலம் 41 ; எலும்பில் நீர் பலம் 7 ; தசையில் நீர் பலம் 21 ; ஆக நீர் பலம் 69.

காலிலும் கையிலும் எலும்புகள் 160 ; மூலாதாரத்தைத் தொட்டு ஆஞ்ஞை அளவும் முழு எலும்புகள் 30 ; கழுத்திற்கு மேல் பொடி எலும்புகள் 30 ; இருபக்கத்திலும் எலும்புகள் 20 ; ஆக 240.

இனி உடலில், மூன்றறைக் கோடி மயிர்த் தொளைகளும், நாள் ஒன்றுக்கு 21,600 சுவாசமும், 96 தத்துவமும், 360 பலம் தசையும் உழக்குப் பித்தமும், ஆழாக்குச் சேத்துமமும் கூடி நடத்தும் ; பிராணவாயு 12 விரல் பிரமாணம் புறப்பட்டு, நான்கு விரல் பிரமாணம் கழிந்து போய், 8 அங்குலம் உடலில் ஊடுருவிச் சென்று, ஏழு உடற் கட்டுகளை வளர்க்கும்.

(இ) வாழ்நாள் விவரம்.

வயதளவு நூறுக்கு, பத்து வயதளவும் இளமை; இருபது வயதளவும் வாலிபம்; இருபத்தைந்து முதல் 30—40 வரையில் யௌவனம்; 45—50 இவைகளில், கௌமாரதிசை உண்டாய், ஒளி மழுங்கலுற்று, பிருவிதி, அப்புவை நெருக்கும். அறுபதில் அப்பு, தேயுவை நெருக்கும். 70-ல் தேயு, வாயுவை நெருக்குதலினால், தாது மாயாவுணர்வு பண்டு போலே செலுத்தும்; 80 வயதில் வாயு ஆகாயத்தை நெருக்கும் ; 90 வயதில் ஆகாயம் ஆத்துமாவை நெருக்கும் ; அதனால் மலமும் சிறுநீரும் இடைவிடாமல் ஒத்து நிற்கும். 100 வயதில் ஆன்மா வந்த வழியை நோக்கும்.

(ஈ) அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும் உள்ளது எனல்.

'அண்டத்திலுள்ளதைப் பிண்டத்தில் காண்,' என்பதற்கு மேற்கொள்;

''அண்டத்தி லுள்ளதே பிண்டம்;
பிண்டத்திலுள்ளதே அண்டம்;
அண்டமும் பிண்டமும் மொன்றே
அறிந்துதான் பார்க்கும் போதே.

(சட்ட முனி ஞானம்)

மனித சக்திகளும், உலக நிகழ்ச்சிகளுக்குக் காரணமாகிய சக்திகளும் வேற்றுமையற்றவையாகும். மனிதனுள் நிற்கும் சக்திகளாகிய முக்குணம் முக்குற்றம், உடற்கட்டுக்கள், கோசம், ஆதாரம் முதலியவைகள் இயற்கைக்கு மாறாகச் செயல் செய்யும் பொழுது பிணிகள் உண்டாகின்றன. அங்ஙனமே, இச்சக்திகள் வியட்டியிலும் பரவுமேல், உலகத்தின் குறிப்பிட்டபாகங்களில் அழிவை விளைவிக்கும் நோய்கள் (கொள்ளை நோய்கள்) உண்டாகும். இச்சக்திகளின் விளைவாய், வியட்டியில், அதாவது உலகத்தின் வானநிலைகளில் மாற்றம் உண்டாகி, பூகம்பம் புயற்காற்று, பெருமழை, வெள்ளம், இவற்றினால் அழிவு ஆகியவை ஏற்படும். மற்றும், மனிதனது குறுதியில் அடங்கிய .மூலப் பொருட்களுக்கும், செவ்வாய் என்னும் கிரகத்தினின்று வெளிப்படும் சூட்சுமமான சில சக்திகளுக்கும் ஒற்றுமை உண்டு. சுக்கிரன் என்னும் கிரகம், உயிர்கள் உய்வதற்கு, ஏதுவான சக்தியை பரப்புகிறது. இச்சக்தியானது மேற்சொன்ன செவ்வாய் கிரகத்திலிருந்து வெளிப்படும் சக்தியை ஒருவாறு தடைப்படுத்தும் இயல்புடையது. இவ்வண்ணம் இல்லையேல் உலகத்தில் மனித வர்க்கமும் மிருகங்களும், தத்தம் இனங்களை பெருக்கும் இயல்பு அற்றுப் போம். உலகிலுள்ள எல்லா உயிர்ப்பொருட்களும், ஒன்றோடொன்று ஒருவித தொடர்புள்ளவையாய் இருக்கும் நிலைமை, மேற்சொன்ன சுக்கிரன் என்னும் கிரகத்தின் சக்தியினால் விளையும் பயனாகும். இதனாலேயே, ஆண் பெண்களுக்குள் பிரேமையும், அனுராகம் என்ற பாசமும் (அன்பு) ஏற்படுகின்றன.

பிரேமை.—இலட்சியமாய் எடுக்கப்பட்ட ஒரு பெண்ணுக்குத் தன் நாயகனிடமட்டும் ஏற்படும் கற்பின் அடிப்படையான பாசம்.

அனுராகம்.—ஆண் மகனுக்குத் தன் மனைவியினிடத்து ஏற்படும் அன்பு.

(உ) உடல் அமைப்பு.

மனிதன், எலும்புக்கூடு, நரம்பு, தசை முதலானவைகளால் மட்டும் ஆக்கப்பட்டவன் என்று சொல்வது அறியாமையாகும். அவனுள் அண்டத்தினுள்ள எல்லாப் பொருள்களும் சூக்கும நிலையில் அமைந்து கிடக்கின்றன என்பது ஞானிகளின் துணிபு. ஆகையினால், அவனுடைய மனமும், உயிரும் மேற்சொன்ன தாதுக்களைப் போலவே உடலைச் சேர்ந்தனவாகும். இதுதான் மனித உடலின் அமைப்பின் உண்மை. ஆகவே, சமட்டியின் நோக்கால், மனித உடலமைப்பு மேற்சொன்ன யாவற்றையும் ஒன்றுபடுத்தியதாகும். இம்மனித உடலமைப்பு இருவகைப்படும். அவற்றுள் ஒன்று புறத்துள்ள இப்பருவுடலின் அமைப்பை மட்டும் வர்ணிக்கும்; மற்றொன்று, இப்பருவுடலின்கண் அமைந்து கிடைக்கின்ற அறிவுப் பொருளின் (சேதனம்) சம்மந்தமாகிய சூக்கும உடற்கூற்றை விளக்கும். இவற்றுள் முதற் சொன்னது, பருவுடல் அல்லது இன்பஉடல் (போகதனு), அல்லது உணவுடம்பு (அன்னமயகோசம்) என்பது, இஃது என்புகள், தசைகள், இரத்தக் குழாய்கள், நரம்புகள், தசைநார்கள் முதலியவற்றால் ஆக்கப்பட்டது; இரண்டாவது சொன்னது நுட்ப உடல்—ஆன்ம சரீரம்—லிங்க சரீரம் என்பது. இது மேற்சொன்ன பருவுடலுக்கு காரணமாம். இதற்குக் காரண உடலென்றும், இதன் விளைவாய் வந்த பருவுடலுக்குக் காரியவுடலென்றும், தத்துவநூல் கூறும். ஆன்ம உடலின் அமைப்பை நாம் அறிவது, வையகம் அனைத்திற்கும், முதற் கருவாய்நின்ற பொருளின் தத்துவத்தை அறிவதற்கும் ஏதுவாகும்.


மனிதன், உலகத்தில் உள்ள தாதுப்பொருட்கள், தாவரப் பொருள்கள் சங்கமப் பொருள்கள், எல்லாம் உண்டாவதற்கு ஏதுவாய் நின்ற ஐம்பெரும் பூதங்களின் சேர்க்கையால் ஆக்கப்பட்ட சிறியதோர் உலகமென்று அறியத்தக்கவன். மனிதஉடலில் உள்ள ஒவ்வோர் உறுப்பும் வையகத்தில் பரவி நிற்கும் சில தத்துவங்களின் பொதுவான சத்தியால் உண்டானது. சத்திகளின் செயற்கை இவற்றின் வாயிலாக உண்டான உறுப்புக்களை ஆட்டுவிக்கும் தன்மை உடையன என்பது இதனால் புலனாகும். ஆகவே, தமரகம் என்னும் உறுப்பு, சூரிய சத்திக்கு இயங்குவதாயும், அவ்வண்ணமே, மூளை, சந்திரனால் இயக்கப்படுவதாயும் பித்தப்பை செவ்வாய் என்னும் கிரகத்தோடு சம்மந்தப்பட்டதாயும், நீர்க்குண்டிக்காய் சுக்கிரனோடும், நுரையீரல் புதனோடும், கல்லீரல் குருவோடும், மண்ணீரல் சனியோடும் சம்மந்தப்பட்டவனவாயும் இருக்கின்றன. ஆகவே, மனித உடல் அமைப்பில் வெளியில் உள்ள கிரக நட்சத்திரங்களை அசைவிக்கும் சத்தி பொதிந்து கிடைக்கின்றது என்பது ஐயந்திரிபறப்புலனாகிறது. ஆன்ம சத்தியின் பெருக்கால் மேற்சொன்ன நட்சத்திரம், கிரகம், முதலியவைகளை ஒரு ஞானி இயக்கவல்லவனாகின்றான். மற்றவர்களோ, இந் நட்சத்திர கோள்களின் சத்தியால் இயக்கப்படுபவர்கள் ஆகிறார்கள்.

(ஊ) இயற்கையும் மனித சக்தியும்.


உலகின்கண் உயிர்வாழ்வனவற்றுள் மனிதனே சிறந்தவன். ஆதலால், ''அரிது அரிது, மானிடராதல் அரிது'', என்றார் ஔவையார். பிராணிகளின் தத்துவங்களெல்லாம் மனிதனில் அமைந்து கிடக்கின்றன. மற்றும் தன்னைத்தானறிதற்கான ஒருசக்தி மனிதனிடம் மட்டுமே இருப்பதாலும், மற்றைப் பிராணிகளிடம் இச்சக்தி இல்லாமையாலும் மனிதனே உயிர் வாழ்வனவற்றுள் சிறந்தவானவான். மனிதனிடம் மாத்திரமே, சடப்பொருள்களின் வாய்ந்துள்ள சத்திமுதல், ஈசன்பால் நிரம்பி யுள்ள சத்தி வரை எல்லாச் சத்திகளும் மறைந்து கிடக்கின்றன என்னும் உண்மை மறத்தற்பாலதன்று. ஆயினும், தன்னுள் பதுங்கி கிடக்கும் இச்சததிகளை அறியவோ, பெருக்கவோ, மனிதன் முயலாமல் இருப்பதொன்றே அவன்பால் உற்றகுறை யாம். இவ்வண்ணம், தன்னுள் மறைந்து கிடக்கும் சக்தியை தான் அறிந்து, அதைப் பெருக்கி வெளியில் பரப்புவித்தல் பிறவியின் பயன் என்பதை மனிதன் உணரவேண்டும்.

மனிதனுடலில் அநேக நரம்புகளின் மர்மங்கள் அல்லது, 'ஆதாரங்கள்' இருக்கின்றன. இவ்வாதாரங்கள் பிராண சத்திக்கு நிலைக்களமாய் நிற்பதால் இவற்றைத் தட்டி எழுப்பி, அதனால் வெளிப்படும் சக்தியைக் கொண்டு, ஆன்ம சத்தியை மேன் மேலும் வளர்க்க முடியும். யோகப் பயிற்சியால் மூலாதாரம், சுவாதிட்டானம் முதலான சக்கரங்களைத் திறந்து எழுப்பி, 'துரியா தீதம்' என்ற பரவெளியைச் சேரும் வகையில் பயிலும் அப்பியாசம், 'யோகம்' என இங்குக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிராணாயாமத்தால் உண்டாக்கப்பட்டுப் பெருக்கப்படும் ஒரு சத்தி, இடை, பிங்கலை என்னும் இரண்டையும் நமது விருப்பம்போல் அடக்கி, சுழு முனையில் சுவாசத்தைச் சஞ்சரிக்கவிட்டு, பொறி புலன்களை அடைத்து, ஆன்மசோதியை வளர்த்து, அவ்வொளி பரப்பினுள் எல்லாம் அடங்கி அருட்பெருஞ்சோதியாய், அகண்ட பரிபூரணமாய் நிற்றல் இதனால் குறிப்பிடப்பட்டது என்பதை அறிக.


சித்தர்களின் சித்தாந்தப்படி இவ்விதச் சத்தியினால் மனிதன் ஐம்பெரும் பூதங்களையும் அடக்கி ஆளும் சத்தியைப் பெற்று இயற்கையின் போக்கை இயக்கவும் மாற்றவும் வல்லவனாயும், உலகையே ஆக்கவும் மாற்றவும் அழிக்கவும் வல்லவனாயும், புதிய உடல்களைத் தோற்றுவிக்கவும் தானே பிரியமான வடி வத்தையும் அளவையும் பெறக் கூடியவனாயும், அசையும் பொருள் அசையாப்பொருள் இரண்டிற்குமே தலைவனாய் நிற்கும் நிலையையும் பெறமுடியும் என்பது, அன்னாரது சித் தாந்தம். மனிதன் இவ்வித முற்போக்கை அடையாமல் இருப்ப தற்கு ஏதுவான சில தடைகளுண்டு. அவற்றை மனிதன் கடந்து விட்டால், அவனே சிவன் ஆவான்.




Fruit caesalpinia Bonducella




Three week's human ovum.



Metaphase Stage of Cell division.



Section through Blastula of Monkey



Morula of Rabbit

(எ) கரு உற்பத்தியும் வளர்ச்சியும்.

'ஆண்மையென்று மங்கையர்கள் பூக்குங் காலம்
அன்றுமுதல் பதினாலு* நாளும் அந்தத்
தாண்மையன்றிப் பதினாறு இதழாய் நின்ற
தாமரைபோல் மலர்ந்திருக்குஞ் சாற்றக் கேளு ;
காண்மையன்றித் தினமொன்று இதழ்தா னொன்று
கருவான கருக்குழிதான் இந்நாட் குள்ளே
பான்மைஎன்ற விந்தங்கே யூரும்போது
பாயுமப்பா வன்னியொடு வாயு தானே.'

'வாயுவொடு விந்துசென்று மலர்க்குட் சேர்ந்தால்
மலரிலுள்ள இதழ்களெல்லாம் மூடிக்கொள்ளும்;
தேயுவொடு வாயுநின்று திரட்டும் பாரு;
செப்பியதாந் தினமொன்றில் கடுகு போலாம்;
சாயுமடா நாளிரண்டில் மல்லி போலாம்;
தப்பாமல் நாள்மூன்றில் மிளகு போலாம்
சேயுமடா நாலாநா ளவரை வித்தாம்;
சேரவைந்தாம் நாள்குமிழி போலா கும்மே.

'ஆகுமே ஆறாநாள் நெல்லிக் காய்போல்,
ஆனநாள் ஏழுக்குப் புன்னைக் காய்போன்ம்;
ஏகுமே எட்டாநாள் பஞ்சபூதம்
இதிலுண்டாம்; பஞ்சவர்ணம் இதிலே தோன்றும்;
போகுமே நவதினத்தில் காக்கை முட்டை
போலாகும்; பத்துமுத லைந்து நாளும்
வேகுமே கோழியண்ட வடிவ மாகும்;
விள்ளுகிறேன் திங்க ளொன்றில் வாழைப்பூவே.

'பூவிலே இரண்டு திங்கள் கழுத்துண் டாகும்;
புகழ்சிரசும் உறுப்பாகும்; மூன்றாந் திங்கள்;
தாவிலே சந்துகால் கையுண் டாகிச்
சட்டகம்போல் வடிவாகி விரலு முண்டாம்;
நாலிலே வாய்நாக்கு மூக்கு முண்டாம்;
நவிலுகிறேன் மாதமைந்தில் செவியுண் டாகும்;
பாலிலே ஆறுதிங்கள் குய்யத் துவாரம்
பாலுக்கு மேழுக்கும் நரம்பு தானே.

---

* அகத்தியர் வைத்திய வல்லாதி 600—செய்யுள், 79—84.

* 'பதினறு' எனறும் பாட பேதமுண்டு. ஆனல், 'பதினலு' என்பது தானயெனத் தோன்றுகிறது.

'நரம்புதான் எழுபத்திராயி ரந்தான்
நாடியெட்டாந் திங்களுக்கு மயிருண் டாகும்
உரம்பவே தாய்புசிக்கு மன்ன சாரம்
உச்சிவழித் தானிறங்கி யுடல்பெ ருக்கும்;
வரம்பெறவே யொன்பதிலே உயிர்தான் வந்து
மறைஞான முண்டாமுச் சிவழி மூடும்;
நிரம்பவே தசமாதம் சென்றா லிந்த
நெருப்போடு வாயுமிஞ்சிக் கவிழுந் தானே.

'தானடா சிரந்திரும்பிப் பிறந்த பிள்ளை
தனக்குப்பிர்ம சிருஷ்டிநூ றாண்டு தன்னில்
ஏனடா வாலையது வீரைந் தாகும்;
இருபதுதா னாகுமட்டும் வளரும் பிள்ளை;
நானடா வொளிபோகும் முப்ப தாண்டில்;
நாற்பதுக்கு ளழகுபோம் நாடிப் பாரு;
வேனடா ஐம்பதாம் வயது தன்னில்
விரைந்துபிரு திவியிலப்பு மேவும் பாரே.'

விளக்கம்.

ஒரு நங்கை வீட்டிற்கு விலக்கான முதல் நாளில் பதினான்கு அல்லது பதினாறு இதழ்களையுடைய தாமரைப்பூப்போல அவளது ஜனன இந்திரியம் மலர்ந்திருக்குமென்பதும், அன்று முதல் பதினான்கு அல்லது பதினாறு நாட்கள் வரை தினம் ஓர் இதழாக மூடிக்கொள்ளுமென்பதும், இத்தினங்களுக்குள் தீயும், வாயுவுமாகிய விந்து உட்சென்று நாதத்துடன் சேர்ந்தால் அவ்விதழ்கள் யாவும் உடனே மூடிக்கொள்ளும் என்பதும் மேற்சொல்லிய முதற் பத்து வரிகளில் கூறப்பட்டுள்ளன. இங்ஙனம் கூறியிருப்பதால், வீட்டுக்கு விலக்கான பதினான்கு அல்லது பதினாறு தினங்களுக்குள் ஆணும் பெண்ணும் கூடின், கருத்தரித்துக் கருப்பையில் தங்கி வளர வசதியாம் எனவும், அதற்குப் பிறகு கூடின் கருவுண்டாகாது எனவும், ஒருகால் உண்டானாலும் அது தங்கி வளர வசதி இராது எனவும், வீட்டு விலக்கான பிறகு கருப்பையிலும் அதன் உறுப்புகளிலும் (ஜனன இந்திரியத்தில்) சில மாறுதல்கள் உண்டாகின்றன எனவும், இம்மாதிரியான மாறுதல்கள் கருத்தரித்தால் சீக்கிரத்தில் தோன்றும் எனவும் அறியலாம்.

பூப்படைந்த பன்னிரண்டு நாட்களுக்குள் புணர்ந்தால் கருத்தரிக்குமென்பதை,

''பரத்தையிற் பிரிந்த கிழவோன் மனைவி
பூப்பின் புறப்பாடீராறு நாளும்
நீத்தகன் றுறைதல் அறத்தாறன்றே.''

என்ற இறையனார் அகப்பொருள் சூத்திரத்தாலும்,

* பவானந்தர் கழக வெளியீடு— 1. களவியல் என்னும் இறையனுர் அகப்பொருள் 1939, பக்கம் 220, சூத்திரம் 46.

"பூப்புப் புறப்பட்ட நாள்முதற் பன்னிரு நாளும் தலைமகன் தலைமகளை நீத்தகன்று உறைதல் அறநெறியன்று" என்றும், 'பூப்புப் புறப்பட்ட முந்நாளு முள்ளிட்ட பன்னிருநாளுமென்பது துணிபுற்றாங்கு முந்நாளும்கூ டியுறையிற் படுங்குற்றமென்னோ?" என்றார்க்குப் "பூப்புப் புறப்பட்ட ஞான்று நின்ற கரு, வயிற்றிலே அழியும் இரண்டாம் நாள் நின்றகரு, வயிற்றிலே சாம் ; மூன்றாம் நாள் கரு, குறு வாழ்க்கைத்தாம்; வாழினும், திருவின்றாம். அதனாற்கூறப்பட்டது என்பது," என்றும்,

"பூப்புமுதல் முந்நாள் புணரார் ; புணரின்
யாப்புறு மரபின் ஐயரும் அமரரும்
யாத்த கரணம் அழியும் என்ப."

என்றும் கூறிய சூத்திரத்தின் பொழிப்புரை, விசேடவுரை, மேற்கோள் முதலியவற்றாலும் உணர்க.

"விந்தங்கே யூரும்போது" என்றதால்,1 விந்தானது கருப்பையில் ஊர்ந்து செல்லுகிறதென்பது தெரிகிறது. இப்படி ஊர்ந்து செல்லும்போது "பாயுமப்பா வன்னியொடு வாயுதானே" என்றதால், தீயும் வாயுவும் விந்துவுடன் செல்கின்றன என்பதை உணரலாம். தீ, வாயுக்களின் தன்மைகளை விந்து பெற்றுள்ளதென்பதை,

" உன்னிய கர்ப்பக் குழியாம் வெளியிலே
பன்னிய நாதம் பகர்ந்த பிருதிவி
வன்னியும் வாயுவு மாயுறுஞ் சுக்கிலம்
மன்னிய சமனாய் வளர்க்கு முதகமே."

—திருமந்திரம்

என்ற திருமூலர் வாக்கினாலும் உணர்க.

நாதமும் விந்துவும் பரமாணுக்களைப் போன்றவை. விந்துவை "முனை யறுகு நுனி பனிபோல்" என்று யூகி கூறுவதைக் கவனிக்கவும். 'நாதவிந்து சேரும்போது' என இரத்தினச் சுருக்கம் 500 கூறுவதால், விந்தானது ஊர்ந்து சென்று நாதத்துள் பாய்கிறதெனக் கொள்ளலாம். "பாய்ந்த வெளி தமர் போல" என வைத்திய சாரத்தில் கண்டிருப்பதால், நாதத்துள் விந்து புகுந்த இடம் தமர் (தொளை) போல இருக்குமென்பது விளக்கமாகிறது.

1 The spermatozoa are endowed with marked motility, derived undoubtedly from the rapid vibration of their tails.

—*Williams Obstetrics*, 7*th* edition, page 114, line 6.

இத்தொளை விந்துவால் தொளைக்கப்பட்டதென எந்தத் தமிழ் நூலும் கூறவில்லை. மற்றும்,

''—முனையறுகுநுனி பனிபோல் சுரோணிதத்தில் சேர்ந்து
தாக்கவே சுரோணிதந்திரண்டு தன்ரூபமாகித்
தமர்வாசல் தனைமூடும் வாயு தானும்''

என யூகி ஜனனக்கூறு கூறுவதால், தொளைவழிச்சென்ற விந்து நாதத்துடன் கலந்து உறவாகித்திரண்டு, தன் ரூபமாகித் தமர் போன்ற வாயிலை மூடுமென்பது தெரிகிறது.

''—வாயுதானும்

வேர்க்கவே வேலிபோல் வளைந்து காக்கும்
விந்துவுடன் பிராணவாயு விளக்க லாமே.''

என்ற யூகியின் செய்யுள் அடிகள், தோட்டத்தைச் சுற்றி அமைக்கப்படும் வேலி எப்படி எதுவும் உள்ளே நுழையாதபடி தோட்டத்தைப் பாதுகாக்கின்றதோ, அப்படி திரண்ட சுரோணிதத்தைச் சுற்றி வாயு வளைந்து கொண்டு, விந்து எதுவும் உட் செல்லாத படி அதனைப் பாதுகாக்கின்றது என்பதை உணர்த்துகின்றன.

''விளங்குகின்ற அபானவாயு வெளியி னிற்கும்
விந்துவுடன் பிராணவாயு பினங்க ளாகும்;
கலங்குகின்ற உதானனது கருவ ளர்க்கும்;
கருவதற்குள் வினைமூன்றும் கலக்கும் பாரு.''

என்று யூகி மேலும் கூறுவதால், அபானன் வெளியிலிருப்பதாகவும், பிராணவாயு விந்துவுடன் உட்செல்லுவதாகவும், அது திரண்ட நாதத்தைப் பல பின்னங்களாக்குவதாகவும், கருவை உதானவாயு வளர்ப்பதாகவும், கருவில் வினைகள் மூன்றும் சேர்வதாகவும் உணரலாம்.

அபானவாயு வெளியினின்று வாயிலைக்காக்குமென்றும், விந்துவுடன் உட்செல்லுகின்ற பிராணவாயு திரண்டு விளங்குகின்ற கருவைப் பல பிரிவுகளாக்குமென்றும், உதான வாயு கருவை வளர்க்குமென்றும் கூறலாம். இதனையே **தன்வந்திரியார்,**

''பின்னுமாம் சுக்கிலத்திற் பிராணவாயு தான்சென்று
பின்னமாம் இரத்தம் சூழ்ந்து உதானவாயு வளர்க்கும்.''

—தன்வந்திரிநாடி, செய்.

என்னும் அடிகளால் உணர்த்துகிறார்.

யூகி கருவில் வினைகள் மூன்றும் கலக்கின்றன எனக் கூறுகிறார். வினைகள் மூன்றாவன: சஞ்சிதம், பிராரத்தம், ஆகா

A spermatozoon pierces the zona pellucida and enters the mature ovum, the point of entry being closed at once to prevent the admission of other spermatozoon
—*Grays Auatomy*, 29th edition, page 57, line 26.

மியமாம். வினைகள் என்பதற்குத் தொழில் எனப் பொருள் கொள்வோமாயின், படைத்தல், காத்தல், அழித்தல் என்பனவாம். இத்தொழில்கள் முறையே வாத, பித்த, கபங்களுடையனவாம். இது நிற்க.

'புவனநா யகனிருந்துங் கவுரவர்முன்
பாண்டவர்பின் போன தென்ன
விவரமெனி னோய்க்கவிழ்த மென்பதன்றி
மருந்திற்கு வினையு முண்டோ?'

என்று தேரன் மருந்துப்பாரதத்தில் கூறியிருப்பதால், 'வினை' என்றால் 'நோய்' எனவும் கொள்ளலாம்.

தன்வந்திரியாரும்,

''சுக்கிலத்தில் சுரோணிதங் கலக்குமன்று
பூந்திடும் வியாதி மூன்றும்.''

—தன்வந்திரி நாடி, செய். 2.

என்று கூறுவதால், விந்துவும் நாதமும் கலக்கும்போது, நோய்கள் மூன்றும் கருவில் புகுந்துவிடுகின்றன என்பது விளங்குகிறது. நோய்கள் மூன்று என்பதை

''மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று''

—திருக்குறள், மருந்து, செய். 1.

என்ற திருவள்ளுவர் வாக்கால் அறிக.

இப்படிக் கலந்து உண்டாகிற கரு எங்கு, எப்படி வளர்கிறது என்பதைக் காண்போம்:

'' உன்னிய கர்ப்பக் குழியாம் வெளியிலே
பன்னிய நாதம் பகர்ந்த பிருதுவி
வன்னியும் வாயுவு மாயுறுஞ் சுக்கிலம்
மன்னிய சமனுய் வளர்க்கு முதகமே''
உதக முதிர முறுங்கனல் வாயுவால்
சிதகுறு மங்கங்கள் செய்து முடிந்திடும்.

—திருமந்திரம்.

எனத் திருமூலர் திருமந்திரம் கூறுகிறது. கர்ப்பக்குழி என்பது, கருப்பையாம். இதை வெளியென்றதால் இது விண்ணாகும். விண்ணின் தன்மை சகல சீவராசிகளுக்கும் பொருள்களுக்கும் இடம் அளிப்பதாம். ஆகையால், கரு வளர்வதற்கு இடமளிப்பது

கருப்பை என்பது விளங்குகிறது. நாதத்தை மண் (பிருதிவி) எனக் கூறுவதால், மண்ணானது எப்படிப்பல சீவராசிகளைத் தோற்றுவித்து அவைகளுக்கு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ உணவளிக்கின்றதோ அப்படியே நாதமும் கருவைத் தோற்று வித்து அதற்கு உணவை அளிக்க வேண்டுமென்பது அறியப்படு கிறது. ''வன்னியும் வாயுவு மாயுறும் சுக்கிலம்'' என்றதால் தீ, கால் (வாயு) இவைகளின் தன்மைகளை விந்து பெற்றுளது. என்பது தெரிகின்றது. ''தேயுவோடு வாயுநின்று திரட்டும் பாரு என்பதால் வளர்ச்சிக்கு வேண்டிய சூட்டையும் வாயுவையும் இது நாதத்திற்குத் தந்து தொழில் புரிவதற்கும் இடம் விட்டு இடம் விரைந்து செல்வதற்கும் காரணமாகு மென்பது விளங்குகிறது. அன்றியும், விந்து இன்றேல் சூடும் வாயுவுமில்லை. ஆகையால், நாதம் கருவாக வளர முடியாது என்பது நன்கு புலனாகிறது. ''சமனாய் வளர்க்கு முதகமே'' என்றது உதகமாகிய நீர் யாவற்றையும் நேர்மையாகவும் செழிப்பாபகவும் வளரச் செய் யும் என்பதாம். இந்நீர் எங்கிருந்து கிடைக்கிறதென்பது கூறப் படாததால், கருப்பை, நாதம், விந்து ஆகிய மூன்றிலிருந்தும் பெறப்படுகிறதென்பது கொள்ளலாம். '' அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில்'' ஆகையால் நமக்கு, எப்படி நீர் விண்ணிலிருந்து மழையாகவும், மண்ணிலிருந்து ஊற்று முதலியவைகளாகவும் கிடைக்கிறதோ, அப்படியே, விண்ணாகிய கருப்பையிலிருந்தும் மண்ணாகிய நாதத்திலிருந்தும் உதகமாகிய நீர் கிடைக்கும் என உணருதல் வேண்டும்.

உதகமான நீர் தீயின் தன்மையாலும், வாயுவின் தன்மை யாலும் செந்நீராக (இரத்தமாக) மாறி, அங்கங்களை உண்டாக்கி அவற்றைச் சமமாக வளர்த்துப் பூர்த்தி செய்யும். இதனால், நீர் போன்ற இரசதாதுவிலிருந்து இரத்ததாது முதலில் உண் டாகிப் பின்பு மற்றத் தாதுக்கள் உண்டாகின்றன என்பது புல னாகிறது.

முதல் நாள்

''செப்பியதாம் தினம் ஒன்றில் கடுகுபோலாம்.''

எனக் கூறினதாலும். ''சுரோனிதம் திரண்டு தன் ரூபமாகி'' என்றதாலும், கடுகுபோல உருட்சியாயிருப்பதே நாததின் வடிவ மென்றும், அது விந்துவுடன் கூடித் திரண்ட அன்றும் அவ்வு ருண்டை வடிவத்தையே பெறும் என்றும் நாம் உணர வேண்டும்.

இரண்டாம் நாள் :

''நாளிரண்டில் மல்லி போலாம்.''

என்பதால், இரண்டாம் நாள் கொத்துமல்லி விதை1 யைப் போலத் தோன்றுமென்பது தெரிகிறது. கொத்துமல்லி விதையின் மீதுள்ள கதிர்களைப் (SPINDLE) போன்ற வரிகள் இதன்மீது காணப்படும் எனக்கொள்ளல் வேண்டும். பின்னமாவதற்குச் சற்று முன்பு இம்மாதிரித் தோற்றமளிக்குமென்பது ஆங்கில நூல் வாயிலாகவும் உணரப்படுகிறது. (படம் மூன்றைப் பார்க்கவும்).

மூண்றாம் நாள் :

''நாள் மூன்றில் மிளகு போலாம்.''

மூன்றாம் நாள் மிளகுபோலத் தோற்றமளிக்கும். அதாவது மிளகின் மீது நேர்மையில்லாவரிகள் இருப்பதால், பல2 வட்டங்கள் இருப்பதாகத் தோற்றமளிக்கின்றது. கரு, பிராண வாயுவால் பல பின்னங்களாகும் என்பதை முன்பு கூறினோம். பல பின்னங்களாக்கிக் கலந்து கூட்டமாய் நிற்கையில் அம்மாதிரித் தோற்றத்தையளிக்குமென்பது தெரிகிறது. (படம் நான்கைப் பார்க்கவும்).

நான்காம் நாள் :

'' நான்காம் நாள் அவரை வித்தாம்.''

நான்காம் நாள் அவரை வித்தையைப் போல மாறும் எனக் கூறப்படுவதால். இதுகாறும் கடுகு, மிளகு போலச் சற்றேறக் குறைய உருண்டையாய் இருந்தது இப்பொழுது சற்று நீண்டு, முனைகள் சிறிது சன்னமாகி, நடுவிற் கனத்து இருக்கும் என்பது உணரப்படுகிறது.

---

1. Coincident with, or preceeding the definition of tbe chromosomes, the centrosome divides and the two resulting centrosomes move away from each other one towards either extremity of the nucleus. As they separate, they are seen to be connected by A SPINDLE OF DELICATE ACHROMATIC FIBRILS, termed the *achromatic spindle*, which elongates proportionately to the separation of centrosomes.

—*Gray's Anatomy*, 29th edition, page 3, line 1.

2 The nucleus exhibits the usual changes, and these are succeeded by division of the fertilised ovum into two cells of nearly equal size. The process is repeated again and again, with the result that a mass of cells is formed, and to this mass the term *Morula* is applied.:

—*Gray's Anatomy*, 29th edition, page 60, Line 42.

ஐந்தாம் நாள்:

"ஐந்தாம் நாள் குமிழி போலாம்."

ஐந்தாம் நாள் நீர்க்குமிழியைப் போலாகும் என்பதால், வளரும் நாதத்துள் வெளியுண்டாகும் என்பது அறியப்படுகிறது. (படம் ஐந்தைப் பார்க்கவும்).

ஆறாம் நாள் :

" ஆறாம் நாள் நெல்லிக்காயைப் போல்."

ஆறாவது நாள் நெல்லிக்காயைப் போலத் தோன்றும் என்பதால், வெளிப்புறம் தெளிவாகவும், உட்புறம் தெளிவின்றிக் கலங்கலாகவும் தோற்றமளிக்குமென்பது உணரவேண்டும். அன்றியும், மிளகு, குமிழி இவைகளுக்கு மேல் .ஒரு புரை போன்ற தோல் உண்டு. ஆனால் நெல்லிக்கனிக்கு அம்மாதிரியான தோல் இல்லை. அங்ஙனமே, வளரும் நாதமும் எவ்விதமான புரையினாலும் 2 மூடப்படாமலிருக்குமென்பது புலனாகிறது.

ஏழாம் நாள் :

"நாள் ஏழுக்குப் புன்னைக்காயைப் போலாம்."

ஏழாம் நாள் புன்னைக்காயைப் போலாகிவிடும் என்பதால் அக்காயின் கருவாகிய பருப்பைத் தோல் மூடிக்கொண்டிருப்பது போல, நாதத்திலும் கருத்தோன்றி ஒரு புரையால்3 மூடப்படும் என்பது தெரிகிறது. ஏழாம் நாளே கரு, புரை என்கிற பேதம் உண்டாகிவிடுகிறது. கருவே, குழவியாகவும் புரையே நஞ்சாகவும் மாறும்.

---

1. The ovum has now been converted into a *Blastocyst* which at first lies free in the uterine cavity. Elsewhere than over the formative mass the wall of the blastocyst is a thin membrane formed by a single layer of flattened trophoblast cells.

—*Gray's Anatomy*, 29th edition, page 61, line 8.

2 & 3 In the latter part of the sixth day after fertilisation the trophoblast over the formative mass adhres to the uterine mucosea, exterting a histolytic acton on its lining epithelium. As they engulf the uterine tissue the trophoblast cells in this situation divide with such rapidity that all trace of CELLURAR DEFINITI N, IS LAST and the formative mass becomes covered with a multinucleated mass of cytoplasm, termed the *Plasmodial Tropholast*, which burrows into the stratum compactum of the terine mucosa. As the blastocysr becomes more deeply imbeded the remainder of its trophoblastic wall undergoes a similar change, but, AT A SLIGHTLY LATER STAGE, CELLULAR DEFINITION REAPPEARS on the innor of embryonic sarface of the plasmodial trophoblast. Thereafter the wall of the blastocyst consists of an inner cellelar layer, the *Cyotrophoblast*, covered on its outer surface with plasmodian trophoblast, which is thickets over the formative mass, i.e., at the area of deepest penetration or *Embryonic pole*, and thinnest over the area most recently imbedded or *Aberbryonic Pole.*:

—*Gray's Anatomy*, 29th edition, page 61, line 17.

எட்டாம் நாள் :

"எட்டாம் நாள் பஞ்சபூத மதிலுண்டாம்
பஞ்ச வர்ணம் அதில் தோன்றும்.''

என்பதால், எட்டாம் நாள் ஐந்து பிரிவுகள் கருவில் தெரியுமெனவும் ஐந்து நிறங்கள் அதில் உண்டாகுமெனவும் உணர வேண்டும். அதில் தோன்றும் எனக் கூறியதால் கருவில் தோன்றும் என்று கொண்டோம்.

ஆறாம் நாள் நெல்லிக்காயைப்போலப் புரையின்றி இருப்பதாகவும், ஏழாம்நாள் புன்னைக்காயைப் போலப் புரையால் மூடப்பட்டிருப்பதாகவும் சொல்லியிருப்பதால். 'கருவோடு இப்புரையையும் சேர்த்துக்கொள்வதா, சேர்க்காது விடுவதா ? என்னும் சந்தேகம் ஏற்படுகிறது. குழவியாக மாறுவது அப்புரையன்று. ஆகையால் அதனைக் கருவென வழங்குதல் பொருந்தாது.

கரு, புரை என்ற பேதம் ஐந்தாம் நாளே தோன்றும் என ''ஐந்தாம் நாள் கருப்போலாகும்'' என யூகியும் ''ஐந்தாம் நாள் பக்குவக் கருவாய்த் தோன்றும்'' எனப் பரராசசேகரும் கூறியிருப்பதால் அறியலாம். ஆனால், ஐந்தாம் நாள் தோன்றிய புரை, ஆறாம் நாள் மறைந்து, ஏழாம் நாள் மறுபடியும் திட்டமாகத் தோன்றுகிறது. இக்காரணத்தினாலேதான் கருவும் புரையும் ஏழாம் நாள் அமைகின்றன என்பது கூறப்படுகிறது.

ஒன்பதாம் நாள் :

'' நவதினத்தில் காக்கை முட்டை போலாகும்.''

என்றதால், உள்ளிருக்கும் கரு ஒன்பதாம் நாள் காக்கை முட்டையைப் போலச் சற்றேறக்குறைய உருண்டையாய் இருக்கும் என்பது விளங்கும்.

பதினைந்தாம் நாள் :

''பத்துமுதல் ஐந்து நாளும் வேகுமே
கோழி அண்ட வடிவ மாகும்.''

பத்தாம் நாள் முதல் பதினைந்தாம் நாள்வரை பல மாறுபாடுகள் உண்டாகி கருவானது1 கோழிமுட்டை வடிவத்தைப் பெறும். இதே கருத்தை யூகியும் ''ஈரைந்தாம் நாள்தனிலே திரளும் பாரு, மூவைந்தாநாள் முட்டை போலாம்'' என்ற அடிகளால் கூறியதை நோக்கவும்.

---

1. The embroyonic area shows no distinguishing features in its earlist stages At first nearly CIRCULAR, its outline rapidly alters and BECAMES OVAL, indicating the long axis of the boduy.

—*Gray's Anatomy*, 29th edition, page 67, line, 7.

முதல் திங்கள் :

"திங்கள் ஒன்றில் வாழைப் பூவே."

கரு ஒரு மாதத்தில் வாழைப்பூ வடிவமாக மாறும் என்பதால், அது நீண்டும், இரு முனைகளில் தலைப்புறம் சற்றுக் கனத்தும் அடிப்புறம் சற்றுச் சன்னமாயும் மாறும் எனக் கொள்ளல் வேண்டும்.

"ஒருமாதத்தில் பொருந்திய சென்னியுண்டாம்" எனப் பரராசசேகரர் கூறுகிறார். ஆகையால், முடி, அடி என்கிற பேதம் முதல் மாதத்திலேயே தோன்றுமென்பது விளங்குகிறது.

"உறையான கருப்பையில் சுக்லம் பாய
உத்தமனே சுரோணிதந்தான் உறைந்து கொள்ளும்
கறையாகப் பாய்ந்தவெளி தமர்தான் போலக்
கழற்கொடிக்காய் போற்றிரண்டு சிரசு மாமே.
—அகத்தியர் வைத்திய சாரம்.

என்ற அடிகள் தமர் வழியாகப் பாய்ந்த விந்துவுடன் கலந்த நாதம் திரண்டு கழற்சிக்காய் போலாகிப் பிறகு தலையுண்டாகும் என்பதை உணர்த்துகின்றன. கழற்சிக்காய்போல வளர்வது திரண்ட நாதம் என்பது தெளிவாகிறது.

வாழைப் பூப்போன்ற வடிவத்தைப் பெற்றுள்ள கருவில் தலை தோன்றுவதற்கு முன்பு, திரண்ட நாதம் கழற்கொடிக்காய் போலாகும் என்பதால், கழற்கொடிக்காயின் தோல் போன்ற ஒரு புரையினுள் வாழைப்பூ வடிவத்தைப் பெற்ற கரு அமையும் எனக்கொள்ளல் வேண்டும். கழற்கொடிக்காயின்மீது நீண்ட மிருதுவான பல முட்கள் இருக்கின்றன. அது போலவே, இக் கருவை மூடிக்கொண்டிருக்கும் புரையின்மீதும் இருக்கும் என்பதை அறியலாம். (படங்கள் ஒன்றையும் இரண்டையும் கவனிக்கவும்.)

இரண்டாம் திங்கள் :

"பூவிலே இரண்டு திங்கள் கழுத்துண் டாகும் ;
புகழ் சிரசு முறுப்பாகும்."

என அகத்தியர் வல்லாதியிலும்,

"ஆகுமே இரண்டாந் திங்கள் தலைமுதுகு தோன்றும்.

என யூகி ஜனனக்கூறிலும் கூறினர்.

இரண்டாம் மாதம் தலை1 தோன்றுமென இருவரும் கூறுகின்றனர். பரராசசேகரர் தாம் இயற்றிய அங்காதி பாதத்தில் 'முதல் மாதத்திலேயே தலையுண்டாம்' எனக் குறிப்பிட்டுள்ளார்

அவர், ''மதியிரண்டிற் பிடரி தோள் முதுகு மெய்தும்'' என்றதால் இத்திங்களில் கழுத்து, தோள், முதுகு என்னும் உறுப்புக்கள் உண்டாகுமென்பது கூறப்பட்டுள்ளது. தன்வந்திரியாரும் பிடரி தோள் முதுகு தோன்றும் என்றார். ஆகையால், இம்மாதத்திற்குள் சிரசு, கழுத்து, முதுகு; தோள் இவைகள் உண்டாம் என்பது தெரிகிறது.

முன்றாம் திங்கள் :

''மூன்றாம் திங்கள் தாவிலே சந்துகால் கையுண்டாகிச்
சட்டகம்போல் வடிவாகி விரலு முண்டாம்.''

மூன்றாம் மாதம்2 இடுப்பு, கால், கைகளாகி, விரல்களும் உண்டாகும். இக்கருத்தையே யூகியும்,

அடுத்த மூன்றாம் திங்கள் அரை, விரல் கைகாலாகும்' என விளக்கினார். பரராசசேகரரும் தன்வந்திரியாரும் அவர் கூறுவதை ஆதரிக்கின்றனர்.

''மூன்றாந் திங்கள் உடல் விரல் அரைகா லாகும்''

—தன்வந்திரியார்.

'சட்டகம்போல் வடிவாகி' என்றது கரு இம்மாதத்தில் உடல் வடிவத்தை அடையும் என்பதாம்.

---

become differentiated and the embryo measures from 7.5 to 10 m.m. in length ....In the latter Part of the (second) month, owing to the development of the brain, the head becomes disproportionately large, and assumes a certain resemblance to that of a human being. At the same time the nose, mouth, and earst become relatively less prominent and the extremities more developed, so that it can be seen that each is made up of three portions.

—*Williams Obsrtetrics*, 7th edcition, page 176, line 3.

2. In the third month the head is extended and the neck is lengthened. The eyelids meet and fuse, remaining closed until the end of the sixth month.

The limbs are well developed and nails appear on the digis. The normal umblical hernia is reduced and by the end of this month the crown-rump length of the fortus is about 10 cm.

—*Gray's Anatomy*, 29th edition, page 214, line 47.

Third month.—........Centres of ossification have appeared in most of the bones; the FINGE S ND T ESJIBEC ME DIFFERENT ATED and are supplied with nails.

—*Williams Obstetrics*, 7th edition, page 178, line 3

நான்காம் திங்கள் :

''நாலிலே வாய்நாக்கு மூக்கு முண்டாம்.''

இரண்டாம் மாதம் தோன்றிய தலையில் நான்காம் மாதம்[1] வாய், நாக்கு மூக்கு ஆகிய இவை பூரணமடையும்.

' நாலாந் திங்கள் பாதம் மூக்குண்டாம்.''

என யூகியும்,

''நாலாந் திங்க ளுதித்ததோர் மூக்குண் டாமே''

எனத்தன்வந்திரியாரும் கூறுகின்றனர்.

பெரும்பாலார் மூக்கு இம்மாதத்தில் உண்டாகும் என்பதால், அதனையே கொள்வோம். வாயும் நாக்கும் இம்மாதத்தில் தோன்றும் என வல்லாதி கூறினும், நாக்கு அல்லது வாய் அடுத்த மாதம் தோன்றுமென மற்ற நூல்கள் கூறுகின்றன.

ஐந்தாம் திங்கள்:

''நவிலுகின்றேன் மாதம் ஐந்தில் செவியுண் டாகும்.''

என அகத்தியர் வல்லாதியும்,

''ஐந்தாந் திங்கள்தனில் நாச்செவி கண்ணும்.''

என யூகி ஜனனக்கூறும்,

''திங்களைந்திற் செவிநாசி வாயு முண்டாம்''

எனப் பரராசசேகரர் அங்காதி பாதமும்,

''அஞ்செனும் திங்கள் தன்னி லாகிடும் செவியு நாவும்''

எனத் தன்வந்திரி நாடியும் கூறுகின்றன.

நாசியாகிய மூக்கு நான்காம் மாதம் தோன்றுமென யாவரும் கூற, பரராசசேகரர் மட்டும் ஐந்தாம் மாதம் அது தோன்றுமெனக் கூறுகிறார்.

ஐந்தாம் மாதத்தில்[2] செவியுண்டாகும் என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். சென்றமாதத்திலேயே நா, வாய், உண்டாகுமெனக் கூறிய அகத்தியர் வல்லாதி தவிர, மற்ற நூல்

1. In the fourth month lanugo appears on the body and by the end of the month the foetus has reached a crown-rump length of about 14 cms and a total length, i.e. including the legs—of about 22 cms.

—*Gray's Anatomy*, 29th edition, page 214, line 55.

The eruption of hair on the head commeces and the vernix caseosa begins to be deposited. By the end of this month the total length of the foetus is nearly 30 c.m.

—*Gray's Anatomy*, 29th ediction, page 214, iline, 59.

கள் நா, அல்லது வாய் இம்மாதத்தில் தோன்றுமெனக் கூறுகின்றன. கண்ணும் இம்மாதத்திலேயே தோன்றுமென யூகி கூறுகிறார். மற்றெவரும் இதன் தோற்றத்தைக் கூறவில்லை.

ஆறாந் திங்கள் :

"ஆறாந்திங்கள் குய்யத்துவாரம்,"

என அகத்தியரும்,

"ஆறாந்திங்கள் வருநகங்களாம்,"

என யூகியும்,

"ஆறாந்திங்கள் பொதிந்திடு நகமே யெய்தும்
உஞ்சிய மலசலங்கள் ஒத்ததோர் நரம்புமுண்டாம்."

எனத் தன்வந்திரியாரும்.

"மலசலத் துவாரம் பெரிதுண்டாம் திங்க ளாறில்,"

எனப் பரராசசேகரும் புகன்றனர்.

மலசலங்கள் கழியும் துவாரங்கள் ஆறாம் மாதம் அமையுமென்பது பெரும்பாலார் கருத்து. 'நகங்கள் உண்டாம்' என்பது யூகி, தன்வந்திரியார் என்பவர்களின் கூற்றாம். 'நரம்புகளும் உண்டாகும்' என்று தன்வந்திரியார் மேலும் கூறுகிறார்.

ஏழாம் திங்கள் :

"—ஏழுக்கும் நரம்பு தானே
நரம்புதானே எழுபத்திராயிரந்தான் நாடி"

என வல்லாதியும்.

"மருவியே யேழாந் திங்கள் மயிரெலும்பு நரம்பாம்
தாகுமே சடமொடு சலமலங்கள் தயங்கியதோர்
தாதுவொடு மூச்சுண்டாமே."

என ஜனனக்கூறும்,

"—திங்கள் ஏழில்தான் வருங் குணங்கள் கேளே :
நரம்புட னாடிசந்து நண்ணிய குடல்கள் கொப்பூழ்
பரந்தகால் கரங்க ளுண்டாம்"

எனத் தன்வந்திரியார் நாடியும்,

1. In the six month the deposit of vernix caseosa is considerable. The papillae of the skin are developed and the free borders of the nails project from the derium of the dermis. From vertex to heels the total length of the foetus at the one of this month is about 33 c.m. The weight is about 1 kilogram.

—*Gray's Anatomy*, 29th edition, page 214, line. 62

'திங்களங்கேழு தன்னிற் செறிமயிர் நரமபு நாடி
தங்கிய கொப்பூழ் சந்து—குடலு முண்டாம்''

என அங்காதி பாதமும் கூறும்.

ஆறாம் மாதமே நரம்பு உண்டாம் என்ற தன்வந்திரியாா இம்மாதமும் நரம்பு உண்டாம் என்று கூறுகிறார். (ஏதாவது எழுத்துப்பிழை யுண்டோ என்பது தெரியவில்லை.)

எழுபத்திராயிரம் நரம்புகளும் நாடிகளும் இம்மாதத்தில் பூர்த்தி யாகும் என்று யாவரும், மயிர் எலும்புகள் யாவும் பூரணமாகின்றன என யூகியும், பரராசசேகரரும் கூறு கின்றனர். மலசலங்கள் கழிக்கும் துவாரங்கள் ஆறாம் மாதமே தோன்றுமென மற்றவர்கள் கூற, யூகி மட்டும் இம்மாதம் உண்டா வதாகவும், மூச்சுவிடப் பயன்படும் கருவிகளும் உண்டாகுமென வும் சொல்கிறார். தன்வந்திரியாரோ, நரம்புகளுடன் நாடியும், குடல்கள், கொப்பூழ், அகன்ற கால், கைகள் முதலியனவும் உண்டாகும் எனக் கூறுகிறார்.

எட்டாந் திங்கள்:

'' —நாடி எட்டாந் திங்களுக்கு மயிருண்டாகும்
உரம்பவே தாய்புசிக்கு மன்ன சாரம்
உச்சிவழித் தானிறங்கி யுடல் பெருக்கும் ''

—வல்லாதி.

எட்டாம் மாதம் மயிருண்டாகும்; தாய் உண்ட அன்னரசம் சிசுவுக்கு அதன் உச்சி வழியாகச் சென்று அதன் உடலைப் பெருக் கச் செய்யும். தாய் கொண்ட உணவுப் பொருள் சீரணிக்கட்

---

1. In the seventh month pupillary membrane atrophies, and the eyelids are open The testis descends with the vaginal sac of the peritonium. The skin is red and wrinkled, giving the foetud a prematurely aged appearance. From vertex to heels the total length at the end of the seventh month is about 40 c.m. The weight is about 1.5 kilogram.

—*Gray's Anatomy*, 29th edition, page 214, line 65.

2. "Normally there is NO COMMUNICATION BETWEEN THE FETAL BLOOD contained in the chorionic villi AND THE MATERNAL BLOOD in the intervillous spaces, and the transmission of the substances from one to the other is accomplied partly by osmosis and partly by direct cellular activity of the chorionic epithelium, the details of which will be considered..........".

—*Williams Obsetetrics*, 7th edition, page 64, line 16.

During the eighth month the skin is entirely coated with vernix caseosa, and the the lanugo begins to disappear. Subcutaneous fat has been developed to a considerable extent, and the FOETUS PRESENT A PUMP APPEARANCE. The total length, i.e. from head toheadels at the end of the eighth month is abourt 45 c.m. and the weight varies between 2 and 2.5 kilograms.

—*Gray's Anatomy*, 29th edition, page 216, line 4.

பட்டு அன்னரசமாய் மாறிச் சிசுவுக்கு அனுப்பப்படுகிறது. தாயிட மிருந்து இரசந்தான் செல்கிறதே ஒழிய, இரத்தம் செல்லவில்லை என்பது தெளிவாகிறது. மற்றவர்களுடைய கருத்தும் இதுவே என்பதைப் பின்னர்க் கூறப்படும் மேற்கோள்களால் அறியலாம்.

இந்த அன்னரசம் ' உச்சிவழித் தானிறங்கி ' எனவும், ' கபாலத்தின் வழியே சென்று' எனவும் கூறப்பட்டுள்ளதால், இந்த ரசம் சிசுவின் தலையின் வழியாகச் சென்று பிறகு மற்ற அங்கங்களுக்குப் பரவுவதாகத் தெரிகிறது.

'' —எட்டினிலே தாயுண்ட சாரம்
முனையான கதிர்போலே அருவி பாய்ந்து
தோச்சுண்டாங் கபாலத்தின் வழியே சென்று
சுத்தசலம் பிள்ளைக்குத் தொடர்ச்சியாமே. ''

—யூகி ஜனனக் கூறு.

'' காமப்பால் விழுந்தவழி சிரசி னாலே
கைமுறையாய்த் தாயுண்ட அன்னஞ் செல்லும் ''

—வைத்திய சாரம்.

“ காமப்பால் விழுந்தவழி சிரசினாலே '' என்று சொல்லப்பட்டதால், விந்து பாய்ந்த வழியாகிய தலையின் வழியாக என்றேனும், அல்லது விந்து பாய்ந்த வழியாகவும், தலையின் வழியாகவும் என்றேனும் பொருள் கொள்ளலாம்.

'' சேமப்பா நடுமையத் தொப்பு ளாலே
சென்றதெலாம் மலமாகக் கழியுந் தானே ''.

—வைத்திய சாரம்.

கருவின் உடலில் தோன்றும் கழிவுப் பொருள்கள் யாவும் அதன் மத்தியிலுள்ள கொப்பூழ் வழியாக வெளிப்படுத்தப்படுகின்றன என்பது மேற்சொன்ன அடியால் உணர்த்தப்படுகிறது.

மயிர், தலையிலுண்டாமென்று தன்வந்திரியார் கூறுகிறார்.

ஒன்பதாம் திங்கள் :

'' —ஒன்பதிலே உயிர்தான் வந்து
மறைஞான முண்டாகு முச்சிவழி மூடும்.''

—வல்லாதி.

ஒன்பதாம் மாதம் உயிர் வருகிறதென்று கூறப்படுவதால், 'அதற்கு முன் உயிர் இல்லையா ?' என்று கேட்கலாம். அதற்கு முன் உயிர் உண்டு. ஆனால், அப்பொழுது வெளிப்படின், உயிர் வாழ்தல் அரிது. ஏழாம் மாதத்திற்கு முன் வெளிப்படின், உயிர் வாழாது. ஏழாம் மாதத்தில் வெளிப்படின் அதிகமுயற்சியால் உயிர் வாழச் செய்யலாம். எட்டாம் மாதம் பிறக்கும் பிள்ளை உயிர் வாழாதெனப் பொது மக்களின் கொள்கையிருப்பினும், அதிக முயற்சியால் வாழச்செய்யலாம் என்பதை இக்கால மருத்துவ நூல்வழி அறியலாம். ஒன்பதாம் மாதம் பிறக்கும் குழந்தையை அதிக முயற்சியின்றியே வளர்க்கலாம். இக்காரணத்தினாலே தான் 'உயிர்தான் வந்து' என்று சொல்லப்பட்டது.

இம்மாதத்தில் அறிவு தோன்றும். 'ஒன்பதிலே யறிவு தோன்றி' என யூகியும், 'ஒன்பதாந் திங்கள் தன்னிலுணர்ச்சியு மறிவு முண்டாம்' எனத் தன்வந்திரியாரும் கூறுவதால், இது மேலும் வலியுறுத்தப்படுகிறது.

மற்றும் 'உச்சி வழி மூடும்' என்பதனால் எட்டாம் மாதம் இறுதி வரையில் பல அங்கங்களுக்கும் தலைவழியாகச் சென்று கொண்டிருந்த அன்னரசம் இப்பொழுது அத்தலைவழிச் செல லாது, நேர் நேராகவே அவைகளுக்குச் செல்லும் எனக் கொள்ளல் வேண்டும்.

"ஒன்பதிலே யறிவு தோன்றிப் பிறப்பித்தோன்
தனைநினைந்து தவமே செய்து
கூச்சுண்டாம் கும்பிட்டு அருள்தா வென்று
கொடியபத்தாம் திங்கள் குரு பார்வை யாமே."

என யூகியும்,

'தம்பிரான் தனை நினைந்து தவமுறு நிலையாய் நின்று' எனத் தன்வந்திரியாரும் கூறுவதால், குழலி கருப்பையில் எம்மாதிரி அமைந்திருக்கும் அல்லது அமர்ந்திருக்க வேண்டும் என்பதை உணரலாம். அதன் நிலை 'தவம் உறும் நிலை' யாகும். அதாவது, தலை வணங்கிக் கண்கள் மூடிக் கைகளைக் கூப்பி அல்லது கட்டி, மார்பு முன் வைத்து, கால்களை மடக்கியிருப்ப தாம்.

1. At the end of the ninth month the lanugo has largely disappeared from the trunk. The umbilicus is almost in the middle of the body and the testis are in the scrotum. The foetus weights from 3 to 3.5 kilograms; and measures from head to heels about 50 c.m.:

—*Gray's Anatomy*, 29th edition, page 215, line 8

பத்தாம் திங்கள் :

"—தசமாதஞ் சென்றா லிந்த
நெருப்பொடு வாயு மிஞ்சிக் கவிழ்ந்து தானே.
தானடா சிரந்திரும்பிப் பிறந்த பிள்ளை."

என வல்லாதி நூலும்,

"சீர்பெறு மபான வாயுசிரமது கீழ தாகப்
பார்தனில் கொணர்ந்து தள்ளும்."

எனத் தன்வந்திரி நாடியும் கூறுவதால், பத்தாம் மாதம் தீயும் வாயுவும் அதிகரித்து, அபான வாயுவின் சத்தியால் தலை கீழாகத் திரும்பி, யோனி வழியாகக் குழவி சிரம் திரும்பி உதிக்கு மென்பது தெரிகிறது. இதனையே

"திங்கள் பத்தாகில் தேயுவொடு வாயுசேர்ந்
தங்கி மலர்த்தி யமளியாய்க் கீழ்நோக்கிப்
பொங்கிப் பிறந்தநாள் புகழ்வார் வெறுவீணர்
தங்கிச் செனிக்கையிற் றானோயு முற்றதே."

எனத் திருமூலரும்,

"பத்தாந் திங்களீசனா ரருளி னாலே
சென்னிதான் கீழ தாகச் சிறந்திடு மபான வாயு"

என்று பரராசசேகரரும் சொன்னதனால், மேற்குறிப்பிட்டது வலியுறுத்தப்படுகிறது.

இப்பகுதி டாக்டர் கோ. துரைராசனாரால் எழுதப்பட்ட "கரு உற்பத்தியும் வளர்ச்சியும்" என்னும் நூலிலிருந்து எடுத்து இதிற் சேர்க்கப்பட்டது.

(7) ஆண்பெண் தோற்றமாகும் விதம்.

"முறையான பெண்ணாணும் . . . .
நிலையான வலத்தோடி லாணேயாகும் ;
நேராகி யிடத்தோடிற் பெண்ணேயாகும்"

இதனால் ஆண் பெண்ணுடன் கூடி விந்து வெளிப்படுகிற சமயம், சரம் என்னும் உயிர்க்காலின் (பிராணவாயுவின்) இயக்கமானது வலப்பக்க மூக்குத் துளையாகிய பிங்கலையில் இயங்க ஆண் பிள்ளையும், இடமூக்குத் துளையாகிய இடைகலையில் இயங்கப் பெண் பிள்ளையுமாகக் கரு உருப்பெறும் என்பதாயிற்று.

(பிண்டோற்பத்தி—குணவா
கடத்தின் வைத்திய சாரம்—18 சித்தர் நாடிநூல்)

மேலும், இதனை அடியிற் கூறும் பாவும் வலியுறுத்தும் :

''கற்பத்தா னங்கள் செய்யக் கணந்தனிற் சரங்கள் நாசி
வற்பனப் பிராண வாயு வலத்திலே யோடிலாணாம்
சற்பென இடத்தி லோடிற் சார்ந்தது பெண்ணேயாகும்
உற்கர வுதைய மாகில் ஒலியிலாக் குருடே ஊமை.''

(தன்வந்தரி—நாடி— *18* சித்தர்நாடி)

''ஆண்மிகி லாணாகும் பெண்மிகிற் பெண்ணாகும்
பூணிரண் டொத்துப் பொருந்தி லலியாகும்
தாண்மிகு மாகிற் றரணி முழுதாளும்
மாண்வச மிக்கிடின் மாய்ந்தது மில்லையே''

(திருமந்திரம், 478)

கூடும்போது ஆணுக்குப் பெண்மீது அதிக அன்புண்டாகில், தரிக்கும் கரு ஆணாகவும், பெண்ணுக்கு ஆண்மீது மீக்க அன்புண்டாகில் உண்டாகும் கரு பெண்ணாகவும், இரண்டும் சமமாகில் அலியாகவும் பிறக்கு மென்பர் திருமூலர்.

மேலும், இதனைக் கீழ்க்காணும் பாக்களும் வலியுறுத்தும் :

''மின்னே சுக்கிலமும் பலமாகின் மெய்யாணாம்
பின்னுஞ் சுரோணிதமே பலமாகி லதுபெண்ணாம்
உன்னு மிவ்விரண்டும் பலமாகி லிதுவுருவாய்ப்
பன்னுங் கருவிரண்டா மெனவறியா ருலகொத்தே.''

''ஒத்தா மனல்வெளிபி லொன்றும் பருவத்திற்
சத்தா கியவமுதம் விழவாணா மதுதப்பில்
வித்தாகியமண்ணப் ·பொடுமேவி லதுபெண்ணரம்
அத்தா மரைமின்னே யிவ்வைந்தொத் திடலலியே''

''அலியேயா குஞ்சுழிமுனை யதிலேசர மோடில்
வலநாசியி லோடும்பொழு தானான்மக வாணாம்
சிலவேளையி லிடமோடிடும் போதேசிறு பெண்ணாம்
குலமாதொடுங் கூடும்பொழு திக்குறி யைக்கொள்ளே.''

(' வைத்திய ராஜ பாலவாகடம் சரபோஜி
மகராஜா என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது)·

(ஐ) சரநூல்வழி ஆயுளை அறிதல்.

"பாய்ந்துமு னஞ்சோடிற் பாரா யுளுநூறாம் ;
பாய்ந்துபி னாலோடிற் பார்வய தெண்பதாம் ;
பாய்ந்திடும் வாயு பகுத்தறிந் தவ்வகைப்
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலு மாமே.

(திருமந்திரம்)

(கருத்துரை) : இச்செய்யுள் ஈண்டு ஆண் பெண் கலவியில் ஆணின் சரஞ் செல்லும் அளவைக் கொண்டு வாழ்நாளின் அளவை கூறுகின்றது.

(சொல்லுரை) : பார்முன்-பிருதிவி பூதம் முதற்கொண்டு, அஞ்சு-(பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும்) ஐந்து பூதங்களிலும், பாய்ந்து ஓடில்-இடைகலையிலாவது பிங்கலையிலாவது சரஞ்சென்று ஓடினால், நூறு ஆயுள் ஆம்-(ஆண்டுச் சூலுண்டாய்ப் பிறக்கின்ற குழந்தை ஆணானாலும் பெண் ஆனாலும் அதற்கு வயது) நூறாண்டுகளாகும் ; பின்-பிருதிவி பூதத்திற்குப் பின்னுள்ள, நால்-அப்புப் பூதம் முதற் கொண்டு (அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும்) நான்கு பூதங்களிலும், பாய்ந்து ஓடில்-(இடகலையிலானாலும், பிங்கலையிலானாலும்) சரஞ்சென்று ஓடினால், பார்-இந்நிலவுலகில் (வாழ்ந்திருக்கக் கூடிய), வயது எண்பதாம்-வாழ்நாட்கள் எண்பதாண்டு களாகும் ; (ஆகையால்) பாய்ந்திடும் வாயு-(இரேசகபூரகமாகப்) பாய்கின்ற சரத்தின் (வகை விரிகளை), பகுத்து அறிந்து-ஆராய்ந்தறிந்து, அவ்வகை-அவ்வாராய்ச்சியில் ஏற்படும் விதிப்படி பழகி, பாய்ந்திடும்-அச்சரத்தின் வழியே செல்லுகின்ற, யோகிக்கு-யோக வழக்கம் உள்ளவனுக்கு, பாய்ச்சலும் ஆம்-தன் விருப்பப்படி சரத்தை ஏற்றலும், இறக்கலும், மாற்றலும், அவற்றின் பயனாகப் பல்லாண்டு வாழ்தலும், வெளியிற் பாய்ந்து செல்லலுமான தொழில்கள் கைகூடுவனவாம்.

(பொழிப்புரை) : கலவியில், இடகலையிலானாலும், பிங்கலையிலானாலும், பிருதிவி தொட்டு ஐந்து பூதங்களிலும் சரம் செல்லுமானால், அப்பொழுது கருவாய்ப் பிறக்கும் குழந்தைக்கு நூறாண்டுகளாகும். அப்புத் தொட்டு நான்கு பூதங்களிலும் சரஞ்செல்லுமானால், அப்பொழுது கருவாகிப் பிறக்கும் குழந்தைக்கு எண்பது ஆண்டுகளாகும். ஆகையால், இரேசக பூரகமாகச் செல்லுகின்ற சரத்தின் வகை விரிகளை ஆராய்ந்தறிந்து அவ்வாராய்ச்சியில் ஏற்படும் விதிப்படி பழகிச் சரஞ்செல்லும் வழியே செல்கின்ற யோக வழக்கமுள்ளவனுக்குத் தன் விருப்பப்படி சரத்தை ஏற்றலும், இறக்கலும், மாற்றலும், அவற்றின் பயனாய்ப் பல்லாண்டுகள் வாழ்தலும், வெளியிற் பாய்ந்து செல்லலுமான தொழில்கள் கைகூடுவனவாம்.

* இஃது 'தமிழ் மருத்துவப் பொழில்' என்னும் சஞ்சிகையினின் றெடுத்துச் சேர்க்கப்பட்டது.

'பாய்ந்துமுன் அஞ்சோடல், பாய்ந்து பின் நாலோடல்' என்னும் இவற்றின் விளக்கங்களாவன :

சரம் என்பது உயிர்க்காலின் (பிராணவாயுவின்) இயக்கம். அது மூக்கின் இரண்டு தொளைகளின் வழியாக உள் நுழைதலும் வெளிச் செல்லலுமாயிருக்கும். இம்மூக்குத் தொளைகளில் இடப் பக்கத்தொளை 'இடகலை' எனவும், வலப் பக்கத்தொளை 'பிங்கலை' எனவும் சொல்லப்படுவன. இவ்விடகலை பிங்கலை களாகிய இரண்டு தொளைகளிலும், ஒரே காலத்தில் மூச்சு உள் நுழைதலும், வெளியிற் செல்லலும் நிகழ்வதில்லை. ஒவ்வொரு மூக்குத் தொளையிலும் ஐந்து நாழிகை என்னும் ஆங்கில இரண்டு மணி நேரந்தான் மூச்சு நடக்கும் ; அவ்வாறு நடப்பதும், திங்கட் கிழமை, புதன்கிழமை, வெள்ளிக் கிழமைகளில் இடமூக்குத் தொளையில் விடியற்காலை நான்கு மணியிற்றொடங்கி ஐந்தைந்து நாழிகைகளாக ஒவ்வொரு மூக்குத் தொளையாக மாறி மாறி நடக்கும். இதனை,

> '' வெள்ளி வெண் டிங்கள் விளங்கும் புதனிடம் ''

என்றும் ;

> '' வெள்ளி புதனொடு திங்க ளிடமெனத்
> தள்ளுமின் கால சரம்.'' (ஔவைக்குறள்)

என்றும் புகன்றிருப்பவற்றால் அறிதல் வேண்டும்.

செவ்வாய்க்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் வலமூக்குத் தொளையில் விடியற்காலை நான்கு மணியிற்றொடங்கி ஐந்தைந்து நாழிகைகளாக ஒவ்வொரு மூக்குத் தொளையாக மாறி மாறி நடக்கும்.

வியாழக்கிழமையில் வளர் பிறையில் இடமூக்குத் தொளை யிலும், தேய்பிறையில் வலமூக்குத் தொளையிலும் விடியற்காலை யில் நான்கு மணியில் தொடங்கி, ஐந்தைந்து நாழிகைகளாக ஒவ்வொரு மூக்குத் தொளையிலும் மாறி மாறி நடக்கும்.

இவ்வாறு இடகலையாகிய சந்திரனில் நடந்தாலும், பிங்கலை யாகிய சூரியனில் நடந்தாலும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களிலும் பாய்ந்தே நடக்கும்.

அவ்வாறு நடந்தால், பிருதிவியில் ஒன்றரை நாழிகையும், அப்புவில் ஒன்றேகால் நாழிகையும், தேயுவில் ஒரு நாழிகையும், வாயுவில் முக்கால் நாழிகையும், ஆகாயத்தில் அரை நாழிகை

யுமாக ஐந்து நாழிகையாகிய இரண்டு மணி நேரம் நடக்கும். இதனை,

" மண்ணுக்கங் கொன்றரைநாழிகை யப்பு வருமொன்றுகால்
நண்ணுற்ற நாழிகை யங்கியி லேயொரு நாழிகைசேர்ந்
தெண்ணுற்ற நாழிகை முக்காலில் வாயுவுக் கெய்துமரை
விண்ணுற்ற நாழிகை வாயுசஞ் சாரம் விளம்பிடிலே."

என்னுஞ் செய்யுளாலறிக.

இவ்வாறு வாயு நடந்தாலும், பிருதிவி முதலியவற்றில் நடப்ப தன் குறியை நன்கு தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

அது, பிருதிவியில் ஒன்றரை நாழிகை மூக்குத் தொளையில் வாழும் வாயு மூக்குத் தண்டில் தாக்கிக் கொண்டும், அப்புவில் ஒன்றேகால் நாழிகை கீழ்ப்பக்கமாய் இறங்கியும், தேயுவில் ஒரு நாழிகை மேற்பக்கமாய் ஏறியும், வாயுவில் முக்கால் நாழிகை மூக்குத் தண்டுக்கு அருகாயும், ஆகாயத்தில் அரை நாழிகை எதிலும் படாமல் நேராய் ஓடும் என்பதை உணர வேண்டும். இதனை,

" அண்டத் தக்கினி ; கீழப்பாம் ; அருகே யோடில் வாயுவ
தாம் ;—
தண்டிற் றட்டில் பிருதிவியாம் ; தானே யோடி லாகாசம்.'

எனவும் ;

" இருந்த பிராண னு முள்ளே யேழுமாம்
பரிந்தவித் தண்டுட னண்டம் பரிய
விரிந்த வப்புடன் மேலெழ வைக்கின்
மலர்ந்தது மண்டலம் வாழலு மாமே."

எனத் திருமூலர் திருமந்திரத்திலும்,

" பார்க்குங்கா லிடமெனினும் வலமெனினு மொக்கும்
பஞ்சபூ தத்தியக்கம் பகருங் காலைச்
சாற்றியதண் டுடன்சேரிற் பிருதிவி யாகும் ;
தப்பாம லப்புவுக்குத் தாழ வோடும்;
மேற்றிசையை நோக்கியெழு மங்கி வாயு
மெய்யுணர்ந்தோர் புறத்தோடு மேன்மை குன்றா
நீர்த்துறையா நாற்றிசையுஞ் சிதறி யோடல்
நெடுவானென் றுரைத்திடுநீ நிலத்து ளோர்க்கே."

என ஞான சரநூலிலும் புகன்றிருத்தலாலறிக.

ஈண்டுப் பிருதிவி முதல் ஐந்து பூதங்களிலும் சரஞ்செல்லத் தரித்த குழவிக்கு நூறாண்டென்றும், அப்பு முதல் நான்கு பூதங் களிலும் சரஞ்செல்லத் தரித்த குழவிக்கு எண்பதாண்டுகளென்றும், 'பாய்ந்துமு னஞ்சோடில்' என்னும் முதற் குறிப்புள்ள முதற் செய்யுள் கூறுகின்றது.

அடியிற்கூறப்படுஞ் செய்யுளால் ஆண்டுகளின் தொகை பிழைபடுகின்றது :

" மருவுமிந் நாழிகை யைந்துக் கிடம்வலம் வாயுமன்னும்
இருபது மாவொரு நாழிகை யாக விசையுமைந்தில்
புரிவது நூறொரு மாவுக் கொருவய தாய்ப்புகன்ற
விரிவின் மனித வயதாயிற் றிந்த வியனறியே."

(கருத்துரை) : இச்செய்யுள் நாழிகைக்கு இத்தனை மாவென்றும், மா ஒன்றுக்கு ஓராண்டென்றும் கூறுகிறது.

(சொ-ரை) : மருவும்-பொருந்திய, இ-இந்த, நாழிகை ஐந்துக்கு-ஐந்து நாழிகைக்கு, வாயு-உயிர்க்காலானது, இடம் வலம் மன்னும்-இடகலையிலும் பிங்கலையிலுமாய்ச் செல்லும் ; ஒரு நாழிகை-ஒரு நாழிகைக்கு, இருபதுமா ஆக இசையும்-இருபதுமா ஆகும் ; ஐந்தில்-ஐந்து நாழிகைக்கு, புரிவது நூறு-நூறுமா ஆகும் ; ஒரு மாவுக்கு-ஒரு மாவுக்கு ; ஒரு வயது ஆய்-ஓராண்டாகி, நூறு மாவுக்கு-நூறு மாக்களுக்கு, நூறு வயது ஆய்-நூறாண்டுகளாய், புகன்ற-சொன்ன, விரிவின்-விரியால், மனித வயது-மனிதர்களுடைய வயது, ஆயிற்று-நூறாண்டாயிற்று ; இந்த வியன்-இந்தப் பெருமையை, நீயறி-மருத்துவ மாணவனே நீ அறிந்துகொள்வாய் (எ-று).

(பொழிப்புரை) : நாழிகை ஐந்தில் உயிர்க்காலானது, இடமும் வலமுமாய் மாறும் ; நாழிகை ஒன்றுக்கு இருபது மா ஆகும் ; மா ஒன்றுக்கு ஓர் ஆண்டாகும். அவ்வாறாதலால், நாழிகை ஒன்றுக்கு இருபது மாவாய் (இருபது ஆண்டுகளாக), ஐந்து நாழிகைக்கு நூறாண்டுகள் ஆகின்றன.

இஃது இவ்வாறிருப்பதால், 'பாய்ந்து பின் நாலோடில்' என்பது 'பிருதிவியை நீக்கி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்' என்னும் நான்கில் செல்லுங்கால், குழவி தரித்தல் என்னும் பொருளாகின்றது.

அப்பொழுது பிருதிவியின் காலமாகிய ஒன்றரை நாழிகையும், அதற்குரிய முப்பது மாவையும் கழிக்க வேண்டும். அங்ஙனம் கழித்தால், எழுபது ஆண்டுகள் ஏற்படுகின்றன.

இவ்வாறன்றி, 'ஐந்து நாழிகையில் நான்கு நாழிகை ஓடினால்' என்று பொருள் கொள்வோமானால், நாலிருபது எண்பது ஆண்டுகள் என்று கொள்ள இடமிருக்கிறது. அப்பொழுது இன்ன பூதத்தில் இத்தனை நாழிகை ஓட வேண்டும் என்றும், அவ்வப்பூதங்களில் ஓடுவதைத் தெரிந்துகொள்ள இடக் குறிகளையும் கூறாதிருத்தல் வேண்டும். அங்ஙனமன்றிப் பூதங்களுக்கு நாழிகையளவு புகன்றிருப்பதால், அக்கணக்கின்படி பார்க்குமளவில் " பாய்ந்து பின் நாலோடில் பார்வயதெழுபதாம் " என்று பாடம் இருத்தல் வேண்டும் என்று தோன்றுகிறது.

இஃது இவ்வாறிருக்க, இதுகாறும் திருமூலர் திருமந்திரம் 3,000 அச்சிட்டவர்கள் "பாய்ந்துபின் நாலோடில் பார்வய தெண்பதாம்" என்றே அச்சிட்டுள்ளார்கள்.

V. தொண்ணூற்றாறு தத்துவங்கள், வெவ்வேறு கொள்கைகள், தொழில்கள்.

உடற்றத்துவங்கள் 96 (சிவப்பிரகாசக் கட்டளை)

(1) ஐம்பூதங்கள் : மண், நீர், தீ, வளி, விண்.

(2) ஐம்பொறிகள் (ஞானேந்திரியங்கள்) : மெய், வாய், கண், மூக்கு, செவி.

(3) ஐந்து நுண்ணிய பொருள்கள் (பஞ்ச தன்மாத்திரைகள்) : சுவை, ஒலி, ஊறு, ஓசை, நாற்றம்.

(4) ஐந்து தொழில் உறுப்புகள் (பஞ்சதன்மேந்திரியங்கள்) : கை, கால், வாய், எருவாய், கருவாய்.

(5) அகக்கருவிகள் நான்கு (அந்தக்கரணங்கள்) : மனம், அறிவு, நினைவு, முனைப்பு (அகங்காரம்) இம்முறையில், ஆன்ம தத்துவம் இருபத்து நான்கு ஆகும். இதற்கு அசுத்த தத்துவம் என்பதும் பெயர்.

(6) ஏழு உணர்வு நிகழ்ச்சிப் பொருள்கள் (சுத்த வித்யா தத்துவங்கள்) : காலம், பிறழா நிகழ்ச்சி (நியதி), கலை, நினைப்பு (வித்தை), விருப்பு (அராகம்), மகன் (புருடன்), மாயை.

(7) ஐந்து சிவ நிலையப் பொருட்கள் (பஞ்சசிவ தத்துவங்கள்): தூய நினைவு (சுத்த வித்தை), தலைமை (ஈசுரம்), அருள் நிலை (சாதாக்கியம்), அன்னை (சத்தி), அத்தன் (சிவம்), இம்முறையில் உட்கருவிகள் (அகக்கரணம்) முப்பத்தாறாகும்.

(8) **புறக்கருவிகள்** (புறக்கரணம்) :

(அ) **மண்ணின் கூறு ஐந்து** : மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை.

(ஆ) **புனலின் கூறு ஐந்து** : ஓடுநீர், குருதி, வெண்ணீர், மூளை, கொழுப்பு.

(இ) **அனலின் கூறு ஐந்து** : உணவு, தூக்கம், அச்சம், சேர்க்கை (மைதுனம்), சோம்பல்.

(ஈ) **வளியின் கூறு ஐந்து** : ஓடல், நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல்.

(உ) **விண்ணின் கூறு ஐந்து** : இன்பம் (காமம்), உட்பகை (குரோதம்), ஈயாமை (உலோபம்), பெருவேட்கை (மோகம்), கொழுப்பு (மதம்), இந்நிலையில் பூதகாரியங்கள் இருபத்தைந்து.

(9) **பத்து வளி அல்லது காற்று** (தசவாயுக்கள்) : உயிர்க் காற்று அல்லது உயிர்வளி (பிராணன்), மலக்காற்று(அபானன்), தொழிற்காற்று (வியானன்), ஒலிக்காற்று (உதானன்), நிரவுகாற்று (சமானன்), தும்மற்காற்று (நாகன்), விழிக்காற்று (கூர்மன்), கொட்டாவிக்காற்று (கிருகரன்), இமைக்காற்று (தேவதத்தன்), வீங்கற்காற்று (தனஞ்சயன்).

(10) **பத்து நாடிகள்** (தசநாடிகள்) : இடப்பால் நரம்பு, இட மூச்சு (இடைகலை), வலப்பால் நரம்பு, வலமூச்சு (பிங்கலை), நடுநரம்பு, நடுமூச்சு (சுழுமுனை), உள்நாக்கு நரம்பு (சிங்குவை), வலக்கண் நரம்பு (புருடன்), இடக்கண் நரம்பு (காந்தாரி), வலச் செவி நரம்பு (அத்தி), இடச் செவி நரம்பு (அலம்புடை), கரு வாய் நரம்பு (சங்கினி), எருவாய் நரம்பு (குகு).

(11) **தொழில் உறுப்புகளின் செயல்கள் ஐந்து** (வசனாதிகள்) : சொல்லல் (வசனம்), நடத்தல் (கமனம்), கொடுத்தல் (தானம்), விடுதல் (விசர்ச்சனம்), மகிழ்தல் (ஆனந்தம்).

(12) **வாக்குகள் நான்கு** : நுண்ணோசை (சூக்குமை), நினை வோசை (பைசந்தி), மிடற்றோசை (மத்திமை), செவியோசை (வைகரி).

(13) **முக்குணங்கள்** : நன்மை அல்லது அமைதி (சத்துவம்), மனவெழுச்சி அல்லது எழுச்சி (இராசதம்), மயல் அல்லது மயக்கம் (தாமதம்).

(14) **அகங்காரங்கள் மூன்று** (முனைப்புகள்) : தைசசாகங் காரம், வைகாரி காகங்காரம், பௌதாதிகாகங்காரம்.

வெவ்வேறு கொள்கைகள்.

திருவாலவாய்க் கட்டளையில் ஏடணைகள் மூன்றைக் கூறி, சிவப்பிரகாசக் கட்டளையில் கூறிய அகங்காரங்கள் மூன்று நீங்கலாய் மற்றத் தொண்ணூற்று மூன்றும் ஒன்றாய்ப் பொருந்தியிருக்கின்றன.

முப்பற்றுகள் (மூவேடணைகள்): பொருட்பற்று (அவர்த்தவேடணை), புதல்வர் பற்று (புத்திரவேடணை), உலகப்பற்று (உலகவேடணை).

96. தத்துவங்கள்:

வேதாந்த தத்துவக் கட்டளையிற் கூறியபடி—

I. முதல் தத்துவம் *30* : *(1)* பூதம் ஐந்து, *(2)* பொறி ஐந்து, *(3)* புலனைந்து, *(4)* கன்மேந்திரியம் ஐந்து, *(5)* கன்மவிஷயம் ஐந்து, *(6)* கரணம் நான்கு. *(7)* அறிவு ஒன்று.

II. இரண்டாம் தத்துவம் *30* : *(1)* நாடி பத்து, *(2)* வாயு பத்து, *(3)* ஆசயங்கள் ஐந்து, *(4)* கோசம் ஐந்து.

III. மூன்றாந் தத்துவம் *36* : *(1)* ஆதாரம் ஆறு, *(2)* மண்டலம் மூன்று, *(3)* மலம் மூன்று, *(4)* தோஷம் மூன்று, *(5)* ஏடணை மூன்று, *(6)* குணம் மூன்று, *(7)* இராகம் எட்டு, *(8)* வினை இரண்டு, *(9)* அவஸ்தை ஐந்து.

பூதம் 5 ; பொறி 5; புலன் 5 ; கன்மேந்திரியம் 5 ; கன்மவிஷயம் 5 ; கரணம் 4 ; நாடி 10 ; வாயு 10 ; குணம் 3 ; ஏடணைகள் 3 ஆக இவ்வைம்பத்தைந்தையும் முற்கூறிய கட்டளைகளில் கூறியுள்ளார்.

1. அறிவு : தன்னைக் கண்டு மகிழ்ந்திருத்தல்,

2. ஆசயம் ஐந்து : *(1)* அமர்வாசயம், *(2)* பகிர்வாசயம், *(3)* சலவாசயம், *(4)* மலவாசயம், *(5)* சுக்கிலவாசயம்.

3. கோசம் ஐந்து : *(1)* அன்னமய கோசம், *(2)* பிராணமய கோசம், *(3)* மனோமய கோசம், *(4)* விஞ்ஞானமய கோசம், *(5)* ஆனந்தமய கோசம்.

4. ஆதாரம் ஆறு : (1) மூலதாரம், (2) சுவாதிட்டானம், (3) மணிபூரகம், (4) னாகதம், (5) விசுத்தி, (6) ஆக்கினை.

5. மண்டலம் மூன்று : (1) அக்கினி மண்டலம், (2) ஆதித்திய மண்டலம், (3) சந்திர மண்டலம்.

6. மலம் மூன்று : (1) ஆணவம், (2) காமியம், (3) மாயை.

7. தோஷம் மூன்று : (1) வாதம், (2) பித்தம், (3) கபம்.

8. வினை இரண்டு : (1) நல்வினை, (2) தீவினை.

9. அவஸ்தை ஐந்து : (1) சாக்கிரம், (2) சொப்பனம், (3) சுழுத்தி, (4) துரியம், (5) துரியா தீதம்.

10. இராகம் எட்டு : (1) காமம், (2) குரோதம், (3) உலோபம், (4) மோகம், (5) மதம், (6) மாற்சரியம், (7) இடும்பை, (8) அகங்காரம்.

96 தத்துவங்கள் (தத்துவ தீபிகையில் கூறியபடி) வாசல்கள் 9, பொறி 10, புலன் 10, ஆதாரம் 6, மண்டலம் 3, நாடி 10, தாது 7, கோசம் 5, கரணம் 4, அவஸ்தை 5, குணம் 3, மலம் 3, இராகம் 8, வியாதி 3, வாயு 10, ஆக 96,

பொறி, புலன், ஆதாரம், மண்டலம், நாடி, கோசம், கரணம், அவஸ்தை, குணம், மலம், இராகம், வாயு, வியாதி, இவை முற்கூறி உள்ள கட்டளைகளில் கூறப்பட்டன. அவைகளில் கூறாததவை இங்குக் கூறப்படுகின்றன.

வாசல்கள்து ஒன்பது : செவிகள் 2, கண்கள் 2, நாசிகள் 2, வாய் 1, பெண்குறி அல்லது ஆண்குறி 1, குதம் 1.

தாதுக்கள் ஏழு : இரசம், குருதி, தசை, கொழுப்பு, எலும்பு, மூளை, வெண்ணீர்.

96. தத்துவம் (சித்தாந்தக் கட்டளைப்படி).

1. பூதம் 5		
2. ஞானேந்திரியம் 5		
3. தன்மாத்திரை 5		
4. கர்மேந்திரியம் 5	ஆக உட்கருவிகள் 36.	
5. அந்தக்கரணம் 4		
6. வித்தியாதத்துவம் 7		
7. சுத்ததத்துவம் 5		
8. பஞ்சபூதங்களின் கூறுகள் 25		
9. பிருதிவின் வழிநாடி 10		
10. வாயுவின் வழிநாடி 10		
11. ஆகாயத்தின் வழி ஏடணை 3		ஆக புறக்கருவிகள் 60.
12. வாக்காதியின் தொழில் 5		
13. குணம் 3		
14. வாக்கு 4		

இந்நூலில் கூறிய தத்துவங்கள் தொண்ணூற்றாறும், சிவப்பிரகாசக் கட்டளையில் கூறிய தத்துவங்கள் தொண்ணூற்றாறும், ஒரே வகைப்பட்டன.

96 தத்துவங்கள் (யூகிசிந்தாலணியில் கூறியபடி)

உறுதியாம் பூதாதி யோரைந் தாகும்
உயர்கின்ற பொறியைந்து புலனைந் தாகும்
கறுதியாங் கன்மவிந் திரிய மைந்தும்
கடிதான ஞானவிந் திரிய மைந்தும்
திறுதியாந் தீதாய கரணம் நான்கும்
திறமான வறிவொன்றும் நாடி பத்தும்
மறுதியாம் வாயுவது பத்துமாகும்
மகத்தான விஷயமஞ்சு கோச மஞ்சே.

அஞ்சவே யாதார மாறு மாகும்
அறிய மண் டலமூன்று மலமூன் றாகும்
தொஞ்சவே தோடமூன்றீ டணைதான் மூன்று
தோதமாங் குணமூன்று வினையி ரண்டாம்
தஞ்சவே ராகமெட்டு வவததை யைந்து
தயங்கியதோர் கருவிகடாம் தொண்ணூற் றாறு
ஒஞ்சவே யொவ்வொன்றாய் விரித்துச் சொல்வேன்
உறுதியாம் பூதாதி யுரைக்கக் கேளே.

பாட்டின் பொருள்

1.	பூதம்	5
2.	பொறி	5
3.	புலன்	5
4.	கன்மேந்திரியம்	5
5.	ஞானேந்திரியம்	
6.	கரணம்	4
7.	அறிவு	1
8.	நாடி	10
9.	வாயு	10
10.	விஷயம்	5
11.	கோசம்	5
12.	ஆதாரம்	6
13.	மண்டலம்	3
14.	மலம்	3
15.	தோஷம்	3
16.	ஈடணை	3
17.	குணம்	2
18.	வினை	2
19.	இராகம்	8
20.	அவஸ்தை	5
	ஆக	96

யூகிசிந்தாமணியில் கூறிய தொண்ணூற்றாறு தத்துவங்களும் வைத்திய சதக நாடியில் கூறிய தொண்ணூற்றாறு தத்துவங்களும் ஒன்றாய்ப் பொருந்தி இருக்கின்றன. இனி இத்தத்துவங்களின் தொழில்களை விளக்கிக் கூறுவாம் :

நாம் எடுத்துக்கொண்டுள்ள—சிவப்ரபிகாசக் கட்டளை, திருவாலவாய்க் கட்டளை, யூகி முனிவர் கட்டளை என்னும் ஆறு கட்டளைகளில் தத்துவங்களின் பாகுபாடுகள், பெயர்கள் முதலியன சில ஒன்றுபட்டும், சில மாறுபட்டும் உள்ளதை விளக்கக் கீழ்க்காணும் கட்டட அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது. அதனைக் கூர்ந்து கவனிக்க :—

தொடர் எண்ணும் தத்துவங்களின் பெயர்களும். (1)	தத்துவங்களின் வேறு பெயர்கள். (2)	தத்துவங்களின் வகைகளின் பெயர்கள். (3)	எண். (4)	தத்துவக் கட்டளைகள். சிவப்பிரகாசர் கூறும் எண். (5)	திருவாலவாய் கூறும் எண். (6)	வேதாந்தம் கூறும் எண். (7)	தத்துவ திரிகை கூறும் எண். (8)	சித்தாந்தம் கூறும் எண். (9)	யூகி முனிவர் கூறும் எண். (10)
1. ஐம்பூதங்கள்	ஐந்து பகுப் பொருள் பஞ்சபூதம்.	மண் (பிருதிவி)	1	5	5	5	உடன்பாடு இல்லை.	5	5
		புனல் (அப்பு)	1						
		அனல் (தேயு)	1						
		கால் (வாயு)	1						
		விசும்பு (ஆகாயம்).	1						
2. ஐம்பொறிகள்	பஞ்சேந்திரியங்கள் ஞானேந்திரியங்கள்.	வாய் (சிங்குவை)	1						
		கண் (சட்சு)	1						
		மெய் (துவக்கு)	1	5	5	5	5	5	5
		காது (சுரோத்திரம்)	1						
		மூக்கு (கிரணம்)	1						

3. ஐந்து நுண்ணிய பொருள்	பஞ்ச - தன் மாத்திரைகள்.	சுவை (ரசம்) 1 ஒளி (ரூபம்) 1 ஊளறு (ஸ்பரிசம்) 1 ஓசை (சப்தம்) 1 நாற்றம் (சந்தம்) 1	5	5	5	5	5	5
4. ஐந்து தொழி லுறுப்புகள்.	கன்மேந்திரியங்கள்.	வாய் வாக்கு) 1 கால் (பாதம்) 1 கை (பாணி) 1 எருவாய் (பாடிறு) 1 கருவாய் (உபத்தம்) 1	5	5	5	5	5	5
5. தொழிலுறுப்பு களின் செயல்கள்.	கன்மேந்திரிய வியாபாரம் வசனாதிகள்.	சொல்லல் (வசனம்) 1 நடத்தல் (கமனம்) 1 கொடுத்தல் (தானம்) 1 விடுத்தல் (விசர்சனம்) 1 மகிழ்தல் (ஆனந்தம்) 1	5	5	5	5	5	5
6. ஏழு - உணர்வு நிகழ்ச்சிப் பொருள்கள்.	சுத்த வித்யா தத்துவங்கள் அல்லது வித்யா தத்துவம்	காலம் 1 நியதி (பிறழா நிகழ்ச்சி) 1 கலை 1 நினைப்பு (வித்தை) 1 விருப்பு (அராகம்) மகன் (புருடன்) 1 மாயை 1	7	7	உடன் பாடில் லை.	உடன் பாடில் லை.	7	உடன் பாடில் லை.
			25	25	25	20	25	25

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
	முன் பக்க மொத்தம் கொண்டுவரப்பட்டது.			25	25	25	20	25	25
7.	ஐந்து சிவநிலையப் பொருட்கள்.	பஞ்ச சிவ தத்துவங்கள் அல்லது சுத்த தத்துவம்.	தூயநினைவு (சுத்த வித்தை) 1; தலைமை (ஈசுரம்) 1; அருள்நிலை (சாதாக்கியம்) 1; அன்னை (சக்தி) 1; அத்தன் (சிவன்) 1	5	5	உடன் பாடில்லை		உடன் 5 படிலை	
8.	அகக் கருவிகள்	அந்தக் கரணம் அல்லது கரணங்கள்.	மனசு (மனம்) 1; சித்தம் (அறிவு) 1; புத்தி (நினைவு) 1; அகங்காரம் (முனைப்பு) 1	4	4	4	4	4	4
9.	மண்ணின் கூறு	பிருதிவி அம்சம்	மயிர் ..	5					
			எலும்பு, தோல், நரம்பு, தசை ..	5	5	உடன் பாடில்லை	உடன் பாடில்லை	5 உடன் பாடில்லை	
10.	புனலின் கூறு	உப்பு அம்சம்	ஓடுநீர் .., குருதி ..	..					
			வெண்ணீர், மூளை, கொழுப்பு		5	5 உடன் பாடில்லை.	உடன் பாடில்லை.	5 உடன் பாடில்லை.	

11.	அனலின் கூறு	தேயு அம்சம்	உணவு (ஆகாசம்) தூக்கம் (நித்திரை) அச்சம் (பயம்) சேர்க்கை (மைதுனம்) சோம்பல்	5	5	உடன்பாடில்லை.	உடன்பாடில்லை.	5	உடன்பாடில்லை.
12.	வளியின் கூறு	வாயுவம்சம்	ஓடல் 1 நடத்தல் 1 நிற்றல் .. 1 இருத்தல் 1 கிடத்தல் 1	5	5	உடன்பாடில்லை.	5		உடன்பாடில்லை.
13.	விண்ணின் கூறு	ஆசாசாம்சம்	இன்பம் (காமம்) 1 உட்பகை (குரோதம்) 1 ஈயாமை (உலோபம்) 1 பெருவேட்கை (மோகம்). 1 கொழுப்பு (மதம்). 1	5	5	உடன்பாடில்லை.	உடன்பாடில்லை,	5	உடன்பாடில்லை.
				56	56	29	29	56	29

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
	முன்பக்க மொத்தம் கொண்டுவரப்பட்டது			56	56	29	24	56	29
14.	பத்துவளி (காற்று).	தசவாயு	உயிர்வளி (பிராணன்)	1					
			மலக் காற்று (அபானன்).	1					
			தொழிற்காற்று (வியானன்).	1					
			ஒலிக் காற்று (உதானன்).	1					
			நிரவு காற்று (சமானன்).	1					
				10	10	10	10	10	10
			தும்மற் காற்று (நாகன்).						
			விழிக்காற்று (கூர்மன்).						
			கொட்டாவிக் காற்று (கிருகரன்).	1					
			இமைக் காற்று (தேவதத்தன்).						
			வீங்கற் காற்று (தனஞ்செயன்).	1					
15.	பத்து நாடிகள் ..	தசநாடி ..	இடைகலை (இட மூச்சு).	1					
			பிங்கலை (வல மூச்சு).	1					
			சுழுமுனை (நடு மூச்சு).	1					

		சிங்குவை (உள் நாக்கு நரம்பு).	1					
		புருடன் (வலக்கண் நரம்பு).	1					
		காந்தாரி (இடக் கண் நரம்பு).	1					
			10	10	10	10	10	10
		அத்தி (வலச் செவி நரம்பு).	1					
		அலம்புடை (இடச் செவி நரம்பு).	1					
		சங்கினி (கருவாய் நரம்பு).	1					
		குகு (எருவாய் நரம்பு).	1					
16.	வாக்குகள் ..	.. நுண்ணோசை (சூக்குனம்).	1					
		நினைவோசை (பைசந்தி).	1					
			4	4	உடன் பாடில்லை.		4	உடன் பாடி ல்லை
		மிடற்றோசை (மத்திமை).	1					
		செவியோசை (வைகரி).	1					
17.	குணங்கள் ..	.. சத்துவம் (அமைதி)						
		ராஜசம் (மன வெழுச்சி).	1					
			3	3	3	3	3	3
		தாமசம் (மயக்கம் (அ)மயல்).	1					
			93	93	52	47	93	52

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
முன் பச்சக் கூட்டுத் தொகை.				93	93	52	47	93	52
18. அகங்காரங்கள்	.. முனைப்புகள்	.. தைஜசாகங்காரம்	1		3		உடன் பாடில்லை.		
		வைக்ரிகாகங்காரம்	1						
		பௌதிகாகங்காரம்	1						
19. முப்பற்றுக்கள்	.. மூவேடனை ஈஷணாத்திரியம்.	பொருட்பற்று (அர்த்தவேடனை)	1						
		மக்கட் பற்று (புத்ரவேடனை)	1	உடன் பாடில் லை.	3	3	உடன் பாடில் லை.	3	3
		உலகப் பற்று (உலக வேடனை).	1						
20. அறிவு ..	..	.. அறிவு ..		1	உடன் பாடில்லை.	1	உடன் பாடில்லை.		1
21. ஆசயம்	..	.. அமர்வாசயம் (ஆமாசயம்)							
		பகிர்வாசயம் (பரக்வாசயம்).		1					
		சலவாசயம் (ஜல வாசயம்).		1	உடன் பாடில்லை.	5	உடன் பாடில்லை.		5
		மலவாசயம் (மலாசயம்).		1					
		சுக்லாசயம் ..		1					

22. கோசம்	அன்னமயகோசம் பிராணமய கோசம் மனோமயகோசம் விஞ்ஞானமய கோசம்). ஆனந்தமயசொகம்	1 1 1 1	உடன் பாடு இல்லை.	5	5	உடன் பாடு இல்லை	5
23. ஆதாரம்	மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் .. அனர்ழகதம் விசுததி .. ஆக்கினை ..	1 1 1 1 1 1	உடன் பாடு இல்லை	6	6	உடன் பாடு இல்லை	6
24. மண்டலம்	அக்கினி மண்டலம் ஆதிததிய மண்டலம் சந்திர மண்டலம்	1 1 1	உடன் பாடில்லை.	3	3	உடன் பாடு இல்லை.	3
25. பலம்	ஆணவம் .. காமியம் (அல்லது) (கன்மம்). மாயை ..	1 1 1	உடன் பாடில்லை.	3	3	உடன் பாடு இல்லை	3
		96	96	83	67	96	83

(1)	(2)	3)	(4)	(5)	(6)	[7)	(8)	(9)	(10)
	முன் பக்கக் கூட்டுத்தொகை கொண்டுவரப்பட்டது.			91	91	78	62	91	78
26.	தோடம்	தோஷம், வியாதி, குற்றம்.	வாதம் ..	1					
			பிததம் ..	1	உடன் பாடில்லை.		3	3	உடன் 3 பாடு இல்லை.
			கபம்	1					
27.	வினைகள்	..	நல்வினை ..	1	உடன்		2	2	உடன் 2
			தீவினை ..	1	பாடில்லை.				பாடில்லை.
28.	அவஸ்தை	அவத்தை நிலை.	சாக்கிரம் (நனவு)	1					
			சொப்பனம் (கனவு)	1					
			சுழுத்தி (உறக்கம்).	1	உடன்		5	5	உடன் 5
			துரியம் (பேருறக்கம்)	1	பாடில்லை.				பாடு
			துரியாதீதம் (உயிர்ப் படக்கம்)	1					இல்லை.
29.	இராகம் (ராகம்).	அராகம் ..	காமம் ..	1					
			குரோதம் ..	1					
			உலோபம் ..	1					
			மோகம் ..	1	உடன்		8	8	உடன் 8
			மதம்	1	பாடில்லை.				பாடு
			மாற்சரியம் ..	1					இல்லை.
			இடும்பை ..	1					
			அகங்காரம் ..	1					

30. வாசல்கள் ..	துவாரங்கள் ..	செவி 2 ..	2					
		கண் 2 ..	2					
		நாசிததுளை 2 ..	2		உடன்		9	உடன்
		வாய் 1 ..	1		பாடில்லை.			பாடில்லை.
		குதம் 1 ..	1					
		ஆண்குறி அல்லது பெண்குறி 1.	1					
31. தாதுக்கள் ..	உடற்கட்டுகள் ..	இரசம் ..	1					
		குருதி	1					
		தசை	1					
		கொழுப்பு ..	1		உடன் பாடில்லை.		7	உடன்
		என்பு	1					பாடில்லை.
		மூளை	1					
		வெண்ணீர் ..	1					
			96	96	96	96	96	96

96 தத்துவங்களின் தொழில்கள்.

1. ந்து பருப்பொருள்கள் (ஐம்பூதங்கள்) :

நிகழ்ந்த சீர்ப் பிருதிவியும் அப்பு தானும்
நேரான தேயுவொடு வாயுமாகும்

அகழ்ந்தவா காயத்தோ டைந்து பூதம்
அரிதான பிருதிவியு மண்ணு மாகும்

தகழ்ந்தவப்பு சலமாகும் நெருப்பாந் தேயு
தாக்கான வாயுவது காற்று மாகும்

இகழ்ந்தவா காயமது சத்த மாகும்
ஏற்றபிரு திவியும் பொன் னிறமதாமே.

ஆமேதான் அப்புநிறம் படிகமாகும்
அக்கினியின் நிறந்தானே சிவப்பதாகும்

காமேதான் வாயுநிறம் கருப்பதாகும்
கார்மேகப் புகைநிறமா மாகாயந்தான்

தேமேதான் வண்ணமுமிப் படியேயாகும்
சேர்ந்துநின்ற தெய்வத்தின் தலமே கேளாய்

போமேதான் பிருதிவிக்குத் தேவன் பிரம்மா
பெரியசுவா திட்டானம் இருப்பதாமே

இருப்பான வீடுசுவா திட்டா னந்தான்
இதழாறு பிருதிவியின் பீஜம் நவ்வாம்

மருப்பான மயிர் நரம்பு தசைதோ லென்பு
மாசற்ற அப்புவிற்கு விஷனு தெய்வம்

சிறப்பான மணிபூரம் வீடு மாகும்
சிறுபிறைரூ பம்போற்பத் திகழ்தான் சுற்றி

..ருப்பான அப்பினுக்குப் பீஜம் அவ்வாம்
அதன்கூற்றைத்தான் கேளு முதிரஞ்சியே.

யான நீரோடு மூளை மச்சைத்
தேயுவுக்கு உருத்திரன்றான் தெய்வமாகும்

மூயான முக்கோன மகத்தாம் வீடு
முயற்சியா யீராறாம் இதழ்தாம் சுற்றில்

தேயான சிவ்வதுவும் தேயு பீசம்
சிதையாமல் இதழுக்குட் சேர்ந்து நிற்கும்

ஆயான வாகாரஞ் துஞ்சல் போகம்
அதனுடைய கூறதுதான் பயமும் சோம்பே.

சோம்பான வாயுவுக்கு மகேசன் தெய்வம்
சோடசமாம் இதழோடே விசுத்தி வீடு
ஆம்பான வாயுவுக்கு வவ்வு பீசம்
அதனுடைய தன்கூறு நடத்தல் நிற்றல்
லாம்பான வாடலோ டிருத்தல் ஓடல்
வகையான அறுகோணங் குடியிருப்பு
தேம்பான வாகாயம் ஆக்கினைக்குள்
சிதையாமல் இரண்டிதழோ டிருக்கும் பாரே!

இருக்கின்ற ஆக்கினையின் கூறு கேளாய்
ஏற்ற காமக்குரோத வுலோப மோகம்
மறுக்கின்ற மதமு மாற்சரித் தோடு
வானுக்குச் சதாசிவமே தெய்வமாகும்

பிருக்கின்ற வாகாச பீசம் யவ்வாய்
பேரான ஐம்பூதப் பிரிவுமாகும்

தெருக்கின்ற . . . .

(யூகி—வைத்திய சிந்தாமணி)

ஐந்து பருப் பொருள்கள்

குறிப்பு.—உடல் ஐம்பூதக் கூறுபாடுகளை உடையது என்பதை இப்பாடல்களில் அடியில் கோடிட்ட பாகங்கள் விளக்குவதை அறிக.

(அ) மண் (பிருதிவி): உரத்துத்தரிக்கும், வடிவம்—நாற்கோணம், நிறம்—பொன்மை, பண்பு—கடினம், சுபாவம்—கிடத்தல், தொழில்—பொறுத்தல், குறி—வச்சிரம், தேவதை—பிரமன், அட்சரம்—லகாரம், சூட்சும பஞ்சாட்சரம்—அகாரம், கலை—நிவர்த்தி.

(ஆ) புனல் (அப்பு): குளிர்ந்து பதஞ்செய்யும், வடிவு—இரு கோணம், நிறம்—வெள்ளை, பண்பு—நெகிழ்ச்சி, சுபாவம்—பார்த்தல், தொழில்—கட்டுண்டல், குறி—கோகநகம் (தாமரை மலர்), தேவதை—விட்டுனு, அட்சரம்—வகாரம், சூக்கும பஞ்சாட்சரம்—உகாரம், கலை—பிரதிட்டை.

(இ) அனல் (தேயு): சுட்டொன்றுவிக்கும், வடிவு—முக்கோணம், நிறம்—செம்மை, பண்பு—சுட்டொன்று வித்தல், சுபாவம்—வவ்வுதல், தொழில்—உலர்த்தல், குறி—சுவத்திகம், தேவதை—உருத்திரன், அட்சரம்—மகாரம், சூக்கும பஞ்சாட்சரம்—மகாரம், கலை—வித்தை.

(ஈ) கால் (வாயு): சலித்து எவையும் திரட்டும், வடிவு—அறுகோணம், நிறம்—கறுப்பு, பண்பு—சலித்துத் திரட்டல், சுபாவம்—நிறைத்தல், தொழில்—விம்முதல், குறி—அறுபுள்ளி, தேவதை—மகேஸ்வரன், அட்சரம்—யகாரம், சூக்கும பஞ்சாட்சரம்—விந்து, கலை—சாந்தி.

(உ) விசும்பு (ஆகாயம்) : நிரந்தரமாய் இடம் கொடுக்கும், வடிவு—வட்டம், நிறம்—புகை, பண்பு—இடம் கொடுத்தல், சுபாவம்—நிற்றல், தொழில்—போக்குதல், குறி—அமுதவிந்து, தேவதை—சதாசிவம், அட்சரம்—அகாரம், சூக்கும பஞ்சாட்சரம்—நாதம், கலை—சாந்தியாதீதம்.

II. ஐம்பொறிகள் (ஞானேந்திரியங்கள்) :

உரைக்கவே . . . .
. . . .
. . . .
பொறியைந்தின் விபரமதைப்ப கலக் கேளாய்
திரைக்கவே சுரோத்திரமும் தொக்கு சட்சு
சிங்குவையாக் ராணமிவையாக ஐந்தும்
துரைக்கவே சுரோத்திரந்தான் செவியுமாகும்
தொக்காவ துடம்பென்றே சொல்லலாமே.

சொல்லவே சட்சதுதான் கண்ணுமாகும்
நூய்தான சிங்குவைநா வாக்ராண மூக்காம்
புல்லவே புலனைந்தும் புகலக்கேளு
புகழான சத்தமொரு பரிசம் ரூபம்
நல்லவே ரசகந்த மாக வைந்தாம்
நலமான சத்தமது கேள்வியாகும்
செல்லவே செவியுனுடக் கூறதாகும்.
செய்பரிசம் சுகதுக்க மறிதல் காணே.

காணவே தேகத்தின் கூறதாகும்
காண்ரூப மாவதுதான் காண்பதாகும்
நாணவே கண்ணினுட கூறதாகும்
ரசமாவ தறுசுவையை அறிதலாகும்
பூணவே நாக்கினுட கூறதாகும்
புகல்கந்தம் துர்க்கந்த நற்கந்த மறிதல்
தோணவே மூக்கினுட கூறதாகும்
சுகமான பொறியைந்தின் சூட்சந்தானே

(யூகி —வைத்திய சிந்தாமணி 800)

1. செவி (சுரோத்திரம்). விசும்பினிடமாக நின்று செவியைப் பொருந்தி ஒலியை அறியும்.

2. மெய் (துவக்கு) : வளியினிடமாய் நின்று உடலைப் பொருந்தி ஊற்றை அறியும்.

3. கண் (சட்சு) : அனலினிடமாய் நின்று கண்ணைப் பொருந்தி உருவத்தை அறியும்.

4. நாக்கு (சிங்குவை) : புனலினிடமாய் நின்று உருசியை அறியும்.

5. மூக்கு (கிராணம்) : பிருதிவியினிடமாய் நின்று வாசனை அறியும்.

III. ஐந்து தொழில் உறுப்புகள் (பஞ்சகன்மேந்திரியங்கள்.

தானான கன்மஇந் திரியமைந்தின்
சார்ப்தனைச் சாற்றிடவே வாக்கு பாதப்
பானான பாணிபா யுரு முபத்தம்
பகரைந்தின் பிரிவதுதான் வாக்குவாயா
கானான பாதமது காலே யாகும்
கனமான பாணியது கையுமாகும்
ஊனான பாயுறாதா னபான மாகும்
உபத்தமது லிங்கமென உரைக்கலாமே

ஆமென்ற கன்மஇந் திரிய மைந்தின்
அடைபெல்லாம் சொன்னதன்பின் அப்பாற் கேளாய்
நாமென்ற கன்மேந்திரிய விடய மைந்தை
நவின்றிடவே வசனமொடு கமனமாகும்
தாமென்ற தானமொடு விசர்க்க மானந்தம்
தாக்காக வீரைந்து சாற்றி னேன்நான்
பாமென்ற இதனுடைய விபரமெல்லாம்
பரிவாக ஒவ்வொன்றா யுரைக்கின் றேனே!

உரைக்கவே வாக்கதுதான் வசனிப்பாகும்
உறுதியாம் பாதமது நடத்தி வைக்கும்
பரைக்கவே பாணிகையால் வழங்குவிக்கும்
பாயுருதான் மலந்தனையே பிரித்து வைக்கும்
துரைக்கவே உபத்தமது சுக்ல மூத்ரம்
துரிசாக விடுவிக்கும் சுப்ரமாகும்
நரைக்கவே கன்மேந்திரிய விடைய மந்தின்
நலமதனை நவின்றிடவே நண்பா மென்னே.

(யூகி—வைத். சித். 800)

1. வாய் (வாக்கு) : விசும்பினிடமாய் நின்று வசனிக்கும்.

2. கால் (பாதம்) : வாயுவினிடமாய் நின்று நடக்கும்.

3. கை (பாணி) : அனலினிடமாய் நின்று இடுதலும் ஏற்றலும் செய்யும்.

4. எருவாய் (பாயுரு) : அப்புவினிடமாய் நின்று மலத்தைக் கழிக்கும்.

5. கருவாய் (உபத்தம்) : பிருதிவியினிடமாய் நின்று சுக்கிலத்தைக் கழித்து ஆனந்திக்கும்.

IV. ஐந்து நுண்ணிய பொருள்களின் தொழில் (பஞ்ச தன் மாத்திரைகள்) : செவி முதலியவைகட்கு அறியப்படத்தக்கவையாய் இருக்கும்.

V. அகக்கருவிகள் (அந்தக் கரணங்கள்) ;

என்னவே கரணமது நாலதாகும்
 ஏற்மனம் புத்தியாங் காரம் சித்தம்
நன்னவே நாலினுட விரிவைக் கேளாய்
 நலந்தமன மாவதொன்றைத் தானினைக்கும்
பொன்னவே புததிதான் தனை விசாரிக்கும்
 பேரரான ஆங்காரம் கொண்டெழுப்பி வைக்கும்
தென்னவே சித்தமதைச் செய்து முடிப்பிக்கும்
 சிறந்த வந்தக் கரணந்தான் நான்குமாச்சே

(யூகி—வைத். சித். 800)

அறிவு நிச்சயிக்கும், நினைவு நினைக்கும், முனைப்பு (அகங்காரம்) மணிபற்றும் கொண்டு எழுப்பும்.

VI. எழு உணர்வு நிகழ்ச்சிப் பொருள்கள் (சுத்த வித்யாத் தத்துவங்கள்) :

1. காலம் : சென்ற காலமான எல்லையும், நிகழ் காலமான பலமும், எதிர் காலமான புதுமையும் ஆக மூன்று விதமாயிருக்கும்.

2. பிறழா நிகழ்ச்சி (நியதி) : அரசன் ஆணை போலக் கன்ம பலத்தை உள்ளளவும் நிறுத்தும்.

3. கலை : ஆணவத்தைச் சிறிது நீக்கி ஆன்மாவுக்குக் கிரியை எழுப்பும்.

4. நினைப்பு (வித்தை) : ஆன்மாவுக்கு ஞானத்தை எழுப்பும்.

5. விருப்பு (அராகம்) : ஆன்மாவிற்கு இச்சையை எழுப்பும்.

6. மகன் (புருடன்): ஆகக்கவையாதி பஞ்ச கஞ்சுகத்துடேன கூடிப் புலனுக்கு அமரும் இடம்.

7. மாயை : பிரகிருதி குணரூபமாய் நின்று பொருந்தினதில் அழுந்தும்.

VII. ஐந்து சிவ நிலையப் பொருள்கள் (பஞ்சசிவ தத்துவங்கள்) :

1. தூய நினைவு (சுத்த வித்தை) : ஞானமேறிக்கிரியை குறைந்திருப்பது.

2. தலைமை (ஈசுரம்) : கிரியையேறி ஞானம் குறைந்திருப்பது.

3. அருள் நிலை (சாதாக்கியம்) : ஞானமும் கிரியையும் ஒத்து இருப்பது.

4. அன்னை (சத்தி) : சத்தி தத்துவம் கிரியையாய் இருப்பது.

5. அத்தன் (சிவம்) : சிவவத்துவம் ஞானமாய் இருப்பது.

VIII. புறக்கருவிகள் (புறக்கரணம்) :—

1. **மண்ணின் கூறு** : பிருதிவியில் பிருதிவி, எலும்பு; பிருதிவியில் அப்பு: மாமிசம்; பிருதிவியில் அக்கினி, தோல்; பிருதிவியில் வாயு, நரம்பு; பிருதிவியில் ஆகாயம், மயிர்.

2. **புனலின் கூறு** : அப்புவில் அப்பு, சிறுநீர்; அப்புவில் பிருதிவி, உமிழ் நீர்; அப்புவில் அக்கினி, வியர்வை; அப்புவில் வாயு, இரத்தம்; அப்புவில் ஆகாயம், சுக்கிலம்.

3. **அனலின் கூறு** : தேயுவில் தேயு, தூக்கம்; தேயுவில் பிருதிவி, பசி; தேயுவில் அப்பு தாகம்; தேயுவில் வாயு, ஆலசியம்; தேயுவில் ஆகாயம், சேர்க்கை.

4. **வளியின் கூறு** : வாயுவில் வாயு, ஓடல்; வாயுவில் பிருதிவி, படுத்தல்; வாயுவில் அப்பு, நடத்தல்; வாயுவில் தேயு, உட்காருதல்; வாயுவில் ஆகாயம், தாண்டல்.

5. **விண்ணின் கூறு** : ஆகாயத்தில் ஆகாயம், மோகம்; ஆகாயத்தில் பிருதிவி, இராகம்; ஆகாயத்தில் அப்பு, துவேஷம் (வெறுப்பு); ஆகாயத்தில் தேயு, பயம்; ஆகாயத்தில் வாயு, இலச்சை (நாணம்).

IX. பூதகாரியம் :—

(1) மண்ணின் கூறாகிய மயிர் வளரும்; எலும்பு உரக்கும்; தோல்வற்கென்னும் (அழகு); நரம்பு கதித்தோடும்; தசை முற்றும்

(2) புனலின் கூறாகிய நீர் விழும்; குருதி பரக்கும்; வெண்ணீர் வரத்திக்கும் (நடைபெறும்); முளை மெத்தென்று இருக்கும் கொழுப்பு நிறைக்கும்.

(3) அனலின் கூறாகிய பசி, நிறுவும் (தாபிக்கும்); தூக்கம், மயக்கும்; அச்சம், அஞ்சுவிக்கும்; புணர்ச்சி (மைதுனம்), சேக்கையில் செலுத்தும்; சோம்பு முறிப்பிக்கும்.

(4) வளியின் கூறாகிய ஓடல், விரைவிக்கும்;இருத்தல் அழுத்துவிக்கும்; கிடத்தல், போடுவிக்கும்; நடத்தல், எழுப்புவிக்கும்; நிற்றல், நிற்பிக்கும்.

(5) விசும்பின் கூறாகிய காமம்,மயப்பிக்கும்;செருக்கு,முனைப்பிக்கும்; வெகுளி, சினத்தை உண்டாக்கும்; உலோபம் (பற்று உள்ளம்), பிசினிப்பிக்கச் செய்யும் (கோட்சொல்லச் செய்யும்); உட்பகை, இகழ்விக்கும்.

X. பத்து வளிகள் அல்லது கரற்று (தசவாயுக்கள்): இவற்றின் விளக்கம், முக்குற்ற இயலில் வாயுவின் கீழ் விளக்கப்பட்டு இருக்கின்றது.

XI. பத்து நாடிகள் (தச நாடிகள்): வேதாந்த தத்துவக் கட்டளை:

சிறந்த இடை பிங்கலையும் சுழிமுனையி னோடு
சிறப்பான காந்தாரி யத்திசிங் குவையாம்
பிறந்த அலம் புருடனொடு குருதன் றானும்
பேரான சங்கினியும் வயிரவன்றான்
திறந்த இவை பத்துந்தான் தசநாடி யாகும்
திரிமூன்று நாடியினில் ஒடுங்கும்பாரு
மறந்த இடை பிங்கலையும் சுழிமுனையா மூன்றும்
வாதத்தில் ஒடுக்கமென வகுக்கலாமே

வகுக்க விதன் குணங்கள் மந்த மொடு குளுத்தி
மலக்கட்டு பாதத்தின் கூறு மாகும்
அகுக்கவே காந்தாரி அத்தி சிங்குவையாம்
அலம்புருடன் இவைநாலும் பித்தத்திலடங்கும்
மிகுக்கவே இதன் குணங்கள் உஷணந்தாகம்
உயர்மோக முழலைவாய் வும்மே னோக்கும்
நகுக்கவே நாடிபட படத்துடிக்கும்
நாசமாம் பயமோடு கோபமாமே!

ஆமேதான் குருதன்சங் கினியும் வயிரவனும்
அரிதான சிலேட்டுமத்தி லடங்கும் பாரு
மாமேதான் இதன் கூறு வாயழற்றான் புரியும்
மலர் விழியும் குழிந்திருக்கும் முகமும் வேர்க்கும்
தேமேநெந் சடைக்கும்திசை கலங்கிநிற்கும்

சிறுகாலும் தண்ணீர்தான் உழற்றுவிக்கும்
பாமேதான் பத்தினுட பண்புமாகும்
பரிகாரம் செயுமவர்க்குப் பரிசிதாமே.

பரிசான விடையினொடு பிங்கலையு மொக்கப்
பயின்றதோர் குதத்தினடிமூலம் பற்றிச்
சுரிசான பாகங்கள் மாறி மாறி
சுழிமுனையின்றன்னோடு நெட்டிட் டேறும்
திரிசான திருவணைக்கால் போலேமாறிச்
சிரசளவு தான் முட்டித் திரும்ப மீண்டு
விரிசான மூக்கு நடுப் புருவ நெற்றி
மீண்டுமே திரும்பியந்த மூலம் புக்கும்.

புக்குகின்ற காந்தாரி நாபி பற்றிப்
பெருநரம்போ ரேழினுக்கும் ரூபமாகிச்
சிக்குகின்ற தெசதாய மேலேயோடிச்
சிரசளவு நீங்கியே கண்டம்புக்கி
நக்குகின்ற நாவடியிற் சிறந்திருக்கும்
நலமான வத்திசிங்குவை யிரண்டும்
விக்குகின்ற மூலத்தின் மேலே பற்றி
மேலேறி இரண்டு செவி தனைத்தொட்டாமே

தொட்டேறி நரம்பெல்லாம் கதந்து வீசித்
துறையான நயனமிரண்டினிலே நிற்கும்
மட்டோறி யலம்புருஷன் வயிரவன்றான்
மாசற்ற வடிமூலந் தன்னைப்பற்றிக்
கட்டேறி இரண்டுகன்னந் தனிலே நிற்கும்
கனிவானசங்கினியும் குருதான் றானும்
நட்டேறி நாபித்தானத்திற் றோன்றி
நலமான குத்மளவும் நடிப்பர் பாரே!

1. இடைகலை: வலக்காற் பெருவிரலினின்று கத்தரிக்கோல் போல மாறாலாக இடமூக்கைப்பற்றி நிற்பது.

2. பிங்கலை : இடக்காற் பெருவிரலினின்று கத்தரிக் கோல் போல மாறலாக வல மூக்கைப் பற்றி நிற்பது.

3. சுழுமுனை : மூலாதாரத்தைத் தொடர்ந்து எல்லா நாடிக்கும் ஆதாரமாய் நடு நாடியாய்ச் சிரசளவு முட்டி நிற்பது.

4. சிருவை : உண்ணாக்கில் நின்று சோறு தண்ணீர் இவை களை விழுங்கப் பண்ணுவது.

5. புருடன் : வலக்கண்ணளவாய் நிற்பது.

6. காந்தாரி : இடக்கண்ணளவாய் நிற்பது.

7. அத்தி : வலக்காதளவாய் நிற்பது.

8. அலம்புடை : இடக்காதளவாய் நிற்பது.

9. சங்கினி : குறியினளவாய் நிற்பது.

10. குகு : அபானத்தளவாய் நிற்பது.

இவ்வண்ணமே வைத்திய வல்லாதியின் பதினெண் சித்தர் நாடியில் கூறப்பட்டுள்ளது.

குறிப்பு : புருடன் என்ற நாடியை வைரவன் என்பார். யூகிமா முனிவர் மேற்படி பாட்டைக்காண்க.

XII. தொழில் உறுப்புகளின் செயல்கள் (வசனாதிகள்):

1. சொல்லல் (வசனம்), வாய்க்கு உயிர்க்கூறு.

2. நடத்தல் (கமனம்), காலுக்கு உயிர்க்கூறு.

3. கொடுத்தல் (தானம்) வாங்கல், கைக்கு உயிர்க்கூறு.

4. விடுதல் (விசர்ச்சனம்), அபானத்துக்கு உயிர்க்கூறு.

5. மகிழ்தல் (ஆனந்தம்), குறிக்கு உயிர்க்கூறு.

XIII. வாக்குகளின் தொழில் :

1. வாக்குகள் நான்கில் 1. நுண்ணோசை (சூக்குமை) யாவது சாதியாய், நேர்மையாய், ஒன்று சொல்ல வந்த இடத்தில் துரியத்தில் நாதமாய்த் தோன்றுவது.

2. நினைவோசை (பைசந்தி) யாவது, சுழுத்தியைப் பொருந்திய சூக்குமையில் தோன்றிய நாதம் உதானவாயுவினாலே (ஒலி காற்று) சிதறப்பட்டு மயில் முட்டையில் ஐந்து நிறமும் அடங்கியிருப்பது போல, இனிச் சொல்லும் வசனத்திற்கு அக்கர சொருபம் பிறக்கக் கருக்கொண்டிருப்பது.

3. மிடற்றோசை (மத்திமை) யாவது, அங்ஙனம் சிதறப்பட்ட வாயுவானது, சொப்பனத்தானத்திலே் உயிர் வாயுவுடனே (பிராண வாயு) சேர்ந்து அக்கரத்தூன் சொரூபங்களைப் புத்தியிலே ஒழுங்கு ஒட நிறுத்திக்காதில் கேளாமல், உள்ளே கேட்கத்தக்க ஒலியாய்க் கண்டத்திலே முழங்கா நிற்பது.

4. செவியோசை (வைகரி) யாவது, நாக்கு, அண்ணம், உதடு, பல், மூக்கு என்னும் ஐந்து இடத்திலேயும் புறப்பட்டுச் செவிக்குக் கேட்கச் சொல்லப்படுவது. இவ்வாக்கு நான்கும் ஐங்கலைகளால காயரிப்படும்.

XIV. முக்குணம்

1. சத்துமாவது அருள் ஐம்பொறி அடக்கல், ஞானம், தவம், பொறை, மேன்மை, மோனம் வாய்மை ஆகிய எண் குணமுடையது.

2. இராசதமாவது, ஊக்கம், ஞானம், வீரம், அறம், தவம், ஈகை, கல்வி, கேள்வி ஆகிய எண்குணமுடையது.

3. தாமதமாவது, ஒழுக்கமின்மை, காமம், சினம், கொலை, சோம்பு, நீதிவழுவல், நெடுந்துயில், பேருண்டி, பொய், மறதி, வஞ்சகம் முதலிய தீக்குணங்களை உடையது.

XV. முனைப்புகள் *(அகங்காரங்கள்)* :—

1. தைசசாகங்காரம் : இவ் வகங்காரத்தில் சத்துவகுணத்தினை உடைய மனமும், புத்தியும், இந்திரியங்கள் என்னும் பெயருடைய செவி முதலிய ஐந்தும் தோன்றும்.

2. வைகாரிகாகங்காரம் : இவ்வகங்காரத்தில் ரசோகுணத்தினை உடைய கருமேந்திரங்களாகிய வாக்காதிகள் ஐந்தும் தோன்றும்.

3. பௌதாதிகாகங்காரம் : இவ் வகங்காரத்தில் தமோ குணத்தினை உடைய தன்மாத்திரைகளாகிய சப்தாதிகள் ஐந்தும் தோன்றும்.

வெவ்வேறு கொள்கைகள்.

மேலே கூறப்படாதவைகளின் தொழில்கள் இனிக்கூறப்படும்:

I. முப்பற்றுக்கள் *(மூவேடணைகள்)* :

1. பொருட்பற்று *(அர்த்தவேடணை)* : பொருள் முதலிய வற்றால் வரும் பிணக்கு.

2. புதல்வர் பற்று *(புத்திரவேடணை)* : பிள்ளைகள் முதலான சுற்றத்தாரால் வரும் பிணக்கு.

3. உலகப்பற்று *(உலகவேடணை)* ; உலகம் முதலாய விடயங்களைத் தேடி ஆசைப்படுவதால் வரும் பிணக்கு.

II. அறிவு : தன்னைக்கண்டு மகிழ்ந்திருத்தல்.

III. ஆசயம், *5:*

1. இரைக்குடல *(அமர்வாசயம்)* : உண்ட அன்னசாரம் அமரும் இடம்.

2. செரிகுடல் *(பகிர்வாசயம்)* : அன்னம் பகிருமிடம்.

3. நீர்க்குடல் (சலவாசயம்) நீர்க்குழி.

4. மலக்குடல் (மலவாசயம்) மலக்குழி.

5. வெண்ணீர்க்குடல் (சுக்கிலவாசயம்) வெண்ணீர் பிரியுமிடம்.

IV. கோசம், 5.

1. உணவுடம்பு, பருவுடம்பு (அன்னமயகோசம்): ஏழு உடற்கட்டினால் ஆக்கப்பட்ட உடல் அன்னமய கோசம்.

2. வளியுடம்பு (பிராணமயகோசம்): பிராணனும் கன்மேந்திரியமும் கூடியது.

3. மனவுடம்பு (மனோமயகோசம்): மனமும் ஞானேந்திரியமும் கூடியது.

4. அறிவுடம்பு (விஞ்ஞானமயகோசம்): புத்தியும்ஞானேந்திரியமும் கூடியது.

5. இன்பவுடம்பு (ஆனந்தமயகோசம்): பிராணவாயுவும் சுழுத்தியும் கூடியது.

V. ஆதாரம், 6 (கட்டளைக் கொத்து):

1. மூலாதாரம் (மூலம்):

காணவே மூலமஃதண்டம் போலக்
காரணமாய்த் திரிகோணமாக நிற்கும்
பூணவே மூன்றின்மேல் வளையமாகும்
புறம்பாக இதழதுவும் நாலுமாகும்
நாணவே நாற்கமலத் தட்ச ரங்கள்
நலமான வ-ச-ஷ ஸவ்வுமாகும்
மூணவே முக்கோணத் துள்ளொளியோங் கார
முயற்சியாய் அதற்குள்ளே அகர மாமே!

அகாரத்தின் மேலாகக் கணேசர் நிற்பார்
அதிலே யோர்கோணத்திலுகாரம் நிற்கும்
உகாரத்தில் வல்லபையாம் சக்தி நிற்பாள்
ஒடுங்கியதோர் முனையொன்றில் கதலிப்பூவாய்
புகாரமாய் முகங்கீழ்க் குண்டலியாம் சக்தி
பெண்பாம்பு போல்சுருட்டிச் சீறிக் கொண்டு
சுகாரமாய்ச் சுழிமுனையூ டுருவி நிற்பாள்
துரியாதீ தம்மென்ற வவத்தை தானே

அவத்தை தனக் கிருப்பிடமு மூல மாகும்
அழகான கதலிப்பூ எட்டிதழாய் நிற்கும்
நவத்தைக்கு நந்தியவள் வாயில் நிற்பார்
நற்சிவமாஞ்சிகார மல்லோ கோடிபானு
மவத்தைக்கு வாய்திறவாள் மலரால் மூடும்
மைந்தனே எட்டிதழில் எட்டு சக்தி
பவத்தைக்கு சத்தியெட்டின் பேரேதென்றா
பாஙகான அணிமாவும் லகிமாத் தானே!

தானான மகிமாமாவும் கரிமாவோடு
தங்கு மீ சத்துவமும் வசித்துவ மாகும்
பூனான பிரார்த்தி பிரா காம்யத்தோடு
புகழெட்டுத் தேவதையும் தளத்தில் நின்றே
ஏனான இதழாலே மூடிக்கொள்வார்
ஏற்றமாம் நந்தியைத் தான் காணொட்டாமல்
. . . .
. . . .
ஓங்கியே மாணிக்க ஒளிபோல் தோன்றும்
உத்தமனே மூலத்தின் உண்மை காணும்.

(போகர்—ஏழாயிரம்—முதலாமாயிரம்)

1. மூலாதாரம் : (மூலம்) கால் எலும்பு இரண்டும் கதிர் எலும்பும் கூடிய இடம் குய்யம்; குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவே குண்டலிவட்டமாய், அந்த வட்டத்துக்கு நடுவே திரி கோணமாய், அந்தத் திரிகோணத்திற்கு நடுவே நாலிதழுடைய புட்ப வட்டமாய், கடப்பம் பூப் போன்றிருக்கும். அந்தப் பூவிற்கு நடுவில் ஓங்கார வெழுத்து நிற்கும். அந்த ஓங்காரத்திற்கு நடு வில் விக்கினேஸ்வரனும் வல்லபை சத்தியும் எழுந்தருளியிருப்பார் கள். மாணிக்க நிறமுள்ளது.

மூலாதாரம்

முக்கோணம்


நாலிதழ்க் கமலம்

மாணிக்க நிறம்

கணபதி

குண்டலி சக்தி

ஓங்காரம்.



இவையெல்லாம் அவ்விடத்தில் தோன்றுவதுபோல இருக்கும்.

2. சுவாதிட்டானம்

துதிசெய்த மூலத்தைத் தாண்டி யப்பால்
 துடியான நான்கெனுமங் குலமே தாண்டப்
பதிசெய்த பிரமனது வீடுமாகும்
 பகர்ந்தசுபா திட்டான மென்று பேராம்
அதிசெய்த நால்வட்டம் வளையஞ் சுற்றில்
 ஆறிதழா மவ்விதழின் அட்சரங்கள்
பதிசெய்த பபம யரலவ் வாகும்
 பாங்கான நடுப்பீசம் நங்லங் ஆமே

நகார மென்னும் எழுத்ததுவும் பிரமற்காகும்
 லவ்வென்னும் எழுத்ததுவும் பிருதிவியின் பீசம்
புகாரமென்னும் துரியாதிக் கிருப்பிடந்தான்
 புகழ்கின்ற இருக்கான வேதமாகும்
அகாரமென்றும் அன்னமாம் வாகனந்தான்
 அதனுடைய நிறம் பொன்னின் நிறமதாகும்
 . . . .
 . . . .
அஞ்சான பொன்னிறமே பிரமன் பக்கல்
 அடங்காத வாணிநிற்பாள் அறிந்துகொள்ளே

(போகர்—ஏழாயிரம்—முதலாயிரம்)

சுவாதிஷடானம் (கொப்பூழ்) : மூலாதாரத்திற்கு இரண்டு விரற் கடைக்குமேலிருப்பது. இது நாற் சதுரமும், அச் சதுரத்தினடுவே ஆறிதழ்களையுடைய ஒரு புட்பவட்டமும், அதன் மத்தியிலே லிங்க பீடமும், வீணாத்தண்டினடியுமாயிலங்கி அதனடுவிலே நகார எழுத்து நிற்கும். அந்த நகாரத்தின் நடுவில் பிரம்மாவும் சரஸ்வதியும் வீற்றிருப்பார்கள். இது பிருதிவியின் கூறுகும்; பொன்னிறமாம்.

சுவாதிட்டானம்

நாற்சதுரம்


ஆறிதழ்க்கமலம்

செம்பொன்னிறம்

பிரமன்

சரஸ்வதி

நகாரம்



இவையெல்லாம் அவ்விடத்தில் தோன்றுவது போல இருக்கும்

3. மணிபூரகம்

மாலினுட வீடதுதான் அறுவிரலின் மேலே
　மாசற்ற பிறைபோலே கோட்டையாகும்
பாலினுட வளையம்போல் பத்திதழாஞ் சுற்றில்
　பகர்ந்தவப் பத்திதழின் அட்ச ரங்கள்
தாலினுட ட-ட-ட-ண த-த-த-த
　　தயங்காத நவ்வுடனே ப-ப- மவ் வாகும்
ஆலினுட மந்நடுவிற் பூதமப்பாம்
　அதன் லங்கென்றே அறியலாமே

அறிந்தமணி பூரகத்தின் வீடுமாகும்
　அப்பனே துரியமதற் கிருப்பி டந்தான்
பிறிந்ததிரு வேதமுமாம் படிகவண்ணம்
.. ..
　மிக்கசங்கு சக்கரமும் கருட வாகனமே
வாகனமாய் லட்சுமியின் சமேதர் பக்கல்
　வாசியொடு மங்கென்றே இருத்திக்கும்பி.

(போகர் ஏழாயிரம்—முதலாயிரம்)

மணிபூரகம் *(மேல்வயிறு)* : சுவாதிட்டானத்திற்குமேல் எட்டு விரல் பிரமாணத்தில் இருப்பது மணிபூரகம். இது கோழி முட்டையைப்போன்று 1008 நரம்பு நாடிகளும் சூழ, நாடிகளுக் கெல்லாம் வேர் போல உள்ளது. இதை அகக்கண் ணுள்ளோர் **உந்திக்கமலம்** என்றும் சொல்லுவார். இது கொப்பூழுக்கு நேரில் அப்புஸ்தானத்தில், ஏழாம் பிறைக்கு இணங்கி இருக்கு மாம். இதனடுவே பத்து இதழையுடைய ஒரு புட்பவட்டமாய் இருக்கும். அந்தப் புட்பத்தினடுவில் மகார வெழுத்து நிற்கும். அந்த மகாரத்திற்கு நடுவில் மகாவிஷனுவும், மகாலட்சுமியும் எழுந்தருளியிருப்பார்கள். அது பச்சை நிறமுள்ளது.

மணிபூரகம்

மூன்றும்பிறை

பத்திதழ்க்கமலம்


படிகநிறம்

மரகதநிறம் என்பாரும் உண்டு

விட்டுனு

இலக்குமி

மகாரம்



இவையெல்லாம் அவ்விடத்தில் தோன்றுவது போல இருக்கும்.

4 அனாக்கதம்

அறிவுக்கு மேலேறி எட்டாமங் குலத்துக்
கப்பாலே யனாகதத்தின் வீட்டைக் கேளு
முறிவுக்கு முக்கோண மாக நிற்கும்
முதிர்வளையம் பன்னிரண் டிதழு மாகும்
பறிவுக்குக் க-க-க-க-ங-ச-ச-
பேரான ஜ-ஜ-ஞ-ட-ட வாகும்
இறிவுக்கங் இதழில்நிற்கு மட்ச ரங்கள்
ஏற்றமாஞ் சுழுத்தியதற் கிருப்பு மாமே

ஆமென்ற சிகாரத்தி னெழுத்து நடுவாகும்
ஆண்மையாம் பூதமது தேயு தானாம்
தேமென்ற செம்பு நிறச் சிவப்பு மாகும்
தேயுவின்றன் பீசமது ரவ்வு மாகும்
ஓமென்ற ஒளிகோடி பானு வாகும்
உருத்திரனும் உருத்திரியும் நடுவே நிற்பார்

ஒளியான நந்திவா கனமு மாகும்
ஒருசாம வேதத்தின் உறுப்புமாகும்,
(போகர்-ஏழாயிரம்-முதலாயிரம்)

அனுகதம் (நெஞ்சம்): மணிபூரகத்துக்குப் பத்து விரற்கடைப் பிரமாணமுள்ள இடத்துக்குமேல் உள்ளது ஆனுகதமாம். இஃது இருதய கமலமாம். தேயுஸ்தானத்தில் முக்கோணமாய் இருக்கும். அந்த முக்கோணத்தின் நடுவில் பன்னிரண்டு இதழை யுடைய ஒரு புட்பவட்டமாய் இருக்கும். அந்தப் புட்பத்தின் நடுவில் சிகாரவெழுத்து நிற்கும். அந்தச் சிகாரத்தின் நடுவில், உருத்திரனும், பார்வதியும் அமர்ந்திருப்பார்கள். அக்கினி நிறத்தை உடையது.

அனுகதம்

பன்னிரண்டிதழ்க்கமலம்


முக்கோணம்

அக்கினிநிறம்

உருத்திரன்

பார்வதி

சிகாரம்



இவையெல்லாம் அவ்விடத்தில் தோன்றுவது போல இருக்கும்.

5. விசுத்தி


ஏறியே பன்னிரண்டங் குலமே தாண்ட
　ஏற்றமாம் விசுத்தி யென்றதலமே யாகும்.
மாறவே அறுகோணம் வளையமொன்று
　மகத்தான ஓர் பதினா றிதழ தாகும்
ஆறவே இதழுக்குள் அட்சரங்கள்
　அ.ஆ.வும் இ.ஈ.யும்-உ-ஊவோடு
தூறவே ரு-ரூவும்-லு லூ-வோடு
　துணையாமே ஏ-ஐ-ஓ- ஔ அம் அஹவே

அம்முதலா மோர் பதினா றெழுத்து மிட்டே
　அறுகோணநடுவேவ காரம் நிற்கும்
வம் முதலாய் மகேசுவர மகேசுவரியும் நிற்பர்
　மகத்தான மசாப்பனத்துக் கிருப்பு மாகும்
பும் முதலாய்ப்பூதமது வாயு வாகும்
　புகழான பீசமது யவ்வு மாகும்
நம்முதலாம் அதர்வண வேதந்தானாகும்
　நல்ல மனோ வாகனமாய் நாட்டலாமே.

(போகர்—ஏழாயிரம்—முதலாமாயிரம்)

விசுத்தி (மிடறு): அளுகதத்திற்குப் பத்து விரற் கடைப் பிரமாண முள்ள இடத்துக்குமேல் உள்ளது விசுத்தியாம். இது கண்டஸ்தானத்திலே வாயுஸ்தானத்தில் உள்ளது. அறுகோணமாயிருக்கும். அந்த அறு கோணத்தின் நடுவில் பதினாறு இதழை யுடைய ஒரு புட்பவட்டமாயிருக்கும். அந்தப் புட்பத்தின் நடுவில் மகேஸ்வரனும் மகேஸ்வரியும் எழுந்தருளியிருப்பார்கள். கரு நிறத்தையுடையது.

விசுத்தி



பதினாறிதழ்க்கமலம்

அறுகோணம்

மேகநிறம்

மகேஸ்வரன்

மகேஸ்வரி

வகாரம்

இவையெல்லாம் அவ்விடத்தில் தோன்றுவது போல இருக்கும்.

6. **ஆக்சிணை**


மேலேறி இருபுருவ நடுமையத்தில்
   மிகையான அண்டம்போல் நிற்குமப்பா
வாலேறி வட்ட மாம் வீடு போலே
   வளையமொன்றி ரண்டிழ்தொன் ஹ,ள வாகும்
ஆலேறி அங்கென்ற அட்சரந்தான் நடுவே
   ஆகாச பூதமாம் வங் பூத பீசம்
ஆலேறி மனோன்மணியும் சதாசிவனும் நிற்பர்
   அவத்தைதான் சாக்கிரத்தின் வீடுமாமே
வீடுமாம் வண்ணமது மேக வண்ணம்
   விளைக்கின்ற தொழிலதுதான்........

ஆக்கினை (புருவநடு) இது விசுத்திக்குப் பன்னிரண்டு விரற்கடைப் பிரமாணமுள்ள இடத்துக்கு மேல் ஆக்ஞை லலாடபீடத்தில் இருக்கின்றது. வீணதண்டின் முடியுமாய், ஊடுருவிப் பொன் போன்ற வடிவமுற்று நிற்கும். நெற்றிப் புருவத்தின் வெளியாய் ஆகாயத்தானத்தில் மூன்று இதழை உடைய ஒரு புட்பத்தின் நடுவே யகார எழுத்தோடிணங்கி நிற்கும். அந்த யகாரத்துக்கு நடுவில் சதாசிவமும் மனோன்மணியும் எழுந்தருளியிருப்பார் படிக நிறத்தை உடையது.

குருபதம் (எ) சஹஸ்ராரம்

தானானமனோன்மணியைத் தாண்டி யப்பால்
   தனித்த தோரெட்டுவிரல் மேலேகேளு
கோன குருபதந்தான் கூடிப்பாரு
   குறிப்பான இதழ்தானோ ராயிரத்தெட்
டானான நடுமையம் ஐங்கோணமாகும்
   அகாரமாம் உகாரமொடு மகாரமாகும்
நானான நாதமொடு விந்துவைந்தும்
   நலத்தவைங் கோணத்தில் நிற்கும்பாரே!

பார்க்கவே ஓங்காரம் நடுமையத்தில்
   பரிசுத்த ஒளியாகி உதிக்கும் பாரு



இவையெல்லாம் அவ்விடத்தில் தோன்றுவதுபோல இருக்கும்.

மூலாதாரம்—குதத்திற்கும் லிங்கத்திற்கும் நடு.

சுவாதிட்டானம்—கொப்பூழ்


மணிபூரகம்—மேல்வயிறு

அனாகதம்—இருதயகமலம்

விசுத்தி—கண்டதானம்

ஆக்ஞை—லலாடத்தானம்

ஆறுதாரப்படம்



VI. மும்மண்டிலம் (திரிமண்டிலம்) :

1. தீமண்டிலம் (அக்கினிமண்டிலம்): இது பிருதிவியும் அப்புவும் கூடின இடத்தில் நாற்சதுரமாய், நடுவே முக்கோணமாய், நாலிதழ் உடைய ஒரு மலர் போலிருக்கும். இது மூலாதாரத்திற்கு இருவிரற்கடைக்குமேல் இருக்கிறது.

2. ஞாயிற்றுமண்டிலம் (ஆதித்தமண்டிலம்): இஃது இருதய கமலத்தில் அறுகோணமாய் எட்டிதழுடைய ஒருமலர்போல இருக்கும். இது வாழைப்பூப்போன்று கீழ்நோக்கி இருக்கும்; உந்திக்கு நாலுவிரற்கடைக்கு மேலிருக்கின்றது.

3. **திங்கள்மண்டிலம்** (சந்திரமண்டிலம்) : இது கோடி சந்திர சூரியர்கள் உதயமானதுபோலத் தலை நடுவில் நிலையாய் நிற்கும் இதை 'அமுதகலை' என்று வழங்குவதும் உண்டு. அமுதம் மேல் நோக்கியும் அக்கினி கீழ்நோக்கியும் சரியாய் நிற்கும் இவற்றிற்கு நடுவில் பராசத்தி எழுந்தருளி இருக்கும்.

VII. மும்மலம்

1. **ஆணவம்** : இஃது ஆன்மாவின் அறிவை மறைத்து,'யான் எனது' என்பவற்றையும், அறியாமையையும் பிறப்பித்து, ஒருவனுக்குத்தன் உடைமை, பெண்டு, பிள்ளை, நண்பர் முதலியவர்களிடம் ஆசையை உண்டாக்கி, எதுவும் தனதென்று இருக்குமாறு செய்வது.

2. **மாயை** : இது, வேருெருவருடைய பொருளைத் தனதென்று நினைக்கும் இடையூற்றை விளைவிப்பதும், துன்பத்தை வருவிக்க முயல்வதுமாகும்.

3. **காமியம்** : இது முந்திய இரண்டு விதத்திற்கும் ஒத்து இருப்பதுமன்றி, இதாகிதத்திஞல் புண்ணிய பாவங்களை உண்டாக்குவதுமாகும்.

VIII. முத்தோடம் :

இவற்றின் விளக்கத்தை முக்குற்ற இயலில் காண்க.

IX. இருவினை :

1. **நல்வினை** : புண்ணியஞ் செய்தல்
2. **தீவினை** : பாவஞ்செய்தல்.

X. ஐவகை நிலைகள் (பஞ்சாவஸ்தைகள்) :

1. **நனவு** (சாக்கிரம்) : இது, புருவமத்தியில், அரச ஓலக்கம்போல நால்வகைப் படைப்பலத்துடனே இருந்து, சத்த, பரிச ரூப, ரச, கந்தம் என்னும் ஐந்துடனும்; வசன, கமன, தான, விசர்க்க, ஆனந்த மென்னும் ஐந்துடனும்; மனம், புத்தி, சித்தம் அகங்காரம் என்னும் நான்குடனும் சேர்ந்து, பதிஞன்கு கருவிகளுடன் சந்நிதியிற் சேவிக்க, பராசத்தி அருளால் வியக்தஞய் இன்ப துன்பங்களை அறிந்து நிற்கும்போது உள்ள நிலை.

2. **கனவு** (சொப்பனம்) : இந்நிலையில் கருவி கரணாதி பதினான்கனுள் கருவி பத்தும், கண்டத்தில் நிற்கும்.

3. உறக்கம் (சுழுத்தி) : இது, மற்றக் கரணாதி நான்கும் சுழுத்தியோடு சீவான்மாவைக் கூடி, சுவாச இருதயத்தில் நின்ற போது, கண்டவை கேட்டவைகளுள் ஒன்றையும் பிறர்க்குச் சொல்ல இயலாத நிலை.

4. பேருறக்கம் (துரியம்) : சுழுத்தியை விட்டு, கரணமொன்றுடனே சீவான்மா நாபித்தானத்தில் நின்றபோது மூச்சுவிடல், மூச்சு வாங்கல் (உசுவாசம் நிசுவாசம்) பிறக்கும். இதற்குத்'துரியம்' என்பது பெயர்.

5. உயிர்ப்படக்கம் (துரியாதீதம்) : கருவி கரணாதிபதினான்கும் பற்றற்று, சீவான்மா தானே மூலாதாரத்தில் சென்றோங்கி, மலம், மத்தம், மாய்கை, பரிசங்கள் இவற்றை அறியாமல் நிற்கும் நிலைக்குத் 'துரியாதீதம்' என்பது பெயராம்.

XI. அஷ்டராகம் :

1. காமம்—ஆசை.

2. குரோதம்—பிணக்கு,

3. உலோபம்—பிடிபாடு.

4. மோகம்—பிரியம்.

5. மதம்—கர்வம்.

6. மாற்சரியம்—உட்பகை.

7. இடும்பை—தானே எல்லாவற்றிலும் தலைவன் என்று நினைத்து யாரையும் இகழ்தல்.

8. அகங்காரம்—தன் குற்றங்களை அறியாது பிறர் சொல்லைக் கேட்டுக் கோபித்தல்.

XII. நவ வாசல்கள் :

1. செவிகள்—2.
2. கண்கள்—2
3. நாசிகள்—2.
4. வாய்—1.
5. குய்யம் (ஆண் குறி அல்லது பெண் குறி)—1.
6. குதம்—(அபானம்)—1.

. ஏழு உடற்கட்டுகள் (சப்த தாதுக்கள்) இவற்றின் விளக்கம் முக்குற்ற இயலிற் கூறப்பட்டிருக்கின்றது.

XIV. முச்சரீரங்கள் (உடல்கள்) :

1. பருவுடல் (ஸ்தூல தேகம்)—ஐம்பெரும் பூதங்களால் அமைந்த உடல்.

2. நுண்ணுடல் (சூக்குமதேகம்)—ஞானேந்திரியம் ஐந்து கன்மேந்திரியம் ஐந்து, அந்தக்கரணம் நான்கு, உயிர்வளி (பிராண வாயு) ஒன்று ஆகப் பதினைந்தும் கூடியது.

3. காரணவுடல் (காரணதேகம்)—மேற்கூறிய இரண்டு உடல்களும் பற்றற்று நிற்பது.

VI. முக்குற்ற இயல்.

முக்குற்றங்களின் இருப்பிடம் (பெரது)

வளிமுதலா யெண்ணியமுக் குற்ற மெல்லாம்
வாழ்வதெனும் தேகமுற்றும் பம்பிப்பரந்து
தெளிவுறச் சாற் றும் நாபிக் குக்கீழ் வாதம்
தீயின்கூ ருமழலோ உந்தி யாவிக்
கொளிதருசெந் நீரியக்கும் இதயத்திடையில்
உறுதிகனம் நெய்ப்பிளக்க ஊட்டும் ஐயம்
நளினத்தின் மேல் தங்கும் தான மெனவே
நவில்வ ரறி மருத்துவ நூல் நல்லோர் தமே

ம. த. பா.

பொருள் : வாதம் முதலாக எண்ணப்பட்ட முக்குற்றங்கள் (திரி தோடங்கள்) உடல்முற்றும் பரவி வாழ்பவை எனினும், வளி கொப்பூழுக்குக் கீழும், அனலின் தன்மையை உடைய பித்தம் (அழல்) நாபிக்கும் இதயத்துக்கும் இடையே உள்ள பாகத்திலும் உறுதியையும் கனத்தையும் நெய்ப்பும் இளக்கமும் தரும், கபம் (ஐயம்) இதயகமலத்தின் மேலேயுள்ள பாகங்களிலும் பொதுவாக வாழும் என்று மருத்துவ நூலோர் கூறுவர்.

முக்குற்றங்களின் பொதுக்குணம்.

வளியின் பண்பு நெகிழ்ச்சி பரவல்
வரட்சி விரைதல் தட்பம் நுட்பம்
அளிக்கும் பித்தத் தமைந்த குணங்கள்
அனற்றல் நொய்மை—நீர்மை—நெய்மை
சுளிக்கச் செய்யும் நாற்றமுடைமை
சுடலே பரவல் ஐயத் தன்மை
குளிர்ச்சி திடமே திண்மை நிலையே
குழகுழ நெய்மை மந்தம் மெத்தென்
றிளக்கம் வழு வழுப் புடைமை முறையே
வழுவறப் பெற்று விளங்கும் பான்மை
வெளிக்குப் புலனா மதனால்
மிகுதியும் குறைவும் இயல்பும் அறிக.

ம. த. பா.

பொருள் : வாதத்தின் குணங்கள் நெகிழ்ச்சி பரவுதல்—வரட்சி-விரைவாக இடம் விட்டு இடம் போதல் தண்ணென்றிருத்தல்—நுண்ணிதாய்க் (கட் புலனுகாவாறும்) இருத்தல் என்பனவாம்.

உடலைக் காக்குந்தன்மையையுடைய அழலின் குணங்கள் (பித்தத்தின் குணங்கள்) வெதுப்புதல் நுண்ணிய தன்மை, நீர்த் தன்மை நெய்ப்பசையுடைமை—வெகுட்டல், தரும் குணமுடைமை, சூட்டைத்தரல், பரவுதல் என்பனவாம்.

ஐயத்தின் தன்மை—குளிர்ச்சி, திடத்தன்மை அழுத்தமுடைமை, மாற்றமில்லாத நிலைமை—குழ குழப்பு—நெய்ப்பசையுடைமை விரைதலில் லாத்தன்மை—மெத்தனும் தன்மை—இளகிய நிலை வழு வழுப்புடைமை என்பனவாம்.

இவ்வகை இயல்பான குணங்களை முறையாகக் கூறப்பட்ட வாத பித்த கபங்கள் பெற்று உடலில் விளங்கும் இக்குணங்களை உடலின்புறத்தே தொட்டும் தட்டியும் அழுத்தியும் தேய்த்தும் கண்டறியலாம். ஆதலால் அவைகளின் மிகுதியையும் குறைவையும் இயல்பையும் அறிவாயாக!

(அ) வளி.

முதலாவதாக வளியின் தன்மை, வாழிடம், இயற்கைப் பண்பு, உடலில் செய்தொழில் முதலியவை ஈண்டுக் கூறப்படும்.

வளி (வாத) வடிவத்தன்மை :

"மண்ணீ ரனல்கா லென்னு நான்கும்
நிரலே நாற்றந் தட்பந் திட்பம்
உருவி லூற்ற முடைய வாகி
மெய்ப்பொருள ழிபொரு ளெனவிரு வகைய
அனுக்கள் மெய்ப்பொருள் காரிய மழிபொருள்."

எனப் புகன்றிருத்தல், வாதத்தின் இயற்கை வடிவம் நுண்மை (அனுத்துவம்) நொய்மைகளும்.

''விடய மரமுத லசைதற் கேது''

என்பதால் இயக்கமும்,

''தேலொன் ருனே கவர்குண மூறது
தட்பம் வெப்ப மவற்றின் வேறென்
றம்மூ வகைத்தா யாயுங் காலை
நிலநீ ரனல்கால் நான்கினு நிலையும்''.

என்பதால் தன்மை, வெம்மை இவ்விரண்டான் வரும் ஒப்பரவி வின்மையும் (சருச்சரையும்) ஆகிய இவை (வாத) வளிவடிவத் தன்மைகளாம்.

வாதம் வாழுமிடம்.

''நெளிந்திட்ட வாதமபா னத்தைப் பற்றி
நிறைந்திடையைச் சேர்ந்துந்திக் கீழே நின்று
குளிந்திட்ட மூலமதா டெழுந்து காமக்
கொடியிடையைப் பற்றியெழுங் குணத்தைப்பாரே
'குணமான வெலும்பைமேற் றொக்கை நாடி
.. ..
நிணமான பொருத்திடமும் ரோமக் காலும்
நிறைவாகி மாங்கிசமெல் லாம்பரந்து,
.. ..
.. ..
கால்காட்டி வாதமெங்குங் கலக்குந் தானே.''

எனத் தமிழ் (மருத்துவ) வயித்திய சதகம் 35, 36-ஆம் செய்யுட் களில் கூறப்பட்டிருப்பதால், வளியானது, அபானம், மலம், இடைகலை உந்தியின் கீழ் மூலம், காமக் கொடி, இடுப்பு, எலும்பு, தோல், நரம்புக் கூட்டம், கீல்கள், மயிர்க்கால், ஊன் என்னும் இடங்களில் வாழ்வதாகும்.

இவ்வாறன்றி.

உண்டி சமைத்துடற் கூட்டுங் குடற்பகுதி
திண்டிற லென்பு செவிகுறங்கு—விண்ட
தொடுவுணர்வு தோற்றுவிக்கும் தோலிடுப்பிவ் வாறும்
வடுவி லிடமாம் வளிக்கு ம. த. பா.

பொருள் : உணவைச் சீரணிக்கச் செய்து உடலுக்கு ஏற்க வைக்கும் இடமாகிய பக்குவாசயம், என்பு, காது, தொடை பரிச உணர்வைத்தரும் தோல், இடுப்பு ஆகிய ஆறும் குற்ற மற்ற வாயுவின் இடமாம்.

''அறிந்திடும் வாத மடங்கு மலத்தினில்''

எனத் திருமூலரும்

' நாமென்ற வாதத்துக் கிருப்பிடமே கேளாய்
நாபிக்குக் கீழென்று நவில லாகும்''.

என யூசி முனிவரும் இயம்பியிருத்தலால், மலமும், நாபிக்குக் கீழிடமும் வாதமிருக்கமிடங்கள் எனக் கொள்ளலாம்.

வளியின் இயற்கைப் பண்பு :

ஒழுங்குடன் தாதேழ் மூச் சோங்கி இயங்க
எழுச்சிபெற எப்பணியுமாற்ற—எழுந்திரிய
வேகம் புலன்களுக்கு மேவச் சுறுசுறுப்பு
வாகளிக்கும் மாந்தர்க்கு வாயு

ம. த. பா.

இயற்கை நிலையில் நின்று, *(1)* ஊக்க முண்டாக்கல், *(2)* மூச்சு விடல், வாங்கல், *(3)* மனமொழி மெய்களுக்குச் செயலைத்தரல், *(4)* மலம் முதலிய பதினான்கு விரைவுகளை வெளிப்படுத்தல் *(5)* சாரம் முதலிய ஏழு உடற்கட்டுகட்கும் ஒத்த நிகழ்ச்சியைத்தரல் *(6)* ஐம்பொறிகட்கு வன்மையை கொடுத்தல் ஆகியவற்றில் உடற்குத் துணை புரிதலே வளியின் இயற்கைப் பண்பாகும்.

வளி உடலில் செய்தொழில் : *(1)* உடல்நோதல், *(2)* குத்தல், *(3)* பிளத்தல் போற்காணல் *(4)* நரம்பு முதலிய குன்றல், *(5)* நடுக்கல், *(6)* இறுக்கமாதல், *(7)* நீர்ப்பசையின்மை(வறட்சி), *(8)* அசைத்தல் *(9)* இளைத்தல் *(10)* குடைச்சல் *(11)* தடி முதலியவற்றால் அடிப்பட்டது போன்ற வேதனை, *(12)* கை அல்லது கால் இடம் விட்டுப் பெயர்தல் அதாவது பூட்டு நழுவல், *(13)* உறுப்புத் தளர்ச்சி, *(14)* உறுப்புகள் தொழில் புரியாமல் மரம் போலக்கிடத்தல், *(15)* மலம் சிறு நீர் முதலியன தீய்தல் அல்லது அடைபடுதல், *(16)* நீர் வேட்கை, *(17)* கண்டைக்கால், தொடை முதலியன நொறுங்கிப்போவது போலத்தோன்றல், *(18)* எலும்புக்குள் துளைப்பது போன்ற உணர்ச்சி, *(19)* மயிர்க்கூச் செறிதல் *(20)* கை கால்களை மடக்கவும் நீட்டவும் இயலாதபடி செய்தல், *(21)* எச்சுவையும் துவர்ப்பாய் இருத்தல் அல்லது துவர்ப்பாக வாய் நீருறல், *(22)* தோல், கண், மலம், நீர் முதலியன கறுத்துக்காணல் ஆகிய இவை வளியானது உடலிற் செய்யுந் தொழில்களாம்.

வளி (வாதம்)

இஃது ஒன்றாயிருப்பினும், தன் இடம் தொழில் முதலியவற்றால் பத்து வகைப்படும், அவை: *(1)* பிராணன், *(2)* அபானன், *(3)*

வியானன், (4) உதானன், (5) சமானன், (6) நாகன், (7) கூர்மன் (8) கிருகரன், (9) தேவ தத்தன் (10) தனஞ்சயன் என்பனவாம்.

இதனை,

“முறைமையாம் பிராணனோ டபானன் வியானன்
மூர்க்கமா முதானனொடு சமான னாகன்
திறமையாங் கூர்மனோடு கிருத ரன்றுன்
தேவதத்த னொடுதனஞ் சயனு மாகும்''.

என்னும் யூகிமுனி சிந்தாமணி 800-ல்—தத்துவ விதி 35-ஆம் செய்யுளாலறிக.

1. பிராணன். (உயிர்க்கால்)

''பிறமையா மிதன்பிரிவு பிராண வாயு
பெருமூலா தாரத்தின் கட்டோன் றித்தான்
உறமையா மசவையெனு மந்தி ரத்தால்
ஓங்கார முதலெழுத்தை யுன்னித் தானே.''

''உன்னியே மேலெழுந்து பனிரண் டங்குலம்
உயர்ந்தவெட் டங்குலந்தான் மீள வாங்கி
நன்னிநா லங்குலந்தான் பாழிற் பாயும்
நலமான குணமெல்லாம் பிராண வாயு
பன்னவே நீலவண்ணம் தெய்வம் சந்தரன்
பலப்பலவாம் பொசிப்பெல்லாம் சீர்ணமாகும்
உன்னநா ழிகைமுந் நூற் றறுபது சுவாசம்
உயர்ந்தநா ளொன்றுக்கு மூச்சைக் கேளே.''

''நாளொன்றுக் கிருபத்தோ ராயிரத் தறுநூறு
நலமான சுவாசந்தா னெழுந்தி ருக்கும்;
கோளொன்றிப் பதினாலா யிரத்து நானூறு
குவித்தமூ லாதாரத் துள்ளொ டுங்கும்;
பாளொன்றி யேழாயிரத் திருநூறு சுவாசம்
பாழினிற் பாய்ந்திடுமென் றறிக; பின்னை
ஏளொன்றி யிதனையே யுட்சா தித்தல்
எப்போதும் பாலாரா யிருக்க லாமே''.

என யூகி முனிவர் கூறியபடி இது மூலாதாரத்திலிருந்து வெளிப்பட்டு மூக்கின் வழியாய் மூச்சுவிடலாற் பன்னிரண்டங்குல தூரம் சென்று, மீண்டும் எட்டங்குலம் உள்ளுக்குப் பாய்ந்து, நாலங்குலம் வீணாய்ப்போம். விடுதலும் வாங்குதலும் செய்தல், புசிக்கும் பல்பல உணவுகளையெல்லாம் செரிக்கப்பண்ணும். நீல நிறமாயிருக்கும். இதற்குக் கடவுள் சந்திரன் நாழிகை ஒன்றுக் முந் நூற்றறுபது சுவாசமாக, நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்தறு நூறு சுவாசம் உண்டாய், அவற்றில் பதினாலாயிரத்து நானூறு சுவாசம் இழுப்பதனால் உள்ளுக்குவந்து, ஏழாயிரத்திரு நூறு சுவாசம் வெளியேபோய்ப் பழாகும்.

2. அபானன்.

கீழ் நோக்குங்கால்.

'இருக்கவே யபானத்தி னியக்கங் கேளாய்;
ஏற்றசுவா திட்டானத் துற்பத்தி யாகும்;
மருக்கவே கீழ்நோக்கி மலசலந் தள்ளும்;
வாகாக நிறந்தானும் பச்சையாகும்;
அருக்கவே யாசனத்தைச் சுருக்கி வைக்கும்;
அன்னசா ரத்தையெலாஞ் சேர வைக்கும்;
திருக்கவே தேவதையும் வரத ராஜன்;
திரமான வியானனிட சிறப்பைக் கேளே.''

என்பதால், இது சுவாதிட்டானத்திலிருந்து வெளிப்பட்டுக் கீழ் நோக்கி, மலசலத்தை தள்ளும்; பச்சை நிறமுள்ளதாகும்; ஆசன வாயை சுருக்கும்; அன்ன சாரத்தைச் சேரவேண்டிய இடங்களில் சேர்ப்பிக்கும். இதற்குக் கடவுள் வரதராசன் என்பதை அறியலாம்.

3. வியானன்.

பரவுகால்

''சிறப்பான வியானனது தோளி னின்று
திகழெழுபத் தீராயிர நரம்பிற் சென்று
தறுப்பான சரவசரந் தனிலே நின்று
தானீட்டல்முடக்கல் பண்ணிப் பரிச மறுயுட
அறுப்பான வன்னசா ரந்தன் னைத்தான்
ஆங்காங்கே நிறைப்பித்தாக் கையைக் காக்கும்
பறப்பான தநுபாலின் வண்ண மாகும்
பாரதனிற் றெய்வந்தா னேமனு மே.''

இது தோளிலிருந்து எழுபத்தீராயிரம் நரம்பிலுஞ் சென்று, இவ்வுடலிலுள்ள அசையும் பொருள், அசையாப் பொருள் என்னும் இரண்டிலுமிருந்து உறுப்புகளை நீட்டவுட் முடக்கவுஞ் செய்து, பரிசங்களையறியும்; உண்ணும் உணவின் சாரத்தை அவ்விடங்களில் நிறைப்பித்து, உடலைக் காக்கும்; பால் நிறமுள்ளதாகும். இதற்கு எமன் கடவுளாம்.

4. உதானன். (மேல்நோக்குங்கால்)

'ஏமனு முதானனிட வேற்றங் கேளாய்;
எழிலான வுதரவக் கினியெ ழுப்பிப
பூமனு மன்னசா ரந்த னைத்தான்
பொருந்தவே சமீபத்து நிறுத்தி வைக்கும்;
காமனு யெடுப்பித்தும் கலக்கி வைத்தும்
கலக்கியே வருத்துவிக்கும் வளப்ப மாகும்:
வீமனு மின்னினிட வண்ண மாகும்;
விளங்கியதோ ரக்கினிதான் தெய்வ மாமே''

இஃது அடிவற்றில் உதராக்கினியிலிருந்து தோன்றி, உணவின் சாரத்தைக் கூடியிருந்து, அதை அங்கங்கே நிறுத்தும்; அதை வெளிப்படுத்தியும், கலக்கியும் வருதல் செய்யும்; மின்னல் நிறமுள்ளதாகும். இதற்கு கடவுள் அக்கினிதேவன்.

5. சமானன்

நடுக்கர்ல்.

ஆமென்ற சமானனிட வாண்மை கேளாய்:
அடிநாபி பாதாங்கஞ் சமன்கொண் டேகி
வாமென்ற வாயுவின மிஞ்சொட்டாமல்
மடக்கியே சமன்செய்து மருவப் பண்ணும்
தாமென்ற அறுசுவையைத் தண்ணீ ரன்னம்
சமன்செய்து சரீரமெலாஞ் சாரப் பண்ணும்;
வாமென்ற வண்ணமது புட்ப ராகம்;
மகத்தான தெய்வமா தித்த னுமே.''

இது தொப்புள் நாபியிலிருந்து கால்வரைக்கும் சமனாய்ப் பரவிப் பாய்ந்து மற்ற வாயுக்களை மிஞ்ச வொட்டாமல் மடக்கிச் சரிப்படுத்திச் சேரப்பண்ணும்; அறு சுவைகளையும். தண்ணீர் அன்னம் ஆகியவற்றையும் சமப்படுத்தி, உடலிலெல்லாம் சேரும்படிச் செய்யும்; புட்பராக நிறமுள்ளதாயிருக்கும். இதற்கு கடவுள் சூரியன்.

6. நாகன்

'தெய்வமா நாகனிட சிறப்பைக் கேளாய்:
செயலான சகலகலை யாக்கு வித்துப்
பய்வமாய்ப் பாடுவிக்கும் கண்விழிக்கும்;
பாங்காக வேசிமிழ்க்கும் ரோம மசைக்கும்;
பெய்வமாம் பொன்னினிட வண்ண மாகும்;
பெரிதான தெய்வந்தா னலந்த னுகும்.''

இது எல்லாக் கலைகளையும் கற்கும்படி அறிவை யெழுப்பும்; நல்லபண்களைப் பாடுவிக்கும்; கண்களைத்திறக்கும்படிச் செய்யும்; கண்களை இமைக்கும்படிச்செய்யும்; மயிர்களைச் சிலிர்க்கச் செய்யும்; பொன்னிற முள்ளதாயிருக்கும். இதற்குக் கடவுள் அனந்தன்.

7. கூர்மன்.

கொய்வமாங் கூர்மனிட குணத்தைக் கேளாய்:
கொடியமனந் தனினின்று நிமைகொட் டும்மே;
நிமைகொட்டுங் கொட்டாவி தானுங் கொள்ளும்;
நேராக வாய்மூடும் பல னுண் டாக்கும்;
கமைகொட்டுங் கண்விழிக்கும் மூடப் பண்ணும்;
காட்சியெலாங் காண்பிக்கும் விழிநீ ரோடும்
இமை கொட்டும்; வண்ணமது வெளுப்ப தாகும்;
மேலான தெய்வந்தான் விண்டு வாகும்.''
இதற்குக் கடவுள்—திருமால்
விண்டு—விஷ்ணு

இது மனத்திலிருந்து கிளம்பிக் கண்ணிலிருந்து இமையைக் கொட்டுவிக்கும்; கொட்டாவி விடப்பண்ணும்; வாயை மூடப் பண்ணும்; பலத்தை உண்டு பண்ணும்; கண்களைத் திறக்கவும் மூடவும் பண்ணும்; உலகத்திலுள்ள பொருள்களையெல்லாம் கண்களுக்குக் காண்பிக்கும்; கண்களினின்றும் நீரைவிழப்பண்ணும்; வெளுப்பு நிறமுள்ளதாயிருக்கும். இதற்குக் கடவுள் திருமால். (விண்டு—மகாவிஷ்ணு)

8. கிருகரன்.

''கமைகொட்டுங் கிருகரன்றன் குணத்தைக் கேளாய்
கசிநாவு நாசிதனிற் கசிவுண் டாமே;
கசிவுண்டாங் கடும்பசியிற் கன்மஞ் செல்லும்
கண்ணியே யிருத்தலொடு போத லாகும்;
துசிவுண்டாய்த் தும்மலோ டிரும லுண்டாம்;
சுயமான வண்ணமது கறுப்ப தாகும்;
தெசிவுண்டாந் தெய்வமது சிவன்ரு ஞகும்;
திரோதாயின் கூறுன திறமு மாகும்''.

இது நாவிலிருந்து நாவிற்கசிவையும், நாசியிற்கசிவையும் உண்டாக்கும்; மிக்க பசியையுண்டாக்கும் காரியத்தைச் செய்யும்; ஒன்றை நினைத்திருக்கச் செய்யும்; போதற்றொழிலைச் செய்யும்; தும்மலையும் இருமலையு முண்டாக்கும்; கறுப்பு நிறமுள்ளதாயிருக்கும். இதற்குக் கடவுள் சிவன். இது திரோதாயிசத்தியின் கூறுகும்.

9. தேவதத்தன்.

''குசிவுண்டாந் தேவதத்தன் குணத்தைக் கேளாய்:
குடிலமாய்ச் சோம்பிமுரித் திடுத லாமே;
முரித்திடுதல் விழிக்கும்போ தயர்ச்சி யாகி;
முகுளிதமாய்க் கண்ணையோட் டுலாவு வித்துத்;
தரித்திடுதல் சண்டை கொளல் தர்க்கம் பேசல்;
சண்டாள கோபத்தை யுண்டு பண்ணல்;
குறித்திடுதல் குதங்குய்யத் தானந் தன்னில்;
கூர்ந்ததெய்வந் தேவேந்த்ரன் படிக வண்ணம்''.

இது வளைவு வடிவமாய்க் கிளம்பி, சோம்பலையும் உடல் முரித்தலையும் உண்டாக்கும்; தூங்கி எழுந்திருக்கும் போது அயர்ச்சியை உண்டாக்கும்; கண்ணைப் பலவிடங்களில் ஓட்டி உலாவுவிக்கும்; தாங்குதல், சண்டை கொள்ளல், தர்க்கம் பேசல் முதலியவற்றையும், மிக்க கோபத்தையும் உண்டுபண்ணும்; பல பொருள்களைக் குறிக்கச் செய்து, குதம், குய்யம் என்னும் இடங்களில் இருக்கும். படிக நிறமுள்ளதாயிருக்கும். இந்த கடவுள் தேவேந்திரன்.

10. தனஞ்செயன்.

"தரித்திடுதல் தனஞ்சயனைச் சாற்றக் கேளாய்:
சாங்கமாய் மூக்கினின்றுந் தடிக்குந் தானே"
தடித்துமே யுடம்பெல்லாம் வீங்கப் பண்ணும்
தந்திரமாய்க் கன்னத்திற் சமுத்திரம் போல்;
துடித்துமே சுந்தரமாய்க் கோஷ மாகித்
திரண்டுமே துஞ்சுகா லந்த னிற்ருன்;
வடித்துமே வாயுவெல்லாம் போன பின்பு;
வளமான தலைவெடிக்கு மூன்ரு நாளில்
அடித்துமே தலைவெடித்தா லப்பாற் போகும்;
அதன்வண்ண நீலவண்ண மறிந்து கொள்ளே;"
"அறிந்ததோர் தெய்வமது தந்வந் திரியாம்
ஆகவிந்த வீரைந்து மாதி வாயு".

இது மூக்கிலிருந்து தடித்து, உடம்பு முழுமையும் வீங்கப்பண்ணும்; காதில் கடல்போன் றிரைச்சலிட்டு, இறந்துவிடின் காற்றெல்லாம் வெளிப்பட்ட பின்னர் மூன்ருவது நாளில் தலை வெடித்தபின் தான் போகும். நீலநிற முள்ளதாயிருக்கும் இதற்குக் கடவுள் தன்வந்திரி.

வளியைப் பற்றிப் பிற நூலுடையார் கொள்கைகளும் ஈண்டுத்தரப்படும்.

உயிர்க்குற்ற நற்றுணையா யோதுமுயிர்க் கால், தம்
வயின் நின்று தொண்டையில் மார்பில்—பயின்றிடும்
பத்திமனம் பூண்ட புலனைந்தும் பாய்குருதி
சுத்த விதயத் தொழிலுக்கு—மெத்தவா
சுாரமாம் நாசிசிந்து தால் காறித்—துப்புதலெந்
நேரமும் மூச்சியக்கல் நின்றிடாமல்—வாராமாயத்
தும்ம லேப்பந் தோற்றுவித்தல் துய்க்கு மூணுட்செலுத்தல்
தம்முடைக் கன்மமாய்ச் சந்தமும்—செம்மையாய்
ஆற்றுமா மாகத் தமருதான வாயுவொலி
சாற்று தொண்டை மூக்குந்தித் தானத்தே—ஏற்றமாய்ச்
சஞ்சரிக்கும் பேச் சூக்கம் தான் நல்கும் மெய்க்குவலி
விஞ்சொளி யுள்ளெழுச்சி மேவவைக்கும்—மிஞ்சும்
நினைப் பாற்ற லீந்து புரக்கும் செந்நீர்
அனைத்துடற்கும் போக்கத் தானுடு தேனிஇதய
பீடத்த மர்ந்து பெரு விசையாய்த் தேகமுற்றும்
ஓடவல் வியானவாய் வுஞற்றுபணி—வாடாப்
பொறுப் பேற்றுச் செய்விக்கும் போதல்வருதல்
விருப்பம் போல் அங்கமுற்றும் மேல்கீ ழிருபுறத்தும்
ஆடவைக்கும் உட்கொண்ட வாகாரம் சீரணிக்கும்
சாட ராங்கி தன்னருகு சார்சமானன்—நாடக்
குட ரெங்கும் சென்றுதாம் கொண்ட உணவை
மடமடெனப் பக்குவமாக்கிக் குடர்வழி
வாங்கவைக்கும் வேண்டா மலினத்தை வேக மாய்த்
தீங்ககலத் தள்ளிவிடும் திப்பிசென்று தேங்கும்

மலக்குடலில் வாழபான வாயுநாபி தொட்டுச்
சலம் விந்துப் பைக்குறிகள்— வலக்குறங்கி
னுட் புறத்துங் கீழ் நோக்கியாடிப் பேரற்றலுடன்
விட்டகல நீர்மலம் விந்து செம் பட்டமைந்த
அல்குலொழுக் கார் கருவு மப் போதைக்கப்போது
நல்லபடி தள்ளிவிடும் நாகனே வல்லமையாய்ச்
சோம்பலெய்ப்பு விக்கலைத் தோற்றுவிக்கும் கூர்மனே
ஆம்பல் விழி இமைப் பற்றவைக்கும்—தேம்புங்
கிரிகரன் சோபந் தருந்தேவ தத்தன்
சிரிப்புடன் ஆவித்தல் சீராய்ப் புரியவைக்கும்
உச்சித்தலை தனில் உள்ள தனஞ்செயனே
நிச்சயமாய்ச் சீவனார் நீங்கிய பின்—உச்சி முதல்
உள்ளங்கால் வீங்கவு முள்ளநிறம் மாறவும்
மெள்ள மெள்ள கேசந் தோல் விட்விழ—உள்ளதசை
எல்லா மமுக வியற்றியென்பு மூட்டிற
வல்லதலை மூட்டுவிட வாற்றிப்பின்—செல்லும்
சிரத்தின் வெடிப்பு வழி செப் புந் தசவாயு
வுரத்தோ டுஞற்று பணி யுன்னு.

[ம. த. பா.]

அருஞ் சொற் பொருள்.

உயிர்க்கால்—பிராணவாயு சரம்-சிரம் (தலை)
வயின்—இடம், பயின்றிடும்—சஞ்சரிக்கும்
வலமாய்—விருப்பத்துடன், துய்க்கும்—சுவைக்கும்
கன்மம்—வேலை தொழில் சந்ததமும்—எந்நேரமும்
ஆகம்—மார்பு; உந்தித்தானம்—கொப்பூழ் இடம்
நல்கும்—தரும்; மெய்—உடல்; விஞ்சு—மிகுதியான
நினைப்பாற்றல்—ஞாபகசக்தி, புரக்கும்—காக்கும்;
செந்நீர்—இரத்தம், குருதி, தனி—ஒப்பற்ற,
பீடம்—இருக்கை, விசை—மிக்கவிரைவு
உஞற்றும்—செய்யும், பணி—செயல், தொழில், வேலை
சாடராங்கிம் சடராக்கின்; செரிப்பிப்பான,
வாங்கவைக்கும்—ஏற்கச் செய்யும்,
மலினம்—கழிவுப்பொருட்கள், திப்பி—மலம் (பவ்வி)
குறங்கு—தொடை, அல்குல்—பெண்குறி,
எய்ப்பு—களைப்பு ஆம்பல்—கருங்குவளை
ஆவித்தல்—கொட்டாவிவிடல்; கேசம்—மயிர்
இற—விட்டுவிட, தலைமூட்டு—தலையென்பு இணைப்பு

1. **பிராணன் :** இது வளியின் (வாயு) கூறானபடியால், வளியைப்போலத் தமரகத்தினின்று மூக்குவரை அலைந்து நிற்கும்

இஃது உயிருடன் கலந்து, தலையை இடமாகப்பெற்று, மார்பு கழுத்து இவ்விடங்களில் வாழ்வதுமன்றி மனம், புத்தி, உள்ளம் ஐம்பொறி இவைகளைத் தன்வயப்படுத்தி, காரியுமிழ்தல் இருமல், தும்மல், ஏப்பம் விடல், மூச்சுவிடல் வாங்கல், உண்ணம் உணவை உட்செலுத்துதல் என்னும் தொழில்களை நடத்தும்

2. உதானன் : இது மண்ணின் (பிருதிவி) கூறானபடியால், மார்பையே இடமாக்கொண்டு கொப்பூழ், கழுத்து, மூக்கு இம் மூவிடங்களிலும் வாழ்ந்து, பேச்சுக்கு முதற்காரணமாய் இருப் பதன்றி, முயற்சி, மனதிடம், உடல்வன்மை, உடல்நிறம் உடல் ஒளி, நினைப்பு ஆகிய இவற்றையும் உண்டாக்கும்.

3. வியானன் : இது வெளியின் (ஆகாயம்) கூறுனபடியால் வெளி எங்கும் நிறைந்திருப்பது போல இஃது உடல் முற்றும் பரவி இருக்கும் இதற்கு இருப்பிடம் தமரகம் (இருதயம்). இதன் தொழில், நடத்தல், உடல் உறுப்புகளை அசைத்தல், கண் இமைத்தல், விழித்தல் முதலியனவாகும்.

4. சமானன் : இது நீரின் (அப்புவின்) கூறானபடியால், உட லின் நடுவான பக்குவாசயமே இடமாய்ப் பெற்று, வயிறு முற்றி லும் வாழ்ந்து, உண்ட உணவு நீர்ப்பொருள்களைச் செரிப்பித் தற்குரிய தீயை விருத்தி செய்து, சாரத்தையும் திப்பியையும் வெவ்வேருகப் பிரித்து, சாரத்தை உடலின் எல்லா இடத்திற்கும் அனுப்புகிறது.

5. அபானன் : இது நெருப்பின் (தேயு) கூறானபடியால் எரு வாயினின்று (குதம்) அடிவயிறு, இடுப்பின்பூட்டு, நீர்ப்பை, ஆண் பெண் குறிகள், தொடை ஆகிய இவ்விடங்களில் வாழ்ந்து வெண் ணீர் (விந்து), நாதம், மலம், சிறுநீர், கரு இவற்றை வெளிப் படுத்தும்.

மற்ற ஐந்து வாயுக்களைப்பற்றி முன்னமே எழுதியுள்ளதைக் காண்க.

(ஆ) அழல் அல்லது தீ அல்லது அனல் (பித்தம்)
தீயின் (பித்தத்தின்) வடிவத்தன்மை

''மண்ணீ ரனல்கா லென்னு நான்கும்
நிரலே நாற்றந் தட்பந் திட்பம்
உருவி லூற்ற முடைய வாகி
மெய்ப்பொரு ளழிபொரு ளெனவிரு வகைய
அணுக்கள் மெய்ப்பொருள் காரிய மழிபொருள்.''

என்பதால் (பித்தத்தின்) அழலின் இயற்கை வடிவம் அனுத் துவமாம்.

''கதிரோன் வரைப்பின் கட்டின லுடம்பு.''

என்பதால் வெப்பமும் கூர்மையும், அது சேரும் பொருள் வேற் றுமையால், இளகலும், நீராகலும், கட்டலும் உண்மையின் உப்பு வெய்யிலி லிட்டால் கட்டலும், வெல்லம் வெய்யிலிலிட் டால் இளகலும், நெய் நீராகலும் போலும், நெய்யுப்பும் நெகிழ்ச்சியும் உளவெனக் கொள்க. ஒருவர் இயக்க இயங்குந் தன்மையால், இயங்கும் பொருள், இயக்கப்படும் பொருள் என்னும் இரு பொருள்களுள் இயக்கமும் ஒன்றாகலின் இதுவும் (பித்த) அழல் வடிவத்தன்மை யுடையதாம்.

அழல் (பித்தம்) வாழுமிடம்

''தானான பித்தம்பின்கலையைப் பற்றிச்
சாய்வான பிராணவாயு வதனைச் சேர்ந்து
ஊனான நீர்ப்பையி லணுகி மூலத்
துதித்தெழுந்த வக்கினியை யுறவு செய்து
மானேகே ளிருதயத்தி லிருப்பு மாகி

.. ..

கோனான சிரந்தனிலே யிரக்க மாகிந்
கொண்டுநின்ற பித்தநிலை கூறி னோமே''

எனத் தமிழ்வைத்திய சதகம் 34-ஆம் செய்யுளில் கூறப்பட்டிருப்பதால், பிங்கலை பிராணவாயு, நீர்ப்பை, மூலாக்கினி, இருதயம் தலை என்னும் இவை பித்தம் (அழல்) வாழும் இடங்களாம்.

உந்தி வியர்வை உதிரமிரப்பைகண்
சந்திர வெண்முகத்தாய் சாற்றொள்—தந்திடுதோல்
நெய்த்த நிண, நிர்வளர்ச்சி நல்கு மிரசதா
தெய்த்திடா பித்தத்திடம்

[ம.தா.பா.]

இவையன்றிக் கொப்பூழ் உந்தி இரைப்பை, வியர்வை, நாவிலூறுகின்ற நீர், செந்நீர், சாரம், கண் தோல் இவ்விடங்களையுங் கூறுவர் அன்றி

''பிரிந்திடும் பித்தம் பேராம் சலத்தினில் எனத்திருமுலரும்''

''போமென்ற பித்தத்துக் கிருப்பிடமே கேளாய்,
பேரான கண்டத்தின் கீழ தாகும்.''

என யூகி முனிவரும் முறையே சிறுநீரும் கண்டத்தின் கீழிடமுங் கூறினர்.

அழலின் இயற்கைப் பண்பு.

பசிதாகம் ஓங்கொளிகண் பார்வைபண் டத்து
ருசிதெரி சத்திவெம்மை வீரம்—உசித
மதிகூர்த்த புத்தி வணப் பளித்துக் காக்கும்
அதிகாரி யாங்கா னழல்.

[ம.தா.பா.]

அழலானது, தன் இயற்கை நிலையில் நின்று செரிப்பித்தல், வெம்மை, பார்வை, பசி, நீர்வேட்கை, சுவை, ஒளி நினைப்பு அறிவு, வன்மை, மென்மை என்பவை உண்டாக்கி உடற்குத் துணை புரியும்.

அழலின் தொழில் : (1) உடலில் வெப்ப முண்டாதல், (2) செந்நிறம் அல்லது மஞ்சள் நிறம் தோன்றல், (3) உண்ட உணவுப் பொருள்கள் பக்குவமடையும்போதும் செரிக்கும் சமயத்திலும் வெப்பமுண்டாதல். (4) வியர்த்தல், (5) மயக்கம் ஏற்படல், (6) செந்நீர் தன் அளவில் மிகுதல், அவ்வாறு மிகுந்த செந்நீர் வெளிப்படுதல், (7) தோல், கண் மலம், சிறுநீர் முதலியன மஞ்சள் நிறமடைதல், (8) சீற்றம், வணக்கமின்மை, அசைவின்மை, நினைவு வெறி, மெலிவு, எரிவு உண்டாதல், (9) எச்சுவையும் கைப்பாகவேனும் புளிப்பாகா வேனும் காணுதல் ஆகியவை அழலின் தொழில்களாம்.

ஆக்கனல் வண்ணவெரி யாற்றலங்கி யொள்ளொளித்தீ
நோக்கழலாம் பித்தமைந்த நூதனமா—யாக்குமொழி
பாசகமி ரஞ்சகஞ் சாதகம் ராசகமா
லோசக மென்றிடுமா லோ [ம.தா.பா.]

அழல், தன் இடம் தொழில் வேற்றுமையால் ஐவகைப் படும். அவை (1) பாசகம் அல்லது அனற்பித்தம், (2) இரஞ்சகம், (3) சாதகம், (4) ஆலோசகம், (5) பிராசகம் என்பவை முறையே ஆக்கனல், வண்ணஎரி ஆற்றலங்கி, ஒள்ளொளித்தீ நோக்கழல் என்பர் தமிழில்.

1. அனற்பித்தம் (ஆக்கனல்)

அழலைவகைத் தென்பரதில் முதன்மை பெற்ற
தாக்கனல்தான் ஐம்பூத மயமாய் மற்றைத்
தழலையுரந் தந்துபுரந் தருமால் உண்ட
சாதத்தைச் செரிப்பித்தி ரசத்தைக்கொண்டு
கழலைவிடுந் திப்பிகளை இரைப்பைக்கு மடுங்
காரியஞ்செய் தானத்துக் கிடையே குடியாய்
மழலைமொழி மாதேகேள் சமைக்குமித்தை
வழங்குவர்காண் பாசகமா மனல்தா னென்றே
[ம.தா.பா.]

இது தீயின் பண்புடையது. இஃது இரைப்பைக்கும் பக்குவாசயத்திற்கும் இடையிடத்திலிருந்து தீயின் குணத்தை மிகுதியாகப் பெற்று, நீர் வடிவமுள்ள பொருள்களை வறளச் செய்து, உண்ட உணவுப் பொருள்களைச் செரிக்கும்படிச் செய்யும்.

2. இரஞ்சக பித்தம் (வண்ண எரி)

இரைப்பைவாழ் வண்ணவெரி 'இறங்கிப் போந்த
எல்லாவூண் டனக்குமாற்று நிறமொன் றீந்தே
விரைவிலன்ன சத்தெல்லாம் அடுஞ்சா லைக்கே
மேவவைப்ப திரத்தமோட்டு மிதயத் தேய்ந்து
நிறைந்தாற்ற லங்கிநாளும்மதிசேர் மேதை
நெறிவலியால் விரும்பியாங்கு பணிசெய் தேநல்
விரைசெறிமெல் லோதிங்காய் புரக்கும் மெய்யை
விளம்புரஞ்ச கஞ்சாதக முறையே யாமே.
[ம.தா. பா.]

இது செந்நீரை மிகுதிப் படுத்தும் பண்புடையது; இரைக் குடரிலிருந்து கொண்டு, உணவிலிருந்து பிரிந்துண்டான சாற்றுக்குச் செந்நிறத்தைத் தருகிறது.

3. சாதக பித்தம் (ஆற்றலங்கி) : இது நிறைவேற்றும் பண் புடையது. இது தமரகத்திலிருந்து அறிவு, புத்தி, பற்று இவற் றைக்கொண்டு விருப்பமான தொழிலைச் செய்து முடிக்கும்.

4. பிராசகம் (ஒள்ளொளித்தி): இது தோலுக்கு ஒளியைத் தரும் பண்புடையது. இது தோலில் வாழ்ந்துகொண்டு தோலுக்கு ஒளியைக் கொடுத்து அதை ஒளிரச் செய்யும்.

5. ஆலோசகம் (நோக்கழல்):

உரியொளிசெய் யழல்தங்குந் தோலி லத்தை
யொள்ளொளித்தீ யெனவிளிப்பர் மீனேய்வாட்சேல்
வரிகொளக்கி நடுவிருந்து கண்ட காட்சி
வகைவிளக்க மறிவிக்கும் நோக்குமங்கி
விரிவுள நூல் வலநாவர் கூறுங் காந்தி
மிகுப்பிராச கமாலோச கங்க ளென்று
தெரிவுளத்தே செயல் முறையைப் பித்த மைந்தின்
திகழொளிகூர் விழியணங்கே ஐயம் நீந்தே

[ம.தா.பா.]

இது கண்களுக்குப் பொருள்களைத் தெரிவிக்கும் பண்பை யுடையது. இது கண்களில் வாழ்ந்துகொண்டு, எல்லாப் பொருள் களின் வடிவத்தையும் அறிதலாகிய காரியத்தைச் செய்யும்.

(இ) ஐயம் (கபம்).

ஐயவடிவத்தன்மை :

''மண்ணீ ரனல்கா லென்னு நான்கும்
நிரலே நாற்றந் தட்பந் திட்பம்
உருவி லூற்ற முடைய வாகி
மெய்ப்பொரு ளழியொரு ளெனவிரு வகைய
அணுக்கள் மெய்ப்பொருள் காரிய மழிபொருள்.''

என்பதால்

''அனுத்துவமும்''
''நீரிறை வரைப்பின் கட்டுநீ ருடம்பு''

என்பதாலும்

''சேத்துமந் தண்ணீர்''

என்பதாலும் தண்மை, நெய்ப்பு, மந்தம், வழுவழுப்பு, மென்மை, திண்மை முதலியவைகளும் ஐயத்தின் வடிவத்தன்மைகள் என் பதை அறிகின்றோம்.

ஐயம் வாழுமிடம்.

''கூறினோஞ் சிலேத்மமது சமான வாய்வைக்
கொழுதியே சுழிமுனையைப் பற்றி விந்தில்
கீறியே சிரசிலாக் கினையைச் சேர்ந்து
சிங்குவையுண் ணாக்குநிண மச்சை ரத்தம்
மீறியே நிறங்கோண நரம்பெ லும்பில்
மேவியதோர் மூளைபெருங் குடலிற் கண்ணில்
தேறியதோர் பொருத்திடங்க ளெல்லாஞ் சேர்ந்து
சிலேத்மமது வீற்றிருக்குந் திடங் கண்டாமே.''

சமானவாயு, சுழிமுனை, வெண்ணீர் (விந்து), தலை, ஆணை (ஆக்கினை) நாக்கு, உண்ணாக்கு, கொழுப்பு (நிணம்), மச்சை குருதி, மூக்கு, மார்பு, நரம்பு, எலும்பு, மூளை, பெருங்குடல், கண், கீல்கள் என்னும் இவைகள் ஐயம் வாழும் இடங்களாம்.

தொண்டையென்பின் சந்திநிறம் சோற்றுப்பை நாசிதலை
ஒண்டொடியே வாமத் துளபித்தத்—தொண்ணீர்ச்
சுரப்பி யிரசதாது சுத்தநிணம் நாவும்
தரமான வையத் திடம்.

[ம.தா.பா.]

பொருள்.—தொண்டை, என்புகளின் மூட்டுகள், மார்பு இரைப்பை, மூக்கு, தலை, வயிற்றின் இடப்புறத்திலுள்ள பித்த நீரைச்சுரப்பிக்கும் கணையம் என்ற வாற்சுரப்பி, இரச தாது, நிணம், நாக்கு ஆகியவை கபத்திடங்களாம்.

ஐயத்தின் இயற்கைப் பண்பு : ஐயம் தன் இயற்கை நிலையில் (1) நிலைத்தல், (2) நெய்ப்பு, (3) கீல்களின் அமைப்பின் கட்டுகள், (4) பொறையுடைமை அதாவது பசி, நீர்வேட்கை, துயரம், கலக்கம், வெப்பம் இவைகளைப் பொறுத்துக்கொள்ளுதல் ஆகிய இவை ஐயத்தின் இயற்கைப் பண்பு என்பதைக் கீழ்க் காணும் பாடாலாலறிக.

திடமீயு மென்பிணைப்புத் திண்மையுற்ற யாப்பும்
அடலேர் வழுவழுப்பும் ஆக்கைக்—கிடர்க்கு
வெருவாப் பொறுமையும் மேலான காப்பாம்.
பெருமைத்தா மையமெனப் பேசு

[ம.தா.பா.]

பொருள்.—கபமானது வலிவுதரும்; எலும்புகளின் மூட்டுகளுக்கு வன்மையும் நல்ல கட்டும், ஆற்றலும் வனப்பும், வழுவழுத்தன்மையும், உடலுக்குத் துன்பம் நேருங்கால் அஞ்சாமல் தாங்கிக்கொள்ளும்பொறுமையும் தந்து உயர்ந்த காப்பாய் அமையும், பெருமையை உடையதாம்.

ஐயத்தின் தொழில் : நெய்ப்பு, வன்மை, சொறிவு, தண்மை பருத்தல், என்பில் ஏதோ பூசப்பட்டது போன்ற உணர்ச்சி, கீல்கள் தொழில் புரியாதிருத்தல், உடல் வெளுத்தல், ஊண் விரைவில் செரியாமை, மிகு தூக்கம், நாவில் இனிப்புச்சுவை தோன்றல், தோல், கண், மலம், சிறு நீர் வெண்ணிறமடைதல், தொழில் புரிவதில் கூர்மையின்மை ஆகிய இவை ஐயத்தின் தொழில்களாம்.

அளியையம் நீர்ப்பியைய மாஞ்சுவைகா ணையம்
தெளிந்த நிறைவையம் தேர்ந்து—சுளித்திடா
தொன்றியைய மென்றைம்பே ரோதையஞ் செய்கையால்
நன்றியற்றும் மெய்க்கு நவில்

ஆதர வாம்மெய்க் அவலம் பதமாங்கி
லேதக மாஞ்சுவைப் பேதமுணர்ப்—போதகமாம்
தற்பகமாஞ்சந்திகளில் றங்குஞ் சிலேடகமா
மற்பமிலாச் சேத்தும மைந்து.

[ம.த.பா.]

ஐவகை ஐயங்களுக்கும் முதல் பாடல் தமிழ்ப்பெயர்களையும் அடுத்தது வடமொழிப் பெயர்களையும் அறிவிக்கின்றன.

ஐவகை ஐயங்களின் தமிழ்ப்பெயர்கள்.			ஐவகை ஐயங்களின் வடமொழிப்பெயர்கள்.
1. அளியையம்	..	..	அவலம்பகம்
2. நீர்ப்பியம்	..	..	சிலேதகம்
3. சுவைகாணையம்	..	..	போதகம்
4. நிறைவையம்	..	..	தற்பகம்
5. ஒன்றியையம்	..	..	சிலேதகம்

சிலேத்க்கபத்தைச் சந்திகம் எனவும் கூறுவர்.

இவ்வையம் ஐவகைப்படும். அவை:

இயல்பினில் அமைந்துள உரத்தினுலும்
இனிய வூ ணளித்துள ரசத்தினுலும்
இயங்கிடும் புனலது நீர்மையாலும்
எழிற்பிட ரிருதய மையவயின் ?
பயன்பெற அளித்திடு முரத்திலார்ந்து
பலம்வளம் அளியையம் எனுமருந்து
பயன்தருந் தமிழ்க்கலை உரையவலம்
பகமீது வடமொழிப் பனுவலரே.

[ம.த.பா]

1. அவலம்பகம் (அளியையம்).—இது காற்றுப்பையாகிய நுரையிரலிலிருந்துகொண்டு, தன் இயற்கைவன்மையால், திரிகஸ்தானத்திற்கும், உணவின் சத்தால் தமரகத்திற்கும், அடிப்படையாயிருந்து தன் இயற்கை நெகிழ்ச்சித் தன்மையைக் கொண்டு மற்ற நான்கு வகை ஐயங்கட்கும் பற்றுக்கோடாயிருப்பதால் அவலம்பகம் எனப்படும்.

ஆமா சயத்திருந் தன்னத்தி லார்கடினச்
சாமான் களைத் தகர்த்துத் தண்ணீர்போல்—ஆமாறு
நன்கியற்று நீர்ப்பியையம் நாட்டுங் கிலேதகம்
நன்கியற்று முத்திரச்சொல் நாடு

[ம.த.பா.]

2. கிலேதம் (நீர்ப்பியையம்)—இஃது இரைப்பையிலிருந்துகொண்டு, உண்ணப்பட்ட உணவுப்பொருள், நீர் முதலியவைகளை ஈரப்படுத்தி, மெத்தெனச் செய்யுந் தொழிலைப்புரியும்.

அருஞ்சோலை யரும்பிடு மேற்றமுள
அறுசுவை யறிந்திடு மாற்றலுள
பெருந்திறல் உடையநல் நாக்கினிலே
பெருமையையாய்ப் பொருந்திய சேத்துமமே

விருந்திடுஞ் சுவைகளைத் தோற்றுவிக்கும்
மிகுசுவை யறியையஞ் சாற்றுமதை
இரும்புகழ் வடமொழி போதகமென்
றியம்பிடு மிதையறி நீநிதமே

[ம.த.பா.]

3. போதகம் (சுவைகாணையம்).—இது சுவைப் பொறியாகிய நாவினின்று, உண்ணுகிற சுவைகளை அறிவிக்குந் தொழிலைச் செய்யும்.

ரத்தே யமர்ந்துகட்குச் சீதம் பொறிகட்
குரமும் நிறைவுமுதவும்— சிறந்த
கபமாம் நிறைவையம் காசிலா தர்ப்பக்
கமமெனும் வாமநூல் காண்

[ம.த.பா.]

(தற்பகக்கபமென்ற சொல் தற்பக்ககபம் எனக் குறுக்கல் விகாரம் பெற்றுள்ளது.)

4. தற்பகம் நிறைவையம்.—இது தலையினின்று இரு கண்கட்கும் குளிர்ச்சியைத் தரும்.

என்புட ணென்பிணைந் தேய்ந்தநற் சந்திதங்கி
வளமை வனப்பு வழுவாத—தன்மைதரும்
ஒன்றியையந்தன்னை உரைப்பர் வழுவழுக்கும்
இன்பச் சிலேட கமென்று

[ம.த.பா.]

5. சந்திகம் ஒன்றியையம்.—இது பூட்டுகளில் (கீல்கள்) நின்று இயற்கையாய் எல்லாக் கீல்களையும் ஒன்றோடொன்று பொருத்தித் தளரச் செய்துகொண்டிருக்கும்.

(ஈ) இருகுற்றக் கலப்பின் பண்பு.

இரண்டிரண்டு குற்றங்கள் ஒன்று கூடி ஒருமிக்கத் தத்தம் அளவுகளில் (மாத்திரைகளில்) மிகுந்தாவது, குறைந்தாவது நிற்கும் நிலை 'இரு குற்றக்கலப்பு' எனப்படும்.

இரு குற்றப்பிரிவு மூவகைப்படும் : இவ்வாறு வளி முதலிய குற்றங்கள் இரண்டிரண்டு கூடிக் கலப்பது ஒன்பது வகைப்படினும், சிறப்பாய் வைத்தெண்ணப்படுவன மூன்றேயாகும். அவை—

வளி தீ (வாதம் பித்தம்), (2) வளிஐயம் (வாதகபம்), (3) தீ (ஐயம் பித்த கபம்) என்பவை ஆகும்

(உ) முக்குற்றம்.

வளிய முதலிய மூன்றும், தத்தம் அளவில் மிகுந்தேனும் குறைந்தேனும் ஒன்று கூடி நிற்பது 'முக்குற்றம்' எனப்படும். இதனைத் ''திரி தோடம்'' ''சன்னிபாதம்'' எனக் கூறுவாருமுளர்.

(ஊ) குற்ற உடற்கட்டுகளின் சேர்க்கையால் உண்டாகும் வேற்றுமை.

குற்றங்கள் மூன்றுக்கும், உடற் கட்டுகள் ஏழுக்கும் தம்முள் ஏதேனும் ஒன்று அல்லது பல, தன்னிலை, தன்னிலை வளர்ச்சி வேற்றுநிலை வளர்ச்சி இவற்றை அடைவதால், இவை மிகுந்தேனும், குறைந்தேனும் ஒன்று அல்லது பல சேர்வதால், எண்ணற்ற வேற்றுமைகளுண்டாகும். ஆதலின், அவ்வேற்றுமைகளில் நேரிடும் இலக்கணங்களை அறிந்தால், அவ்வேற்றுமையை அறிய முடியும்.

தன்னிலை : குற்றங்கள் தத்தம் இயற்கை நிலைப்படுவதே 'தன்னிலை' எனப்படும்.

தன்னிலை வளர்ச்சி : குற்றங்கள் தத்தமிடங்களில் வளர்ச்சியடைவதே 'தன்னிலை வளர்ச்சி' யாம்

வேற்று நிலை வளர்ச்சி : குற்றங்கள் மிகவும் வளர்ச்சியடைந்து, தம்மிடம் விட்டு மீறி, வேற்றிடங்களிற் பரவின், அது 'வேற்று நிலை வளர்ச்சி' எனப்படும்.

தன்னிலை வளர்ச்சியின் இலக்கணம் : தன்னிலை வளர்ச்சிக்குக் காரணமான பண்புள்ள பொருள்களில் வெறுப்பும், எதிரிடைப் பண்புள்ள பொருள்களில் விருப்பும் உண்டாவதே இதன் இலக்கணமாம்.

வேற்றுநிலை வளர்ச்சியின் இலக்கணம் : இதனை, அந்த குற்றத்தின் குறிகுணங்கள் யாவும் காணப்படுவதாலும் உடல் பிணிபட்டிருத்தலாலும் அறியலாம்.

1. வளி தன்னிடத்தும் பிறவிடத்தும் மீசுர முறுதலும் அமைதியுறுதலும்.

வாயுவின் குணத்துடன் சூடணுகில்
வாயுவி னிடங்களில் நோய்களுண்டு
வாயுவில் குளிர்ச்சிதான் கூடிடிலோ
வந்திடும் நலிகளும் வேறிடத்தே

வாயுவில் அனல்தரும் நெய்ப்பமைந்தால்
வாயுவும் அடங்கிடும் வாய்மையிது
வாயுவின் பிணிகளைப் போக்கிடவே
வகுத்திடும் முனிமொழி கண்டிடுமே

[ம.த.பா.]

பொருள்.—வாயுவின் குணத்துடன் சூடான பொருள்கள் சேர்ந்திடில் வாயுவின் தானங்களில் நோயுண்டாகும். வாயுவின் குணத்துடன் குளிர்ச்சி சேர்ந்தால் தன்னிடமன்றியும் பிறவிடங்

களிலும் வளியின் சினம் தோன்றும் வாயுவின் குணத்துடன் வெப்பமுள்ள நெய்ப்பசையான பொருட்கள் சேர்ந்தால் வாயு வானது தன்னிலையடையும். சீற்றம் தணிந்துவிடும். இதுவே உண்மையாம். வாயுப் பிணிகளை போக்க முனிவர் மொழிப்படி வகுத்ததானமுறை இதுவெனக் கண்டுகொள்க.

2. அழல் தன்னிடத்தும் பிறவிடங்களிலும் சீற்றமுறலும் அமைதியுறலும்.

மந்திரிப் பண்புடன் குளிர்ச்சிதரும்
வஸ்த்துக்கள் கொண்டிடி லழலிடத்தே
வந்திடும் வன்பிணி அனலதனில்
மற்றிடத்தும் நலியுற்றிடுமே
மந்தமுந் தன்மையு மிணைந்திடிலோ
மற்றொரு நோயில்லை மனிதருக்கே
இந்திள நெற்றியி னெழிலணங்கே
இத்தரைச் சித்தரின் மொழியிதுவே.

பொருள : அழலின் (பித்தத்தின்) குணங்களுடன் குளிர்ச்சி தரும் பொருள்களை உட்கொண்டால் பித்தத்தின் சிறப்பிடங் களில் நோய்காணும். அப்பித்தத்தின் குணங்களுடன் சூட்டைத் தரவல்ல பொருட்களைச் சேர்த்தால் பித்தத்தானங்களின்றியும் பிறவிடங்களிலும் சீற்றமுண்டாகும். அப்பித்த குணத்துடன் மந்தமும் சீதமுமான பண்டங்கள் சேர்ந்ததால் பித்தம்தன்னிலை பெறும். வேறுநோய் ஏதும் இல்லையாம். இது சித்தரின் மொழியாம்.

3. ஐயம் தன்னிடத்தும் பிறவிடங்களிலும் சீற்றமுறலும் அமைதி யுறலும்.

சேத்துமக் குணத்துடன் நெய்ப்பசையும்
சீதமுஞ் சேரிலா மைவயினேய்
சேத்துமக் குணத்துடன் சேரனலுக்
கேற்படும் நோய்களும் வேறிடத்தே
தீர்த்திடு வறட்சியுந் தீக்குணமும்
தீர்ந்திடுஞ் சேர்த்துமத் தீப்பிணியென்
றேத்திடு தகவுடையோன் பெறுமே
இத்தரைச் சித்தரின் ஆய்வுரையே

[ம.த.பா.]

பொருள் : சேத்துமத்தின் குணங்களுடன் நெய்ப்பசை யோடு கூடிய குளிர்ச்சிதரும் பொருள்கள் சேர்ந்தால் சபத்தின் இடங்களில் நோய் காணும் சேத்துமக் குணத்துடன் கூடிய தான அழலின் தன்மையுள்ள பொருள்கள் சேர்வதால் சேத்து மத்தானங்கள் அன்றியும் வேற்றிடங்களிலும் சேத்துமம் சீற்றம் கொண்டு நோய் விளைவிக்கும் சேத்துமப்பண்புடன்

வறட்சியும் வெப்பமும் சேர்ந்தால் கபம் தன்னிலையை யடையும். இவ்வகைச் சேர்க்கை சேத்தும தோடத்தால் ஏற்பட்ட கொடிய பிணிகள் தீர்க்குமெனச் சித்தர்கள் கூறிய ஆய்வுரையாம்.

வளி முதலிய குற்றங்கள், தன்னிலை வளர்ச்சி, வேற்று நிலை வளர்ச்சி தன்னிலையடையும் காலம்:

வளி : இது முதுவேனிற் பெரும்பொழுதில், தன்னிலைவளர்ச்சியையும், கார்காலத்தில், வேற்றுநிலை வளர்ச்சியையும், கூதிர்ப் பருவத்தில் தன்னிலையையும் அடையும்.

முதுவேனிற்காலத்தில் காலத்தின் இயற்கையால், பயன் தரும் செடிகளும் உடலும் வறட்சிப் பண்பைப் பெறுவதனுல் அப் பண்பையுடைய வளியும் பண்பொற்றுமை காரணமாய் வேற்று நிலை வளர்ச்சி அடைய வேண்டியிருப்பினும், அது தன்னியற்கை வெப்பத்தால் தன்னிலை வளர்ச்சியையே அடைகின்றது.

பித்தம்: இது கார் காலத்தில் தன்னிலை வளச்சியையும் கூதிர்க்காலத்தில் வேற்று நிலை வளர்ச்சியையும், முன்பனி காலத்தில் தன்னிலையையுமடையும்.

கார்கால இயல்பால் நீரும், செடிகளும் புளிப்புத் தன்மையை அடைவதனுல், அப்பண்பையுடைய பித்தம் வேற்றுநிலை வளர்ச்சியடைய வேண்டினும் அது தட்ப இயல்பால் தன்னிலை வளர்ச்சியையே அடையும்.

ஐயம் : பின் பனிக்காலத்தில் தன்னிலை வளர்ச்சியையும், இளவேனிற்காலத்தில், வேற்று நிலை வளர்ச்சியையும், முது வேனிற் காலத்தில் தன்னிலையையுமடையும்.

பின் பனிக்கால இயல்பால், நீரும் செடிகளும் உடலும் நெய்ப்புப் பண்பையடைவதனுல் அப் பண்பைப் பெற்ற ஐயமும் வேற்றுநிலை வளர்ச்சியடைய வேண்டினும், அது தட்ப இயல்பால் சிதைவுறாமல், தன்னிலை வளர்ச்சியையே அடையும்.

குற்றங்கள் கால இயல்பைக் கடந்து நிற்கும் வேளை : மேற் கூறியவாறு வளி முதலிய குற்றங்கள் கால இயல்பால், தன்னிலை வேற்று நிலை வளர்ச்சி, தன்னிலை வளர்ச்சி அடையக் கூடியனவாய் இருப்பினும், அவை உணவு முதலிய காரணங்களால் அக் காலங்களில் அங்ஙனம் அடையாமல் வேற்றுமைப்படவுங் கூடும்.

குற்றங்கள் வேற்று நிலை வளர்ச்சியினின்று தன்னிலைப்படும் இலக்கணம்: வளி முதலிய குற்றங்கள் வேற்று நிலை வளர்ச்சியடைந்தால், நீர்ப்பெருக்கு எங்ஙனம் விரைவாய்ப் பரவுமோ, அங்ஙனமே உடலில் விரைவாய்ப்பரவும். அப்பெருக்கு எப்படிச் சிறிது சிறிதாய் வற்றுமோ, அது போலவே வேற்று நிலை வளர்ச்சியடைந்து, உடல் முற்றும் பரவிய குற்றங்களும் சிறிது சிறிதாகவே தன்னிலைப்படும்.

குற்றங்களே எல்லாப் பிணிகளுக்குங் காரணமெனல் : எங்ஙனம் பலவகை வடிவ வேற்றுமையாய் அமைந்த மூலப்பிரகிருதியின் திரிபாயுள்ள உலகம் முப்பண்புகளைவிட்டுத்தனித்து நிற்றல் இயலாவோ, அங்ஙனமே, பிணிகள் பலவும் ஏழு உடற்கட்டுகளினது வேற்றுமையையே காரணமாய்க் கொண்டு கிளைக்குமென்றாலும், முக்குற்றங்களினுடைய இயற்கை செயற்கையினின்று விலகி இருக்க முடியாது.

ஆகையால், முக்குற்றங்களைப் பற்றித் தெரிந்துகொள்வதோடு முக் குற்றங்கட்கு அடிப்படையாய் நிற்கும், (1) உடல், (2) முப்பண்பு, (3) வளி முதலியவைகளின் வளர்ச்சிக் குறைவு, (4) உடற் கட்டுகள், (5) நிலம், (6) பொழுது இவைகளின் தன்மையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

(எ) யாக்கையின் இயற்கை இலக்கணம்.

உடலில் உணவு, செயல்களால் முக்குற்றங்களுள் எதுமிகுதிப்பட்டு வெண்ணீர் (சுக்கில) சுரோணிதத்துடன் கலக்கின்றதோ' அக்குற்றமே முதற்காரணமாயிருந்து யாக்கையை அமைக்கும். அமைக்கப்பட்ட உடல் குற்ற மிகுதியின் பெயரால் வழங்கப்படும். எவ்வாறெனின், வளி மிகுதியால் உண்டான உடலை வளியுடலென்றும், அழல் மிகுதியாலுண்டான யாக்கையை அழல் உடலென்றும், ஐயமிகுதியால் உண்டான உடலை ஐய உடலென்றும் கூறுகின்றோம். இம்மூன்று உடலும் முறையே அதம, மத்திம, உத்தம உடல்களென்று வழங்கப்படும்.

வளி உடலினன் இயல் :

"அமைச்சும் பொருநனு மருகிவிண் டிவர்தல்
அன்றி யெய்த்துய ரங்கமும் பணைத்த
அடிக்குறங் குங்கீ லசைவுறி னொலித்தலும்
அவிழிதழ் கனப்புற் றரிபோல் விகாரித்து
அற்றார் விழியொத் ததிற்சுர சுரப்பும்
அணித் தூ சரமு மடங்கிய நயனத்துள்
அளித்தண்ணோக்கு மற்பவெண் கருமை
அமைதரு மெய்யு மஃதுபோனுதிவகிர்ந்(து)
அவிர்முடி கறுப்பு மஞ்சல வுரையிதில்
அகரநீங் குரையுமழ லுப்பிமிழ் புளிப்பு
அனையவத் துக்களில் அற்ப விருப்பும்
அளிவத் துக்களில் அருவருப் பும்மிக
அருந்தலு மருந்தினு மயர்ந்த வலியும்
அணங்கியர் தம்பால் அணங்கு விந்திலை
அஃகலும் தனுச ரதிகரித் திடலும்

அடலக மறியிவை யடர்நிலை யின்மையும்
அங்கமர்த் தனமிசை யற்புதக் களிப்பும்
அருவேட்ட மிவற்று ளளவறு வேட்கையும்

அகீர்த்தி மாச்சரியம் அயோக்கிதை யுலோபம்
அனந்தவொண் பொருள்கவர் கௌரமில் குணமும்

அரைக்கண் கவித்துறங் கற்ப வனந்தலும்
அவ்வுறக் கத்திட மத்திரி பழுவம்

அவற்றுட் சேரல்போலேங்கடு கனவும்
அதிகவித் திறமு மண்ணிப் பொலிகுநர்

அநிலமூர்த் தியரென் றறையுஞ் சுருதியே
அன்றியுங் கொடிநரி யத்திரி குடிஞை

அற்பம் பாரிவைக் கரியுட லென்பரே.''

(பொழிப்புரை) வளி உடலினனுக்குத் தீயும் ஐயமும் குறைந்து வளிமிகுந்திருப்பது மன்றி, மெலிந்து உயர்ந்த உடலும்; பருத்த அடித்தொடைகளும்; நடந்தால் கீல்கள் நெட்டையிடுதலும்; தடித்த இமைகளுடன் வட்டமாக விகாரித்துச் சாக்கண்போன்று சுரசுரப்பாயும், சிறிது வெணமை கலந்தனவாயுமிருக்கும் கண்களும், குளிர்ந்த பார்வையும்; சிறிது கறுமை வெண்மை கலந்து ஒளிரும் உடல்நிறமும்; அவ்வாறு கறுத்து முனை பிளந்த தலை மயிரும்; தெளிவான வார்த்தையையும்; சிலவேளை மனக்கலக்கத்துடன் பட்டும் படாமையுமான தடுமாற்ற வார்த்தையும்; தித்திப்பு, புளிப்பு, உப்பு, சூடு உள்ள பொருள்களில் சிறிது விருப்பமும்; குளிர்ச்சி பொருந்திய பொருள்களில் வெறுப்பும்; மிக்க உண்டியும், மிக்க உண்டியெனினும் அற்பவன்மையும்; பெண்களிடத்தில் அற்ப விருப்பும், வீரிய வளர்ச்சிக் குறைவும்; புத்திரப் பெருக்கமும்; ஆண்மை, உணர்ச்சி, அறிவு இவை நிலையின்மையும்; விளையாட்டு, இசை, அவமதிச் சிரிப்பு, தொக்கணம், வேட்டையாடல் இவைகளில் விருப்பும், தகுதியின்மை, பகைமை, ஈகையின்மை, பொன்னாலான பொருள்களைக் கவர்தலில் நினைப்பு முதலிய பண்புகளும்; புகழின்மையும்; அரைக்கண் மூடிய சிறு தூக்கமும், அத்தூக்கததில்; விண், மலை, காடு இவைகளில் தான் நடப்பதாகக் காணுகின்ற கனவும்; புலமைத்திறமையும் உண்டாயிருக்கும்.

அன்றியும், நாய், நரி, ஒட்டை, எலி, பருந்து, காகம், கோட்டான் எனினும் மிவைகட்கும் மேற்கூறிய பண்புகள் உண்டாயிருக்கும்.

அழல் (பித்த) உடலினன் இயல்.

"அந்த முறுமமைச் சதிகரித் துறைதல்
அன்றிக் கீலென் பவற்றுளூன் குறைந்து
அநவர தழும்வெப் பணுகிவியர்ப் புற்று
அதிர்ப்புன் றூர்க்கந்தம் பிறந்த தணலாம்
அறச்சுருங் கித்திரைந் தவிருடலத்தில்
அரிசனம் விரவிய வரத்த வண்ணமும்
அலர்முகங் குடங்கை யடியிவை சிவத்தலும்
அணிச்சிறு நிமையு மழகிய சீருறு
அடைந்தரிப் பகைநிற மருத்துமீச் சலத்துடன்
அலர்பசி மறம்வெயி லரிட்ட மிவற்றான்
அக்க ணஞ்சிவப் படரி ணைக் கண்களும்
அருச்சுன நிசிநிற மமர்முடி யுளையும்
அங்க மிசைநனி யல்கிய வுளையும்
அகன்முகப் பருவுட னஞ்சனக் குறியும்
அமிழ்துகைப் புத்துவர்ப் பனிகளின் விருப்பும்
அரந்தை தாகம் பசியனற் கெய்த்தலும்
அற்ப வுண்டியு மலங்கன் மணக்குழம்(பு)
அணியணி யணியினு மயமுறு பனியிலும்
அருந்தியும் பெண்ணுழி யவர்மீக் கின்மையும்
அஃதுபோல் விந்துவும் காமமண் ணுதலும்
அடையலர்க் கிடையாவுடலுமீக் குரையும்
அடுத்த வர்க்கன் பழுக்குறாப் புந்தி
அலைவுறாத் துணிபதி மான மொழுக்கும்
அறைந்தவிப் பரிசு மனந்தலிற் கவிர்கோங்(கு)
அலர் தூங்கிதழி யகனாற் பாங்கினும்
அனலெரி யொண்சு டலரி ஞெகிழி
அனிலந் தடியிவை யமைதரு கனவும்
அடங்காப் புலமையு மரும்போ கழும்பெற்(று)
அவனியி லுரைகுந ரவர்பித்த தேகரே
அலவன் பணிகுடா வடிபுலி யியக்கர்
அரியிவைக் கும்பித் தங்கமா மன்றியும்
அக்கினிப் பவத்தா மனுச்செந் துக்களும்
அக்கடம் பெறுமென வறிஞர்கட் டுரையே."

(பொழிப்புரை)—அழல் உடலினனுக்கு, தீ மிகுந்து இருப்பதுவுமன்றி, எலும்புகளிலும் கீல்களிலும் ஊன் குறைந்து எப்போதும் வெப்பம், வியர்வை, அற்பதுர்நாற்றம், தோல் சுருங்கித் திரைதல் முதலானவை பொருந்திய மேனியும், மஞ்சளும் சிவப்பும் கலந்து ஒளிரும் நிறமும், முகம் உள்ளங்கை உள்ளங் கால் சிவந்தும், மஞ்சள் நிறம் பெற்றும் இருக்கும். அதிக இயக்கத்தோடு கூடிய மெல்லிய இமைகள் உடையவராய், வெயில், சீற்றம், பசி கட்குடி இவைகளால் மிக்க விரைவில் சிவக்கின்ற கண்களும், தலையில் சிறிது மஞ்சள் நிறமயிரும், உடலில் குறைந்த உரோமமும் நரையும், முகப்பருவுடன் கறுத்த மச்சங்களும், இனிப்பு, துவர்ப்பு, கைப்பு, குளிர்ச்சி என்னும்

இவை பொருந்திய பொருள்களில் விருப்பும்; அற்பவுண்டியும் பசி; நீர்வேட்கை, சீற்றம், சூடு, அச்சம் ஆகிய இவைகளைப் பொறுக்காத தன்மையும்; நறுமண மாலை, சந்தனப்பூச்சு முதலிய ஒப்பனைகளிலும் பனியிலும் விருப்பும்; அற்ப சுக்கிலமும், அற்ப காமமும், பெண்களிடத்தில் அற்ப விருப்பும், வீரம், பகை, துணிவு, மரியாதை, வல்லமை, தெளிந்த அறிவு, மிக்க வார்த்தை, ஒழுக்கம், நற்செய்கை, அடுத்தவரிடத்தில் அன்பு ஆகிய இப் பண்புகளும்; உறக்கத்தில் பூக்கள் நிறைந்த கோங்குமரம், சரக் கொன்றை மரம், முருக்கமரம், மின்னல், சூரியன், வாயு, கொள்ளி நாற்புறத்திலும் பற்றி எரிகின்ற வெளிச்சம் இத்தகையவற்றைக் காண்கின்ற கனவும்; நல்ல இன்பமும், கல்வி மேன்மையும் உண்டா யிருக்கும். இவன் முக்கால் வன்மையும் 65 வயதும் உடைய வனாய் இருப்பான்.

ஈதன்றியும், அழல் உடலையுடைய புலி, கரடி, குரங்கு, பூனை, பாம்பு என்பவைகளுக்கும் முற்கூறிய உடல் முதலிய பண்புகள் உண்டாயிருக்கும். அன்றியும், தீயினால் தோன்று கின்ற உயிர்களையெல்லாம் அழல் உடல் என்றே சொல்லு கிறார்கள்; மேலும்,

> "கொள்ளும் பித்தப் பிரகிருதி குணக்கா ரற்குப் பசியதிகம்;
> தெள்ளும் பித்தத் துவக்குண்டா மொருவா றேசீ ராயிருக்கும்;
> தள்ளும் சரீரம் உட்டிணமாம்; தாகம் பொறுக்க மாட்டானாம்;
> விள்ளும் மஞ்சள் நிறமாகும் விரவு மனலி னிறந்தானே."

(பதவுரை)—கொள்ளும் பித்தப் பிரகிருதி—பித்தத்தின் இயற் கையைக் கொண்ட, குணக்காரற்கு—பண்புடையவனுக்கு, பசி அதிகம்—மிக்க பசி யுண்டாகும், தெள்ளும்—தெளிந்த பித்தத் துவக்கு உண்டாம்—பிததம் மிகுந்த உடம்பு இருக்கும்; ஒரு வாறே சீராயிருக்கும்—ஒருவாறு ஒழுங்காயிருப்பான்; தள்ளும்—மயக்கம் உண்டாகும்; சரீரம் உட்டிணமாம்—உடம்பு எப்பொழு தும் சிறு சூடாயிருக்கும்; தாகம் பொறுக்கமாட்டானும்—நீர் வேட்கையுண்டானால் பொறுக்கமாட்டானாம், விள்ளும் மஞ்சள் நிறம் ஆகும்—அவன் உடம்பின் நிறம் மஞ்சளாயிருக்கும்; (அன்றி) விரவும் அனலின் நிறந்தான்—அம்மஞ்சள் நிறம் அனலின் நிறம் கலந்த செந்நிறமாகவும் இருக்கும்.

> "நிறக்குங் கைகால் சிவந்திருப்பான்
> நெஞ்சு தளராத் தயிரியவான்
> சுறக்குந் தரும குணநேசன்
> கல்வி யுடையான் வெகு யூகன்

துறக்க முடையான் மௌனகுணன்
ரோம விருத்தி குறைந்திருப்பான்
சிறக்கும் விரகன் பித்தகுணன்
செய்தி யதனைத தெரிவாயே.''

(பதவுரை)—நிறக்கும் கைகால் சிவந்திருப்பான்—கைகால்கள் சிவந்த நிறம் உள்ளவன், நெஞ்சு தளராத தயிரியவான்—மனவுறுதியுள்ளவன், கறக்கும்—கொடுக்கின்ற, தரும குணநேசன்—தருமஞ்செய்ய விருப்பமுடையவன், கல்வியுடையான்—படிப்புடையான், வெகுயூகன்—மிக்க அறிவுள்ளவன், துறக்கம் உடையான்—எவற்றிலும் வெறுப்புடையவன், மௌன குணன்—அதிகமாய்ப் பேசாதவன், ரோமவிர்த்தி குறைந்திருப்பான்—மயிர் அதிகமில்லாதவன், சிறக்கும் விரகன்—கலவியில் மிக்க விருப்பம் உடையவன் (ஆகிய இத்தன்மைகளையுடைய), பித்தகுணன் செய்தி அதனை—பித்த குணத்தின் இயற்கையையுடையவனுடைய நடத்தைகளை, தெரிவாய்—உணர்ந்துகொள்வாய்.

(பொழிப்புரை) பித்த இயல்புடையவன், மிகுந்த பசி, பித்த உடல், நெறிமயக்கம், உடல் வெச்செனல், தாகம் பொறுக்காமை, மஞ்சள் அல்லது செந்நிறம், கைகால்களில் செந்நிறம், தயிரியம், தருமகுணம், கல்வி, மிக்க அறிவாற்றல், எதிலும் வெறுப்பு, பலபடப்பேசாமை, உடம்பில் மயிர் குறைவு, போகத்தில் பிரியம் ஆகிய இவைகளை உடையவனுவான்.

ஐய உடலினன் இயல்.

''அணிப்படைத் தலைவன் அவனிமிர்ந்து விளங்குதல்
அன்றி யிடையற வத்திகில் நரம்புமுள்
அழுந்தலூன் பொதிய வபலமே டின்றி
அழகொடு மிருதுவை யண்ணிச் சாணுவை
அண்டிய கரமோ டகன்ற சங்கமும்
அத்திற னகலமு மவயத் தவறன்
அனவா வுறுப்பு மறுகங் குரம்பொன்
அம்புய மலர்க்கோ ரோசனை நிசியிறுங்(கு)
அம்பக மிவற்றொளி யப்பிய வண்ணமும்
அருக லாங்கறுத் தமையிமை யுளையுடன்
அகன்றுநீண் டிருகடை யவைசிவந் தஞ்சனம்
அருச்சுன விழிக ளவைதெளி வார்ந்துசேண்
அறிநோக் கந்தர வவநீ வியதென
அணியொடு மினுமினுத் தவிர்வரிக் கண்களும்
அவலம் பகத்தோ டதனுன் மிகக்கறுத்(து)
அவயவி முழுவ தூஉ மடர்ந்தெழு முளையும்
அசைமதக் களிறென வடிபெயர்த் திடலும்
அரிஅலை தடாரிமஞ் சரற்றல்போற் றொனியும்
அழறுவர்ப் புறைப்புகைப் பதிவெம் பதார்த்தமொ,
அருந்தற் புணவு மவ்வுண வென்னினும்

அளப்பரு மொய்ம்பு மனல்பசி தாகமும்
அலக்க ணிவற்று னயர்வுறுத் தன்மையும்
அடிமுடித் தாதுக்க ளிரியுசந் ததிநடை
அகம்பரி சனமிவை யங்கிவர் பெருக்கமும்
அருங்குழ விப்பரு வத்துமீக் கழங்குதல்
அற்றிடு தன்மையோ டலர்விட யஞ்சலம்
அதிர்ந்தெழு கடுஞ்சொ லல்கரு கஞ்சினம்
அலேமன மிவையற் றளாவிய புந்தி
அறம்பொறை நாணம் அந்திய ஞாபகம்
அசல நட்புநன் கறிதல்சத் துவகுணம்
அந்தண ருக்கன் பகலிடஞ் சுட்டுதல்
அழிவறு வாய்மை யமர்ந்திசை மாற்றம்
அற்க றெளித லஞ்சலி முன்புணல்
அளித்தமீக் களித்த லன்றிக் குணங்களும்
அனேகொ ணற்சுக வனந்தலு மதற்குள்
அண்ட சந்ததும் அரவிந்த வாவி
அம்புத மிவைதோ யற்புதக் கனவும்
அற்புதக் கவிவல் லவனெனுந் தரமும்
அயிரா வதத்தோ னடைநடை யும்பெற்(று)
அறிஞர் நனிமதிப் பவர்கபத் தேகரே;
அயனுருத் திரன்கரி யவன்வரு ணற்கும்
அத்தி முடங்குளே யசுவம் விடையான்
அஞ்சிறை யஞ்ச மகிப்பகை யிவைக்கும்
அவ்வுரு வாகு மன்றியுங் கபத்தை
அமிர்தக் கதிரோ னங்கமா மென்பரே.''

(பொழிப்புரை) ஐய உடலினனுக்கு ஐயம் மிக்கிருப்பதுவுமின்றி நரம்புகளேயும் எலும்புகளேயும் கீல்களேயும் தசைகள் நிறைந்து மறைக்க, மேடு பள்ளம் இல்லாமல் மென்மையுடன் அழகிய உடலும்; பரந்த நெற்றியும், அகன்று உயர்ந்த மார்பும்; முழங் கால்அளவு நீண்ட கையும்; குறைவில்லாத உறுப்புகளும்; அகன்று நீண்டு, கடை சிவந்து, கருவிழியும் வெள்விழியும், ஒளி யுடையனவாய்த் தெளிவாய்த் தூரப்பார்வையைத் தோற்றுவிப் பனவாய்ச் சுற்றிலும் கருத்து நெருங்கிய இமை மயிருடன் எண் ணெய் தடவினது போலமினுமினுத்துத் தோன்றும் அழகிய கண் களும்; மஞ்சட் சோளம்,அறுகுமுனை, பாணத்து ஒளி, கத்திஒளி, கோரோசனை, தாமரைப்பூ, பொன் முதலியவற்றை ஒத்த உட லும்; ஐயப்பசையால் மிகவும் கறுத்து நெருங்கி முளைத்த உளை யும்; கொழுத்த யானை நடையும்; முகில், கடல், அரிமா, முழவு என்பவைகளின் ஒலிபோன்ற குரல் ஒலியும்; கைப்பு, துவர்ப்பு, கார்ப்புக் கூடிய மிக்க வெப்பமான அற்ப உண்டியும்; அற்ப உண்டி எனினும், மிக்க வன்மையும், பசி, நீர்வேட்கை, துயரம், அச்சம், சூடு, ஆகிய இவைகட்குப் பின்வாங்காத் தன்மையும்; சாரம், வெண்ணீர், வழிவழித் தொடர்பு (சந்தானம்), ஏவலாளர், ஒழுக்கம், அறிவு ஆகிய இவைகளின் பெருக்கமும்; சிறு குழவியாய் இருக்கும் காலத்தில் மிக்க அழுகையுடன் சீற்றம், கடுஞ்சொல், கலக்கம் பொருந்திய அறிவு, திடம், மிக்க நீர் வேட்கை என்னும் இவை இன்மையும்; சத்துவகுணம், நினேவுவன்மை, மேலானஅறிவு

முன் ஆராய்ச்சி, பெரியோர்களிடம் அன்பு, வணக்கம், நீங்கா நட்பு, நம்பிக்கை, உண்மை, உறுதி, பொறுமை, நாணம், பொருத்தமானவிடை, அறத்தில் விருப்பம், நன்றி மறவாமை, ஈகை, மிகுந்த ஈகை, பிறர் நன்மதிப்பு, நற்செய்கை ஆகிய இப்பண்புகளும்; நல்ல தூக்கமும்; அத் தூக்கத்தில் பறவைகள் உள்ள தாமரைக்குளம், குளிர்ச்சி பொருந்திய முகில் முதலியவற்றைக் காண்கின்ற கனவும்; புலமைத்திறமையுடன் மிகுந்த செல்வமும் உண்டாயிருக்கும். அவனன்றியும், அயன், உருத்திரன், இந்திரன், வருணன் என்னும் இவர்களுக்கும்; அரிமா, யானை குதிரை, எருது, பசு, கருடன், அன்னம் என்னும் இவைகளுக்கும், முற்கூறிய விழிகளும் பண்புகளும் உடலும் உண்டாயிருக்கும். இந்த ஐயம் என்பதைத் திங்களின் இயற்கைத் தன்மை என்றே சொல்லுகிறார்கள்.

மேற்கூறிய வளி உடல், அழல் உடல், ஐயஉடல் என்னும் இம்மூன்று உடலினருக்கும் பொதுவாகத் தூய உடலினர் என்பது பெயர், இம்மூன்றின் கலப்பினை உடைய உடலினருக்கு கலப்பு உடலினர் என்பதும் பெயர். இக்கலப்பு உடலினர்க்கு, மேற்கூறிய பண்புகள் எல்லாம் மாறுபட்டு இருக்கும்.

அறைந்தமுத் தேகமும் அவிர்சுத்த தேகமே

வேறு.

சேத்துமம் என்னும் ஐய உடலினன் பண்புகள்

அறுசீர் விருத்தம்.

''தெரிவாய் கபத்தின் குணக்காரன் செய்தி யதனை நெறியாக;
அரிய சரிதை விசுவாசம் அடைந்தோ னன்றிக் கரியகுணன்
விரதன் வெகுசா கசபுத்தி வித்தா ரத்தன் வெகுசீலன்
மருவு களபந் தனிலிச்சை வளஞ்சே ரிதயன் பெலவானே.''

(கருத்துரை) இச்செய்யுள்முதல் நான்கு செய்யுளும் ஐய உடம்பினன் இயற்கைப் பண்புகளைக் கூறுகின்றன.

(பதவுரை) கபத்தின் குணக்காரன்—ஐயவுடம்பினனுடைய, செய்தியதனை—இயற்கைப் பண்புகளைச் சொல்ல, நெறியாகத் தெரிவாய்—முறை யாகத் தெரிந்துகொள்வாய், அரியசரிதை—அருமையான பெரியோர்களின் கதைகளில், விசுவாசம் அடைந்தோன்—நம்பிக்கை உள்ளவன், கரியகுணவிரதன்—கரவு நெஞ்சன், வெகுசாகசபுததி—தந்திர எண்ணம் உள்ளவன், வித்தாரத்தன்—அவற்றுள் மிகுந்த தேர்ச்சியுள்ளவன், வெகு சீலன்—மிக்க சுத்தன், மருவு களபந்தன்னில் இச்சை வளஞ்சேர் இதயன்—மணப்பூச்சுக்களில்மிக்க இச்சையுள்ள நெஞ்சுடையன், பெலவான்—மிக்க உடல் வன்மையுள்ளவன்.

''பெலஞ்சேர்ந் திருக்குந் தனுவுடையான் பெருமை யுடையான்
வெகு செல்வன்
குலஞ்சேர்ந் திருக்கு மிந்திரியக் கொடுமை பெருக்கங்
குறைவுள்ளான்
கலஞ்சேர் மெய்ய னினிமையுடன் கைப்புப் பிரியன்
வெயிலாகான்
பலஞ்சேர் மேனி நாற்றமுளான் பார்க்கும் வேர்வை
யுடையானே.''

(பதவுரை) பெலஞ்சேர்ந்திருக்குந்தனுவுடையான்—வன்மையுள்ள உடம்பினன், பெருமையுடையான்—சிறப்புடையவன், வெகுசெல்வன்—பொருள் உள்ளவன், குலஞ்சேர்ந்திருக்கும் இந்திரியக் கொடுமை—பரம்பரையாகவே இந்திரியக் குறைவுள்ளவன், பெருக்கம் குறைவு உள்ளான் —பிள்ளைப் பேற்றில் குறைந்தவன், கலம் சேர்மெய்யன்—பூண்பூண்ட உடம்பினன், இனிமையுடன் கைப்புப்பிரியன்—இனிப்புப்பொருள் களிலும் கைப்புப் பொருள்களிலும் விருப்பம் உடையவன், வெயில் ஆகான்—வெயிலைத்தாங்கமுடியாதவன் பலஞ்சேர் வன்மையுள்ள மேனி—உடம்பில் நாற்றம் உள்ளான்—ஒருவகையான நாற்றம் உள்ளவன். பார்க்கும் வேர்வை உடையான்—கண்களுக்குத் தோன்றும்படியான வேர்வையுடையவன்.

'உடைய சலபா னஞ்செய்வான் உரக்கு மிரும லுண்டாவான்
விடையும் கபவர்த் தன்வாதம் மேவும் பித்தஞ் சிறிதுள்ளான்
குடைபோ னெற்றி யுயர்ந்திருப்பான் குஞ்சி நீல நிறமாவான்
இடிசேர் வாகு நீண்டிருப்பான் இரண்டு வார்த்தை பேசாதான்.'

(பதவுரை) உடைய சலபானம் செய்வான்—இருக்கும் நீரை உண்பான், உரக்கு மிருமலுண்டாவான்—உரத்த இருமல் உடையவன், விடையும்—ஆனேற்றைப் போன்ற வன்மையுள்ள, கபவர்த் தன்—கபத்தை அதிகமாக வுடையவன், மேவும்வாதம் பித்தம் சிறிதுள்ளான்—பொருந்திய வாதமும் பித்தமும் குறைந் திருப்பவன், குடைபோல் நெற்றியுயர்ந்திருப்பான்—குடைபோல் நெற்றியுயர்ந்திருப்பவன், குஞ்சி நீலநிறம் ஆவான்—தலை மயிர் நீல நிறமுள்ளவன், இடிசேர்வாகு நீண்டிருப்பான்—இடிபோன்ற வன்மையுடைய தோள் நீண்டிருப்பான், இரண்டு வார்த்தை பேசாதான் —இரண்டு பேச்சுப் பேசாதவன். (சொன்ன சொல்லிலிருந்துமாறுதவன்).

''பேச வரிய சங்கீதம் கேட்கும் பிரீதி யுளனுவான்
ஆசி லாத வுணவுதினம் அதிக முண்பான் சுகதேகன்
மாசி லாத கமலமென வடிவம் படைக்குந் தனரொக்கன்
நேச மான கபக்குணத்தான் குணங்க ளிவையே நிகழ்த்தினனே

(பதவுரை) பேச அரிய—எடுத்துச் சொல்வதற்கருமையான, சங்கீதம் கேட்கும்—சங்கீதத்தைக் கேட்பதற்கு, பிரீதி யுளனாவான்—விருப்பம் உள்ளவனாவான், ஆசு இல்லாத உணவு

—குற்றமில்லாத சுத்த உணவை, தினமும் அதிகம் உண்பான்—நாள்தோறும் மிகுதியாக உண்பான், சுகதேகன்—நோயற்ற உடம்பையுடையவன், மாசு இல்லாத—குற்றமற்ற, கமலம் என—தாமரை மலரை போன்ற வடிவம் படைக்கும் தனரொக்கன்—அழகையும் மிக்க செல்வத்தையும் உடையவன், நேசமான—யாவரிடத்தும் நட்பைப் பாராட்டுகின்ற, கபக்குணத்தான்—ஐயத்தை இயற்கையாய்ப் பெற்ற உடம்பினனுடைய, குணங்கள்—பண்புகள், இவையே—இவைகளே என்பவற்றை, நிகழ்த்தினன்—சொன்னேன்.

(பொழிப்புரை) ஐயவுடம்பின் இயற்கைப்பண்புடையவன். பெரியோர்கள் கதையைக்கேட்டல், வஞ்சம், சாகசம், சுத்தம் இவற்றைப் பெற்றிருத்தல், மணப்பூச்சில் விருப்பம், வன்மையான உடல், பெருமை, மிக்க செல்வம், இந்திரியக் குறைவு, பிள்ளைப் பேற்றுக் குறைவு, பூணிலின்பம், இனிப்புக்கைப்புகளில் விருப்பம், வெயில் பொறாமை, உடல் நாற்றம், வேர்வை, கண்ட நீர் உண்ணல், இருமல், கபம் அதிகமாகவும், வாதமும் பித்தமும் குறைவாகவுமிருத்தல், குடைபோன்ற நெற்றி, நீல மயிர், வன்மையுள்ளதோள், இரண்டு பேச்சுப் பேசாமை, சங்கீதம் கேட்பதில் விருப்பம், சுத்த உணவு மிகுதியாக உண்ணல், சுகதேகம், தாமரை மலர் போன்ற அழகு என்னும் இவற்றை இயற்கையாய் உடையவனாவான்.

வளிமிகு குணம்

1. உடல் இளைத்துக் கறுத்தல்
2. சூட்டுப்பொருள்களில் விருப்பம்
3. உடல் நடுக்கல்
4. வயிறு உப்பல்
5. மலக்கட்டு
6. வன்மை குறைதல்
7. தூக்கம் கெடல்
8. ஐம்பொறிகளின் வன்மை கெடல்
9. வாய் பிதற்றல்
10. தலை சுழற்றல்
11. ஊக்கம் இன்மை

வளி குறை குணம்.

1. உடல்நேர்தல்
2. தாழ்ந்த குரல்
3. தொழில் குன்றல்
4. அறிவு மங்கல்
5. மூர்ச்சை உண்டாதல்
6. ஐய வளர்ச்சியில் காணும் பிணிகள் உண்டாதல்

அழல் மிகு குணம்.

1. கண், மலம், சிறுநீர், தோல் இவைகள் மஞ்சள் நிறம் அடைதல்.
2. பசி, நீர்வேட்கை மிகுதிப்படல்
3. உடல் முற்றும் எரிச்சல் உண்டாதல்
4. குறைந்த தூக்கம்.

அழல் குறை குணம்.

1. மந்தாக்கினி
2. குளிர்ச்சி
3. நிறக்குறைவு
4. இயற்கை ஐய வளர்ச்சிக்குக் கேடு உண்டாதல்.

ஐயம் மிகு குணம்..

1. அக்கினிமந்தப்படல்
2. வாய் நீர் ஊரல்
3. ஊக்கம் குறைதல்
4. உடல் கனமாகத் தோன்றுவதுடன் வெண்ணிறத்தையும் குளிர்ச்சியையும் அடைதல்.
5. உடல் முற்றும் உள்ள கட்டுகள் தளரல்
6. இரைப்பு, உப்புசம், இருமல், மிக்க தூக்கம் உண்டாதல்.

ஐயம் குறை குணம்.

1. தலை சுழற்றல்
2. கீல்களில் பசை முற்றும் நீங்கி அவை தளர்ச்சி அடைதல், இதனால், கீல்கள் நன்றாக வெளியில் தோன்றுதல்.
3. ஐயம் வாழ் இடங்களில் ஐயம் குறைந்தும் நுரையீரலைப் பற்றிய ஐயம் கரைந்தும், நுரையீரல் இல்லாதது போலத் தோன்றியும், மயிர்க் கால்களினின்றும் வியர்வை பெருகியும் காட்டல்.
4. தமரகத்தில் படபடத்த ஒலி.

(ஏ) உடற்கட்டுகள் (ஏழு தாதுக்கள்)

ஏழு உடற்கட்டுகளும் தத்தம் இயற்கைப் பண்போடு இருந்தாலன்றி அவைகள் செய்யும் தொழில் நன்கு நடைபெறா. ஆகவே, அவைகளின் இயற்கைப் பண்புகளை முதலில் அறிதல் வேண்டும்.

உடற்கட்டுகளின் இயற்கைப் பண்பு.

1. சாரம் : உடலையும் மனத்தையும் ஊக்கமுறச் செய்வது

2. செந்நீர்: அறிவு, வன்மை, ஒளி, செருக்கு, ஒலி இவைகளை நிலைக்கச் செய்வது.

3. ஊன் : உடலின் உருவத்தை அதன் தொழிற்கிணங்க அமைத்தலும் என்பை வளர்த்தலும் செய்வது.

4. கொழுப்பு : ஒவ்வோர் உறுப்பும் தத்தம் செயலை இயற்றும் பொழுது, கடினமின்றி இயங்க அவற்றிற்கு நெய்ப்புப் பசை ஊட்டி உதவி புரிவது.

5. எலும்பு: உடலை ஒழுங்குபட நிறுத்தி வைத்தல் மென்மையான உறுப்புகளைப் பாதுகாத்தல், உடல் அசைவிற்கு அடிப்படையாயிருத்தல் ஆகிய செயல்களைச் செய்வது.

6. மூளை: என்புக்குள் நிறைந்த அவைகளுக்கு வன்மையும் மென்மையும் தருவது.

7. வெண்ணீர்: தன்னை யொத்து உருவப் பெருக்கிற்கு இடமாகிய கருத்தோற்றத்திற்கு முதலாய் நிற்பது.

இவ்வேழு உடற்கட்டுகளும் தத்தம் அளவினின்று மிகுந்தாலும் குறைந்தாலும், அதனதன் இயற்கை தொழில். வேற்றுமைப் படும். அவ்வேற்றுமையினால் உடல் பிணிபடும். ஆகவே அவ்வேற்றுமையில் காணும் தோற்றங்கள் ஈண்டுக்கூறப்படும்.

1. சாரம்—மிகுகுணம் : ஐய வளர்ச்சியால், உடலில் தோன்றும் கெட்ட பண்புகளை யெல்லாம் தோற்றுவிக்கும். அவை, பசித்தீக்குறைதல் முதலானவை.

சாரம்—குறை குணம் : தோல் சுரசுரப் படைதல், மெய் வருத்தம், இளைப்பு, வாட்டம். பேரொலி கேட்கப் பொறுமை ஆகிய இவை யுண்டாதல்.

2. செந்நீர்—மிகு குணம் : புருவம், . உச்சி, கழுத்து, மார்பு, கொப்பூழ், உதடு அண்டம், முழங்கால், கணுக்கால், இடுப்பு, காற்பெருவிரல், சுட்டுவிரல், தோலின் உட்புறம், வெளிப்புறம் கொப்புளங்கள் உண்டாதல், இடப்பாட்டீரல் வீக்கம், கட்டிகள், சூலை, பசியின்மை (அக்கினி மந்தம்) குருதிவளி (இரத்த வாதம்), குருதித்தீ (இரத்தபித்தம்) குருதிச் சிறு நீர் (இரத்த மூத்திரம்), மிகச் சிவந்த கண், சிவந்த செந்நீர்த்தடிப்பு, சிவந்த நிறத்தோல், பெருநோய், காமாலை, பயித்தியம் இவை உண்டாகும்.

செந்நீர்—குறை குணம் : புளிப்பும் குளிர்ச்சியுமுள்ள பொருள்களில் விருப்பு, நரம்புத் தளர்ச்சி, வறட்சி, உடலில் நிறங்குறைதல் ஆகிய இவை தோன்றும்.

3. ஊன்—மிகு குணம் : கண்டமாலை, கிரந்தி, இவை உண்டாதலும், கன்னம், வயிறு, தொடை, ஆண்குறி இவ்விடங் களில் கண்டு கண்டாகக் கட்டிக்கொள்ளுதலோடு கழுத்து முதலியவிடங்களில் ஊன் அதிகரித்தலுமுண்டாகும்.

ஊன்—குறை குணம் : ஐம்பொறிகட்குச் சோர்வு, கீல் களில் நோய், தாடையும் பிட்டமும், ஆண்குறியும் தொடையும் சுருங்கல் ஆகிய இவை உண்டாகும்.

4. கொழுப்பு—மிகு குணம் : ஊன் மிகுதியால் நேரிடும் பிணிகளும் களைப்பும், அற்ப உழைப்பிலும் பெருமூச்சும், பிட்டம், குறிகள், மார்பு, வயிறு, தொடை இவைகளில் தொங்கும் ஊனும் பெருகும்.

கொழுப்பு—குன்ற குணம்: இடுப்பில் குறைன்மையின்றி வலியுறுத் தலும் இடப்பாட்டீரல் வளர்ச்சியும் உடலிளைத்தலுமுண்டாகும்.

5. என்பு—மிகு குணம் : எலும்புகளும் பற்களும் மிகுதிப்படும்.

என்பு—குறைகுணம், என்பு அந்துகளில் நோவும் பற்கன் கயுல லும், நகங்களும் மயிர்களும் வெடித்தலும் உதிர்தலும் பெறும்.

6. மூளை—மிகு குணம் : உடல் பாரித்தல், கண், கனத்தல் கைகால் களிலுள்ள விரற் கணுக்களின் அடி பருத்தல், சிறுநீர் குறைந்துபோதல், அரிதில் தீரும் புண் இவை உண்டாகும்.

மூளை—குறை குணம் : என்புகளில் தொளை விழுதலும் திகைத்தலும், கண்களில் இருள் கம்மலும் உண்டாகும்.

7. வெண்ணிர்—மிகு குணம் : பெண்களிடத்தில் காதல் மிகுதலும் கல்லடைப்பு நோய் உண்டாதலுமாம்.

வெண்ணிர்—குறை குணம் : புணர்ச்சியில் வெண்ணீரும் சுரோணிதமும் பொறுததுப் பொறுத்துத் துளித்துளியாய் விழு தல் அல்லது செந்நீர் வெளிப்படல், விதையில் குத்தலுடன் வலி, குறியில் அழற்சி மிகுதிப்பட்டு அது கறுத்தல் ஆகிய இவை பிறக்கும்.

(ஐ) மலம்

மலமென்பது உடலினின்று கழிகின்ற பொருள், சிறுநீரும், வியர்வையும் இதிலடங்கும்.

மலத்தின் இயற்கைப் பண்பு : மலத்திற்கு உடலை நிலை நிறுத்தலும், நீருக்கு உடலின் கசிவை வெளிப்படுத்தலும், வியர் வைக்குத் தோலின் கசிவை வெளிப்படுத்தலும், மயிர்களை நிலை பெறச் செய்தலுமாம்.

மலம்—மிகுகுணம் : வயிறுப்பல், இரைதல், கனத்தல் இவை உண்டாகும்.

மலம்—குறை குணம் : வயிற்றில் காற்று நிரம்பி இரைச்சலிட்டுக் கொண்டு குடலைச் சுற்றிப்பரவி முறுக்கிப் பிடிப்பதுமன்றி, சிலவேளைகளில் தமரகத்திலும் பக்கங்களிலும் நோ்வையுண்டாக்கி மேல் நோக்கி வருத்தத்தை விளைவிக்கும்.

சிறுநீர்—மிகு குணம் : சிறுநீர் நாளத்தில் ஊசியாற் குத்துவது போன்ற துன்பத்தையும், சிறுநீரைக் கழித்த பின்பு மேலும் நீரைக் கழிக்க வேண்டுமென்கிற எண்ணத்தையும் ஏற்படுத்தும்.

சிறு நீர்—குறை குணம் : மிக்க முயற்சியுடன் நீர் துளித் துளியாகவும், நிறமாறியும், சிலவேளைகளில் இரத்த நிறமாகவும் வெளிப்படும்.

வியர்வை—மிகு குணம் : வியர்வை மிகுதி, தீ நாற்றம், தினவு இவை உண்டாகும்.

வியர்வை—குறை குணம் : மயிர் உதிர்த்தல், உதிராத மயிர் விறைத்து நிற்றல், தோல் வெடித்தல் ஆகிய இவற்றை உண்டாக்கும்.

இம்மலங்களைத் தவிர, கண், மூக்கு, காது இவ்விடங்களிலும் மலம் கசியும். இவ்வுறுப்புகளில் மலம் மிகுதிப்படுமாயின், அவ்வவ்வுறுப்புக் கனத்தலையும், குறைவுபடின் இயற்கைக்கு மாறான பண்பையும் பெறும். அக் குறைவு உணரக்கூடாத நிலைமையிலிருக்கும். ஆயினும், அந்தந்த மலத்திற்கு அடிப்படையான உறுப்புகள சுருங்குவதாலும் நொய்மையடைவதாலும்அவைகளில் வலி தோன்றலாலும் மலக்குறைவை நாம் ஒருவாறு உணரக்கூடும்.

மலங்கள் மிகினும் குறையினும் கெடுதியே விளையுமென்றாலும், உடலில் எப்போதும் சிறிதளவு மலமிருத்தல் அதன் இயற்கைப் பண்பாதலால் மல மிகுதியினாலுண்டாகும் கெடுதியை விட மலக்குறைவினால் மிக்க கெடுதி நேரிடும்.

(ஒ) உடல்வன்மை.

உடல் வன்மை முத்திறப்படும் : அவை: 1. இயற்கை வன்மை 2. கால வன்மை, 3. செயற்கை வன்மை என்பன.

இயற்கை வன்மை உடலின் இயல் : இது சத்துவம் முதலிய தண்புகளினின்று இயல்பாகவே உண்டாவதாம்.

பகாலத்வ ன்மை உடலின் இயல் : இஃது ஆண்டாலும் (வயதாலும் ..இளவேனில் முதலிய பெரும் பொழுதாலும் உண்டாவதாம்

செயற்கை வன்மை உடலின் இயல்; இது குணச்சேர்க்கையின் இயற்கையால் உண்டான உடலை, அந்தந்தக் குணத்தன்மைக்கு உரிய உணவு, செயல்களாலும், உடற்கட்டுகளின் வன்மை கெடாவண்ணம் நிலைநிறுத்தக் கூடிய மருந்துகளாலும் காத்துக்கொள்வதால் உண்டாவதாம்.

சத்துவம் முதலிய முப்பண்புகளை உடைய உடலினர் இயல்.

1. சத்துவப் பண்புடைய உடலினர் இயல்: அகத்தூய்மை, தெய்வக் கொள்கை, அறஞ்செய விருப்பம், அறிவுடமை, ஞானம், அருள், தவம், பொறை, வாய்மை, மேன்மை, பேசாமை (மௌனம்), ஐம்பொறி அடக்கம் என்னும் இவை சத்துவப் பண்புடைய உடலினர் இயல்.

2. இரசோகுண உடலினர் இயல்: மிகுபேச்சு, மானம், சீற்றம், வீண்பெருமை, பகைமை, மனவூக்கம், மெய்யுணர்வு, வீரம், தவம், அறம், கொடை, கல்வி, கேள்வி என்னும் இவை இரசோகுண உடலினர் இயல்.

2. தமோகுண உடலினர் இயல்: அச்சம், அறிவின்மை, நெடுந்துயில், பேருண்டி, சோம்பல், நீதிவழு, ஒழுக்க வழு, வஞ்சகம், மறதி, பொய், சீற்றம், காமம், கொலை என்னும் இவை தமோகுண உடலினர் இயல்.

*(ஔ) பதினான்கு வேகங்கல்.

''பதினன்கு வேகப் பேர்கள்
பகர்ந்திட அவற்றைக் கேளாய்

விதித்திடும் வாதந் தும்மல்
மேவுநீர் மலங்கொட் டாவி

கதித்திடு பசிநீர் வேட்கை
காசமோ டிளைப்பு நித்ரை

மதித்திடு வாந்தி கண்ணீர்
வளர்சுக்லஞ் சுவாச மாமே.''

(பதவுரை) பதினான்கு வேகப் பேர்கள்—(உடம்பில் இயற்கையாய் உண்டாகும்) பதினான்கு வேகங்களின் பெயர்களை, பகர்ந்திட—(எடுத்துச்) சொல்ல, அவற்றைக் கேளாய்—மருத்துவ மாணவனே நீ) அவைகளை (நன்றாய்க்) கேட்டுக்கொள்வாயாக, விதித்திடும்—(முன்னோர்கள் ஆராய்ந்துணர்ந்து) ஏற்படுத்தின, வாதம்—(அபானவாயு என்னும்) கீழ்வாய் வளியும், தும்மல்—தும்முதலும், மேவும்—(காலந்தவறாது இயற்கையாய்) இறங்கும், நீர்—சிறு நீரும், மலம்—(இயற்கையாய்) இறங்கும் மலமும்,

(பவ்வீ), கொட்டாவி—கொட்டாவியும், கதித்திடு—மிகுதியாகி ஏற்படுகின்ற, பசி—பசித்தீயும், நீர்வேட்கை—நீரை விரும்புதலும் (தாகமும்), காசம்—இருமலும், இளைப்பு—ஆயாசமும். நித்திரை— தூக்கமும், மதித்திடு—(அந்நோய்வாய்ப்பட்டிராமல் கொடிதென்று) எண்ணப்படுகின்ற, வாந்தி—வாந்தியெடுத்தலும், கண்நீர்— கண்களிலிருந்து வெளிப்படும் நீரும், வளர்— (உணவுக்குத் தக்கவாறு நாள்தோறும்) பெருகுகின்ற, சுக்கிலம்— விந்துவும், சுவாசம்—மூச்சு அல்லது உயிர்ப்பும், ஆம்—என்னும் இவைகளாம்.

(பொழிப்புரை) பதினான்கு வேகங்களாவன : 1. அபான வாயு, 2. தும்மல், 3. சிறுநீர், 4. மலம், 5. கொட்டாவி 6. பசி, 7. நீர்வேட்கை அல்லது தாகம், 8. இருமல் 9, இளைப்பு, 10. தூக்கம், 11. வாந்தி, 12. கண்நீர், 13. சுக்கிலம், 14. மூச்சு அல்லது உயிர்ப்பு என்பனவாம்.

இப்பதினான்கில், மலம், (அபானவாயு என்னும்) கீழ்வாய்வளி, தும்மல், சிறுநீர் என்னும் இவை நாள் தறாவமல் வெளிப்படுவன வென்பதும், இவற்றிற்கு அளவு இன்னதென்பதும் கூறப்பட்டிருக்கின்றன.

இதனை

''முக்கால் மலமது பொல்லாத வாயுவு மூன்றுதும்மல்
சிக்காமலாறு சலதாரை விட்டுச் சிறுநடையும்
மைக்காடு கொண்ட விழியாய்! மனிதர்க்கு வாய்ப்பதெனில்
எக்கால மும்பிணி வாராது; காயம் இரும்பொக்குமே.''

என்னும் கட்டளைக் கலித்துறையாலறிக.

இவற்றுள், மலமும், சிறுநீரும் முறையே ஒரு நாளைக்கு மூன்று முறையும் ஆறுமுறையும் கழிக்க வேண்டுமென்று கூறப்படுவதும் உண்டு.

இதனை,

''மும்மலம் அறுநீர்''

என்பதாலறியலாகும்.

1. வாதம்.

இஃது அபானவாயு என்னும் கீழ்வாய்வளி; இதுவே கீழ்க்கால் என்பதாம்.

அறுசீர் விருத்தம்.

''வாதத்தைத் தடை செய் தாலோ
மார்பினோய் குன்ம வாயு
பேதித்த வுதர வாதம்
பெருகிடு முடம்பு நோதல்
வாதைகள் திரட்டும்வல்லை
மலசலங் கட்டுப் பட்டுப்
பேதையே![2] பசித்தீ மந்தம்
பெருகியே மலித லுண்டே.''

(கருத்துரை) இச் செய்யுள் கீழ்க்காலைத் தடுத்தலால் உண்டாகும் நோய்களைக் கூறுகின்றது.

(பதவுரை) வாதத்தை—(இயற்கையாக வெளிப்படுகின்ற) கீழ்க்காற்றை, தடை செய்தால்—(பல காரணங்களால்) வெளிவிடாமல் முழுதுந் தடை செய்வதாலும் (தடுத்துத் தடுத்து) கொஞ்சங் கொஞ்சமாக (சிறிது சிறிதாக) வெளிவிடுவதாலும், மார்பில்நோய்—மார்பில் நோதல், குன்மவாயு— வாதகுன்மம், பேதித்த—(நோயின் வன்மையால்) அறிவை மாறுபடுத்தின, உதரவாதம்—குடல்வாயு, உடம்பு நோதல்—உடல் முழுமையும் வலித்தல் (என்னும் நோய்கள்), பெருகிடும்—மிகுதியாகும், வாதைகள்—மிக்க துன்பங்களை, திரட்டும்—சேர்ப்பிக்கின்ற, வல்லை—வல்லை வாதமும், மலம் சலம் கட்டுப்பட்டு—மலமும் சிறுநீரும் கட்டி (அதனால்) பசித்தீமந்தம் பெருகி—(வயிற்றில் இயற்கையாய் நான்கு இடங்களில் உள்ள தீக்களுள் ஒன்றாகிய) பசித்தீயானது (சரிவரத் தொழில் செய்யாமல்) மிக்க மந்த முண்டாய், மலிதல் உண்டு—அம்மந்தம் மிகுதலுமுண்டாகும்.

(பொழிப்புரை) கீழ்க்காற்றை முழுதுந்தடை செய்தாலும், சிறிது சிறிதாய்த் தடை செய்தாலும், மார்புநோய், வாயு குன்மம், குடல் வாதம், உடம்பு முழுமையுங் குத்தல், குடைச்சல், வல்லைவாதம், மலசலத்தடை, அவற்றால் பசித்தீமந்தம் என்னும் இவை மிகுதியும் உண்டாகும்.

நான்கு இடத்தீயாவன : விண்ணிலுள்ள தீ, மண்ணில் உள்ள தீ, சுரங்கத்திலுள்ள தீ, வயிற்றிலுள்ள தீ என்பன. இவற்றுள் வயிற்றிலுள்ள தீயே பசித்தீயாகும்.

---

[1] தட என்பது நிரோதம் எனவும் பாடமுண்டு. தடை, தென் மொழி, நிரோதலமை

[2] பேதையே என்பது ஆடூஉக்கும், மகடூஉக்கும் பொதுவாய் நின்ற முன்னிலை அசைச்சொல்லேயாம்

வாதகுன்மத் தன்மைகளாவன : ஈரல், மார்பு, இவற்றிலுள்ள ஈரம் வற்றுதல், வயிற்றில் எரிச்சல் உண்டாதல், பக்கங்களில் உளைதல், தலை கனத்தல், நோதல், தலை மயக்கங்கொண்டு புளிப்பாய் வாந்தியாதல், குடலில் வலியுண்டாதல் ஆகிய இவை உண்டாகும்.

இதை,

''ஈரலும் நெஞ்சும் வற்றி
எரிச்சலா முளையும் பக்கம்
கார்செறி கபாலந் தானும்
கனத்துடன் புரட்டிச் சத்தி
நேர்படக் கிறுகி றுத்து
நின்றுதான் குடல்வ லிக்கில்
வார்படு மானே! கேளாய்
வாதகுன் மந்தா னுமே.''

என்னும் செய்யுளாலறிக.

குடல் **வாதத்தன்மைகளாவன :** ஒரு பக்க விதை உள்ளுககு இழுத்துக் கொள்ளல், அண்டத்தில் வளி சேர்ந்து துருத்தி போல உப்புதல், பிறகு அவ்வாயு வயிற்றிலேறுவதால், விதை காணப்படல் இதனால் மிக்க வருத்தம் உண்டாதல் என்பவை.

இதை:

''ஒரு பக்கம் விதையு முள்ளே
யுள்ளதாய் வாயு வூதி
வருமது துருத்தி போலும்
தானம துப்பிக் கொண்டு
வருமது வயிற்றி லேறி
வற்றியே விதையுங் காணும்
மறுவறு முனிவர் சொன்னார்
வளர்குடல் வாத மென்றே.''

எனவும்,

''உடலிடையோடி மீண்டங்
குளைந்துகை கால யர்ந்து
குடலிடைக் கூப்பிட் டோடிக்
குமிறிடுங் குடலிற் றங்கும்
கடலிடைத் தரங்க மென்னக்
கலங்கியே நலங்கி நிற்கும்
நடலையாங் குடல்வா தத்தின்
குணமென நவில லாமே.''

எனவும் புகன்றுள்ளவற்றாலறிக.

வல்லை வாதத் தன்மைகளாவன

''வாளது போல்கு றுக்கே
 வளர்ந்துதான் கிடக்கும் போது
நீளமா யுழக்கோல் போலு
 நேரதாய்க் கிடக்குங் கண் டீர்;
மாளவே யன்னந் தன்னை
 வாங்காது செரித்தி டாது;
நாளறு கேளாய் வல்லை
 நவின்றிடும் வாதந் தானே.''

2. தும்மல்.

''தும்மலைத் தடைதான் செய்தால்
 தொகுத்திடுந் தலைநோ யுண்டாம்;
இம்மையிந் திரிய மெல்லாம்
 இயல்புடன் தெறித்த லாகும்
செம்மையில் முகம்வ லித்தல்
 தீரவே யரைவா தங்கள்
வெம்மையாம் வாயு கொண்டால்
 விளைந்திடுங் குணங்க ளாமே.''

(கருத்துரை) இச் செய்யுள் தும்மலைத் தடுத்தலால் உண்டாகும் நோய்களைக் கூறுகின்றது.

(பதவுரை) தும்மலைக் தடைசெய்தால் (மூக்கிலிருந்து தும்முந் தொழிலைச் செய்யுந் கிருகரனது (வேலையான) தும்மலைத் தடுத்தால், தொகுத்திடும் தலை நோய் உண்டாம்—தலை முழுமையும் குத்தலும் வலித்தலு முண்டாகும்; இம்மை—இப்பிறவியில், இந்திரியம் எல்லாம்—கன்மேந்திரியம் ஞானேந்திரியம் என்னும் பத்தும், இயல்புடன்—தாம் கெடாமலிருந்து, தெறித்தல் ஆகும்—தெறித்து விழுந்து விடுவது போன்ற குறிகளாகிய துன்பங்களைக் காட்டும்; செம்மையில் முகம்—(முன்பிருந்த) செம்மையை இழந்த முகமானது, வலித்தல்—ஒரு பக்கம் இழுத்துக் கொள்ளலும், தீர—மிகுதியாக அரைவாதங்கள்—இடுப்புவளி நோய்களும், ஆம் வாயு—இருவகை ஊறுகளில் எந்த ஊற்றையும் அடையாமலிருந்த வாயுவானது, வெம்மை கொண்டால்—வெம்மையூற்றை அடைந்தால், விளைந்திடும் குணங்கள் ஆம்—உண்டாகுந் தன்மைகளாகும்.

(பொழிப்புரை) மூக்கிலிருக்கும் கிருகரனான வாயுவின் தொழிலாகிய தும்மலைத் தடுத்தால், அவ்வாயுவெம்மையூற்றை அடைந்து இலேசாகி, மேலுக்குக் கிளம்பி, தலை முழுமையும் நோதல், இயல்பாயுள்ள இருவகையான பத்து இந்திரியங்களும் தெறித்து விழுந்து விடுவதுபோலத் தோன்றல், முகம் இழுத்தல், இடுப்பு வாயு ஆகிய இந்நோய்கள் உண்டாகும்.

'இந்திரியம் எல்லாம்' என்றதால், கன்மேந்திரியம் ஞானேந்திரியம் என்னும் பத்தும் கொள்ளப்பெற்றன.

இடுப்புவளி அல்லது அரைமேல் வளியின் தன்மைகளாவன: வயிற்றுப் பொருமல், விந்து நீர்த்தல், இடுப்பு, கைகள், கால்கள், பூட்டுகள் ஆகிய இவை கடுத்தல், சீதத்துடன் மலம் (பவ்வீ) கொஞ்சங் கொஞ்சமாய்க் கழிதல், சிறுநீர்க் கடுப்புடன் கொஞ்சங் கொஞ்சமாய் இறங்கல் முதலியவைகளாம். இதை,

''மாதுவ ளிவந்த போது
  வயிறது பொருமிக் கொள்ளும்
தாதவிழ்ந் திடுப்புக் கைகால்
  சந்துகள் கடுப்புத் தோன்றும்
சீதொடு மலமு நீரும்
  சிறுத்துடன் கடுத்து வீழும்;
காதல! அரைமேல் வந்த
  காலினற் றெழில தாமே.''

என்னுஞ் செய்யுளாலறிக. (காதலன்—மகன்.)

அரைவாதம் என்பது, முகவாய்க் கட்டையை அல்லது வாயை ஒரு பக்கமாய் இழுக்கும் வளிநோய் எனச் சிலர் சொல்லுவர். அது 'முகம் வலித்தல்' என்பதில் அடங்கி இருப்பதால், இது பொருந்தாது.

3. சிறுநீர்.

''நீரினைத் தடுத்தல் செய்யின்
  நீர்க்கட்டுத் துவாரம் புண்ணும்;
பாறிடுஞ் சந்து சந்தில்
  பண்புறு நோவ தாகும்:
நேரிலங் கயருங் காம்யம்
  நிச்சய நோதல் செய்யும்
பாரினி லபான வாயு
  பண்புறச் சேரு மன்றே.''

(கருத்துரை) இச் செய்யுள் சிறு நீரைத் தடுத்தலால் உண்டாகும் நோய்களைக் கூறுகின்றது.

(பதவுரை) நீரினைத் தடுத்தல் செய்யின்—(இயற்கையான காலத்திலும், காலமல்லாக் காலத்திலும் வெளிப்படுகின்ற) சிறுநீரைத் தடுத்தால், நீர்க்கட்டு—நீரடைப்பும், துவாரம் புண்—நீர் இறங்கும் வழியான தொளை புண்ணுதலும், ஆம்—உண்டாகும்; சந்து சந்தில்—ஒவ்வொரு பூட்டிலும், பாறிடும்—பகின்ற, பண்பு—தன்மையால், உறு—மிக்க நோவாதாகு துன்பம் உண்டாகும்;

நேரில்—(இவை) உண்டானால், அங்கு—அப் பொழுது, காமியம் அயரும்—ஆண்குறி சோர்வடையும்; நிச் சயம்—உண்மையாக, நோதல் செய்யும்—அதில் நோவுமுண் டாகும்; பாரினில்—உலகத்தில், அபானவாயு—கீழ்நோக்கு வளி யானது, பண்புஉற—இயல்பாக, அன்றே சேரும்—அப்பொழுதே வந்து சேரும்.

(பொழிபுரை) சிறுநீரை அடக்கினால், நீர் அடைப்பு, நீர் இறங்கும் புழை புண்ணுதல், கீல்கள் தோறும் நோதல், ஆண்குறி சோர்வுடன் குத்தல், கீழ்வாய் வளி வயிற்றினில் சேர்தல் முதலியவை உண்டாகும்.

'துவாரம் புண்ணும்' என்றது, சீ, குருதி முதலியவை சேர்ந்து இறைச்சியைப் பொய்யாவி அவித்தது போன்ற புண்ணை.

இவையன்றி எவ்வழியில் நீர்க்கட்டு ஏற்பட்டாலும், ஆண் குறியின் துவாரம் நெருப்புப் பட்டாற்போல் எரியும் என்பதுஞ் சொல்லப்பட்டிருக்கிறது.

இதை,

''நீரினை யருக்க லென்னும்
நீர்க்கட்டின் குணத்தைக் கேட்டி:
நீதமில் லாமற் கோச
நீர்ப்புழை நெருப்புப் போலாம்.''

எனத் தேரர் கரிசலில் புகன்றுள்ளதாலறிக.

4. மலம் (பவ்வீ)

''மலமதை யடக்கி னாலே
மலந்தனை வாயு தள்ளும்
சலதோட முழங்கா லின்கீழ்த்
தன்மையாய் நோவுண் டாகும்
தலைவலி மிகவுண்டாகும்
சத்தமா மபான வாயு
பெலமது குறையும் வந்து
பெருத்திடும் வியாதி தானே.''

(கருத்துரை) இச்செய்யுள் மலத்தை அடக்குவதால் உண் டாகும் நோய்களைக் கூறுகின்றது.

(பதவுரை) மல மதை அடக்கினால்—அன்றாடம் காலத்தில் கழியும் மலத்தையாவது காலமல்லாக் காலத்தில் வெளிப்படும் மலத்தையாவது அவ்வப்போது கழித்துவிடாமல் அடக்கினால், வாயு—அபான வாயு வென்னும்.கீழ்நோக்கு வளியானது, மலந்

தனைத் தள்ளும்—அந்த அடக்கப்பெற்ற மலத்தைத் திடீரென்று கீழே தள்ளி விடும்; சலதோடம்—சலதோடம் உண்டாகும்; முழங்காலின் கீழ்த்தண்மையாய் நோய் உண்டாகும்—வாயு தண்மையூற்றை அடைந்ததினால் முழங்காலின் கீழ்த் தண்மையாய் நோயுண்டாகும்; தலைவலி மிக வுண்டாகும்—(இவ்வபானவாயு வெம்மையூற்றை அடைவதால் அஃது இலேசாகி மேலுக்குக் கிளம்புவதால் அது தலையைத் தாக்க) தலையில் மிக்க வலியுண்டாகும்; அபானவாயு சத்தம் ஆம்—கீழ் நோக்கு வளி வெளிப்படும்போது ஒலியுடன் வெளிப்படும்; பெல மது குறையும்—(அதனால்) உடல் வன்மை குறைந்து விடும்; வியாதி வந்து பெருத்திடும்—(அதனால்) பல நோய்கள் வந்து அளவுக்கு மீறி வருத்தஞ் செய்யும்.

(பொழிப்புரை) மலத்தைக் கீழ்த்தள்ளும் தொழிலையுடைய அபான வாயுவின் செயலை எதிர்த்து மலத்தை அடக்கினால். அவ்வபானம் பெருகி அடக்கப் பெற்ற மலத்தைத் தள்ளும்; அவ்வளியின் தண்மையூற்றால் சலதோடம், முழங்காலின் கீழ்த் தண்மையான நோய் ஆகிய இவை உண்டாகும். அவ்வளியே வெம்மையூற்றால் மேலுக்குக் கிளம்பித் தலையிற் சேர்ந்து, தலை வலித்தல், ஒலியுடன் கீழ்க்கால் பறிதல், உடல்வன்மை குறைதல் ஆகிய இவற்றுடன் வேறு பல நோய்களும் மிகுதியாய்த் தோன்றி வருத்தும்.

வாயுவால் மலச்சிக்கலும் தலைவலியும் உண்டாம் என்பதை

''**வாயுவினாலே மலசலங்கட்டிடும்**''

என்னும் திருமூலர் **வாக்காலும்,**

''**கண்ணிரண்டும் நீர்சொரியும் காணுந்தலைநோயும்**''

என்னும் '**வியாசர்** *80*' என்னும் **நூலாலும்** அறிக.

5. கொட்டாவி

''கொட்டாவி தனைய டக்கின்
குறுகிடு முகம்பல் லிக்கை
திட்பமாம்; அன்னந் தானும்
செரித்திடா; மேகந் தங்கும்;
வெட்டையிற் பிரமை காட்டி
மேவுந்தும் மற்கு ணங்கள்
அட்டியே யில்லா நோவாம்
அகந்தனக் கிடம தாமே.''

(கருத்துரை) இச் செய்யுள் கொட்டாவியைத் தடுத்தா உண்டாகும் நோய்களைக் கூறுகின்றது.

(பதவுரை) கொட்டாவியை அடக்கின்—கொட்டாவி வருங் காலத்தில் அதை அடக்கினுல், முகம் குறுகிடும்—முகம் வாடும்; பல்லிக்கை—இளைப்புக் குறியைக் காட்டும்; திட்டம் ஆம்—அளவுப்படி உண்கிற, அன்னந்தானும்—உணவும், செரித்திடா—செரிக்காது; மேகந்தங்கும்—நீர்நோய் உண்டாகும்; வெட்டையில்—மிக்க வெப்பத்தால் உண்டாகக்கூடிய வெள்ளை என்னும் நோய் வெளிப்பட (அதனுல்) பிரமை காட்டி—(அறிவுக்கு) மயக்கத்தையுண்டாக்கி, தும்மல் குணங்கள் மேவும்—தும்மலை அடக்குவதனால் உண்டாகும் நோய்களெல்லாம் வந்து சேரும்; அகம் தனக்கு—வயிற்றில், அட்டியே இல்லா நோ ஆம்—தங்கு தடையில்லாமல் நோக்காடுண்டாகும், (அன்றி) இடம் ஆம்—(அப்படிப்பட்ட நோய்கள் வருவதற்கு) இடமானுலும் ஆகும்.

(பொழிப்புரை) கொட்டாவியை அடக்கினுல், முகம் வதங்கல், இளைப்புக் குறி காணப்படல், அளவின்படி உண்டாலுஞ் செரியாமை, நீர் நோய், வெள்ளை நோய் என்னும் இவற்ருல் அறிவு மயங்கல், வயிற்றில் நோய் வருதல் முதலியவைகள் உண்டாவன.

தும்மலையடக்குதலாலுண்டாகும் நோய்க்குறிகுணங்களை, இரண்டாவது எண்ணுயுள்ள தும்மல் தடையில் உணரலாம்.

6. பசி, 7. நீர்வேட்க்கை (தாகம்).

''தீவனத் தடைகள் செய்யில்
  தேகமே யங்க பங்கம்
மேவுறுஞ் சூலை பிரமை
  மிக்குட லிளைப்புண் டாகும்;
தாவுற முகமே வாடிச்
  சந்துகள் நோதல் செய்யும்
1 சீவனக்கினியா தாரம்
  தேர்முனி யுரைத்த தாமே''.

(கருத்துரை) இச்செய்யுள் பசியை அடக்கினுலும், நீர்வேட்கையை அடக்கினாலும் உண்டாகும் நோய்களை கூறுகின்றது.

(பதவுரை) தீ—பசியையும், வனம்—நீர்வேட்கையையும், தடைகள் செய்யின்—(காலத்தில் உண்ணாமலும் குடிக்காமலும் அடக்கினுல், தேகமே அங்க பங்கம்—உடலுறுப்புகள் பங்கப்படும்; சூலை—சூலை நோயும், பிரமை—பித்தமயக்கம் நோயும் மேவுறும்—உண்டாவனவாம்; உடல்—உடலில், மிக்க இளைப்பு—அளவில்லாத இளைப்பும் ஆயாசமும், உண்டாகும்—தோன்றும், தாவுற—மிகுதியாக, முகம் வாடி—முகம் இளைத்து, சந்து

1 ஜீவனம்—நீர், அக்கினி—பசித்தீ, சீவனம்' என்பது கடைகுறைந்து 'சீவன்' என நின்றது.

கள்—பூட்டுகளிலெல்லாம், நோதல் செய்யும்—வலியுண்டாகும் (இங்ஙனம் இருப்பதால், இவ்வுடலின் வளர்ச்சிக்கு) ஜீவன்—தண்ணீரும், அக்கின்னி—பசித்தீயும், ஆதாரம்—துணைக்காரணங்களென்று, தேர்—யாவற்றையும் உணர்ந்த, முனி—அகத்தியர், உரைத்தது ஆம்—(இது) சொல்லப்பட்டதாகும்.

ஆகலான், பசியையும் நீர்வேட்கையையும் அடக்கக்கூடாது என்பது குறிப்பு.

(பொழிப்புரை) பசியையும் நீர்வேட்கையையும் அடக்கினுல், உடலும் உடலில் அமைந்திருக்கிற அங்கங்களாகிய கருவிகளும் தத்தந் தொழில்களைச் சரிவரச் செய்யமாட்டா; அதனுல், சூலை பிரமை, உடல் இளைப்பு, முக வாட்டம், சந்துகளிலெல்லாம் நோக்காடு ஆகிய இவை உண்டாவனவாம்.

நீரும், நெருப்பு உந்து பொறிகளுக்குத் துணைக்காரணங்களாறுற்போல், இவ்வுடலுக்கும் அவை துணைக்காரணமாமென்று உணரும்படி அகத்தியர் புகன்ருர்.

பசியினுல் நோய்கள் உண்டாகும் என்பதை,

'நோயினுற் பத்திகேள் நோன்மைகூர் மைந்தனே!
நோனாமை யால்வெகுளி நோனாத பசியால்''

என்று தேரர் கரிசலில் புகன்றுள்ளதாலும் அறிதல் வேண்டும்.

இளைப்புண்டாகும் என்றதற்கு, தக்க உணவு கிடைக்காமையால் பல நாட்களாய்ப் பசியை அடக்கி வருந்துவதால், மூலத்தில் சூடுகொண்டு அச்சூட்டால் ஏழு உடற்கட்டுகளும் வற்றி, அதனுல் வரக்கூடிய க்ஷயம் என்னும் இளைப்பு நோய் உண்டாகும் எனக் கூறலுமாகும்.

இளைப்பு நோய் வரும் வரலாற்றை,

''விளம்பினுல் கயரோகம் வருதல் கோளாய்:
விசையான மூலத்திற் சூடு கொண்டு
தளும்பியே அபானத்தில் முட்டிச் சாடித்
தாதுவெல்லாங் கலகலத் திரத்தம் வற்றி
உளம்பியே நீரேறிச் சுரமுந் தோன்றி
உளைச்சலோடு பீநசநாக் குருசி யற்றுக்
கிளம்பியே யெட்டுவகைக்கயங்க ளாகிக்
கீழ்ாறு கொண்டுவிடு மிளைப்புத் தானே''

என்னுஞ் செய்யுளாலறிக.

8. காசம், 9 இளைப்பு.

(காசம்—இருமல், இளைப்பு—ஆயாசம்.)

''காசத்தை யடக்கி ஞலோ
கதித்திடு மிருமல் மெத்த
வாசமாஞ் சுவாச முண்டாம்;
மருவிடு மிருத்து நோயும்.

பேசிய இளைப்ப டக்கில்
பெருத்திடு மேகங் குன்மம்;
நாசஞ்செய் மூர்ச்சை யோடு
நளிர்தும்மல் குணமு முண்டே.''

(கருத்துரை) இச்செய்யுள் காசம் என்னும் ஈளையிருமலை அடக்கிஞலும், இளைப்பு என்னும் ஆயாசத்தை அடக்கிஞலும் உண்டாகும் நோய்களை கூறுகின்றது.

(பதவுரை). காசத்தை — ஈளையிருமலை, அடக்கிஞல் தடை செய்தால், இருமல்—இருமலானது, மெத்த கதித்திடும்—(அடங்காமல்) மிகவும் அதிகமாய் வருத்தஞ் செய்யும்; வாசம் ஆம்—கெட்ட மணத்தையுடைய, சுவாசம் உண்டாம்—மூச்சு வெளிப்படும்; (இவையன்றி) இருத்து நோயும் மருவிடும்—மார்பின் உட்கருவியாகிய தமரகநோயும் உண்டாகும்; பேசிய—(இயற்கை வேகமென்று பண்டையோர்) சொன்ன, இளைப்பு—ஆயாசத்தை, அடக்கில்—(நீக்கும் வழிகளைக்கொண்டு நீக்கிக் கொள்ளாமல்) அடக்கிஞல், மேகம்—மிக்கவெப்பத்தால் உண்டாகும் நீர் மேகம், பெருத்திடும்—மிகுதியாம்; குன்மம்—குன்ம நோயும் உண்டாகும்; நாசஞ்செய்—(உடனே) கெடுக்கக் கூடிய மூர்ச்சையோடு—(ஐந்தறிவுகளையும் கெடுக்கும்) மூர்ச்சை நோயும், நளிர்—குளிரும், தும்மல் குணமும் உண்டு—தும்மலை யடக்கிஞல் உண்டாகும் நோய்களும் உண்டாவனவாம்.

(பொழிப்புரை) ஈளை இருமலை அடக்கிஞல், மிக்க இருமல் நோய் உண்டாய் வருத்தும்; மூச்சுவிடும்போது அம்மூச்சில் கெட்ட மணம் வீசும்; அன்றி, மார்பின் உட்கருவியாகிய இருதய நோயும் உண்டாகும். இளைப்பு என்னும் ஆயாசத்தை யடக்கிஞல், மிக்க வெப்பத்தால் உண்டாகும் நீர்மேகம் பெருகும்; குன்மநோய் உண்டாகும்; திடிரென்று அறிவைக் கெடுத்துத் தன்னையறியாதபடி செய்கிற மூர்ச்சை நோயும், குளிரும் உண்டாகும்.

'காசம்' என்னுஞ் சொல் களைப்பையும் இருமலையும் உணர்த்தும் சொல்லாம். ஈண்டு அஃது இருமலை உணர்த்திற்று.

இதனை,

''தேகரா சச்சுரதந் தில்லியநேர் நேர்கூட்டிப்
பாகமுறக் காய்ச்சிப் பருகுவார்—காகமுணும்

காசத்தைக் காணூர் காசமுற்று ரிப்பிருங்க
ராசத்தைக் காணூர் நவில்''.

என்னுஞ் செய்யுளில், 'காகமுணுங் காசம்' என்பதிலுள்ள 'காசம்' ஈளையையும், 'அக்காச முற்றார்' என்பதிலுள்ள 'காசம்' என்னும் சொல் இருமலையும் உணர்த்து மென்றறறிக.

'ஹருத்' என்பது தொளை. அத்தொளையுள்ள தாமரை மொட்டுப் போன்ற உறுப்புண்மையால், இடப்பக்க மார்பகம் இருதயத் தாமரை என்று வழங்கப்படுகிறது. இது வடமொழி இது தென்மொழியில் 'தமரகம்' எனப்படுகிறது. (தமர்—தொளை).

இதனை,

''பாடினேன் கந்தகந்தான் வேண்டு மட்டும்
பாங்காக வாங்கிவந்து சொல்லக் கேளாய்:

ஆடியே கலசமதிற் பசுவின் பாலை
அடைவாகத் தானூற்றிப் புதைத்து விட்டுக்

கூடியே சிறுகலசந் தமர்கள் போட்டுக்
குணமாகும் பாற்கலச மேலே வைத்து
நாடியே கந்தகத்தை யிதற்கு ளிட்டு
நாயகனே சில்லிட்டுச் சீலை செய்யே''

என்னுஞ் செய்யுளில் வரும் 'தமர்கள்' என்னுஞ் சொல்லின் பொருளாலறிக.

தும்மலை அடக்குவதால் உண்டாகும் நோய்களை, இரண்டாவது எண்ணுயுள்ள தும்மல் தடைச் செய்யுளின் உரையால் உணர்க.

ஒருவற்கு உண்டாகும் இளைப்பை அடக்கினால், அதனுல் மிக்க வெப்பமுண்டாகும். அவ்வெப்ப மிகுதியால் நீர்மேகம் வருவதுடன் குன்ம நோயும் உண்டாம். இதை,

''உட்டணத்தால் மேகம் உயர்ந்தாலோ நீர்க்கட்டாம்
அட்டகுன்ம நீரிழிவு மவ்வழியே—உட்டணத்தால்
சேருமிவையெல்லாம்.''

என்னும் வெண்பாவாலறிக.

10. நித்திரை—தூக்கம்.

''நித்திரை யடங்கிப் போக
நிகழ்த்திடு கருமங் கேளாய்:
நித்தமுந் தலைக்க னப்பு
நின்றகண் ணோத லாகிச்
சித்தத்திற் செவிடுண் டாகித்
தெளிவறு பேச்சு முண்டாம்;
உற்றதோ ருறக்கந் தன்னி
லுண்டாமோர் வாய்வின் கூறே''

(கருத்துரை) இச்செய்யுள் தூக்கத்தை அடக்கினுல், உண்டாகும் நோய்களைக் கூறுகின்றது.

(பதவுரை) நித்திரை—(இயற்கையாய்க் காலத்தில் உண்டாகும்) தூக்கத்தை, அடங்கிப்போக—அடக்கினுல், நிகழ்த்திடும்—சொல்லுகின்ற, கருமம் கேளாய்—நோய்களைக் கேட்பாயாக; நித்தமும்—நாள்தோறும், தலைகனப்பு—தலை கனத்திருததல், நின்ற (எப்பொழுதும் எந்த நோயும் வரப்பெருமல்) இருந்த, கண்—இரண்டு கண்களும், நோதல் ஆகி—(சிவத்தலையடைந்து, பீளை கட்டல், எரிதல் முதலிய) நோய்களையுடையனவாய், சித்தத்தில்—பிறர் சொல்வதை உள்ளத்திலும் உணர வொண்ணுதபடி, செவிடு உண்டாகி—(காதிலிருக்கும், ஒலியுணர் கருவி தடித்து வளரல் முதலியவையுண்டாகின்றமையால்) செவிட்டு நோய் ஏற்பட்டு, தெளிவு அறு—(பிறர் உணராதபடி) தெளிவு அற்ற, பேச்சும் உண்டாம்—பேச்சும் உண்டாகும்; உற்றது—ஏற்பட்டதாகிய, உறக்கம் தன்னில் — தூக்கத்திற்குக் காரணமாய், உண்டாம்—இருக்கின்ற, ஓர்—ஒரு, வாயுவின் கூறு—பத்து வாயுக்களில் (இது) ஒரு வாயுவின் செய்கையாம்.

(பொழிப்புரை) தூக்கத்தை அடக்கினுல், நாள்தோறும் தலைக்கனம், கண்கள் சிவத்தல், செவிடு, தெளிவற்ற பேச்சு முதலியவைஉண்டாகும்.

11. வாந்தி.

''சத்தியை யடக்கி னக்கால்
தடித்திட்ட கடிகுட் டங்கள்
மெத்தவுந் தினவு பாண்டு
மேவுகண் ரோக முண்டாம்;
பித்தத்தின் விடபா கங்கள்
பெருகிடுஞ் சுவாசங் காய்ச்சல்
பற்றிய காச மாகும்
பகர்ந்தவிக் குணங்க ளுண்டே.''

(கருத்துரை) இச்செய்யுள் வாந்தியை அடக்கினுல், உண்டாகும் நோய்களைக் கூறுகின்றது.

(பதவுரை) சத்தியை—(இயற்கை மாறுதலால் உண்டாகின்ற) வாந்தியை, அடக்கினக்கால் —(ஒருவன் தன்னுடைய முயற்சியினால்) அடக்கினல், தடித்திட்ட—கனமாய்த் தோன்றுகின்ற, கடி —(ஒரு சாதி வண்டு) கடிப்பதாலுண்டாகும் குட்டம் போன்ற, குட்டங்கள்—குட்ட நோய்கள், மெத்தவும் தினவு—உடம்பில் அதிக நமை, பாண்டு—பாண்டு என்னும் உடல் வெளுப்பு, மேவு —(குளிர்ந்த காலத்தில்) வரக்கூடிய, கண்ரோகம்— கண்ணோய்கள் ஆகிய இவை, மெத்தவும் உண்டாம்—மிகுதியாய் உண்டாகும்; பித்தத்தின்—மிக்க பித்தச் சேர்க்கையால் உண்டாகக் கூடிய, விடபாகங்கள் வீக்க இயைபுள்ள நோய்கள், பெருகிடும்— மிகுதியாய் உண்டாம்; சுவாசம்—இரைப்பு நோய், காய்ச்சல்— சுரநோய், பற்றிய—தொடர்ந்த, காசம்—இருமல் நோய் ஆகிய இவைகள், ஆகும்—உண்டாகும் என்று, பகர்ந்த'—(முன்னோர்கள்) சொன்ன, இக்குணங்கள்—இப்படிப்பட்ட தன்மைகளையுடைய நோய்களெல்லாம், உண்டு—உண்டாவனவாம்.

(பொழிப்புரை) வாந்தியை அடக்கினல், புழுக்கடியினல் உண்டாகக் கூடிய தடிப்புக்குட்டம் போன்ற தடிப்புகள், நமை, பாண்டு கண் நோய்கள், பித்தவிட பாகங்கள், இரைப்பு, காய்ச்சல், இருமல் என்னும் இவைகளெல்லாம் உண்டாவனவாம்.

''சத்தியால் பித்தந்தாழும்; பேதியால் வாதந்தாழும்; அஞ்சனத்தால் ஐயந்தாழும்,'' என்று முக்குற்றங்களையும் தக்கவாறு குறைக்க முன்னோர்களாகிய மருத்துவர்கள் விதிகள், கூறியிருக்க, அவ்விதியைத் தழுவாமல், பித்தத்தைக் குறைக்க வழியாயிருக்கின்ற வாந்தியை அடக்கினல், மேலும் மேலும் பித்தம் என்னும் தேயுபூதச் செயல். மிகுந்து, அதன் செயலால் வரக்கூடிய தடிப்புக்குட்டம் முதலியவை போன்ற நோய்கள் உண்டாகும் என்று மருத்துவர்கள் நன்குணர வேண்டும்.

புழுக்கடியால் தடிப்புக்குட்டம் உண்டாம் என்பதையும், இன்னின்ன இடத்தில் கடித்தால் இன்னின்ன நோய் உண்டாகும் என்பதையும்,

''கால்தன்னில் கடித்தக்கால் திமிருண்டாகும்;
கைதன்னில் கடித்தக்கால் விரலே குன்றும்;
மேல்தன்னில் கடித்தக்கால் தடித்துக் காணும்;
மென்கழுத்தில் கடித்தக்கால் பொரிந்து காணும்.''

என்னுஞ் செய்யுளாறிக.

12. விழிநீர்.

''விழியினில் நீர டக்கில்
விதமான இருத்து ரோகம்
வழியடு பீந சங்கள்
வந்திடும் நேத்ர ரோகம்
அழுகிடும் சிரசில் ரோகம்
அதனுடன் வாதங் கூடில்
பழுதுடல் பண்ணிக் குன்மம்
பற்றிடுங் குணமு முண்டே''

(கருத்துரை) இச்செய்யுள் கண்ணில் வரும் நீரை அடக்கினல், உண்டாகும் நோய்களைக் கூறுகின்றது.

(பதவுரை) விழிகளில்—கண்களிலிருந்து வருகின்ற, நீர்—நீரை, அடக்கினல்—அடக்கிவிட்டால், விதமான—ஒருவகையான, இருத்துரோகம்—மார்பைப்பற்றிய தமர்வாயுவும், வழி—மூச்சோடும் வழியாயிருக்கின்ற மூக்கின் தொளை, படு—கெடுதியடைகின்ற, பீநசங்கள்—பீநசநோய்களும், நேத்ரரோகம்—கண்நோய்களும், வந்திடும்—உண்டாகும்; சிரசில்—தலையில், அழுகிடும் ரோகம்—அழுகக்கூடிய புண்நோயும், அதனுடன்—அந்த அழுகு புண் நோயுடன், வாதம்கூடில்—வளியும் வந்து சேர்ந்தால், உடல்—உடம்பை, பழுது பண்ணி—கெடுத்து, குன்மம்—குன்ம நோயும், பற்றிடும்—தொடரும், குணமும்—தன்மைகளும், உண்டு—உண்டாகும்.

(பொழிப்புரை) கண்ணிலிருந்து வரும் நீரை அடக்கினல், தமர்வாயு, பீநசங்கள், கண்நோய், தலையில் புண் ஆகிய இவைகளும், அப்புண்ணில் வளிகூடினல், உடம்பைக் கெடுக்கும் குன்ம நோயும் உண்டாகும்.

13. சுக்கிலம்.

''சுக்கிலந் தனைய டக்கின்
சுரமுட னீர்க்கட் டாகும்;
பக்கமாங் கைகால் சந்து
பாரநோய் வழியி றங்கும்
மிக்கமார் நோயுண் டாகும்;
மிகுத்திடும் பிரமே கந்தான்
தக்கதோர் போதுமாகின்
தரித்திடும் வாயுக் கூறே''

(கருத்துரை) இச்செய்யுள் சுக்கிலத்தை அடக்கினல் உண்டாகும் நோய்களைக் கூறுகின்றது.

(பதவுரை) சுக்கிலம் தன்னை அடக்கின்—சுக்கிலத்தை அடக்கிக் கொண்டால், சுரமுடன் நீர்க்கட்டு ஆகும்—சுரமும் நீர்க்கட்டும் உண்டாகும்; பக்கம் ஆம்—பக்கங்களில் இருக்கின்ற, கை

—கைகளிலும், கால்—கால்களிலும், சந்து—கீல்களிலும், பா நோய்—மிக்க நோய் உண்டாகும்; வழி—சுக்கிலம் வரும் வழியில், இறங்கும்—(நீள்சீலை நனையும்படி சுக்கிலம் தானே கசிந்து) இறங்கும்; மிக்க மார் நோய் உண்டாகும்—மிகுந்த மார்பு அடைப்புப் போன்ற நோய் தோன்றும்; பிரமேகம். மிகுத்திடும்—வெள்ளை நோய் மிகுதியும் உண்டாகும்; தக்கது—(அப்படி இறங்குவதற்குத் தகுந்தது, ஓர்போதும் ஆகில்—ஒரு பொழுதானாலும், தரித்திடும்—இறங்கி நிற்கும்; வாயு கூறே—(இப்படி உண்டாவது சுக்கிலத்தைக் கழிக்கும்) அபானவாயு என்னும் கீழ் நோக்குவளியின் தன்மையாகும்.

(பொழிப்புரை) விந்துவை அடக்கினால், சுரம், நீர்க்கட்டு கை கால்கள், கீல்கள் என்னும் இவற்றில் நோய், விந்து கசிந்து நீள் சீலை நனைதல், மார்படைப்பு, வெள்ளை என்னும் இவை உண்டாகும்.

அபான வாயுவின் தொழில், மலம், நீர், விந்து என்னும் இவற்றைக் கீழ்த்தள்ளுவதென்பதை.

''நெளிந்திட்ட வாதமபா னத்தைப்பற்றி
மணமான விந்துவிழ மலநீர்பெய்ய, வழிகாட்டி''

என்னுஞ் செய்யுளடிகளாலுணர்க.

14. சுவாசம்.

''சுவாசத்தை யடக்கி னாலோ
தொடர்ந்திடு மிருமல் நோயே
பவசமாய் வயிறு பொருமிப்
பண்பினுக் கருசி யாகிக்
கவசமாய்க் குலையி டிப்புக்
காய்ச்சலும் வெட்டை யாகித்
தவசமாய் வாயு தன்னிற்
றருங்குண மிவைக ளாமே.''

(கருத்துரை) இச்செய்யுள், சுவாசத்தை அடக்கினால் உண்டாகும் நோய்களைக் கூறுகின்றது.

(பதவுரை) சுவாசத்தை அடக்கினால்—பிராண வாயுவின் செயலான மூச்சை அடக்கினால், இருமல் நோய் தொடர்ந்திடும்—இருமல் உண்டாகும்; பவசமாய்—தன்னறிவிற்கு ஒன்றுந் தோன்றாதபடி, வயிறு—வயிறானது, பொருமி—உப்பி, பண்பின்-நன்றாய்ச் சுவையுணருந்தன்மையினையுடைய, நாக்கு—நாக்கில், அருசியாகி—எப்பொருளின் சுவையும் தோன்றாவண்ணம் கெட்டு, கவமாம்

—மற்றக் கருவிகளால் வெளிக்குத் தோன்றாமலிருக்கின்ற, குலை யிடிப்பு—குலையிடிப்பு நோயும், காய்ச்சலும்—சுரமும், வெட்டை யும் ஆகி—வெப்பமும் உண்டாய், தவசமாய்—ஒன்றிலுஞ் சேரா மல் தனித்திருக்கின்ற, வாயுதன்னில்—பிராண வாயுவால், தரும் குணம்—உண்டாகுங் குணங்கள், இவைகள் ஆம்—இவைகளா கும்.

(பொழிப்புரை) மூச்சை அடக்கினால், இருமல், வயிற்றுப்பொரு மல், எதைத் தின்றாலும் அதன் சுவை தெரியாமை, குலை நோய், காய்ச்சல், வெட்டை ஆகிய இவை உண்டாகும்.

(L) உடற்றீ விளக்கம்.

உடல் தீ நான்கு வகைப்படும். அவை : சமானை வாயு தன் இயற்கை இடத்தில் இருப்பின் ' 'சமாக்கினி'' என்றும், இடந்தப் பின் ''விஷமாக்சினி'' என்றும் பித்தத்தைச் சூழ்ந்தால் "தீஷணாக் சினி'' என்றும், கபஞ் சேர்ந்தால் 'மந்தாக்சினி' என்றும் வழங்கப் படும்.

சமாக்கினி.—ஒருவன் வேண்டும் அளவு உட்கொள்கின்ற உணவு நீர்களை எல்லாம் முறைப்படி கால அளவிற்கு மாறுபடாமல் நன் றாகச் சீரணிக்கச் செய்யும் தீயே சமாக்கினியாம்.

வாதம்—சமானன்.

பித்தம்—அனலம்.

கபம்—சிலேதம்.

(2) விஷமாக்கினி.—இஃது உண்ணப்பட்டவைகளை உடனே சீரணிப்பிக்காமல், நெடு நேரம் கழித்துச் செரிப்பிக்கும்; அப்படிச் செரிப்பித்தாலும் அவைகள் விஷமச் சீரணமேயாகும்.

(3) தீக்ஷணாக்கினி.—வெந்ததும் வேகாததுமான உணவுப் பொருளைப் புசித்தாலும், அதனை இரசத் (சாரம்) தோடும் கூடவே செரிப்பிக்கும்.

(4) மந்தாக்கினி.—விருப்பத்தோடு உண்ட பாகமான உணவுப் பொருள்கள் உடனே செரிப்பிக்காமல் வாயுவால் வயிற்றிரைச்சல், குடலிரைச்சல், வயிற்றுப்பிசம், உடல் கனத்தல் என்னும்இவை களையுண்டாக்கி நெடு நேரத்தின் பிறகு செரிப்பிக்கும்.

.. உடற்கூறுகள்.

அ. பொறிகளின் அமைப்பும் தொழில்களும்.

புலன் என்பது, பொறிகளின் வழியாய் மனத்தில் உண்டாகும் உணர்ச்சியாம். புலன் ஐந்து: அவை முறையே ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஓசை என்பவைகளாம். இவைகளுள் ஊறு அல்லது பரிசம் என்பது நாம் தொடும் அல்லது நம்மேல் படும் பொருள்களை இன்னதென்று பகுத்தறியச் செய்யும் புலனும். தோலின்கண் இருக்கும் நரம்புகளே இப்புலனுக்கு ஆதாரம் ஆகும்.

அந்நரம்புகள், முள்ளந்தண்டுக்கொடி நெடுக அதன் பிற்பாதியிலிருந்து தோன்றுகின்றன. உணர்ச்சி எவ்விடத்தில் அதிகமாய் இருக்கின்றதோ அந்த இடத்தில் மற்ற இடங்களைக் காட்டிலும் அதிக தொகையான நரம்புக் கூந்தல்கள் ஓடி இருக்கின்றதென அறியவேண்டும். எடுத்துக் காட்டாக விரல்களின் நுனிகளிலும், உதடு விளிம்புகளிலும் நரம்புக் கூந்தல்கள் அதிகமாயிருப்பதுடன் கூர்மையான உணர்ச்சியும் அமைந்துள்ளது.

சுவை அல்லது இரசம் என்பது பொருள்களின் சுவையை அறிவிக்கும் புலன். நாக்கே இதற்கு முதன்மையான உறுப்பாகும். இவ்வுறுப்பானது, நீர் ஊறும் சவ்வினுல் மூடப்பட்ட தசை இலைகளின் கூட்டம். நாக்கடுஎன்னும் சிறு கூர்மையான முனைகளினுல் நாவின் மேற்பக்கம் மூடப்பட்டிருக்கிறது அந்நாக்கடுகளிலே சுவை நரம்புகள் கூந்தலாய்ச் சென்று மூடியிருக்கின்றன. மிக்க புளிப்புச் சுவையுள்ள பொருள்களை நாவில் தடவ அந்த நாக்கு கடுகள் நீண்டு காட்டும். இச்சுவைப் புலனுனது மனிதன் முதலான பல உயிர்கட்கும் பொருத்தமான உணவுகளைத் தெரிந்து கொண்டு பொறுத்தமற்றவற்றை நீக்குவதற்கு உதவுகின்றது.

நாற்றம் அல்லது கந்தம் என்பது பொருள்களின் மணங்களைத் தெரிவிக்கும் புலனும். இது மூக்கினிடமாய் மூச்சுக் காற்றுச் செல்வதற்கான மூக்குத் துளையில் நிலை பெற்றிருக்கின்றது. மூக்குத் துவாரங்களில் மூடிக்கொண்டு இருக்கும் சளி ஊறும்சவ்விலே நாற்ற நரம்புகளின் கூந்தல்கள் வந்து சேருகின்றன. இந்தச் சவ்விலே சுரப்பும் கொதிப்பும் கொள்வதினாலே அதில் இருந்து நீர் சொரியும், அது தடிமனெனப்படும். (ஜலதோஷம்) காற்றும் காரமூள்ள நாற்றமும்பட்டு நாற்ற நரம்பின் நொய்மையானநரம்புக் கூந்தல்கள் சேதமடையாதபடி அதில் மூடியிருக்கும் சவ்விலே எப்பொழுதும் சளி ஊறிக்கொண்டே இருக்கும். பொருள்களின் வாசனையை நுகரும்பொழுது அக்கூந்தல்கள் வழியாய் நாற்றமானது மூப்ளக்குச் செல்ல அதை மனமானது உணர்ந்து கொள்ளுகிறது. இபுலனானது நல்ல மணங்களை முகர்ந்து இன்பத்தை அடைகின்றது.

ஓசை அல்லது சத்தம் என்பது மன ஆறுதலுக்கும் மகிழ்ச்சிக்கும் அறிவுத்தோற்றத்துக்கும் உதவியாய் இருப்பதாம். அவ்வோசையைக்கேட்கும் கருவி காதினிடத்தில் இருக்கின்றது. அக்காது வெளிக்காது, நடுக்காது, உட்காது என மூன்று பிரிவாய் இருக்கின்றது. இவற்றுள் வெளிக்காது தலைக்குப் புறம்பே சில விளிம்புகளை உடையதாய், சற்று வளைவு உள்ள தாய், துளையுள்ளதாய், தோலினால் மூடப்பட்டதாய் இருக்கும். அத்துளைக்குள்ளே இருக்கும் குறும்பியும் மயிர்களும் புழுப் பூச்சிகள் அதற்குள் செல்லாதவாறு தடுக்கும். காதின் வெளித் துளையின் உள் இறுதியில், வெளிக்காதுக்கும் நடுக்காதுக்கும் இடையிலே அரைத் திட்டம் அளவுக்கு உரு வெளியான ஒரு சவ்வு இருக்கின்றது. மிக நுண்ணிய நான்கு எலும்புகள் ஒரே கோவையாய் நடுக்காதில் இருக்கின்றன. அக் கோவையில் ஒரு தலைப்பு தம்பட்டத்திலும், மற்றொரு தலைப்பு வெளிக்காதிலும் தொடுக்கப்பட்டு இருக்கின்றது. நடுக்காதிலிருந்து பின் தொண்டை அருகுவரை ஒரு சிறு குழல் ஓடி இருக்கின்றது. அக்குழல் வழியாய்க் காற்று போக்குவரத்தாய் இருக்கின்றது. எக்காரணத்தினாலாவது அந்தக் குழல் அடைப்பட்டாலும் தொண்டை நெறி வீங்கினாலும் கேட்டல் குறையும். உட்காது, எலும்பினாலாகிய மூன்று அறைகள் உள்ளதாயும் சிக்கும் முக்கும், சுற்றும் சுழற்றலும் அமைந்த குடைவுள்ளதாய் இருக்கிறது. ஷெ காதின் பகுதிகள் மூன்றுள் கேள்விக்கு வேண்டியது உட்காதின் பகுதி மட்டும்தான் கேள்வி நரம்பானது மூளையில் இருந்து கிளம்பி உட்காதுக்கு உள்ளுரையாய் இருக்கும் சவ்வுக்குள்ளிருக்கும் நீரிலே மிதந்துகொண்டு இருக்கும். இச்சவ்வே காதுத் தம்பட்டமாம். வெளிக்காது தன்னில்மோதும் அலை, ஒளிகளை ஒன்றுய்த் திரட்டி நடுக்காதுக்குள்ளே செலுத்தும்போது அதற்கும் நடுக்காதுக்கும் இடையில் இருக்கிற சவ்வுத் தம்பட்டம் அதிர்ந்து உட்காதோடு தொடுத்திருக்கும் எலும்புக் கோவை வழியாய் அவ்வதிர்ச்சியைச் சேர்த்துவிடும். இப்படித் தோன்றிய ஒலியின் அதிர்ச்சி, கேள்வி நரம்பின் கூந்தலிலே பட்டு அந்த நரம்பின் வழியாய் மூளைக்குச் செல்வதினாலே கேட்கும் வன்மை உண்டாகிறது. பழக்கத்தினாலே பொருள்களில் இருந்து தோன்றும் ஒலிகளை இன்னின்ன வகைத்து என்றும் அஃது எவ்வளவு தொலைவில் இருந்து வருகிறதென்றும் அறியலாம்.

ஒளி அல்லது உருவம் என்பது கண் உறுப்பின் வழியாய் உள்ளத்துக்குக் களிப்பையும், கவலையையும், வெறுப்பையும் கொடுக்கும் பொருள்களின் தன்மையையும், உருவத்தையும், நிறத்தையும் பருமனையும், நிலையையும்தோற்றுவிக்கும்புலனும், இக்கண்ணனது உருண்டை வடிவமாய், தலையோட்டின் முன் பக்கத்திலிருக்கும் குழியிலே பதிக்கப்பட்டதாய் உருவொளியுள்ள மூன்று சவ்வுக் கவசங்களுள்ளதாய் இருக்கின்றது. அக்கவசங்கள் நீர் நிறைந்ததாய் இருக்கும். கண் உருண்டையின் முன் பக்கத்தில் வெண்மையாய் இருக்கும் சவ்வை வெள்ளை விழி எனப்படும். இவ்வெள்ளை விழியானது, இரட்டையாய், அதிகப்பரப்புள்ளதாய் கண்ணடியைப்போல் உரு வொளியுள்ளதாய், பளபளப்பும் மினுமினுப்புமுள்ளதாயிருக்கும். இவ்விரட்டைச் சவ்வுக்குப் பின்னல்

கருமை நிறமான ஒரு சவ்வு இருக்கிறது. இச்சவ்வானது மிக நுண்ணிய குருதிக் குழல்களினுல் வலைபோலப் பின்னப் பட்டு இருக்கிறது. இது கண்ணில் உள்ள எப்பகுதியையும் வளர்க் கத்தக்க தன்மையுடையது. இதற்குப் பின்னுல் சற்றுத் தூரத் தில் கண்கள் வேற்றுமையாய்க் காணும்படி நிறத்தைக் கொடுப் பதாய் இருக்கிற.ஒரு சவ்வு இருக்கிறது. இவ்விரண்டு சவ்வுகட் கும் நடுவில் ஒரு கரும்புள்ளி இருக்கின்றது. இக் கரும்புள்ளி யானது கண்ணில்படும் வெளிச்சத்துக்குத் தக்கதாய்க் கொஞ்ச வெளிச்சத்தில் விரிவதும், மிக்க வெளிச்சத்தில் சுருங்குவதுமாய் இருக்கும். அந்தத் துளையின் சுற்று விளிம்பிலிருந்து கருமை குறைந்த ஏறக்குறைய 60 வரிகள் பரந்து போகின்றவைகளாக வும், இவைகள் ஒன்ருேடொன்று அடுத்திருப்பதாயுள்ள ஒரு வட்டம் இருக்கிறது. இதற்குப் ''பரிதிக'' மென்று பேர்.

மேற்படி கருமை நிறச் சவ்வுக்கு அப்பால் அதையடுத்து உள்ளே மிகவும் மெல்லிய வெள்ளைச் சவ்வு ஒன்றியிருக்கின்றது; இந்தச் சவ்வானது பார்வை நரம்புக்கு உள்ளுறையாயிருக்கின்றது. இந்தப் பார்வை நரம்பானது மூளையிலிருந்து கிளம்பிக் கண்ணின் பிற்பகுதி வரைக்கும் சென்று கண்ணுக்குள்ளே விரிந்து கிடக்கும் இதுவே காட்சிப் புலன் நுகருமிடமாம். இதற்குத் ''தரிசியம்'' என்று பெயர்.

கண் மடலில், கண்களை முடித் திறக்கத் தக்கவையாய் ஆறு தசை நரம்பு இலைகள் இருக்கின்றன. அவைகளின் ஒரு தலைப்பு கட்குழி எலும்புகளிலும் மற்றத் தலைப்பு, கண் விழிகளிலும் தொடுக்கப்பட்டிருக்கின்றன. கண் யாதொரு அழிவையும் அடை யாமற்படி கட்குழிக்குள்ளே தாராளமாய் எப்பாகத்திலும் சுழல நிணம் சூழ்ந்து நிரம்பியிருக்கிறது.

கட் புலனுக்கு வெளிச்சம் இன்றியமையாதது. ஒரு பொரு ளிலிருந்து கதிர்கள் கண்ணுக்குள்ளே செல்லும்பொழுது, ஒன்றுக் கொன்று கத்திரிக்கோல் போலக் குறுக்கிட்டுச் செல்லும். இத ஞற்றான், அப்பொருளின் உருவம் தலை கீழாக மாறிக் கண்ணின் பிற்பக்கத்திலுள்ள தரிசியச் சவ்விலே விழுகின்றது.

கண்ணிலுள்ள மூன்று கவசங்களாகிய சவ்வுகள், அந்தக் கண் ணுக்கு அடிப்படையாய், அதற்குள்ளிருக்கும் மிக நுண்ணிய பொ ருள்களை அழியாமல் காக்கின்றன. கண்ணிலே மட்டுக்குமிஞ்சின வெளிச்சம், கஞ்சல் தூசு, வியர்வை விழாதபடி கட்புருவங்களும் கண்மடல்களும் காக்கின்றன

கட்குழியின் மேல் விளிம்புக்குள்ளே கடைக்கண் பக்கமாயிருக் கும் கண்ணீர்க் கோளத்திலிருந்து கண்ணீர் பொசிகின்றது. இந் நீர், கண்ணிற் பரந்து பாயும்போது இமை வெட்டுவதினால் அங் கிருக்கும் தூசுகள் கண்ணீருடன் அள்ளுண்டு மூக்குக் கடுத்த கண் மடலின் உட்கோளத்திலிருக்கும் இரண்டு குழல்களின் வழியாய் மூக்கிலே செல்கின்றன.

கண்ணில் அழற்சி ஏற்படும்போதும், மனத்தில் கலக்கம் உண்டாகும்போதும் விழி நீரானது, அவ் விரண்டு குழல்களிலே செல்லக்கூடிய அளவுக்குமிருந்து ஊறுவதனால், ததும்பி வடிகின்றது.

ஆ. செரிப்பிக்கும் உறுப்புகளின் விவரம்.

வாய், பல், உமிழ்நீர்க்கோளம், மிடறு, இரைக்குழல் இரைப்பை, துணைக்குக்கி, குடல்கள், இரசாயனி, இரசதாரை, ஈரல் கணையம், இவைகள் செரிப்பிக்கும் உறுப்புகளாம். இவைகளுள் வாய் என்பது, பற்களும் சுவைக்குரிய கருவிகளும் இருக்கும் ஓர் உறுப்பாம்.

பற்கள் : 32 ஆகும், கீழ்த்தாடை எலும்புக் குழியில் 16-ம் மேற்றாடை எலும்புக் குழியில் 16-ம் ஆக 32 பற்கள் அமைந்திருக்கின்றன. குழவிகட்குத் தாடை ஒவ்வொன்றிலும் பப்பத்து பற்கள் முளைத்து ஏறக்குறைய 6 வயது முதல் 15 வயதிற்குள்ளாக விழுந்து வேறே நிலையான பற்கள் தாடை ஒன்றுக்குப். பதினாறு பதினாறாய் முளைக்கும். மேல் வரிசையிலுள்ள பற்கள் 6-க்கும் மும்மூன்று வேர்களும், கீழ் வரிசையிலுள்ள பற்கள் 6-க்கும் இரண்டிரண்டு வேர்களும், மற்றப் பற்களுக்கு ஒவ்வொரு வேருமுண்டு. இவ் வேர்களில் இருக்கும் துளையில் சிறு நரம்புகள் ஓடியிருக்கும்.

பற்களின் தொழில் : இவைகள் நாம் உண்ணும் உணவுப் பொருள்களை நசுக்கி அரைத்து, இரைப்பையில் எளிதாய்ச்செரிப்பிக்கத்தக்கதாய்ச் செய்யும். சொற்களைப் பேசும்போது தெளிவாய் ஒலிக்கும்படி செய்வதும் பல்லின் தொழிலாம்.

உமிழ்நீர்க் கோளம் : பக்கத்திற்கு இரண்டாய் நாக்கிற் கடியிலும் தாடை உள்ளும், காதுக்கு அடுத்தும் இருக்கும்.

மிடறு : அடி நாவில் இருந்து, இரைக்குழல் மட்டும் ஓடி இருக்கிற ஒரு குழல். இது சவ்வு இழைகளால் உண்டாக்கப்பட்டதாய், மூன்று அங்குல நீள முள்ளதாய் விசாலமாயிருக்கும்.

இரைக்குழல் : இது ஓர் அடி நீளமுள்ள தடித்த சவ்வுக்குழலாம். அதன் வழியாய் நாம் உண்ணும் உணவுப் பொருள்களும் நீர்ப்பொருள்களும் இரைப்பைக்குச் செல்லும்.

இரைப்பை : இது மெல்லிய இசிவுள்ள மூன்று சவ்வுப்படலங்களால் ஆகியது. இது நெஞ்சின் கீழ், வயிற்றில் உடம்புக்கு நடுவில் சற்று இடபாகத்தில் இருக்கின்றது. மூன்று சவ்வுப்படலங்களுள் வெளிப்படலம், ஒத்த செப்பமுள்ளதாய், மிக்க அழுத்தமுள்ளதாய் இருக்கிறது. நடுப்படலம் நுண்ணிய இழைகளால் ஆகிய இரண்டு அடுக்குள்ளது. உட்படலம் அதிக விரிவாய் மெவானதாய், பல மடிப்புகள் உள்ளதாய் இருக்கிறது. அம்மடிதுகளில் கோழை பரவியிருக்கிறது. அம்மடிப்பு, சிறு குடல்

பெருங்குடல்களுக்கு உள்ளுறையாய், அவைகளின் தொடர் முழுதும் ஒன்றாய்ப் பரந்திருக்கின்றது. குண்டிக்காய் முதலியவைகட்கு மற்றொரு சலப்பை உள்ளுறையாயிருக்கிறது.

துணைக்குக்கி : இது சிறு குடலில் மிக முதன்மையான ஒரு பிரிவு. அது ஏறக்குறைய 1 அடி நீளமுள்ளதாய் இரைப்பையின் கீழ்த்துளையிலே தொடுக்கப்பட்டு இருக்கின்றது. ஈரலில் இருந்து வருகிற பித்த நீர்க்குழலும் கணையத்திலிருந்து வருகிற கணையநீர்க்குழலும் அதற்குள்ளே பொருந்துகின்றன.

குடல்கள் : சிறு குடல், பெருங்குடல் என இருவகைத்தாம். சிறுகுடல் ஏறக்குறைய 25 அடி நீளமுள்ளதாயும், பெருங்குடல் 5 அடி நீளமுள்ளதாயும் இருக்கின்றன. அதில் நீண்டபகுதி மலத்துளையாம். கடைப்பகுதி எருவாயாம். குடல்கள் குழாயைப் போன்றனவாம்.

இரசாயினி : சிறுகுடலின் உட்பக்கத்திலிருந்து தோன்றிய சிறு குழல்களாம். இவைகள் மணிக்குடலுக்கு ஊடாகச்சென்று இரச தாரையிலே பொருந்துகிறது.

இரசதாரை : இது ஒரு குழலாம். இஃது ஈரலுக்குப்பின் தொடங்கி, முள்ளந்தண்டின்.முற்பக்கத்தின் வழியாய் ஏறி, அடிக் கழுத்தின் கீழ் நோக்கி,முன் பக்கமாய் மடங்கி, தனக்குள்ளிருக்கும் இரசத்தை இடது காறை என்புக்குப்பின்னால் இருக்கும் நாளத்துட் செலுத்தும்.

ஈரல் : இஃது ஏறக்குறைய ஓர் அடி நீளம் குறுக்களவும் நான்கு இராத்தல் நிறையுள்ள கருஞ்சிவப்பான ஓர்உறுப்பாம். இது வலப்பக்க விலாவுக்குள் வலமூச்சுப் பைக்குக் (நுரையீரல்) கீழே இருக்கின்றது. இதினின்றும் பித்தநீர் பிறக்கின்றது. மஞ்சள் நிறமான கசப்புள்ள பித்தநீர் இருக்கும் சிறு பையொன்று இதன் கீழ்ப்பாகத்தில் உள்ளது. இந்தப் பைக்குப் பிலிகை என்று பெயர். இந்தப் பித்தநீரானது உடல் நன்னிலையில் இருக்கும்போது துணைக்குக்கிக் குட்செல்லும். இரைப்பைக்குப் பின் சற்று கீழாய் இருக்கின்ற நீண்டு ஒடுங்கிய சப்பையான ஓர்உறுப்பே கணையம் எனப்படும். இதினின்று கணையநீர் துணைக்குக்கிக்குட் செல்லும்.

மண்ணீரல் : (இடப்பாட்டு ஈரல்) என்பது, சற்றே வட்டமான சப்பையான கருமை நிறமுள்ள ஓர் உறுப்பாம். இஃது இடது பக்கத்தில் இரைப்பையோடும், கணையத்தோடும் சேர்ந்து இருக்கின்றது.

அவளிகை : இது நான்கு மடிப்புள்ள ஒரு சவ்வு. இது முன்றானையைப் போலக் குடல்களுக்கு முன்னே தொங்கிக்கொண்டு இருக்கும்.

குண்டிக்காய் : (சிறு நீரகம்)—இடுப்பின் முள்ளந்தண்டி னருகே இரு பக்கத்திலும் இருக்கும். இது நாலு அல்லது ஐந்து அங்குல நீளமுள்ள இரு.உறுப்புகளாய் உள்ளது. இவைகள் குரு தியில் இருந்து அமுரியைப் பிரித்து விடுவதினல் குருதி தூய்மை யாகின்றது. ஒவ்வொரு குண்டிக்காயிலுமிருந்து ஒவ்வொரு குழ லாய் இரண்டு குழல்கள் கிளம்பி, அடிவயிற்றுக்குள் நடுவே கிடக் கும் நீர்ப்பையை நாடியோடி அதனுடனே பொருந்துகின்றன. அமுரி சொட்டுச்சொட்டாய் அக் குழல்களின் வழியாய் இறங்கி நீர்ப்பையை நிரப்பும்.

(இ) இரத்த உறுப்புகளின் விவரம்.

தமரகம் (இரத்தாசயம்) நாடி, நாளம். தந்துகி என்பனஇரத்த உறுப்புகளாம். இவைகளுள் தமரகமானது, அவரவருடையமூடிய கைப்பருமனில் கொட்டைப்பாக்கு வடிவமாய், இரட்டை உறுப் பாய், இரத்தச் சவ்வினுற் சூழப்பட்டதாயிருகின்றது. அவ்விரண் டிற்குக் கீழுமேலுமாக இரண்டிரண்டு அறைகள் இருக்கின்றன. வலப்பக்கமாயிருக்கும் அந்த உறுப்பின் மேலறைக்கும் கீழறைக் கும் மூன்று சவ்வுக் கபாடங்களும், இடப்பக்கமாயிருக்கும் அந்த உறுப்பின் மேலறைக்கும் .கீழறைக்கும் இரண்டு சவ்வுக் கபாடங் களுமிருக்கின்றன. அந்த வலவுறுப்பின் கீழறையிலிருந்து ஒரு நாடியும், அந்த இடவுறுப்பின் கீழறையிலிருந்து வளைவான ஒரு நாடியும் கிளம்பும். அவ்விரண்டு நாடிகளில் வலவுறுப்பு நாடி யானது, இடவுறுப்பு நாடி வளைவுக்குள்ளாகச் சென்று அங்கே இரண்டாய்ப் பிரிந்து ஒன்று வலது சுவாசப்பைக்கும், மற்ருென்று இடது சுவாசப் பைக்கும் செல்லும். தந்துகி என்பது மிக நுண்ணிய குழல்களாம். இவைகள் மற்ற நாடி நாளங்களுக்கு இடையே நின்று அவைகளுடன் சம்பந்தப்படும்.

(ஈ) சோஷணக் குழல்களின் விவரம்.

சோஷணக்குழல் என்பவை சிறு குடலில் இருந்து கிளம்புகின்ற குழல்களாம். அவைகள் இரசாயனி, மாசனி என இருவகையாய நாளங்களுடனே பொருந்தியனவாய் இருக்கின்றன.

தின்ற பொருள்கள் குடலிலே செரியாதிருக்கிகையில், அதன் சாரத்தை உறிஞ்சிப் புதுக் குருதியாக்கி, அச்செந்நீரை நாளத்துட் செலுத்துதல் இரசாயனிகளின் தொழிலாம்.

குடலில் பழுதுபட்ட கஞ்சலான பகுதிகளையும் அதில் செரி யாமல் இருப்பவைகளையும், உடல் நலத்தைக் கெடுக்கும் வைர மானவகளையும் அணு அணுவாய் உறிஞ்சி விசர்க்க வழியாய்க் கழி யும்படி நாளங்களுள் செலுத்துதல் மாசனிகளின் தொழிலாம்.

இவைகளைவிட நாளங்களின் நுனிகளில் இருந்து தோன்று கின்ற மிக நுண்ணிய குழல்கள் உடலில் எப்பாகங்களிலும் உண்டு அவைகள் மெல்ல மெல்ல ஒன்றுடன் ஒன்றுகூடித் திரட்சியாய்ப்

பருத்து இருப்பதினுல், கழுத்து, கமுக்கட்டு (அக்குள்) முதலாகிய இடங்களில் கட்டி முதலான துன்பங்கள் நேர்ந்தால், அவைகள் புடைத்து வீங்கும். இதை நெறிக்கட்டி என்று கூறுவர்.

(உ) கழிவு உறுப்புகளின் விளக்கம்.

இஃது உடம்பின் எல்லாப் பகுதிகளிலும் பின்னலாய் நெருங்கியிருக்கிற நுண்ணிய குழல்களின் தலைப்புகளாயும், உடலிலும் உட்டோலிலும் குடலின் உட்சவ்விலும் இருக்கும் சிறு சிறு பைகளாகவும், தோலிலே காணப்படும் சிறு கண்ணறைகளாகவும் இருக்கின்றனவாம்.

மேற்படி உறுப்புகளின் வழியாய், செந்நீரிலிருந்து கழிக்க வேண்டிய நீரைக் கழித்துவிடும். அவ்வாறே உமிழ்நீர்க் கோளங்கள், உமிழ்நீரையும், ஈரல், மஞ்சளான கசப்பு நீரையும், சிறு நீரகம் உவர்ப்புள்ள அமுரியையும் கழிக்கின்றன.

இவ்விதம் மேற்படி கழிவு உறுப்புகள் வழிக் கழிய வேண்டியவைகள் கழியாவிட்டால், பிணி உண்டாம்.

(ஊ) உடல் பாதுகாப்புக்குரிய உறுப்புகளின் விவரம்.

காப்பு (போஷன) உறுப்புகள் என்பவை கூந்தலான சிறுகுழல்களாம். உடலில் உள்ள பல பகுதிகளைப் புதுப்பித்தல் இவைகளின் தொழிலாம். இத் தொழிலினால் உடல் வளருகிறது. செம்புனல் உடலில் சுற்றி ஒடுகையில், அங்கங்கேயுள்ள காப்புக் குழல்கள் அந்தந்த உறுப்புக்கு ஒத்த அணுக்களை குருதியில் இருந்து பிரித்தெடுத்துப் பகிர்ந்து விடுகின்றன. இவ்விதமாய் உடல்முற்றும் இரத்தம் ஓட, அதில் உள்ள உறுப்புகள் எல்லாம் தத்தம் வளர்ச்சிக்கான அணுக்களை எடுத்துக்கொள்கின்றன. இவ்வுறுப்புகளின் முயற்சியால் ஏழாண்டிற்கு ஒரு முறை உடல் முற்றும் மாறுதல் அடைகின்றது.

(எ) மூச்சு (சுவாச) உறுப்புகளின் விளக்கம்.

மூச்சுப்பை, மூச்சுக் குழல்கள், மூச்சுக்கிளைக் குழல்கள், காற்றுக் கண்ணறைகள், மேற்கட்டி (விதானம்) மூக்கு, வாய் என்பவைகள் மூச்சு உறுப்புகளாம்.

மூச்சுப்பை : இது பொகுட்டு வடிவமாய், இரட்டை உறுப்பாய், வெண் சிவப்பு நிறமுள்ளதாய் கரும்புள்ளி அமைந்ததாய் தமரகத்தைத் தழுவிக் கொண்டு இருப்பதாய் இருக்கின்றது. இந்த இரட்டை உறுப்பானது நெஞ்சறையின் பக்கத்துக்கு ஒவ்வொன்ருய் நிற்கும்படி, ஒரு சவ்வினுல் ஒன்றை விட்டு ஒன்று பிரிக்கப் பட்டு இருக்கின்றது.

மூச்சுக்குழல் : இது மிகவும் இசிவுள்ள குருத்து எலும்புகளின் வளையங்களால் அமைக்கப்பட்டு, கழுத்தின் முன்பக்கத்தில் தொண்டையிலிருந்து காற்றுப்பைவரை நீண்டு அதனுடன் பொருந்தி இருக்கின்றது.

சுவாசக்கிளைக் குழல்கள் : தமரகத்திற்கு மேலே சற்றுப் பின்னாக மூச்சுக் குழலின் தலைப்பிலே வலம் இடமாக இரண்டு கவர் விட்டெழும்பிக் காற்றுப்பைக்குள் சென்று பலகிளைகளாய்க் கிளைத்திருக்கும்.

காற்றுக் கண்ணறைகள் : இவைகள் சுவாசக்கிளைக் குழல்களின் நுனிகளாயும், அந்நுனிகள் வேற்றுமையான பருமன் உள்ள வைகளாயும் இருக்கின்றன.

மேற்கட்டி : (விதானம்) இது மூச்சு உறுப்புகளையும் வயிற்றில் உள்ளசெமிக்கும் உறுப்புகளையும் இரண்டாய்ப் பிரித்தும், அவைகளுக்கிடையே பரந்து கிடக்கும் வளையத்தக்க ஒரு தசையாயும், முள்ளந்தண்டிலும், நெஞ்சு எலும்பிலும், பழு எலும்புகளின் குருத்திலும் தொடுத்து இருப்பதாயும், அதன் மையப் இயல்பாய் நெஞ்சிலே வில்வளைவாய் எழும்புவதாயும், மூச்சை வெளியில் விடும்போது அதன் நடுவளைவு நாலாம் பழு வரைக்கும் எழும்புவதாயும், மூச்சை உள்ளுக்கு இழுக்க அதன் மையம் ஏழாம் பழுவரைக்கும் இறங்குவதாயும் இருக்கின்றது.

நாசி : மூக்கிலிருந்து அண்ணத்துக்கு மேலே வலஇடமாய்த் தொண்டைவரைச் செல்லும் இரண்டு உள் விரிந்த குழல்களாம்.

மூச்சு உறுப்புகளின் தொழில் : இவ்வுறுப்பில் இருக்கும் காற்று குழல்களுக்குத் தமரகத்திலிருக்கும் தூய்மையற்ற கார் இரத்தம் செல்லும்போது, அங்ஙனம் அதில் உள்ள அசுத்தம் நீங்கி செங்குருதியாய்மாறி மற்ற எல்லா உறுப்புகளுக்கும் சென்று அவைகளை உயிர்ப்பிக்கும்.

(ஏ) குரலுறுப்புகளின் விளக்கம்.

குரல் உறுப்பின் முடிச்சானது வெண்குருத்து எலும்புத்துண்டுகளால் அமைந்த செப்புப்போன்ற ஒரு விரல் செல்லக்கூடிய ஒரு குழலாம். அதன் மேற்றுளை முக்கோணவடிவாய், கீழ்த்தொளை சிறுத்த வட்டமாய், அந்தத் தொளைக்கு இடையே பக்கத்துக்கு இரண்டாய் நாலு சவ்வு மடிப்புகள் உள்ளதாய், நாக்கு, கீழ்த் தாடை, மூச்சுக்குழல் இவைகளுடன் பொருந்தி இருக்கின்றது. அச்சவ்வுகட்கு, குரல்நாண் என்று பெயர்.

இந்த நாண்களுக்கு இடையிலிருக்கின்ற வெடிப்புக்கு, முடிச்சு வாயில் என்றும், நாண்களுக்கு இடையே வலமிடமாய் கீழும் மேலும் இருக்கும் இரண்டு பதிவாகிய இடை வெளிகளுக்கு முடிச்சுக் குழிகள் என்றும், பண்ணை இலை போல் அடிநாவில் மிதந்து கொண்டு இருக்கும் உறுப்புக்கு முடிச்சுக்கபாடம் என்று பெயர்.

உணவுப் பொருள்களை விழுங்குகையில் மூச்சுக்குழலைக் கடந்து, இரைக் குழலிலே செல்லும்போது ஓர் அணுவளவேனும் மூச்சுக்குழலுக்குள் போகாதபடி காவல் செய்வதே அந்த முடிச்சியின் தொழிலாம். முடிச்சும் அதனுடன் சேர்ந்த உறுப்புகளும் இயங்குவதனால், குரலாகிய ஒலி பிறக்கிறது.

(ஐ) தோலின் விளக்கம்.

தோல், வெளித்தோல், உள்தோல் என இரு பிரிவுகளாய் இருக்கின்றது. உள்தோலில் உள்ள சிறு குழல்களால், மேனியெங்கும் வெளிப்பட்ட நீரால், அமைந்தது வெளித்தோலாம். இவ் விரு வகைத் தோல்களில் அநேக படைகள் உண்டு. அப்படைகளில் உட்படை நீராய் இருக்க, வெளிப்படைகள் காய்ந்து செதிள்கள் ஆகிறதினாலே, வெளித்தோல் வன்மையாய் இருக்கிறது. எடுத்துக் காட்டாக, உடலில் கொப்புளம் கட்டும்போது மிதந்து கிளம்பி உரிகிற பொருள்தானே மேற்றோல் படைகளில் ஒரு பாகமெனப்படும்.

வெளித்தோலில் மயிர்களும் நகங்களும் முளைத்து இருக்கின்றன. அவைகளில் வேக்காடு கண்டு தோல் கழன்றால் அவைகளும் கழன்றுவிடும். உள்தோலில் நாடிகளும் நாளங்களும் ஒன்றோடொன்று பொருந்தி வலைபோல் கிடப்பதால், எந்த இடத்தில் குத்தினாலும் இரத்தம் வெளிப்படும். மேனி எங்கும் வெளித்தோலில் மெல்லிய குழல்களிருப்பதினால், அவைகளின் வழியாய் உடலிலே பூசும் நெய்கள், வைசூரிப்பால் முதலியவைகள் குருதியிலே சேருகின்றன. கடுகளவாயுள்ள வியர்வைக் கோளங்களும் நிணக்கோளங்களும் மேற்றோலிலிருக்கின்றன. அக்கோளங்களிலுள்ள சிறு துளைகள் வெளித்தோலுக்கு ஊடேசென்று உட்டோலுக்குள்ளே இருக்கும் கண்ணறைகளிலே முடிகின்றன.

வெளித்தோலின் தொழில்.

உடலிலுள்ள எல்லாப் பாகங்களை மூடிக்கொள்ளலும், நச்சுக் காற்றுகள் குருதியில் கலவாமல் தடுத்தலும், அம்மேற்றோலிலுள்ள ஊற்றுக்குரிய கருவிகளின் வழியாய் உணரவேண்டியவைகளை உணர்ந்து இன்பதுன்பங்களைத் துய்த்தலும் ஆகும். மேற்றோலிலுள்ள நிணக்கோளங்களின் வழியாய் நிணமும், வியர்வைக் கோளங்களின் வழியாய் வியர்வையும் கழிகின்றன. இவ்விரண்டும் குருதியினின்றும் பிரிவதால், அது தூய்மையாகின்றது.

(ஒ) நரம்பு மண்டல விளக்கம்.

மூளை, துணை மூளை, சிறுநரம்புகள், முள்ளந்தண்டுக்கொடி முள்ளந்தண்டு நரம்புகள், ஐக்க நரம்புகள் என்பவை நரம்பு மண்டலங்களாம்.

இவைகளில் மூளை என்பது தலை ஓட்டுக்குள்ளிருக்கும் அறைகள் நிறைந்த குழைவான உறுப்பாம். அதில் வெண்ணிற முள்ளதாய், அதன் வெளிப்படை நரை நிறமுள்ளதாய், நெற்றிக்கு நேரே பிடரிவரைக்கும் வலமிடமாய், இரண்டு சமபாகங்களாய்ப் பிரிக்கப்பட்டதாய் இருக்கின்றது. துணை மூளை என்பது மூளை யில் அரைக்கால் பங்கு கொண்ட அளவில் தலையின் பக்கத்தில் கீழ்ப்பிடரியைப் பற்றிப் பந்து வடிவமாயிருக்கின்றது. இந்தத் துணை மூளையில், நரை நிறப்பாகம் மிகுந்தும், துய வெண்ணிறப் பாகம் குறைந்தும் இருக்கிறது. இவ்விரண்டில் நரைநிறப் பாகமானது வெண்ணிறப் பாகத்துக்கு ஊடாக, மரம், கொம்பு விட்டுப்படர்ந்தது போற்றேன்றும், மூன்று சவ்வுகள் மூளையைச் சுற்றிக்கொண்டிருக்கின்றன. அவற்றுள் வெளிச்சவ்வு மிகத்தடிப் பாயும் வன்மைக் குறைவாயுமுள்ளது. இடைச்சவ்வு மிகமெல்லி யதாயும், உரு ஒளியுள்ளதாயும் இருக்கின்றது. உட்சவ்வு மிக நுண்ணிய குருதிக் குழல்களால் பின்னப்பட்ட வலையை ஒத்திருக் கின்றது.

முள்ளந்தண்டுக் கொடி என்பது மூளையைப்போன்ற வெண் ணிறமான ஒரு பொருள். ஒரு சவ்வு அதற்கு உறையாகச் சுற்றிக் கொண்டிருக்கிறது. இக்கொடி கைவிரற் பருமன் உள்ளதாய் மூளை யிலிருந்து முள்ளந்தண்டுக்கு ஓடுவதாய் இருக்கிறது. அக்கொடி யின் மேல்தலைப்பு, குமிழ்வடிவமாயிருக்கிறது.

தலையின் நரம்புகள், மூளையிலும், முள்ளந்தண்டுக் கொடியி லும் தொடுத்துச் செல்லுகின்ற வன்மையுள்ள சிறிய வெள்ளைக் கொடிகளாம். அவைகள் உடலின் எப்பாகங்கட்கும் கொப்பு கொப்பாய்க் கூந்தல் விட்டுச் செல்லும். அவைகளின் அடி மூளை யிலே சேர்ந்திருக்கும் நரம்புகள் அந்த மூளையிலிருந்து கிளம்பிப் பன்னிரண்டு இணைப்புகளாய்ப் பிரிந்து முகத்தின் எல்லாப்பாகங் கட்கும் செல்லும். அதாவது காது, கண், நா, மூக்கு இவைகட் குச் சென்று இவைகளின் தொழிலுக்குக் காரணமாகும். முள் ளந்தண்டு நரம்புகள், அத்தண்டுக்குள் இருக்கும் கொடியிலிருந்து கிளம்பி 32 சோடுகளாய்ப் பிரியும். அவைகளில் ஒவ்வொன்றுக் கும் இரண்டு மூலங்கள் உண்டு. அவைகளில் முன்மூலம் இயக் கத்தையும், பின்மூலம் உணர்ச்சியையும் கொடுக்கும். அவைகளின் கிளைநரம்புகளிலும் அவ்விரண்டு மூலங்களிருப்பதால் உடலெங் கும் உணர்ச்சியும் அசைவுமுண்டாகின்றன.

ஐக்க நரம்பானது.உடலெங்கும் ஓடி முள்ளந்தண்டை அணைந் திருப்பினும், இஃது இரைப்பைக்குப் பின்னும், அடிக்கழுத்திலும் இருக்கின்றது. இதனை இன்னும் விவரிக்கில், அது முள்ளந்தண் டுக்கு வலமிடமாகவும், முள்ளெலும்புகளுக்கு இடையிலும் திரட்சி திரட்சியாய்த்திரண்டு சங்கிலிக் கோவைபோலச் சென்று உடலி லுள்ள எல்லா முக்கியமான பகுதிகளுக்கும் பரந்துபோய் மூளை யிலும், முள்ளந்தண்டுக் கொடியிலிருந்து கிளம்புகின்ற நரம்பு களுக்கும் பொருந்துகின்றதெனக் கூறலாம்.

மேற்படி நரம்பு மண்டலத்தில் மூளையின் தொழில்: புத்தி, ஞானம் இவைகள் தோன்றுமிடமான மனத்துக்கும், எல்லா உணர்வுகளுக்கும் மூளையானது இருப்பிடமாம். மூளையிலிருந்து உடல் முற்றும் செல்லும் உணர்வு நரம்புகளின் வழியாய் அவ்வுடலின் எப்பகுதிகளிலும் உண்டாகும் உணர்ச்சிகளை மனம் அறிகிறது. மேற்கூறியபடி உணர்ச்சி பிறக்கின்ற உணர் நரம்புகளின் வழியாய் மட்டும் உடலிலுள்ள உணர்ச்சிகளை மூளை அறியக் கூடிய தன்மையுடையதாயிருக்கிறதேயன்றித் தனக்குத்தானே அறியக்கூடிய சக்தி அதற்கில்லை. துணை மூளை அடங்கிய குமிளமானது இப்படிச் சுரணையற்றதன்று; அதிற்சற்றேமெல்லக் குற்ற, வலிப்பு, இசிவு உண்டாகும். அதற்கு மிக்கமோசம் வந்தால் மூச்சுத்தடைப்படும்.

தலைநரம்புபுகளின் தொழிலாவது, மூளையிலிருக்கும் இயக்க நரம்புகளின் மூலமாய் மூளையானது .பேசி நரம்புகளை இயக்க, மூலமாய் மூளையானது பேசி நரம்புகளை இயக்க, அவை தொடுத்திருக்கும் உறுப்புகள் இயங்கும்.

ஐக்க நரம்புகளின் தொழிலாவது உடலிலிருக்கும் சிறப்பான பாகங்கட்கு உயிர்த்தத்துவத்தைக்கொடுக்கும். அதிலுள்ள கூந்தல் நரம்புகள் சோரிக்குழல்களுடனே கூடி இவைகளைப்போலவே உடல் எங்கும் செல்லுகின்றதினுல், அதன் எப்பகுதிகளையும் ஒருமித்திருக்கச் செய்யும். நரம்பு, மூளைக்கும் இரைப்பைக்கும் சம்பந்தப்பட்டிருப்பதினுல், அதில், அழற்சியுண்டாகத் தக்க உணவுகளை உண்டால் தலைநோவு காணும்.

நரம்பு மண்டலத்துக்கும், மனத்துக்கும், உள்ள சம்பந்தம் மிகநெருங்கியதாய் இருப்பதால், நரம்புமண்டலத்தின் எப்பகுதிகளில் நோய் கண்டாலும் அது மனத்தில் தாக்கிப் புத்தி மருட்டம், பயித்தியம் முதலியவைகள் உண்டாகும். மேலும் மனதிலுண்டாகும் பயம், கவலை, சீற்றம் முதலியவற்றால் பிணியுண்டாகும்.

நரம்புமண்டலம் இன்பமான நிலைமையிலிருக்கும்படி, உடற்பயிற்சி செய்தலும், தூய்மையான காற்றைச் சுவாசித்தலும் இன்றியமையாததாம். தமரகத்திலிருக்கும் குருதியில் பத்திலொரு பங்கு மூளைக்குச் செல்கிறது. ஆதலால், அதற்குச் செல்லும் குருதியானது தூய்மையான செங்குருதியாயிருக்கவேண்டும். நாம் உட்கொள்ளும் தூய்மையான காற்றே இம்மாறுதலுக்குக் காரணமாம்.

உடற் பயிற்சியினுல் குருதியிலுள்ள அழுக்குகள் வியர்வை மூலமாய் வெளியிற் கழிந்துவிடும். நரம்புகள், .பேசிகளாகிய சதை இலைகள் இவைகளின் இயக்கத்தால் தூய குருதியோட்டம் சரியாய் நடக்கும். இப்படி நடைபெறுவதற்கு உடற்பயிற்சியே காரணமாம்.

தூய்மையற்ற காற்றை உட்கொள்வதினல் மூளைகள் அவைகளின் தொழிலைவிட்டு ஓய்ந்துவிடும்; அறிவுங் கெடும்; தலைவலி உண்டாகும். ஆதலின் பேசிகளையும், நரம்புகளையும் மூளைகளையும் வேலை கொள்ளச் செய்து மறுபடியும் ஆறியிருக்க விடவேண்டும், ஓயாத மனமுயற்சியினாலே மூளைக்குக் கெடுதியுண்டாம். படிப்பு முதலிய மனமுயற்சிகள் அளவு பட்டதாய் ஒழுங்கு பட்டதாய் இருக்க வேண்டும்.

ஔ. எலும்புகளின் விளக்கம்.

எலும்புகள் ஏறக்குறைய 208. தசைகள் நீங்கிய எலும்புக் கோவைக்குக் கங்காளமென்று பெயர். அது வெண்ணிறமுள்ளதாய், உறுதியான சவ்வினல் மூடப்பட்டதாய் அதிக உறுதியைத் தருகின்ற சுண்ணும்பும், ஒருவிதப் பசையுமுள்ளதாய், மெதுவுள்ளதாய், நடு வயது வரை வளருவதாய், முதுமையில் இலேசாகத் தெறிக்கத்தக்க வயிர முள்ளதாயிருக்கின்றது.

அவ்வெலும்புகளில் நெஞ்செலும்பு, குழந்தைப் பருவத்தில் எட்டுத் துண்டாகவும், வாலிபத்தில் மூன்று துண்டாகவும், முதுமையில் ஒரே துண்டாகவும் மாறும். கபாலத்தில் கருக்கு விளிம்புகளால் இசைக்கப்பட்டிருக்கிற எலும்புத் துண்டுகள், 8, செவிகளிரண்டிலும் உள்ள சிறு எலும்புத்துண்டுகள் 8, முகத்தின் எலும்புத் துண்டுகள் 14, நாவடியில் தனு .எலும்பு 1, நெஞ்செலும்பு 1, ஆசன எலும்புகள் 4, பெருந்துவாரத்தின் வழியாய் ஒரு நரம்புக் கொடியினாற் கோக்கப்பட்ட முள்ளந்தண்டின் முள்ளெலும்புகள் 24, அந்த முள்ளந் தண்டுடன் இடப்பக்கத்தில் 12, வலப்பக்கத்தில் 12 ஆக இசைக்கப் பட்டிருக்கிற பழு எலும்புகள் 24, தோட்பட்டைகளிரண்டிலும் பக்கத்துக்கு ஒவ்வொன்றாய் நஞ்சறையின் பின் பக்கமாய் இருக்கின்ற முக்கோண வடிவமுள்ள பட்டை எலும்கள் 2, காறை எலும்புத் துண்டுகள் 2, இவ்விரண்டில் ஒரு துண்டின் ஒரு தலைப்பு வலப் புயத்திலும், அதன் மற்றொரு தலைப்பு அந்த நெஞ்செலும்பிலும் பொருந்தி ஒன்ருய் இருக்கிறது. புயங்களிரண்டிலும் புயத்துக்கு ஒவ்வொன்றாய் இருக்கிற புய எலும்புகள் 2, முன் கைகளிரண்டிலும் ஒவ்வொன்றிற்கும் இரண்டிரண்டாய் எலும்புகள் 4, கைக்குளசிகளிரண்டிலும் ஒவ்வொன்றுக்கும் இரண்டு நிரையாயிருக்கும் விகற்பமான சிற்றெலும்புகள் 8 ஆய் சிற்றெலும்புகள் 16, உள்ளங்கைகளிரண்டிலும் ஒவ்வொன்றுக்கு 5 ஆய் எலும்புகள் 10, நீளபேதமான கைவிரல்கள் பத்தில் எட்டு விரல்களில் விரல் ஒவ்வொன்றுக்கு மும்மூன்று எலும்புகளாய் எலும்புகள் 24, பெரு விரல்களிரண்டில் ஒவ்வொன்றுக்கும் இரண்டாய் எலும்புகள் 4, தொடைகளிரண்டில் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொன்றாய் இருக்கின்ற எலும்புகள் 2, அந்தத் தொடை எலும்புகள் தேகத்திலுள்ள எலும்புகள் எல்லாவற்றிலும் நீளமாயும் பெரியதாயுமிருக்கின்றன. அதன் குமிழ் பந்து வடிவமாயுள்ளது. முழந்தாட் சில் எலும்புகள் 2; கால்களிரண்டிலும் ஒவ்வொன்றுக்கும் இரண்டாய் எலும்புகள், 4 அவைகளி

லொன்று பெரிதாயும், மற்ருென்று சிறியதாயுமிருக்கின்றன. பாதத்தில் எலும்புகள் 52, அவைகளில் பின்பாதத்தில் 7, நடுப் பாதத்தில் 5, நுனிப்பாதத்திலுள்ள விரலெலும்புகள் 14ஆம். இது போல் மற்ருெரு பாதத்திலும் சேர்ந்து எலும்புகள் 52 ஆகும்.

மேற்சொல்லிய முள்ளந்தண்டின் முள்ளெலும்புகளை வெண்மையான குருத்தெலும்புகளால்இணைக்கப்பட்டிருப்பதனால்அந்த முள்ளந்தண்டு எப்பக்கத்திலும் சவண்டு (நெளிந்து) அசைந்து கொடுக்கும். அந்தத் தண்டின் மேற்பக்கத்தில் பொருந்தியிருக்கின்ற தலையின் மூளை குலுங்காதபடி அத்தண்டின் கழுத்திலும் முதுகிலும், இடுப்பிலும், முன் குவிவும் பின் குவிவுமாய் மூன்று வளைவுகளிருக்கின்றன. அந்தத் தண்டின் அடிப்பக்கம் ஆசனக் கூட்டில் பொருந்தப்பட்டிருக்கிறது. அந்த ஆசனத்தின் இடப் பக்கத்திலும் வலப்பக்கத்திலுமிருக்கிற குழியில், தொடை எலும் புகளிரண்டின் குமிழ்கள் பொருந்தித் தலை முண்டத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறது.

நெஞ்செலும்பு, பழுவென்பு, முள்ளந்தண்டுஎன்பு இவைகள் கூடுதலிஞலாகிய நெஞ்சறைக்குள் இரத்தாசயம், சுவாசப்பை, இரத்தமோடுகிற பெரிய நாடி நாளங்களுமிருக்கின்றன. தலை நீங்கலாகக் கழுத்து முதல் இடுப்பு வரையுள்ள உடல் முண்டமெனக் கூறப்படும்.

க. பேசிகளின் விளக்கம்.

பேசிகள் என்பவை மிகவும் மெதுவான சிவந்த நிறமுள்ள தசை இலைகளாம். அவைகள் எண்ணில் அறு நூறாம். இந்த இலைகள், தலை, கழுத்து, முண்டம் முதலிய அவயங்களிலும் குடல் முதலிய உள்ளுறுப்புகளிலும், சில நேராயும், சில இறகின் மயிர்களைபபோல் சாய்வாகயும் சென்று தசையிலும் பொருந்தும். பின்னும் இந்த இலைகள்சில இடங்களில் எலும்பின் மேல் ஒன்று அல்லது இரண்டடுக்காகவும், மற்ற இடங்களில் ஒன்றின்மேலொன்றாய் ஐந்து ஆறு அடுக்காகவும் மெல்லிய வெள்ளைச்சவ்வினுற் பிரிக்கப்பட்டுத் தோலை அடுத்திருக்கின்றன. தசை இலைகளைச் சுற்றிலும் அவைகளுக்கு இடைவெளிகளிலும் மஞ்சள் நிறமான கொழுப்பு இருக்கின்றது.

குழந்தைகள், வாலிபர்கள் இவர்களுடைய உடம்பில் இந்தக் கொழுப்பு அதிகமாயிருக்கின்றது. அதனால் அவர்களுடைய உடம்பு திரண்டு புஷ்டியாயிருக்கிறது. முதிர்ந்தவர்களின் இந்தக் கொழுப்புக் குறைவாயிருக்கிறது. வியாதியினால் உணவு குறைவு நேர்ந்தால் அந்தக்காலத்தில் சரீரம் அந்தக் கொழுப்பினால் போஷிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட தருணங்களில் கொழுப்பு இரத்தமாய்மாறும். இப்படி மாறுவதினுல், முகம்சுரிந்து, கண் தாழ்ந்து எலும்புகள் வெளிப்படையாய்த்தோன்றும். தேகத்தில் உள்ள சகல அவயவங்களின் இயக்கங்கள்யாவும், தசை இலைகள் சுருங்குவதினுலும், நீளுவதினுலும் உண்டாகின்னவாம்.

வேறு கொள்கை.

மொத்தமாய்ப் பிரிக்கப்பட்ட அங்கங்கள்—6.

தலை, உடம்பு, கைகள் (2). கால்கள் (2).

தனித்தனியாய்ப் பிரிக்கப்பட்ட அங்கங்கள்-இவைகளைஇரண்டு தொகுதிகளாய்ப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. 1. தெளிவாய்ப் பிரித்து அறியக்கூடியவைகள். 2. மிகச்சிறியவைகாளய் இருப் பதினாலோ, ஒன்ருேடொன்று சேர்ந்திருப்பதினாலோ தனித்தனி யாய்க் கண்ணால் பார்க்க முடியாதனவாயிருக்கின்றன.

1. தெளிவாய்ப் பிரித்து அறியக்கூடியவை.

1. தோல்கள் 6. நீர் உள்ளது, இரத்தம் உள்ளது, சிரங்கு உண்டாகும் தோல், குஷ்டம் உண்டாகும் தோல், கட்டி உண்டாகும் தோல், காயப்பட்டால் அதிக வேதனை உண்டாகும் தோல்.

2. எலும்புகள்—360

பல் உரல்கள் ..	32	தோள் பட்டை ..	2
பற்கள் ..	32	குறி	1
நகங்கள்	20	ஆசனம்	1
கால். கை முருந்துகள்	20	முதுகுத்தண்டு ..	36
கால், கை விரல்கள்	60	கழுத்து	15
குதிக்கால் ..	2	முகவாய்க் கட்டை ..	1
கைமணிக்கட்டு முன்பாகம்	2	முகவாய்க்கட்டையை இணைத்திருக்கும் எலும்புகள்.	2
கணுக்கால் ..	4		
மணிக்கட்டு ..	4		
முழங்கால்	4	நெற்றி ..	2
முழங்கை	4	மேல் வாய்	2
முழங்கால் சில்லு ..	2	கண் எலும்பு ..	2
முழங்கை சில்லு ..	2	தாடை	2
தொடை	2	மூக்கு	1
புஜம்	2	மார்புக் கூடு	48
தோள் முன்னெலும்பு புஜத்தோடு சேர்க்கும் முளைபோன்ற எலும்பு.	2	மார்புக் கூடு படியும் எலும்புகள்.	24
		பொட்டு எலும்பு ..	2
காறை எலும்பு ..	2	தலை ஓடு ..	4
பின் புறப்பட்டை ..	2	மார்பு	17

3. ஐம்புலன்களின் பொறிகள் 5.—தோல், நாக்கு, மூக்கு, கண்கள், காதுகள்.

4. ஐம்புலன்கள் (உணரும்ஒளி உணர்ச்சி சக்திகள்)—ஸ்பரிஸ உணர்ச்சி, சுவை உணர்ச்சி, நாற்ற உணர்ச்சி, ஓசை உணர்ச்சி.

5. கன்மேந்திரியகள் (வினைபொறிகள்)

எடுத்தல்—கைகள்.

நடத்தல்—கால்கள்

மலம்போக்கல்—மலவாய்.

மூத்திரம் விந்து விடுதல்—கருவாய்

பேசுதல்—நாக்கு.

6. சேதனன் (மானத்தோடு கூடிய ஆன்மா) உடைய இருப்பிடமாகிய இருதயம்.

7. உயிர் நிலைகள் 10.—தலை, கழுத்து, தமரகம், தொப்புள், ஆசனம். மூத்திரப்பை, ஓஜஸ் (இருதயத்திலும் சரீர முழுவதும் வியாபித்திருக்கும் ஓர் வித சாரம்), சுக்கிலம், ரத்தம், தசை.

இந்த 10 உயிர்நிலைகளுள் முதல் 6, அதாவது தலை, கழுத்து, தமரகம், தொப்புள், ஆசனம், மூத்திரப்பை இவைகள் மர்மத்தானங்கள். இவைகளுக்குக் கெடுதி ஏற்பட்டால் மரணம் ஏற்படும்.

8. உட்ம்பு உட்பக்கத்திலுள்ள அங்கங்கள் 15—தொப்புள், தமரகம், நுரையீரல், மண்ணீரல், கல்லீரல், மூத்திரக்குண்டிக்காய்கள், மூத்திரப்பை, பெருங்குடலின் குறுக்கு பாகம், வயிறு பக்குவாசயம், சிறுகுடல், பெருங்குடல், இறங்கும் பெருங்குடல் மலவாய், வபாசவ்வு.

9. சிறு அங்கங்கள்—56

முழங்கால் ஆடு சதை	2	ஈறுகள்	2
தொடை சதை ..	2	மேல்வாய்	1
பின்புறம் சதை ..	2	உள்நாக்கு	1
விதை	2	தொண்டைப் பக்கச் சதை	2
குறி	1	நாக்கு	1
கக்கத்தின் பக்கங்கள்	2	தாடை	2
தொடை இடுக்குகள்	2	காதுகள்	2
பின்புறம் மேல்பக்கம்	2	காது ஓட்டைகள் ..	2
மூத்திரப்பையின் உச்சி	1	கண்களின்கோளங்கள்	2
வயிற்று சதை ..	1	கண் துவாரங்கள்	4
ஸ்தனங்கள் ..	2	கண்கள்சேரும்ஓரங்கள்	2
தோள்கள்	2	புருவங்கள் ..	2
பின்கை ஆடுதசைகள் ..	2	பிடரி	1
முகவாய்க்கட்டை	1	உள்ளங்கால்கள்	2
உதடுகள்	2	உள்ளங்கைகள்	2

10 பெரிய துவாரங்கள்— 9.

கண்	..	..	..	2
காது	..	..	..	2
மூக்கு	..	..	..	2
வாய்				1
மலசலத்துவாரங்கள்			..	2
		ஆக	..	9

11. ஆசயங்கள்.

ரத்தாசயம்—இருதயம்.
கபாசயம்—மார்பு
ஆமாசயம்—வயிறு
பித்தாசயம்—தொப்புளுக்கு மேலும் இருதயத்திற்குக் கீழும் இருக்குமிடம்.
வாதாசயம்—தொப்புளுக்குக்கீழ் உள்ள இடம்.
பக்குவாசயம்—சிறுகுடல்
மூத்திராசயம்—மூத்திரைப்பை.
கருப்பாசயம்—பெண்களுக்கு உரித்தாயிருப்பது.

II. தெளிவாய்க் கண்ணுக்குப் புலப்படாதவைகள்

1. பேசி என்னும் தசைகள்—500.

அவைகளுள் கால் கைகளில்				400
உடம்பில்	..	..	..	66
கழுத்துக்குமேல்		..	..	34

விவரம்.

கால் கைகளில் ஒவ்வொரு காலிலும் விரல் 1-க்கு 3 வீதம்.			..	15
முன்பாதம்	..	..	..	10
புறங்கால்	..	..	..	10
குதிக்கால் உள்ளங்கால்			..	10
குதிக்காலுக்கும் முழங்காலுக்கு மிடையே.				20
முழங்கால்	..	..	..	5
தொடை	..	..	..	20
தொடை இடுக்கு		..	..	10

ஆகக் கால் ஒன்றுக்கு நூறும், கை ஒன்றுக்கு நூறும் ஆகும்.

உடம்பில்

ஆசனம்	3
குறி	1
குறி மேட்டில்	1
விதை	2
பின்புறப் பட்டைகள் 5+5	10
மூத்திரப்பையின்மேல் ..	2
வயிறு	5
தொப்புள்	1
மேல் முதுகில் நீண்ட பேசிகள்	10
விலாக்கள்	6
மார்பு	10
தோள்	7
இருதயத்திற்கும், வயிற்றுக்கும் இடையே	2
கல்லீரல் மண்ணீரல் ..	6
ஆக ..	66

கழுத்துக்கு மேல்

கழுத்து	4
தாடை முதல் பொட்டு வரையில்	8
குரல்வளை	1
அடித்தொண்டை ..	1
மேல்வாய்	2
நாக்கு	1
உதடுகள்	2
மூக்கு	2
கண்கள்	4
கனனங்கள்	2
காதுகள்	2
நெற்றி	4
தலை	1
ஆக ..	34

பெண்களுக்கு உரித்தாய் இருப்பது 20.

ஸ்தனங்கள் 5+5	10
குறி உள்ளே, வெளியே 2+2	4
பிரசவமார்க்கம் ..	3
சுக்கில, ருதுமார்க்கங்கள் ..	3
ஆக ..	20

இந்த 700 நாடிகளில் கந்திபடக் கூடாதவை 98. இவற்றுள் கால் கைகளில் 16-ம், உடலில் 32-ம் கழுத்துக்கு மேல் 50 ம் இருக்கின்றன.

4. நரம்புகள் 200—இவைகளையே தொழில் நாடிகள் என்று வழங்குகிறோம். இவைகளும் நாபியிலிருந்து 24 மூல நரம்புகளாய்க் கிளம்பி 10 மேல் நோக்கியும், 10.கீழ்நோக்கியும், 4 குறுக்காகவும் செல்லுகின்றன. மேலே செல்லும் 10 நரம்புகளும் இருதயத்திற்குச் சென்றதும் ஒவ்வொன்றும் மூன்றாய்ப் பிரிந்து 30 ஆகின்றன.

இந்த 30 கிளைகளுள் 8 கிளைகள், சத்தம், ரூபம், ரஸம், கந்தம் இவைகளை எடுத்துச்சென்று; அவைகளை அறியும் பொறிகளுக்கு உதவி புரிகின்றன. 12 கிளைகள் மூச்சுவிடுதல் மூச்சு உள்ளிழுத்தல், பேசுதல். கத்துதல், தூக்கம், விழித்தல், கொட்டாவிவிடுதல், தும்மல், சிரித்தல், கண்ணீர் விடுதல், பெண்களுக்குப் பால்சுரத்தல், ஆண்களுக்கு சுக்கிலம் சுரத்தல் முதலிய வேலைகளைச் செய்கின்றன. ஒழிந்த 10 கிளைகள் தொப்புளுக்கு மேலே உள்ள இடங்களில் வாதம் பித்தம், கபம், ரத்தம், ரசம் இவைகளை அவைகளின் மார்க்கங்களில் செல்லும்படி செய்கின்றன.

கீழே செல்லும் 10 நரம்புகள் வயிற்றுக்கும் குடலுக்கும் இடையே ஒவ்வொன்றும் 3 ஆகப் பிரிந்து 30 ஆகின்றன. இவை பித்தாசயத்தை அடையும்போது அங்குள்ள அன்னபானரசத்தை நன்றாய்ப் பக்குவம் செய்து ரசத்தை அதன் இடத்துக்கு அனுப்புகின்றன. மேலே சொல்லப்பட்ட 30 பிரிவுகளில் 2 பிரிவுகள் குடலில் அன்ன பானாதிகளை நகரும்படி செய்கின்றன, 2 பிரிவுகள் அங்குள்ள திரவமான கழிவுப் பொருளை மூத்திராசயத்துக்குச் செலுத்துகின்றன; 2 பிரிவுகள் சுக்கிலத்தைச் சேர்க்கின்றன, 2.பிரிவுகள் சுக்கிலத்தைவெளிப்படுத்துகின்றன. இந்த 4 பிரிவுகளே பெண்களிடத்தில் ருதுவையுண்டாக்கி வெளிப்படுத்துகின்றன, 2 பிரிவுகள் மலத்தை வெளிப்படுத்துகின்றன, 2 பிரிவுகள் மூத்திரத்தை வெளிப்படுத்துகின்றன, இப்படி வேலைசெய்யும் 12 பிரிவுகள் போக, மிகுதியாயுள்ள 18.பிரிவுகளுள் 8 பிரிவுகள் குறுக்கே செல்லும் 4 மூல நரம்புகளிடத்தில் வியர்வையைச் சேர்ப்பிக்கின்றன. மற்ற 10 பிரிவுகளுள் வாதம், பித்தம், கபம், ரத்தம், ரஸம் ஆகியவற்றை தொப்புளுக்கு கீழே உள்ள பாகங்களின் மார்க்கங்களில் செலுத்துகின்றன. குறுக்காகச் செல்லும் 4 மூல நரம்புகள் ஒவ்வொன்றும் நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும். பிரிந்து உடலில் வியாபிக்கின்றன. அவற்றின் நுனிகள் மயிர்புக்காம்புகளோடு இணைக்கப்பட்டு இருக்கின்றன. அவைகள் உடலின் உள்ளும் புறமும் ரசம் பரவுவதற்கு உதவுகின்றன. முக்கியமாய் உடலிலிருந்து வியர்வையை வெளிப்படுத்துகின்றன. இவைகளின் உதவியினாலேயே உடம்பின் மேலே

தேய்க்கப்படும் எண்ணெய் முதலிய பசையுள்ள பொருள்கள் உடம்பிற்குள் செல்லுகின்றன. பரிசஉணர்ச்சியை எடுத்துச் செல்பவையும் இவையே.

5. **மிக்க சூட்சமமான நரம்புகள்** *22*.—இவைகள் யோகிகளுக்கே வசமாகக் கூடியவை. இவற்றின் விவரங்கள் யோக நூற்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

6. **சுரோதஸ் என்னும் கால்வாய்கள்**.—இவை நமது உடலிலுள்ள ரசம், ரத்தம், மாமிசம், மேதஸ், எலும்பு முதலிய தாதுக்கள், ஒன்று மற்றொன்றாய் மாறும்போது, அவற்றை எடுத்துச் செல்லும் கால் வாய்கள், உடம்பில் நாடிகள், நரம்புகள் தவிர மற்றக் குழாய்கள் யாவும் சுரோதஸ் என்று கொள்ளலாம்.

இவைகளுள் *13* **வகை உண்டு.**

1. பிராணவாயுவை எடுத்துச் செல்லுவது.
2. சரீரத்திற்கு வேண்டிய நீரை எடுத்துச்செல்வது.
3. ஆகாரத்தை எடுத்துச் செல்வது.
4. ஆகாரசாரத்தை எடுத்துச் செல்வது.
5. இரத்தத்தை எடுத்துச் செல்வது
6. மாமிசத்திற்கும் கொழுப்புக்கும் இடையிலிருக்கும் குழாய்.
7. கொழுப்புக்கும் எலும்புக்கும் இடையிலுள்ள குழாய்.
8. எலும்பிற்கும் மஜ்ஜைக்கும் இடையிலுள்ள குழாய்.
9. மஜ்ஜைக்கும் சுக்கிலத்திற்கும் இடையிலுள்ளது.
10. சுக்கிலத்தை எடுத்துச் செல்வது.
11. மூத்திரத்தை எடுத்துச் செல்வது.
12. மலத்தை எடுத்துச் செல்வது.
13. வியர்வையை எடுத்துச் செல்வது.

வாதம், பித்தம், கபம் என்னும் இம்மூன்றும் எல்லாவற்றிலும் வியாபித்து இருக்கின்றன.

மேலே சொல்லப்பட்ட கால்வாய்களில் சில திரண்டு பெருத்தும், சில மிக மெலிந்தும், சில நீண்டும், சில. அகன்றும் இருக்கின்றன. இவைகளின் நிறம், தாந்தாம் எடுத்துச் செல்லும் தாதுவின் நிறமே யாகும்.

7. **எலும்புப் பொருத்துகள்** *210*.—எலும்புகள் சேரும் இடங்கள் இருவகை. 1, அசையும் பொருத்துக்கள். 2. அசையாப் பொருத்துக்கள்.

கை, கால்களிளிலும், இடுப்பிலும், முகவாய்க்கட்டையிலும் இருப்பவை, அசையும் பொருத்துக்கள். மற்றவை அசையாதவை.

மேலே சொல்லிய 210 ல் கால், கைகளில் 68-ம் உடம்பில் 59-ம் கழுத்துக்குமேல் 83-ம் உள்ளன. பொருத்துகளின் உருவத்தைக்கொண்டு அவற்றை 8 வகைகளாய்ப் பிரித்திருக்கின்றனர்.

8. வலைகள்.—வலையைப் போன்ற அமைப்புகள் 4 வகை—

1. தசைவலை.
2. தசை நார் வலை.
3 என்பு வலை.
4. நாடி வலை.

இவை நான்கும் ஒன்றுக்குள் ஒன்று புகுந்து இருக்குமாறு அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை இரண்டு மணிக்கட்டுகளிலும், இரண்டு கனுக்கால்களிலும் ஆக 4 இடங்களில் உள்ளன.

8. பெரிய வலைகள்.—6—இவை மேலே சொல்லப்பட்ட வலைகள்போல எலும்பு, நாளம் தசைநார், தசை இவை நான்கும் சேர்ந்து நீண்டு ஒரு பக்கம் குறுகியிருக்கும் அமைப்புகள். இவைகள் கால், கைகளில் 4, கழுத்தில் 1, குறியில் 1 மாக இருக்கின்றன.

9. பெரிய தசைகயிறுகள் 4.—இவைகள் முதுகுத்தண்டில், தசைகளைப் பிணிப்பதற்காக ஏற்பட்டவை. உள்ளே இரண்டும் வெளியே இரண்டுமாய் அமைக்கப்பட்டிருக்கின்றன.

10. தையல் மேடுகள் 7.—இவை தலையில்—5, நாக்கில்—1, குறியில்—1 அமைந்திருக்கின்றன; துணிதைத்தமேடுபோல இருப்பன.

11. மர்மங்கள் 107.—இந்த இடங்களுக்குக் கெடுதி நேரிட்டால் உயிருக்கே ஆபத்து நேரிடுமாகையால், இவைகளுக்கு, மர்மங்கள் அல்லது மரண ஆபத்தைத் தரும் இடங்கள் என்று பெயர்.

தசை மர்மங்கள்	.. ..	11
நாடி மர்மங்கள்	.. ..	41
தசை நார் மர்மங்கள்	..	27
என்பு மர்மங்கள்	.. ..	8
பொருத்து மர்மங்கள்	..	20
ஆக	..	107

இவைகள் இருக்குமிடங்கள்.

கால் கைகளில்	..	..	44
வயிறு மார்புகளில்	..	..	12
முதுகில்	..	..	14
கழுத்துக்கு மேல்		..	37

இவைகளை, அபாயம் ஏற்பட்டு மரணம் உண்டாகும் கால வரையைப் பொறுத்து 5 வகைகளாய்ப் பிரித்திருக்கிறார்கள்.

1. உடனே மரணத்தைக் கொடுப்பது—19 இவைகளுக்குக் கெடுதிகள் ஏற்பட்டால், சுமார் 7 நாட்களில் உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும்.

2. காலக்கிரமத்தில் மரணம் நேரிடுபவைகளுக்குக் கெடுதி நேரிட்டால், சுமார் 15 நாள் முதல் ஒரு மாதத்திற்குள் உயிருக்குத் தீங்கை விளைவிக்கும் 33.

3. உள்ளே தைத்திருக்கும் ஆயுதம் முதலியவைகளை எடுத்தால், பிறகு மரணத்தைக் கொடுப்பது 3.

4. அங்கம் அல்லது இந்திரியத்தைக் கெடுப்பது 44.

5. வலியைக் கொடுப்பது 8.

உடம்பிலுள்ள ஜலபதார்த்தங்களின் அளவுகள்.

அஞ்சலி என்பது இருகைகளையும் கிண்ணிபோல் அமைத்து அளக்கும் அளவு.

1. நீர்	..	10 அஞ்சலி	8. தசைநீர்	3 அஞ்சலி		
2. சாரம்	..	9 ,,	9 கொழுப்பு	2 ,,		
3. செந்நீர்	..	8 ,,	10. மஜ்ஜைநீர்	1 ,,		
4. மலம்	..	7 ,,	11. மூளை	½ ,,		
5. கபம்	..	6 ,,	12. சுக்கிலம்	½ ,,		
6. பித்தம்	..	5 ,,	13. ஓஜஸ்	½ ,,		
7. மூத்திரம்	..	4 ,,				

உடம்பிலுள்ள பஞ்ச பூதங்களின் பிரிவுகள்.

1. **பிருதிவி அம்சம்.**—தூலமாகவும் திடமாகவும், உருவமுடையதாகவும் கனமாகவும் வழவழப்பின்றிக் கடினமாகவும் உள்ளவை. அவை நகம், எலும்பு, பல், மாமிசம் தோல், உடம்பின் உருவ அமைப்பு மயிர், தசை நார்கள் முதலியனவும் நாற்றமறியும் புலனும், நாற்றமுமாகும்.

2. **அப்பின் அம்சம்.**—திரவமாயும் ஓடக்கூடியதாயும் கடினமில்லாததாயும் எண்ணெய்ப்பசையுள்ளதாயும் மிருதுவாயும், ஒட்டக்கூடியதுமாயும், உள்ள பாகங்கள் அவை. ரசம், ரத்தம், கபம், பித்தம் மூத்திரம் வியர்வை முதலியனவும். ருசி அறியும் புலனும் ருசியுமாகும்.

3. **அக்கினியின் அம்சம்.**—பித்தம், உஷ்ணம், சரீரத்தின் காந்தி முதலியனவும் உருவத்தை அறியும் புலனும், உருவமுமாகும்.

4. **வாயுவின் அம்சம்.**—மூச்சுவாங்கி விடுதல், கண் இமைத்தல், உடம்பைக் குறுக்கல், நீட்டல், செல்லுதல், நடத்தல், தூக்குதல் முதலியனவும், பரிசத்தை உணரும் புலனுமாகும்.

5. **ஆகாய அம்சம்.**—இடைவெளிகளும், பெரியதும் சிறியதுமான தொளைகளும், சத்தத்தை அறியும் புலனும் சத்தமுமாகும்.

VIII. திணை

'**திணை**' என்பது நிலம், பூமி, தரை, இடம் மண் என்னும் பல பேர்களால் வழங்கப்படும்.

நிலம்—நில்—அம்—நிலம் ஆகலின், நிற்றலையுடையதாம். எப்பொருளும் நிற்றற்குரியது நிலம் எனக் கொள்க.

பூமி—எல்லா உயிர்களும் பூத்தற்கிடமாயுள்ளது.

தரை—எல்லாப் பொருள்களையும் தருதற்கிடமாயுள்ளது என்னும் குறிப்புப் பொருளைத் தரும்.

இடம்—எவற்றையும் இட்டு விளைவிப்பதற்குரியது.

மண்— எப்பொருளையும் தன்னிடத்து அழகாய் விளைவித்துக் காட்டுவது.

திணைகளைப்பற்றி மருத்துவ மாணவன் ஏன் அறிய வேண்டும்.

1. நிலங்களில் உணவிற்கும் மருந்துகள் செய்வதற்கும் கிடைக்கும் பொருள்களைத் தெரிந்து கொள்ளலாம்.

2. இன்னின்ன நிலங்களில் வசிக்க இன்னின்ன நோய்கள் உண்டாகும் அல்லது நீங்கும் என்பவற்றை அறியலாம்.

3. மருந்துகளைச் சாப்பிடுவது இன்னின்ன நிலம் சிறப்புடையதெனத் தேரையர்யமாகவெண்பாவில் விரிவாய்க் கூறினமையின் அதனையும் அறியலாம்.

4. இன்னின்ன நிலத்து நீர் உடலுக்கு நன்மை அல்லது தீமை பயக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

திணை ஐவகைப்படும்.

1. குறிஞ்சி
2. முல்லை
3. மருதம்
4. நெய்தல்
5. பாலை

ஐந்திணைக் குணம்.

1. குறிஞ்சி—

"குறிஞ்சி வருநிலத்திற்கு கொற்றமுண்டி ரத்தம்
உறிஞ்சி வருசுரமு முண்டாம்;—அறிஞருரைக்
கையமே தங்குதரத் தாமைவல்லை யுங்கதிக்கும்;
ஐயமே தங்கும் அறி." (ப.கு.சி.)

(பொழிப்புரை). நோய்க்கு இருப்பிடமாகிய 'குறிஞ்சி" என்னும் மலை நிலத்தில் விளைகின்ற பொருள்களுக்கு வன்மையுண்டாம். அவ்விடத்தில் தங்கி வசிப்பவர்கசு இரத்தத்தை உறிஞ்சுகின்ற சுரமும், வயிற்றில் ஆமைக்கட்டியும் உண்டாகும்; சிலேட்டுமமும் தங்கும் என்பதை நீ அறிவாயாக.

2. பாலை—

'பாலை நிலம்போற் படரைப் பிறப்பிக்க
மேலைநில மியாது விரித்தற்கு?—வேலை நில
முப்பிணிக்கும் மில்லம்; முறையே யவற்றகளாம
எப்பிணிக்கு மில்லமஃ தெண்."

(ப.கு.சி.)

(பொழிப்புரை) பாலை நிலம் வாதம், பித்தம் கபம் இவற்றால், விளைகின்ற பிணிகட்கு இருப்பிடம் என்றால் அவற்றாலுண்டாகும் பிணிகள்யாவும் இந்நிலத்தில்தோன்றும். ஆகையால், நோயினாலாகிய துன்பத்தை விளைவிப்பதில் இந்நிலத்திற்கு ஒப்பான நிலம் வேறில்லை.

ஈ. முல்லை.

'முல்லை நிலத்தயமே மூரிநிரை மேவினுமவ்
வெல்லை நிலைத்தபித்த மெங்குறுங்காண்—வல்லை யெனின்
வாதமொழி யாததனுண் மன்னு மவைவழிநோய்ப்
பேதமொழி யாதறையப் பின்பு.

(ப.கு.சி.)

(பொழிப்புரை) முல்லை நிலத்தில், ஆடு, பசு, எருமை முதலியவை இருப்பினும் அந்நிலத்திற்கு உரிய பித்தநோய் எவ்விடத்திற்போய் நிற்கும்? அன்றியும் வல்லைநோய் உண்டாகும். இதனால் வாத நோயும் வந்துறும் ஆகையால் இந்நிலத்தில் வாதச் சார்பான நோய்கள் பலவும் உண்டாகும்.

5. நெய்தல்—

''நெய்தனில மேலுப்பை நீங்கா துறினுமது
வெய்தனில மேதங்கு வீடாகும்;—நெய்தல்
மருங்குடலை மிக்காக்கும்; வல்லுறுப்பை வீக்கும்;
கருங்குடலைக் கீழிறக்குங் காண்''.

(ப.கு.சி.)

(பொழிப்புரை) நெய்தல் நிலத்தில், மிக்க உப்பு விளை பொருளாயிருப்பினும், அந்நிலத்தில் கொடுமையான வாதநோய்களே உண்டாகும். அந் நிலம் மெலிந்த உடலைப் பருக்கச்செய்யும்; ஈரலைப் பெருக்கும்; குடலைக் கீழிறக்குகிற குடல்வாயுவை உண்டாக்கும். .

4. மருதம்—

''மருதநிலம் நன்னீர் வளமொன்றைக் கொண்டே
பொருதனில மாதியநோய் போக்கும்; — கருதநிலத
தாறிரதஞ் சூழ அருந்துவரென் றாற்பிணியெல்
லேறிரதஞ் சூழ்புவிக்கு மில்''

(ப.கு.சி)

(பொழிப்புரை) மருத நிலமானது, தன்னிடத்திலுள்ள நீர் வளப்பம் ஒன்றையே கொண்டு, வாதம் முதலிய முத்தோட நோய்களையும் ஒழிக்கும். அந்நிலத்தில் விளையும் அறுசுவைப் பொருள்களை உண்பராயின், சூரியன் ஏறுகின்ற இரதம் சுற்றி வருகின்ற பூமியிலுள்ளார் அனைவருக்கும் அந் நோய்கள் உண்டாகா.

ஐந்திணைக் குணத்தின் தொகுப்பு.

''காற்படையான் பாலாழிக் கண்படையான் பச்சிமனூர்
காற்படையான் கோவெறிபுன் கண்ணயனோர்—காற்படை
யான்
வச்சிரத்தன் வாசநலி வாள்மா திடமாந்தரு
வச்சிரத்தன் வாழ்வருமை வாழ்''

(தே.ய.)

(பதவுரை) காற்படையான் (ஊர்)—சேவற் கொடியையுடைய முருகனுக்கு (தமிழ்க் கடவுள்) இடமாகிய குறிஞ்சியில், காற்படையான் புன்கண்—சேனுபதியாகிய சிலேத்தும நோயும், பாலாழிக் கண்படையான் (ஊர்)—பாற் கடலில் பள்ளி கொள்பவனுகிய திருமாலினிடமான முல்லையில், வெறி புன் கண்—பித்த நோயும் பச்சிமனூர்—மேற்றிசைக்குப் பாலகனுகிய வருணன் இடமாகிய நெய்தலில், கோபுன் கண்—அரசனுகிய வாதநோயும் ஆம்—உண்டாகும், வச்சிரத்தன் வாசம்—வச்சிராயுதத்தையுடைய இந்திரனிடமாகிய மருதத்தில், அயன் நலி ஒர் கால் படையான்—சிருட்டிகர்த்தா (பிரமன்) ஒரு காலத்திலும் எந்நோயையும் உண்டாக்கவொட்டான், வாள்மாது இடம்—துர்க்கையின் இடமாகிய பாலையில், திருவச்சிரத்தன்—நீடித்தயோக நிலையையுடையவனும், வாழ்வு—நீடித்த ஆயுளோடு வாழ்தல் அருமை அரிதாகும். வாழ்—(ஆகையால்) நீ உயர்ந்த நிலமாகிய மருத நிலத்திலேயே வாழக்கடவாய்.

இக்கருத்தை அடியிற்கண்ட மேற்கோளாலும் காண்க.

''உலம் மீளி மன்உவா மந்திரி
உதளாரிடம் உறவே உம்பரானிடம் சொன்மூவர்
உங்குலா வொண்ணுதகே உமையிடமா மதை
உஞ்சொணுது.''

(தே.கரிசல்)

(பதவுரை) உலம்—குறிஞ்சி நிலம், மீளி—ஐயநோய்க்கு இருப்பிடம் உவா—நெய்தல் நிலம், மன்—வாதநோய்க் கிருப்பிடம் உதளாரிடம்—முல்லை நிலம், மந்திரி—பித்தநோய்க்கு இருப்பிடம் உம்பரானிடம்—மருத நிலம், சொன்மூவர்—வாத, பித்த ஐயம் என்னும் முப்பகுதிப் பிணிகளும், உங்கு உலாவ ஒண்ணுதது—விளைய முடியாதது, உமையிட மாமது—பாலை நிலம் உஞ்சொணுது—உயிர் வாழ முடியாது.

குறிப்பு.—உலம்—கல், உவா—கடல். உதள்—ஆடு, உமை—துர்க்கை.

கருப்பொருள்கள்.

இந்த ஐவகை நிலங்களும், தனித்தனி பதினான்கு கருப் பொருள்களை உடையன.

அவை: (1) கடவுள், (2, உயர்ந்தோர் (ஆண், பெண்), (3) அல்லோர் (ஆண், பெண்), (4) புள் (5) விலங்கு, (6) ஊர், (7) நீர் (8) பூ (9) மரம். (10) உணவு, (11) பறை, (12) யாழ் (13) பண் (14) தொழில் என்பவைகளாம்.

குறிஞ்சி.

கடவுள்: முருகன்

உயர்ந்தோர்: பொருப்பன், வெற்பன், சிலம்பன், குறத்தி கொடிச்சி.

அல்லோர்: குறவர், கானவர், குறத்தியர்.

புள்: கிளி, மயில்.

லிலங்கு: புலி, கரடி. யானை, சிங்கம்.

ஊர்: சிறுகுடி.

நீர்: அருவி நீர், சுனை நீர்.

பூ: வேங்கைப்பூ குறிஞ்சிப்பூ, காந்தட்பூ.

மரம்: தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில், சந்தனம்.

உணவு: மலைநெல் தினை (ஏனல்), மூங்கிலரிசி.

பறை: தொண்டகம்.

யாழ்: குறிஞ்சியாழ்.

பண்: குறிஞ்சிப்பண்.

தொழில்: வெறிகோள், ஐவனம் (மலைநெல்) விதைத்தல் பைந்தினை காத்தல், தேனழித்தல், கிழங்கு அகழ்தல், அருவி யாடல், சுனையாடல்.

இதனை

'' விறற்சேர் பொருப்பன் வெற்பன் சிலம்பன்
குறத்தி கொடிச்சி குறவர் கானவர்
குறத்தியர் கிளிமயில் மறப்புலி குடாவடி
கறையடி சியம் சிறுகுடி யருவி
நறுஞ்சுனை வேங்கை குறிஞ்சி காந்தள்
ஆரந் தேக்ககில் அசோகம் நாகம்
வேரல் ஐவனம் தோரை ஏனல்
கறங்கிசைத் தொண்டகம் குறிஞ்சியாழ் குறிஞ்சி
வெறிகோள் ஐவனம் வித்தல் செறிகுரற்
பைந்தினை காத்தல் செந்தே னழித்தல்
செழுழ்கிழங் ககழ்தல் முழங்கிவீ ழருவியொடு
கொழுஞ்சுனை யாடல் குறிஞ்சிக்கருப் பொருளே.''

என நாற்கவிராச நம்பியகப் பொருளில் கூறிய வாற்றா னறிக.

முல்லை.

கடவுள் : நெடுமால்.

உயர்ந்தோர் : குறும்பொறை நாடன், தோன்றல் கற்பில் மனைவி, கிழத்தி.

அல்லோர் : இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர்

புள் : காட்டுக்கோழி.

விலங்கு : மான், முயல்.

ஊர் : பாடி.

நீர் : குறுஞ்சுனை, கான்யாறு.

பூ : குல்லை, முல்லை, தோன்றி, பிடவம்.

உணவு: வரகு சாமை, முதிர.

மரம் : கொன்றை, காயா, குருத்து.

பாறை : ஏற்றுப்பறை.

யாழ் : முல்லை.

பண் : சாதாரி.

தொழில் : சாமை, வரகு, இவற்றைவிதைத்தல், களையெடுத்தல், அறுத்தல், சேர்த்தல், கடாவிடுதல், குழலூதல், மூலினம் மேய்த்தல், சேவினந் தழுவல், குரவைக் கூத்தாடல் காட்டாற்றில் நீராடல்.

இதனை.

'நெடுமால் குறும்பொறை நாடன் தோன்றல்
வடுவில் கற்பின் மனைவி கிழத்தி
இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்
கான வாரணம் மான்முயல் பாடி
குறுஞ்சுனை கான்யாறு குல்லை முல்லை
நிறநீகிளர் தோன்றி பிறங்கலர்ப் பிடவம்
கொன்றை காயா மன்றலங் குருந்தம்.
தாற்றுக்கதிர் வரகொடு சாமை முதிரை
ஏற்றுப்பறை முல்லை யாழ்சா தாரி
சாமை வரகு தாமுடன் வித்தல்
அவைகளை கட்டல் அரிதல் கடாவிடல்
செவிகவர் கொன்றைத் தீங்குழ லூதல்
மூவினம் மேய்த்தல் சேவினம் தழுவல்
கழுமிய குரவையொடு கான்யா றென்றிவை
முழுதுட னுடன் முல்லைக்கருப் பொருளே.''

என்பதாலறிக. (நம்பிமகப் பொருள்,)

நெய்தல்.

கடவுள் : வருணன்.

உயர்ந்தோர் : சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுளைச்சி,
அல்லோர் : நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர்.

புள் : கடற்காக்கை.
விலங்கு : சுறவம்.
ஊர் : பாக்கம், பட்டினம்.
நீர் : உவர் நீர்க்கேணி, கவர்நீர்.
பூ : நெய்தல், தாமரை, தாழை, அடம்பு.
மரம் : கண்டல், புன்னை, ஞாழல்.
உணவு : மீனும் உப்பும் விற்றுப் பெற்ற பொருள்.
பாறை : நாவாய்ப் பம்பை, மீன் கோட்பறை.
யாழ் : விளரி.
பண் : செவ்வழி :

தொழில் : மீன் பிடித்தல், உப்புண்டாக்கல், மீனுக்கு உப்பிடுதல் உலர்ந்தவைகளை விற்றல், மீனுலர்த்தல் பறவை காத்தல், கடலாடல்.

இதனை :

"வருணன் சேர்ப்பன் விரிதிரைப் புலம்பன்
பருமவ வல்குற் பரத்தி நுளைச்சி
நுளையர், நுளைச்சியர், பரதர், பரதியர்
அளவர் அளத்தியர் அலைகடற் காக்கை
சுறவம் பாக்கம் பெறலரும் பட்டினம்
உவர்நீர்க் கேணி கவர்நீர் நெய்தல்
கண்டகக் கைதை முண்டகம் அடம்பு
கண்டல் புன்னை வண்டிமிர் ஞாழல்
புலவுமீ னுப்பு விலைகள் பெற்றன்
நளிமீன் கோட்பறை நாவாய்ப் பம்பை
விளிரியாழ் செவ்வழி மீனுப்புப் படுத்தல்
உணங்கவை விற்றல்மீன் உணக்கல்புள் ளோப்பல்
நெடுங்கடலாடல் நெய்தற்கருப் பொருளே."

என்பதாலறிக.

(நம்பியகப் பொருள்)

மருதம்.

கடவுள் : இந்திரன்.

உயர்ந்தோர் : ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி
அல்லோர் : உழவர், உழத்தியர், கடையர், கடைசியர்.

புள் : வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், பெருநாரை கம்புள், குருகு, தாரா.

விலங்கு : எருமை, நீர்நாய்...

ஊர் : பேரூர், மூதூர்.

நீர்: யாறு, வீட்டுக்கிணறு, குளம்.

பூ : தாமரை, குவளை, செங்கழுநீர்.

மரம் : காஞ்சி, வஞ்சி, மருதம்.

உணவு : செந்நெல், வெண்ணெல்.

பறை : மணமுழவம், நெல்லரிகிணை.

யாழ் : மருதயாழ்.

பண் : மருதப்பண்.

தொழில் : விழாக்கொள்ளல், களைகட்டல், அரிதல், கடவிடல், குளத்திற் குளித்தல், ஆற்றிற் குளித்தல், புது நீராடல்.

இதனை :

''இந்திரன் ஊரன் பைந்தார் மகிழ்நன்
கெழுதகு கற்பிற் கிழத்தி மனைவி
உழவர் உழத்தியர் கடையர் கடைசியர்
மழலைவண் டானம் மகன்றில் நாரை
அன்னம் போதா நன்னிறக் கம்புள்
குருகு தாரா எருமை நீர்நாய்,
பெருகிய சிறப்பிற் பேரூர் மூதூர்
யாறு மனைக்கிண றிலஞ்சி தாமரை
நாறிதழ்க் கழுநீர் நறுமலர்க் குவளை
காஞ்சி வஞ்சி பூஞ்சினை மருதம்
செந்நெல் வெண்ணல் அந்நெல் அரிகிணை
மன்றல் முழவம் மருதயாழ் மருதம்
மன்றணி விழாக்கோள் வயற்களை கட்டல்
அரிதல் கடாவிடல் அகன்குளங், குடைதல்
வருபுன லாடல் மருதக்கருப் பொருளே.''

என்பதாலறிக. (நம்பியகப் பொருள்)

பாலை.

கடவுள் : கன்னி.

உயர்ந்தோர் : விடலை, காளை, மீளி, எயிற்றி.

அல்லோர் : எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியா.

புள் : புறவு, பருந்து, எருவை, கழுகு.

விலங்கு : செந்நாய்.

ஊர் : குறும்பு.

நீர் : நீரில்லாக்குழி, வற்றின கிணறு.

பூ : குரா, மரா.

மடம் : உழிஞை, பாலை, ஓமை, இருப்பை.

உணவு : வழிபறித்தலை, பதிகளிற்களவாடியவை.

பறை : துடி.

யாழ் : பாலையாழ்.

பண் : பஞ்சுரம், வெஞ்சமம்.

தொழில் : பகற்கொள்ளையடித்தல், போர்செய்தல்.

இதனை,

''கன்னி விடலை காளை மீளி
இன்னகை எயிற்றி எயினர் எயிற்றியர்
மறவர் மறத்தியர் புறவுபருந் தெருவை
கழுகு செந்நாய் கல்கெழு குறும்பு
குழிவறுங் கூவல் குராஅ மராஅ
உழிஞை பாலை ஓமை இருப்பை
வழங்குகதிக் கொண்டன செழும்பதிக் கவர்ந்தன
பகைத்துடி பாலையாழ் பஞ்சுரம் வெஞ்சமம்
பகற்சூறை யாடல் பாலைக்கருப் பொருளே''.

என்பதாலறிக. **(நம்பியகப் பொருள்)**

பொழுதுகளின் வகைகளும் அவ்வந் நிலத்திற்கு உரிய பொழுதுகளும்.

பொழுது, பெரும்பொழுதென்றும் சிறு பொழுதென்றும் இரு வகைப்படும்.

பெரும்பொழுதின் வகை.

''காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனில் என்றாங்கு
இருமூன்று திறத்தது தெரிபெரும் பொழுதே''.

சிறுபொழுதின் வகை.

''மாலை இரவு யாமம் வைகறை எற்படு
காலை வெங்கதிர் காயுநண் பகலெனக்
கைவகைச் சிறு பொழு தறுவகைத் தாகும்''.

மேற்கூறப்பட்ட பொழுதுகளுள் குறிஞ்சிக்குரியபொழுது.

“கூதிர் யாமம் முன்பனி என்றிவை
ஓதிய குறிஞ்சிக் குரிய வாகும்”.

பாலைக்குரிய பொழுது.

“வேனில் நண்பகல் பின்பனி என்றிவை
பான்மையின் உரிய பாலை தனக்கே.”

முல்லைக் குறியபொழுது.

“மல்குகார் மாலை முல்லைக் குரிய.”

மறுதத்துக் குறிய சிறுபொழுது.

“இருள்புலர் காலை மருதத்திற் குரித்தே.”

நெய்தற்குறிய சிறுபொழுது.

“வெய்யோன் பாடு நெய்தற் குரித்தே.”

மருத நெய்தல்களின் பொரும்பொழுது.

“மருதம் நெய்தல் என்றிவை யிரண்டற்கும்
உரிய பெரும்பொழு திருமூன் றும்மே.”

(நம்பி அகப்பொருள்)

பின் வரும் இறையனுர் அகப்பொருள் சூத்திரமும் நோக்குக.

“காரும் மாலையும் முல்லை குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர்.”
“பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப.”

“வைகுறு விடியல் மருதம் எற்பாடு
நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்.”

“நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கில் முன்னிய நெறித்தே.”

“பின்பனி தானும் உரித்தென மொழிப”.

மருதத்திற்கும் நெய்தற்கும் பெரும்பொழுது சொல்லிற்றின்மையின், அறுவகை இருதுவும் உரிய எனக்கொள்க.

கால ஒழுக்கம்.

பன்னிரண்டு திங்கள் கொண்ட ஓர் ஆண்டை ஆறு பிரிவுகளாகப் பிரிக்க, ஒவ்வொரு பிரிவும், இரண்டிரண்டு திங்களைக் கொள்ளும். இரண்டு திங்களைக் கொண்ட ஒவ்வொரு பிரிவும் காலம் அல்லது பருவம் எனப்படும். (திங்கள்—மாதம்).

அக்காலங்கள்.

ஈறாறு திங்களையும் இவ்விரண்டாய் வில்முதலாய்
ஓராறிருதுவாய் ஓதுவரே— சீரார்
இரும்பொழுதின் பேர்தான் இருபனி வேனில்
கருமுகில் கூதிரெனக் காண்.

ம. த. பா.

அருஞ்சொல்லுரை :—வில்முதலாய் தநுர்மாதம் என்னும் மார்கழி முதற்கொண்டு; இருது—பெரும்பொழுது. முகில்—மேகம்.

1. கார்காலம்
2. கூதிர்க்காலம்.
3. முன்பனிக்காலம்.
4. பின்பனிக்காலம்.
5. இளவேனிற்காலம்.
6. முதுவேனிற்காலம்.

ஒவ்வொரு காலத்திலும் அடங்கிய மாதங்கள்

1. ஆவணி, புரட்டாசி—கார்காலம்.
2. ஐப்பசி, கார்த்திகை—கூதிர்க்காலம்.
3. மார்கழி, தை—முன்பனிக் காலம்.
4. மாசி, பங்குனி—பின்பனிக்காலம்.
5. சித்திரை, வைகாசி—இளவேனிற்காலம்.
6. ஆனி, ஆடி—முதுவேனிற்காலம்.

இதனை

''மருவிய காரேகூதிர் முன்பினிற் பனிக ளோடு
விரவிய இளைய வேனில் விரைந்திடு முதிர்ந்த வேனில்
மருவுமா வணியேயாதி மற்றிரண்டிரண்டு மாதம்.''

என்னும சூடாமணி நிகண்டாலறிக.

கார்கால நிகழ்ச்சிகள்.

(ஆவணி, புரட்டாசி.)

வாடை வீசலும், இந்திர கோபம். மயில், அசுணமா அல்லது அசுணம் இவ்வகள் மகிழ்தலும்; வெண்காந்தள், செங்காந்தள், கொன்றை, கூதாளம், வேங்கை, காக்கணம், முல்லை, கடம்பு, காயா (காசா), குருந்து இவை மலர்தலும்; அன்னம், கிளி, குயில் இவை வருந்துதலும்; தாமரை முதலிய நீர் மலர்கள் ஏங்கலும் (வாட்டமடைதலும்) கார்கால நிகழ்ச்சிகளாம்

கார்கால குணம்—நிழலின் குணம்.

கார்காலக் குணந்தன்னைக் கருதியுரைத் திடக்கேளாய்.
காந்திகெடுந் தாகமறுங் காதலுமுண் டாகும்
பார்மேவு களிப்பெய்து நித்திரையும் மேவும்
பசிமந்தம் வாதமிக லாங்குளிருண் டாகும்.
சீர்மேவு நிழல்குணந்தான் மேனிபதைப் பெய்துஞ்
சீர்மையுண்டாம் வாதமுண்டாஞ் சேத்மவலித் தனமா
ஏர்மேவும் பசிமந்தந் தாகமுண் டாகும்
எழில்வேறு படுமென்றா ரிசைப்புலவர் தாமே."

கூதிர்க்கால நிகழ்ச்சிகள்.

(ஐப்பசி, கார்த்திகை.)

குளிர்காற்று வீசலும்; குருகு (நாரை) அன்னம், கொக்கு சகோரம், சங்கு, நண்டு, நத்தை இவைகள் மகிழ்தலும்; நீர் தெளிதலும்; மீன் சினை பெருகுதலும்; மேகம் சூல் கொள்ளலும்; பாரிசாதம், சிறுசண்பகம், செம்பரத்தை, சந்யதம், நாணல், முதலியன மலர்தலும்; பல பறவைகளும், விலங்குகளும், மக்களும் வருந்துதலும் கூதிர்க்கால நிகழ்ச்சிகள் ஆகும்.

முன்பனிக்கால நிகழ்ச்சிகள்.

(மார்கழி, தை.)

கொண்டல் (கீழ்க்காற்று) வீசலும்; தூக்கணங் குருவீ கூகை ஆந்தை இவை மகிழ்தலும்; மாவும், சிவந்தியும் மலர்தலும்; இலந்தை பழுத்தலும்; செந்நெல் விளைதலும்; கரும்பு முதிர்தலும் முன்பனிக்கால நிகழ்ச்சிகள் ஆகும்.

பின்பனிக்கால நிகழ்ச்சிகள்.

(மாசி, பங்குனி.)

உலவை (தென் கீழ்க்காற்று) வீசலும்; பல புறவினமும் கானங்கோழிகளும் மகிழ்தலும்; கோங்கும், இலவும் மலர்தலும்; பேரீந்து, பனை இவை பழுத்தலும்; (வெண் சுணை) பருத்தி வெடித்தலும் பின்பனிக்கால நிகழ்ச்சிகள் ஆகும்.

இளவேனிற்கால நிகழ்ச்சிகள்.

(சித்திரை, வைகாசி).

தென்றல் வீசலும்; வண்டு, கிளி பூவை (நாகண வாய்ப்புள் அல்லது மைனா, அன்றில் (கிரௌஞ்சம்), குயில் இவை மகிழ்தலும், மாங்கனியுதிர்தலும், புன்னை, மகிழ், தாழை, சண்பகம் இவை மலர்தலும்; இந்திர கோபம் முதலியன மெலிதலும் இளவேனிற்கால நிகழ்ச்சிகள் ஆம்.

முதுவேனிற் கால நிகழ்ச்சிகள்.

(ஆனி, ஆடி.)

கோடை (மேற்காற்று) வீசலும்; கானல் தோன்றலும்; காடை, வலியன், வானம்பாடி, காகம், கௌதாரி இவை மகிழ்தலும்; மல்லிகை, புளி, பாதிரி இவை மலர்தலும்; பாலை காஞ்சிரம் (எட்டி) நாவல் இவை காய்த்தலும் முதுவேனிற்கால நிகழ்ச்சிகள் ஆம்.

அயன (வழி) விளக்கம்.

சுற்றும் பூமி சூரியனைச்
சுற்றா மற் செங்குத்தாகச்
சற்றுச் சாய்ந்து சுற்றுவதால்
தானே பானு வடக்கிரிந்தும்
தெற்கிற் சார்ந்தும் தோற்றுமதைச்
செப்பு மாண்டி னிருசெலவாய்
மற்றச் 'சோதி நூற்கணிதர்
மகரம் கடகம் அதன் முதலே

ம. த. பா.

அருஞ்சொற்பொருள்—இரிந்து—ஓடி, செலவு—அயனம் சோதிநூற்கணிதர்—சோதிடர்; மகரம்—தை கடகம்—ஆடி

ஒரு தைத் திங்களின் பிறப்பாண்டு இரண்டு பிரிவாய்க் கூறப்படும்; அப்பிரிவை அயனம் 'என்பர். அஃது, 'உத்தாரயாணம் தக்ஷிணாயனம்' என இருவகையாம்.

அவற்றுள் 'உத்தராயணம்' என்பது, சூரியன் வடக்கு வழியாய்ச் செல்வது; 'தக்ஷிணாயனம்' என்பது, சூரியன் தெற்கு வழியாய்ச் செல்வது.

ஆதித்தற் குச்சமோ டாட்சிக்குட்பட்டதென்
றோதிடும் பூமத்திக் குத்தரத்தே—பூதிசார்
தென்தமிழ்நா டுள்ளதால் செப்பாறு போழ்துசற்று
முன்ன தாகத் தோன்று முணர்.

[ம.த.பா.]

பொருள்—தென்தமிழ் நாடானது சூரியனுடைய செங்குத்தான கிரணங்களால் வெப்பமும் ஒளியும் பெறுவதான வெப்ப மண்டலம் எனப்பட்ட பூமியின் நடுப்பாகத்திற்கு மிக அருகில் இருக்கும் காரணத்தால் ஆறு பெரும் பொழுதுகளும் காலக் கணிதத்தில் கூறப்பட்ட நாட்களுக்கு முன்னதாகவே தொடங்கி விடுமென்பதை அறிவாயாக. இக்கூற்று உண்மை என்பது மார்கழியில் பெய்யத் தொடங்க வேண்டிய பனி கார்த்திகை 15 தேதிக்குள்ளாகவே தொடங்கி விடுவதையும், பங்குனி மாத நடுவிலேயே வெயிலின் கடுமை அதிகரித்து இளவேனில் போலக் காய்வதையும் கண்டறிந்த பெரியோர்கள் ஷை ஆறு பெரும் பொழுதுகளையும் காலக் கணிதத்தில் கூறப்பட்ட தேதிக்குப் 15 நாட்கள் சராசரியாய் முன்னதாகவே மருத்துவப் பெரும் பொழுதுகள் தொடங்குவதாகக் கொண்டு அவ்வக்காலத்து ஒழுக்கங்களை தவறாமல் ஏற்று நடத்தி வந்தால் காலமாறுபாடுகளால் ஏற்படும் நோய்களைத் தடுத்துக் கொள்ள இயலும் என்பதை அனுபவத்தில் கண்டு பிடித்துள்ளனர். இது தென் கீழ்த் தமிழ் நாட்டிற்கே ஒவ்வும் என்றுணர்க. கேரளம், ஆந்திரம், கன்னடம் என்னும் நாடுகளில் நேரும் பொழுதுகளில் மிக்க வேற்றுமை இருப்பதை அறிவர். அவ்வந்நாட்டின் இயற்கையமைப்பு இவ்வகைப் பெரும் பொழுதுக் கணிப்பில் பங்கு கொள்வதால் அதைச் செவ்விதின் அறியப் பூமியறிவியலை நன்கறிதல் வேண்டுமென்க.

உத்தரர்யணம்.

(சூரியன் வடக்கு வழி.)

முன்பனிக்காலப் பிற்பகுதித் திங்களாகிய தைத்திங்கள் முதல், முதுவேனிற் காலத்தின் முற்பகுதியான ஆனித் திங்கள் ஈறாகக் கூடிய ஆறு திங்கள் உத்தராயணமாகும்.

அவை, முன்பனிக்காலத்தின் கடைசித் திங்களாகிய தையும்; பின்பனிக் காலத்து மாசி, பங்குனியும்; இளவேனிற் காலத்துச் சித்திரை, வைகாசியும்; முதுவேனிற் காலத்து முதலாந் திங்களாகிய ஆனியுமாம்.

இவ்வுத்தராயணத்தில் (கதிரவன் வடக்கு வழியில்) கேதிட (கணிதம், சாத்திரத்தின்படி ஆரம்பகாலமாகிய தைத் திங்களில் உயிர்களின் உடல் வன்மை குன்றுதல் இல்லை. ஆதலின். இத் தைத் திங்கள் நீங்க, மற்ற மாதங்களாகிய மாசி

பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனிகளிலும், தட்சிணாயனத்தின் ஆரம்பத் திங்களாகிய ஆடியிலும், உத்தராயணத்திற்குரிய வெப்பம், தீ முதலியவற்றால் உடல் வன்மை குன்றும். ஆதலால், இம்மாதங்களாகிய, மாசிமுதல் ஆடி ஈறாய் உள்ள ஆறும் உத்தராயணம் என்று வைத்திய சாத்திரத்திற் கொண்டு, இதை ஆதான காலம் எனக் கூறுவது உண்டு. இதனால் வைத்தியர் கொண்டுள்ள உத்தராயணமும் (ஆதான காலமும்), சோதிடர் கணிக்கும் உத்தராயணமும் வேறுபடுதலைக் காண்க.

இவ்வாறே தட்சிணாயனத்தையும் ஆவணி முதல் தை வரையிற் கொண்டுள்ளனர். இக்காலத்தை உடல் ஆக்ககாலம் (ஆதேயகாலம்) என்று கூறுவர்.

சூரியன் வடக்குவழிச் செல்லுங் காலத்தின் தன்மை.

வடக்குச் செலவாய் வழங்கும் பொழுதில்
திடமுடன் ஞாயிறு தீய்க்கும்—உடலுரம்போம்
ஈர்த்திடும் பூசார மெல்லா மதனால்
ஓர்போக்கிக் கால முரம். [ம. த. பா.]

அருஞ்சொற்பொருள்—ஞாயிறு—கதிரவன் தீக்கும்—மிக்க அனற்றும்; ஈர்த்திடும்—இழுத்துக் கொள்ளச் செய்தல் அல்லது சுவடறிச் செய்யும்; ஓர்—உணர்வாயாக; உரம்—வலிமை.

பின்பனி வேனில் பெருங்கனல் கோடையால்
துன்னுகைப்புச் சிக்குந் துவர்படி கார்ப்—பென்னிரதம்
பண்டமுண்டாம் மண்ணிற் பசைதரும் தன்மையும்
திண்ணமாய் அஃகலாற் றேர்.

ம. த. பா.

அருஞ்சொற்பொருள்—கோடை—வறட்சி; துன்னு—நெருங்கிய; சிக்கும்—இறுகப் பிணைக்கும்.

இக்காலத்தில் சூரியன் வடக்கு வழியாய்ச் செல்லுதலாலும், அவ்வமையம் நமது நிலப்பிரிவு சூரியவழிக்கு நெருங்கி இருப்பதாலும் அஃது அதிக வெப்பத்தைப் பெறுகின்றது. ஆகையால், அதில் வாழும் உயிர்கள் அவ்வெப்பத்தையடைகின்றன. அண்டத்திலுள்ளது பிண்டத்திலாகையால், இஃது ஏற்படுகின்றது. அவ்வெப்பம் அதிகமாயும், கூர்மையாயுமிருப்பதுடன், வறட்சியைத் தரத்தக்கதாயும் இருப்பதால், பூமியினியற்கைக்குணம் (தன்மை) மாறுதலையடைகிறது. இதனால், கைப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்னும் இம்மூன்று சுவைகளும் முறையே பின்பனி, இளவேனில், முதுவேனிற் காலங்களில் வன்மைபடைகின்றன. ஆகையால், இவை வெப்பக்குணத்தையும் பலக்குறைவையும் உண்டாக்குந் தன்மையுடையனவாம்.

ஆதானம்—ஈடு, ஏற்றுக்கொள்ளுதல். ஆதேயம்—தாங்கப்படுவிதி.

சூரியன் தெற்கு வழி—தட்சிணாயனம்.

கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம் ஆகிய இக் காலங்களில் (ஆவணி முதல் தை வரையிலுங் கூடிய ஆறு திங் களில்), சூரியன் தெற்கு வழியில் (தட்சிணாயனம்) செல்லு கிறான் என மருத்துவ நூல் வழங்கும். இக்காலத்தில் நமது நிலப்பிரிவு, சூரிய வழிக்கு நெருக்கமின்றி விலகி இருப்பதால், இது குளிர்ச்சியை அடைகிறது. இக்காலம், உயிர்களின் உடல் வன்மையைப் பெருக்கிக் காக்குந் தன்மையுடையது.

சூரியன் தெற்கு வழிச் செல்லும் காலத்தின் தன்மைகள்.

தென்திசைப் போக்கெனச் செப்பிடுங் காலத்தில்
துன்றிய கார்முகில் தூற்றலால்—பொன்திகழ்
ஞாயிற்றின் வெம்மையும் நானிலங்கால் சூடும்போய்
ஆயிடும் தட்ப மறி.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—நானிலங்கள்—குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பவை.

கார்கூதிர் முன்பனியில் காண்சீதத் தன்மையால்
தேர்புளி யுப்பினிப்பு சேர்சரக்—கேர்பெறுநெய்ப்
புண்டாம் உலகில் உடலுர மோங்குமென்று
கொண்டாடுங் காலமிது கொள்.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள் காண்—தோன்றும்.

இக்காலம், இயற்கையிலேயே தண்மைக்குணமுடையது ஆகையால், பூமியைச் சூரியவெப்பத்திலிருந்து விடுவித்துக் குளிர்ச்சியைப் பெறுமாறு செய்யும். இங்ஙனம் பூமியை விடு விப்பதற்கு நீர் கொண்ட மேகமும், மழையும் குளிர் காற்றும் சிறந்த காரணங்களாகும். ஆகவே, இக் காலத்தில் நெய்ப்புக் குணம் மேலிடும். இது காரணமாக, கார்காலத்தில் புளிப்பும், கூதிர்க்காலத்தில் உவர்ப்பும் முன்பனிக்காலத்தில் இனிப்பும் முறையே வன்மை பெறும்.

உத்தம, மத்திம, அதம பலன் நேரிடும் பருவங்கள்.

உலகி னுயிர்பயிர் ஒங்குரந்தான் மூன்றா
இலங்கு மிருபனி யீன்கார்—துலங்கு
பயனேய் யிருவேனில் பாங்குடன் கொள்ளும்
உயர்நடு கீழ்த்தரத்தை யோது.

[ம.த.பா.

அருஞ்சொற்பொருள்—இலங்கும்—விளங்கும்; ஈன்—துன் புறுத்தும்; துலங்கு—விளங்கு; எய்—பொருந்தும் ஈற்றடியை உயர்தரம் (உத்தமம்); நடுத்தரம் (மத்திமம்), கீழ்த்தரம் (அதமம்) என்று அமைத்துக் கொள்க.

1. முன்பனி, பின்பனிக்காலங்களில் உயிர்களும் தாவரங்களும் உத்தம பலனைப் பெறும்.

2. இளவேனில், கூதிர் இக்காலங்களில் மத்திம பலனைப் பெறும்.

3. கார், முதுவேனில் இக்காலங்களில் அதம பலனைப் பெறும.

முன்பனிக் காலத்தின் குணம்.

முன்பனிப் பொழ்தில் முழுவுரம் மக்களுறுவர்
துன்னுகுளிர் தோலின் துளைமெய்யில்—மன்னுபல
வாயில்களெல்லாம் வலியச் சுருக்கி மூடும்
ஆயிடுமுட் சூடதிக மாய்.

[ம.த.பா.]

முன்பனிப் பொழுதினில் மூடிடும் பனியால்
முழுமையும் உடலினைக் கம்பளி கொண்டே
துன்னிய அதளுடன் துளைகளும் ஒன்பான்
தொழில்பயில் வாயிலும் பிறவுமே திறவா
இன்னண தகைமையா லியல்புள உட்டீ
எழுந்திடும் செரியனல் மிகுத்திட வாற்றும்
பன்னிய பகற்பொழு தஃகிடும் நிசிதான்
பல்கிடும் பசிமிகும் வைகறைப் பொழுதே

]ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—அதள்—தோல்; உட்டீ (உள்+தீ) உட்சூடு அல்லது தாது அக்கினி; செரியனல்—ஆக்களல் அல்லது ஜாடராக்கினி; அஃகிடும்—சுருங்கும்; நிசி—இரவு: பல்கிடும்—அதிகரிக்கும்; வைகறை—விடியற்காலம்.

பசிதணிந் திடத்தகப் புசித்திடா துறங்கில்
பக்குவா சயத்துளப் பவனனும் பெருகிக்
கசிந்திடுங் கனலுடன் வெகுண்டெழ நிகழ்த்திக்
கனத்துள எழுவகைத் தாதுவைத் தகித்து
நசித்திட இயற்றிடும் உதயமுன் னெழுந்து
நனிகுளித் தகவனல் இரிந்திடத் துதித்து
உசிதமாய்ப் பூசனை யுஞற்றியின் சுவைத்தாம்
உணவுணல் நலமெனும் மருத்துவர் குறிப்பே.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—தக=ஏற்றவாறு; பவனன்=வாய்வு (இங்கு சமானன் என்க); கனத்துள=பாரித்துள்ளதான; தகித்து=எரித்து; நசித்திட=கெட; அகவனல்=உட்சூடு; இரிந்திட=வெளியேற; உஞற்றி=செய்து.

இப்பருவத்தில் மானிடர் மிக்க உரம் பெற்றிருப்பர். ஆயினும், முன்பனியினாலும் கீழ்க்காற்றாலும், குளிர்ச்சியினாலும் உடலின் மயிர்க்கால்களும், மற்றப் பாகங்களும் சுருங்கும். இக் காரணத்தினால், மயிர்த் துவாரங்கள் முதலியன மூடப்படும். ஆதலால், உடலின் உட்சூடு மிகுந்து, பசித்தீ மிகுதிப்படும். அங்ஙனம் மிகுந்த தீக்கு வேண்டும் உணவு இன்றேல், உடலினுள்ளிருக்கும் வாயுவினால் அது தூண்டப் பட்டுத் தாதுக்களை எரிக்கத் தொடங்கும்.

முன்பனிக்கால வொழுக்கம்.

களிப்புடன் மிகுத்திடல் பிடித்திடல் குத்திக்
 கைகொடுடல் தனிற்பொரு துபயிலல் சற்றுத்
துளிப்பெழ வியர்வையும் உழன்றுபின் மூற்றும்
 சுவறிடக் களைப்பகன் றிடவெடுத் தோய்வு
குளிக்குமுன் சிரத்திலும் உடலிலும் வாய்வு
 குடிகெட முடிபிடித் தைலமுந் தேய்த்துக்
குளித்திடு மான்மதங் குங்குமம் அப்பிக்
 கொளுவகிற் புகைதனில் புலர்த்திடச் செப்பும்.

[ம. த. பா.]

அருஞ்சொற்பொருள்—உழன்று=(உடலை) வருத்தி. முடி பிடித்தைலம்=முடித்தைலம் (தலைக்காம் தைலம்) பிடித் தைலம் உடற்காம் தைலம்; மான்மதம்=கஸ்தூரி; குங்குமம்—குங்குமப்பூ; புலர்த்திட—உலர்த்திட.

முன்பனிக் காலத்திற்கேற்ற உணவு.

அளிக்கும் வலிவை உளுந்தும் யவையும்
 அரிய பயறும் பசுநெய் சொரிந்த
வளியைத் தணிக்கும் உவர்ப்பு புளிப்பு
 மதுரஞ் சுவைத்த உயர்ந்த உணவுண்
களிப்பைத் தருநெல் லரிசி யளித்த
 கருத்துக்கினிய மதுவைக் குடித்தும்
குளிர்ந்த பனியை எதிர்த்துப் பொருதக்
 கொடுத்த வுரைதான் கருத்திற் கொளுமே.

[ம. த. பா.]

அருஞ்சொற்பொருள்—அளிக்கும்=காக்கும்
குறிப்பு—மது அருந்துதலைத்தவிர்த்தல் நலம்.

யவை=வாற்கோதுமை சம்பாக் கோதுமை என்ற வகையைக் கொள்ளலாம்); மது—கள்; பொருத—தாக்கி வெல்ல.

பனிக்காலப் படுக்கை.

மெத்தென் றிருக்கு முளைசெறி யதளும்
வெம்மை புரக்கும் பருத்தியின் விரிப்பும்
சுத்தச் சிதமை யுரோமகம் பளமும்
துன்னு மமளி தனிற்படுத் துடற்கு
மெத்த இதமாய்ப் பொருந்திய கலையை
மெய்யி னனலைச் சமநிலை நிறுவச்
சித்தங் கொடுகப் பிடுகுளிர் முடுகிச்
செல்க உறங்கப் பனிநிசி தனிலே.

[ம.த.பா.]

அருஞ்சொற் பொருள்—உளை=மயிர்; அதள்=தோல்; புரக்கும்—காக்கும்; சிதமை=ஆடு; உரோமம்=மயிர்; அமளி=படுக்கை; கலை=துணி; (போர்வையைக் குறிக்கும்); கப்பிடு—உடல் முழுமையும் ஒரே சரியாய் போர்த்திக்கொள்; நிசி=இரவு.

பணைத்து நெருங்கிய நகில்களும்
பருத்த அரம்பையின் தொடைகளும்
மணத்தப் பரிமளக் கலவையும்
மனத்தைக் கவர்தரு மியல்புள
மணந்த மயில்தனை மருவிடில்
மகிழ்ச்சி மிகவுறும் மயல் தரும்
இணைந்து குறியிடைக் கலவி செய்
திருக்கப் பனிதனக் கிரங்கலென்

[ம.த.பா.]

அருஞ்சொற் பொருள்—பணைத்து=பெருத்து; நகில்=முலை; அரம்பை=வாழை (ஈண்டு வாழைத் தண்டைக் குறிக்கும்) பரிமளம்=நறுமணம்; மணந்தமயில்=மனைவி; மருவிடில் கூடிடில்; கலவி=உடலுறவு; இரங்கல்—கவலைப்படல்.

பனிக்காலத்தில் செய்யத்தக்கவை.

கைத்தாள் கழுவிட காய்ந்தநீர் காலுறையும்
தைத்தோற் செருப்பும் சதாவணிதல்—நெய்த்த
உணவுண்ணல் நன்றென் றுரைத்தார் சித்த
கணத்தார் பனிநாளிற் காண்க.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—தாள்=பாதம்; சதா=எக்காலமும்; கணத்தார்=கூட்டத்தினர்.

குளிர் மிகுந்த குன்றில் குகைகளிலும் கூசும்
நளிர் மிகுந்த நாட்டில் நலமே ஒழிந்து
நிலவறையில் நீணா நெருப்பில் நனிகாய்ந்
துலவுவர் சித்த ருணர்.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—கூசும் நளிர்—மயிர் பொடித்து மெய் சிலிர்க்கும் அளவு நடுக்கந்தரும் குளிர்.

நிலவறை—பூமி மட்டத்துக்குக்கீழே உண்டாக்கப்பட்ட அறை; (நீள்— நா)நீணா—நீண்ட நாக்கு.

முன்பனிக்கால ஒழுக்கம்

இக்காலத்திற் கொள்ளும் உணவு பெரும்பாலும் இனிப்பு, புளிப்பு, உவர்ப்புச் சுவை உள்ளனவாகவே இருத்தல் வேண்டும். மேலும், இக்காலத்தில் இராக்காலம் நீண்டிருக்குமாதலால், விடியற்காலத்திலேயே பசி அதிகமாய் எடுக்கும். ஆகையாற்றான், பெரியவர்கள் மார்கழி மாதத்தில் அதிகாலையில் தெய்வ வழிபாடு செய்து விரைவில் உண்ண வேண்டுமென்று கற்பித்தனர் போலும். ஆதலின் இக்காலங்களில் முக்கியமான காரியங்களை முடித்துவிட்டு மேற்சொல்லிய உணவுகளை உட்கொள்ளல் வேண்டும். வாயுவை நீக்கக் கூடிய தைலங்களை உடம்பிலும், தலையிலும் தேய்க்க வேண்டுவது அவசியம். பிறகு துவர்ப்புப் பொருள்களால் எண்ணெய் பசையை நீக்க வேண்டும். அதன் பின்னர், மணப்பூச்சுப் பழக்க முடையவரும், மணப்புகையூட்டிக் கொள்பவரும் அவற்றைச் செய்து கொள்ளலாம்.

நெய்ப்பசையுள்ளதும் உடலை வளர்க்கக் கூடியதுமான உணவை உட்கொள்வது இக்காலத்துக்கு உகந்தனவாம்.

மலநீர்கழிக்குங் காலத்தில் இளவெந்நீரையே கையாளுவதும் துயிலும்போது குளிரைத் தாங்கக் கூடியதும் போக்கக் கூடியதுமான கம்பளம், பட்டு, துப்பட்டி, இவற்றுள் ஏதாவதொன்றைப் போர்த்துக் கொள்ளுதலும் மிகவும் நலமாகும். மாலை வெயிலில் இருத்தலும் வியர்வை கசியும்படி ஏதேனுமொரு காரியத்தைச் செய்தலும் நன்மையைத் தருவதாகும். எப்போதும் காற்காப்பு (செருப்பு) இன்றி இருத்தலாகாது.

சுருங்கக் கூறின், எவ்வகையாலேனும் உடலில் சூடு நிலைத்திருக்கும்படி செய்துகொள்ளலே மிக்க நலமாகும்.

பின் பனிகாலத்தின் குணம் ஒழுக்கம் முதலியன

முன்பனியோ பின்பனியோ முன்சொன்ன நல்லெழுக்கம்
என்பனி யாயிடினும் ஏற்புடைத்தாம்—பின்பனித்தொட்
டாகத் தடல் குன்று மாதவன் காய்ச்சலால்
வேகத்துடன் சோடை மிகுத்து.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்=ஏற்புடைத்தாம்=தக்கதாம்; ஆகம்=உடல்; அடல்=பலம்; குன்றும்=குறையும்; ஆதவன் =ஞாயிறு; வேகம்=விரைவு; சோடை=வறட்சி.

பின்பனியி லையம் பெரிதும் பெருகிடுமே
தன் வயின் சண்டன் தருமனலால்—நன்குண்டாம்
வெம்மை வறட்சி விரைவாய்க் கரகரப்பு
தம்மைத் தணிக்க மதுர நெய்ப்புத் தன்மையுள
பண்டம் புசிக்கப் பதமாய்க் கப நீக்கி
பண் டுவமும் கொள்க பரிந்து.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—ஐயம்=கப தோடம்; பெருகிடும்= விஞ்சும்; தன்வயின்—தன் இருப்பிடம்; சண்டன்= ஞாயிறு; பண்டுவம்=வைத்தியம்.

பின்பனிக் காலத்திலும், முன்பனிக் காலத்து ஒழுக்கங் களையே தழுவுதல் வேண்டும். ஏனெனில், முன்பனி பின்பனிக் காலங்கள் ஒத்தகுணமுள்ளவை. அதிகக் குளிர்ச்சியாயிருப்பது மன்றி, உத்தராயண காலத் தொடக்க மாதலால், வரட்சியும் மிகுதியாயுண்டாகும்.

குளிர்க்காற்று உலவப்பெறாததும், அதிக வெப்பமுள்ளது மான வீட்டில் தங்க வேண்டும். மென்மையும், வாயுவைப் பெருக்குந்தன்மையுமுள்ள கைப்பு, கார்ப்பு, துவர்ப்புள்ளதும், குளிர்ச்சியைத் தரத் கூடியதுமான உணவையும், குடிக்கும் நீரையும் நீக்கவேண்டும்.

இளவேனிற் காலத்தின் குணம்

கரும்புவில்லோன் காலம் கபம்வேற் றிடத்தும்
பெருக வாய்ப் புண்டாகும் பெண்ணே—உருக்கியெல்லோன்
ஓங்கையம் ஆக்குமிடத் துற்றனலை வீட்டிமிகத்
தீங்கிழைக்கும் மெய்க்குத் தெரி.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—கரும்புவில்லோன் மன்மதன்; காலம்—பொழுது அதாவது இளவேனிற் காலம் (வசந்த காலம்) என்பர் பிறவிடத்தும்); வாய்ப்பு – சந்தர்ப்பம்; எலோன்—ஞாயிறு; ஆக்குமிடம்—பக்குவாசயம்; உற்று—புகுந்து; வீட்டி—அழித்து.

பின்பனிக் காலத்தில் தன்னிலே மிகுதிபெற்ற கோழை (கபம்), இளவேனிற் காலத்தில் சூரிய வெப்பத்தால் தன்னிலை பிறழ்ந்து மிகவும் அதிகப்படுவது இயல்பு. இக்கோழையின் அதிகரிப்பு, பசித்தீயைக் கெடுத்துப் பற்பல கோழைப் பிணிகளை விளைவிக்கும். ஆகையால், இக்கோழையை உடனே தணிக்க முயலவேண்டும்.

இளவேனிற் காலத்தில் ஒழுகவேண்டிய ஒழுக்கம்

உயர்ந்த கபத்தை யொடுக்க
　　உசந்த வனலின் குணத்தை
பயக்கும் வமன உறையும்
　　பலமாய் உறிஞ்சும் நசியம்
நயந்து கொடுத்து மொழித்து
　　நலமே பெறுமா றுஞற்றல்
வியக்கும் வசந்தப் பொழுதில்
　　மிகவும் பொருந்தும் முறையே.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—உயர்ந்தகபம் தன்னிடத்தும் பிறவிடத்தும் மீசுரமுற்ற ஐயதோடம் வமன உறை வாந்தியாக்கும் மருந்து; நசியம்: மூக்கில் உறிஞ்சும் மருந்து வகை.

தட்டல் குத்தல் உருவல் பிடித்தல்
　　சாற்று மற்போர் தடிகள் சுழற்றல்
வெட்டுங் கத்தி விளையாட்டுடனே
　　வீட்டுஞ் சோம்பல பயிற்சி யுடற்காம்
கட்டு மையங் கரைந்தே ஒழிய
　　காயம் மொய்ம்பு பெறவே கருதி
மட்டு சொட்டும் மலரம் பனுக்கு
　　வாய்த்த நாளில் வகுத்த நெறியே.

[ம.த.ஒ9.]

அருஞ்சொற்பொருள்—மற்போர் மல்யுத்தம் (குஸ்தி என்று வழங்குவது) சோம்பல்வீட்டும் பயிற்சி என்று மாற்றிப் பொருள் கொள்க. மொய்ம்பு—வலிமை; மட்டு—தேன்; மலரம்பன் புட்பபாணம் கொண்ட மன்மதன்.

ஐய மழிக்க வரு நேயந் தன்னை
ஆர்க்கச் சிரத்தில் செவிபாதந் தன்னில்
பையத் தடவிப் பதமாகத் தேய்த்துப்
பாணிவெதுப்பி சுகசூடாய்ப் பெய்து
செய்யக் குளியல் புகன்ருரிம் மாசில்
தேகம் மணக்க அகிலாரம் பூரம்
கொய்யு மிரத்தம் கொடுகூட்டுஞ் சாந்தைக்
கோலம் பிறங்க மிகப்பூச லாங் காண்.

அருஞ்சொறபொருள்—அழிக்க—போக்க; அடு—காய்ச்சப் பட்ட; நேயம்—எண்ணெய் (தைலம்); ஆர்க்க—அழுத்தமாக; சிரம்—தலை; பைய—விரைதலின்றி பாணி—நீர் (இது திசைச் சொல்); மாசில்—அழுக்கு நீங்கிய தூய்தான—(குற்றமற்ற); ஆரம்—சந்தனம்;—பூரம் பச்சைக் கற்பூரம்; இரத்தம்= குங்குமப்பூ; கோலம்—அழகு; பிறங்க—விளங்க.

இளவேனிற் கால உணவு முதலியன.

குழையைக் கண்டதை விழுங்கவே யுகள் கயற்கண்
குடத்தைச் சின்ன தென்றியம்பு மென் முலையகல்வின்
மழையை வென்றமை யளகபா ரமுஞ்சுமக்கும்
மனைவி நல்லுண வருத்தமன் மதன்வேனில்
பழைய தண்டுலம் துவரைமுற் கம்பசு நெய்
பலந்தருங் கேழ்வர கினியகாய் கறிகனியும்
விழையு மீரிரு வகையமு விருசுவையும்
மிகவடு மூணயின் றுளமகிழ் வெய்துவையே.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—குழை—காதணி; உகள்—நீந்திப் புரளும்; கயல்—மீன்; மழை—மேகம்; மை—கரிய, அளகம்—கூந்தல்; அருத்த—ஊட்ட; தண்டுலம்—அரிசி; முற்கம்—பயறு; ஈரிருவகையஊண்—நால்வகையான அதாவது தின்னல் விழுங்கல் பருகல், நக்கல் என்னும் செயலால் நால்வகை உணவு.

கனிவாழை மாபலா கொடிமுந் திரிகை
கரும்பு கண்டு தேன்மிகக் கலந்துங் கலவாத்
தனியாயும் சாப்பிடல் சாறுகொண் டினிய
சருக்கரைதேன் சேர்த்துமட் புடமிட் டெடுத்தக்
கனிமதுவும் மாந்துதல் நலமாம் உணவு
கழிந்தபின் பானிலாக் குடையன் பொழுதில்
முனி மொழிந்த தீதெனத் தெரிந்து நடத்தல்
மூதறிவின் மானிடர் ஒழுக்க விழுப்பம்.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—கொடிமுந்திரிகை —திராட்சை; கண்டு—கற்கண்டு; மட்புடம்—பூமியில் புதைத்து குறிப்பிட்ட நாள் வைத்திருந்து எடுத்தல்; மாந்துதல்—பருகல்; கழிந்தபின்—

ஆனபின்; பால்நிலாக் குடையன் பொழுது— மன்மதனுடைய காலமாகிய இளவேனில்; மூதறிவு— பேரறிவு; விழுப்பம்— மேம்பாடு.

சிற்றுண்டி வகை.

கோதுமைவாற் கோதுமை கோதில் குறுவைகார்
சாதுவாம் சம்பா சணகமுழுந்—தோதுமா
நற்பசுவெள் வேர்க்கடலை நல்கு நெய்யில் நன்காக்கி
சிற்றுண்டி செய்க சிறந்து.

[ம. த. பா]

அருஞ்சொற்பொருள்: சணகம்—கடலை(ப்பருப்பு); நல்கு நெய்—கொடுத்திடும் நெய்.

பருகும் நீர் தயாரித்தல்.

கொதிக்கவைத்த நீரைக் குடிக்கக் குளிரப்
புதியவேட் பானையிட்டுப் போட்டு—முதிரீகைச்
சத்துமது வெட்டிவேர் தம்மிலொன்றைக் கோடையில்
உத்தமப் பாணமி தோது.

[ம. த. பா.]

அருஞ்சொற்பொருள்: புதியவேட்பானை—புதிய மண் பானை; முதிரீகைச் சத்து—சந்தனக் கட்டையின் சத்து; மது—தேன்; பானம்—பருகும் நீர்ப் பொருள்.

வேனிற்கால உறைவிடம்.

வடக்கோடு தேருலவும் மலர்தரு துன்றி
மகரந்தந் தேன்பிலிற்றும் விரைசெறி சோலை
குடக்கோடு தேரனது கதிர்நுழை வின்றி
குளிர்தெண்ணீ ரோடைசுற்றிச் சலசலமென்றோல
மிடக்கோடு சார்குயிற்பண் ணெதிரொலி நீங்கா
எழில் வயினுர் நீந்திலஞ்சி கொடிக்குடில் வாழ்வுக்
கிடங்கோட லேற்புடைத்தாம் சுடுமினன் போழ்தி
லெனவுரைத்தார் கனதவத்தார் சுகம்பெற.

[ம. த. பா.]

அருஞ்சொற்பொருள்: வடக்கோடு தேர்—தென்றல்; தரு—மரம்; துன்றி—நெருங்கிமிகுத்து; பிலிற்றும்—தூற்றும்; விரை—நறுமணம்; செறி—மிகுத்த; குடக்கோடுதேரன்—ஞாயிறு; கோடுசார்—மரக்கிளைகளில் அமர்ந்த; எழில்வயின்—அழகான இடம்; நீந்திலஞ்சி—நீந்தும் குளம்; கொடிக்குடில்—மலர்க்கொடிகள் படர்ந்துண்டான குடிசை; (லதாமண்டபம் என்பர் வட சொல்லில்); கோடல்—கொள்ளுதல்; ஏற்புடைத்தாம்—தக்கதாம்; இனன் —ஞாயிறு.

பொழுது போக்கு.

புனல்விளையாட்டும் பொழில்விளை யாட்டும்
மனம் விளை வண்ணம் மகிழ்வாற்—றினனொளி
சூடு புகா தாலல் துன்றிய செய்வனத்தில்
ஏடு விரி பூமண மேற்று

[ம. த. பா.]

அருஞ்சொற்பொருள்: புகாதால்—புகாததலால்; அல் துன்றிய—இருள் சூழ்ந்த; ஏடு—இதழ் (பூவினது).

இளவேனிலில் தவிர்க்க வேண்டிய செயல்.

எளிதில் செரிக்க இயலாப் பண்டங்கள்
புளிப்பினிப்புத் தட்பப் பொருள்கள்—தெளிந்தநெய்ப்
புள்ளவைகள் நண்பகலில் ஓங்குறக்கம் தன்னையும்
தள்ளலிள வேனிலின் சால்பு.

[ம. த. பா.]

அருஞ்சொற்பொருள்: இயலா—முடியாத; தட்பம்—குளிர்ச்சி; சால்பு—தகுதியானது.

தன்னிலை பிறழ்ந்து மிகுந்துள்ள கோழையை வெப்ப வீரியமுள்ள வாந்தி, நசியங்களால் தன்னிலைப்படுத்துவதுடன் இனிப்பு, புளிப்பு, உப்பு, குழகுழப்பு, வழுவழுப்பு, மந்தம், கனம், குளிர்ச்சி இவைகளுள்ள பொருள்களையும் பகல் தூக்கம். இராக்கண் விழித்தல், இவை போன்றவற்றையும் நீக்கி, அற்ப வெப்பக்குணமுள்ள உணவுகளை உண்டும் அற்ப முயற்சியைச் செய்தும் மணப்பூச்சுப் பூசியும், வெயிலின் வெப்பத்தைத் தணிக்கத்தக்க தகுந்த இடங்களில் வாழ்ந்து வர வேண்டும்.

முதுவேனிற்பருவத்தின் குணம்.

பதுமத்தைப் பூக்கவைக்கும் பானுமிகக் காயும்
முதுவேனி லிற்புவிநீர் முற்றும்—கதுமென
வற்றும் கபமஃகும் வாயுமிகும் வாழ் மாந்தர்க்
குற்ற நலிக் கேதிதென் றோது.

[ம. த. பா.]

அருஞ்சொற்பொருள் — பதுமம் — தாமரை; பானு—ஞாயிறு; புவி—நிலம்; கதுமென—திடீரென; நலிக்கு—நோய்க்கு; ஏது—காரணம்.

முதுவேனிற் பருவத்தில் சூரிய வெப்பம் அதிக கடுமையா யிருக்கின்றமையின் உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களின் நீர்ப்பாகமும் பெரும்பாலும் இழுக்கப்பட்டு உலர்வதுபோல, உயிர்களின் உடலிலுள்ள கோழையும் நாளுக்கு நாள் இழுக்கப் பட்டுச் சீரணமாகும். இதனால், வாதம் பெருகி அவ்வாத மிகுதியால் வன்மையுள்ள வாதப் பிணிகள் வலுக்கும்.

இக்காலத்தில் கவனத்திற்குரிய ஒழுக்கம்.

புளிப்புக் கார்ப்புப் பொருள்மது வெய்யோன்
ஒளிர் வெளியில் ஓடியாடல் ஊன்மெய்—நெளித்துப்
பயிலல் தவிர்க்கவெனப் பண்டுவம் சாற்றும்
பயிருலர்த்தும் வேனிலியல் பார்த்து.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்:—வெய்யோன்—ஞாயிறு; ஊன்—தசை; மாமிசம்; நெளித்து—வளைத்து; பண்டுவம்—மருத்துவ நூல்.

நீர்த்தன்மை நெய்ப்பு நிறைந்த சுவையினிமை
சேர்த்தட்டுச் சீக்கிரம் சீரணமாம் சீர்பெறுமூண்
உண்க முதிர்கோடை யுற்றபோழ் தென்பர் நோய்
நண்ணு வழியுணர்ந்தோர் நன்கு.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—சீக்கிரம்—விரைவு; முதிர்கோடை——முதுவேனிற்காலம்; நோய்நண்ணா வழி—நோயணுகாத வழி.

மது அருந்தினுல் உண்டாகும் கேடு.

மதுவை விரும்பிமிக மாந்திடில் வெப்ப
முதுவேனில் காலத்தில் மோகம்—வெதும்பு
மழற்சி தளர்ச்சி யதிர்ச்சி மயக்கம்
உழலைசோபை யுண்டா முடற்கு.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்: மோகம்—பிரமை; அதிர்ச்சி—உடற் கட்டுகளின் துடிப்பு, உதறல், வலிப்பு முதலானவை. உழலை—உள்வேக்காடு: சோபை—நீரேற்றம் தரும் பிணி.

கோடை உண்வுக்கேற்ற சம்பாவின் வகை.

தண்டுலத்தில் தநுக்குரந்த துதவும் சம்பா
தாவில் மை மல்லிகைநற் குன்றி மிளகு
திண்டிரல்செய் கைவரைக்கல் லுண்டை புழுகு
சீரகநன் மணிச்சம்பா காளான் காடை.

கொண்டபுகழ்க் குறுஞ்சம்பா கோடை யீரக்கு
கோரையன்ன மழகியெனச் சொன்ன தான
எண்ணிரண்டு வகையிலொன்றை யன்ன மாக்கி
ஏற்கவென்ப ரெல்லிகடுங் கோடை நாட்கே.

அருஞ்சொற்பொருள் :—தண்டுலம்—அரிசி; தநு—உடல்; தாவில்—குற்றமில்லாத; திண்—கடினம்; எண்ணிரண்டு வகைச் சம்பா—மைச்சம்பா, மல்லிகைச்சம்பா, குன்றிமணிச் சம்பா; மிளகுச்சம்பா கைவரைச்சம்பா, கல்லுண்டைச்சம்பா, புழுகுச் சம்பா, மணிச்சம்பா, காடைச்சம்பா, சீரகச்சம்பா, குறுஞ் சம்பா, கோடைச்சம்பா, ஈர்க்குச்சம்பா கோரைச்சம்பா அன்னமழகி என்பன.

கோடையில் களைப்பாற்ற உண்ணும் பாயசவகை.

வேயேனல் கோதுமை வெண்சாமைத் தண்டுலம்
தாயே வறுத்தமுதஞ் சர்க்கரை சேர்த்—தேயாக்கும்
பாயாச மாற்றிப் பருகுவார் கோடையின்
ஆயாசந் தீர்வ தறிந்து.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள். —வேய்—முங்கிலரிசி; ஏனல்—தினை பாயாசம் என்பது பரவை வழக்கு பாயசம் என்பதே சரியான சொல்லாம்.

கோடைக்கால ஊன் உணவு.

வெள்ளாடு கொடியாடு மலைவா ழாடு
விஞ்சுசுவைக் கலைமானூன் வனம்வா ழேனம்
உள்ளான்வா னம்பாடி கானாங் கோழி
ஊர்க்குருவி கரிக்குருவி சம்பங் கோழி
தள்ளாத கவுதாரிக் காடை கோழி
தந்ததான அண்டமிவை தகுமா றாக்கிக்
கொள்வாயென் நுரைப்பார்கள் கோடை தன்னில்
கொன்றுண்ணுங் குணமுடையோர் கடத்தைக்காக்க.

அருஞ்சொல்லுரை :—விஞ்சு—மிகுதியான; ஏனம்—பன்றி; அண்டம்—முட்டை; கடம்—உடல்.

அருந்துநீர்.

பாதிரி பூக்களையும் பச்சைப் பூரத்தையும்
கோதிரிய நன்றாய்க் கொதிக்கவைத்த—தீதிலா
நீரிலிட் டுண்ண நிறை சோடை நீங்குமென்பர்
பேரியற்கை நூலறிந்த பேர்.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—கோதுஇரிய—மலினம் அகல; நிறைச் சோடை—மிக்க வறட்சி;

கனிவாக்கம் கூறல்.

பேய்வரை வாழைமா பலோத்தமை சேர்ச்சு
 பீடுறு முட்புறக் குடக்கனி சிற்றிச்சு
சேய்விரைத் தாடிமம் மதூகமும் சாதிக்காய்
 தீந்துடித் தாலமார் சிதோபலம் தீந்தடியின்
வாய்வினைச் சர்க்கரைப் பிரசமும் சேர்புதிய
 மட்குடத் திட்டுமே குளிர்வுறச் செய்கூட்டு
வேய்புரை தோளிய ரெடுத்தருந் தச் சூடு
 வேகமா யாறிடும் விருப்புட னாக்கிப் பார்.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—பேய்வரைவாழை — பேய்வாழை; வரைவாழை என்று கூட்டுக. வரைவாழை—மலைவாழை, பலோத்தமை—திராட்டை; முட்புறக்குடக்கனி—பலாப்பழம் தாடிமம்—மாதுளம்பழம்; மதூகம்—இலுப்பைப்பூ, தீந்துடி—இனிய மணமுள்ள ஏலக்காய், தாலமார் சீதோபலம்—பனையின் கற்கண்டு; தீந்தடி—கரும்பு; பிரசம்—தேன்.

தங்குமிடம்.

விண்ணிவந்த குலைத்தாழை கமுகு சூதம்
 வெண்கோங்கு முதுமரமு மரசு வேம்பு
பிண்டிபுன்னை யகிலாரம் புரசு புங்கு
 பெண் பனைவெண் மல்லிமுல்லை படர்ந்த பந்தர்
தண்ணிழலிற் தவிசமைத்துக் கதலிப் பட்டை
 தாமரைப்பூ குவளையல்லிபரப்பி மேலே
கண்ணயரத்தலைப் படுதல் தகுமாமென்பர்
 காயிரவிக் கனல்விலக்கக் கருது வோரே.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—விண்—ஆகாயம்; நிவந்த—ஓங்கிய, கமுகு —பாக்குமரம்; சூதம்—மாமரம்; முதுமரம்—ஆலமரம் பிண்டி—அசோகமரம்; ஆரம்—சந்தனமரம்; தவிசு—கட்டில் அல்லது இருக்கை அல்லது கிடக்கை; கதலிப்பட்டை—வாழைப் பட்டை; தலைப்படுதல்—முயலல்.

தாக்கும் வெம்மையைப் போக்கும் உபாயம்

தண்ணறிய பன்னீரில் நனைந்த சீலை
 சாளரங்கள் வாயில்கள் மறைய நாற்றி
வெண்ணறிய வெட்டிவேரின் படல்கள் தூக்கி
 மேனிலையில் தொட்டிகட்டி மணல்நீர் தேக்கி
நுண்ணியதாய்ப் பீச்சிடவே பொறிகள் நாட்டி
 நுண்டிவலை தூவவிரு கவரிவீசப்
பண்ணி வெம்மைச் சாந்தமாக்கிப் பகலைப் போக்கும்
 பண்புரைத்தார் பண்டுவத்தின் கலைவல்லாரே.

அருஞ்சொற்பொருள்—தண்—குளிர்ச்சி; நறிய—நறுமண முள்ள; சாளரங்கள்—சன்னல்கள் அல்லது பலகணிகள்; நாற்றி—தொங்கவிட்டு; மேனிலை—மேல்மாடம்; நுண்டிவலை—நுண்ணிய நீர்த் (திவலை) துளிகள்; பகலைப் போக்கும்—பகற் காலத்தைக் கழிக்கும்; கலை—அறிவியல்.

மாலைகளும் மணப்பூச்சும்.

நந்திமலர் பன்னீர்ப்பூ தண்ணீர்க் கஞ்சம்
நற் கொன்றை புன்னைப்பூ மண்ணின் கஞ்சம்
அந்திமல்லி செவ்வந்தி முல்லை கைதை
ஆத்திமகிழ் சம்பங்கி மல்லிகைப்பூ
அந்தமுறக் கட்டலங்கல் நல்முத் தங்கொள்
அணிவடமும் பூணில்தட் பந்தன் மெய்க்குச்
சந்தனங்கற் பூரஞ்சேர்த் தப்பல் வெம்மை
சாந்தமுறச் செய்யுபாயம் நன்றென் பாரே.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—கஞ்சம்—தாமரை; மண்ணின் கஞ்சம்—ரோஜா; செவ்வந்தி—சாமந்தி; கைதை—தாழம்பூ' அலங்கல்—மாலை.

வெம்மை மிகுமுது வேனிலிரா வேளைதனில்
வம்பு செறிகளபம் வாசமல்லி—தம்மை
அணிந்தம் புலிமா டத் தார் தவிசில் துாங்கிற்
அணியு மனலெய்ப்புந் தான்.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—விளக்கம்—வம்புசெறி—நறுமணம். மிகுதியான; களபம்—உடற்பூச்சு; அம்புலிமாடம்—நிலா முற்றம்; அனல்—சூடு; எய்ப்பு—களைப்பு.

பலவகைப் மணஞ் செறி மலர்நிறைந் தோங்கும்
பனித்தலைப் பசுந்தழை நறவுமிழ் சோலை
சுலவிய தடநடு பரந்துயர் மாடச்
சுடர்வரி மதியரங் கதன்வயின் பாலர்
பலவளை யலணி யும் மகளிரு மீண்டி
பலகலை நிகழ்ச்சிகள் புரிந்தினி தாகக்
கலவியும் மதுவையும் கடிந்தவ ராகக்
களித்திடல் நலமெனக் கழன்றன ரான்றோர்.

அருஞ்சொற்பொருள்.—நறவுமிழ்—தேன்சொட்டும்; சுலவிய—சூழ்ந்துள்ள, தடம்—இடம்; பரந்து—விசாலித்து; மதியரங்கு—நிலாமுற்றம்; பாலர்—சிறுவர்கள்; ஈண்டி—குழுமி; கலவியும் மதுவையும் கடிந்தவராக—பெண் போகத்தையும், கட்குடித்தலைம் விலக்கியவராக; ஆன்றோர்—பெரியயோர்

உப்பு, புளிப்பு, கார்ப்பு, வெப்பமுடையனவும் நாவரட்சியைக் கொடுப்பனவுமாகிய உணவுகளை நீக்க வேண்டும். மற்ற உணவுகளிலும், விரைவில் சீரணிக்கக் கூடியதும், இனிப்புச் சுவையுள்ளதும் நெய்ப்பசையுள்ளதும் நீர்வடிவமாயுள்ளது மான உணவே இக்காலத்திற்குத் தக்க உணவாம்.

கள் குடித்தல் கூடாது, கட்குடியால், சோபை பாண்டு, உடல் தளர்ச்சி, உடல் வெப்பம், மயக்கம் ஆகிய இவை உண்டாகும்.

வெப்பத்தைத் தணிக்கத் தகுந்ததும், உள்ளத்திற்குக் களிப்பை உண்டாக்கக் கூடியதுமான இடத்தில் வாழ்வது நன்மை.

கார்காலத்தின் குணம்

ஈரிரு மதிகளில் இனன்றரு வெம்மை
ஏற்றிரு நிலத்துள உயிரினம் வன்மை
ஏரிரிந் திடவயர் உறுவயின் தண்மை
எல்வளி கவிமுகி லெறிபொழி பண்பு
சேரிரு மனலெழச் செயுமது மண்ணில்
தீம்புனல் அமுக்கமி லலமுறு மென்னில்
காரிரிந் திடுபெரும் பொழுதியல் பென்னும்
காசினி யில்தெரி கலைவல நல்லோர்.

அருஞ்சொற்பொருள்—ஈரிருமதிகளில் இனன்தரு வெம்மை—கதிரவன் நாலு மாதங்களில் மிகுந்த வெப்பத்தைத் தர. இரு நிலம் ஏற்று—இந்தப் பரந்த உலகம் அதனால் ஏற்று மிக்க சூட்டைப் பெற்றதினால்; உயிரினம்—உயிருள்ள எல்லாம்; வன்மை ஏர் இரிந்திட—இயல்பான உரமும் வனப்பும் அகன்றிட்டு; அயர்வு—இளைப்பு; வயின் —சமயத்தில்; தண்மை ஏல்வளி மிக்க குளிர்ச்சியை ஏற்று வீசும் காற்றினதும்; கவிமுகில் முழுமையும்; மூடிக்கொண்டு வெகுவாகப் பொழியும் மேகத்தினதும்; மண்ணில் சேர்ந்துள்ள அனலை மேலெழச் செய்யும். தீம்புனல் இனிப்புள்ள நீர்; அமிலமுறும் புளிப்புச் சுவையைப் பெறும்; காரிரிந்திடு பெரும்பொழுது—மேகம் எப்போதும் விரைந்து கொண்டே இருக்கும் காலமாகிய கார் காலம் இயல்புரி இயல்பான பண்பு.

வெளிச்சூழல் தட்பத்தை விஞ்சுமுட் சூட்டை
அளித்துரிக்கு நேர்செயுமால் யாக்கைக்—களிசெரி
வன்னியஃகும் காரணத்தால் வாதாதி முத்தோடஞ்
நன்னிலையில் நில்லா நவில்.

[ம.த.பா.]

கருத்து :—வெளியெ உண்டான குளிரைத் தாங்கிக் கொள்ளும் வண்ணம் உடலின் உட்சூடு தோலில் சென்று ஒழுங்கு படுத்தும் காரணத்தால் உடலைக் காக்கும் ஆக்கனல் (சடராக்கினி

குறைவுபடும். அதன் காரணமாக வளிமுதலாய் கூறப்பட்ட முக்குற்றங்களும் நல்ல நிலையில் நிற்காது. அடுத்த செய்யுளில் குற்றங்களின் .மிகை கூறப்பட்டுள்ளது.

திடுமெனக் குளிர்ந்து நீர்த் திவலையைச் சுமந்தனிலம
சிலிர்த்திட உலவலால் உடல் வளி பெருகுமிம்மண்
விடுஞ்சுடு முயிர்ப் புடன் சுவைப்புளி செறிபுனலும்
மிகச்செயு மழலையே மலினநீர் செரியனலின்
கெடுதியும் கபமதி கரிப்பதும் கரிய பெரும்
கிரியெனக் ககனமீ திலகுசெல் லம்பு சொரிந்து
இடுபெரும் பொழுதிலக் கணமீதென் பர் மனிதர்
திடங்கெடும் பிணியொழித் திடுகலை வல்லுநரே.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—திடுமென — எதிர்பாராதவிதமாய்; திவலை துளிகள்; அனிலம்—காற்று; சிலிர்த்திட—மெய் பொடிப்ப; உடல் சிலிர்த்திட குளிர் காற்று வீசுவதால் உடலின் வாதம் மிகும். மண்ணின் உட்சூடு வெளியாவதால் நீர்த்துளிகள் வெப்பமடைந்து ஆவியாக மாறி வெளியிலும் உடலிலும் இனிப்புச் சுவையுடைய நீர்புளிப்புச் சுவையைப் பெறும். இச் செயல் உடலில் பித்தத்தை மிகச் செய்யும். மழையால் பூமி யடத்தில் உள்ள மலினம் நீரில் கரைவதால் நீர் மலினமடையும் அவவகை மலினநீர் செரியனலைக் கெடுத்து ஐயத்தைப் பெருகச் செய்திடும். கிரி—மலை; ககனம் ஆகாயம்; செல் மேகம் அம்பு (மழை) நீர்.

...வயினை ...த்தந் தழைத்த தடங்கவும்
...ன்னுதால வாதமையம் நன்னிலை—நண்ணவும்
சீரணத் தீபெறவும் செய்க சிகிச்சை
காரணவுங் காலம் உணர்த்து.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள் விளக்கம்—வயின் உறைவிடம்; நண்ண அடைய; சீரணத்தீ—(ஜாடாக்கினி) செரிப்பிப்பான் அல்லது ஆக்கனல்.

உத்தராயண காலத்தில் உடல் வன்மை இழந்தவர்கட்கு இயற்கையாகவே பசித்தீகுறைவுபட்டிருக்கும். மாரிக் காலத்தில் குற்றங்கள் தாதுக்கள்) கோளாறடைவது இயற்கை. .ஆகையால், முதுவேனிற் காலத்தில் பசித்தீக்குறைவு பட்டவர்களுக்கு இக்காலத்தில் பசித்தீ மிகக் குறைவுபடும். இவ்வாறு குறைவு படுவதற்குக் காரணம் விண்ணில் கார் சூழ்ந்திருக்கையில் குளிர்ச்சியடைந்த வாயுவினாலும், பூமியின் எழுந்த ஆவியினால்லும், இவ்விரண்டின் சேர்க்கை யினால் புளிப்படைந்த மலினநீரினாலும், முன்பருவத்தின் இயற்கயையால் குற்றமடைந்த பசித்தீயினாலும் தாதுக்கள்

குற்றம் அடைகின்றன. குளிர்ச்சியடைந்த வாயுவினால் வாயுக் குற்றமும், ஆவியினால் புளிப்பு அடைந்த நீரால் பித்தமும், மலின நீரினாலும் வெப்பக் குறைவாலும் கோழையும் ஏற்படுகின்றன.

மலம் போக்கி வாந்தியாக்கி மந்தாங்கி மாற்றி
பலமாக்கிச் சீரணத்தைப் பண்டிக்—கிலகுவான
பண்டங்க ளுண்ணப் பணிப்பர் பழுதுற்று
மீண்டுபுரி குற்ற மிக.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்.—மலம்போக்கி—பேதியாகும் மருந்து; மந்தாங்கிமாற்றி—மந்தாங்கியைப் போக்கி—பசித்தீத்தூண்டி மருந்துகள்; சீரணத்தைப் பலமாக்கி—சீரணகாரி மருந்து. பண்டி—வயிறு; (இங்கு செரிப்பிக்கும் பகுதியைக் குறிக்கும்) இலகுவான—எளிதில் செரிப்படையக்கூடிய.

புதியகாய்த் தானியம் பழகிய தானியம்
புதியகாய் கறிகனிப் புதிய நல் லடிசிலும்
விதிப்படி உவர்ப்பி னிளம்புளிச் சுவையுடை
விரும்பிய வியஞ்சனம் துவையலில் பலவகை
துதிபெறு கஞ்சிகள் கடுத்தவைங் கோலமும்
பொடித்திடு தக்கரம் தயிர்ச்சலம் மழைச்சலம்
கொதித்தபின் குளிர்வுறுங் கிணற்றுநீர் புராதன
நறவமும் தகும்படி துய்த்திடல் நலமெனப்
பதிதனில் மாங்கிச உணவினர் மணமுள
பக்குவமாக்கிய பிசித நல் லிரசமும்
அதிகமூப் படைந்த நல் மதுவகை அருந்தவாம்
அரியநெய்ப் புடைப்பொருள் எளிதினிற் செரிப்புறு
வதில் சிறந் தவுணவுண் ணெனப்பகர் வானலக்
கதிரொளி விழுங்கிடும் முகிலுடைப் பொழுதினில்
கடைப் பிடி ஒழுக்கமாய்க் கருத்துடன் கைக்கொள

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—புதிய காய்த்தானியம்—புதியவையாகிய துவரை, உழுந்து; பயறு முதலியவை; பழைய தானியம் (ஆறு மாதமாவது) பழகிய அரிசி, கேழ்வரகு முதலியன. புதியகாய்கறிகனி—சமையலுக்கு புதிதாய்ப் பறிக்கப்பட்ட காய்வகைகளும், புதியதாய்ப் பக்குவமடைந்த பழவகைகள், வியஞ்சனம்—துணையுணவுப் பொருள்கள்; துதிபெறுகஞ்சிகள்—புகழ்பெற்ற (பயனற்றகஞ்சி பஞ்சமுட்டிக் கஞ்சி, சம்பாரக்கஞ்சி பாற்கஞ்சி போன்றவை) கஞ்சிவகைகள், கடுத்தவைங்கோலம்— காரமுள்ள ஐங்கோலம், அதாவது சுக்கு திப்பிலி, திப்பிலிமூலம், சித்திரமூலம் சவ்வியம்

ஆகிய இவை கூடிய கூட்டுப் பொருள்கள். இதனைப் பஞ்சகோலம் என்பர். பொடித்து—தூளாக்கி; தக்கரம்—மோர்; புராதன—பழைய; நறவம்—தேன்; துய்த்திடல்—சாப்பிட வேண்டும்; பதிதனில்—உலகில்; மாங்கிசம்—இறைச்சி; பிசிதம்—ஊன்; இரசம்—சாரம்; மூப்பு—பழைமை; மதுவகை கள்ளின்வகை; எளிதில் சீரணமாகக் கூடிய நெய்ப்புடைய அருமையான பண்டங்களை உண்க என்பது கருத்து.

பாரமுகிலே பரிதிமூடிப்
 பாதி நிசிபோ லிருளே யோங்கி
நேர மறிய இயலாக் கார் நாள்
 நீரைச் சொரியுந் தகைமைத் தாலே
ஈர வுடுக்கைப் புலராதாகி
 ஏற்கு மழுகல் மணமே யேக
ஆர மகிலின் புகையே யூட்டி
 ஆகம் மணக்கக் களபம் பூட்டி

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்.—பாரம்—கனம்; முகில் — மேகம்; பரிதி—கதிரவன்; பாதிநிசி—நடு இரவு; நீரைச் சொரியுந் தகைமை—சதாமழைநீரைப் பெய்யும் தன்மையுடைய காரணத்தால் காற்றில் ஈரப்பதம் அதிகரிக்கும்; ஈரவுடுக்கை—நனைத்துத் துவைத்த உடுப்புகள். துணிகள் முதலீயவை; புலராதாகி—உலராமல் இருந்து; அழுகல் மணமே ஏற்கும்—ஒருவகை அழுகல் நாற்றம் கொண்டுவிடும். ஆரம்—சந்தனம், ஆகம்—உடல் களபம் பூட்டி—மணச் சாந்து பூசி,

பாதத் தணியு முறையும் போர்வை
 பாங்காய் உடலம் மறையச் சேர்ப்பை
சீதப் புனலின் துமியை நீக்கி
 தீய்ந்த புவியின் உயிர்ப்பைப் போக்கி
ஏதமிலதா யெழுந்த மாடி
 ஏய்ந்த கிருகத் திருந்து நாடி.
கேதக் குளிரைத் தவிர்த்து வாழ்க.
 கேள்கள் கெழுமி மகிழ்ந்து சூழ்க.

அருஞ்சொற்பொருள்—பாதத்தணியும் உறையும்—பாதங்களுக்கு கம்பளி உறைகளும்; தொடுதோலும் (செருப்பு); துமி—சிதறும் நீர்த்துளி; ஏய்ந்த—பொருந்திய; கிருகம்—வீடு, கேதம்—துன்பம்; கேள்கள்—உறவினர்கள்; கெழுமி—நெருங்கி; சூழ்க—அருகிருக்க.

இருவெயி லிழைத்த சுடுகை
 இரியுமா முகில்பெய் திடவே
பெருகுதண் குடிஞைக் கலங்கம்
 பெரும் பகலுறக்கம் களகன்

தருவெயி லுழைப்புக் களைப்புச்
சடமுற முயலல் பெருக
அருந்தலும் பசைநெய் யுடனே
அகற்றுக பெயலின் பொழுதே. [ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்.—இருவெயில் — இளவேனில் முதுவேனில் என்ற இருபொழுது; இழைத்த—கூட்டுவித்த; இரியுமாம்—ஓடிவிடுமாம்; முகில்—மேகம்; குடிஞை—ஆறு; கலங்கம்—புதிய வெள்ளமாதலால் கலங்கிய நிலையில் உள்ளதான தண்ணீர் (கலங்கு+அம்) கனகன்—சூரியன்; நெய்ப் பசையுடனே பெருக அருந்தலும் அகற்றுக என மாற்றிப் பொருள் கொள்க. பெயலின் பொழுது—கார்காலம்.

குற்றங்களை மாறுதலினின்றும் நீக்கி இயற்கை நிலைக்குக் கொண்டுவரக் கூடியனவும், பசித்தீயைத் தூண்டக்கூடியனவுமான பொருள்களையே கையாளவேண்டும்.

மிகுதிப்பட்ட (அளவிற்கதிகப்பட்ட) குற்றங்களை விலக்குவதற்கான வாந்தி மருந்தையும், பேதி மருந்தையும், கொள்ள வேண்டும்.

பழைய அரிசி மழைநீர், ஐங்கோலங்கலந்த நீர்மோர், ஆழ்ந்த கிணற்றுநீர், வெந்நீர் இவைகளை உட்கொள்ளல் வேண்டும்.

மிகு மழையுள்ள காலங்களில் புளிப்பு, உப்பு, நெய்ப்பு இவை மிகுதியாய்ச் சேர்ந்ததும், உலர்ந்ததும், தேன் கலப்புற்றதும், விரைவில் சீரணிக்கத்தக்கதுமான உணவையே உட்கொள்ளவேண்டும்.

நன்றாய் உலர்ந்தனவும் மணமூட்டியனவுமான ஆடைகளை உடுத்தும் கார்கால மணப்பூச்சைப் பூசியும், ஈரத்தில் நடவாமலும், உடலில் நீராவியும் குளிர்ச்சியும் படாமலும் இருப்பதுடன் சூடு பொருந்திய இடங்களில் வாழவேண்டும்.

நெய்ப்பசை மிகக் கலந்த நீர்மோர் ஆற்றுநீர், பகல் தூக்கம், இளைப்புண்டாக்கும் வேலை இவறறை நீக்கவேண்டும்.

கூதிர்காலத்தின் குணம்.

ஆதவன் சுடுபகல் அடரப் பொழிய
வாம்மிகு பனிப்புள நிசியும் வழுவாக்
கூதிரென் றுரைபொழு தழற்குற் றமெழுங்
கோபமுற் றிடுமுனங் குளிரைச் சகிக்கச்
சாதகம் பலவுடைய மனிதர்க் கெனுமாம்
தாவிலா மருத்துவப் பெருநூல் அழலின்
கோதறப் புரிந்திட அகற்றுஞ் சிகிச்சை
கொள்கெனப் புகல்வ பெறலே நலனே [ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்.—ஆதவன் — சூரியன், மிகுபனிப் புளநிசி—அதிக குளிருள்ள இராப்பொழுது. அழற்குற்றம்—பித்ததோடம்; எழும்—தன்தானத்தில் மிகும் கோபமுற்றிடும்—சீற்றமுற்று பிறதோடங்களின் தானங்களிலும் போய்த் தாக்கும். சகிக்க—தாங்கிக் கொள்ள; சாதகம்—பலவகை உத்திகளும், கருவிகளும் தாவிலா—குற்றமற்ற; கோதற—கேடு நீங்க.

கார்காலக் குளிர்ச்சியில் பழக்கமுற்ற குளிர்ந்த உடலுடையவர்கள், கூதிர்காலச் சூரியவெப்பத்தால் நீர் வேட்கையடைய நேரிடும். ஆதலால், கார்காலத்தில் தன்னிலை வளர்ச்சி பெற்ற பித்தமும், இக்காலத்தில் தன்னிலை பிறழ்ந்து மிகுதிப்பட்டு நிற்கநேரிடும்.

பச்சைப்பயறு சம்பா அரிசி
　　பைந் தாட்டினையும் செம்மைத்துவரை
கொச்சைப் பயனும் நெல்லி புடலை
　　கோதில் கருணை சுண்டை கதலி
கச்சல் மலரும் நிம்ப குசுமம்
　　கைப்பு துவர்ப்பு துத்திப் புளதாம்
பச்சை இலைகள் தேன் சர்க்கரைசேர்
　　பண்டங்களுணல் நன்று குளிர்க்கு

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்.—பைந்தாட்டினை — (பசுமை+தாள்+தினை) பசுமையான தண்டுடைய தினை, செம்மைத்துவரை—செம்மண் கொண்டு மண் கட்டி உலர்த்தி உடைத்துப் பருப்பாகப் பக்குவம் செய்யப்பட்ட துவரை, கொச்சைப்பயன்—வெள்ளாட்டுப்பால், கதலிக் கச்சல் மலர்—வாழைக்கச்சல் வாழைப்பூ; நிம்பகுசுமம்—வேப்பம்பூ; பச்சை இலைகள் கீரைவகைகள்.

வெட்டி வேர்த் தீநீ ரிட்டு மணம்
　　மேவுநற் பச்சைக் கற்பூரம்
கட்டையைத் தேய்த்தாகுஞ் மஞ்சனத்தைக்
　　கடத்திற் பூசி முத்துவடம்
சட்டமாய்ப் பூண்டே சுத்தவுடை
　　தானணிந் தானந் தித்திருத்தல்
கட்டளையாங் காண் கூதிரெனுங்
　　காலமேல் நூலோர் நுவன்றபடி.

அருஞ்சொற்பொருள்.— கட்டை—சந்தனக்கட்டை; கடம்—உடல்; முத்துவடம்—முத்துமாலை.

அந்திநேரத்தில் அமர்ந்திருத்தல் மேல்மாடிச்
சந்திரன் தன்னொளியில் சற்றேயர—மந்தவிதம்
நள்ளிரவில் அங்குதங்கல் நல்லதல்ல வாதநலி
கொள்வார் குளிரால் குறி.

அந்திநேரம்—மாலையில்; நலி—பிணி.

இக்கால வொழுக்கம்.

இவ்வாறு மிகுதிப்பட்ட பித்தத்தைச் சீர்படுத்தக் கைப்புச் சுவையுள்ள நெய்ப்பேதி குருதியை வெளிப்படுத்தும் மருத்துவம் இவைகளைத் தழுவ வேண்டும்.

நல்ல பசியுண்டான காலத்தில், கைப்பு, இனிப்பு துவர்ப்பு, கடினமின்மை இவைகள் உள்ள உணவைக் கொள்ள வேண்டும். அவ்வுணவு சம்பா அரிசி, பயறு, சருக்கரை, நெல்லிக்கனி, தேன் இவற்றின் கலப்புடையதாய் இருத்தல் நலம்.

குளியல் குடித்தல்களுககு உதவும் நீர்.

கூதிர்க்காலத்தில், சூரியக்கதிரால் பகற்பொழுதிலும், திங்கள் கிரணங்களால் இரவிலும் இடை விடாமல் நாற்புறமும் வெப்பமும் குளிர்ச்சியும் முறையே அடைந்ததும், காலச் சிறப்பால் குற்றமற்றதும், அகத்திய நட்சத்திரம் தோன்று வதால் குற்றங்கள் நீங்கி மிகத் தூய்மை யுள்ளதுமான நீர் எவ்விதக் குற்றத்தையும் போக்கக் கூடியதாகும். மேலும், இந்நாட்கள் அதிககனமும், நெய்ப்பும் வெப்பமுமின்றி, நடுத் தரக்குணமுடையதாய் பசி வன்மையைத் தருவதாய் இருப் பதால், குளியல், குடித்தல் இச்செயல்களால் செரிப்பையும் உண்டாக்கும். ஆகையால், இந்நீரை அமுதத்திற்கு ஒப்பாகச் சொல்லலாம்.

மேற்குறித்த காலத்தில் செய்யத்தக்கனவும் தகாதனவுமான செய்கைகள்.

பயிர்வகை நெய்கள் உயிர்வகை நெய்கள்
தயிருணல் புடைக்க வயிருணல் நடைகள்
வெயினில் பகலில் துயிலுதல் மிகவும்
உட்டிண மதுவை யுட்கொளல் வெதுப்பும்
வீரியக் காரஞ் சேர வருந்தல்
கொண்டல் தாக்கிக் குளிருற விருத்தல்
மிண்டுசெய் துடலை யுடற்று மதனால்
விலக்கி யொழுகல் விதியெனப் பழுதில்
பண்டுவம் பழகிய.பண்டிதர் பரிந்துரை
கால மாங் கூதிரில் கண்டுடன் பற்றிச்
சீலமுற் றிருத்தல் பழங்கண்
தொடரா வகை நெறிப் படநலமென்றறி.

அருஞ்சொற்பொருள்.—பயிர்வகைநெய்கள் — எண்ணெய்கள் என வழக்கிலுள்ளவைகள், உயிர்வகை நெய்கள் —நெய் என்றும்

கொழுப்பென்றும் கூறப்படுபவை புடைக்க வயிறுணல்—வயிறு புடைக்க உண்ணல் என மாற்றுக; துயிலுதல்—தூங்குதல்; மது—கள் வகை; வெதுப்பு—வெம்மை கொண்டல் .கீழ்த் திசைக்காற்று; மிண்டு—துன்பம்; பழங்கண்—இடுக்கண் நோய்கள்.

கார்காலத்திற்குரிய மணப்பூச்சைப் பூசுதலும், அழுக்கற்ற ஆடையை அணிதலும், நெஞ்சின் கலக்கத்தை ஒழித்துக் களிப்புட னிருத்தலும், மாலைப் பொழுதில் உப்பரிகையின் மேல் குளிர்ச்சி பொருந்திய வெண்ணிலவில் உலவலும், உட்கார்ந்திருத்தலும் நன்மையைப் பயக்கும்.

தயிர், எண்ணெய், கொழுப்பு, வெப்ப வீரியமுள்ள மது, வெயில், பகல்தூக்கம், பனி, வயிறுநிறைய உண்ணல், அதிக உப்புப்பொருள்கள், கீழ்க்காற்று இவற்றை நீக்கவேண்டும்.

அவ்வக்காலங்களில் கொள்ளக்கூடிய சுவைகள்.

ஆறிருது களிலுணவி லாறுசுவை கலந்த நல
மமையு மெனினும்
கூறுமிகு பனிகளிலும் கார்ப்போழ்தும் இனிப்புவர்ப்பு
குறைந்த புளிப்பு.
சாறுதருங் கரும்பு வில்லோன் காலத்தே கடுகைப்புஞ்
சமன்செய் துவர்ப்பும்
வீறுமிகுங் கதிரவனின் வேனலிலே இனிப்புதட்பம்
மிகுதல் நலமே.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்.—சாறுதருங் கரும்புவில்லோன் காலம்—இளவேனிற்காலம்.

தளிர்நாளில் சீதளமும் இனிப்பு கைப்பு துவர்ப்புளதாம்
கோதில் பண்டம்.
தளிர்க்காலம் கார்காலத் துணவினிலே வறளியல்பு
சாரீந்த துண்டல்
வெளியியல்பைச் சரிக்கட்டிச் சுகம் பெறக்கொள்
முன்பனியில்
மெய்க்காம் நெய்புய்த்
தெளியறிவு செறிந்தவராம் மருத்துவர்கள் உரை மீது
சித்தர் வேதம்.

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்.—குளிர்நாளில்—கூதிர்க்காலம் தளிர்க்காலம்—வசந்தம் என்னும் இளவேனிற்காலம்.

அவ்வக்காலங்களில் உட்கொள்ளற்குரிய உணவுகளைச் சுருக்கிக் கூறுமிடத்துக் கார், முன்பனி, பின்பனி இக்காலங்களில், இனிப்பு, புளிப்பு, உப்புச் சுவைகளும், சூடும் நெய்ப்புமுள்ள பொருள்களையும்; கூதிர்காலத்தில் இனிப்பு, கைப்பு, துவர்ப்பு ஆகிய சுவைகளுள்ளனவும், வரட்சியுஞ்சீதமும் உள்ளனவுமான பொருள்களையும், இளவேனிற்காலத்தில், கைப்பு, கார்ப்பு, துவர்ப்புச் சுவைகளுள்ளதும், வெப்பமும் அதிகூர்மையுமுள்ளதுமான பொருள்களையும்; முதுவேனிற் காலத்தில் இனிப்பும், குளிர்ச்சியும், நெய்ப்பும் பொருந்திய பொருள்களையும் உட்கொள்வதால் உடல் நலமடைதல் கூடும்.

அவ்வக்காலங்களிற் கொள்ளவேண்டிய சுவைகள்.

கார்	..	இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு	நெய்ப்பும், வெம்மையும் உள்ளவை.
கூதிர்	..	இனிப்பு, கைப்பு, துவர்ப்பு	வரட்சியும், குளிர்ச்சியும் உள்ளவை.
முன்பனி	..	இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு	நெய்ப்பும், குளிர்ச்சியும் உள்ளவை.
பின்பனி	..	இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு	ஷை
இளவேனில்	..	கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு	வரட்சியும், வெம்மையும் உள்ளவை.
முதுவேனில்	..	இனிப்பு ..	நெய்ப்பும், குளிர்ச்சியும் உள்ளவை.

எக்காலங்களிலும் வழங்கக்கூடிய சுவைகளின் சிறப்பு.

எக்காலங்களிலும் அறுசுவையைக் கலந்து வழங்குவது நன்மை. ஆயினும், அவ்வக் காலத்தில் வழங்க ஏற்படுத்திய சுவைகளையே மிகுதியாய்க் கொள்ளல் நலம்.

காலச் சேர்க்கையில் தழுவவேண்டிய ஒழுக்கங்கள்.

இருபெரும் போழ்தினில் ஏகும் பொழுதின்
இறுதியி லேழுநாளும் இன்னும்—வருங்கால
முன்னெழு நாளும் மொழிகுவர் காலவிணைப்
பென்றே தெரிந்தே இனிது.

அருஞ்சொற்பொருள்.—ஏகும் — கழிந்துபோகும்; இறுதி—கடைசி; காலவிணைப்பு—காலச் சேர்க்கை.

காலவிணைப்பில் கடுகிய காலச்சீலம்
சாலத் தவிர்த்துச் சரிவர—ஏலப்
படிப்படிதாய்ச் சார்காலல் பண்பாரொழுக்கம்
நொடிப்பிக்க மாந்தர்க்கு நோய்

[ம.த.பா.]

அருஞ்சொற்பொருள்—கடுகிய காலம்—கழிந்து போன பொழுது; சீலம்—ஒழுக்கம் தவிர்த்து—தள்ளி விட்டு; ஏல—ஏற்க; நொடிப்பிக்க—அழிந்து போக.

நிகழும் ஒவ்வொரு காலத்தின் இறுதி நாட்களில் ஏழும், அடுத்த காலத்தின் முதல் ஏழு நாட்களும் கூடிய காலம், 'காலச்சேர்க்கை' எனப்படும். இச்சேர்க்கைக் காலங்களில், சென்ற காலத்தில் தழுவி வந்த ஒழுக்கத்தைச் சிறிது சிறிதாய் விட்டு வருங்காலத்தில் தழுவவேண்டிய முறையைச் சிறிது சிறிதாய்த் தழுவ முயலவேண்டும்.

வழக்க வொழுக்கங்களில் வந்த உணவாதிச் செயல்களைத் திடீரென விடுவதும், தழுவாத ஒழுக்கத்தைத் திடீரெனத் தழுவுவதும் கொடிய நோய்களுக்கு இடமாகும். எந்தக் காலத்தில் எந்த உணவு செயல்களைக் கொண்டு பழகினோமோ, அதையடுத்தகாலத்தில் திடீரென விட்டு அந்தந்தக்காலத்திற்கடுத்த உணவாதி செயல்களைத் திடீரெனக் கொள்ளாமல், காலச்சேர்க்கையில் தழுவத் தகுந்த விதிப்படி விடுவதைச் சிறிது சிறிதாக விடுத்தும் கொள்வதைச் சிறிது சிறிதாகச் கொண்டும் ஒழுகுவதே தணியாத நோயைத் தடுக்கும் வழியாம்.

X. நாள் ஒழுக்கம்.

உறக்கத்தினின்றும் எழுதல்.

நல்லுடலையுடையோன் நாடோறும் அதிகாலையில் நான்காவது சாமத்தில் (4-மணி முதல் 6-மணிக்குள்ளாக) தூக்கத்தினின்று எழுந்து சிறிது நேரம் உட்கார்ந்து கடவுளை வணங்க வேண்டும்.

அதிகாலை விழிப்பின் குணம்.

''புத்தி யதற்குப் பொருந்து தெளிவளிக்கும்:
சுத்த நரம்பினறற் றூய்மையுறும்—பித்தொழியும்;
தாலவழி வாதபித்தந் தத்த நிலை மன்னுமதி
காலைவிழிப் பின்குணத்தைக்காண்.''

(ப.கு.சி.)

(பொழிப்புரை) வைகறையில் துயிலினின்றும் விழித்தெழு பவர்கட்கு, அறிவின் தெளிவை யுணர்த்துகின்ற சுத்த நரம்பு என்னும் ஓர்வித நரம்பினது துளையில் நிறைந்திருக்கின்ற நீரானது கலங்கலின்றித் தெளிவாய் இருக்கும்; பயித்திய கோபம் நீங்கும். வளி தீ ஐயங்கள் தத்தம் நிலையில் பொருந்தி நிற்கும்.

விழித்தவுடன் பார்க்கத்தக்க பொருள்கள்.

''கஞ்சந்தங் கந்தீபம் கண்ணாடி யெல்லங்கி
செஞ்சந்த நீர்மண் சிவலிங்கம்—மஞ்சங்கல்
கற்றா தமது வலக் கைமனை தடாரியிவை
யுற்றால் விழிப்பிலுத்த மம். (ப.கு.சி.)

(பொழிப்புரை) உறக்கம் நீங்கி விழித்தவுடன் தாமரை, தங்கம், விளக்கு, கண்ணாடி, சூரியன், அக்கினி (புகையொழிந்த நெருப்பு), செஞ்சந்தனம், கடல், வயல், சிவலிங்கம், முகில்சூழ்ந்த மலை, கன்றையுடைய பசு, தமது வலக்கை, தம் மனைவி, மிருதங்கம் இவற்றுள் ஏதேனும் ஒன்றைப் பார்த்தல் உத்தமம்.

கண்ணாடியைப் பார்ப்பதன் சிறப்பு.

''தாதுங் களிப்புஞ் சகல வசீகரமும்
போத வறிவுமுண்டாம் பூதலத்துள்—நாதமுறும்
பண்ணாடிப் பார்க்கும் பனிமொழியே! நீவிழிப்பிற்
கண்ணாடி பார்த்திதனைக் காண்.''

(ப.கு.சி.)

(கருத்து) தூங்கி விழித்தவுடன் கண்ணாடியைப் பார்ப்பதனால், வீரியப் பெருக்கமும்; மனமகிழ்ச்சியும், எல்லா வசியமும், ஞானமும் அதிகரிக்கும்.

விழித்தவுடன் பார்க்கத்தகாத பொருள்கள்.

ஊனமலத் திரம்பவங்கல் லாடை சங்கை
யூமைதட்ட செவிடிரங்கல் சடைநி ராசை
கூனழுக்கு மேனிவிரி மூர்த்தந் தூக்கங்
குட்டமற நெய்த்தலையா குலமுன் மாதந்
தீனமறற் கயமிவையுள் ளார்மு கத்துந்
தீட்டமுகை விதவைவஞ் சியர்மு கத்துங்
கானவர விந்திபலி மூரி மாறு
கயிறுலக்கை முறத்திடத்தும் விழித்தல் தீதே.''

(ப.கு.சி.)

(பொழிப்புரை) துயின்று விழித்தவுடன், உடல் உறுப்புக் குறை, உடையின் குறை, பாவி, காவித் துணி, கிரக (சங்கை) தோடமுள்ளவன், ஊமையன், மொட்டைத் தலை, செவிடன்,

வருந்தல், சடை, மனிதரிடத்து விருப்பமில்லாதவர், கூன், அழுக்குமேனி, விரிந்த மயிர்த்தலை, எப்பொழுதும் தூங்குபவன், குட்டமுடையவன், கொலைத்தொழில் செய்பவன், எண்ணெய்த் தலை, மனத்துன்பமுள்ளவன், உன்மத்தன், தரித்திரன், கயப்பிணியன், யானைக்காலன், தீட்டுடையவன், அழுகை, விதவை இவர்கள் முகத்தையும், பாம்பு, பூனை, சாம்பல், எருமை, விளக்குமாறு, கயிறு, உலக்கை, முறம் என்னும் இவைகளையும் பார்த்தல் கூடாது. பார்க்க நேரிடின், அன்றைக்குக் கெடுதி ஏற்படும்.

காலையில் எழுந்தவுடன் தெளிந்த நீர் அருந்துதலின் பலன்.

''தூங்கி விழித்தவுடன் சுத்தோ தகமருந்தில்
ஓங்கிநின்ற பித்தம் ஒழிவதன்றித்—தேங்கு
மலமூத் திரந்தங்கா வாதாதி யுந்தம்
தலமாத் திரமுலவுந் தான்.''

(ப.கு.சி.)

(பொழிப்புரை) காலையில் எழுந்தவுடன் சுத்த நீர் சிறிது அருந்திவந்தால் பித்தமிகுதியடங்கும், மல நீர்கள் சிக்குபடாமற் கழியும்; வளி தீ ஐயங்கள் தத்தம் நிலையை எய்தி நலம் பெறும்.

காலையில் வெற்றிலை பாக்குத் தரிக்கும் விதி.

காலையில் வெற்றிலை தரிக்கும் பழக்கமுடையவர்கள், களிப்பாக்கு மிகுதியாகவும் வெற்றிலையும் சுண்ணாம்பும் குறைவாகவும் போட்டுக்கொண்டு, முன் ஊறுகின்ற நீரை உமிழ்ந்து பின் ஊறுகின்ற நீரை இனிப்புச் சுவை உள்ளவரையில் உட்கொண்டு, அச்சுவை மாறுந்தருணத்தில் உமிழ்ந்துவிடல் வேண்டும்.

''தக்கோலந் துவருறைப்புக் கார மாமச்
சாரங்க ஷாயமதிற் சிலதோ டம்போம்
நிற்காது கிருமிஐயம் தாகம் பன்னோய்
நிறைபசியா மாதர்குழா நெருங்கு மேலும்
மிக்கான சுவையுதரஞ் சுத்தி யாகும்
விடாய் நீங்கும் அறிவொளிரும்; தாது முண்டாம்
எக்காலும் அறமெய்தும்; களையுஞ் சேரும்;
ஏக்கருமங் கட்குமிது ஏற்ற தாமே.''

(ப.கு.சி.)

கொட்டைப்பாக்கின் குணம்.

"கொட்டைப்பாக் கென்றுரைக்கிற் கோழைமலம் போமூலத்
தட்டைப்பார்க் குங்கிருமி சாமந்தக்—கொட்டைப்பாக்
கொத்தசுரத் தோர்க்குமருந் துண்டவாய்க் கும்பொருந்து
மெதத்தவுண்ணிற் சோபைவரும் விள்." (ப.கு.சி.)

இளங்கொட்டைப் பாக்கின் குணம்.

'வளங்கட் டிலங்கைநகர் வாசியென வந்த
விளங்கொட்டைப் பாக்குண்பார்க் கென்றுங்—களங்கட்டும்
வாயுவே காமறவன் வல்லருசி யேகுமகந்
தேயுவே காமறைவோ தேர்."

(ப.கு.சி.)

தொண்டைக்குள் கோழைக்கட்டும், வாதமும், நீங்காத சிலேஷமமும், வலிய அருசியும் நீங்கும், சாடராக்கினி விலகாது

நீக்கற்குரிய பாக்குகள்.

"அதிபிஞ் சதிமூப் பதிபுதுமை மேனி
அதியீரம் பூச்சிகளுள் ளாடல்—அதிசொக்கல்
உள்ளவிதப் பாக்குகளில் ஒன்றேனு நேரிலதைத்
தள்ளவிதி முக்காலுந் தான்." (ப.கு.சி.)

சொத்தைப்பாக்கின் குணம்.

"சொத்தைப் பிளவிடித்துத் தோயமதில் ஊறவிட்டுச்
சத்துவர நூறுவிசை தான்கழுவி—வைத்துலர்த்தி
வாசமமைத் துத்தின்ன மந்தமொடு தோஷமறும்
தேசும் அழகுமுறுஞ் செப்பு." (ப.கு.சி.)

இவ்வாறு வெற்றிலே தின்றபின், எழுந்து உள்ளே சற்று உலாவி, செரிப்புத் தன்மை முதலியவற்றைக் கணித்து, மலசலங்களைக் கழித்தல் வேண்டும்.

சீரண அசீரண பக்குவ காலம்.

அதிகாலையில் எழுந்த உடனே உடல் இலேசத்துவமும், அறிவுக்கூர்மையும் சுறுசுறுப்புமுடையதாய் இருந்தால், சீரணம் பக்குவமடைந்ததென்றும், உடல் கனதியும், அறிவும் மந்தமும், மனச் சோர்வும், உண்டாயின், சீரணம் சரியாய் நடைபெற வில்லை என்றும் உணர்க, மேலும், முன் இரவில் உண்ட உணவுகளின் சீரண காலததைப்பற்றி நினைததால், சீரணா சீரண பக்குவத்தை உணர்த்தும்.

அசிரணப் பொதுக் குறிகள்.

மலக்கட்டு அல்லது அதிக மலப் போக்கு, உடல் வாட்டம் அபானவாயு குடலிலேயே தடைப்பட்டு வெளிவர முடியாமை, வயிற்றில் இரைச்சல், வயிற்றுப்பொருமல், உடல் பாரமா யிருப்பது போன்ற உணர்ச்சி, தலைசுற்றல் முதலியன அசீரணப் பொதுக் குறிகளாம்.

மலநீர் கழிக்கும்போது செய்யவேண்டிய உபாயம்.

நீரைக் கழிக்கும்போது இடக்கையால் வலப்பக்கம் அடி வயிற்றைப் பிடித்திருததல் வேண்டும். மலங் கழிக்கும்போது வலக்கையால் இடப்பக்கம் அடிவயிற்றை பிடித்திருத்தல் வேண்டும்.

மலமாவது நீராவது பற்றறக் கழியும்வரை, வேறு விஷயங் களில் சிறிதும் மனத்தைச் செலுத்தாமல் இருத்தல் இன்றி யமையாதது.

மலம் தடைப்பட்டால், இடப்பக்கஞ் சற்றேபடுத்து, பிராண வாயுவை வல நாசியிலே வரும்படி செய்து, மல சங்கற்பத்தோடு மலவுபாதியைக் கழித்தல் வேண்டும்.

நீர் தடைப்பட்டால், வலப்பக்கம் சற்றே படுத்து, இடப் பக்கம் பிராணவாயு வரும்படி செய்துகொண்டு, சல சங்கற்பத் தோடு சலவுபாதியைக் கழித்தல் வேண்டும்.

அதன்பின், கண், நாசி, வாய், கொப்பூழ் (தொப்புள்) இவை களிலுள்ள மலினங்களையும், பீளை, சளி, ஊத்தை என்கிற அசுத்தங்களையும், கைகால் முதலிய உறுப்புகளிலுள்ள அழுக்கு களையும் வெந்நீரால் பற்றறத்துடைத்தல் வேண்டும்.

மலசலங் கழித்தலின் குணம்.

நாடோறும் இருவேளையும் மல மூத்திரங்களை வெளிப்படுத்து தல் மிக முக்கியம், அவைகளைக் கழிப்பதினால், மும்மலங் களாகிய வாத பித்த கபங்கள் தத்தம் நிலையைப் பெறுவதன்றி, செரிப்புத் தீயும் (சடராக்கினி) அதிகரிக்கும்; நோய்க் கூட்டங் கள், சிறிதும் அணுகா; இயமன் ஆக்கினை செல்லாது; சுகமுற லாம்.

"இருமலங்கள் தங்கா திறங்குங்கால்; மூன்றாம்
இருமலங்கள் தங்கள்நிலை யெய்தும்—இருமச்
சமனாக் கினிசாரும்; சாராநோ யீட்டம்;
சமன்ாக் கினைசாரா தாம்."

(ப.கு.சி.)

பல் துலக்கல்.

இல்லறவாசிகளாயின், துவர்ப்பு, கைப்பு, அல்லது கார்ப்புச் சுவையுள்ள அசோகு, வேம்பு. ஆத்தி, ஆல், இத்தி, எருக்கு, கடம்பு கருங்காலி, குருக்கத்தி, செண்பகம், நாவல், நாயுருவி, பூலா, மகிழ், மருது, மா, விளா, வேல், இவற்றுள் ஏதேனும் ஒரு குச்சியைக் கொண்டும், துறவிகளாயின், கருங்காலி, நொச்சி பெருங்குமிழ், பெருவாகை, புன்கு, மருது இவைகளிலேதேனும் ஒன்றின் குச்சியைக்கொண்டும், அதன் முனையை மிருதுவாய் நறுக்கி, பல்லின் ஈறுகள் துன்புறாவண்ணம், விடியற்காலத்தில் பற்களைத் துலக்க வேண்டும்.

பல் துலக்கலின் குணம்.

''துகளிலை காட்டமிவை தொட்டுத் துலக்கிற்
றுகளிலை காட்டாது தோடந்—துகளிலைகண்
மெய்த்துவரை யொத்திருக்கின் மேனாள் வரைமூரல்
மெய்த்துவரை யொத்திருக்குமே.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) தூள், இலை, கொம்பு இவைகளால் பல் விளக்கினால், பற்களுக்குக் குற்றமில்லை; முக்குற்றங்களால் பற்களிடத்தும், அவற்றின் வேரினிடத்தும் உண்டாகின்ற நோய்கள் 23-ம் பிறவாவாம். மேலும், அத் தூள், இலை, கொம்புகள் கலப்புச்சுவையில்லாமல், இயல்பாகவே துவர்ப்புள்ளவைகளாயின், இறுதிநாள் வரைக்கும் பற்கள் மலையைப் போல் அசைவற்று நிற்கும்.

பல் துலக்கத்தக்க கொம்புகள்.

''வேலுக்குப் பல்லிறுகும்; வேம்புக்குப் பற்றுலங்கும;
பூலுக்குப் போகம் பொழியுங்காண்:—ஆலுக்குத்
தண்டா மரையாளுஞ் சாருவளே; நாயுருவி
கண்டால் வசீகரமாங் காண்.''
(ப.கு.சி.)

வேல்—பல்லிறுகும்; வேம்பு—பல் துலக்கமுறும்; பூல்—போக சத்தியை உண்டுபண்ணும்; ஆல்—இலட்சுமீகரத்தை யுண்டாக்கும்; நாயுருவி—வசிய சத்தியை உண்டாக்கும்

''ஆலும் வேலும் பல்லுக்குறுதி''—என்பது பழமொழி.

பல் துலக்கியபின் கரிசாலையை மென்று அதன் சாரம் சிறிது உள்ளே போகும்படி பல்லில் தேய்த்து, வாயலம்பிக்கொள்ள வேண்டும். பதினாறு முறை வாய் கொப்புளித்து, பற்களின் இடுக்குகளிலுள்ள மலினங்களைப் போக்கவேண்டும்

பிறகு,

கரிசாலை இலை அல்லது
பொற்றலைக் கையான் இலை—ஒரு பங்கு
தூதுவளை இலை—கால் பங்கு
முசுமுசுக்கை இலை—கால் பங்கு,
சீரகம்—கால் பங்கு,

இவைகளை ஒன்ருகச் சேர்த்துச் சூரணமாக்கிக் கொண்டு, இதில் ஒரு வராகனெடையை

தண்ணீர் ஒரு சேர்,
பசுவின் பால் ஒருசேர்,

கூட்டி கலந்து, அதில் இட்டு ஒரு சேராய்ச் சுண்டும்படி காய்ச்சி, அததுடன் நாட்டுச் சர்க்கரை சிறிது சேர்த்துச் சாப்பிடல் வேண்டும்.

இவ்வாறு சாப்பிட்டால் உண்டாகும் நற்குணங்களாவன

ஐயத்தைக் கண்டிக்கும்; நரம்புத் தளர்ச்சியைப் போக்கும்; செந்நீரின் வீரியம் கெடாது; உடல் காந்தியடையும்; பாண்டு, சோபை முதலியவை சாரா; வளி தீ ஐயக்குற்றங்களாலுண்டாம் பிணிகட்கு இடமிராது; நுரையீரல் சம்பந்தமான நோய் நீங்கும்; ஆயுள் நீடிக்கும்.

பல் துலக்கத்தகஃத பொருள்கள்.

''கல்லும் மணலும் கரியுடனே பாளைகளும் .
வல்லதொரு வைக்கோலும் வைத்துத்தம்—பல்லதனைத்
தேய்த்திடுவா ரேயாகிற் சேராளே சீதேவி:
வாய்ததிடுவள் மூதேவி வந்து.'' (ப.கு.சி.)

செங்கற்றூள், மணல், அடுப்புக்கரி, பாளை, வைக்கோல் இவைகளுடன் சாம்பல், கைவிரல், பட்டுப்போன மரங்களின் குச்சி, மேற்பட்டை ஆகியவைகளும் பல்துலக்க ஆகாவாம்.

குச்சியால் பல் துலக்கத்தகாதவர்கள்.

அசிரணம், வாந்தி, இரைப்பு, காசம், வெப்புநோய், பக்கவாதம், நாவரட்சி, வாய்ப்புண், மார்புவலி, தலைவலி, கண்ணோய், காதுநோய் முதலிய நோய்களையுடையவர்கள் குச்சிகளால் பல் துலக்கத்தகாதவர்களாவார்கள்.

ஆனால் மேற்கண்ட நோய்களால் பீடிக்கப்படுவர், அந்தந்த நோய்களைச் சமனப்படுதும் வீரியமுள்ளதும், நா, பல் இவைகளிலுண்டாகும் அழுக்கைப் போக்க்கூடியதுமான பொருளைச் சேர்த்துச் செய்யப்பட்ட பபெகற்டிகளால் பற்களைச் சுத்தி செய்யக்கடவர்.

உதாரணமாக, கரிசலாங்கண்ணி, பிரப்பங்கிழங்கு, குப்பைமேனி, நொச்சி இலை, எருக்கிலை, கருங்காலிப்பட்டை இவைகளின் சூரணங்கள் இரைப்பு, காசரோகமுடையவர்கட்கும்; வேம்பு, மருது, கருவேல், மாவிலங்கு இவைகளின் பட்டையும், பல்லிப்பூண்டு, அரசிலை, எருக்கிலை, நொச்சி இவைகளின் பொடியும், வெப்புப் பிணியுடையவர்கட்கும்; குடியோட்டிப் பூண்டு; குப்பைமேனி, கருவேலம்பட்டை, நாவற்பட்டை, அரசவேர்ப்பட்டை இவைகளின் பொடி, நாப்புண், வாய்ப்புண், உள்ளவர்களுக்கும் பல்துலக்க உபயோகப்படும்.

மருதும் எருக்கிலேயும் அசீரணமுள்ளவர்களுக்கு உபயோகப்படும்.

இவ்வாறே மற்றப்பிணிகள் உள்ளவர்களும் தக்க பற்பொடிகளைக் கொண்டு பல் துலக்கல் நலம்.

கல்நார் எப்பிணியுடையார்க்கும் பயனைத்தரும்.

கண்களுக்கு அஞ்சனம்.

பற்களைத் துலக்கியபின், சுருமா என்று வழங்குஞ்.சவ்வீராஞ்சனம் அல்லது இதைப்போல்க் கண்களுக்குச் சுகததைத் தருகின்ற அஞ்சனங்களுள் ஒன்றை நாடோறும் கண்களுக்குப் பயன் படுததி வருவது நலம்.

இரசாஞ்சனப் பிரயோகம்.

ஐம்பொறிகளிற் சிறந்ததும், ஒளிமயமாயுள்ளதுமான கண் மிகுதியாய்க் கபத்தால் துன்பப்படகூடுமாகையால், அததுன்ப நீக்கத்தின்பொருட்டு, மரமஞ்சள் ஆதியாய்க் கொண்ட குடிநீரால் செய்யப்படும் இரசாஞ்சனம்அல்லதுகரிசாலவையில் செய்யப்பட்ட மை போன்றவற்றுள் ஒன்றை வாரத்திற்கு ஒரு முறை கண்களுக்கு உபயோகித்து வரல் வேண்டும்.

அஞ்சனத்திற்குப் பின்செய் கருமம்.

பின்பு, நாசியில் உபயோகிக்கக்கூடிய நசியமிடல், வாய் கொப்புளிக்கத தகுந்த குடிநீர்களையும்யோகித்தல், புகையூட்டுடல், வெற்றிலேபோடல் ஆகியவைகளைப் பயன்படுத்துவது உத்தமம்.

எண்ணெயிடல்.

(அப்பியங்கரணம்).

உடலில் எண்ணெய் முதலியவற்றைத தேய்த்துக்கொண்டு நீராடலேப் பற்றி கூறும்.

எண்ணெயிட்டு முழுகலின் பொதுக் குணம்.

எண்ணெய் தேய்ததுக் குளிப்பதால், மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து இந்திரியங்கட்கும் வன்மையுண்டாகும், தலை, முழங்கால், கால், ஆகியவற்றிற்குப் பலமும், நற்றுனியும், உண்டாம்; மயிர் வளரும்; தலைவலி நீங்கும்; உடலில் வரட்சி, சொறி, தினவு, அழக்கு இவை மிகுதிப்படுகிற காலங்களில் எண்ணெய் முழுக்கைக் கையாளலாம்.

நாடோறும் எண்ணெய் தேய்த்து முழுகலின் குணம்.

நாடோறும் எண்ணெய் இட்டு முழுகல் உத்தமம். இதனால் உடல் வலி நீங்கும். கிழத்தன்மை சீக்கிரத்தில் நேரிடாது. கண்கள் தெளிவு பெறும்; உடல் வன்மையடையும்; ஆயுள் விருத்தியுண்டாம்; நல்ல தூக்கம் உண்டாகும்; தோல் மிருதுத்தன்மையடையும்; உடற் சோர்வு, கபம், முக்குற்றம், பல்நோய், சுவைமாறல் இவை விலகும்.

எண்ணெயிட்டு முழுகும்போது, நிரம்ப எண்ணெயைப் பயன்படுத்த வேண்டிய இடங்கள்.

தலை, கால். காதுகளில் தைலத்தை மிகுதியாக உபயோகிக்க வேண்டும். நல்ல தைலங்களை, மூக்கில் நான்கு துளிகளும், காதில் ஆறு துளிகளும் விட்டு, தலை, உடம்பு, பாதத்தின் அடி இவைகளிலிட்டுச் சுடுகை பிறவாமல் தேய்த்து, வெந்நீரில் முழுகி, நீரும், வியர்வையும் நீங்கும்படி உலர்ந்த துணியால் துவட்டி உலர்த்தவேண்டும்.

சிலர் கால்களுக்கும், சிலர் காதுகளுக்கும், சிலர் கண்களுக்கும், சிலர் இவ்விடங்களுள் தங்களுக்கு அனுகூலமான இடங்களுக்கும் எண்ணெயை அதிகமாய் உபயோகிப்பது வழக்கம். ஆனால் எவரெவர் எந்தெந்த உறுப்புகளில் உபயோகிப்பதால் நற்பயனை அடையக்கூடுமோ, அந்தந்த உறுப்புகளில் எண்ணெயை உபயோகித்தல் மிகவுமுத்தமம்.

மருந்து நெய்களுள் தகுதியானவைகளை உள்ளங்கால்களில் தேய்க்க கண்ணின் துன்பம் நீங்கும். கண்களில் கட்டினால், காதுகளின் துன்பம் போம். காதுகளில் துளியளவாக விடின், தலையினது துன்பம் ஒழியும். தலையிலிட்டுத தேய்த்து முழுகினுல், உடலிலுள்ள எல்லா நோயும் தொலையும்.

மருந்துநெய் பரிகாரத்திற்கூறிய முறைப்படி முடித்த தலங்களைக் கொண்டு, நான்கு நாட்களுக்கு ஒரு முறையேனும், வாரத்திற்கு இரு முறையேனும் மூழ்கிவருகின்றவர் களிடதில் நோய்களின் துன்பம் சிறிதும் செல்லாதாம்,

திங்கட்குத் தக்கவாறு மருந்து நெய்யிட்டு முழுநம் நேரம்

அயமா னிவைக்கம் பததுளி யாழ்குளிர்க் கட்டமத்துள்
வயமா கனிக்குங்கோல் தேட்குநந் நான்குவின் மானிரண்டே
பயமார் கடமார்ச்சத திற்குந் திரிக்குட் பகர்திங்களி
னயமாந் தயிலங்க ளாடவ ரோகமெய் நண்ணுவரே.

(ப.கு.சி.)

சித்திரை, வைகாசித் திங்களில் காலை நாழிகை 5.
ஆனி, ஆடித் திங்களில் காலை நாழிகை 8
ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகைத் திங்களில் காலை—நாழிகை
மார்கழி, தைத் திங்கள்களில் காலை நாழிகை 2.
மாசி, பங்குனித் திங்களில் காலை நாழிகை 3.

இந்நாழிகைக்குள் மருந்து நெய் முழுக்குச் செய்யின், நோயில்லாத உடலைப் பெறலாம்.

பசு நெய் முழுக்கு.

பசுவின் நெய் முழுக்கு, குழந்தை, நடுவயதினர், கிழவர் ஆகியவர்களுக்கும் நன்மையைத் தருவதாகும். இஃது இரச தாதுவின் கொதிப்பிற்கண்ட எரிச்சல், உன்மாதம், மூர்ச்சை, மூளையைப்பற்றிய கபநோய், இரதத பிதத ரோகம், மிகுதாகம் இவைகளை நீக்கி நன்மை பயக்குங் குணமுடையது.

''மைந்தர்முதன் முப்பருவ மாந்தர்க்கு மாமுடலின்
முந்தெரிச்ச லுன்மாத மூர்ச்சைகப—முந்திரத்த
பித்தமதி தாகமொடு பேசுவிகா ரங்களுக்கு
உததமமா நெய்முழுக் குன்.''

(ப.கு.சி.)

எண்ணெய் முதலிய தைல முழுக்குக் காலம்.

எண்ணெய், முக்கூட்டு நெய், பசுவின் நெய் முதலியவை களினால், ஏழு தினத்திற்கு இரண்டு முறை தலை முழுகினால், உடலை வருத்துகின்ற பிணிகள் வாரா.

''எள்ளினெயும் முக்கூட் டெனுநெய்யும் ஆனெய்யும்
விள்ளுதை லாதியென வீறுநெய்யும்—உள்ளபடி
வாரந் தனக்கிருநாள் வைத்தாடி னோய்களதி
காரந் தனக்கிடமில் காண்.''

பஞ்ச கற்பம்.

கத்தூரி மஞ்சள், மிளகு, வேம்பின் வித்து, கடுக்காய்த் தோல், நெல்லிப்பருப்பு என்னும் இவைகளைக் கூட்டி காராம பசுவின் பால் விட்டரைததுக் கொதிக்கவைததகூட்டு, 'பஞ்ச கற்பம்' எனப்படும்.

பஞ்ச கற்பமுழுக்கின் குணம்.

பஞ்சகற்பத்தைத் தலையில் தேய்த்து முழுகி வந்தால், அஃது எந்நாளும் உடலுக்குக் கனத்தலையும், இளைத் தலையும் செய்கின்ற பிணிக்கு இடந்தாராது.

பூநெல்லி நீர்மிளகு பொற்கடுக்காய் வான்மஞ்சள்
கானகத்து வேம்பரிசி காரிகையே-மானங்கேள்
ஒன்றரை யொன்றேகால் ஒன்ன்றுறுதி முக்கால்
கன்நரைக்கை யான்நீறிற் றேய்

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் முறையே கூறுபாடுடைய, நெல்லிமுள்ளி, வெண்மிளகு மஞ்சள் கடுக்காய் கஸதூரி மஞ்சள், வேம்பின் வித்து என்ற ஐந்து சரக்குகளையும் முறையே ஒன்றறை ஒன்றேகால், ஒன்று முக்கால் அரை என்ற (எடுத்தல்) அளவைபில் எடுத்து நுண்ணிய தூளாக்கி, கையான் தகரைச்சாற்றுலரைத்து தலைக்குத் தேய்த்துக் கொள்க.

தேய்க்கத் தலையில் இரவாய்யும் பீனிசம்போம்
வாய்க்குளிடப் பல்லீறும் வச்சிரமாம்—சாய்க்கண்
குருடுபில்லங் காசம்போம் குஞ்சிநரை பித்தக்
கிறு இறுப்பும் கிட்டாது கேள்

இதனைத் தேய்த்து நீராடிவந்தால் தலையின் வாயும் பிணிகளும் பீனிசநோய்களும் தீரும். இதனல் பல்துலக்கிவரப் பல்லீறுகள் உறுதிப்படும் கண்ணில் உண்டாகும் சாய்க்கண் குருடு, பில்லம், காசம், முதலிய பிணிகள்தீரும் தலைமுடி நரைத்தலும் பித்தக்கிறு சிறுப்பும் அணுகா

அரைப்பு வகை.

விரண உடலினர்க்கு உசிலந் தூளும்; சொறி, சிரங்கு, தினவுடையவர்கட்கு இலுப்பைப் பிண்ணாக்கும்; எண்ணெய் முதலிய தைலங்கட்குப் பொன்னுங்காயும், சிகைக்காயும்; பசுவின் நெய்க்குப் பச்சைப் பயறும்; பன்றி, காக்கை முதலிய வற்றின் நெய்கட்குக் காரைச் செடி சமூலப் பொடியும் அரைப்பாகும்.

எண்ணெய் தேய்த்தாடியபோது ஆகும் பொருள்:

அவரைப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, தூதுளங்காய், மணித்தக்காளி வற்றல், சுண்டை, பொன்னாங்கண்ணி, சிறு கீரை, கறிவேப்பிலை, துவரை, சிறு பயறு, மிளகு, சீரகம், வெந்தயம், இலவங்கம், இலவங்கப்பட்டை, ஏலம், சாதிக்காய், சருக்கரை, பசுவின் நெய், கௌதாரி, காடை, உடும்பு இவை எண்ணெய் தேய்த்து முழுகிய நாளில் கொள்ளத்தக்கவை. இவற்றுடன் பீர்க்கு, புடல், சூட்டுடம்பினரைத் தினவுக் குள்ளாக்கும் கத்தரி இவைகளின் பிஞ்சு, நெல்லிக்காய், முளைக் கீரை, பெருங்காயம், உப்பு வறுத்துக் கொட்டிய சட்டியில் ஊற்றி முறித்த மோர், சிறு புளிப்பு, தாம்பூலம், முயல், ஏரி மீன், அயிரை, தேளி, வெப்பமுள்ள சுறு, கருவாலி, காட்டி னெலி, வெள்ளாடு இவைகளும் ஆகும் எனச் சிலர் கூறுவர்.

தைல முழுக்காடியவர்களுக்கு ஆகாத பதார்த்தங்கள்

வெண்பூசனி, பறங்கி, மா, தெங்கு இவற்றின் காய், கீரைத் தண்டு, சேம்பு, அறுகீரை, அகத்தி, பாகல், கத்தரி, கொத்தவரை, கனிவகை, மாப்பண்டம், மொச்சை, எள், கொள், கடலை, உளுந்து வெங்காயம், கடுகு, புளி, பால், தயிர், கைப்புப் பொருள்கள், புகையிலை, வெல்லம், குளிர்ந்த நீர், பகல் தூக்கம், வெயில், புணர்ச்சி, மிகுகாற்று, நண்டு, மீன், கோழி, ஆடு, பன்றி, கடமான் இவை தைல முழுக்காடியவர்களுக்கு ஆகாதன.

சில தைலங்களைக் கொண்டு தலை முழுகுபவர்கட்கு, அவர் தம் நோய்க்குத் தக்கவாறு பத்தியம் விதிப்பதுண்டு. அஃது ''இச்சா பத்தியம்'' என்றும் ''உப்பில்லாப் பத்தியம்'' என் றும் இருவகைப்படும்.

இச்சா பத்தியம்.

முள்ளுள்ள பாகல், மா, கத்தரி, கொத்தவரை, வெண் பூசனி, என்னும் இவற்றின் காய்கள், அகத்திக் கீரை, மந்த குணப் பொருள்கள், கடுகு ஆகிய இவற்றை நீக்கவேண்டும். சிற்றின்பச் செயல் கூடாது.

உப்பில்லாப் பத்தியம்

தனக்குவமை இல்லாத பாதரசத்திற்கும், அது சேர்ந்த தைலாதி மருந்துகட்கும், உப்பில்லாப் பத்தியம் வைத்த நாட்கள் எத்தனையோ, அத்தனை நாட்கள் மறுபத்தியம் இருந்து, பின்னாளில் உப்பு வறுத்துக் கூட்டி, அதன் பின்நாட்களில் முறையே, ஓமப்பால், பசுவின் நெய் இவற்றைத் தேய்த்து

முழுகவேண்டும். அதுவரை உப்பில்லை, அதன் பிறகே உப்புச் சேர்த்து உண்ணலாம். இவ்விதப்பத்தியமே உப்பில்லாப் பததியமாம்.

மற்றுமுள்ள விதிகள் யாவற்றிற்கும் அந்தந்தத் தைல முழுக்கைக் கொள்ளுங்கால் தைலப் பரிகரிப்பிற் கூறிய முறைகளைக் கைப்பற்ற வேண்டும்.

தைல முழுக்கிற்குத் தகாதவர்கள்

ஐய நோயினர்களும், தோட நிவர்த்தியின் பொருட்டு வாந்தியுண்டாகவோ, பேதியாகவோ, மூத்திரப்பை சுத்தியாகவோ பீச்சுக் கொண்டவர்களும், அசீர்ணமுடையவர்களும், தைலத்தால் தலை முழுகுவதை விலக்க வேண்டும், ஆனல், பிணி நீக்கத்தின் பொருட்டுச் செய்யப்பட்ட தைல முழுக்கு நலம் தரும்.

அறம்.

நாம் புரியும் எல்லாக் கருமங்களும் நல்வினையையோ அல்லது தீவினையையோ பயக்கக்கூடும். தீவினை துன்பத்தையும், நல்வினை இன்பத்தையும் பயக்குமென்பது வெளிப்படை ஆகையால், நாம் செய்யும் கருமங்கள் யாவும் நல்வினைப் பயனையளிப்பனவாய் இருப்பின், உயிர்களுக்கு இன்பத்தையே நல்கும். இவ்விதி யாவருக்கும் உடன்பாடாயினும், உயிர்களைக் காத்தற்றொழிலை மேற்கொண்ட மருத்துவர்களின் செயல்களுள் ஒவ்வொன்றும் உயிர்களின் இன்பத்தை நாடியதாகவே இருத்தல் முக்கியத்திலும் முக்கியமாகும். இன்பந்தருஞ் செயல்கள் யாவும் அறத்தின்பாற்பட்டன வாகையால், நாம் அறத்தையே கடைப்பிடித்தொழுகல் இன்றியமையாதது. ''அறஞ்செய விரும்பு.''

உத்தமர் உறவு

தீயவருடன் கலவாமல் அவர்களை விலகி இருப்பதுடன், உத்தம குணம் உள்ள நல்லவருடன் இணங்கி நேசித்து, அவர்களோடு அன்புடன் கூடி வாழ்தல் நலம்.

விலக்க வேண்டிய தீக்குணம்

பொய்சொல்லல், கோட் சொல்லல், சினந்து பேசல், பயனில சொல்லல் ஆகிய இந்நான்கும் வாக்கின் தீக்குணங்கள். களவாடுதல், வீணன தொழில் புரிதல், கொலை செயல் இம்மூன்றும் காயத்தின் துர்க்குணங்கள். கொலை செய்ய நினைத்தல், காமப் பற்று, எதையும் விரும்புதல் இம்மூன்றும் மனத்தீக் குணங்கள்.

மனம், மொழி, மெய் ஆகிய இம்மூன்றால் உண்டாகும் தீக்குணங்கள் பத்தையும் அறவே நீக்கவேண்டும்.

துன்புறுவோரை ஆதரித்தல்

நாம் நமது வருவாய்க்கு ஏற்றவாறு, வறுமை, பிணி மனத்துயரம் இவற்றால் வருந்துவோரை ஆதரிக்கவேண்டும்.

அஃறிணையுயிர்களிடத்தும் கருணை வைத்தல்

அஃறிணை உயிர்களாகிய எறும்பு, ஈ, புழு முதலியவைகளையும் நாம் நம் உயிர்போலவே எண்ணிப் பாதுகாத்தல் வேண்டும்.

வழிபாட்டிற்குரியவர்கள்

தேவதைகள், பசுக்கள், அந்தணர், வயதாலும், அறிவாலும் ஆசாரத்தாலும் மேம்பட்டவர்கள்; வைத்தியர், அரசர், விருந்தினர் ஆகிய இவர்களை வழிபடல் வேண்டும்.

இரப்பவரை ஆதரித்தல்

இரப்பவரின் இச்சையை நிவர்த்தியாமல், அவர்களை வீணில் திரும்பிப்போம்படி செய்தலும், அவமதிப்பாய்ப் பேசி அலட்சியஞ்செய்து அனுப்புதலும் கூடாச் செயல்களாம்.

தீயவர்க்கும் நன்மையே செயல்

நமக்குத் தீங்கையே இழைத்த பகைவருக்கும், நாம் நன்மையையே செய்ய விருப்பங் கொண்டவர்களாயிருத்தல் வேண்டும்.

மனத்திட்பம்.

செல்வமுற்ற காலத்தும், வறுமையெய்திய காலத்தும் மனங்கலங்குதலின்றி, ஒரே நிலையான மனவுறுதியைக் கொள்ள வேண்டும்.

பொறாமை.

எக்காரணத்தினுலேனும், உயர் நிலையையடைந்தவர்களைப் பார்த்து, அவரிடத்தும், அந்நிலையினுல் அவர்களடையும் உயர் நலங்களிடத்தும், பொருமை கொள்ளாது, ''அந் நிலைக்கு முதற் காரணமாய் அவர்களிடம் காணப்பட்ட முயற்சி, நம்பாலில்லையே'' என ஆற்றாமை கொள்ளுதல் வேண்டும்.

இனியவை கூறல்.

காலம் நேர்ந்துழி, அளவாயும், முன்பின் முரணின்றியும் பேசுதல் மட்டுமேயன்றி, மனத்தின்கண் உள்ள உவகையை வெளிப்படுத்துவனவாகிய இனிய சொற்களையே வழங்குதலும் வேண்டும்.

உறங்கும் வகை.

மலர் அணை

முல்லை, மல்லிகை, முதலிய மலரணையில் தூங்குபவர்கட்குப் பசி, சுக்கிலப் பெருக்கம்; புணர்ச்சியிலிச்சை, உடற் செழிப்பு இவைகளுண்டாகும்; மருந்துண்பதனாலுண்டான வெப்பந்தீரும்.

இலவம் பஞ்சணை

இம்மெத்தையில் துயிலில் உட்சூடு நீங்கும்.

பருத்திப் பஞ்சணை,

இம்மெத்தையில் துயில்பவர்களுக்கு, இரத்தம், விந்து, விருப்பம், வெப்பம் இவை அதிகப்படும்.

இரத்தினக் கம்பளவணை

வெள்ளை, சிவப்பு, மஞ்சள், பச்சை, கறுப்பு நிறமுடைய கம்பளப் படுக்கையால், சீதளதோடம், குளிர், ஐயப்பெருக்கம், பாண்டு, வீக்கம், பற்பல நஞ்சு இவை நீங்கும்; பித்தமும், சுக்கிலத்தாதும் மிகுதிப்படும்.

சகலாத்துப் படுக்கை

''சகலாத்து'' என்னும் உரோமத்துகில், நடுக்கற் சுரத்தைத் தடுப்பதற்கு உபயோகப்படும்; குளிர், பனி, பெரும்பாடு இவைகளைப் போக்கும்,

நிற வேற்றுமையால் சகலாத்துப் பலவகைப்படினும், சூட்டுக் குணமே உடையது. ஆனல், வெண்மை, பசுமை, நீலம், ஊதா என்னும் நிறங்களுள்ளவை அற்ப சூட்டைத் தரும்.

தாழம்பாய்ப் படுக்கை

இது, வாந்தி, தலைசுற்றல், பாண்டு, பித்ததோடம், நீராமைக் கட்டி, அதிமூத்திரம் இவைகளை விலக்கும்.

கோரைப்பாய்ப்படுக்கை

இஃது அக்கினிமந்தம், சுரவேகம் இவற்றை நீக்கும்; உடற் குளிர்ச்சியையும், நல்ல தூக்கத்தையும் உண்டாக்கும்.

பிரப்பம்பாய்ப் படுக்கை

இது, மூலரோகம், சீதமலபேதி, சீதசுரம், தலைப்பாரம், சீதளம் இவைகளையுண்டாக்கும்.

பேரிச்சம் பாய்.

இது, வாதகுன்மம், சோபை இவைகளை நீக்கும்; பசியையும் உடல் வெளுப்பையும் உண்டாக்கும்; மிகச் சூட்டைத்தரும்.

சிற்றீச்சம் பாய்

இதனல், உடல் உலரும்; சூடு, ஆவிருத வாதம், அதிபித்தம், கபமிகுதி இவை நீங்கும்.

முங்கிற்பாய்ப் படுக்கை.

இது சொட்டு மூத்திரம், பித்த மிகுதி, மிகுசூடு, இவைகளை அதிகரிக்கச் செய்யும்.

தலையணை.

தலையணை, கழுத்துக்கும் தோளுக்கும் மத்தியிலிருப்பதற்கு அளவான உயரமுள்ளதாகவும், வேண்டியமட்டும் நீளமாக வும் இருக்கலாம். இலவம் பஞ்சினல் தைத்த இதன் மீது தலையை வைத்துப் படுத்துக்கொண்டால், கால் முதல் தலைவரை நன்மை பெறும். தலையைப்பற்றிய ஆவர்த்த நோய் களும் நீங்கும்.

விசிறி வகை.

மயில் இறகினல் செய்யப்பட்ட மயில் விசிறியினல் வீசினல், சந்நிவாதம், வயிற்றுவலி, தலைசுழலல், பித்தகோபம், விக்கல், வேர்வை, வாதகோபம் இவை நீங்கும்; அறிவு விளங்கும்.

வெட்டிவேர் விசிறியின் குணம்.

இது, பயித்திய தோடம், உடல் எரிவு, நீர்வேட்கை இவை களை நீக்கும்; மனக்களிப்பையுண்டாக்கும்.

பனையோலை விசிறி.

இது, வாததோடம், சிலேத்துமநோய், பித்தாதிக்கம், சுவைமாறல் ஆகிய இவற்றை நீக்கும்.

வெண் சாமரை

இது, வியர்வை, களைப்பு, மயக்கம், மூர்ச்சையால் உண்டாம் ஞாபகமறதி, நாவரட்சி, உஷ்ணம் ஆகிய இவைகளைப்போக்கும்; புணர்ச்சியில் இச்சை, அழகு இவைகளை உண்டாக்கும்.

ஒழுக்கம்.

(தற்காப்பு)

ஒருவர் தமக்குப் பகைவர் இன்னார் என்பதையும், தாம் இன்னாருக்குப் பகைவர் என்பதையும், தமக்கும் பிறருக்கும் நேர்ந்த பழிப்பின் தன்மையையும், செல்வருக்குத் தம்மிடம் அருவருப்புண்டாயிருக்கும் போக்கையும் பிறர் அறிய வெளிப் படுத்துதல் கூடாது. இதனால் தற்காப்புக்கெடும்.

குறிப்பறிந்து செயல்.

ஒருவருக்கு மனமகிழ்வை உண்டாக்கக் கருதின், அவர் களின் உட்கருத்தை உண்மையாய் அறிந்து, அவ்வழியே மகிழ் விக்கும் ஆற்றலையடைந்து, அவர்களைக் களிக்கச் செய்வதற்குத் தக்க செயல்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

புலனாட்சி.

புலன்களைத் தத்தம் வழியே அளவுகடந்து செல்லவிடா மலும், மிகுதியாய் அடக்காமலும், சமநிலையில் வைத்து ஆளுதல் வேண்டும்.

அறம், பொருள், இன்பம் என்னும் இவற்றிற்குச் சம்பந்த மில்லாத எக்கருமத்தையும் செய்தல் நல்லதன்று, இயற்றும் கருமம் ஒன்றிற்கு நன்மைபயப்பதாயும், மற்றொன்றிற்குத் தீமைப்பயப்பதாயும் இருத்தல் கூடாது. எக்காரியங்களிலும் நடுவு நிலைமையுடன் இருத்தல் வேண்டும்.

மயிர், நகம், மீசை, இவைகளை அதிகமாய் வளர விடா மலிருத்தலும், எருவாய் கருவாய் முதலியவற்றையும், இன் னும் அழுக்கும் அதிகமாய்ச் சேரக்கூடிய இடங்களையும் சுத்தமாய் வைத்திருத்தலும் அவசியம்.

தினந்தோறும் குளித்தல், நறுமணப்பூச்சு ஊட்டிக்கொளல் ஆடம்பர மற்ற சுத்தமான உடைகளை உடுத்துக்கொள்ளல் மணிகளையும் பெருமை வாய்ந்த சீவ மூலிகைகளையும் வைத் திருத்தல் நலம் பயக்கும், பயன் தரத்தக்க மந்திரங்களை ஓதுதல் நல்லது.

நடக்கும்போது குடை, தாள்காப்பு (செருப்பு) இவற்றைத் தாங்கலும், நுகத்தடியளவுக்குப் பார்வையைச் செலுத்தலும் அவசியம். தவிர்க்க முடியாத கருமம் நேரிட்டாலொழிய, இரவில் வீட்டைவிட்டு வெளியில் செல்லுதல் கூடாது, செல்ல நேரிடுங்காலத்தில் தலைக் கவசமும், கைத்தடியும், ஒரு துணை யும் பெற்று வெளியேக வேண்டும். கிராம தேவதைகட்கு அதிஷ்டானமான மரங்கள், வழிப்படத்தக்க பெரியார்கள், கொடிகள், தூய்மை இல்லாத மனிதர்கள், சாம்பல், உமி,

அழுக்கடைந்த பதார்த்தங்கள், பருக்கைக்கற்கள் அடர்ந்த ஊர், ஓடுகள் நிறைந்த இடம், பூசை செய்யுமிடம், இடுகாடு இவைகளைத் தாண்டுதல், நதியை நீந்திச் செல்ல முயலுதல் ஆகிய இவைகள் ஆகாவாம்.

இவற்றின் விரிவை, ''நே யணுஙாவிதி ஒழுக்கம்'' என்னும் நூலில் பரக்கக் காணலாம்.

XI. தீயும் காற்றும்.

தீ (தேயு).

இயற்கைத் தீ, செயற்கைத் தீ, எனத் தீ இரண்டு வகைப்படும்.

இயறகைத் தீ.

இது சூரிய வெப்பத்தினுலுண்டாகும் வெயிலும், மூங்கில் போன்ற பிற பொருள்களின் இயக்கத்தாலுண்டாகும் தீயுமாகும்.

வெயிற் பொதுக் குணம்

''வாதமொடு காந்திகெடும்; மாதுயரம் வேர்வைபலம்
ஓதுபசி பித்தமிவை யுண்டாங்காண்;—சீதக்
குயிலி னிசைபழிக்குங் கோதின்மொழி மாதே!
வெயிலின் உறுகுணத்தை விள்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை வெயிலினல், வாதாதிக்கமும், அழகும் விலகும்; வருத்தம், வியர்வை, வன்மை, சாடராக்கினி, பித்தம் இவை அதிகரிக்குமென்க.

காலே மாலே வேயிற் குணம்

''காலேவெயிற் காயந்தார்க்குக் காணுப் பிணியனைத்து
பாலேவெயிற் போலப் பரவுங்காண்—மாலேவெயிற்
காய்ந்தார்க் குறுபிணிமுற் காசறுமி லக்கணநூல்
ஆய்ந்தார்க் குறுவழுச்சொ லாம்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) காலே வெயிலில் காய்ந்தவர்களுடைய உடலில், முன்பு இல்லாத பிணிகளெல்லாம் பாலே நிலத்தின் வெயிலைப் போலக் கொடுமையாய்ப் பரவும்.

மாலேவெயிலில் காய்ந்தவர்கட்குற்றபிணிகள், பழமையாகிய குற்றமற்ற இலக்கண நூற்களை ஆராய்ச்சிசெய்த புலவர்கட்குக் காட்சியில் பட்ட வழுச்சொற்கள் நீங்குவது போல நீங்கிவிடும்.

செயற்கைத் தீ.

நீரின் குணம், அது தங்கும் மண்ணின் குணத்தைப் பெறுவது போன்று, தீயின் குணமும், அதை வளர்ப்பதற்குரிய கட்டையின் குணத்தைப் பொருந்தியே நிற்கும்.'

தீக்காய்தலின் பொதுக்குணம்

''தீக்காயில் வாதமொடு சீத நிவாரணமாம்;
ஊக்கமிகு தாகமதி யுட்டிணமும்—நீக்கா
இரத்தபித்த நோயும் இரத்தக் கொதிப்பும்
உரத்தெழும்பு மென்றே யுரை.''

(ப.கு.சி.)

(பொழிப்புரை) தீக்காய்தலினல், வாதக்கடுப்பும் சீதமும் விலகும்; நீர்வேட்கை, சூடு, செம்புனற்பித்தம், இரத்தக் கொதிப்பு இவை மிகுதிப்படுமென்க.

வேள்விப்புகை, சுடுகாட்டுப்புகை, தைலப்புகை இவைகளின் குணம்.

''மகத்தூமம் ஆயுள் வளர்க்கும்; சவஞ்சார்
அகத்தூமம் அத்தை யழிக்கும்—மகத்தாம்
அருந்தயிலத் தூமம் அடர்வாத வன்னேய்
விருந்தயிலு மென்றே விதி.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) வேள்விப்புகை நீண்ட ஆயுளைக் கொடுக்கும். சுடுகாட்டுப்புகை உள்ள ஆயுளையுங் கெடுக்கும். பெரிய தைலப்புகை வாதப்பிணியை விருந்தாய் உண்டுவிடு மென்க.

மருத்துவ முறையில், பிணிகளைப் பரிகரிக்கப் பக்குவம் செய்யப்படுகிற மருந்துகளுட் பல, தீயைக்கொண்டு செய்பவை. ஆகையால், அம்மருந்துகள் எத்தோடப்பிணிகளை அறுக்க எண்ணிச் செய்யப்படுகின்றனவோ, அத்தோடத்தை விலக்குங் குணமுடைய மரங்களின் கட்டைகளையே உபயோகிக்கில், அக்கட்டையினின்றெழும் தீ, அத்தோடத்தை ஒழிப்பதற்குத் துணையாகும்.

காற்று.

குற்றமற்ற நற்காற்ருல் உடலுக்கு யாதொரு குற்றமுட விளையாது; நன்மையே உண்டாகும். எனினும், மோதுகின்ற காற்று ஆகாது. அதனல், மேகநீர், கண்பீடை முதலியன உண்டாகும்; சுரவேகத்தால் பீடிக்கப்படுபவர்களுக்குத் தீங்கு நேரிடும்.

நீரும் தீயும் எவ்வாறு முறையே மண், விலரு இவற்றின் குணத்தைப் பெற்று இருக்கின்றனவோ, அவ்வாறே காற்றும் தான் வீசும் இடத்தின் தன்மையையே பொருந்தியிருக்கும்.

கடல், கடலையடுத்த நிலக்காற்று, கபப்பிணியோர்கள் நீங்க மற்றையோர்க்குப் பலன்தரும். குறிஞ்சி, குறிஞ்சியை யடுத்த நிலக்காற்று, உடலுக்கு வன்மைதரும், முல்லை, முல்லையையடுத்த நிலக்காற்று, வெப்பத்தையுண்டாக்கும். மருத நிலக்காற்று, எப்பிணியையும் வரவொட்டாது தடுத்து உடற்கு நன்மை பயக்கும். பாலை நிலக்காற்று, பற்பல பிணிகட்கு உட்படுத்தும்.

நாடு நகரங்களில் உலவுங்காற்று, அவைகள் அமைக்கப் பட்ட நேர்மை, அங்குக் கட்டப்பட்டுள்ள வீடுகளின் தன்மை, வாழும் மக்களின் பெருக்கம் அல்லது சுருக்கம், வழங்கும் பொருள், நாடுநகரப் பாதுகாப்புத் திட்டம் இவைகளைப் பொருந்தியே இருக்கும்.

குறிப்பு.—நீர், தீ, காற்று இவற்றின் விரிவை ''நோயணுகா விதி ஒழுக்கம்'' என்னும் நூலில் விரிவாய்க் காணலாம் தீயின் குணத்தை,'' "மருந்து'' என்னும் பகுப்பில் குறிப்பிட்டுள்ள தீயின் கீழ்க்காண்க.

XII நீர்.

நீரின் சிறப்பு.

இஃது, உலகின்கண் தோன்றியுள்ள ஊர்வன, நடப்பன பறப்பனவாய்ச் சொல்லப்படும் உலகவுயிர்களுக்கும், விண்ணவர்களுக்கும் இன்றியமையாத நீர்மை (தன்மை)யை உடையதாகலின் நீர் எனப் பெயர் பெற்றது.

நீர், மழைக்கு முதற் காரணமும், மழையாற் பெருக்கித் தூய்மையுறலுமாதலின் உலகிற்குக் காரணகாரிய முறையாயிருப்பதாகும்.

ஆகலின், இதனை அம்முறைபற்றி மழை மேலேற்றிக் கூறப்பட்டுள்ளது. நிற்க,

''வானின் றுலகம் வழங்கி வருதலான்
தானமிழதம் என்றுணரற் பாற்று.''

என்னும் குறளால், மழையானது இடையறாது பெய்துவர, உலகம் நிலை பெற்றிருத்தலான், அம்மழை, உலகிற்குச் ''சாவா மருந்துக்கு'' ஒப்பானது எனவும்;

''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.''

என்பதால், மழையானது, உண்பார்க்கு நல்ல உணவுகளை உண்டாக்கி, அவ்வுணவுகளை உண்பார்க்குத்தானும் உணவாய் நிற்கும் எனவும்;

''விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.''

என்பதால், மழை வேண்டும் காலத்தில் பெய்யாமல், பொய்க்குமானால், கடலால் சூழப்பட்ட அகன்ற உலகத்தின்கண் பசியானது நிலைத்துநின்று உயிர்களை வருத்தும் எனவும்;

''ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.''

என்பதால் மழையாகிய வருவாய் குறையுமாயின், உழவர் ஏர் பூட்டித் தமது உழவுத் தொழிலை மேற்கொள்ளார் எனவும்;

''கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை''

என்பதால், தக்க காலத்திற் பெய்யாமல், நிலவுலகில் வாழ்வாரைக் கெடுப்பதும், அவ்வாறு கெட்டார்க்கு உதவி புரிதற் பொருட்டுப் பெய்து, அவர்களை வாழச் செய்வதும் மழையேயாகும் எனவும்;

''விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.''

என்பதால், மேகத்தினின்று மழைத் துளிகள் விழவில்லையேல், சிறுபயிராகிய பசுமையுடைய புல்லின் நுனியையும் காணுதல் முடியாது எனவும்;

''நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.''

என்பதால், திரண்டெழுந்த மேகம் நீரை உலகிற்குத் தரவில்லையேல் நிறைந்த நீரையுடைய பெரிய கடலும் நீர்வற்றித் தன்னியல்பு குறைவு படும் எனவும்;

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு."

என்பதால், மழை பெய்யாதாயின், விண்ணவர்க்கும் இவ்வுலகில் மக்களாற் செய்யப்படும் திருவிழாவும், நித்திய பூசையும் நடைபெறா எனவும்;

"தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்."

என்பதால், மழை பெய்யாதாயின், இப்பெரிய உலகின்கண் தானம், தவம் ஆகிய இவ்விரண்டும் நிலைபெறா எனவும்;

"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு."

என்பதால், எவ்வகையாலும் மக்களுக்கு நீரையின்றி உலக காரியம் நடவாதாயின். அந்நீர் இடையறா தொழுகும் ஒழுக்கம் மேகத்தை இன்றியமையாது எனவும்; மழையின் பெருமையைப் பல வகையான் விளக்கினர் திருவள்ளுவர்.

இவ்வாறு பெருஞ்சிறப்பு வாய்ந்து, காரண காரிய முறையால் நிகழும் நீரானது நிலவியைபில்லது நிலவியைபுள்ளது என இருவகைப்படும். இவற்றினுள், நிலவியைபில்லது.

மழை நீர், ஆலங்கட்டி நீர், பனி நீர், என முப்பிரிவை யுடையதாம்.

இது, நிலத்திினின்றெழாது, வானின்றிழிதலால் (நிலவியை பில்லது) நிலத் தொடர்பற்றது எனப்பட்டது.

மழை நீர்த்தன்மை.

"சீத முறுங்குளிர்ச்சி சேருமே சித்தத்துள்
போதந் தெளிவாய்ப் பொருந்துங்காண்—நாதமொடு
விந்தும் வளர்ந்துவரும் மேதினியில் எவ்வுயிர்க்கும்
சிந்துமழை நீராற் றெரி." (ப.கு.சி.)

(பொழிப்புரை) எவ்வுயிர்க்கும் பயனுமாறு பெய்கின்ற மழைநீரை நிலத்திற்படாமலெடுத்துக் கையாண்டால், அதனால், உயிரோடு வாழும் உடலுக்குக் குளிர்ச்சி, நல்லறிவு, நாதம் (செந்நீர்), விந்து (வெண்ணீர்) ஆகிய இவை மிக்குண்டாகும்.

ஆலங்கட்டி நீர்.

''வெண்மாசி மேகமுடன் வீறும் பெரும்பாடு
கண்மாசி காந்தல் கடிதகற்றும்—தண்மீறும்
விக்கற் சுவாசமுடன் மெய்ம்மயக்க மும்போக்கும்
கக்குமா லங்கட்டி காண்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) ஆலங்கட்டியை எடுத்து அதில் கிடைக்கும் நீரைக் குடித்தால், அது நீர்பிரமேகம், பெரும்பாடு, கண்ணிற் புகைகம்மல், கைகால் உடல் முதலியவைகளில் உண்டாகும் எரிச்சல், விக்கல், சுவாசம், மயக்கம் இவைகளைப் போக்கி, உடலுக்குக் குளிர்ச்சியை உண்டாக்கும்.

பனித் தண்ணீரின் குணம்.

''பனிச்சலத்தை யெல்லுதயம் பானஞ்செய் வாரைத்
தனிச்சொறி சிரங்குட்டந் தாபம்—தொனிக்கயங்கால்
முத்தோட நீரிழிவு மூடழல்கி ராணியிவை
கொத்தோடு தாழ்ந்தகலுங் கூறு.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) சூரியோதயத்திற்கு முன் பனி நீரைப் பானஞ் செய்வார்க்குச் சொறி, சிரங்கு, குட்டம், எரிச்சல், கபத்தோடுகூடிய இளைப்பு நோய், வாத நோய்கள், முக்குற்றக் கலப்பு நோய்கள், நீரிழிவு, உடல் முற்றும் பரவுகின்ற அழற்சி, கிராணிபேதி ஆகிய இந்நோய்கள் அடியோடு (முற்றும்) தீர்ந்து விடும் என்று கூறுவதால், பனி நீரின் குணங்களை அறிக.

பனித்தண்ணீரைப் பக்குவபடுத்தும் வழியும் உண்ணுங் காலமும் அதனால் நிரும் நோயும்,

''மண்குடுவை தன்னிலே வாய்கட்டி வெய்யில்வை
ஒண்பனியி னில்வை யிரவுக்கும்—உண்கிரண
முன்னே பனித்தண்ணீர் மூளாது வெண்ணேயும்
பின்னே யெனவுரைத்தார் மேல்.''
(ப.கு.சி.)

(பொழிப்புரை) முன்பனி பின்பனிக் காலங்களின் இரவுகளில், பனித் தண்ணீரை ஒரு மண் குடுவையில் விட்டு மெல்லிய வெள்ளைத் துணியை அக்குடுவை மேல்கட்டி, வெயிலிலும் பனியிலும் வைதது்க்கொண்டு வந்து, நாள்தோறும் சூரியன் புறப்படுவற்கு முன்னே உண்டு வந்தால், குருதிக் குறைவாலுண்டாகும் பாண்டு நோயும், தோல் வெண்ணிறத்தை யடைதலாகிய வெண்மேகமும் தீரும்.

ஆண்டுக்குத்தகப் பனிநீர் கொள்ளும் அளவு

''ஏழு வயசுக் கிரண்டுபலம்; மூன்றே
டேழு வயசுக்கு மூன்றுபலம்;—சூழும்
வயசுபதி னாறுக்கு மஞ்சுபலம்; மேன்மேல்
வயசி லறுபலநீர் வைப்பு.''

(ப.கு.சி.)

(பொழிப்புரை) பனிநீர் வைத்துப் பக்குவம் செய்ததை, ஏழு வயசுக்கு இரண்டு பலமும், பத்து வயசுக்கு மூன்று பலமும், பதினாறு வயசுக்கு அஞ்சு பலமும், அதற்கு மேற்கொண்ட வயசுக்கு ஆறுபலமுமாக உட்கொள்ள வேண்டும்.

மூக்கால் பனிநீர் கொள்ளும் அளவு.

''நன்றாக மூக்கதனில் நாளொன் றொருபலநீர்
குன்றாம லுட்கொள்ளக் கூசாதே—என்றாலும்
நித்த மொருகழஞ்சு நீரேற்றி நாழியுணக்
குற்றமிலை காண்சித்தி கூறு.''

(ப.கு.சி.)

(பொழிப்புரை) நாள்தோறும் பனித்தண்ணீரை மூக்கின் வழி ஒவ்வொரு கழஞ்சளவாக நன்றாய் ஏற்றி, ஒரு பல நீரை உள்ளுக்குக் கொள்ளுவதற்கு அஞ்சவேண்டா. அந்த அளவில் சிறுகச் சிறுக ஏற்றி, ஒருபடியளவாய்க்கொண்டு விட்டால், உடற்கு யாதொரு குற்றமும் உண்டாக மாட்டாது; சித்தி யுண்டாகுமென்று சொல்லுவாயாக.

மூக்காற் கொள்ளும் பனிநீரால் தீரும் நோய்.

''மூக்காலே நீர்குடிக்கின் மூளாது வெண்ணோயும்;
போக்குந் தியக்கமுடல் போகாதே;—ஆக்கம்;
மயிர்களுக்கு மெத்த மகாபலனு முண்டாம்;
உயரமுத மும்மருந்த வுண்.''

(ப.கு.சி.)

(பொழிப்புரை) மண் குடுவையில் பக்குவப்படுத்தி வைக்கப் பட்ட பனி நீரை மூக்காற்குடித்தால், பாண்டுவும், வெண் மேகமும் மிகுதிப்படா; தியக்கத்தைப் போக்கும்; நெடுநாள் வரையும் உடல் வீழாமல் நிலைக்கும், உடலுக்குப் பெருக்கமுண் டாகும்; மயிர்களுக்கும் மிக்க வன்மையுண்டாகும். ஆகை யால், உயர்ந்த அமுதம் போன்ற இயல்புடைய பனிநீரைக் குடிக்க எண்ணுவாயாக.

பனித்தண்ணீர் ஏற்றிக்கொள்ளு அளவு

''நன்ருக நீர்துவக்கில் நன்னீ ரொருநாழி
என்ருலும் நித்த முழக்கேற்றல்—என்ருர்
குறுணிநீர் தான்கொள்ளக் குன்மங் குலையும்
உறுமுதய முன்னீரை யுண்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) பனித் தண்ணீரை இடைவிடாது குடிக்கத் தொடங்கினல், ஒரு படி யளவாய் உயர்த்திக்கொள்ள வேண்டுமெனக்கூறினும், அவ்வளவின்றித் தினந்தோறும் காற்படி யளவாய் உண்ணினும், நன்மையைத் தரும் என முன்னோர் பகர்ந்துள்ளனர். இந்த விதிப்படி செய்து, சிறிது சிறிதாய் ஒரு மரக்கால் வரை அளவை உயர்ததிவிட்டால், குன்ம நோய் நீங்கும். ஆயினும், காலைச்சூரியன் புறப்படுவதன் முன் உண்பாயாக.

பனித்தண்ணீர் குறைக்கும் வழி

''ஆறுமா தங்கொள்; அதுவெற்றி யானநோய்
வேறுவே ருந்தனையு மெத்தக்கொள்;—கூறுமிஃ
தேற்றிஞற் போல விறக்கியிரு நாழிகொள்;
சாற்றினே மெல்லார்க்குந் தான்.''
(ப.கு.சி.)

(பொழிப்புரை) இவ்வாறு உயர்த்தினது போலவே, இரு நாழியளவு வரைக்கும் குறைத்து ஆறுமாதம் கொள்ள வேண்டும். அன்றி மருந்துக்கடங்காது வெற்றி பெற்ற நோய்கள், உடலை விட்டுப் பிரியும் வரைக்குமாவது கொள்ள வேண்டும்.

பனித் தண்ணீருக்குப் பத்தியாபத்தியம்

''பாலை முருங்கை பயறு திரிபலை
காலை நறுநெய்யுங் கற்றளையும்—கோலப்
பனித்தண்ணீர் கொள்வார்க்குப் பத்தியமாஞ் சூலை
மனிதற்கா காவினைகள மற்று.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) பாலைக்கீரை, முருங்கைக்காய், பச்சைப் பயறு, கடுக்காய்த் தோல், நெல்லிவற்றல், தான்றிக்காய்த் தோல், பசுவின் நெய், கற்றளைமீன் இவை, பனித்தண்ணீரை விதிப்படி கொள்பவர்களுக்குப் பத்தியப் பொருள்களாம். ஆயின், சூலை நோயினர்க்கு மேற்காணப்பட்ட பொருள்கள் அபத்தியமாகும்.

பனித் தண்ணீருக்குப்பத்தியம்

''நித்த முழுகுதலும் நீண்ட அறுசுவையும்
மற்றுங் குளர்ச்சி மதுரவகை—நித்தம்
பனித் தண்ணீர் கொள்வார்க்குப் பத்தியமா மென்றே
இனிச்சொன்னே மெல்லார்க்கு மெண்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) நாள்தோறும் நீரில் குளித்தலும், மிக்க அறுசுவைகளுள்ள பொருள்களும், குளிர்ச்சி தருபவையும் இனிப்புப் பொருள்களும், நாள்தோறும் பனித்தண்ணீரை விதிப்படி கொள்ளும் எல்லார்க்கும் பத்தியமாகுமென்று சொன்னோம்.

பனித் தண்ணீர்க்கு ஆகாப் பொருள்கள்

''இலைக்கறிகள் கொள்ளெள்ளு மெண்ணும் பலாக்காய்
மலைக்காடு வற்றல்கரு வாடு—துலைபெறவே
வெய்யில் மிளகுப்பு வேண்டா பகலுறக்கம்
துய்யபனித் தண்ணீர்க்குச் சொல்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) பாலைக்கீரை, சிறுகீரை, ஒழிந்த இலைக் கறிகள் கொள், எள், பலாக்காய், மலைக்கடுகு, கருவாடு, வெயில், மிளகு, உப்பு இவைகளும், பகல் தூக்கமும் பனித் தண்ணீரைக் கையாள்பவர்க்கு ஆகா.

தண்ணீர் கழிக்க

''தண்ணீர் கழியாமற் றுனுதரத் தேசிக்கில்
உண்ணுமோர் வெல்ல முறக்கரைத்து—மண்வெள்
ளரியின் விதையை யரைத்துச்சீ னிச்சர்க்
கரைநீரை யுண்டு கழி.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) சிறுநீரானது சரியாகக் கழியாமல் வயிற்றிற் கட்டுப்பட்டுவிடுமாயின் (நீர்க்கட்டானால்), பனித்தண்ணீரால் பெருக்கப்பட்டமோரில் வெல்லத்தைக் கரைத்தாவது, வெள்ளரி விதையைப் பனித் தண்ணீர்விட்டு அரைத்துச் சீனிச்சர்க்கரை கலந்தாவது உண்டால் நீர்க்கட்டு நீங்கும்.

பனித் தண்ணீர்க்கு ஆகாச் செயல்கள்

''கீதமுடன் பாட்டுக் கிளர்ச்சிரிப்புக் கூப்பிடுகை
ஏதமிலாப் பட்டினியோ டித்தனையும்—போதாப்
பனித்தண்ணீர்க் காகாவே பாகார் மொழியாய்!
இனித்தண்ணீர் தான்தவறு மென்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) இசை, பாட்டு, சிரிப்பு, கூப்பிடுகை, பட்டினி ஆகிய இவை பனித் தண்ணீர் கையாள்பவர்களுக்கு ஆகா; இவற்றைத் தவறிக் கையாண்டால், பனித்தண்ணீரின் குணம் கெடும்.

பனித்தண்ணீர்க்கு ஆகும் பொருள்கள்

''செந்நெலொடு கோதும்பை சேரு மிரசான்னம்
கன்னலொடு செய்ப்பயறு காழ்நெருஞ்சில்—ஒன்னார்
சிறுகீரை பாலையொடு சேர்முருங்கைக் காயும்
உறுபாக பத்தியமா மோது.'' (ப.கு.சி).

(பொழிப்புரை) சம்பா அரிசி, கோதுமை, இராசான்னம், கரும்பு, பனிப்பயறு, முதிர்ந்த நெருஞ்சில், சிறுகீரை, பாலைக் கீரை, முருங்கைக்காய் என்னும் இவை பனித் தண்ணிரைக் கையாள்பவர்களுக்குப் பத்தியப் பொருள்களாமென்று சொல்லு வாய்.

''காட்டில் வழுதலங்காய் கத்திரிக்காய்ப் பிஞ்சுடனே
வாட்டமுள வாழைக்காய் வாழைப்பூ—நாட்டமிகும்
அன்னையீர் வெள்ளரிக்கா யாகு மிளநீரும்
துன்னிலோ நீர்கழியுஞ் சொல்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) காட்டில் விளைகின்ற வழுதலங்காய், கத்திரிக்காய் பிஞ்சு, வாழைக்காய், வாழைப்பூ, வெள்ளரிக்காய், இளநீர் இவைகளை, நீர்க்கட்டு உண்டானபோது, பனித்தண்ணீ ரோடு கலந்து உட்கொண்டால் அது தீரும்.

பனித் தண்ணீரால் தீரும் நோய்கள்

(பதினன்குசீர்ச் சந்த விருத்தம்)

''காச நீரிழிவு வாத குன்மமொடு
கண்ட நோய்கடிய வாதமும்
கன்ன சூலையதி சார குட்டகய
ரோக முங்கருது மூலமும்
நாசி காபீடமு மீறு வாய்க்குருதி
நலியு நோய்கள் பல பேதமும்
நலமி லாதபெரும் பித்த மானவைகள்
நாடி வந்துதர நோயெலாம்
வீசி வந்தசுர மான வும்முதர
மேலி டுங்கடிய சுவாசமும்
மிக்க கிரிச்சமிரு தயத்தி ஞேய்கள்விடு
மிகுதி யானபல ஞென்றுமே
நேச மாமிரவி யுதய மாவதன்முன்
நீர்ம லங்களும் விடுமுனே
நியம மாமுதக முண்டி டீர்பெறினு
நினைவி லாரமிர்த மாகுமே.'' [ப.கு.சி.]

(பொழிப்புரை) யாவரும் விரும்புகின்ற பகலவன் தோற்றுவதற்கும், இருமலங்களையும் கழிப்பதற்கும் முன்னதாய் நாள்தோறும் ஓர் அளவில் பனிநீரைக் குடிக்கவேண்டிய விதிப்படி குடித்து, இருக்கவேண்டிய பத்தியப் படி இருத்தல் வேண்டும். அவ்வாறு உண்டால், அது சாவா மருந்து போலப் பல நன்மைகளைச் செய்யும், அன்றியும், காசம், நீரிழிவு, வாதகுன்மம், கழுத்து நோய், கொடிய வாத நோய்கள், கன்னசூலை, அதிசாரம், பெருநோய், இளைப்பிருமல், மூலநோய், நாசிகாபீடம், மிகுதியாய் வாய்வழிவரும் இரத்த பித்தம், பலவகைப்பட்ட வருத்தும் நோய்கள், மிக்க பித்தம் தேடி வந்த வயிற்று வலிகள், வெளியில் வீசிவருகின்ற சுரங்கள், வயிற்றிலிருந்து மேலுக்கெழும் மேலிரைப்பு, நீர்க்கட்டு, மார்புவலி முதலிய நோய்கள் தீரும். அன்றியும், மிக்க உடல் வன்மையுண்டாகும்.

''மூலாக்கினியும் முழுவுடல் மூள்கனலும்
காலாக் கினியும் கருதுங்கால்—சால
அளவுகுண மென்றே யரும்புனலைக் காணில்
வளருகுண மென்றே வழுத்து.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) மூலத்தில் தோன்றுங் கனலும், உடல் முற்றும் மூள்கிறகனலும், தன்னிலை விருத்தியடைந்த வாயுவினுல் அதிகப்பட்ட பித்தமும் இப்பனி நீரை அளவுப்படியும், பத்தியப்படியும் அருந்த தீருமென்பதாம்.

பனித் தண்ணீரைக் காய்ச்சி குடிக்கவேண்டும் எனல்

''எப்பொழுதி லும்மொன்றிற் பாதிப் பனித்தண்ணிர்
வெப்பொடு பட்டினியின் மேற்குடிக்கு—மப்பொழுது
காய்ச்சிக் குடிக்க கதிருதைய முன்னமே
காய்ச்சிவிடிற் செல்லா தது.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) பனித்தண்ணிரைச் சுரத்தில் பட்டினியிருந்து அதன் மேற்குடிக்கும் பொழுது, அத்தண்ணீரைச் சரிபாதியாய் வற்றக் காய்ச்சியும், காலையில் குடிக்கும்பொழுது காய்ச்சாமலுங் குடிக்க வேண்டும்.

நிலவியையுள்ள நீர்

இது, ''தண்ணீர் நில நலத்தால்'' என மூதுரையிலும், ''நீரின் குணம் வேறிலை; பாரின் குணமே வேறு'' எனத் தேரையர் தருவிலும், ''தண்ணீர்க் குணமெல்லாந் தான்கேள் மடமயிலே மண்ணின் குணமல்லால் மற்றுண்டோ?'' எனப் பொருட்பண்பு நூலிலும்.

"நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும்" எனத் திருக்குறளிலும்,

சொல்லப்பட்டிருத்தலின் நீர்க்குத் தனிக்குணம் வேறில்லை என்றும், அது தங்குமிடத்தின் வேறுபாடுகளாலேயே வெவ்வேறு குணங்களை அடைகின்றது என்றும் தெரிந்துகொள்ளுகின்றோம்.

அவ்வாறு வேறுபாடடைந்த நீரின் குணங்களை அறியுமுன், அந்நீர் உண்டாகி, ஆங்காங்குத்தங்கி, நில வேறுபாட்டின்படி குணவேறுபாடடைதற்கு முதற்காரணமாயுள்ளது கடல் நீராதலால், அக்கடல் நீரின் குணத்தை அறிந்துகொள்வது சிறப்பு.

கடல் நீர்க்குணம்

"கடலின் புனலாற் கவிசை பெருநோய்
உடலின் கடுப்புதிரச் சூலை—அடர்குட்டம்
வாதகுன்மம் வெப்பிரத்த வாதநீ ராமைமம
கோதரம்பி லீகமறுங் கூறு." (ப.கு.சு.)

(பொழிப்புரை) கடல் நீரினால் கவிசை (வயிற்றுக்கட்டி), பெருநோய், தேகக்கடுப்பு, இரத்தகுன்மம் என்னும் உதிரச்சூலை, குஷ்டம், வாதகுன்மம், இரத்தபித்தம், வாதநீராமைக்கட்டி, மகோதரம், பிலீகம் என்னும் இவை நீங்கும்.

"குன்ம வாயு குடற்கரி என்பதும்
வன்ம மான மலசல பந்தமும்
கன்ம மாகுவன் னோயுங் காணுமோ
நுன்மை வாரிநீர் காய்ச்சி நுகரினே." (ப.கு.சி.)

(பொழிப்புரை) கடல்நீரைக் காய்ச்சியருந்த, வாதகுன்மம், குடற்கரி, மலசலக்கட்டு கன்மத்தால் விளையும் கனநோய்களும் நீங்கும் அன்றியும்;

"உடற்க டுப்புடன் உற்றெழு சோணித
நடுக்கு வாதமும் நாப்பிடிப் போடுபல்
இடுக்கி ரத்தம் றிற்று விழுவதும்
துடுக்க தாஞ்சன்னி தோடமு மோடுமே." (ப.கு.சி.)

(பொழிப்புரை) உடல் கடுப்பு, சோணிதவாதம், நாக்குப் பிடிப்பு, பல்லிடுக்கிலிரத்தம் வடிதல், ஈறு இற்று விழுதல், சந்நிவாதரோகம் ஆகிய இவை நீங்கிப்போம்.

இக்குணங்களைப் பொருந்திய கடல்நீர் ஆவிரூபமடைந்து மேகமாய் மழைபொழிய. அந்நீர், பூமியின் சில பாகங்களில், ஓடியும், தங்கியும், பரவியும், சுரந்தும் நிற்கும். அவ்வித வேறுபாடுகளே,

''ஆறுகுளம் ஏரிமடு ஆழந்தகூ பஞ்சுனையுள்
ஊறருவி யென்னு முலகு.''

என்''தாலறிக.

ஆறு : இது, ஆறு, கான்யாறு என இருவகைப்படும்.

ஆறு—மருத நிலத்தில் பாய்வது

கான்யாறு—முல்லை நிலத்தில் பாய்வது.

ஆற்று நீர்த் தண்மை

''ஆற்றுநீர் வாதம் அனலம் கபத்தோடு
தோற்றுகின்ற தாகந் தொலைக்குமே—ஊற்றமிகும்
தேகத்தி னேயையெலாஞ் சீறித் துரத்திவிடும்.
போகத்திற் ருதுவுமாம் போற்று.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) ஆற்று நீரானது, வாதப்பிணி, பித்தப்பிணி, ஈளை, நீர்வேட்கை முதலிய உடலிலுண்டாகும் சிற்சில நோய்களையும் போக்கும் ஆண்மையை மிகுவிக்கும். எனவே, இது மருதநில ஆறென்பது தேற்றமாகிறது.

இதனை, மருத நிலத்தின் குணத்தின் கீழ்க்காணும் 'மருதநில நன்னீர்'' என்ற செய்யுளாலறிக.

இனி, நாம் வாழும் இந்தியாவில் பாயும் ஆறுகளின் தன்மைகளைக் கூறுவாம்:

கங்கை நதி நீர்

''கங்கைநதி நீர்பிறவிக் காட்டுக்கோர் பேரனலாம்;
துங்கமுற வப்புனனைத் துய்க்குங்கால்—அங்கவெப்பு
மந்தங் கயம்பித்தம் வாயுமே கங்காந்தல்
உந்துந்தா கங்களுபோம் உன்னு.''

(ப.கு.சி.)

(பொழிப்புரை) கங்கைநதி நீரைப்பருகின், உட்சூடு, மந்தாக்கினி, க்ஷயரோகம், பித்தகோபம் வாதாதிக்கம், சீழ்மேகம், தேக எரிச்சல், நீர் வேட்கை இவைகள் நீங்கும்.

யமுனை நதி நீர்

''யமுனைநதி நீரா லதிசுரம்வெண் குட்டம்
சமனைநிகர் காசம்வெட்டை தாகம்—வமனமுறு
பித்த மிரைப்பிளைப்புப் பேசரிய தாதுநட்டம்
சுத்தவெள்ளைப் பாண்டிவைபோம் சொல்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) யமுனை நதி நீரையருந்த, கனசுரம் வெண்குட்டம், காசம், வெட்டை, தாகம், பித்தவாந்தி, இரைப்பு இளைப்பு, பாண்டு, தாது நட்டம் ஆகிய இவைபோம்.

சிந்து நதி நீர்

''சிந்து நதிப்புனலாற் றேகத் துறுங்கடுப்புப்
புந்திமயக் கம்மேகம் புண்வியர்வை—விந்து நட்டம்
அத்திசுரம் வெட்டை யடர்மூத் திரச்சிக்கல்
முற்றியதா கப்பிணிபோ முன்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) சிந்து நதி நீரால், தேகக்கடுப்பு, புத்தி மயக்கம், மேகம், புண், வியர்வை, சுக்கில நட்டம், என்பைப் பற்றிய சுரம், வெட்டை மூத்திரச் சிக்கல், தாகம் ஆகியவை நீங்கும்.

காவிரி நதி நீர்

''காவிரிநீ ராற்பொருமல் காசசுவா சஞ்சோபை
நீவுதொண்டைக் கட்டிளைப்பு நீரேற்றம்—பூவுலகின்
மன்னுதிரக் கட்டியோடு வாயுலர லென்பவைபோம்
பின்னுடற்குக் காந்தியுமாம் பேசு.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) காவிரிநதி நீர், வயிற்றுப் பொருமல், இருமல், இரைப்பு, சோபை, கபக்கட்டு ஆயாசம், நீரேற்றம், (சலதோஷம்) இரத்த குன்மம், நாவறட்சி ஆகிய இவைகளைப் போக்கும்; தேகததுக்குக் காந்தியை (அழகை) உண்டாக்கும்.

சித்திர நதி நீர்

''சித்திர நதிப்புனற்குத் தேகத் துறுங்கடுப்புத்
தொத்துகரப் பான்சர்த்தி சூலைகுன்மம்—குத்துகின்ற
மூத்திரதோ டந்தோட மூடுவா தாதிக்கம்
கோத்தவூன் வீக்கமும்போங் கூறு.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) சித்திர நதிநீர், உடற்கடுப்பு, கரப்பான், வாந்தி, சூலை, குன்மம், மூத்திரதோஷம், திரிதோஷம், சங்க வாதம், வாதாதிக்கம், உடல் வீக்கம் ஆகிய இவைகளைப் போக்கும்.

தம்பிர வருணி நதி நீர்

"தாம்பிரபன் னிப்புனலாற் சர்வசுரம் பித்துவிழித்
தூம்பிரமுட் காய்ச்சல் சுவாசநோய்—தேம்பிமிகக்
ஷக்குகய மென்புருக்கி கைகா லெரிவுடனே
மிக்குறுதா கங்களும்போம் விள்." (ப.கு.சி.)

(பொழிப்புரை) தாம்பிரவருணி, நீரால், சகல சுரம், பித்த தோஷம், கண்புகைச்சல், உட்காய்ச்சல், இரைப்பு, க்ஷயம், என்புருக்கிநோய், கைகால் எரிச்சல், அதிதாகம் ஆகிய இவைகள் போம்.

பச்சையாற்று நதி நீர்

"பச்சையாற் றுப்புனலைப் பார்த்துவந்த பேர்தமக்கு
நச்சிரும லீளைகப நண்ணுங்காண்—நிச்சயமாய்
அவ்வளவோ வென்னில் அனில்முதி ரக்கடுப்பும்
கவ்வுசுர முங்காணுங் காண்." (ப.கு.சி.)

(பொழிப்புரை) பச்சையாற்று நீரால் நச்சிருமல், ஈளை கபாதிக்கம், வாதகோபம், இரததக்கடுப்பு, வாதிக்கின்ற சுரம் ஆகிய இவைகள் உடனே உண்டாகும்.

நருமதா நதி நீர்

"நருமதா வென்னுநதிப்புனலால் வாந்தி
சுரம்விக்கல் காமிலத்தின் தோடம்—பொருமலிரு
கைகா லெரிவுநீர்க் கட்டுகோ ழைக்கட்டோ
டைவாத மென்பவைபோ மாங்கு."
(ப.கு.சி.)

(பொழிப்புரை) நருமதா நதிநீர், வாந்தி, சுரம், விக்கல், காமாலை, வயிற்றுப்பிசம், இரண்டு கைகால்களிலும் எரிச்சல், நீர்க்கட்டு, கோழைக்கட்டு, கபவாதக்கூட்டுப்பிணிகள் ஆகிய இந்நோய்களைப் போக்கும்.

கோதாவிரி நதி நீர்

"கோதா விரியென்னும் கோதில்நதி நீரதனால்
வாதாதி முத்தோட வன்சினமும்—பேதாபே
தச்சொறியு முட்சிரங்குந் தாவு நளிர்சுரமும்
இச்சகம்விட் டேகு மிசை." (ப.கு.சி.)

(பொழிப்புரை) கோதாவிரி நீரைப்பருக, முத்தோஷக் கோபம், பல விதச்சொறி உட்சிரங்கு, நளிர்ச்சுரம் ஆகிய இவைகள் போம்.

துங்கபத்திரி நதி நீர்

''மாதுங்க பத்திரிநீர் வன்ருக மென்புருக்கி
ஓதுங் கரப்பான் அரோசிகநோய்—தாதுநட்டம்
நேத்திர தோடங் காசம் நீரடைப்பு மெய்வன்னக்
கோத்திரமென் ருேதிவைபோக்கும்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) துங்கபந்திரி நதி, நீர், கொடிய நீர்வேட்கை, என்புருக்கி ரோகம், கரப்பான், அரோசகம், தாதுநட்டம், கண்ணிலுண்டாகும் நோய்கள், காசம், நீரடைப்பு, உடல்நிறம் வேறு நிறமாக மாறல் ஆகிய இவைகளைப் போக்கும்.

வைகை நதி நீர்

''வைகை நதிப்புனலால் வாதநீர் குட்டொடுமெய்ச்
செய்கைதவிர்க் குஞ்சோபை திண்கரப்பான்—மெய்யெரிவு
தாக நடுக்கனிலம் தாதுநட்டம் சில்விடமும்
ஏகுமிந்த வையமவிடுத்தே.''

(பொழிப்புரை) வைகை நதி நீர், வாதநீர், குஷடம், உடற் செயலைத் தவிர்க்கும்சோபை, கரப்பான், உடலெரிச்சல், தாகம், நடுக்குவாதம், தாது நட்டம், சில்விடம் ஆகிய இவைகளை ஒழிக்கும்.

அடவி நீர்

''அடவிப் புனலால் அதிசீதா திக்கம்
உடலிற் கனப்பிளைப்பு முண்டாம்—உடல்வயிறு
நாவி னிடம்வெதும்பும் நண்ணுந் தலைப்பாரம்
தீவவ் வடற்சுரமாந் தேர்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) கான்யாற்று நீரைக்குடிப்பவர்க்கு, அதிக சீதளம், தேகபாரிப்பு, இளைப்பு, உடல், வயிறு, நா, ஆகிய இவ்விடங்களில் வெதும்பல், தலைப்பாரம், விஷமச்சுரமாகிய குளிர்க்காய்ச்சல் ஆகிய இவைகளுண்டாகும் என்பதை அறிக.

அருவி நீர்

''அருவிநீர் மேகம் அகற்றும்; கபத்தை
வருவிக்கும்; ரத்தபித்த மாற்றும்;—பெருமிதமாம்
வேலை யுலகின் மிகுத்தபலம் உண்டாக்கும்;
காலை மலர்முகத்தாய்! காண்.''

(ப.கு.சி.)

(பொழிப்புரை) மலையருவிநீர், பிரமேகத்தையும், இரத்த பித்த ரோகத்தையும் நீக்கும்; தேக பலத்தைததரும்; ஆனல், கபத்தை உண்டாக்கும்.

ஊற்று நீர்

''ஊற்றுநீர் பித்தம் ஒழிக்கும்; இனிப்பாகும்;
ஆற்றிவிடும் தாகத்தை அப்பொழுதே;—கூற்றுவிழிக்
கொம்ப ரிடையாய்! குணுகுணங்க ளைத்தெளிவாய்
நம்பியுல கோரறிய நாட்டு.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) மதுரம் பொருந்திய ஊற்றுநீர், பித்த கோபத்தை ஒழிக்கும்; இனிமையுடையதாம்; அப்போதே தாகத்தைத் தணிக்கும்.

கிணற்று நீர்

''ஆசாரக் கூபத் தறலால் அதிதாகம்
வீசாகச் சூடுபசி மெய்க்காந்தல்—மாசூலை
மெய்வலி சந்துளைப்பு வீழ்மயக்கம் சோபைபித்தம்
பையமீவரு மீளையறும் பார்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) குற்றமற்ற கிணற்று நீரினால், மிக்கதாகம், வெப்பம், பசி, உடலழற்சி, கொடியசூலை, உடலுட் கடுப்பு, இடுப்புக்குடைச்சல், தள்ளுகின்ற மயக்கம், வீக்கம், பித்த கோபம், நாளுக்குநாள் மெல்லமெல்ல அதிகப்படுகின்ற ஈளை நோய் ஆகிய இவைகள் நீங்கும்.

இனி, நீண்ட ஓட்டமின்றி, நிலத்திலும், மலைகளிலும் தங்கி நிற்கும் நீரின் குணம் உரைப்பாம்;

குளத்து நீர் பொதுக் குணம்

''குளத்துநீர் தானே கொடிதான வாதம்
வளர்த்துவிடும்; அப்பான் மதுவாம்;—குளிர்ச்சியையும்
மெத்தவுண் டாக்குமென மேதினியோர் தங்களுக்குக்
கொத்தலரும் பூங்குழலாய்! கூறு.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) குளத்துநீரின் பொதுக்குணம்—கொடிய வாத ரோகத்தையும், மதுப்பிரமேக நீரையும், சீதளத்தையும் மிகுதியும் உண்டாக்கும்.

தாமரைக் குளத்து நீர்

''தண்டா மரைக்குளத்திற் றங்கு புனலதனல்
உண்டாகும் வாதபித்தம் உண்மையே;—பண்டான
வெக்கைநோய் மாருது; வீறுந் தவனமுமாம்;
மைக்கருங்கண் மாதே! வழுத்து.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) குளிர்ச்சிபொருந்திய தாமரைக்குளத் வாதபித்த கலப்புப்பிணி, நாட்பட்ட காய்ச்சல், தாகம் இவைகளை அதிகப்படுத்தும்.

அல்லிக்குளத்து நீர்

''அல்லிக் குளத்துநீர் அக்கினிமந் தப்பேதி
மெல்லச் சொறிசிரங்கு வெப்புடனே—தொல்லுலகில்.
தாலுதனில் அச்சரமும் தாதுநட்ட முங்கொடுக்கும்
கோல மலர்த்திருவே! கூறு (ப.கு.சி.)

(பொழிப்புரை) அல்லி மலர் நிறைந்த குளத்துநீர், அக்கினி மந்தத்தாலுண்டாகும் அசீரணபேதி, சொறி, சிரங்கு, உஷ்ணம், நாப்புண், தாதுநட்டம் ஆகிய இவைகளை உண்டாக்கும்.

அதிகுளிர்ச்சி, சரகூறல் உள்ள குளத்து நீர்

''சீத மிகுந்தடநீர் தேகத் தளர்ச்சிவிக்கல்
வாத கபங்கடிகள் வாந்திநளிர்—மோதிருமல்
வீறுகுன்ம நோயிவைவி ளைக்கும் சருகுமதில்
ஊறுமெனின் நோய்பலவாம் உன்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) மிகுந்த சீதகுணமுடைய தடாகத்தின் நீரானது, உடற் சோர்வு, விக்கல், வாதகபக் கலப்புநோய், வண்டுக்கடி முதலிய சில்விஷம், வாந்தி, குளிர், காசம், வன்மை மிகுந்த குன்மநோய் ஆகிய இவைகளை உண்டாக்கும், இத்தகைய குளத்தில் இலைச்சருகும் விழுந்து ஊறுமானால், அந்நீர் பற்பல பிணிகளையும் உண்டுபண்ணும் என்பதை நினைவாயாக.

ஏரி நீர்—சுனை நீர்

''ஏரிநீர் வாதம் இளைத்த துவர்ப்பாகும்
கூரியதோர் கற்சுனைநீர் கூறுங்கால்—சீரியதோர்
வாதமொடு பித்தமெழும் வைத்தொருநாள் பின்னுண்ணில்
சீதமில்லை யுட்டிணமாம் செப்பு.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) ஏரிநீர் இளைத்த துவர்ப்புச் சுவையையுடையது; வாதப்பிணியை வளர்க்கும்; கற்சுனைநீர் வாத தோஷத்தையும், பித்ததோஷத்தையும் உண்டாக்கும். இதை ஒரு நாள் வைத்திருந்து மறுநாள் அருந்தினல், சீதம் நீங்க உஷணம் தரும்.

சுனை நீர்

''சுனைப்புனலைத் துய்த்தார்க்கும் சூழ்ந்ததிற் றேய்ந்தார்க்கும்
கனைப்புறுசி தச்சுரமுங் காணும்—வினைக்குரிய
வாதமுறு மத்தால் வருமே நடுக்கலின்னும்
ஓதுபித்த கோபமுமா முன்னு.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) சுனைத்தண்ணீரை உண்டவர்க்கும், அதில் மூழ்கினவர்க்கும் சீதளச்சுரம், இருமலோடுங்கூடிய ஐயவெப்பு, வளிமிகுதி, வாத நடுக்கல் (கம்பவாதரோகம்), பயித்திய தோடம் ஆகிய இவைகளுண்டாம.

ஓடை நீர்.

''ஓடை தருநீரை உண்ணவதி தாகமுமாம்;
மேடையெனத் தோட்பலனு மெத்தவாம்;—ஓடைமலர்க்
கண்ணாய்! அதிதுவர்ப்பும் காணு மதுரமுமாம்
எந்நாளும் பாரி லியம்பு.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) துவர்ப்பும் மதுரமும் உள்ள ஓடை நீரை யருந்தின், அஃது அதிதாகத்தையும் புயபலத்தையும் கொடுக்கும்.

வயல் நீர்.

''மேகம்போம் தாகம்போம் வெட்டையுட னேசுரம்போம்
தேகம் குளிர்ச்சியுற்றுத் தேறுங்காண்—சோகமெல்லாம்
ஆறு மிரத்தகய மாறுநோய்க் கோபமிக
மாறும் வயற்புனைற்கு வை.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) நன்செய் வயல்களில் தங்கி நிற்கும் நீர், பிரமேகம், நீர்வேட்கை, வெட்டை, காய்ச்சல், மூர்ச்சை, இரத்தகாசம், சுரவேகம் ஆகிய இவைகளை நீக்கும்; மேலும், இந்நீரால் சப்ததாதுக்களும் குளிர்ச்சியடைந்து உடல் வலுக்கும்.

நண்டுக் குழி நீர்.

''வாந்தியறும் தாகமறும் மாருத விக்கலறும்
காந்தல் எரிவும் கடிதேகும்—தோய்ந்துவரும்
கண்டுக் குயர்ந்த கனிமொழியே! பண்ணும்
நண்டுக் குழிநீரை நாடு.'' (ப.கு.சி.

(பொழிப்புரை) வயல்களிலிருக்கிற நண்டுக்குழி நீரால், வாந்தி, நீர் வேட்கை, நீங்காத விக்கல், உடல், அழற்சி, உடல் எரிச்சல் ஆகிய இவைகள் விரைவில் போகும்.

பாறைநீர்.

''பாறைமீ தூறுகின்ற பானீர் தன்னையுண்டால்
ஏறு முடலமெல்லா மீரிப்பே;—வீறுகின்ற
வாதகோபத் துடனே மாருச் சுரமுமெழும்;
ஓதசனத் துண்டாம் உவர்ப்பு.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) பாறைமீது ஊறுகின்ற நீரை அருந்தில், உடல் முற்றும் சில்லிடும்; வாதகோபம் மிகும்; இடை விடாச் சுரமுண்டாம்; உண்கிற உணவாதிகளின் முடிவில் உவர்ப்புச் சுவையும் தோன்றும்.

கருங்பாறை நீர்.

''கரும்பாறைத் தண்ணீர் கனசோபை வாந்தி
பெரும்பாடு பித்தசுரப் பீடை—அருந்தயக்க
நீர்க்கடுப்புத் தாகமிவை நீக்கிவித்தை புத்தியழ
கேற்கவளர்ப் பிக்குமெய்யை யெண்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) கரும்பாறையில் ஊறிய தண்ணீர், மிகுந்த சோபை, வாந்தி, பெரும்பாடு, பித்தசுரம், தயக்கம்(மனோபீடை) நீர்க்கடுப்பு, நீர்வேட்கை இவைகளை நீக்குவதுடன் கல்வி, புத்தி, அழகு இவற்றையும் அடையும்படி உடலை வளர்க்குமெனக் கொள்க.

சுக்கான் பாறை நீர்.

''நீர்க்க டுப்பெழும் நெஞ்சினிற் சீழ்கட்டும்
பார்க்கிற் பித்தம் பலபிணி சூழ்வாதம்
தீர்க்க வாயுவைத் தீர்த்திடும் சிந்தைநோய்
தாக்கும் சுக்கான் தனிப்பாறைத் தோயமே.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) சுண்ணாம்புப் பாறைநீர், மூத்திரக்கடுப்பு, நெஞ்சிற் கோழைக்கட்டு, பித்தாதிக்கம், கபத்தைப்பற்றிய சிற்சில நோய்கள், மனப்பிணி ஆகிய இவைகளை யுண்டாக்கும்; ஆனால், வாதரோகத்தைப் போக்கும்.

நில வேற்றுமையால் செம்மை, கருமை நிறம் பெற்றநீரின் குணம்.

சிவந்த நீர்.

''காச பித்தத்தாற் காந்தியு மேகிடும்;
ஊச லுட்டிண முட்சுரங் காந்தலாம்;
நாச தாதுவும் நண்ணிடும் என்றுரை
வாச மிற்சிவப் பாம்புனல் வண்மையே.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) செம்மை நிறத்தண்ணீரால், பித்தகாச முண்டாவதால், இயற்கை நிறம் மாறும். வெம்மையும், உட்சுரமும், காந்தலெனும் அரற்றலும் உண்டாகும். தாதுவும் நாசமாகும்.

கறுத்த நீர்.

''கறுத்தசலம் வாந்தி கரப்பன்வெப் புக்காந்தல்
இறுத்தநெஞ்சுக் கட்டிரும லீளை—மறைப்பில்சுரம்
நீக்கரிய நெஞ்செரிப்பு நீள்தோஷம் தாகநளிர்
போக்குமன லங்கொடுக்கும் போற்று.' (ப.கு.சி.)

(பொழிப்புரை) கருமை நிறத்தண்ணீர், வாந்தி, கரப்பான், வெப்பு, அழல், கோழைக்கட்டு, இருமல், ஈளை, மாறல்சுரம், புளித்தேப்பம், நீரேற்றம், தாகம், நளிர் ஆகிய இவைகளைப் போக்கி, உடலுக்கு வெப்பந்தரும்.

பலவகை நீர்களில் சில நீர்களின் சிறப்புத் தனிக் குணம்.

"ஆற்றுத் தண்ணீர்க் கழகுண்டாம்;
அடைந்த சுனைக்கு மகோதரமாம்;
சூற்று மாரி மெய்யிறுகும்;
துலையாக் கிணறே கயந்திரட்டும்;
மாற்றுங் குளமே வியாதியில்லை;
மாருக் குளமே வியாதியுண்டு;
தோற்றும் மதுர மொழிமயிலே!
துலங்குந் தண்ணீர்க் குணங்காணே."

"பாசித் தண்ணீர் நோயாக்கும்;
பருத்த வோடைத் தெளிவூறல்
நேசித் திடவே பிணியில்லை;
நிலைநீர்க் குண்டாம் குடல்வாதம்;
மாசித் தண்ணீர் பித்தகற்றும்;
வளர்க்குஞ் சுரத்தைச் சருகூறல்;
தேசத் தண்ணீர்க் குணந்தன்னைத்
தெரியச் சொன்னேம் திண்ணமிதே." (ப. கு சி)

மழை நீர்—உடற்கட்டின் தளர்ச்சியைப் போக்கி உடலை இறுக்கும்.
பனிமாசு படிந்த நீர்—பித்தரோகத்தை விலக்கும்.
ஆற்றுநீர்—வனப்பைத்தரும்.
சுரப்பும் தெளிவுமுள்ள ஓடை நீர்—நோய்க்கிடந்தாராது.
இறைப்பில்லாக் கிணற்று நீர்—கயப்பிணியையுண்டாக்கும்.
வரத்தும் போக்குமுள்ள குளத்துநீர்—வியாதியையுண்டாக்காது
அங்ஙனமில்லாத குளத்துநீர்—வியாதியையுண்டாக்கிப் பெரும்பான்மை குடல் வாதத்தையுண்டாக்கும்.
பாசிபடிந்த நீர்—நோயை விளைக்கும்.
சருகு ஊறிய நீர்—சுரத்தை வளர்க்கும்.
சுனைநீர்—மகோதரத்தை உண்டாக்கும்.

குளியல் குடித்தற்குப் பயனற்ற நீர்.

"சந்திரா தித்தர்வளி சாராத நீர்புழுதுர்க்
கந்தமதி சேறு கனப்பிலையு—திர்ந்தநீர்
தங்குசுவை யில்லாநீர் சாற்றுமிவை ஸ்நானபா
னங்களுக்கா காவுறினே யாம்." (ப. கு. சி

(பொழிப்புரை) திங்கள், ஞாயிறு இவற்றின் கதிரொளி, படிரு இவைகள் அணுகாததும், கிருமி, துர்நாற்றம், சேறு தடித்தல், சருகுதிரல், சுவையின்மை யென்னும் இவைசள் பொருந்தியதும் ஆகிய நீர், குளியல், குடித்தல் இவைகட்கு ஆகாது. அதை உண்ணின் நோயை யுண்டாக்கும்.

உப்புநீரின் குணம்.

''உப்புநீ ராலுலவை யுள்ளிலோ டிக்குத்தும்
எய்ப்பசன மாம்பித்த மேறிடுங்காண்—செப்புகின்ற
வாயிலூ றுஞ்சலமு மாதுவர்ப்பா மாதரசே!
ஓயுங் குடல்வாத மோது.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) உப்பு நீரால், சரீரத்தில் ஓடிக்குத்துகின்ற வாயுவம் அற்ப உண்டியும், பித்தமிகுதியும், வாயில் துவர்ப்பாய் ஊறுகிற நீரும் மிகுதிப்படும். ஆனால், குடல்வாதம் விலகும்.

நாவல்நீரின் குணம்.

''நாவல்வே ரூறுசல நாளுமதி சாரத்தை
மாவலிய மேகத்தை மாற்றுங்காண்;—பூவுலகில்
விந்தோ டதிசீதம் வீறுபலம் வெப்பையம்
மந்தமிவை யுண்டாக்கு மால்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) நாவல் வேரூறிய நீரானது, பித்தப் பெருங்கழிச்சலையும் (பித்தாதிசாரத்தையும்), நீரிழிவையும் (மதுமேகத்தையும்) நீக்கும்; சுக்கிலப்பெருக்கம், அதிகுளிர்ச்சி, உடல்வன்மை, வெப்பு, ஐயவிருத்தி, உடற்றீக்குறைவு(அக்கினி மந்தம்) இவைகளை உண்டாக்கும்.

கருங்காலி நீரின் குணம்.

''குட்டங் கயரோகங் குன்மம் பெருவயிறு
நெட்டைப் புழுதிமிகு நீரிழிவும்—விட்டே
அருங்கான கத்தேகு மஞ்சுகமே! நல்ல
கருங்காலி நீரதனைக் கண்டு.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) கருங்காலி வேரூறிய நீரினால், குஷ்டம், பித்த க்ஷயம், பித்த குன்மம், மகோதரம், பெரும்பூநாகக்கிருமி, இரத்தப்பசையற்ற திமிர் வாதம், நீரிழிவு ஆகிய இவைகள் விலமென்க.

இலவு நீரின் குணம்.

''அட்டகுன்மம் நீரிழிவும் அற்றிடுமே; தேகத்திற்
கெட்ட விரணக் கிருமியறும்;—மட்டலருங்
கூந்தன்முடி மாதரசே! கோதிலில வின்புனலாற்
சேர்ந்தவழ லுந்தணியுஞ் செப்பு.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) இலவமரத்தின் வேரூறிய நீரால், எண்வகைக் குன்மம், நீரிழிவு, இரத்தமற்ற விரணக் கிருமி, உட்சூடு இவை நீங்கும்.

வாழை நீரின் குணம்.

''வாழைநீர் தான்குளிர்ச்சி வல்லபல முண்டாக்கும்
பேழை வயிறுடைக்கும் பெண்மயிலே!—வீழும்
இரத்தக் கிரிச்ச மெரிநீ ரிவையுடனே
சிற்றிரணம் போக்குந் தெரி.''

''சோமரோ கங்கள் தொலையு மிளைப்புழலை
நாமமுறும் பாண்டுவகை நாடாதே—பூமிதனில்
காழை யெலும்புருக்கி காணு வணங்கரசே!
வாழைநீர்க் கென்றுளத்தில் வை''. (ப.கு.சி.)

(பொழிப்புரை) வாழைக்கிழங்கில் ஊறுகிற சீதோஷ்ண நீரானது, பெருவயிறு, இரத்தக் கிரிச்சரம், எரிமூத்திரம், அற்பவிரணம், சோமரோகம், அயர்வு, உழலைநோய், பாண்டு, எலும்புருக்கி ஆகியவைகளை விலக்கும். உடற்கு வன்மையை யுண்டாக்கும்.

மட்டை நீரின் குணம்.

''மட்டைநீ ராற்கிரிச்ச மாறு மடமயிலே!
ஒட்டிநின்ற நீரிழிவு மோடுங்காண்;—கெட்ட
பவுத்திரமும் புண்ணும் பறக்கும் பயந்தே
புவிக்குள்வயிற் றுக்கடுப்பும் போம்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) தெங்கு, பனை முதலிய மட்டைகளிற் பிழிந்த நீரினால், மூத்திரக்கிரிச்சரம், நீரிழிவு, பவுத்திரரோகவிரணம், வயிற்றுக் கடுப்பு ஆகிய இவைபோம்.

இளநீரின் குணம்.

''இளநீரால் வாதபித்த மேகு மனமுற்
றெளிவாய்த் துலங்குமிரு திஷ்டிக்—கொளியுங்
குளிர்ச்சியுமுண் டாகுங் கொடியவன னீங்குந்
தளிர்த்தகன நொய்தாகுஞ் சாற்று.''

'' என்றுமிள நீர் நீரிறக்குங் கபமறுக்குந்
துன்றனலாஞ் சீதமெனச் சொல்லுவர்காண்—நின்றெழுப்பும்
பித்தமொடு வாந்தியும்போம்; பேதிகட்டி புண்ணுண்டாங்
கொத்தலரும் பூங்குழலாய்! கூறு.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) முறைமையாய் இளநீரைப் பருகினால், வாத மிகுதி, பித்தக் கெடுதி, வெப்பம், உடல்பாரிப்பு, ஐயமிகுதி, பைத்திய கோபம், வாந்தி, நீர்பேதி ஆகிய இவை நீங்கும். மனத் தெளிவு, கண் ஒளிர்வு, குளிர்ச்சி, மூத்திரப் பெருக்கம், மலப்போக்கு ஆகிய இவைகள் உண்டாகும். இஃது உஷ்ண சீதத்தை உடையது என்க.

செவ்விள நீரின் குணம்.

"பித்தமொடு தாகம் பெருத்த வழிநடையால்
எய்த்தலா யாச மி வயேகும்;—நித்தியமுஞ்
செவ்விளநீ ருண்டக்காற் றீரும் பலகயமும்
அவ்விளநீர்க் கொங்கைமின்னே! ஆய்".

(ப.கு.சி.)

(பொழிப்புரை) தினமுஞ் செவ்விள நீரையருந்தில், பித்த மிகுதி, நீர்வேட்கை, வழிநடையால் வந்த இளைப்பு, அயர்வு, பற்பலகயம் ஆகியவை நீங்கும்.

புதிய பழய இளநீரின் குணம்.

"புதியிளநீர் பித்தமறும் பூதலத்தோ ருண்ணும்
பதமுடனே யுண்பார் பரிவாய்—நிதநிதமும்
உண்ணப் பழவிளநீ ருண்டாம் பலவகைநோய்
எண்ணி அறிவாய் இனி." (ப.கு.சி.)

(பொழிப்புரை) இளவழுக் கயு டய புதிதாகப் பறிக்கப்பட்ட இள நீ ர உண்பவர்க்கு, பித்தமிகுதி விலகும். ப ழய இளநி ர யுண்டால், மூக்கில் சளிபிடித்தல் முதலிய பற்பல நோய்கள் உண்டாகும்.

பச்சிள நீரின் குணம்.

"பச்சிளநீர் மேகம் பழஞ்சுரங்க ளைப்போக்கும்;
கச்சுமுலை மாதே! கபமறுக்கும்;—மெச்ச
வயிற்றிற் கிருமியொடு வன்சொறிகண் ணோயும்
அயர்த்தோடச் செய்யு மறி". (க.கு.சி.)

(பொழிப்புரை) பச்சிளநீர், சீழ்ப்பிரமேகம், பழயசுரம், கபாதிக்கம், எறிகிருமி, யானைச் சொறி, கண்ணோய் ஆகிய இவற்றை நீக்குமென்க.

கேளி இளநீரின் குணம்.

கேளியுண்ண மேகம்போச் கேம்ாய் மடமயிலே
நீளக்கட்டுக் கீட நிலையாதே—தாளாத
தாகமொடு மந்தமறுத்தானே கரப்பனும் போம்
வேகவன லுந்தணியு மே [ப.கு.கி.]

(பொழிப்புரை) கேளி இள நீரை உண்பவர்க்கு, இரத்த மேகம், மலக்கிருமி, பொறுக்கு வியலாத நீர்ாலட்கை, மந்தாகினி, கரப்பான், பெருங்காயல் ஆகியவை நீங்கும்.

மஞ்சள் கச்சி இளநீரின் குணம்.

''பித்தம்போஞ் சோபையறும் பேருலகில் யாவர்க்குந்
தொத்து கபமுந் தொலையுங்காண்—தத்துகின்ற
பொல்லாப் பழஞ்சுரமும் போகுமஞ்சட் கச்சிக்குப்
பொல்லாப்பொன் றில்லை புகல்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) மஞ்சட்கச்சி இளநீரையருந்தினுல், பித்த தோடம், சோபை, ஐயப்பெருக்கம், பழைய சுாய்ச்சல், ஆகியவை விலகும்.

அடுக்கிள நீரின் குணம்.

''அடுக்கிளநீ ரையத்தை யண்டா தகற்றும்;
வடுக்கண்ணுய்! இன்னும் வகுப்போம்—படுக்கும்போ
துண்டாற் சுகமெய்தும்; உள்ளாங் கிருமியிதைக்
கண்டா லிறந்துவிடுங் காண்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) நித்திரைக்குமுன் அடுக்கிள நீரை உண்டால், கபதோடமும், மலப்பையைப் பற்றிய கிருமியும் போம்—நன்மை யுண்டாகும்.

கருவிள நீரின் குணம்.

''மருமலர்வாழ் மானே! கேள்: வையகத்தோர் நித்தங்
கருவிளநீ ருண்ணக் கபமுங்—கிருமிநெளி
புண்ணுங் கரப்பானும் போகுமிகக் காந்தியுறும்
எண்ணுமனப் பூரிப்பா.மெண்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) கருமை நிற இளநீரால், கபப்பெருக்கமும்; புழுநெளிகின்ற கரப்பானும் நீங்கும்; உடல் ஒளியும், மகிழ்ச்சும் உண்டாகும்.

சோரி இளநீரின் குணம்.

''காரிலகு கூந்தற் கருங்கண் மடமயிலே;
சோரியிள நீரருந்தச் சோபையறும்;—கூரியதோர்
பூச்சி கிருமிபொன்றும்; பொன்மேனி யாமுடலம்;
பேச்சிற் றெளிவுண்டாம்; பேசு.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) இரத்தவண்ண இளநீரால், வீக்கமும், வயிற்றிலுள்ள பூச்சியும், சன்னக்கிருமியும் போம்; உடல் அழகு பெறும்; தெளிந்த சொற்கள் உண்டாமென்க.

ஆயிரங்கச்சி இளநீரின் குணம்.

''வேகமுறுந் தீபனமாம் ; விட்டோடும் வாதகபம்;
ஆகமதிற் சேர்ந்த அரிப்பும்போம்—வா குறுபுண்
வாயிரங்கு சீழும் வயிற்றுவலி யுந்தொலையும்
ஆயிரங் கச்சிக் கறி.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) ஆயிரங்கச்சி, இளநீரால், வெப்பமும், பசியும், வாதகபத்தொந்தமும், நமைச்சலும், சீழ் விரணம், குன்மமும் போம்.

குண்டற்கச்சி இளநீரின் குணம்.

''அண்டையிலே நின்றூர்க் கரோசிகெடும்; தீபனமாம்;
கெண்டைவிழி மாதரசே ! கேளின்னும்—கண்டபடி
குண்டற்கச் சிக்குக் கொடுந்தாக மாறிவிடும்
பண்டைப் பழமலம்போம் பார்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) குண்டற்கச்சி இளநீரால், சுவையின்மை, நீர்வேட்கை, நாட்பட்ட பழைய மலம் ஆகிய இவைகள் போம்; செரிப்புண்டாக்கும்; வயிற்றிலுள்ள தீ மிகும்.

ஊணுக்குமுன் அருந்து மிளநீரின் குணம்.

''ஊணுக்கு முன்பிளநீ ருண்டாற் பசிபோகும்;
வீணுக்குக் குன்மம் விளையுங்காண்—பேணியிதை
மாலை தனிலருந்த மன்னு புழுச்சாகும்;
வேலையொத்த கண்ணாய்! விளம்பு.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) காலைப்புசிப்புக்கு முந்தி இளநீரை உண்டால், பசி நீங்கு வதன்றிக் குன்மம் ஆம்; மாலையில் உண்டால், கிருமிகள் ஒழியும்.

உண்டபின்பு அருந்தும் இளநீரின் குணம்.

''வாதபித்த மீறுது; வன்பயித்தி யந்தீரும்:
கோதின்மலஞ் சாரும்; கொடும்பசியாம்;—மாதரசே!
மிண்டியநோய் வாராது; மேனி மினுமினுக்கும்;
உண்டபின்பு நல்லிளநீ ருண்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) புசித்த பின்பு இளநீரையுண்டால், வாதபித்த கோபந்தணிவதுமன்றி தனிப்பித்த தோடமும் விலகும்; தாராளமாய் மலங் கழியும்; அதிகபசி யுண்டாகும்; நோயணுகாது; உடல் மினுமினுக்கும்.

காய்ந்தாறிய இளநீர், செவ்விளநீர், கவுளிபாத்திரை இளநீர் இவற்றின் குணம்.

''காய்ந்தா றியவிளநீர் காசங் கபந்தீர்க்கும்;
மாய்ந்திடாத் தாககுரம் மாற்றுங்காண்—ஆய்ந்ததொரு
செவ்விளநீர் பித்தஞ் சிதைக்கும்; கவுளிகொண்டால்
எவ்வளவுந் தாபமிலை யெண்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) மட்டையைச் சீவித் தண்ணீரில் இட்டுக் காய்ச்சி ஆற்றிய இளை நீரானது, இருமல், சகலதோடம், வரட்சி சுரம் இவைகளைப் போக்கும்; செம்மைநிறமுள்ள இளநீர், பித்த தோடத்தை விலக்கும்; கவுளிபாத்திரை யென்னுமிள நீர் உண்டால், உட்டிணம் விலகும்.

நீராகார நீரின் குணம்.

''வாதபித்த வைய வரட்சிகளை மாற்றிவிடும்
தாதுவுமுண்டாக்குந்தா கம்போக்கும்—மாதர் மெச்ச
வாராகா ரங்கொடுக்கும் மாமதுரஞ் செய்
நீராகா ரத்தெளிவு நீர்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) மிகுமதுரமான நீராகாரத்தெளிநீரானது, வாத பித்த கப வரட்சிகளையும், தாபத்தையும் விலக்கும், சுக்கிலத்தையும், மன்மதனைப்போன்ற தேக அழகையும் விருத்தி செய்யும்.

காடி நீரின் குணம்.

''பித்த மயக்கமறும்; பேரவுஷ தம்முறியும்;
உற்றபிணி யிற்சிலவை யோடுங்காண்—சற்றும்
வழங்கா வசீரணமும் வன்பேதி யும்போம்;
பழங்காடிக் குள்ள பயன்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) பழைய காடி நீரினல், பித்தமயக்கமும், சோப ரோகமும், அசீரணமும், வாதாதிசாரமும் போம், ஆனல், சிறந்த மருந்துகளின் நற் குணங்கள் விலகும்.

வெந்நீரின் பொதுக் குணம்.

''நெஞ்செரிப்பு நெற்றிவலி நீங்காப் புளியேப்பம்
வஞ்சமுற வந்த வயிற்றுநோய்—விஞ்சியே
வீழாமக் கட்டோடு வெப்பிருமற் சுட்டநீர்
ஆழாக்குட் கொள்ள அறும்.''

(ப.கு.சி.)

(பொழிப்புரை) ஆழாக் களவாகக் குடிக்கின்ற வெந்நீரினல், எதிர்க்கின்ற உணவு, நெற்றிநோய், புளியேப்பம், குன்மம், சீதக் கட்டும், சுர, காசம் ஆகிய இவைகள் போம்.

காய்ந்தாறிய நீரின் குணம்.

''காய்ந்தாற வைத்தநீர் கட்டுழலை விக்கலொடு
வாய்ந்தவதி சாரபித்த மாற்றுங்காண்—சேர்ந்துவரு
மூர்ச்சை விஷம்வாந்தி முன்மயக்க மேகமதி
யூர்ச்சிதமுத் தோஷம்போக்கும்.''

''காய்ந்தநீ ருண்ணுங்கால் கண்செவிநோய் சூலைகுன்மந்
தோய்ந்தசுர வேகந் தொடரையம்—பாய்ந்தடரும்
வாதத்தின் கோபமிவை மாறுமென லாதியருள்
வேதத்தின் வாக்கியமாம் விள்.''

(ப.கு.சி.)

(பொழிப்புரை) காய்ச்சியாற்றிய வெந்நீர், உழலைநோய், விக்கல், பேதியாற்கிளைத்த பித்த கோபம், மூர்ச்சை, சிலவிஷம் வாந்தி, மயக்கம், சுக்கில மேகம், திரிதோடம், கண்ணோய், செவிக்குத்தல், சூலை, குன்மம், சுரவேகம், கோழை, வாதாதிக்கம் இவைகளைத் தீர்க்கும்.

காற்கூறு அரைக்கூறு காய்ந்த வெந்நீரின் குணம்

''காற்கூறு காய்நீராற் காரிகையே! பித்தம்போம்;
மேற்கூறு பாதிஅட்ட வெந்நீரால்—மேற்கூறும்
வாதமொடு பித்தம்போம்; வைத்தொருநாட் சென்றுண்கு
ரோதம்போ மோடியொளித்து.''

(ப.கு.சி.)

(பொழிப்புரை) வைத்த அளவுக்குக் காற்பாகஞ் சுண்டிய வெந்நீரால் பித்தகோபம் நீங்கும்,; பாதிசுண்டிய வெந்நீரால், வாத பித்ததோடம் விலகும்; அதை மறுநாள் வைத்துண்ணில், திரிதோடகோபம் போம்.

முக்காற்கூறு காய்ந்த வெந்நீரின் குணம்.

''முப்பங்க றக்காய்ந்த.முந்தவெந்நீ ரால்வாதஞு
செப்புங் குளிர்நடுக்கல் தீச்சுரம்வெக்—கைப்பலநோய்
வாதபித்த மையமிவை மாறுஞ் சுரிகுழலே!
பூதலத்து ளுளும் புகல்.''

(ப.கு.சி)

(பொழிப்புரை) முக்காற்பாகஞ் சுண்டிய வெந்நீரால், வாதவிர்த்தி, குளிர் நடுக்கல், கொடுஞ்சுரம், வெப்பம், பற்பலபேதி, திரிதோடங்கள் இவைபோம்.

ஊணுக்கு முன், பின், இடை இக்காலங்களில் அருந்தும் வெந்நீரின் குணம்.

''ஊணுக்கு முன்புவெந்நீ ருண்டக்காற் றீபனம்போம்;
ஊணுக்குப் பின்பருந்தி லூதியமாம்—ஊணுக்குப் .
பாதியிலுண்டாற்பசியும் பாதியாம்; இப்புனலே
ஓதுசுரம் வாதமகற் றும்''.

(ப.கு.சி.)

(பொழிப்புரை) உணவுக்கு முந்தி வெந்நீரைக் குடித்தால், பசி மந்தப்படும்; சாப்பிடும்போது மத்தியில் அருந்தினுல், பசி மத்திமமாம்; ஊணுக்குப் பின்பு உண்டால் நன்மையுண்டாம்; .மேலும் வெந்நீரின் தன்மைவாதவெப்பை நீக்குதலாம்.

பொற்கெண்டி வெந்நீரின் குணம்.

''பொற்கெண்டி தன்னில்வெந்நீர் பூரித்துட் கொண்டிடுங்கால்
மற்கொண்ட வாயுகபம் வாயருசி—எற்கொண்ட
மெய்யழல்வெப் புந்தணியும் விந்துவுநற் புத்தியொடு
மெய்யறிவு மோங்குமென விள்''.

(ப.கு.சி)

(பொழிப்புரை) வெந்நீரைப் பொற்கெண்டியில் ஆறவைத்தருந்தினுல், வாதமிகுதி, கபக்கோபம், சுவையின்மை, உடலுஷ்ணம் வெப்பு இவைபோம்; சுக்கிலமும், நல்லறிவும், உண்மை ஞானமும் உண்டாமென்க.

சரிகை வெள்ளிக்கெண்டி வெந்நீரின் குணம்.

''சரிகைவெள்ளிக் கெண்டி தனிலெட்டி லொன்ருய்ப்
பெருகக்காய்ச் சும்புனலைப் பெய்தே—பருகுங்கால்
வெப்பொடுதா கங்குன்மம் வீறுபித்தக் காய்ச்சலும்போம்;
துப்பொடுட லஞ்செழிக்குஞ் சொல்''

(ப.கு.சி.)

(பொழிப்புரை) எட்டிலொரு பங்காய்க் காய்ச்சிய நீரைச் சரிகை வெள்ளிக் கெண்டியில் விட்டுச் சாப்பிட்டால், சூடு, நீர் வேட்கை, குன்மம், பித்தவெப்பு இவை விலகும்; உடலிற்கு வன்மை உண்டாகும்.

தாம்பிரம், வெள்ளி, பஞ்சலோகம், வெண்கலம் ஆகிய இப்பாத்திரங்களின் வெந்நீரின் குணம்.

''இரவிவட்டிற்றூம மிரத்தபித்தம் போக்கும்;
இரசிவட் டிற்கைய மேகும்;—வருகலப்பு
வட்டிலறல் முத்தோட மாற்றும்வெண்க லச்சலமெய்க்
கொட்டிரத்த தாதுவைச்சேர்க் கும்''.

(ப.கு.சி.)

(பொழிப்புரை) தாம்பிரக்கெண்டி வெந்நீர், கண்புகைச்சலையும், இரத்த பித்தப் பிணியையும் நீக்கும்; வெள்ளிக் கிண்ணத்தின் நீரால், கபநோய் நீங்கும்; பஞ்சலோக வட்டில் வெந்நீர், முக்குற்றத்தை விலக்கும்; வெண் கலப்பாத்திர வெந்நீர், இரத்தத்தைப் பெருக்குமென்க.

இரவி—தாம்பிரம்.

கெண்டி வெந்நீரின் குணம்.

''கெண்டிதனிற் காய்ந்திடுகீ லாலமதை யாற்றியுண
அண்டிய நோயு மடர்சிரங்கும்—பண்டைக்
குடைச்சலுங்கை காலிற் குடைச்சலொடு சந்தின்
குடைச்சலும்போம் கக் கூறு''.

(ப.கு.சி.)

(பொழிப்புரை) கெண்டியில், காய்ந்த நீரையாற்றியுண்ண, காய்ச்சல், சிரங்கு, என்பு, கை, கால் இடுப்பு இவ்விடங்களில் குடைச்சல் ஆகிய இவைபோம்.

பன்னீர்ச் செம்பு வெந்நீரின் குணம்.

''பன்னீர்ச்செம் பிற்காய்ந்த பானீயம் விட்டருந்த
மன்னிய சுவாசவிக்கல் மாபிரமை—பன்னரிய
பித்தசி லேஷ்மவளி பேசரிய தாளின்வலி
இத்தரையை விட்டகலு மெண்''.

(ப.கு.சி.)

(பொழிப்புரை) பன்னீர்ச் செம்பில் காய்ந்த வெந்நீரை விட்டருந்த, இரைப்பு, விக்கல், சித்தப்பிரமை, முக்குற்றம், கால் நோய் ஆகியவைபோம்.

இரும்புக் கெண்டி வெந்நீரின் குணம்.

''இரும்புநறுங் கெண்டிதனி லேந்திய வெந்நீர்
விரும்பியுணப் பாண்டு விலகும்—திரும்பவுமோ
தாதுவுமாம்; நாடிகளுந் தாமுரக்கும்; தேகமதிற்
சீதசுக முண்டாந்தெளி''.

(ப.கு.சி.)

(பொழிப்புரை) இரும்புக்கெண்டி வெந்நீருக்குப் பாண்டு நீங்கும். தாது விருத்தியும், நரம்புகளுக்கு உறுதியும், உடலில் சீதோஷ்ணமு முண்டாகும்.

XIII. உணவுத் தொகைத் தன்மை.

1. பசி : உடலைக் காக்க (வளர்க்க) யாதானுமோர் உணவு வேண்டியதெனத் தெரிவிக்கின்ற உணர்ச்சியே பசியாம். இவ்வுணர்ச்சி உண்பவருடைய அன்னாசயத்தினின்றும் வெளிபடுகிறது.

2. பசியின் தன்மை : பசி நேர்ந்த காலத்தில் அதனை உடனே உணவாதிகளால் தணிக்கவேண்டும். அப்படி தணிக்கவில்லையேல் அது தானே மரத்துத் தணியும். அதனால் அழகு, ஆண்மை, மகிழ்ச்சி, அவா, ஒழுக்கம், உயிர், பேச்சு இவை சோர்வடையும். அன்றியும் பதினான்கு வேகங்களில் ஒன்றான இந்தப்பசியை அடக்குவதால், உண்டாம் குற்றங்கள் பலவாகும்.

''நோனாத பசியால்''—என்பதாலும்,

''பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்''—என்பதாலும்,

''ஆரியனாயினும் அப்போதகல்க'' என "இலக்கணக்கொத்து" கூறுவதாலும், பசியால், செரிக்கும் உறுப்பின்வன்மை குறைந்து செரியாமை முதலிய நோய்களை உண்டாக்குமென அறிக.

அன்னரசத்தால் வளர்க்கப்படும் ஏழுடற் கட்டுகளும் குறையும்; கிழத்தன்மை விரைவிலுண்டாகும்; பசியின் காரணமாய்த் தன் இனத்தாருக்கும் தனக்கும் முறையே வெறுப்பும் வேற்றுமையுமுண்டாகும்.

''அன்னம் பிறந்தது அனைத்து விதையிலும்'' என திருமூலர் புகன்றிருப்பதால் நாட்டுக்குத் தக்கவாறு உண்ணும் வழக்கமுள்ள அரிசி, கோதுமை, சோளம், கேழ்வரகு முதலியயாவும் கொள்ள வேண்டும்.

3. பசித்துன்பத்திற்கு நீக்கம் : அதிக பசியால் வாடுபவர்கள் கடின உணவை உடனே உட்கொள்ளலாகாது மிக்க நுண்மையானதும், வெப்ப வீரியமுள்ளதும், நெய்ப்புப் பசையுள்ளதுமான உணவைக் குறைந்த அளவில் உண்ண பசியால் நேர்ந்த துன்பங்கள் விலகும்.

4. உணவின் பயன் : உடலும், அதில் அமைந்துள்ள உறுப்புகளும் அவைகட்காதாரமாகிய உயிர் அணுக்களும் பிறந்து வளர்ந்து தத்தமக்குரிய தொழிலை நிகழ்த்தி அவைகளை நிலைக்கச் செய்வதற்கு முதற் காரணாமாயுள்ளது உணவு. சுருங்கச் சொல்லின், ஆயுள் நலம், உள்ளம், வாய்ச்சொல், மெய்யின் செயல்கள் ஆகியவை உணவைப் பொருந்தியே நிற்கின்றனவாகும்.

5. **உணவின் கால விதி :**

''தன்ம மிரண்டேயூண் தப்பிமுக்காற் கொள்ளினன்
சின்மதலை காளைமுற்றற் சேர்பருவ—நன்முகுர்த்த
மொன்றுக்கு ஞன்குக்கு ளோதுமிரண் டுக்குளுண்பர்
நன்றுக்குத் தீயோர் நயந்து''

(ப.கு.சி.)

(பொழிப்புரை) தரும சாத்திரத்திற் கூறிய இருபொழுதுணவே நலம். மூன்று காலவுணவைக் கொள்ளின், சூரியனுக்கு இளம் பருவமாகிய உதய முதல் $3\frac{3}{4}$ நாழிகைக்குள்ளும், காளைப்பருவமாகிய 15 நாழிகைக்குள்ளும், மூப்புப்பருவமாகிய $22\frac{1}{2}$ நாழிகைக்குள்ளும் நலம் பெறுவதற்குச் சமாக்கினியை உள்ளவர்கள் கொள்வார்கள்.

''ஒன்றோர் போதி லுண்டவன் யோகியாம்
நன்ற தாயிரண் டுண்டவன் போகியாம்
துன்று மூன்று பொழுதுண்டோன் ரோகியாம்
அன்றி மேலுண்டோ ரும்பல ரோகியே''.

(பொழிப்புரை) ஓரோர் பொழுதுண்பதேயோகிக் கழகாம். இருபொழுதுண்பவன் போகியாம். முப்பொழுதுண்பவன் ரோகியாம். மூன்றுபொழுதிற்குமேலுண்போன் பற்பல பிணிகளால் வருந்துபவனுவான். இக்காரணம் பற்றியே ''உண்ப திருபொழுதிய மூன்று பொழுதுண்ணேம்'' எனக் கூறப்பட்டிருக்கின்றது.

6. **நலாகாலவுணவின் தன்மை :**

''மூன்றுநான் காறெண் முகூர்த்தங் களின்முறையே
ஞான்றுளுண்ணு மந்த நறுமுணவே—தோன்றுடலுக்
கொக்குமித நோயரமு ரோகமுயிர்க் கந்தரஞ்செய்
விக்குமித மாராய்ந்து விள்''

(ப.கு.சி)

(பொழிப்புரை) சூரியன் உதித்த $11\frac{1}{4}$ நாழிகைக்குள் உண்ணுகின்ற நல்லுணவு உடற்குப்பொருந்தும்; 15 நாழிகை உணவு, மிதமென்கிற அளவிடு பிணிகளை விலக்கும்; $22\frac{1}{2}$ நாழிகையில் புசிக்கில் நோயுண்டாகும்; 30-வது நாழிகையில் கொள்ளும் உணவு உயிருக்கு முடிவைத் தரும்.

மேற்கூறிய நான்கு பொழுதுணவில் முதலிரண்டும் காலவுணவென்றும், பின்னை யிரண்டும் கால மில் உணவென்றும் கூறப்படும்.

7. **உணவு கொள்ளத் தகுந்த உடல் நிலைமை:** இரு மலங்களைக் கழித்து உள்ளம் தெளிவுற்றிருக்கும் நிலையிலும், வளி முதல் முக்குற்றங்கள் தத்தம் நன்னிலை நிற்கும்பொழுதும். குடலிலுள்ள வாயு முற்றும் வெளிப்பட்டு, உடற்றீ மிகுதிபட்டு, பொறிகள் யாவும் தூய நிலையையடைந்திருக்கையிலும், மந்தத்தால் நேரிடும் புளித்த ஏப்பம் முதலிய தீய தன்மைகள் யாதுமின்றி பசியுணர்ச்சி நன்ருய் விளங்கும் காலத்தும்; உடல் இலே சத்துவமடைந்தபொழுதும், உள்ள உடல் நிலைமையே உணவையுட்கொள்ளத்தகுந்ததாகும்.

8. **உணவு கொள்வதற்குத்தகுந்த உடல் நிலைமை:** மனத்துயரம், சினம், பசி முதலியவற்ருல் மிக்க வெப்பமடைந்துள்ள நிலைமையில் உணவு கொள்ளலாகாது. உட்கொண்டால் செரியாது நோய்க்கிடந்தரும்.

9. **உணவு கொள்ளுமுன் கொள்ள வேண்டிய விதி:** குளித்திருந்தாலும், மறுபடியும் முகம், கை, கால்களை நன்ருய்த்தூய்மை செய்து கொண்டு, தத்தம் குலமுறைப்படி நாளொழுக்கங்களை முடித்து காகம் முதலிய பறவைகட்கு உணவிட்டு அவைகள் அதை உண்டனவா வென்றறிந்த பின்னர், உணவு காலவிதியையும், தன் உடல் நிலைமையுமறிந்து, தன் உறவினர், உண்மை நண்பர்களுடன் தனியிடத்தில் உட்கார்ந்து. பேசாமலும் பொறுமையாயும் நல்லுணவை உட்கொள்ளவேண்டும். உணவு, நீர் வடிவமாயின் நலம்.

10. **கொள்ளத்தக்க உணவு இவை எனல்:** வழக்கமாய் உண்டு வருவதும், உடலுக்கு நன்னலத்தைத் தருவதாய் வழக்கிற் கண்டதுமான தூய வுணவை, ஏற்படுத்தப்பட்ட காலத்தில், அதில் மனதைச் செலுத்தி, வேறு வகையில் எண்ணத்தைப்போக்காமல் உட்கொள்ளவேண்டும். அவ்வுணவு நெய்ப்பாகவும், வெம்மையும், நொய்மைத் தன்மையுமுள்ளதாகவும், அறு சுவைகளோடுங் கூடியதில் இனிப்புச்சுவை மிகுதியுள்ளதாகவும் இருத்தல் நலம்.

11. **தகாத உணவுகளும் அவைகளின் தீத்தன்மைகளும்:** மனத்திற்கு அருவருப்பைத் தரத்தக்கதும், வயிற்றுப் பொருமலை உண்டாக்கக் கூடியதும், காந்திப்போனதும், பக்குவங்கெட்டதும், சமிப்பதற்குக்கூடாத அவ்வளவு கடினமுள்ளதும், மிகு வரட்சியுள்ளதும், மிகு குளிர்ச்சி பொருந்தியதும், கல், மண், புல், உமி, மயிர் இவை போன்றவை கலந்து தூய்மையற்றதும், நெஞ்சரிவு முதலிய அழற்சியுண்டு பண்ணுவதும், உலர்ந்துபோனதும், அதிகமாய் நீரில் ஊறிய எவ்விதச் சோறும், ஒருமுறை பக்குவப்பட்டுக் குளிர்ந்து பின்பு சூடுண்டாக்கப்பட்டதும், காய்கறிகளை அதிகமாகவோ மிகக் குறைந்ததாகவோ சேர்க்கப்பட்டதும், அதிகச் சூடானதும், மிக்க உப்புச் சுவையுள்ளதுமான பண்டங்கள், உயிருக்கும், ஏழுடற் கட்டுகளுக்கும் துணையாகிய பொருள்கள் செலலு

கின்ற தொளைகளைக்கெடுத்து, நோய்களை உண்டு பண்ணும். தவறினும் செரிக்கும் வன்மையைக் கெடுத்து, சீதக்குற்றத்தை (ஆம தோடத்தை) உண்டுபண்ணும்.

கொள்ளும்பொருள் கொள்ளாப்பொருள் (பத்தியாபத்திய) உணவைக் கலந்துண்ணல்—உண்டபின் அடுத்துண்ணல்—கால மல்லாத காலத்தில் மிகுதியாய் உண்ணல் இம்மூன்றும், தகாத உணவாயிருப்பதுடன், இறப்புக்காகிலும் அல்லது கொடிய நோய்களுக்காகிலும் உட்படுத்தும்.

12. **உணவு வேளையில் அறுசுவை கொள்ளுங்காலம்** : உணவு உண்ணும்போது முதலில் இனிப்புப் பொருள்களையும், இடையில் புளிப்பு, உப்பு, கார்ப்புகளையும், இலைக்கறிகளையும், முடிவில் துவர்ப்புப் பொருள்கள், புளிப்புத் தயிர், ஊறுகாய்கள் ஆகிய இவற்றையும் உண்பதுவே இன்பத்திற்கிடமாம்.

''ஆதி யினிப்புநடு வாம்பிரநீ ருப்பொடுசா
காதி யுறைப்பப்பா லந்தத்திற்—கோதிலுவர்ப்
பாந்ததியுப் பூறியகா யாதிவகை சேருணவை
மாந்நதிசு கத்தையுறு வாய்''.

(ப.கு.சி.)

13. **உணவின் அளவு** : தன் தொழிலைக் குறைவின்றி நடத் துவதற்கான உடற்றீயின் அளவே, ஒவ்வொருவரும் கொள்ளத் தக்க உணவின் அளவாகும்.

இதனை

''தீயள வின்றித் தெரியான் பெரிதுண்ணி
னோயள வின்றிப்படும்''— என்பதனாலுமறிக.

உணவின் திண்மை நொய்மைக்குத் தக்கப்படி உணவின் குணம் மாறுதலையடையும். எவ்வாறெனில், திண்மைப் பொருள்களை அரைவயிறே கொள்ளவேண்டும். நொய்ம்மைப் பொருள்களை நன்ருய்க் களிப்புண்டாதற்கு ஒரு சிறிதளவு முந்தியே நிறுத்திவிட வேண்டும்.

இதன் விபரம் : எவ்வகை உடலினனுயிருப்பினும், முக்கால் வயிற்றுணவேயன்றி முழுவுணவு கொள்ளலாகாது. அப்படிக் கொள்வதிலும், சோறுங் கறியுங்கூடி அரைவயிறும்; பால், மோர், நீர்கூடி கால் வயிறும் ஆக முக்கால் வயிற்றுணவே யிருக்கவேண் டும். கால் வயிறு இடைவெளி வைத்தற்குக் காரணம், சமான வாயுவும், எரி (அனல்) பித்தமும் கூடி உண்டியைச் செரிக்கச் செய் வதற்கேயாம். இதனல். உடலுக்கு நலமுண்டு.

"முக்கா லுணவன்றி யெத்தேகி கட்கு முழுவுணவி
லக்கா ரணமன்ன சாகாதி கூடி யரையதிற்பால்
சிக்கா வமுதம் புதக்கிரங்கா லுண்டி சேடமுழை
யவக்கா விடிலுண்டி வேகா தனலும் வளியுமின்றே."

(ப கு.சி.)

14. **குறைவுணவின் தன்மை :** உடற்றீக்குத் தகுந்த அளவாய்க் கொள்ளக்கூடிய அளவிலுங் குறைந்து உணவை உட்கொண்டால், அது, வலிவிற்கும், உடல் செழிப்புற்று வளர்வதற்கும், அழகுக்கும் நிலைக்களாமாகிய வல்லமையைக்குறைத்துவிடும் அன்றியும் வாதநோய்க் கூட்டம் முற்றும் விளைவதற்கும் காரணமாகும்.

15. **மிகுவுணவின் தன்மை ;** அளவிற்கு மிஞ்சிய உணவால், முக்குற்றங்களும் மிகும். இக்காரணத்தால், கொண்ட உணவு செரியாமல், வாயு முதலியவைகளால் நெருக்கப்பட்டுப் பயனற்றதாய், நஞ்சாய், மந்தம், சீதக் கட்டுக்குற்றம் (ஆமதோடம்) வாந்திபேதி முதலிய நோய்களை விளைவித்து உயிருக்கே தீங்கை விளைவிக்கும்.

16. **நீர்வேட்கையும் அதைத்தணிக்க நீர் குடித்தலும் :** செந்நீர் குறைவுபட்டிருப்பதை உணர்த்தும் உணர்ச்சி நீர்வேட்கையாகும். இது வாயிலும் தொண்டையிலுங் காணப்படும். இதைத் தணிப்பதே நீர் குடித்தலாம்.

17. **நீரின் தன்மை :** நீரானது, மனதிற்குக் களிப்பையும் நிறைவையும் உண்டாக்குவதுமன்றி, உட்கொள்ளும் உணவை நன்றாய் உடலிற் பரவச் செய்து உடற்கு வன்மையைத் தரும்; மேலும் உண்டகடின பொருள்களைச் செரிப்பிக்கச் செய்யும்.

18. **உணவிற்கேற்ற நீர் :** சோதுமை முதலானவநீருலாகிய உணவுக்குத் தயிர், மதுவகை, நச்சுத்தன்மையுள்ள பொருள்கள் தேன் இவைகட்குத் தண்ணீர் மாப்பண்டத்திற்கு வெந்நீர், கீரை வகைகள், பயறு இவைகளால் சமைக்கப்பட்ட உணவுகளுக்குத் தயிரின் தெளிவு நீர், மோர், காடிநீர் ஆகியவை தகுதியுடையனவாகும்.

19. **வேறுவகை நீர்ப் பொருள்களின் பயன் :** இளைத்தவர்கள் பருப்பதற்கு மதுவும், மிக்க பருத்தவர்கள் இளைப்பதற்கு நீர் கலந்த தேனும், இளைப்புரோகத்தால் நேர்ந்தவர்கட்கு இறைச்சிகளின் சாரமும் இளைத்தவர்கட்கும் உடற்றீ குறைந்தவர்கட்கும் மதுவும், நோய்களாலும், மருந்தின் வெப்பத்தாலும் வழி நடையாலும், மிகு பேச்சாலும், பட்டினியினுலும், வெயிலலும் அதிக உழைப்பாலும் சோர்ந்திருப்பவர்களுக்ட்கும், கிழவர்க்கும், குழந்தைகட்கும் பாலும் நன்மை தரும்.

20. **நீர் குடித்தலின் பொதுக்குணம் :** சுருங்கச் சொல்லின் உணவின் பண்பிற்கு நேர் எதிரிடைத் தன்மையுள்ளதும், நீரின் தன்மைக்கு முரண்படாததுமான நீரே சிறந்ததாகும்.

21. உணவின் முதல் கடையிற் கொள்ளும் நீரின் தன்மை : உணவுக்கு முன், நீர் அருந்தினுல், உடல் மெலியும், இடையில். நடுத்தரமான உடலும், கடைசியில் பருத்தவுடலும் உண்டாகும்

''உண்டபின்பு வெந்நீ ரொருதரமாக் கொண்டாக்கால்
மிண்டுசுரம் வாதம் விதாகமந்த —மண்டுதரத்
தார்ந்த பொருமலும்போ மாயுளுண்டா மாதருடன்
சேர்ந்தணையத் தாதுவுமாந் தேர்''. (ப.கு.சி.)

22. நீர் குடித்தற்குத் தகாத உடல் நிலைமை: மார்பிற்கு மேற்பட்ட உறுப்புகளிலுண்டாகும் நோயினர்களும், இரைப்பிருமல், பீநசம் உள்ளவர்களும் நீரைப் பருகுவதால் நன்மையடையார்கள். மேலும் பாடும்பொழுதும் அதிகமாய்ப் பேசும்பொழுதும், பிரசங்கம் முதலிய பெருஞ் சொற்பொழிவிலும், தொண்டை கம்மிய காலத்தும், நீர் குடித்தல் தகாதெனக் கொள்க.

23. எவ்விதமான குடிநீருக்கும் தகாதவர்கள் இவர்களெனல் : வியர்வை முதலியவற்றால் கசிவுற்றவர்கள், மேகரோகிகள், நேத்திரப் பிணியுடையவர்கள், புண்பட்டவர்கள், தொண்டையில் நோயுள்ளவர்கள் இவர்களுக்கு எவ்வித குடிநீரும் தகாது. ஆனால், இவர்கள் காய்ந்தாறிய நீரில் சிறிது கொள்ளலாம்.

24. உணவும் நீரும் கொண்டபின் செய்யக் கூடாக் காரியங்கள் : யாவரேனும் உண்டியையும் நீரையும் உட்கொண்டபின் பேசுவதும், படிப்பதும், வெயிலில் தங்குவதும், நெருப்பையணுகி இருப்பதும், வண்டி குதிரை முதலிய வாகனாதிகளின் மீது சவாரி செய்வதும், நீரில் நீந்துவதும், வேகமாய் நடப்பதும், மாதரைக் கூடுவதும், இன்னும் இவை போன்ற காரியங்களில் ஈடுபடுதலும் கூடாவாம்.

25. உணவு உடலிற் பொருந்தும் வகை : உணவு உண்பதற்குரிய உடல் நிலைமை யறிந்துண்ணப்பட்ட உணவு, கடினமாயிருப்பினும், அது பற்களால் நசுங்குண்டு, உமிழ் நீராலும், அருந்தும் நீர், மோர், பால் முதலிய நீர் மயமான உணவுகளாலும் மிருதுத்தன்மையடைந்து, பிராணவாயுவால் உட்செலுத்தப்பட்டு முதல் முதல் ஆமாசயத்திற் போய்ச் சேரும். அவ்வாறு ஆமாசயத்திற் சேருமவ் வுணவைச் சமானா வாயுவினால் தூண்டப் பட்ட உடற்றீயானது, நீருடன் கூடிய அரிசியை எப்படி அக்கினி பக்குவமாக்குகின்றதோ, அவ்வாறே பக்குவஞ் செய்கிறது. முதலில் உட்கொள்ளும்போது உணவு, அறுவகைச் சுவையுள்ளதாயிருந்த போதிலும், ஆமாசயம் செல்லுகிற வரையில் இனிப்பாயும், நுரையுடன் கூடியதாயுமிருப்பதுடன், கபத்தின் தன்மையையும் அடைகின்றது. பின் அவ்வுணவு, உடற்றுயால் எரிக்கப்பட்டுப் புளிப்புத் தன்மையையும் அடைகின்றது. பின்பு அவ்வுணவு, உடற்றீயம

எரிக்கப்பட்டுப் புளிப்புத் தன்மையடைந்து, பித்தத்துடன் கூடி அன்னாசயத்திலிருந்து நெகிழ்ந்து சிறு குடலுக்குள் வருகின்ற பொழுதே பித்தத்திற்குரிய தன்மைகளை அடைகின்றது. அதன் பிறகு சிறு குடலில் வந்த அவ்வுணவு, அவ்விடத்திலிருந்து தோன்றும் பித்த வெம்மையினால், பக்குவமாய்ச் சமிக்கப்படுவதுடன், திப்பியைப் போன்ற பொருள் பிழியப்பட்டு, முடிவில் காரத்தையும், வாதத்திற்குரிய தன்மையையும் பெறும்; பின்னர் இது மண், புனல், அனல், கால், விண் சம்பந்தமான ஐவித அக்கினிகளால் முறையே மண்ணாதி ஐங்குணங்களைப் பெற்ற ஐவித ஆகார ரசங்களாகவும் மாறுகின்றது.

26. **பக்குவமான உணவின் பிரிவு**: முன் கூறியபடி சமிக்கப்பட்ட உணவானது, திப்பி (கிட்டம்), சாரம் என இருவகைப் பிரிவையடையும். இவற்றுள் திப்பி மறுபடியும் தெளிந்து (1) திப்பியாகவும், (2) நீராகவும் பிரிவுபடும். திப்பியே மலமென்றும் நீரே மூத்திரமென்றும் பெயர் பெறும்.

27. **உணவின் சாரம் ஏழுடற்கட்டுகளாய் மாறல்**: ஆகாரத்தின் சாரமானது, ஏழுடற்கட்டுகளிலுமுள்ள அந்தந்த வெப்பத்தினாலும் மறுபடியும் பக்குவம் செய்யப்பட்டு, சப்த தாதுக்களின் பரிணாமத்தையடைகின்றது. எவ்வாறெனில்—

இரசத்திலிருந்து—இரத்தமும்
இரத்தத்திலிருந்து—மாமிசமும் (தசையும்)
மாமிசத்திலிருந்து—கொழுப்பும் (மேதஸ்)
கொழுப்பிலிருந்து—எலும்பும்
எலும்பிலிருந்து—மூளையும் (மஜ்ஜை)
மூளையிலிருந்து—சுக்கிலமும்

இறுதியில் சுக்கிலத்திலிருந்து கருப்பமும் உற்பத்தியாகின்றது.

(a) **உணவு சுக்கில தாதுவாக மாறும கால வேற்றுமை**: உண்ணப்படும் உணவானது, 60 நாழிகைக்குள் ஏழுடற் கட்டுகளாய் மாறி விடுமென்று சில நூலாசிரியர் கூறுவர், வேறு சிலர் இஃது ஏழு தாதுக்களாய்ப் பரிணாமமடைய ஆறு தினங்கள் ஆகும் என்பர்.

(b) **பரர்சர் கொள்கை**: பராசர், முதனாள் உண்ட உணவின் சாரமானது, மறு நாள் (இரண்டாவது நாள்) ரசமாகவும், மூன்றாவது நாள் ரத்தமாகவும், நான்காவது நாள் மாமிசமாகவும், ஐந்தாவது நாள் கொழுப்பாகவும், ஆறாவது நாள் எலும்பாகவும், ஏழாவது நாள் மூளையாகவும், எட்டாவது நாள் சுக்கிலமாகவும் மாறுமென்பர்.

(c) **தேரையர் கொள்கை**: முதனாள் உண்ட உணவினின்றும் பிரிவுற்ற அன்ன ரசமானது அன்றைக்கு இரச தாதுவை

நனைத்து ஊறித் தங்கும். இரண்டாம் நாள் உண்ட அன்ன ரசம் அந்த ரச தாதுவிலேற முன்பு ஊறி நின்ற ரசம் ரத்த தாதுவிற் பாயும்;

இவ்வாறே மூன்றாம் நாள்—மாமிச தாதுவிலும்
நான்காம் நாள்—மேதோ தாதுவிலும்
ஐந்தாம் நாள்—அஸ்தி தாதுவிலும்
ஆறாம் நாள்—மஜ்ஜை தாதுவிலும்
ஏழாம் நாள்—சுக்கில தாதுவிலுஞ்

சென்று அத் தாதுக்களை விருத்தியடையச் செய்து எட்டாம் நாள் உடற்குக் குன்றாத வன்மையைக் கொடுக்கும் என்பதாகும்.

குறிப்பு.—சிற்சில தாது மருந்துகள் உடனே சுக்கிலத்தை உற்பத்தி செய்யும்.

"ஒருநாளுண் ணனவிரத மிரததா துவைநனைத்தங்கூறிநிற்கு
மிருநாளுண் டிடினஃதங் கிரத்ததா துவிலேறு மிவ்வா
றேபின்
வருநாளுண் டெழுநாளு மாயினஃ தெழுதா துவையும்
வளர்த்தே
தருநாளுஞ் சேராத வலியதனை யெட்டாநாட் சடத்தி
னுக்கே."
(ப.கு.சி.)

உண்ணும் பொருள்கள் செரிக்கும் (சீரணமாகும்) கால அளவை.

பொருள்களின் பெயர்கள்.	சமிக்கும் கால அளவு.
யாதானும் ஒன்றைப் பிழிந்த ரசம்	7 நாழிகை
அரைத்த மருந்துகள் (கற்கம்), செய்நீர், குளிர்ந்த நீர்.	1 சாமம்
வெந்நீர்	2 சாமம்
காய்ந்தாறிய நீர்	3 நாழிகை
குடிநீர் (கியாழம்)	3 நாழிகை
கனிரசங்கள்	6 நாழிகை
சோறு	2 சாமம்
பால்	20 நாழிகை
தேன்	12 நாழிகை
தயிர்ச் சோறு	11 நாழிகை
மோர்ச் சோறு	13 நாழிகை
நீர்ச் சோறு	18 நாழிகை
வெண்ணெய் கலந்த சோறு	2 சாமம்
சாராயம்	1 சாமம்
சூரணம்	12 நாழிகை
தயிலம்	12 நாழிகை
இளகம் (லேகியம்)	12 நாழிகை

பொருள்களின் பெயர்கள்.	சமிக்கும் கால அளவு.
நெய் (கிருதம்)	12 நாழிகை
பற்பம்	$3\frac{1}{2}$ நாழிகை
நல்ல பதார்த்தங்கள்	7 நாழிகை
பழங்கள்	$7\frac{1}{2}$ நாழிகை
காருங்கருணை	$7\frac{1}{2}$ ழாழிகை
காராக்கருணை	$7\frac{1}{2}$ நாழிகை
புளிக்கருணை	$7\frac{1}{2}$ நாழிகை
நீர்க்கருணை	$7\frac{1}{2}$ நாழிகை
சேனைக் கருணை	$7\frac{1}{2}$ நாழிகை
காட்டுக் கருணை	$7\frac{1}{2}$ நாழிகை
வித்துக்கள்	$7\frac{1}{2}$ நாழிகை
கனிரசங்கள்	$7\frac{1}{2}$ நாழிகை
அறுசுவைப் பதார்த்தங்கள் பச்சையாகவேனும் பாகஞ் செய்தேனும் உண்ணில்	5 நாழிகை
கழுநீர்	5 நாழிகை
காடி	5 நாழிகை
மா, பொரியுருண்டை, பொங்கல், பசும்பால் இவைகளை யெல்லாம் ஒரு நாளில் உண்ணில்	20 நாழிகை
வடிகஞ்சி முதலிய கஞ்சிகள்	7 நாழிகை
நல்ல வெல்லம்	20 நாழிகை
தேன்	20 நாழிகை
பச்சரிசி	20 நாழிகை
கத்தரிக்காய் முதலிய காய்கள்	8 நாழிகை
இளநீர், சர்க்கரை, பானகம்	7 நாழிகை
தயிர்ச் சோறு அல்லது மோர்ச் சோறு உண்டு அதன் மேல் குளிர்ந்த நீர் அருந்தில் ..	5 நாழிகை
வறுத்தமாவும் நீரும் உண்ணில்	7 நாழிகை
அதிசுடுகை நீர்	6 நாழிகை
முக்காற் கொதித்த வெந்நீர்	$7\frac{1}{2}$ நாழிகை
குளிர்ந்த நீர்	9 நாழிகை
மரம், செடி, கொடி, புல், பூண்டு முதலிய வற்றின் கேசரம், பூ, தளிர் இவைகட்கு	$7\frac{1}{2}$ நாழிகை

மேற்கூறியவற்றை அடியில் வரும் செய்யுள்களால் அறியலாம்:

ரசம், கற்கம், செய்நீர், குளிர்ந்த நீர், வெந்நீர்—இவைகளின் (சீரண காலம்) சமிப்புக்காலம்.

''பாரினின் மாந்த ருண்ணும் பற்பல பண்ட மெல்லாஞ்
சீரண மாகுங் காலந் தெளியவே செப்பக் கேண்மோ
காரண ரசமோ ரேழு கடிகையாங் கற்கஞ் செய்நீர்
வீரணத் தண்ணீர் சாமம் வெந்நீரு மிரண்டே சாமம்.''

(ப.கு.சி.)

காந்நாறிய நீர், கஷாயம், பழச்சாறு, சோறு, பால், தேன் இவைகளின் சமிப்புக் காலம்.

''சாலவே காய்ச்சி யாறுஞ் சலம்பத மூன்றே முக்காற்
சீலமாங் கஷாய மூன்று சேர்பழச் சாறு மாறாந்
தாலமாஞ் சோறி ரண்டு சாமமா மிருப தாகும்
பாலுதேன் பன்னி ரண்டு நாழிகை பகரு வாரே.''

(ப.கு.சி.)

தயிர்ச்சோறு, மோர்ச்சோறு, நீர்ச்சோறு, வெண்ணெய் சோறு, சாராயம்— இவைகலின் சமிப்புக் காலம்.

''வார்துவை தயிருஞ் சோறும் வகுத்திடிற் பதினொன் றாகும்
மோர்விடு பதம்பன் மூன்று மொழிபதம் பதினென்ட்டாகும்
ஆருவச் சோறி ரண்டு சாமமா மரிய வெண்ணெய்
சாருமா வண்ணஞ் சாமஞ் சாராயங் கடிகை யைந்தாம்.''

(ப்.கு.சி.)

சூரணம், தைலம், இலேகியம், இருதம், பற்பம், கறிகள், பழங்கள்— இவைகளின் சமிப்புக் காலம்.

''சூரணந் தைல மிலேகங்
கிருதஞ்சொற் பனிரண் டென்னச்
சேருநா ழிகையாம் பஸ்மஞ்
சீரணம் அரைச்சா மத்திற்
கூறிய கறிக ளெல்லாஞ்
கூறில்நா ழிகையே ழாகுஞ்
சீரிய பழங்க ளெல்லாஞ்
சீரணஞ் சாமந் தன்னில்''

கருணை முதலிய கிழங்குகள், வெந்து பாகமான விதைகள், பழச்சாறுகள் பச்சையாய் அல்லது வெந்ததாயுள்ள ஆறுவகைச் சுவை—இவைகளின் சமிப்புக் காலம்.

''உரைகருணைக்கி ழங்கோ
டுட்கிழங் கெல்லாஞ் சாமம்
விரைகளும் பழத்தின் சாறும்
வெந்திடிற் சாம மேயாம்
பரிசுறு சுவைகள் பின்னும்
பச்சைய தாய்த்தின் றாலுங்
கரையவெந் ததைத்தின் றாலுங்
கடிகையைந் ததன்மே லில்லை.''

கழுநீர், காடி இவைகளைக் குடித்தல், மா உண்டை, பொங்கல் பசும்பால், இந்நான்குங் கூட்டியுண்ணல்—இவைகளின் சீரண காலம்.

''காவிநேர் கண்ணாய் கேளாய்
கழுநீர்கா டியுமைந் தாகும்
மாவுடன் உண்டை பொங்கல்
வகைகளோ டாவி னற்பால்
மேவுவோர் தினத்திந் நான்கு
விதமுஞ்சேர்த் தருந்தும் உண்டி
பூமினா லைந்து நாழி
போயபின் சீர ணிக்கும்.'' (ப.கு.சி.)

கஞ்சி வகை, நல்ல வெல்லம், தேன், காய்கள், பச்சரிசி இவைகளின் சீரண காலம்.

''வர்த்திக்கும் வடித்த கஞ்சி
வகையேழிற் சீர ணங்காண்
தித்திக்கு நல்ல வெல்லந்
தேனிரு பதுநா ழிக்குள்
அற்றிடுங் காயி னங்க
ளற்றிடு மெண்ப தத்துட்
கத்தும்பச் சரிசி நாலைங்
கடிகையுட் சீர ணிக்கும்.'' (ப.கு.சி.)

இளநீர், சர்கரை, பானகம் இவையருந்தல், தயிரின்மேல் மோருஞ் சலமும் பருகுதல், வருத்த மாவ தண்ணீரில் கரைத்துக் குடித்தல் இவைகளின் சமிப்புக் காலம்.

''இளநீர்சர்க் கரைபா னக்க
மெழுநாழி கையிற் செரிக்கும்
வளமுள தயிரின் மேலும்
வார்த்துணு மோரின் மேலுந்
தெளிவுறு தண்ணீ ருண்ணச்
செரித்திடுங் கடிகை யைந்தில்
தெளியநல் வறுமா நீருஞ்
செரித்திடுங் கடிகை யேழில்.'' (ப.கு.சி.)

சுட்டநீர், முக்காற்சுண்டியநீர், திட்டமாக ஆறியநீர் இவைகளின் சீரண காலம்.

''சுட்டநீர் உண்ணுங் காலைச்
சொல்லிய ஆறா முக்கால்
மட்டிலே கொதித்த வெந்நீர்
வகுக்கிலே ழரையே யாகுந்
திட்டமாய்க் குளிர்ந்த நீர்தான்
செரிக்குமோன் பதின்மே லென்ன
வட்டமா முலையி னாளே
வழுத்துநா ழிகையைத் தானே.'' (ப.கு.சி.)

மரம், செடி, இவைகளின் மகரந்தம், பூ, கொழுந்து—இவைகளின் சமிப்புக் காலம்.

‘தருசெடி களிலுண் டாங்கே
சரங்கள்பூ கொழுந்தே யெல்லாம்
அரிவையே தின்றி டிற்சீ
ரணஞ்சாமந் தனிலிவ் வாறே
திரவிய வினங்கட் கெல்லாஞ்
செப்பிடும் வேத மென்றே
குருபர னடியைப் போற்றுங்
குறுமுனி யுரைத்த வாறே.’’ (ப.கு.சி.)

நன்னெறி பெருமையையும் தீ நெறி யிழிவையுங் கூறற்.

நன்னெறிப் பெருமை.

‘‘திரவியவூழ் தில்லுணர்ந்தே தின்றனு பவிப்பார்
பரவியநோய் காணாராய்ப் பால—ரிரவியைநேர்
மெய்யங் களித்திடுங்கோன் மிக்காயுள் பெற்றீரேழ்
வையங் களித்திடவாழ் வார்.’’

தீநெறி இழிவு.

‘‘சொல்லாருந் தேயபே தங்களினூ
ணிற்க விங்ஙன் றுகளுரைத்தற்
கில்லாது முள்ளதுமா கியபதார்த்
தங்களு மற்றியலுஞ் சொன்னோம்
நல்லாரிந் நெறிநடப்பர் சிலர்பிறழ்ந்து
நடப்பரெனின் நாமென் செய்கேம்
பொல்லாவல் லரவுடனே பழகுவர்தம்
பயனடைவர் புகலுங் காலே.’’ (ப.கு.சி.)

(பொழிப்புரை) தேசங்கடோறும் உண்ணுகின்ற உணவுகள் ஒழிய, இந்நாட்டில் இருப்பவர்கள் உண்ணத்தக்க குற்றமில்லாத பதார்த்தங்களையும், அவற்றின் குணங்களையும், அவைகளைப் பாகப்படுத்திப் புசிக்க வேண்டிய கால பேத இலக்கணங்களையும், இது வரையிலும் விளக்கித் தெளிவாய்ப் புகன்றோம். அறிவுடையோர்கள், இம்முறை வழுவாது நடந்து, பிணிகளைக் காணாதவர்களாய்ப் பிள்ளைகளையும், மலைபோல உறுதியுள்ள உடலையும், இவ்வுலகைச் சிருட்டிக்கும் பிரமதேவனைப் போல மிகுந்த ஆயுளையும் பெற்று, பதினான்கு உலகத்திலுள்ளவர்களும் கண்டு களிக்குமாறு வாழ்வார்கள். அறிவிலிகள் இதற்கு மாறாய் நடப்பார்களாகில், நாம் என் செய்ய முடியும்! இதனால், அவர்கள் அடைகின்ற பயன் கொடிய (விடமுள்ள) நஞ்சுள்ள அரவுடன் நாடோறும் பழகுபவர்கள் அடையும் பயனெதுவோ அஃதேயாகும்.

இச்சாபத்தியத்தில் ஆகும் பொருள்கள்.

"பருவரால் கருங்குறவை தேள்மீனி னைப்பருகல்
உரியவுள்ளல் காட்டுப்புறா கபிஞ்சலங் கலைமான்
பெரியவெள்ளை யின்றசை பசும்பானெய் மோரீதலாம்
அரியசம்பீரப் பழத்தின் சாறருந்து தலாமே."

(பொழிப்புரை) பருத்த வரால், கருங்குறவை, தேளி ஆகிய மீன்களும், உள்ளான், காட்டுப்புறா, காடை, கலை மான், வெள்ளாடு இவைகளின் இறைச்சிகளும், பசும்பால், நெய், மோர், எலுமிச்சம்பழம் ஆகிய இவைகளும் இச்சா பத்தியத்தில் ஆகும் பொருள்களாம்.

இச்சாபத்தியத்தில் நீக்கும் பொருள்கள்.

"கடுகு நற்றிலத் தெண்ணெய் கூழ்ப்பாண்டங்கள் கடலை
வடுவ தாகிய தெங்குமா வருக்கை நற்காயம்
மடிவி லாதவெள் ளுள்ளிகொள் புகையிலை மதுபெண்
இடறு பாகலோ டகத்தி நீக்கிடலிச் சாபத்தியம்."

(பொழிப்புரை) கடுகு, எள்நெய், கலியாண பூசனிக்காய், கள், கடலை, தேங்காய், மாங்காய், பலா,காயம், உள்ளிப்பூண்டு கொள், புகையிலை, பெண்கள் சேர்க்கை, பாகல், அகத்தி இவைகளை இச்சாபத்தியத்தில் நீக்க வேண்டும்.

கடும் பத்தியம்.

'கடுமை யென்றிடு பத்திய
மூவர்வறுத் துண்டல்
அடைவி லாமறு பத்தியத்
துவர்வறுத் தருந்தல்
கொடுமை செய்புளி தனைச் சுட்டுக்
கூட்டிட லன்றிப்
படியில் கத்தரி சிக்குருப்
பிஞ்சினைப் பருகல்"

(பொழிப்புரை) கடும் பத்தியத்தில் வறுத்த உப்பைச் சேர்த்துக் கொள்ளலும் மறு பத்தியத்தில் வறுத்த உப்பு, சுட்ட புளி, கத்தரி, முருங்கைப் பிஞ்சுகளைச் சேர்த்துக் கொள்ளலு மாம்.

இதுவுமது

"மருந்து தின்றிடின் பத்தியம்
வகுத்திடா விடினும்
அருந்த வாகிடாப் பொருள்களை
யகற்றவே வேண்டும்

பொருந்திடாது பெண் போகமோர்
மருந்துக்கும் புவியில்
வருந்து வோருட லறிந்துபத்
தியந்தனை வகுப்பாய்''.

(பொழிப்புரை) மருந்துண்போது பத்தியம் கூறாவிட்டாலும், அருந்தக் கூடாத பொருள்களாகிய மா, பலா, வாழை, புகையிலை போன்றவைகளை நீக்க வேண்டும், பெண் போகம் கூடாது. நோயினால் வருந்துகிறவர் உடலுக்குத் தக்க பத்தியம் வைக்க வேண்டும்.

இதுவுமது

''பத்தியஞ் கொண்ட பேர்கள்
பகற்றுயில் கொண்ட காலைச்
சித்திர பானு வெப்பஞ்
செப்பிடு மருந்தின் வெப்பம்
பத்தியச் செயலின் வெப்பம்
பகருநித் திரையின் வெப்பம்
இத்தனை வெப்பங் கூடி
னியலுநோய்க் களவின் றென்னே.''

(பொழிப்புரை) மருந்துண்டு பத்தியமாய் இருப்பவர்கள் பகலில் தூங்கப்படாது. அப்படித் தூங்கின் அத்தூக்கத்தால் ஏற்படும் வெப்பம், சூரிய வெப்பம், மருந்தின் வெப்பம், பத்தியத்தின் வெப்பம் இவ்வளவும் உடலில் சேர்ந்து அளவிறந்த நோய்கள் உடலையணுகு மென்பதாம்.

உணவு பதை.

''உணவுபதை மாரிசிசுக் குள்ளிலவண் வென்றி
யுணவுபதை பான்மோர்நெ யுண்டி—யுணவு
தகமறிமை பீர்பூசை தக்கிரமை யாணந்
தகமறிமை யோதனமா சை''. (தே.ய.)

(பதவுரை).—உணவுபதை—(பிணி நீக்கவல்ல) உணவு சோதனை (செய்யவேண்டின்); மாரிசிசுக்கு உள்ளி லவண் வென்றி—மிளகு, சுக்கு, பூண்டு, உப்பு, சருக்கரை, உள் நவு பதை பால், மோர், நெய், உண்டி—வெங்காயம், கொத்துமல்லி, கடுகு, பால், மோர், நெய், பலகாரம்: உணவு உதகம் மறிமை பீர் பூசை—மற்றைய உணவாகிய தண்ணீர், ஆட்டுப்பால், எருமைப் பால், பீர்க்கன், புடலை (முதலிய காய்களும்); தக்கிரம் ஐ ஆணம்—தயிர், வெண்ணெய், குழம்பு (முதலியவைகளும்); தக—இவற்றுள் தகுதியை அறிந்து; மறி—தள்ள வேண்டியதைத் தள்ளி; மை—கொள்ளவேண்டியதைக் கொண்டு; ஓதனம்—சாதத்தின் வகையிலேயும் (அப்படியே செய்தால்); மாசை—உடல் பொன்போலாம்.

(பொழிப்புரை) உணவு வகைகளிலேயே பிணிகளை நீக்க வேண்டின், மிளகு, சுக்கு, பூண்டு, உப்பு, சருக்கரை, வெங்காயம், கொத்துமல்லி, கடுகு, ஆப்பால், மோர், நெய், பலகாரம், தண்ணீர், ஆட்டுப்பால், எருமைப்பால், பீர்க்கன், புடலை, தயிர், வெண்ணெய் முதலியவைகளையும், இவை போன்றவை களையும் குழம்பாகவாவது, சாறாகவாவது செய்து தகுதியும் தகுதியின்மையும் உணர்ந்து, தக்கவற்றைக் கொண்டு, தகாத வற்றை நீக்கிவரின், மேற்கூறப்பட்ட பொருள்களே மருந்து களாய்ப் பிணிகளைப் போக்கி, உடலைப் பொன் மயமாக்கும்.

மரிசியென்பது மாரிசி யெனமுதல் நீண்டும், லவணம் என்பது அம்முச்சாரியை குறைந்தது என்றும் நின்றவாற்றிக.

மிகு கடும் பத்தியம்.

கடுமை மிக்கிடு பத்திய மட்புதுக் கலத்தில்
அடுகை செய்துண லுவரிநீர் புளிநிழ லுவரிகால்
படுகை மெய்யினி லிலாவகை படுத்திட லுவர்மண்
தொடுகை யாதிய நீக்குத லெனப்பலர் சொன்னார்.''

(பொழிப்புரை) மிகு கடும் பத்தியத்தில், அரிசியைப் புது மட்கலத்தில் உப்பின்றிச் சமைத்துண்ணல் வேண்டும். உப்பு நீர், புளிய மர நிழல், கடல் காற்று இவைகள் உடலில் படவும் கூடாது. உவர் மண்ணைக் கையினாலும் தொடக் கூடா தென்பதாம்.

பத்திய வகை.

பிணியாளரின் குடிநீர், சுரசம், நீர்இவைகளின் சூட்டின் விதி.

'சுத்தநற் குடிநீர் காண்ட சுரசமுண் டிடிலூ தைக்கு
மெத்தவுஞ் சூடாம் பித்தஞ்வெப்பிரத் தஞ்சந் நிக்கு
முத்தமங் குளிர்ச்சி யாகும்மோங்கைக்குச் சிறிய சூடாங்
கொத்தடர் தொந்த நோய்க்குக் குளிர்சமோட் டினமாங்
கூறே.'' (ப.கு.சி.)

(அருஞ்சொற் பொருள்) காண்டம்—நீர், ஊதை—வாயு, ஒங்கை—வாந்தி குளிர்சம உட்டினம்—குளிர்சமோட்டினம்.

பிணியாளர்க்குத் தயிர் தோய்க்கும் விதி.

காற்றொழிக்க வெண்ணி லுப்புங்காலொடு சேரை யென்னும்
கூற்றொழிக்கச் சுக்கும் குறுமிளகு—மூற்றடு பித்
தம்மொழிக்கக்கட்டியும் பாறன்னிலிட்டுத் தோய்பாத்தி
யம் மொழிக்கமாட்டாதார்

(பதவுரை) காச்றொழிக்க என்னில் வாயுவை நீக்க வேண்டு மானால் உப்பும் உப்பையும் காலொடு சேர்ஐ என்னும் கூற்று ஒழிக்க —வாயுடன் சேர்ந்த கபமாகிய எமனை நீக்க வேண்டு மானால் சிக்குகுருமிளகும் ஊற்று ஈரம் கபம் அடு வரட்டு கின்றபித்தம் —பித்தம்— ஒழிக்க—நீக்க கட்டியும்—வெல்லத்தை யும் பால் தன்னிலிட்டு தோய்ப்பர்—பாலிடத்துத்தயிர் தோய்ப்பர் ததியம் ஒழிக்கமாட்டாதவர் தயிரை நீக்கடியாது.

பிணியாளர்க்கு மோர் தோய்க்கும் விதி

கிரிசச்ந் தனக்கு வெல்லங்கேள் பாண்நோய்க்கும்
அரிப்பே திகட்டுஞ் சுக்காகும் எரிப்பான
மேகந்தனக்கு தேன்மிக்க பிணிகட்கௌயுள்
உகங் கொடிவேலியூட்டு.

(அருஞ் சொற் பொருள்) அரி—மஞ்சள் ஊகம்—ஊகம்புல்

தைலங்களின் பத்தியம்.

புலர்த்திய பின் மருந்து
போஜனந்தனிற் புளிப்பு
சலத்துறு த்திபால் பாகல்
சாதம் மீனிறைச்சி யச்ச

நிலத்தெழு பிரம பத்திரி
நித்திரை மடவா ரின்னு
நலத்துறா வகைநீக் குப்பின்
னாளும்பத் தியத்து ணில்லே.'' (ப.கு.சி.)

(அருஞ் சொற் பொருள்) சாகம்—வெள்ளாடு, அச்சிம்—அகத்தி, பிரம பத்திரி—புகையிலை.

முக்கியமாய் மருந்துக்கட்காகப் பொருட்கள்

''சிந்தக் கனிமிகுந்த ஜீவானந்தம் பூலவெல்லம்
பந்தப் பயற்றுப் பருப்புமோர்—சிந்து
கடலையிவை யற்றுறை கறித்திடார் தங்க
ளுடலையிவை யத்திருத்தா ருண்.''

(அருஞ் சொற் பொருள்) சிந்தம்—புளி, ஜீவனம்—நீர், உறை—மருந்து கறித்திடார்—புசித்திடார்.

பத்திய பதார்த்தங்கள்

''பொன்னாங் காணி சிறுகீரை
புதிய நறுநெய் வரால்குறவை
சொன்னேங் கோவைக் காய்வற்றல்
சுண்டை ய்வரைப் பிஞ்சுடனே
பன்னா அப்பை வெள்ளுள்ளி
பரிய முருங்கை யிளம்பிஞ்சும்
நன்னீர் விளைத்த சிறுபயறு
நன்மாங் காய்க்குள் பிஞ்சுநன்றே''. (ப.கு.சி.)

(அருஞ் சொற் பொருள்) அப்பை—அப்பைக் கொவ்வை,

இதுவுமது

''அத்திப் பிஞ்சு கருவாழை
யதன்றன் பிஞ்சு பூவாகும்
கத்தித் திரியும் ஊர்க்குருவி
காடை யுடனே சிவலாமை
சுத்த மாங்காய் நறும்பருப்பும்
சுறாமீன் திருக்கைக் கருவாடாம்
பத்தியத்தில் இவைதவிரப்
பச்சை மீன்கள் பகையாமே''. (ப.கு.சி.)

(அருஞ் சொற் பொருள்) கருவாழை—சிறியனவும் கருமையுடையனவுமாகிய பழங்கள் ஒரு குலையில் இரு நூறு முதல் நானூறு வரை உண்டாகக் கூடிய ஒரு வாழை, சிவல்—கவுதாரி.

இதுவுமது

''வேண்டிய மருந்துண் பார்கள்
விராலொடு குறவை தேளி
ஆண்டிடும் அயிரை ஊடான்
ஆனசன் னையுஞ்சு தும்பும்
ஈண்டிடும் இருநெய்த் தோலி
யிவைகளை யருந்துங் காலை
மீண்டிவை உலர்ந்த தாகும்
விரைமலர்க் குழலி னாளே.'' (ப.கு,சி,)

இதுவுமது

''காடை உடும்பு கவுதாரி
காட்டின் எலியும் ஊர்க்குருவி
ஆடு விரும்பில் வெள்ளாடாம்
அதுவும் உலர்த்திக் கறிகொள்ளு
நாடு தனில்வாழ் வரால்குறவை
நலமா மிவையும் உலர்த்திக்கொள்
கூடுங் கூடா தென்னாதே
கூட்டில் மருந்துங் குணந்தருமே.'' (ப.கு.சி.)

பேதியைக் கட்டுகிற பதார்த்தங்கள்

''மானே வயிறு கழிவார்க்கு
வாழைக் கச்சல் அத்திக்காய்
கானே திரியும் ஊர்க்குருவி
காடை உடும்பு கவுதாரி
தானே யாகும் முயல்உலரி
தக்க குளத்துக் கருவாடாம்
மீனே விரும்பித் தின்பீரேல்
வீணே உயிரை யிழந்தீரே.'' (ப.கு.சி.)

(அருஞ் சொற் பொருள்) உலரி—ஒரு வகை மீன் கருவாடு.

பேதியாகிற பதார்த்தங்கள்

''காரா மணிக்கீரை காட்டுப் பறங்கியிலை
பேராம் பெரும்பயற்றின் பேரிலைகள்—சீரார்
அகத்தியருங் கத்திரிக்காய் ஆயிழையே மீன்கள்
பகைத்ததிக பேதிதரும் பார்''. [ப.கு.சி.]

பத்தியாபத்திய பதார்த்தங்கள்

''மயறி குறவை வரால்தேளி
மற்றுங் குறவை நாய்க்கெளிறு
அயிரை சன்னை பத்தியமாம்
ஆகா மீன்கள் இனிக்கேளும்
உயரும் வாளை இறால்கூனி
ஓங்குங் கெளிறு விலாங்குகெண்டை
கயலோ டிவைகள் ஆகாவாங்
காரார் குழலே கண்டுரையே''. (ப.கு.சி.)

(அருஞ் சொற் பொருள்) கெளிறு—கெளுத்தி

அபத்திய பதார்த்தங்கள்

''கொள்ளு காடி குமட்டிக்காய்
கோழி பன்றி கொக்குடனே
முள்ளிற் பெரிய பாகற்காய்
முதிரும் அவரை பயற்றங்காய்
பள்ளத் தெழுந்த மடற்சேம்பு
படரும் வள்ளி பாலையிவை
எள்ளத் தனைதான் தின்பிரேல்
எல்லா மருந்தும் இழந்தீரே.'' (ப.கு.சி,)

(அருஞ் சொற் பொருள்) மடல்—ஈந்து, கமுகு, தென்னை.

இதுவுமது

"மாங்கா யிளநீர் மாதுளங்காய்
மாவின் பண்டம் புளிகடுகு
தேங்காய் நெய்பால் கிழங்குபழம்
தின்னுங் காயம் வெங்காயம்
ஈங்கா தரிக்குஞ் சுராபானம்
ஈச்சங் கள்ளு பனங்கள்ளு
ஆங்கே யிவற்றுள் ஒன்றேனும்
அருந்தா திருந்தால் மருந்தாமே." (ப.கு.சி.)

வாத நோயை நீக்கும் பொருள்கள்

"செங்கழு நீர்கோடைந் தேன்மிளகு நல்லெண்ணெய்
தங்குபெருங் காயந் தழுதாழை—எங்கெங்கும்
கூட்டுசிறு முத்துநெய் கோதில் உழுந்திவைகள்
வாட்டுமனி லத்தை மதி."

பித்தப் பிணியை நீக்கும் பொருள்கள்

"கொம்மட்டி வாழைப் பன்னங்
கொளுத்திய கரியி னோடே
விம்மிய தண்ணீர் விட்டான்
வேரெனுங் கிழங்கு சாந்தஞ்
செம்மைசேர் நெல்லி முள்ளி
சேருமிம் மருந்தெல் லாமே
கம்மிய பித்தத் திற்குக்
காலனென் றோது வாரே." (ப.கு.சி.)

(அருஞ் சொற் பொருள்) பன்னம்—இலை.

இதுவுமது

"சம்புநா வல்பீத் தாருச்
சருமமும் முத்தக் காசுஞ்
செம்பருத் தியுஞ்செ ழித்த
தெங்கிளம் பூவும் கன்னல்
அம்பயத் தாதி னோடே
அதனுறு வளையம் நெய்தல்
வெம்பிய சீலைச் சாம்பல்
வெள்ளைப்பூ சினிக்கா யென்னே." (ப.கு.சி.)

(அருஞ் சொற் பொருள்) பீதாரு—வெள் வேலமரம், பருவேல்.

கபப் பிணியை நீக்கும் பொருள்கள்

''ஆவி னதுபால் அரத்தைமுள் ளங்கிமயில்
தூவி நறுஞ்சாம்பல் தூதுளம்தேன்—மாவோமம்
துய்ய சருக்கரை துழாய்விதை விளாம்பழம்
ஐயமதை யோட்டும் அறி.'' (ப.கு.சி.)

மூலநோயைத் தீர்க்கும் பொருள்கள்

''மருள்சா ரடைகருணை வச்ரவல்லி காட்டுக்
கருணை புளிநரளை காறாக்—கருணை
மெருகோடு வெள்ளறுகு வெண்சித்ர மூலம்
வருமூலம் போக்கும் மருந்து.'' (ப.கு.சி.)

(அருஞ் சொற் பொருள்கள்) மருள்—மருட் கிழங்கு.

நஞ்சை முரிக்கும் பொருள்கள்

பேய்ச்சுரை பேய்க்கொமட்டி பேய்ப்பீர்க் கொடுதுமட்டி
பேய்ப்புடலை புங்கழிஞ்சில் பேரவுரி—வாய்த்தமலை
வேம்புசிவ னார்வேம்பு வெள்ளெருக்கு வெள்ளறுகு
சோம்புவிஷம் போக்குமெனச் சொல். (ப.கு.சி.)

பித்தத்தைச் சமப்படுத்தும் பொருள்கள் .

மொச்சை கடலைபெரு முற்கமுழுந் தேலவெந்தி
மெச்சு மிளகுசுண்டை வெண்ணெயிஞ்சி—பச்சைநிறங்
காட்டுமப்பைக் கோவை கருநிம்பம் சீரகங்கள்
கூட்டுக்கறி பித்தசமம் கூறு. (ப.கு.சி.)

(அருஞ் சொற் பொருள்) முற்கம்—பச்சைப் பயறு.

திரிதோஷ மூக்குற்றத்தைச் சமப்படுத்தும் பொருள்கள்

''ஒன்றிய வாத பித்த கபமிவை யுயரா வண்ணம்
நன்றுறு கறிக ளெல்லாம் நாளுமே சமைப்ப ராய்ந்தோர்
தின்றிடு மிளகு மஞ்சள் சீரக முயர்ந்த காயம்
வென்றிகொள் சுக்கோ டேலம் வெந்தியம் உள்ளி சேர்த்தே.'
(ப.கு.சி.)

அறுசுவை -யின் மிகுதிக் குணம்.

''புளிதுவர்விஞ் சுங்கறியாற் பூரிக்கும் வாதந்
தெளியுவர்கைப் பேறில்பித்தஞ் சீறுங்—கிளிமொழியே
கார்ப்பினிப்பு விஞ்சிற் கபம்விஞ்சுஞ் சட்டிரதச்
சேர்ப்புணரி னோயணுகாதே.'' (ப.கு.சி.)

காலைக்கறிக்கான பயறுகள்

''காலைக் கறிக்காகுங் காரா மணிஉழுந்து
தோலற் றிடுகடலை தோரையெள்ளு—கோலமொச்சை
தட்டை சிறுபயறு தாழ்வில் கடுகுகறி
இட்டசுக்கு காயம் இவை.'' (ப.கு.சி.)

பகல் கறிவகை.

''கந்த வருக்கங் கனிவருக்கம் வாதமெழு
மந்த வருக்கமந்த மாம்வருக்கங்—கந்தமுறு
தண்ணடைவ ருக்கந் ததிமோ ரிவையென்னா
ளுண்ணடையாற் றோடமறு மோர்''.

(அருஞ்சொற் பொருள்) எல் நாள்—பகல்.

இராக் கறி வகை.

''அவரைப்பிஞ் சத்திக்கா யாப்பால் முருங்கை
துவரைப் பருப்பாற்றுத் தோணி—யெவ்ரையுமோ
கண்டா லிழுக்குங் கறித்தூ துணமிவையல்
லுண்டா லிழுக்குமிலை யுண்.''

(அருஞ்சொற் பொருள்) தோணி—சிறுவழுதுணை.

காலை, மாலை உணவில் நெய் மோர் சேர்க்கும் விதி

''காலைக் கெருமைநெய்மோர் காரத்தோ டுண்ணலாம்
மாலைக்கா வின்னெய்மோர் வார்த்துணலா—மேலையண்ட
வெப்பப்புக் காலம் விரவிவர லாற்றுக்களி
லொப்பப் பகற்கனற்கண் டுண்.'' (ப.கு.சி.)

வளி முதலிய மூவுடலினர்க்கும்—உப்பு வகை.

''வாதபித்தை யென்றே வருவதேகர்க் குக்கல்லுப்
பொத்வுப்பிந் துப்பாம் உணர்முறையே—ஓதவெள்ளய
வற்றியஇந் துப்பதன வாதமுத லோரருந்தக்
குற்றமிலை குற்றமிலை கூறு.'' (பா.கு.சி.)

வளி உடலினர்க்குக் கறி வகை.

''மாட்டுப் பாங்கிவங்கம் மாமுருங்கை வெள்ளவரை
நாட்டுக்கூ ரப்பிஞ்சு நற்கருணை—காட்டுளுரை
மாகருணை யுங்கருவில் வாதத்தை முந்துவந்த
தேகருணை நற்கறியாந் தேர்.'' (ப.கு.சி.)

(அருஞ்சொற் பொருள்) மாட்டுப்பறங்கி—சாம்பற்பூசணி, வங்கம்—கத்தரி, கூரம்—பாகல்.

* குறிப்பு.— பகற் கு— அனல்— கண்டு— உண்— பகலிலும் பசி கண்டறிந்து உண்

வளி உடலினர்க்குக் கீரை வகை.

"மேனிமுன்னை யாரைநறும் வேளைமணத் தக்காளி
யானைநெருஞ் சில்முசுக்கை யப்பைநெடுங்—காணிலுறை
மூக்கிறட்டை நல்வசலை முன்பிவைக ளிற்கீரை
யாக்குவர்வா யுத்தேகர்க் காய்ந்து." (ப.கு.சி.)

(அருஞ் சொற் பொருள்) சில்லி—சிறுகீரை.

வளி உடலினர்க்கு இரச வகை

"சக்கர வர்த்திவெள்ளைச் சாரடைபா கல்முருங்கை
தொக்கிலிளந் தண்டுநறுந் தூதுணம்வார்—மைக்குழலே
சீதமுறு காணியிவை செந்தளிர்க ளிற்றினமும்
வாததே கர்க்கிரசம் வை." (ப.கு.சி.)

வளி உடலினர்க்கு வற்றல் வகை.

"சுண்டைக்காய் பேய்ப்புடற்காய் தூதுளங்காய் நெல்லிக்காய்
தொண்டைமணத் தக்காளி தூஅவரை—பண்டைமுள்ளிக்
காயிவையின் வற்றல்களுங் கான்புரண்டை வற்றலுமாம்
வாயுதே கர்க்கறிந்து வை."

(ப.கு.சி.)

வளி உடலினர்க்கு ஊறுகாய் வகை.

" நாரத்தை தான்றிகடு நற்றேற்றான் நீடுகளா
ஏரொத்த புன்களா லிவ்வகைக்காய்—கருப்பப்
பூறிய்காய் ஆகும் உயரிஞ்சி யுமமையுங்
கூறனில தேகிகளுக்கு."

(ப.கு.சி.)

பித்த உடலினர்க்குக் கறி வகை.

" வெள்ளரி இரண்டு பாகல் விரிபுடல் பீர்க்குச் சிம்பை
முள்ளிபூ சினிகத் தாரி முருங்கைமா களவ ரம்பை
எள்ளிலிக் காய்கள் வள்ளி கதலிப் பூதண் ஈருளி
டீள்ளியுண் ஆணஞ்செய்வர் அரும்பித்த தேகர்க் கென்றே"

(ப.கு.சி)

(அருஞ் சொற் பொருள்) சிம்பை—அவரை, ஆணம்—குழம்பு.
களாவு—களா.

பித்த உடலினர்க்குக் கீரை வகை.

''புளியாரை கோவை முருங்கை வசலைநற் பொன்மு
சுட்டை
மிளகப்பை யோரிதழ்த் தாமரை பாலை வெளிமு சுக்கை
வளர்தூ துணஞ்சுரை வல்லாரை சில்லி மணத்தக் காளித்
தளிரிளங் கீரைகள் பித்த தேகிகள் தாமுண் பாரே.''

(ப.கு.சி.)

(அருஞ் சொற் பொருள்)—சில்லி—சிறுகீரை

பித்த உடலினர்க்கு ரசவகை.

''கொத்து வசலை கொடிவசலை நல்லகத்தி
தத்து புனல் வழுக்கை தைவேளை—நெய்த்ததராச்
சாகங் களையவித்துச் சாறுவைத்துண் பார்பித்த
தேகங் களையுடையார் தேர்.'' (ப.கு.சி)

பித்த உடலினர்க்கு வற்றல் வகை.

''சுத்தமுள்ளி பேய்ப்புடோல் தூதுணங்காண் சுண்டை
கண்டங்
கத்தரி பயற்றைமணத் தக்காளி—நித்தமுறு
கஞ்சம்வல் லாரையிவை காய்த்தநறுங் காய்வற்றல்
விஞ்சுபித்த தேசிகட்காம் விள்.'' (ப.கு.சி.)

பித்த உடலினர்க்கு ஊறுகாய் வகை.

''பச்சை மிளகிஞ்சி தூதுளங் காய்முப் பலநரத்தங்
கச்சை தமரத்தம் புன்னை வடங்கபித் தம்மிலமா
கொச்சையி ளம்பிஞ்சு மாகாளிக் கந்தங் கொளுஞ்சியெலு
மிச்சையுப் பூறிய காய்பித்த தேகர்க்கு மிக்குநன்றே.''

(ப.கு.சி.)

(அருஞ்சொற் பொருள்) மாகாளி—மாவலிக் கிழங்கு.

ஐய உடலினர்க்குக் கறிவகை.

''கத்தரிபேய்ப் புடலவரை யிருபாகல் பருங்களா கண்டங்காரி
அத்திக்காய் களும்வருக்கை மாபயற்றை சுரையால்பீர்க்
கரும்பிஞ்சுவோ
மொய்த்தகூ ரணங்கதலித் தண்டுகளப் பூமுளங்கி முருக்
கரும்பும்
அத்திபூசி னிக்காயீ ருள்ளிவள்ளி யுங்கபத்தோர்க் காண
மாமே.''

(ப.குசி.)

(அருஞ் சொற் பொருள்) வருக்கை—பலா, சூரணம்—
கருணைக் கிழங்கு.

ஐய உடலினர்க்குக் கீரை வகை.

''காரையிரு கோவைமுன்னை செம்பைபடோல் துயிலி
வழுகை நெருஞ்சில்
ஆரைபுளி யாரைமுல்லை மருதநெய்தல் மேனிநல்வல்
லாரை பொன்னா
வாரைமுசுக் கைமுருங்கை யிருபிண்ணாக் கோடுபண்ணை
மணலி பிள்ளைக்
கீரைமுசுட்டை யுங்காரா மணிமாடங் கடலைபுளிக் கிரிக்
களாவே.''

(ப.கு.சி.)

(அருஞ் சொற் பொருள்) பிள்ளைக்கீரை—முளைக்கீரை. பிண்ணாக்கு—பிண்ணாக்குக் கீரை.

இதுவுமது.

''வேளைமணத் தக்காளி மென்சீதை சக்ரவர்த்தி
பீளை வசலைசுக்கு பெண்சுணங்கன்—வேளையிவை
செந்தளிர்க் களைக்கீரை செய்வர்கப தேகர்நிதம்
வந்தளியு ணத்தான் மகிழ்ந்து.''

(ப.கு.சி.)

(அருஞ் சொற் பொருள்) சீதை—பொன்னாங்காணி, பெண்சுணங்கன்—கற்றாழை.

மேற்படியார்க்கு இரச வகை.

'' கந்தஓ மஞ்செங் கடுகுசத குப்பைதரா
வெந்தியங் கொத்துமலி வேளைசுக்கு—முந்தகத்தி
தூறுகுறிஞ் சாபாகல் தும்பையிச்சா கங்கள்வெந்த
சாறுகப தேகர்க்காஞ் சாற்று.''

(ப.கு.சி.)

தூறு—திராய்.

மேற்படியார்க்கு வற்றல் வகை.

''சுண்டைமணத் தக்காளி தூதுணம்பு ரண்டையா
தொண்டைமுள்ளி பேய்ப்புடலை தொண்டைசிம்மை—
கண்டை யுறு
கத்தரிநெ லிப்பிஞ்சு காநரந்தம் பிஞ்சிவைகள்
ஒத்த வற்றல் ஐத்தேகர்க் குன்.

(ப.கு.சி.)

(அருஞ் சொற் பொருள்) சிம்பை—அவரை.

மேற்படியார்க்கு ஊறுகாய் வகை:

''மஞ்சள் மிளகுசுண்டை வாழைத்தண் டோடுமாம்
பிஞ்சாலம் பிஞ்சத்திப் பிஞ்சுகளும்—விஞ்சுகபம்
நூறுநறுந் தூதுணமு நொய்யபா கற்பிஞ்சும்
ஊறுகா யைத்தேகர்க் கோது.''

(ப.கு.சி.)

காலம், உடல், ஆகும் ஆகாப் பதார்த்தங்கள்.

''எல்லாக் கறிகளுமே யெல்லுக்கா மல்லுக்கா
மெல்லாக் கறிகளுமெல் லார்க்குமாம்—பொல்லாக்
கறிகளுக்குச் சத்துருக லந்தமைத்து நன்றாங்
கறிகளுக்குள் வைத்தருந்துங் கால்.''

(ப.கு.சி.)

இவ்வித நோய்க்குத் தாம்பூலங் கூடாதெனல்.

''மதமூர்ச்சா ரோக மகாசந்நி பாத
மதிரூட்சை சுட்கநோ யாளு—முதிர்விடங்கள்
பித்தங் கயஞ்சிரநோய் பேசுமிவைக் காகாது
சுத்தந்தாம் பூலமெனச் சொல்.''

(ப.கு.சி.)

இவ்வித நோய்க்கு நெய் கூடாதெனல்.

''தருணசுரஞ் சந்நி சலதோடத் தோட
மரண மகோதரமா நாகம்—வருணவதி
சாரங்க வீனவுரை தாவரிக்குன் மங்களுக்கா
தாரங்க வீனவுரை தள்.''

இவ்வித நோய்க்கு தயிர் கூடாதெனல்.

''குட்டமதைப் பக்கிநோய் குன்மங்கா மாலைமந்தந்
துட்டவிடு சிக்களச்சூர் சோபைகபங்—கெட்டசுர
மீரமிவை பீநசம் பிலீகம்புண் பாண்டொடதி
சாரமிவைக் கில்லை ததி.''

(ப.கு.சி.)

தற்கால பலாப்பழப் பொருட்கள்.

''திரிபதார்த் தம்பலமே செய்யு முடனே
திரிபதார்த் தம்மபலஞ் செய்யுந் — தெரிமுறைவே
சிதவம்பு ணர்ச்சியூன் றேனு சொரிநறும்பா
லதவம்பு ணர்ச்சிதை லம்.

(ப.கு.சி.)

பொருள்: திரிபதார்த்தம்—மூன்று பொருட்கள்; உடனே—உட்கொண்ட உடனாகவே, பலமே செய்யும்—உடலுக்கு உரத்தையே செய்யும். திரிபதார்த்தம் - உடலின் ஆக்கத்திற்கு மாறுபட்ட செயலையுடையவைகள்; உடனே—ஏற்றுக்கொண்ட வுடனே. அபலமே—உரத்தைக் கெடுக்கவே செய்யும் (பலவீனம் அல்லது சுகவீனத்தைத் தரும் என்பதாம்) முறையே தெரி—அவைகளை முறையாக அறிந்து கொள்வாயாக; சிதவம்பு—குளிர்ச்சி பொருந்திய நீர்; உணர்ச்சியூன்—நாவுக்குச் சுவையுணர்வு தரும் இறைச்சி; தேனு—பசு; சொரிநறும்பால்—சுரந்தளிக்கும் மணமுள்ள பால்; ஆகிய இம்மூன்றுமென்றும்; அதவம்—(கடு)வெயில்; புணர்ச்சி—பெண்ணுடன் உடலுறவு, தைலம்—எண்ணெய் தேய்த்துக் கொள்ளல் ஆகிய இம்மூன்றும், என்றும்,

கருத்து.—குளிர்ந்த நீரையும், சுவையுள்ள ஊனையும், நறுமணமுள்ள ஆவின் பாலையும், (ஆகிய இம்மூன்றையும்) உட்கொண்டவுடனே, உடலுக்குப் பலத்தைத் தரும் என்றும், கடுவெயில் அலைதல் பெண் போகம் செய்தல், எண்ணெய் தேய்த்து முழுகல் ஆகிய இம்மூன்றும் செய்தவுடனே மிக்க பலவீனத்தை உண்டாக்கும் என்பதை அறிவாய்.

சிலர் தேனு சொரி நறும்பால் என்பதற்குத் தேன் ஊற்றி இனிப்பாக்கிய மணமுள்ள பால் என்று கூறுவார். ஆயினும் அப்பொருள் பலர்க்கு உடன்பாடில்லை.

இப்பாடல் யமகமாக அமைந்துள்ளது. முன்னிரண்டடிகளில் சிலேடைப் பொருள் உள்ளது. சீதவம்பு என்ற சொல்லும் ஆதவம் என்ற சொல்லும் செய்யுள் நயம் நோக்கி குறுக்கல், விகாரத்தில் யாத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இது மிக அரிய ஆட்சியாம்.

உணவுப் பொருள்கள் ஒன்றுடன் மற்றதைக் கூட்டும்போதும் அவைகளைச் சமைக்கும் வகைகளாலும் நஞ்சாவதைக் கூறல்.

கால்நடையின் மாமிசத்தைக் காருளுந்து முள்ளங்கி
பால்தேன், முளைத்த பருப்புவகை—சேல்வாழ்
தடாகத்தி லுண்டாந் தண்டாமரைக் கந்தத்
தொடாக்கி வெல்லமுடன் சேர்த்—திடாபுண்ணில்
நஞ்சாம் கயலினம் நற்கீரை மூலகம்
விஞ்சு புளித்தபழம் மிக்கவுண்ட—வஞ்ஞான்றும்
கம்பு வரகுகொள் காட்டுப் பயிற்றாலாம்
வம்பா ருணவுண்ட வப்பொழுதும்—கொம்மைச்
சேலேய் முலைக்கண் செந்திருவே யாகாதாம்
பாலே யுணல்விடமாம் பார்.

பொருள் : கால்நடையென்று வழங்கிவரும் மாடுகள் ஆடுகள் (இவைகளின் வகை) (எதுவானாலும் சரி) ஆகிய விலங்குகளின் இறைச்சியுடன் உளுத்தம்பருப்பு, முள்ளங்கி, பால்

தேன், முளைக்கட்டி உலர்த்த உடைத்துக் கொண்ட பருப்பு வகைகளில் ஏதேனும் ஒன்றையோ, பலவற்றையோ, கலந்து சமைத்தோ, அவைகளுடன் வெல்லம் கூட்டியோ உண்ணத் தகாதே! அதை உண்டால் நஞ்சாகி வீடும்.

மீன்வகை உண்டி, கீரைக்கறி, முள்ளங்கியாலான துணை யூண் (கூட்டு, சாம்பார், கறி முதலிய வியஞ்சனங்கள்) ஆகியவை களையும், மிக்கப் புளிப்புச் சுவையுள்ள பழங்களையும் மிகுதி யாக உண்ட உடனேயும், கரும்பு, வரகு, கொள், காட்டுப்பயறு, (நரிப்பயறு—பாசிப்பயறு) பனிப்பயறு என்பவை ஆகியவை களைத் தனித்தனியாகவோ ஒன்றோடொன்று சேர்த்தோ சமைத்த மணமுள்ள உணவுண்டவுடன் பாலைச் சாப்பிடுவதே விடமாகி விடும். அவ்வாறு நேரா வண்ணம் விழிப்புடன் இருப் பாயாக !

ஏன் இறைச்சிமுள் ளேனப் புலாலுடனும்
கானேந் திரிமான் கவின்கோழி—யூனனையோ
டுண்ணத் தகாநஞ்சென் றோதினர்காண் வாகடத்தின்
உண்மை உணர்வுடை யோர். (ம.த.பா.)

பொருள்: மருத்துவ நூலில் உறுதியான் அறிவு முதிர்ந்த மருத்துவப் புலவர்கள், பன்றி காடு, நாடு என இருவகை, (இன்னும் உளவேல் அதனையும் கொள்க), மாமிசத்தை முள்ளம் பன்றி இறைச்சியுடன் கலந்து ஒருமிக்க உண்டாலும், காட்டிலே உரிமையுடன் திரிந்து வாழும் மானின் இறைச்சி யையும், அழகிய நாட்டுக் கோழியின் புலாலையும், தனித்தனியே யாகிலும், ஒன்றாகக் கலந்தாகிலும் உண்டாலும் விடமாகும். ஆகவே அவ்வாறுண்ணல் தகாது.

மாடகமும் மூலகமும் மாசில் குசும்பாவின்
தேடரும் கீரையும் செம்மறி—யாடளித்த
மாங்கிசமும் ஒன்றோடு மற்றொன்றில் நஞ்சென்பர்
தீங்குணர்ந்த செம்மல் தெரிந்து

பொருள் : விடத்தின் தன்மையையும் கெடுதியையும் அறிந்த பெருமையை உடையவர்கள், உளுத்தம் பருப்பையும் முள்ளங்கியையும் ஒன்றோடு ஒன்று சேர்த்தாலும் (உணவாக்கும் போது) குசும்பாக் கீரையுடன், செம்மறியாட்டின் கறியைச் சேர்த்தாலும் நஞ்சுக் குணம் அடையுமென்பர்.

பால்தயிர்நெய், பண்பார் பருப்பாங் கருப்புளுந்திக்
கால்வரும் வெல்லம் அளைந்தபுளிப்—பால்சிறந்த
யுச்சிலி யின்பழம் கேடுதரும் உண்டிடிலென்
றிச்சகத்தார்க் கோதுவாரே! (ம.த.பா.)

பொருள் : புளிப்பில் சிறந்ததான கிச்சிலிப் பழத்துடன் பால், தயிர், நெய், உளுத்தம்பருப்பு, கரும்பு வெல்லம் இவை களில் ஒன்றோ, இரண்டோ எல்லாவற்றையுமோ கலந்தோ உண்டால், இவ்வுலகில் உள்ளவர்க்குத் தீங்கு என்பர்.

கறிகணை சுக்குதேன் கன்னலின் கட்டி
கறிக்காகும் செம்மணத்தக்காளி—பறித்திணைத்
திஞ்சிமீன் அட்டசட்டி யிட்டாாக் யுண்டாலே
நஞ்சாம் விலக்கலே நன்று.

பொருள்: கீரையாகச் சமைத்து உண்ணத் தக்க செம் மணத் தக்காளிக் கீரையில் மிளகு, திப்பிலி, தேன், கரும்பு வெல்லம், இவைகளில் ஏதேனும் ஒன்றை கூட்டியுண்ணுதலும் (இங்கு இக்கீரையே வேக வைக்காமல் பச்சைக் கீரையுடன் என்று கொள்ளல் வேண்டும்.) இஞ்சி (சுக்கு), மீன் இவைகளில் ஏதேனும் ஒன்றைப் பக்குவப்படுத்திய சட்டியில் மேற்படி கீரை யைச் சமைத்து உண்டாலும் நஞ்சாகி விடும். அவ்விதம் செய்யாமல் விலக்கல் நலமாம்.

மீனமட்ட நெய்தனில் வெந்ததான திப்பிலி
ஏனநெய்யி லட்ட எழில்நாரை— ஊனருந்தல்
ஏதம்விளைக்கு மென நூல் இயம்புமால்
தீதகற்றி யுண்பொருளைத்தீன்.

(ம.த.பா).

பொருள்: மீனைப் பொரித்த நெய் (அல்லது) எண்ணெய் வகை ஏதேனுமொன்றில் திப்பிலியைப் பொரித்து உண்ணலும், பன்றிக் கொழுப்பிலிட்டுப் பக்குவம் செய்யப்பட்ட நாரையின் இறைச்சியைச் சர்ப்பிடுதலும் குற்றத்தை உண்டாக்கும். ஆகை யால் தீதானவைகளை விலக்கி உண்ணத் தக்க பொருள்களை உண்பாயாக!

வண்டெச்சில் ஆநெய் வசாநீர் இவைநாலும்
கொண்டு சமமாய்க் குடித்தாலும்— ஒண்டொடியே
பண்டிக் கிரண்டிரண்டிரண்டாய்ப் பாஙகாய்ப் பருகிடினும்
மிண்டுசெயு மென்பார் மிக. (ம.த.பா.)

பொருள்: ஒளி பொருந்திய வளையலை யணிந்த பெண்ணே! தேன், பசுவின் நெய், நிணம் (கொழுப்பு), தண்ணீர் இவை நான்கையும் சம அளவாக எடுத்துக் கலக்கிக் குடித்தாலும், இரண்டிரண்டாய்க் கலக்கிக் குடித்தாலும் மிகுதியாக (உடலுக்கு) ஊறு செய்யும்,

சிட்டுக் குருவி தித்திரி காடைசிகி
ஒட்டிப் பிடிக்கு முடும் பிவற்றைச்—சுட்டுண்ணி
லாமணக்கு நெய்யிலவித் தக்கட்டைத் தீயினால்
ஏமமில்லை கொள்வா னெமன்.க

ம.த.பா.

பொருள்: சிட்டுக் குருவி, தித்திரிப்புள், காடை, மயில், (மிக்க உறுதியாகப் பற்றிக் கொள்ளும் இயல்புடைய) உடும்பு ஆகிய இவைகளின் இறைச்சியை ஆமணக்கு கட்டைத் தீயினில்

சுட்டும் அல்லது ஆமணக்கு எண்ணெயிலிட்டு அக்கட்டைத் தீயாலேயே சூடேற்றி அவித்தும் சாப்பிட்டால் உடலுக்கு ஒரு வகையான காப்பும் இல்லை. எமன் எடுத்துச் செல்வான்.

கரும்பொன் கதிர்மாட்டிக் கான்கள்ளிக் காக்கை
தரும்புலால் வாட்டித் தணலில்—அருந்திடினும்
பானுப் பகைத்தணலில் பச்சைக் குருவிசுட்ட
ஊனுணினும் நஞ்சா முணர். ம. த. பா.

பொருள்: காட்டில் வாழும் கள்ளிக் காக்கையின் மாமிசத்தை இரும்புக் கதிரில் மாட்டி எரியுந் தணலில் நேரிடையாக வாட்டி உண்டாலும், பச்சைக் குருவியின் இறைச்சியை மஞ்சள் செடியின் உலர்ந்த சருகைக் கொளுத்தி எரியச் செய்து அத்தணலில் சுட்டுவுண்டாலும் விடமாகுமென்பதை உணர்வாயாக! (பானுப்பகை - மஞ்சள். இதைக் காந்தரிப்பகை' என்று கூறும் நூல் வழக்குண்டு.)

காந்தரீத் தெவ்வை கடுகெண்ணெய் இவ்வறுதல்
நீந்து கயலட்ட நெய்யிலே—காந்துகணை
இட்டுப்பொரித்தல் இலைக்கறி யாம்பசலை
எட்பொடி யிட்டட்டல் நாரையூ—னுட்கொண்டு
கட்குடித்தல் கான்விளையும் காரா மணியோடு
சட்டமாய் நாரைசமைத்துண்ணல்—மட்டார்
கமலவித்தைச் செந்தேன் கலந்துண்ணல் வெண்ணெய்
கமழளைமோர் வாழைக் கனிசேர்த்—தமர்ந்துணல்
ஓங்குபணம் பழத்தோ டுண்ணுங் கதலியும்
சேங்கொட்டையோடு வெம்மை சேர் பொருளும்—
ஓங்கொலி

வெண்கலத்தில் பத்துநாள் மிட்டுவைத்த நெய்கடலை
எண்ணெயும் பூசவெழில்மெய்க்கு—வண்ணம்
தருமஞ்சள் தண்டினிற் றாங்கிநற் பச்சைக்
குருவியூனத் தண்டைக் கொளுவு—நெருப்பில்
விருப்புடன் வேகவைத்தல் வேண்டா மிவைநஞ்சாம்
ஒருவர்க்கு மாகா துணர்.

பொருள்: மஞ்சளைக் கடுகெண்ணெயில் வறுத்தலும், நீரில் நீந்தித் திரியும் மீனையிட்டுச் சமைத்தபின் மிகுந்த எண்ணெயில் (நெய்யானாலும்) சூட்டைத் தரத் தக்கதான திப்பிலியைப் போட்டுப் பொரித்தலும் பசளைக் கீரையுடன் எள்ளை வறுத்து இடித்த தூளைப் போட்டு சமைத்த இலைக் கறியும், பக்குவம் செய்த நாரை இறைச்சியை வுண்டு மேலே கள் அருந்துதலும். கொல்லைப் பயிராகிய காராமணியுடன் நாரையின் புலாலைச் சமைத்துண்ணலும், மணம் பொருந்திய தாமரை மலரின் விதையைத் தேனுடன் கலந்து உட்கொள்ளலும், வெண்ணெய், மணம் வீசும் தயிர் அல்லது மோருடன் வாழைப் பழத்தைச் சேர்த்து விருப்பமுடன் உண்ணுதலும், உயர்ந்து வளரும் பனையின் பழத்தைச் சேர்த்து வாழைப் பழத்தைச்

சாப்பிடுதலும், சேராங்கொட்டையோடு வெப்பக் குணம் கொண்ட பொருட்களும், மிக்க ஒலி தரும், வெண்கலப் பாத்தி ரத்தில் பத்து நாள் விட்டு வைத்திருந்ததான நெய் வகைகளும் கடலை எண்ணெய் எள்ளெண்ணெய் முதலியவைகளும், உடலின் மேல் பூசினால் நல்ல நிறமும் அழகும் தரவல்ல மஞ்சளின் தண்டினில், நல்ல பச்சைக்குருவியின் மாமிசத்தைக் குத்தித் தாங்கி அந்தத் தண்டையே (உலர்ந்ததாயுள்ளதை) கொளுத்தி அந்நெருப்பினில் விருப்பமுடன் வேக வைத்ததை உண்ணல் ஆகியவை எல்லாம் வேண்டப்படாததாம். ஒருவர்க்கும் உதவாத விடமாகும், என்பதை அறிக.

மணித்தக்காளிக் கீரை வாய்க்கு வயன
குணத்த திராக்கழித்துக் காலை—உணத்தகா
தென்பர், உடலின்நோய், ஏற்படாமற் காக்கவெண்ணில்
நன்மருந்து செய்யும் நபர்.

பொருள் : மணத்தக்காளிக் கீரையை, வாய்க்குமிக்க சுவையுள்ளதாக இரவில் ஆக்கி, உண்டது போக எஞ்சி யதை நல்ல பாத்திரத்திலிட்டு ஜாக்கிரதையாக மூடிவைத்திருந் தாலும் மறு நாட் காலையில் அது உண்ணத்தகாது என்பர்.

XIV. காப்பு

'காப்பு' என்பது யாது? பழவினையினாலும் நிகழ்வினையி னாலும் மக்கட்குப் பிணிகளுண்டாகும். அவற்றுள் பழவினை யான் வருவது, அதன் கழிவின் கண்ணல்லது ஒழியாது. ஏனைய கருமங்களான் வருவனவற்றைக் தடுத்து ஆயிளை நீடிக்கச் செய் தலே காப்பாம்.

பிணி.

இது, நோய், வருத்தம், துன்பம், அச்சம், வினை, உரோகம், சுகவீனம் எனப் பல பெயர்களால் வழங்கும்.

பிணியினிலக்கணம்: உடலுடன் பிணைந்த உயிர் அனுபவிக்குஎ இன்ப உணர்ச்சிக்கு மாறாய உணர்ச்சியே பிணியினிலக்கணமாம்.

பிணி இரு **வகைப்படும்.** பிணி, முக்குற்றங்களின் வேற்றுமை யால், *(1)* உடற்பிணியென்றும், முக்குணங்களின் வேற்றுமை யால் *(2)* மனப் பிணியென்றும் இருவகைப்படும்.

பிணிக்குக் காரணம்: பழ வினையான் வருவ ஒழிய, மற்றய உணவு செயலாதிகளின் ஒவ்வாமையே பிணிக்குக் காரணமாகும். இதனை,

''மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.''

என்கிற தமிழ் மறையாலறிக.

உணவுஞ் செயல்களும் ஒருவன் உடல் நிலைக்கு ஒத்த அளவிற்கு மிகுமாயினும், குறையுமாயினும், தமிழ் மருத்துவமுடையாரால் வளி முதலாக வைத்தெண்ணப்பட்ட மூன்றுவித நோய்களும் அவருக்குத் துன்பஞ் செய்யும்.

'வளிமுதலா எண்ணிய மூன்று' என்றது. வளிப்பகுதி, தீப்பகுதி, ஐயப் பகுதி என்னும் முப்பகுதியின் பாற்படும் பிணிகளையும், அவற்றிற்கு உணவு ஒத்தல் என்பது—சுவை வீரியங்களாலும் அளவாலும் பொருந்துதலையும், செயல் ஒத்தல் என்பது—மனம், மொழி, மெய்களால் செய்யும் தொழில்கள் அவை வருந்துவதற்கு முன்பே யொழித்தலையும்; இவை மூன்றினாலும் பிணிபடாமையும் கூறும்.

மேற் கூறிய பிணிக்குப் பொதுக் காரணத்தை விரித்து உரைக்கின், அஃது அடியிற்காணுமாறாகும்:

''நோயினுற் பத்திகேள் .நோன்மைகூர் மைந்தனே!
நோயாளி யென்பதறு நோயாளி முன்னே
நோய்கள்வினை காதரமு நோய்கள் வரவேது
நோனாமை யால்வெகுளி நோனாத பசியால்
நோனாத நீர்பருகல் நோனாத உணவால்
நோக்கமரு ணமதாக நோக்கியொழி தொழிலால்
நோக்கரென நடமாடி நோக்கி நடமிடலாம்
நோட்டக்கா ரரிநாடி நோட்டமொழி குரலால்
நோவயர் மாதரொடு .நோவ மருவுதலால்
நோன்புவிர தாதிபல நோற்கவரு மெலிவால்
நோஞ்சையென வணுகுணவு நோவ வயிலுதலால்
நோண்டவரி தெனவேரை நோண்டியே ருதலால்
நோனாத வீரமடி.நோனவணி குதலால்
நோய்களுற் பத்திவகு நோய்கள்வினை விதையாய்
நோய்கள்வினை வயலாய்மெய் .நோய்கள்வளர் .பயிராய்
நோயுதவு பலனாகி நோய்கள்வெகு மேலாம்
நோதக வுரைத்தனமிந் நோய்களற மேலே
நோயினிக லாளர் நோன்மையிஃ திளியே.''

(தே.—கரிசல்)

(பதவுரை) :—

நோன்மைகூர் மைந்தனே—மருத்துவ நூலை ஆராய உள்ளத்தில் வன்மை மிகக் கொண்ட மாணாக்கனே!

நோ யின் உற்பத்தி கேள்.—மக்கள் உடலில் நோய் தோன்றும் வரலாற்றைத் திரட்டிப் பொதுவாகச் சொல்லுகிறேன் அதை நீ கேட்டுக் கொள்வாயாக;

நோயாளி என்பது—நோயாளி என்று சொல்லிக்கொள்வதை.

அறு—நீக்கு;
நோயாளி—நோயுற்றவனுக்கு;

நோய்கள் வரவு—அந்நோய்கள் வருதலுக்கு.

ஏது—காரணங்களாவன.

முன்னே நோய்கள்—பழவினைத் துன்பங்களும்.

வினைகாதரமும்—இப்பொழுது செய்கிற உணவு செயல்களின் துன்பங்களுமாம்; (ஆயினும்) அவற்றின் உணவு, செயல்களாகிய காரணத்தையே ஈண்டுச் சொல்லுகிறேன்.) அவை:

நோனாமையால்—(அது நன்ருயில்லே, இது நன்ருயில்லே என்று சொல்லி எதையும் வெறுத்தலாகிய) சகியாமையாலும்,

வெகுளி—எப்பொழுதும் சினம் கொள்வதாலும்,

நோனாத பசியால்—சகிக்க வியலாத மிக்க பசியினாலும்,

நோனுத நீர் பருகல்—(குடிக்க வேண்டிய விதிப்படி காலத்தில் குடியாமல் நினைத்த நினைத்த காலங்களிலெல்லாம்) மிகுதியாக நீர் குடித்தலாலும்.

நோனாத உணவால்—(ஒரு நாளைக்கு இத்தனே பொழுதுதான் உண்ணவேண்டுமென்கிற விதியைக் கடந்தும், அவ்விதிப்படியுண்ணினும் மிகுதியாக) உண்ணும் உணவாலும்,

நோக்கம் அருணம் அதுவாக நோக்கி—எப்பொழுதும் மேற்பார்வையாய்ச் சூரியனையே பார்த்துக்கொண்டே இருப்பதாலும்.

ஒழி தொழிலால்—(உடற்பயிற்சி யாதொன்று மின்றித்)தொழிலற்றுச் சோம்பலாய் இருத்தலினாலும்,

நோக்கர் என—நோக்கர் என்னும் குலத்தினர் நடிப்பது போல,

நடமாடி—நடை முதலியவற்றைக் காட்டி,
நோக்கி—மேல் பார்வையாய்ப் பார்த்து.
நடமிடலால்—நடிப்பதினாலும்,

நோட்டக்காரரின் நாடி.நோட்ட மொழிகுரலால்—பொருள் களின் நோட்டம் பார்ப்பவர்களைப்போல், தாம் பலவற்றின் நோட்டங்கண்டு எப்பொழுதும் சத்தமாய் பேசுதலாலும்,

நோஅயர் மாதரொடு நோவ மருவுதலால்—நோயால் வருந்திக்கொண்டுடிருக்கிற பெண்களுடன், (தான்) துன்பப்படற்கு ஒரு காரணமாய்ப் புணர்தலினாலும்.

நோன்பு விரதாதிபல நோற்க வரும் மெலிவால்— ஒரு பொழுது உண்டு பல நோன்புகள் நோற்பதால்.உண்டாம் உடல் மெலிவாலும்.

நோஞ்சை யென அணுகு உணவு நோவ அயிலுதலால்— சிறு உணவும் வருத்தப்பட்டுக்கொண்டேஉண்ணுதலாலும்,

நோண்ட அரிது எனவேரை நோண்டி அயருதலால்—இம் மரத்தின்வேர் கல்லி எடுத்தற்கு அவ்வளவு கடுமையா? பார்ப்போமென்று அதைக்கல்லி உடல் சோர்வு அடைதலாலும்,

நோனாத ஈரம் மடி நோன அணிகுதலால்—மிகுந்த ஈரத் துணியை எப்பொழுதும் கட்டிக்கொண்டிருப்பதாலும்,

நோய்கள் உற்பத்தி—நோய்கள் உண்டாகும்.

வெகு நோய்கள் விளை விதையாய்—அவை மிக்க நோய்கள் விளைகின்ற விதையாகவும்.

நோய்கள் விளைவயலாய்—அவ் விதைகளிலிருந்து வேறு நோய்கள் உண்டாகக்கூடிய வயலாகவும்,

மெய் நோய்கள் வளர்பயிராய்—-உடல் நோய்கள் வளரக் கூடிய பயிராகவும்,

நோயுதவு பலனாகி—அப் பயிரிலிருந்து வேறு நோய்கள் வளரக்கூடிய பலனாகவும்,

நோய்கள் வெகு மேலாம்—இன்னும் வெகு நோய்களுமுண் டாம்.

நோதக உரைத்தனம்—இவற்றை நோய்க்குத் தக்கவாறாகச் சொன்னோம்,

இனி—இனிமேல்,

இந்நோய்கள் அற—இச் செய்யுளில் சொல்லப்படும் காரணங்களால் உண்டாகக்கூடிய நோய்கள் நீங்க,

நோயின் இகலாளர் புரிநோன்மை—அதற்குப் பகைவரான மருத்துவர்கள் தக்க வழி செய்தல் அவர்களின் வன்னபடாம.

வேறு காரணங்கள்.

''ஓலத்தி னாலதிக பாரத்தி னாலே
ஓவாத வுரையாற்சை யோகத்தி னாலே
ஓச்சலி னாலே ஓட்டலி னாலே
ஓட்டவி லாழிபல ஓட்டுத லாலே
ஓடமே றலினால் விடாமழை யினாலே
ஓதமே வலினால் வினையோதி மத்தான்
ஓதிமத் தான் ஓதி மத்த னாட்டினால்
ஓதியி தாமென ஓதியேதலை
ஓரசை வான்வரி ஓகை யால்வகை
ஓதன மிஞ்சும் புசிப்பத னால்நீர்
ஓடையி லுந்துங் களிப்பத னாலே
ஓணம்பனை ஓதப்பெயர் .ஓடஞ்சா டுறலால்
ஓங்கலி லேறிமெய் ஓங்கலி னாலே
ஓவாக் காதர ஒளிமே லுறுமென
ஓதுமா வைத்திய ஓதுமா வெளூர்
ஓமதுா மாதரர் ஓர்விஃ தாமே.'' (தே. கரிசல்.)

(உரை)

ஓலத்தினால்—எப்பொழுதும் கூச்சலிட்டுப் பேசுதலாலும், அதிக பாரத்தினாலே—அதிக சுமைகளை யெடுப்பதனாலும்,

ஓவாத உரையால்—அளவு கடந்து பேசுவதாலும்,

சையோகத்தினால்—(அளவு கடந்து) பெண்களைக் கூடுவதாலும்,

ஓச்சலினால்—(எப்பொழுதும்) கையை யோங்கி எரிதலினாலும்,

ஓடலினால்—(எப்பொழுதும்) ஓடுவதாலும்,

ஓட்டம்—விரைவினையுடைய,

வில்—வில் வித்தையையும்

ஆழி—சக்கரத்தையுடைய வண்டிகளையும் அது போன்ற பலவற்றையும், ஓட்டுதலாலே—ஓட்டுதலினாலும்,

ஓடம் ஏறலினால்—(அடிக்கடி) ஓடத்தில் ஏறிச்செல்வதாலும், விடாமழையாலே—அடர் மழையில் நனைவதாலும்,

ஓதம் மேவலினால்—எப்பொழுதும் ஈரமாயிருக்கின்ற சதுப்பு நிலத்தில் வசிப்பதாலும் (அல்லது ஈரத்துணியைக் கட்டியிருந்தாலும்),

வினை ஓதிமத்தான்—எப்பொழுதும் பனியிலேயே திரிகிறதனாலும்,

ஓதிமத்தான்—கட்குடித்து வெறிகொண்டு மயங்கிப் பேசுவதனாலும்,

ஓதிமத்தான் நாட்டினுல் பிரமனது வீடாகிய தாமரைக் கிழங்கையே கறி செய்து சாப்பிடுவதனாலும்,

ஓதியிது ஆமென ஓதியே தலை ஓர் அசைவால்—இராகங்களைப் பிறருக்குத்தான் சொல்லித்தரும்போது இதுதான் இதுதான் என்று சொல்லித் தலையை யொரு புறமாய் இயற்கைக்கு மாறாக அசைத்தலினாலும்,

வரி ஓகையால்—மிக்ககளிப்பினாலும்,

ஓதனம் வகை மிஞ்சும் புசிப்பால்—பலவகை உண்டிகளை அளவுக்கு அதிகமாய் புசிப்பதாலும்,

நீர் ஓடையில் உந்தும் களிப்பதனால்—நீர் நிறைந்த ஓடையில் எப்பொழுதும் அமர்ந்து நீராடிய களிப்பாலும்,

ஓணம் பனை ஓதப்பெயர் ஓடம் சாடுறலால் —ஓணம் என்னும் பெயர் வழங்குமாறு பெருமையும் குளிர்ச்சியும் பொருந்திய கடலில் ஓடம் ,பெருங்கூடை முதலியவைகளிலேறிக் கடத்தினாலும்,

ஓங்கலிலேறி மெய் ஓங்கலினால்—மலைமேலேறிக் குதித்து உடம்பு ஓங்காமல் சோர்தலினாலும்,

ஓவாக்காதர ஒளி—ஒளி நீங்காத்துன்பத்தை விளைவிக்கின்ற நோயானது,

மேல் உறும் என—வெளிப்படும் என்று,

ஓதுமாவைத்தியம்—சிறந்த மருத்துவத்தை,

ஓதுமாவேளூர்—கற்றோரால் துதி செய்யப்பட்டு வருகின்ற புள்ளிருக்கும் வேளூரில் எழுந்தருளியிருக்கின்ற,

ஓமதூம ஆதரர்—வேள்வி விரும்பினரான வைத்தீச்வரர்,

ஓர்வு இஃது—ஓர்ந்து உணர்த்தின விதி இஃதாம்.

ஆகையால், இனிக்கவனிக்கற்பாலது, மேற்கண்ட காரணங்களால் நோய்வாய்ப்பட்டு வருந்தி அதைத் தீர்க்கும் வழி தேடுதலினும், சித்த மருத்துவத்தின் சிறந்த நோக்கமாகிய பிணியணுகா விதியைப் பேணுதலே நலமாகும்.

பிணியணுகா விதி.

''திண்ண மிரண்டுள்ளே சிக்க வடக்காமற்
பெண்ணின்பா லொன்றைப் பெருக்காமல்—உண்ணுங்கால்
நீர்சுருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி.

(ப.கு.சி)

இதுவுமது.

''பாலுண்போம் ; எண்ணெய்பெறின் வெந்நீரிற் குளிப்போம்;
பகற்புணரோம் ; பகற்றுயிலோம் ; பாயோதரமு மூத்த
ஏலஞ்சேர் குழலியரோ டிளவெயிலும் விரும்போம் ;
இரண்டடக்கோம் ; ஒன்றைவிடோம் ; இடதுகையிற் படுப்போம்;

மூலஞ்சேர் கறி நுகரோம் ; மூத்ததயிர் உண்போம் ;
முதனாளிற் சமைத்தகறி யமுதெனினு மருந்தோம் ;
ஞாலந்தான் வந்திடினும் பசித்தொழிய வுண்ணோம் ;
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே.'' 1

''உண்பதிரு பொழுதொழிய மூன்றுபொழு துண்ணோம் ;
உறங்குவதி ராவொழியப் பகலுறக்கஞ் செய்யோம்;
பெண்கடமைத் திங்களுக்கோர் காலன்றி மருவோம்;
பெருந்தாக மெடுத்திடினும் பெயர்த்துநீ ரருந்தோம் ;
மண்பரவு கிழங்குகளிற் கருணையன்றிப் புசியோம் ;
வாழையிளம் பிஞ்சொழியக் கனியருந்தல் செய்யோம் ;
நண்புபெற வுண்டபின்பு குறுநடையுங் கொள்வோம் ;
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே.'' 2

''ஆறுதிங்கட் கொருதடவை வமனமருந் தயில்வோம் ;
அடர்நான்கு மதிக்கொருகாற் பேதியுறை நுகர்வோம் ;
தேறுமதி யொன்றரைக்கோர் தரநசியம் பெறுவோம்;
திங்களரைக் கிரண்டுதரஞ் சவளவிருப் புறுவோம் ;
வீறுசதுர் நாட்கொருகால் நெய்முழுக்கைத் தவிரோம்
விழிகளுக்கஞ் சனமூன்று நாட்கொருகா லிடுவோம்;
நாறுகந்தம் புட்பமிவை நடுநிசியின் முகரோம்;
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே.'' 3

''பகத்தொழுக்கு மாதரசங் கரந்துடைப்ப மிவைநதூட்
படநெருங்கோம்; தீபமைந்தர் மரநிழலில் வசியோம்;
சுகப்புணர்ச்சி யசனபச னத்தருணஞ் செய்யோம்;
துஞ்சலுண விருமலஞ்சை யோகமழுக் காடை
வகுப்பெடுக்கிற் சிந்துகச மிவைமாலை விரும்போம்;
வற்சலந்தெய் வம்பிதுர்சற் குருவைவிட மாட்டோம்;
நகச்சலமு முளைச்சலமுந் தெறிக்குமிட மணுகோம்;
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே.'' 4

(ப.கு.சி.)

(பொழிப்புரை) 1. இரவில் பசுவின் பாலேயே உண்போம், (மந்தந்தரும் வேறு பாலெதுவும் உண்ணோம்.) எண்ணெயிட்டுத் தலை முழுகும் போதெல்லாம் வெந்நீரிலேயே குளிப்போம், பகற்பொழுதில் புணர்ச்சியும் துயிலும் கொள்ளமாட்டோம்;

வயதிற்கு மூத்த மாதரையும் உடலிற் படும்படி இளம் வெயிலையும் விரும்போம்; மலசலங்களையடக்கோம்; இடக்கையைக் கீழமைத்தே உறங்குவோம்; மூலநோயை உண்டாக்கும் கறிகளை உண்ணேம்; புளித்த தயிரையே பெருக்கி யுண்போம்; முன்னாள் சமைத்த கறி அமுதுக்கு ஒப்பெனினும் அருந்தோம்; பசித்தாலொழிய உணவருந்தோம்.

2. நாள் ஒன்றுக்கு இரு முறையன்றி மும்முறை உணவு கொள்ளோம்; இராக்காலந்தவறிப் பகற்பொழுது உறங்கோம்; பெண்களைத் திங்கட்கொருமுறையன்றி மற்றக் காலங்களில் சேரோம்; பெருந்தாகங் கொண்டாலும் உணவின் கடையிலன்றி மற்றக் காலங்களில் நீரையருந்தோம், கிழங்கு வகைகளில் கருணைக் கிழங்கையே புசிப்போம்; வாழைக்கச்சலன்றிக் கனியை அருந்தோம்; உண்டபின் சிறிது தூரம் குறு நடை கொள்வோம்.

3. ஆறு திங்கட்கொருமுறை வாந்தி மருந்தையும், நான்கு திங்கட்கொருமுறை பேதி மருந்தையும் கொள்வோம்; ஒன்றரை மாதத்திற்கொருதரம் நசியம் செய்து கொள்வோம்; வாரத்திற்கொருமுறை சவரம் செய்து கொள்வோம்; நான்கு நாட்கொருமுறை எண்ணெயிட்டுத் தலை முழுகுவோம், மூன்று நாட்கொருதரம் கண்களுக்கு மையிடுவோம்; வாசனைப் பொருள்களையும் பூக்களையும் நடு இரவில் முகரோம்.

4. விழுப்படைந்த மாதர்களிடமிருந்து உண்டாகும் மணம், ஆடு, கழுதை, துடைப்பம், இவைகளிலிருந்து எழும் தூசு மேற்படும்படி நெருங்கோம்; இரவில் விளக்கு மனிதர், மரம், இவைகளின் நிழலில் தங்கோம்; உணவு பக்குவமாகும் சமயத்தில் புணர்ச்சி கொள்ளோம்; உறக்கம் உணவு, மல நீர்க்கழிவு, புணர்ச்சி, அழுக்காடை, சீப்பிட்டுச் சீவும்போது சிந்துகின்ற மயிர் ஆகிய இவைகளை மாலைக்காலத்தில் விலக்குவோம்; கன்றுடன் கூடிய பசுவையும்; தெய்வத்தையும், பிதுர்க்களையும், குருவையும் வணங்காதிருக்க மாட்டோம்; நகத்தினின்றும், மயிரினின்றும் தெறிக்கும் நீர் உடம்பில் படும்படி அணுகோம். இத்தகைய நியதிகளைக் கைக்கொண்ட எம்மிடத்தில் யமனுக்கு என்ன வேலை? (இறவாது நெடுநாள் இருப்போமென்பதாம்.)

XV. மருத்துவன்.

''பண்டி தன்பரி காரிநல் வைத்திய னெனப்பேர்
கொண்ட வன்பர னாம்.''

மருத்துவன்—பண்டிதன், பரிகாரி, வைத்தியன், பரனுக்கு ஒப்பானவன் எனப் பல பெயர்களால் வழங்கப்படுவான். அன்றியும், இவனுக்கு ''அகதங்காரன்'' என மற்றொரு பெயருமுண்டு. இதற்குப் பொருள் என்ன? அகதம்—உடற்கு, காரன்—நலத்தைச் செய்யுங்காரியத்தைப் புரிபவன் என்பதாம். இச்சொல் ஆராய்ச்சியிற் கண்டமையின், இங்குச் சேர்க்கப் பட்டது.

அளவை நூலில், முன்னவர் மங்கலங் கூறியவழி, பேர்களும், பிறகு அப்பேர்களுக்கு இன்றியமையாமல் இருத்தற்பாலனவான சிறப்புத் தன்மைகளும், அதன் பின்னர் அச்சிறப்புத் தன்மைகளின் ஆராய்ச்சியும் கூறுகின்றமையின், அம்முறை பற்றியே இங்கும் முன்னர் மருத்துவன் பேர்கள் கூறப்பட்டன.

1. மருத்துவன் சிறப்புத் தன்மை.

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.''

என்னும் தமிழ் மறையின்படி, மருத்துவன், பொதுவாக மொழி நூலிலும், கணித நூலிலும் வல்லவனாய் இருத்தல் வேண்டும். அஃதன்றியும் அளவை நூலிலும், மருத்து நூலிலும் வல்லவனாய் இருத்தல் இவனுக்குச் சிறப்புதன்மையாகும். ஆதலின், இப்பெயர் வழங்குகிறது.

2. **பரிகாரி** : நோய்களின் தன்மைகளை, (1) மெய்க்குறி, (2) நிறம், (3) தொனி, (4) விழி, (5) நா, (6) மலம், (7) சிறுநீர், (8) கைக்குறி ஆகிய எண்வகை ஆராய்ச்சிகளாலும், பிற ஆராய்ச்சிகளான—(1) மணம், (2) வியர்வை, (3) எச்சில், (4) பல், (5) இந்திரியம், (6) வாய், (7) உந்தி, (8) இமை, (9) தலை (10) துடி, ஆகிய இவைகளின் குறிகளாலும், தன்மைகளாலும் தான் பல்லாண்டுகள் பழகின பழக்கத்தாலும், தன்குரவர் கற்பித்த வழிகளாலும், நன்குணர்ந்து நோய்களைப் பரிகரித்தல் இவனுக்கு இன்றி யமையாதாதலின், இப்பெயர் வழங்குகிறது.

3. **வைத்தியன்** : தன் வித்தையின் இயல்பால் மருந்துகள் செய்து விலைப்படுத்தல் இவனுக்குச் சிறப்புத் தன்மையாதலின், இப்பெயர் வழங்குகிறது.

4. **மருத்துவன் :** நோய்க்குத்தக்க மருந்துகளைச் செய்து, தான் கையாண்ட வழக்கப்படி நோயாளிகளுக்குத் தக்க துணை மருந்துடன் கொடுத்து, நோய்களை நீக்குதல் இவனுக்குச் சிறப்புத் தன்மையாதலின், இப்பெயர் வழங்குகிறது.

5. **அரதங்காரன் :** குளிகை கட்டி, அதனால் மருத்துவம் செய்தல் இவனுக்குச் சிறப்புத் தன்மையாதலின் இப்பெயர் வழங்குகிறது.

6. **பரன் :** இது, மருத்துவன், இறைவனுக்கு ஒப்பாய் மூன்று கண்கள் உள்ளவன் என்னும் பொருள்பட நின்ற பெயராகும்.

'மூன்று கண் உள்ளவர்கள் இவர்கள்' எனல்.

''மூன்று கண்ணுளோ ரிருவராம்
அன்னவரியா ரெனில்
ஆன்ற லோகமீன் றளிப்பவன்
ஆகிய வரனும்
தோன்று மக்கடம் துயரினைப்
போக்கிடு வோனாம்
ஏன்ற மாமருத் துவனுமே
எனவியம்புவரே.''

(பொழிப்புரை) உலகத்தில் மூன்று கண்கள் உள்ளவர் யாவரெனின், எல்லாவுலகங்களையுந் தோற்றுவித்துக் காத்தளிப்பவனாகிய இறைவனும், உயிர்களுடைய நோய்களை நீக்க வல்லவனாகிய மருத்துவனும் ஆகிய இவ்விருவரேயாவரென்று பெரியோர் கூறுவர்.

இறைவனுக்கு மூன்று கண்கள் :—திங்கள், ஞாயிறு, தீ என்பன. இவற்றைச் 'சோம சூரியாக்கினி' என்பர்.

மருத்துவனுக்கு மூன்று கண்கள் : 1. மருந்துகளைத் தூய்மை செய்யும் வகை, 2. நோய்களைத் தீர்மானிக்குந் தன்மையும், மருந்துகள் இன்னின்ன இயல்புடையன என்பவற்றை அறியும் நிலையும், 3. மருந்துகளின் பல பேர்களையும் தெரிந்துகொண்டிருக்கும் புலமையுமாம். இதனை,

''மருந்துசுத்தி குணநிகண்டு கண்கள் மூன்றாம்'' என்பதாலறிக.

மருத்துவன் இயல்.

''தெய்வவுபா சனைபல நூல் எல்லை காண்டல்
திரிகரண சுத்திபன்னோய் தீர்த்தல் நாளும்
நைவகன்ற தீரமதி நுட்பம் சான்றோர்
நட்பொழுக்க மேன்மைகுண மன்புள் ளானுய்

மெய் வதை விகலேயணங் குறைப தார்த்த
விதியுடற்கா தாரமட லங்கி மாந்தல்
கைவருமெண் பேதமெலா முணர்ந்துற் ருனுய்க்
காணிலந்த மருந்துவன்கைக் கரணி யுண்ணே.''

(தேரையர் தைல வர்க்கம்)

''குணங்கள் குறிகள் நாடியினுற்
குறித்து மனத்தின் திடமதனல்
பிணங்கி யேறும் பிணிபலவும்
பின்முன் கண்டு தானறிந்து
வணங்கு மருந்தால் மந்திரத்தால்
மணியால் தேவ கடாட்சத்தால்
இணங்கு மெனினீர் மருத்து செய்மின்
என்றே முனிவ ரியம்பினரே.''

மருத்துவனுககுச் சிறப்பு இயல்புகளாவன.

மருத்துவனுக்குக் கடவுள் நம்பிக்கை, பல நூற்களே ஐயம் திரிபு அற ஆராய்ந்த அறிவு, மனம் மொழி மெய்களின் தூய்மை, பல நோய்களேத் தீர்க்கும் வன்மை, நோய்களேக் கண்டு அஞ்சாத நெஞ்சுறுதி, நுண்ணறிவு, பெரியோர்கள் நட்பு அன்ருடம் கடைப்பிடிக்கும் நல்லொழுக்கம், மேன்மைக் குணம், பல உயிர்களிடத்தும் அன்புடைமை இவைகள் வேண்டும். அன்றியும் உடல், நாடு, காலம், நோய் மருந்து முதலியவற்றை அறிதல், நோய்க்குத் தக்க உணவுப்பொருள் களின் விதியுணர்தல், உடலுக்கு வன்மை தரும் பொருள் இன்னவையெனத் தெளிதல், அவரவர் உடல் வன்மையுணர்தல், நோயாளியின் பசித்தீயின் அளவறிதல், உணவு கொடுக்கும் விதியறிதல் ஆகியவற்றையெல்லாம் நன்குணர்ந்தவனுய் இருத் தல் இன்றியமையாததாகும்.

இக்கருத்துக்களே அடியிற்காணும் மேற்கோள்களாலுமுணர்க.

''தெய்வந் தன்னே வழிபடு சிந்தையும்
பொய்யி லாமொழி யுந்நற் புலமையும்
ஐய மற்ற வறிவும் பெருமையும்
வெய்ய கோபம் வெறுப்பு மிலாமையும்.''

''உயிர்கள் மீது கிருபையு முவகையும்
செயிர கற்றிடு சிந்தையும் ஈகையும்
அயர்வி லாமையு மன்பும் நிறைந்துளன்
உயர்வ தாகிய வொப்பில் மருத்துவன்.''

''நாடி யாதியென் குறிகளை நன்குற நோக்கல்
பீட தாகுமுந் நோய்களின் பேதத்தைப் பார்த்தல்
வீடு நோயெனில் தருமருந் தெண்ணியே யியற்றல்
ஈடி லாமருந் தின்விலை யீந்தபின் னீதல்.''

''பொருளி லார்கணேய் தீப்பசி பனிப்பிணைப் போக்கல்
அருளி லாமலே பொருளுடை யோர்கள்பா லீட்டித்
தெருளு நன்மருந் துணதுகில் தீதற வளித்தல்
மருள கற்றிடல் மருத்துவன் கடனென்பர் மன்னே.''

''உத்தம குணங்க ளுள்ளோன்
உயர்பெருங் கீர்த்தி யுள்ளோன்
புத்தியா லாய்ந்து சொல்வோன்
பொருள்களை யாய வல்லோன்
சத்திய வார்த்தை யுள்ளோன்
தருமசிந் தனையே யுள்ளோன்
குத்திர வார்த்தை பேசாக்
குணன்பரி காரி யாமே.''

''மண்ணின்மேற் பெண்ணு ணுக்கும்
மற்றுள வுயிர்கட் கெல்லாம்
கண்ணினி லிமைபோற் காக்கும்
கடனுளான் கருணை யுள்ளான்
நண்ணிய பெண்ணு ணெல்லாம்
நாடிய தந்தை தாயென்
றெண்ணியே மருந்து செய்யில்
இடர்ப்பிணி தீரு மன்றே.''

என அகத்தியனுரும்,

''சீலனு சார ஞகிச் சிறந்தவிற் பன்ன ஞகி
வாலஞா னியுமாய் மண்ணில் மக்கள்பால் வியாதி தன்னைக்
கோலமா யதன்பா லுள்ள குணுகுண தோடங் கண்டு
பால்தரு மன்னை போல்வான் பண்டித ஞவான் தானே.''

''ஆனநோ யினரைக் கண்டால் அவர்கடம் சீடர் போல்
மாநிலத் தவர்கள் சொன்ன மருந்துகள் பாகமாக
மோனமா யிராமற் சற்று முசிவறப் பரிக ரிப்பான்
கானவாங் குழலி ஞளே கனபரி காரி யாமே.''

''நேயமா மசுரர் தேவர் நிறைந்ததோர் பசாசு மற்றும்
மாயவிக் கினங்கட் கெல்லா மலிபலி யர்ச்சித் தேத்தித்
தீயநற் கோடனுக்குச் சிறப்புடன் சாந்தி பண்ணப்
பாயுநீ ருலகு தன்னிற் பண்டித ஞவான் ருனே.''

''தானமந் தணருக் கீந்து தருமமு மிகவே பூண்டு
ஊனமில் சிவத லங்க ளுறுதியிற் பண்ணு வித்துக்
கானகத் தறுகு தன்னைக் கரியகோன் மருகற் கீந்து
மானிலந் தன்னைக் காப்பான் வயித்திய னுவான் றனே.''

என வியாசரும்,

''தந்தை தாய்முதற் றம்மனோர்க் குறுகுநோய் போலக்
சிந்தை கொண்டுநற் றிறத்தொடும் வயித்தியஞ் செய்தல்
முந்து நூலுணர் மூதறி வோரொடு முயங்கி
நந்த லின்றியே நன்மருந் தாகவேந யத்தல்.''

என்றும்,

''உண்டே பண்டிந திடவானு
யுயர்ந்தே யவனும் வல்லவனுய்ப்
பண்டே மறையெ னூற்படிக்குப்
பருத்த மருந்தின் பலன்களையும்
கண்டே காலம் மூன்றினையும்
கருத்திற் காண வல்லானுய்க்
கொண்டே துணையா மருந்தறிந்து
கொடுப்பா னெமனைத் தடுப்பானே.''

என்றுங் கூறியவாற்றுனறிக.

இப்பன்னிரண்டு செய்யுட்களின் பொருள்கள் எளிதில் உணரக் கூடியவைகளாயிருப்பனவர்கலின், பொருள் எழுதாமல் விடுத்தனம்.

வைத்தியன் அறிய வேண்டிய நூல்கள் இவை எனல்.

''சோதிடம் பஞ்ச பட்சி
துலங்கிய சரநூல் மார்க்கம்
கோதறு வகார வித்தை
குருமுனி ஓது பாடல்
தீதிலாக் கக்கி ஷங்கள்
செப்பிய கன்ம காண்டம்
ஈதெலாங் கற்று ணர்ந்தோர்
இவர்களே வைத்ய ராவார்.'' (18-சித்தர் நாடி நூல்.)

(பதவுரை) சோதிடம்—கோள் (கிரகங்கள்) நூல், பஞ்ச பட்சி—எழுத்துப் பொருத்தமறியும் ஐந்து பட்சிகளைப் பற்றிக் கூறும் நூல், துலங்கிய—விளக்கமான, சர நூல் மார்க்கம்—நாசிவழியாகச் சுவாசம் விடுவதினின்று (நடந்த, நடக்கிற, நடக்க விருக்கும்) முக்கால விஷயங்களைப் பற்றியும் கூறும் நூல், கோதறு—குற்றமற்ற, வகாரவித்தை—வேதை நூல்,

குருமுனி ஓது பாடல்—அகத்திய முனிவரால் கூறப்பட்டுள்ள மருததுவப் பாடல்கள், தீதிலாக் கக்கிஷங்கள்—குற்ற மற்ற மந்திர நூல்கள், செப்பியகன்மகாண்டம்—(அகத்திய முனிவரால்) கூறப்பட்ட கன்மகாண்டம் என்னும் நூல், ஈதெலாங் கற்றுணர்ந்தோர்—மேற் கூறப்பட்ட நூற்றெருகுதி முழுவதையும் படித்துணர்ந்த, இவர்களே வைத்தியராவார்—இவர்களே மருத்துவர்களாவார்.

ஏனெனில், 'இன்னநாளில் நோய்கொண்டு பாயிற்படுத்தால் பிழையான்,' எனவும், இன்னநாளில் காய்ச்சலுண்டானல், இத்தனை நாட்களிற்றீரும் அல்லது தீராது,' எனவும், 'இன்ன நோய், இத்தனை நாட்களில் இன்ன நட்சத்திரம் கடந்தால், நன்மை ஏற்படும், எனவும், ஞாயிறு நிற்கும் இத்தனை இத்தனை யாவது நாட்களில் நோயுண்டானல் தீரும், அல்லது தீராது எனவும், மருந்துகளில் ''உச்சம் நீசம் இலாது,'' எனவும், கோள்களில் ''சுங்கனேடு சத்த மஞ்சிவாடுபொன் போல்'' எனவும், மருத்து நூல்களில் புகன்றிருப்பவைகளை உணர்ந்து கொள்ளச் சோதிடமும்; வாழ்நாளின் அளவையும், சரநாடியையும், மருந்து நூல் கூறுகின்றமையால, அவற்றைத் தெரிந்து கொள்ளச் சர நூலும்; 'இன்ன கன்மத்தால், இந் நோய் வந்தது, இதை இத்தொழிலால் நீக்கவேண்டும்,' என உணர்தற்குக் கர்ம காண்டமும் அல்லது கர்ம சூத்திரமும் கற்றிருத்தல் வேண்டும்.

இன்ன நாளிற் பாயிற் படுத்தால் பிழையான் என்பதை,

''ஆதிரை பரணி கார்த்திகை
  ஆயில்யமுப் பூரங் கோட்டை
தீதுறு விசாகஞ் சுவாதி
  சித்திரை மகமீ ராறும்
பாயிடைப் படுத்தார் தேறூர்.''

என்பதாலும், சுரநாளை,

''அசுபதி யைந்தி ரண்டோ
  டையெட்டு நாளிற் றீரும்;
பசுபதி பரணி பன்னேழ்
  பத்திரண் டதனிற் றீரும்;
விசுபதி கார்த்தி கைக்கு
  மிளிர்பன்னே ழிருப தாகும்;
கெசபதி ரோக ணிக்குக்
  கிழமையே ழெட்டா மென்னே.''

என்பதாலும்,

''மீறிய மான்ற லைக்கு மிடியெட்டுப பத்திற் றீரும்;
தேறுமா திரையைந் தாநாள் தீராதால் மரண மென்க.''

என்பதாலும்,

இன்ன நோய் இன்ன நாள் கடந்தால் நன்மை என்பதை,

''மாறு வாத சந்நியு மயக்கி யேவ ருகுமால்
மாறிடூஉம் நாட்கள் பத்தில் சதயந் தன்னில் வாழலாம்.''

என்பதாலும்,

ஞாயிறு நிற்கும் நாள்கள் கணக்கை

''அடியொன்று தலைமூன் றதுவுஞ் சாவாம்;
அடுத்த வரை யொருநான்கி லதுவுஞ் சாவாம்;
படிபுகழு முடலின்வரை யெட்டில் நிற்கில்
பையவே நோய்தீரும்; பயமோ வில்லை;
கடிகமலக் கைகால்தம் வரையில் நின்றால்
கனகம்போ லாமுடலங் கண்டு கொள்வாய்;
அடிமுதலா யிரவிநிற்கு நாளி னைத்தொட்
டபிசித்தோ டிருபத்தெட் டாய்ந்து கொள்ளே.''

என்பதாலும்,

உச்சம் நீசம் என்பவற்றை,

''உச்ச நீசமிலாமல் நிறுத்ததில்''

என்னும் கண்ணியாலும்,

''உச்ச மொன்றும் காலொன்று கேந்திரம்
அச்ச முக்கா லதிபதி யோர்பலம்
மெச்ச நட்புக் கரைப்பல மிக்ககால்
துச்ச நீசர் பலனெனச் சொல்லுமே.''

என்பதாலும்,

'சுங்கனோடு சத்தமஞ்சி வாடுபொன் போல்' என்பதை,

''உத்தமஞ்சி வாடுசுமி நீவென வேமனர்வடுகில் உரைத்தல்
[போல
அத்தமஞ்சி வாடுமிரு நாடியினு மீசுரம் போல் அமரர் தம்மில்
கத்த மஞ்சி வாடுவேல் விசையையிந்நா லைக்காக்க சுங்க னோடு
சத்தமஞ்சி வாடுபொன்போல் வயித்தியர்க்குக் கரிசலெனல்
(சகசந் தானே.''

(தே. கரிசல்.)

என்பதாலும்,

சரநூல் உணரவேண்டும் என்பதை,

''பாய்ந்து முனைந்தோடிற் பாரா யுளுநூரும்
பாய்ந்து பினுலோடில் பார்வய தெண்பதாம்
பாய்ந்திடும் வாயுப் பகுத்தறிந் தவ்வகை
பாய்ந்திடு யோகிக்குப் பாய்ச்சலு மாமே.''

''வெள்ளிவெண் டிங்கள் விளங்கும் புதனிடம்
ஒள்ளிய மந்த னிரவிசெவ் வாய்வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறையிடம்
தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே.''

''செவ்வாய் வியாழஞ் சனிஞாயி றேயெனும்
இவ்வா றறிகின்ற யோகி யிறைவனே
ஒவ்வாத வாயு வலத்துப் புரியவிட்
டவ்வா றறிவார்க்கவ் வானந்த மாகுமே.''

(திருமந்திரம்.)

என்னும் விதியாலும்,

இயற்கை.

''தேரவே சந்திரனும் வாத நாடி
திறமான சூரியனும் பித்த நாடி
மீறவே யக்கினியு மைய நாடி
விளங்கவே வியாழமதி லங்கி மீறும்
கூறவே மந்தன்சேய் இரவி மூன்றும்
குணமான சூரியனுங் குமுறி யோடும்
ஏறவே திங்கள்புதன் வெள்ளி தம்மில்
இன்பமுள சந்திரனு மோடுங் காணே.''

வேற்றுமை.

''காணவே யிரவிதனில் வாத மோடில்
கனமான சளியிரும லிரைப்புண் டாகும்;
நாணவே செவ்வாயில் வாத மோடில்
நன்மையுள சுரமதுதா னண்ணுஞ் சொன்னேம்.
தோணவே மந்தனிலே வாத மோடில்
துணிந்ததொரு சீதளமுஞ் சந்நி யெய்தும்
வேணவே வியாழத்தில் வாத மோடில்
விலாவோடு தேகமெலாம் வலியுண்டாமே.''

,, உண்டான திங்களிலே பித்த மீறில்
உத்தமனே ! சலதோட மூடனே காணும்;
பண்டான புந்தியிலே பித்த மோடில்
பாரமுட னீரேற்றந் தலைக்குத் துண்டாம்;
அண்டான வெள்ளியிலே பித்த மோடில்
அதனாலே கண்ணையும் காதினையாம்;
தண்டான குருவினிலே பித்த மோடில்
தண்மையுறுந் தாபசுரந் தலைநோக் காடே.''

என்பதாலும்,

தெரிந்து கொள்ளுவதோடல்லாமல், மருத்துவனை அழைக்க வருபவன் தன்மைகளையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை,

''கூர்பாரு தூதலட் சணமும் பாரு
கோள்பாரு நாள்பாரு குணமும் பாரு
நேர்பாரு தேகபே தங்கள் பாரு
நிலைபாரு கிரகவுச்ச நீசம் பாரு
பேர்பாரு கையைநீ பிறகு பாரு
பெற்றதிலே கிரகத்தின் றன்மை பாரு
வேர்பாரு தழைபாரு மிஞ்சி னக்கால்
மெல்லமெல்லப் பற்பசெந் தூரம் பாரே.'' (அ.சி.கோ.)

என்னுமிச் செய்யுளில் ''தூதலட்சணமும் பாரு'' என்றதாலறிக.

மருத்துவன் ஔவைக்கு ஒப்பானவன் எனல்.

''ஔவைக்கு நேராகி ஔவைக்கு நேராய்
ஔவைப்ப ருவமெய்தி ஔவைப்பி னடி
ஔவிய மோவுதல் ஆயுளர்க் கியல்பே.''

(தேரையர் கரிசல்.)

(பதவுரை) ஔவைக்கு நேராகி—(கடவுள் வழிபாட்டிலும் பல நூல்களை நன்றாய் ஆராய்ந்தறிவதிலும்) ஔவைக்கு ஒப்பாகி, ஔவைக்கு நேராய்—(தன் சொந்தப் பிள்ளைக்கு நோய் வந்த விடத்து நற்றாயானவள் அந்நோயைத் தீர்க்க எவ்வளவு கவலை, எவ்வளவு அன்பு உடையவளாயிருப்பாளோ, அவ்விதமே நோயாளியிடத்தில் அன்பு, கவலை, பட்சம் செலுத்துதலில்) தாயனையவராய், ஔவைப் பருவம் எய்தி—(மிக்க மூப்பைப் பெற்ற கிழவன் இவ்வுலக வாழ்க்கையில் பழக்கம் பெற்றிருத்தல் போல, நோயிலிலக்கணம்; மருந்தருத்தல் முதலியவைகளில்) விருத்தராய், (அதாவது முழு அனுபவசித்தராய்), ஔவைப் பினடி—(ஆழ்ந்த கருத்து, புத்தி நுட்பம் முதலியவைகளை யுடையவராயிருத்தலில்) ஔவையைப் பின் பற்றி, ஔவியம் ஓவுதல்—(பிறர் ஆக்கம் கண்டு) பொறாமை கொள்ளுதலை விட்டிருத்தல், ஆயுளர்க்கு இயல்பு—உத்தம மருத்துவர்களுக் குரிய இலக்கணமாகும். ஏ. அசை.

மருத்துவன் வயது முதியவனாயிருத்தல் வேண்டும்.

''முதுமைபெறு வன்மையும் நாடியறி தன்மையும்
மொழிதேக முணர்வன்மையும்
மோசமென வருமசாத்திய சாத்திய வகைகளறி
முப்பகுதி வல்லாண்மையும்
புதுமைபெறு துணிவுமதி மருளாமை யதிகாரி
போலமுறை புரிதலிவைகள்
போர்நிலைமை பழகிவரு சுத்தவீ ரத்துவம்
பொதுளவே யிவையுலகறி.

விதுமையென வுண்மையாய் மகிமைமுறை தெரியாயுள்
வேதியரி னிலைமையிஃதே
வேறான சோதிடக் கணிதநெறி யிளமையே
வென்றிகொளு மெவ்வாறெனில்
பதுமைநிக ரானவறி வுணர்வினா லெண்மையறி
வருநினைவு மிக்குயரவே
பண்ணுவது கணிதமா தலின்முதுமை யிடையூறு
பண்ணுமறி வினைமேலுமே.''

என்றது மாபுராணம்.

(பொழிப்புரை) முதிர்ந்த பல்லாண்டுகளிற் பெறும் அறிவின் வன்மையும், நாடி நடைகளைப் பல்லாண்டுகளாய்ப் பல நோய்களிற்பார்த்துப் பார்த்தறிந்த பழக்கமும், பல உடல்களின் வேற்றுமைகளைக் கண்டறியும் உணர்ச்சியும், கண்டோர் யாவரும், 'இந்நோய் மோசஞ் செய்தற்குரியது' எனச் சொல்லுமாறு காணப்படும் தீராக்குறிகளையும், அன்றி, எளிதில் தீருங் குறிகளையும் அறிவிக்கின்ற வளி, தீ, ஐயங்களின் தன்மைகளை ஆய்ந்தறியும் வல்லாண்மையும், புதுமையாய் அப்போதைக்கப் போது உண்டாகும் நோய்களைக் காணினும். அவற்றைத்தீர்த்து விடலாமென்ற துணிவும், நோய்களைக் கண்டு அறிவு மயங்காமையும், தலைவன் போல அவற்றிற்குத் தக்க மருந்துகளைச் செய்யும் வன்மையும் ஆகிய இவை, மிக உயர்ந்த மருத்துவ முறைகளை நன்குணர்ந்த, வயதில் மூத்த மருத்துவர்களின் பண்புகளாம். இத் தன்மை, போர்த் தொழிலிற் பழகி வருகின்ற சுத்த வீரத்தைப்போன்றதாகும்.

இம்மருத்துவத்திற்கு வேறான சோதிடக் கணிதத்திற்கோ இளமையே வேண்டற்பாலதாகும். ஏனெனில், மக்களின் முக்காலப் போக்குகளையும் நுணுகி அறிதற்குக் கணிதமே ஊன்றுகோல். அக் கணிதத்தின் கூறுகளைப் பிழையின்றி வகுத்தற்கு, மறதியும் சலனமுமற்றஇளமையே தகுதியுடையதாகும். இதனுல், மருத்துவத்திற்கு முதுமையும் சோதிடத்திற்கு இளமையும் பயனளிக்கத்தக்கவை என அறிந்தோம்.

''எண்ணென்று சொல்வதனுக் கிளமை நன்றே ;
இல்லையேல் வேறுபா டெய்து மப்பா !
கண்ணென்ற வயித்தியத்துக் கிளமை யாகா ;
கடுமைதரும் பொறைமையடுங் குணமி ராது ;
நண்ணென்ற வுறுதியிரா துரமி ராது ;
நன்மையிரா தவிழ்தவகை நாடொட் டாது ;
துண்ணென்ற விரக்கமிரா திகலி ராது ;
சூட்சமிரா தாகையினுற் சொல்லொ ணுதே.''

என்ருர் போகர் தமது மூவாயிரத்தினூடே.

(பொழிப்புரை) எண் என்று சொல்லப்பட்ட கணிதத்திற்கு (சோதிடத்திற்கு) இளம்பருவமே நன்மையைக் கொடுப்பதாம். அதற்கு அவ்விளம் பருவ மில்லாவிட்டால் அவர்களாற் சொல்லப் படும் சோதிடம் ஒன்றுக்கொன்று மாறுபாடுடையதாய் வேறு பாட்டை யடையும். கண்ணும் அதன் ஒளியும் போன்று பிரிக்க முடியாத உயிருக்கு முடலுக்கும் நட்பையுண்டாக்கி நிலைபெறச் செய்தற்குறிய மருத்துவத்திற்கோ, அவ்விளமை நன்மையைத் தாராது. இளமை, கடுமையை விளைவிக்கும் ; பொறுமையைக் கெடுக்கும் ; அன்றியும், இளமையில் தண்ணிய குணமிராது : நெஞ்சம் அசைவின்றி நிலைத்தலாகிய வன்மையு ண்டாகாது ; மருந்துகளின் நன்மை தீமைகளின் ஏற்றத் தாழ்வுகளை நோக்கி, 'நோய்க்குத் தக்கது இது : தகாது இது,' என எண்ணிப் பார்க்கும் பொறுமை யுண்டாகாது ; பிணியாளர் மேல் இரக்கமிராது ; பயமிராது, மருந்துநுட்பங்களை அறியும்நுட்பஞானம் ஏற்படாது. ஆகையால், இளம்பருவம் அத்தொழிலுக்கு உரியதென்று சொல்லுதற்கில்லை.

மருத்துவம் தொடங்கும் கால அளவை.

''வரித்திடு மருத்து வர்க்கே
வருடமைம் பதிற்றி ரட்டி
தெரித்திடு மஃதைங் கூற்றிற்
செப்பைம்பா னறுபான் முன்னர்
பிரித்திடு மெழுபா னெண்பான்
பின்னர்மேல் முப்பா ணுற்பான்
முரித்திடு மிறுதி மேலு
முன்னரப் பாலுங் கீழே.''

(பொழிப்புரை) மருத்துவர்களுக்கு, ஆண்டு நூருகக் கொண்டு, அத்தொகையை ஐந்து பிரிவாகப் பிரித்து, அவற்றில் ஐம்பதும் அறுபதும் உத்தமமும், எழுபதும் எண்பதும் மத்திமமும், முப் பதும் நாற்பதும் அதமமும், தொண்ணூறும் நூறும் அதமா தமமும், பத்தும் இருபதும் கூடாதாகும் என்று கூறுவர்.

"பண்டிதனுக் காயுள்சத மாக வைத்துப்
பாலாக்கி யதைபிருபான் படித்திக் கொண்டு
தண்டவைம்பா னறுபானுத் தமமாம் ; முன்னர்ச்
சாரெழுபா னெண்பான்மத் திமமாம் ; பின்னர்க்
கொண்டமுப்பா னுற்பான்மே லதம மாகும் ;
கூறுதொண்ணூ றுடனூறு மேல தேயாம்.
விண்டபத்து மிருபஃது மேல தேயாம்
விலக்கெனினு மமையுமிது வேத மேற்றே."

(அ. சூத்திரம் 21,000)

(பொழிப்புரை) மருத்துவனுக்கு ஆண்டு நூறாய் வைத்து, அதை இரண்டிரண்டு பத்தாய்ப் பிரித்துக்கொண்டு, அவற்றில் ஐம்பதும் அறுபதும் உத்தமும், எழுபதும் எண்பதும் மத்திமமும் முப்பதும் நாற்பதும் அதமமும், தொண்ணூறும் நூறும் அத மாதமமும், பத்தும் இருபதும் கூடாதாகும்.

மருத்துவன் உடை.

"காங்கு சிவப்புப் பலபுள்ளி
கமழும் பட்டு மாவுரிகள்
நீங்க வேண்டுந் துகிலுடுக்க
நேரே யாகா மருத்துவர்க்கே
ஓங்கும் வெள்ளைத் துகிலுடுத்தி
யுண்மை நினைந்து மருந்துசெயின்
பாங்கு பெறவே பிணிதீரும்
பாரிற் யாரும் பண்டிதரே."

(பொழிப்புரை) நீலம், சிவப்பு, பலபுள்ளிகள் உள்ளது. பட்டு, விலங்கின் தோல்கள் ஆகிய இவைகள் மருத்துவன் உடுக்கத் தகாத உடைகளாம். ஆகையால், வெள்ளை யுடைகளைத் தரித்து உண்மை எண்ணி, மருந்து கொடுத்தால், பிணிகளெல்லாம் தீரும்.

மருத்துவன் பூச்சு.

"சந்தனப் புனுகுப் பிச்சு
சடத்தினிற் பூசிப்பின்னர்
அந்தணர் கிரியை போல
வாசிரி யரடிவ ணங்கிச்
சிந்தையிற் குருவை வாழ்த்திச்
சிவபதம் நெஞ்சி லுன்னி
வந்ததோர் பிணிகள் தீர்க்கும்
வயித்தியன் முறையென் றோரே."

(பொழிப்புரை) சந்தனம், புனுகு, இவைகளை உடம்பிற்பூசி, பிறகு அழகிய தன்மையையுடைய பெரியார் செயலைப்போல ஆசிரியன் திருவடிகளை வணங்கி வாழ்த்தி, சிவபெருமானுடைய

திருவடிகளைச் சிந்தித்து, தன்னை வந்தணுகிய நோயாளிக்கு வந்துள்ள பிணிகளைத் தீர்க்க முயல்வது வயித்தியன் கடமையாகும் என்று கூறினர் பெரியார்.

மருத்துவன் கைபார்த்தபின் ஒழுக்கம்.

கன்மவுரு நோயதை முக் கண்கொடறி வுற்றறிந்தார்
தன்மநீ ராடற் சதத்துடனெட்—டின்மையெனி
லங்கை பதந் தூய்மையின்றே லங்குலிபூ வெற்றிலின்
றேற்
கங்கை பதம்புனிறு காண்.''

(தேரையர் தைலவர்க்கம்)

(பொழிப்புரை) நோய், வினையின் வடிவமாகையால், அந்த நோயை மூன்றுவிரல்களைக் கொண்டு பிணியாளனுடைய நாடியைத் தொட்டறியும் மருத்துவன் மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கமாவது, நூற்றெட்டு முறை நீராடல், அல்லது கைகால்களைச் சுத்திசெய்தல், அல்லது அவ்விரல்களைப் பூமியில் தட்டுதல் ஆகிய செய்யலாம். இப்படிச் செய்யாவிடின், எல்லாத் தீவினைகளையும் ஒழிக்கும் கங்கையை யொத்த மருத்துவனுக்கும், பக்குவம் செய்யப்பட்டிருக்கும் மருந்துகட்கும் தீமை உண்டாகும்.

கண்ணைப்போல நாடிகளை அறிந்து கொள்ளுந் தன்மையுடைய தாகையால், விரலைக் கண்ணென்றார். மேற்கூறிய கருத்துக்களை அடியிற் காட்டிய மேற்கோளாலும் அறிக.

''கருமி யேபிணி யாளனு மவன்கரம் பற்றின்
வருவ தாந்தொடக் கென்றனர் ; மாற்றிடும் வகைதான்
பெருகு நீரினில் மும்முறை பெட்புற மூழ்கல்
தருகை தாள்கழு வல்தரை விரல்களைத் தட்டல்.''

நோயாளியின் வினை நீங்க மருத்துவன் செய்யவேண்டிய வினையொழி முறைகள்.

''மந்திரநீர் தெளித்திட வத்திரங் களைதல்
அந்தமி லொன்றுக்கி நோய்குளி யாடல்
சுந்தரம்பெரு மஞ்சணீர் தெளித்திடல் தோமில்
இந்தநால்வகை யியற்றுதல் கடனென விளம்பாய்.''
''கருமநோ யிவையெலாம் கண்ணுத லளித்தருள்
கருமகாண் டக்கடன் கண்டவ் வவற்றை
ஒழித்துயர் மருந்துணின் உம்பரைப் போலச்
செழித்துநாற் பொருளுஞ் சேரவாழ் குவரே.''

என்னும் முறைப்படி மருத்துவன் நோயாளியின் வினையை மாற்றின பின் அவனுக்கு மந்திர நீர் தெளித்தல் அவன் துணியை யகற்றி வேறொரு துணியீந்து, தனியாக வோரிடமியற்றி, அந்

நோயாளியை அங்கு இருக்கச் செய்து நீராடவைத்தல், மஞ்சள் நீர் தெளித்தல் ஆகிய இந்நான்குவகைப் பரிகாரங்கள் செய்து வைத்தல் மருத்துவன் கடமையெனச் சொல்வாய்.

மறையோர்—மருத்துவரியல்பு.

ஒப்பு —சமம்

''மறையோ ரியல்பும் மருத்துவ ரியல்பும்
அறையக் கேண்மதி பொறையுறு பொறையோய்
ஆரிய ராமிவர் ஆரிய ராமவர் ;
வேதியர் ஆயுள் வேதிய ராவர் ;
புரோகிதஞ் செய்வார் புரோகிதஞ் சொல்வார் ;
அறுதொழி லோர்பிணி யறுதொழி லோர்பிறர்
அத்த நோக்கினர் அத்த நோக்கினர்
பத்திய முரைப்பார் பத்திய முரைப்பார் ;
ஆண முரைப்பார் ஆண முரைப்பார் ;
குணமுரைப் பார்பொருட் குணமுரைப் பார்நல்
குடிநீ ருரைப்பார் குடிநீ ருரைப்பார் ;
பதார்த்த முரைப்பார் பதார்த்த முரைப்பார்;
வாரமுரைப் பார்நோய் வார முரைப்பார் ;
மூல மோதுவார் மூல மோதுவார் ;
நாடிகை பார்ப்பார் நாடிகை பார்ப்பார் ;
பின்குடு மியர்பேர் பெறுகுடு மியர்தீ
வேள்வியோர்அமுத வேள்வியோர் ; நூலின்
மாத்திரை கட்டுவார் மாத்திரை கட்டுவார்;
பண்டித ராவார் பண்டித ராவார் ;
அரணா மிவர்செயல் முரணா; இன்னும்
அகிலத் தவர்க ளறிய அறைகுதும் ;

வேற்றுமை—பேதம்.

மடியுடுப் பார்வன் மடிகெடுப் பார்மனு
ஆல மூட்டுவார் ஆல மோட்டுவார் ;
வாதஞ் சொல்வார் வாதம் வெல்வார்;
பித்த மியற்றுவார் பித்த மகற்றுவார் ;
ஐய மெடுப்பார் ஐயந் தடுப்பார் ;
அழலை வளர்ப்பார் அழலை யவிப்பார் ;
கழலைத் தரிப்பார் கழலைத் திரிப்பார் ;
மலத்தைத் தெரிப்பார் மலத்தைப் பிரிப்பார் ;
மாலைவீக் குவர்கா மாலை போக்குவார் ;
சூதக முரைப்பார் சூதகங் கரைப்பார் ;
சுரத்தைக் கணிப்பார் சுரத்தைத் தணிப்பார் ;
தோஷமிறுப் பரேழ் தோஷ மறுப்பார் ;
குட்டத்தில் வீழ்வார் குட்டத்தைப் போழ்வார் ;

நீரிழி வாற்றுவார் நீரிழிவு மாற்றுவார் ;
பணிவிடஞ் சேர்வார் பணிவிட மீர்வார் ;
பெரும்பாடு நாட்டுவார் பெரும்பாடு வீட்டுவார் ;
சாதலைக் குறிப்பார் சாதலை மறிப்பார் ;
கரும முடிப்பார் கரும மடிப்பார் ;
இவ்விரு வரினுஞ் செவ்விய ரெவரெனின்

ஈகை—தானம்.

அம்புய னியற்றிய வங்க மளித்தலால்,
கம்முடை யண்ணல் காப்புக் குதவலால்,
புராந்தக னழித்திடு புரந்தனைப் புரத்தலால்,
மூவுல கத்துறை தேவரு முனிவரும்,
முப்பிணி நின்று தப்புறச் செய்தலால்,
மன்னவர் தமக்கு மன்னுயி ரோம்பலால்,
வைசியர் தமக்கும் வான்பொரு ளளித்தலால்,
வேளாளர் தமக்கும் வேளாண்மை புரிதலால்,
கணிகைய ரிடத்து மணிகவர்ந் திடலால்,
அரசரைப் போல வரிசைபெற் றிடலால்,
தவத்துறை வோர்க்கும் தாந்துணை யாதலால்,
மலர்போற் சிரமேற் பலருங் கொள்வான்,
அதிக வயித்திய மதிவல் லோரே.''

(உரை) பொறை உறு பொறையோய்-மலைபோன்ற பொறுமை வாய்க்கப் பெற்ற மாணவனே மறையோர் இயல்பும்-அந்தணர் ஒழுக்கத்தையும், மருத்துவர் இயல்பும்-மருத்துவர்களின் ஒழுக்கத்தையும், அறைய-சொல்ல, கேள்-நீ கேட்பாயாக; இவர் ஆரியராம்-இந்த அந்தணர் ஆரிய நாட்டினர் ஆவார்; அவர் ஆரியராம்-அவர் மருத்துவாசிரியராவர் ; வேதியர் (இவர்)—இவர் வேதியரென்னும் பேருள்ளவராவர் (அன்றி) வேதம் ஓதுபவராவர்; ஆயுள் (வேதியராவர்) (அவர்) ஆயுள் வேதியர் என்னும் பேருள்ளவராவர் (அன்றி ஆயுள் வேதம் ஓதுபவர்ஆவர்;) புரோகிதஞ் சொல்வார்-இவர்) நற்காரிய தீக் காரியங்களைச் சொல்லுபவராவார்; புரோகிதஞ் சொல்வார்-(அவர்) உடலிற்கு நன்மை பயக்கத்தக்க விதிகளையெல்லாஞ் சொல்வார்; அறு தொழிலோர்-(இவர் ஓதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல், வேட்டல், வேட்பித்தல் என்னும் ஆறு தொழில்களை யுடையவராவர்;

பிணியறு தொழிலோர்—(அவர்) நோய்களை அறுத்து ஒழிக்குந்தொழில் களையுடையவர்; பிறர் அத்தம் நோக்கினர்—பார்ப்பனர் மற்றவருடைய பொருளையே எதிர் பார்த்திருப்பவர்; அத்தம் நோக்கினர்—(மருத்துவர் வளி, தீ, ஐயம் என்னும் முப்பிணிகளை நோயாளிகளின்) நாடி பார்த்தே கண்டு பிடிப்பவராவர் ஆவார்; பத்தியம் உரைப்பார்—(அந்தணர்) கவிகளைச் சொல்பவராவர்; பத்தியம் உரைப்பார்—(வைத்தியர்) நோய்களுக்குத்தக்க பத்தியங்களைக் கூறுபவர்; ஆண முரைப்பார்— இவர்

தம்மையுயர்த்திப் பெருமிதமாகப் பேசுவர்; ஆணமுரைப்பார்-(அவர்) நோயாளிகளிடம் அன்புடன் பேசுவர் குணமுரைப்பார்—(இவர்) இராசதம் முதலிய முக்குணங்களை உரைப்பர்; பொருட் குணமுரைப்பார்— (அவர்) உலகப் பொருள்களின் சுவை முதலிய பண்புகளைக் கூறுவர்; நற்குடி நீர் உரைப்பார்— பிராமணர் குடிகளுக்குரிய நன்னடத்தைகளைக் கூறுவர் ; குடி நீருரைப் பார் - (பண்டிதர் நோய்களுக்குத் தக்க) குடிநீர்களைச் சொல்லுவர்; பத அர்த்த முரைப் பார்— (இவர்) சொற்களுக்குப் பொருள் கூறுவர்; பதார்த்த முரைப்பார் —(அவர் பத்தியத்திற்காகும்) உலகப் பொருள்களை யெடுத்துச் சொல்வர்; வாரம் உரைப்பார்—(பார்ப்பனர்) பஞ்சாங்கஞ் சொல்லுவர்; நோய்வார முறைப்பார்—(மருத்துவர்) நோய் தோன்றிய நாளைக் கொண்டு இத்தனை நாட்களில் விலகும் நாட்பட விலகும், கெடுதியை விளைவிக்கும் என்னுமிவைகளை எடுத்துச் சொல்லுவர்; மூலம் ஓதுவார்—(இவர்) மூலமந்திரங் களைச் சொல்லுவர்; மூல மோதுவார்—(அவர்) மூல நோய்களை நீக்குவர்; நாடிகை பார்ப்பார்—(இவர்) நாளையும் திசையையும் பார்ப்பர் (நாள்—திகை—நாடிகை); நாடிகை பார்ப்பார்—(அவர் வளி முதல் குற்றங்களை யறிவதற்குக்) கைந்நாடியைப் பார்ப்பர்; பின் குடுமியர்— (பார்ப்பனர்) பின் குடுமியையுடையவ ராவர்; பேர் பெறு குடுமியர்— (வைத்தியர்) பேர் பெற்ற மருத்துவ குடும்பத்தையுடையவர்; தீவேள்வியோர்— (இவர்) காருக பக்தியம், ஆகவனியம், தட்சிணாக்கினியம் என்னும் முத் தீக்களைக் கொண்டு எரியோம்புபவர்; அமுத வேள்வியோர்—(அவர்) மருந்து செய்யும் முத்தியெரியோம்புவர், நூலின் மாத் திரை கட்டுவார்—(இவர்) தங்களைப்பாராதபடி திரைகட்டி மறைப்பர்; மாத்திரை கட்டுவார்—(வைத்தியர்) குளிகைகளைக் கட்டுவர் பண்டிதராவார்— (அந்தணர்) பாண்டித்தியமுடையவ ராவர்; பண்டிதராவார்— (மருத்துவர்) மருத்துவப் புலமையுடை யவராவார்; அரணாமிவர் செயல் முரணப்—பல உயிர்களை யும் காத்தருள்பவரான இவ்விருவர்களுடைய செய்கைகளும் மாறு பட்டன அல்ல (ஒப்பானவேயாகும்); ஆகையால் இது வரை, கூறப்பட்டவை ஒப்பு என்றுணர்க;) இன்னும்—வேற்றுமை முத லியவற்றையும், அகிலத்தவர்கள் அறிய அறைகுதும்—உலகி லுள்ளவர்கள் நன்றாயறியுமாறு சொல்லுவோம்.

வேற்றுமை.

மடி உடுப்பார்—(அந்தணர்) மடித்துணியைக் கட்டிக் கொள் வர்; வன்மடிகெடுப்பார்—(மருத்துவர்) மிக்க சோம்பலைத் தீர்ப்பர்; மனு ஆலம் ஊட்டுவார்—(பிராமணர்) மனுவால் செய்யப்பட்ட நூற்பொருளாகிய நஞ்சனைய கருத்துக்களைக் கற் பிப்பார்கள்; ஆலம் ஓட்டுவார்—(வைத்தியர்) நஞ்சினைப் போக்குவர்; வாதம் சொல்வார்— (பார்ப்பார்) வாதித்து வீணாகக் காலம் பெருக்குவர்; வாதம் வெல்வார்— (மருத்துவர்) வாத நோய்களைப் போக்குவார்; பித்தம் இயற்றுவார்— (இவர்) பலபடியாக நூற்களைப் புகன்று பிறரை மயக்க முறுத்துவர்;

பித்தம் அகற்றுவார்—(அவர்) பித்த நோய்களை நீக்குவர்; ஐயம் எடுப்பார்—(இவர்) பிச்சையெடுப்பார்; ஐயம் தடுப்பார்—(அவர்) ஐய நோயை விலக்குவர்; அழலைவளப்பார்—(அந்தணர் எரியோம்புவர் அழலையளிப்பார்—(மருத்துவர்) உடற் கொதிப்பைத் தணிப்பர்—; கழலைத் தரிப்பார்—(இவர்) மார்பில் அடிக்கடி கழற்றுதற்குரிய பூணூலைத் தரித்துக் கொள்வர்; கழலைத் திரிப்பார்—(அவர்) கட்டிகளைக் கரைப்பர்; மலத்தைத் தெரிப்பார்—(இவர் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று குற்றங்களை தெரிவிப்பார்; மலத்தைப் பிரிப்பார்—(அவர்), மலச்சிக்கலை நீக்குவர்; மாலை வீக்குவார்—(அந்தணர்) பூமாலையைக் கடவுட்டிரு உருவங்கட்குச் சாத்துவர்; காமாலை போக்குவார்—(மருத்துவர்) காமாலை என்னும் நோயை நீக்குவர் சூதகம் உரைப்பார்—(இவர்) தீட்டிற்குரிய காலங்களைக் குறிப்பிட்டுச் சொல்லுவர்; சூதகம் கரைப்பார்—(வைத்தியர்) சூதக வாயுக் கட்டிகளைக் கரைப்பர்; சுரத்தைக் கணிப்பார்—(இவர் ஏழுவகை இசைச்) சுரங்களைக் குறிப்பர்; சுரத்தைத் தணிப்பார் —(அவர்) சுரவெப்பத்தைத் தணிய வைப்பார்; தோஷம் இறுப்பர்—(இவர்) கோள் குற்றங்களைச் சாந்தியால் நீக்குவர்; ஏழ் தோஷ மறுப்பார்—(அவர்) உடலில் பத்தியத் தவற்றால் வரும் எழுவகைத் தோஷங்களையும் நீக்குவர்; குட்டத்தில் வீழ்வார்—(இவர்) குளத்தில் முழுகுவார்; குட்டத்தைப் போழ்வார்—(அவர்) குட்ட நோய்களை ஒழிப்பர்; நீரிழிவு ஆற்றுவர்—(பிராமணர்) நீர்க்கடன் முதலியவைகளைச் செய்து முடிப்பர்; நீரிழிவுமாற்றுவார்—(மருத்துவர்) நீரிழிவு நோயைப் போக்குவர்; பணிவிடம் சேர்வார்—(அந்தணர்) அன்புள்ளவரிடம் அடைவர்; பணிவிடம் ஈர்வார்—(வைத்தியர்) பாம்பின் நஞ்சைப் போக்குவர்; பெரும்பாடு நாட்டுவார்—(இவர்) மிகுதியாய்ப் பெருமையை ஏற்படுத்திக் கொள்வர்; பெரும்பாடு வீட்டுவார்—(அவர்) பெரும்பாடு என்னும் நோயைப் போக்குவர்; சாதலைக் குறிப்பார்—(இவர்) மரணநாளைக் குறிப்பிடுவார்; சாதலை மறிப்பார்—(அவர்) சாவைத் தடுப்பர்; கருமம் முடிப்பார்—(இவர்) கருமாதிகளைச் செய்துமுடிப்பர்; கருமம் மடிப்பார்—(அவர்) கருமசாந்தி செய்வர்;

இவ்விருவரினும் செவ்வியர் எவர் எனில்—(இவ்வளவு மாறுபாடு இருப்பதால்) மறையோர் மருத்துவர் ஆகிய இவ்விருவருள்ளும் மேன்மையுடையவர் யார் என்றால்,

ஈகை (தானம்).

அம்புயன் இயற்றிய அங்கம் அளித்தலால்—நான்முகனால் உண்டாக்கப் பட்ட உடம்பைக் காப்பாற்றுதலாலும், கம்முடை அண்ணல் காப்புக்கு உதவலால்—திருமாலின் காத்தல் தொழிலுக்கு உதவுதலாலும், புராந்தகன் அழித்திடு புரந்தனைப் புரத்தலால்—உருத்திரன் அழிக்கும் உடலைக் காப்பாற்றுவதனாலும் மூவுலகத்து உறை தேவரும் முனிவரும்—மூன்று லோகங்களிலும் வசிக்கின்ற தேவர்களும் முனிவர்களும் மற்ற

வரும், முப்பிணி நின்று—(வளி, அழல், ஐயம் என்னும்) மூன்று நோய்களிலிருந்தும் தப்புறச், செய்தலால்—நீங்கச் செய்தலாலும் மன்னவர் தமக்கும்—அரசர்களுக்கும் உதவியாய் இருந்து, மன்னுயிர் ஓம்பலால்—நிலைபெற்ற உயிர்களைக் காத்தலாலும், வைசியர் தமக்கும்—வாணிபம் செய்பவர்க்கும், வான் பொருள் அளித்தலால்—பெருமை மிக்க பொருளைத் தருதலாலும், வேளாளர் தமக்கும்—பூவைசியர்களுக்கும், வேளாண்மை புரிதலால்—ஈகையைச் செய்தலாலும், கணிகையரிடத்திலும் மணி கவர்ந்திடலால்—வேசையரிடமிருந்தும் அணிமணி பெறுவதனாலும், அரசைப்போல வரிசை பெற்றிடலால்—அரசர்களைப் போலத் தாமும் வரிசை பெறுதலாலும், தவத்துறைவோர்க்கும்—தவசிகாளகிய துறவிகளுக்கும், தாம் துணையாதலால்—மருத்துவரான தாமே துணையாயிருத்தலினாலும், மலர் போல் சிரமேல் பலரும் கொள்வான்—தலைமேலணிந்து கொள்ளும் மலரைப் போலத் தம்மை யாவரும் உயர்வாய் ஏற்றுக் கொள்ளுவதற்கு, வைத்திய மதிவல்லோர் அதிகம்—வைத்திய நுண்ணறிவுடைய மருத்துவரே உயர்ந்தவராவார்.

வைத்தியர்களாகத் தகாதவர்கள் இன்னார் எனல்

'' உவச்சன் காருகி உலகன் காழியன்
உலவன் காஞ்சுகி உமணண் காவிதி
உரகன் கம்மியன் உவணிய தோரணி
உபாசியே ஞதி உபாத்தி மாகதன்
உடோலி காபாலி உசானி பாண்டிலி
உதாரி சாலினி உதாவியீங் கிவர்கள்
உண்மைப் பாண்டித உத்தியோக ராகார்.''

(தே. கரிசல்)

(பதவுரை) உவச்சன்—பூசாரி (ஒச்சன்), காருகி—கைக்கோளன், உலகன்—குயவன், காழியன்—வண்ணான், உல்லன் மலையாளி (உலம்—மலை, கல்), காஞ்சுகி—கொல்லன்—உமணண் சோனகன் (உப்புவிளைவிப்போன்) காவிதி—கணக்கன் உரகன்—பாம்பாட்டி (உரகம்—பாம்பு) கம்மியன்—கம்மாளன், உவணி காருடரவித்தைக்காரன், அதோரணி—யானைப்பாகன், உபாசி—மந்திரவாதி, ஏஞதி—வேட்டைக்காரன், உபாத்தி—உபாத்தியாயன், மாகதன்—பட்டுவான், உடோலி—மேளக்காரன், காபாலி—மாறுபாடுள்ள ஆள் (எத்தன், ஏமாற்றுவோன்), உசானி—பாடகன். பாண்டிலி—தேர்ப்பாகன், உதாரி—வள்ளல், சாலினி—தெய்வ உபாசகன், உதாவி—ஆபத்துவமானவன், ஆகிய இவர்கள்உண்மையான மருத்துவர்கள் அல்லர்.

"தாய த்தவனும் தபதியுமே னுதியுமா
தாயத் தவனுந் தறுகண னுந்—தாயத்
தவனும் பரிசனனுஞ் சட்டகனுங் கோனுந்
தவனும் பரிகாரி தான்."

(தே. யமகவெண்பா)

(பதவுரை) தாயத்தவனும்—துக்கமுடையவனும், தபதியும்—சிற்பியும், ஏனாதியும்—வில்லியும், ஆதாயத்தவனும்—வியாபாரியும், தறுகணனும்,—கொடுங்குண முள்ளவனும், தாயத்தவனும்—சூதாடுவோனும், பரிசனனும்—ஏவல் தொழில் செய்பவனும், சட்டகனும்—பெருநித்திரை கொள்பவனும், கோனும்—அரசனும், தவனும்—தவசியும், பரிகாரி—வயித்தியவர்களாவார்களோ?

"தான்" அசை

குறிப்பு.—சதா துக்கமுடையவனுக்குப் புத்தி தெளிவிராது. சிற்பி கை கால் முதலான அவயவங்களுள்ள சிலைகளைச் செதுக்கத்தெரிந்தவனாயினும், மக்கள் உடம்புக்குள்ளிருக்கும் தத்துவ குணங்களைத் தெரிந்துகொள்ளும் வன்மையற்றவனாவான். வில்லியன் காட்டிலுள்ள பல மூலிகைகளின் குணங்களைஅறிந்திருப்பானாயினும் தேகக்கூறு, வியாதியின் இலக்கண முதலியவைகளைத் தெரிந்து காலத்திற்கேற்ப, சிகிச்சை செய்யும் தேர்ச்சியில்லாதவனாவான். வியாபாரி எப்போதும் பொருளைச் சேகரிக்கும் பேராசை உடையவனாவான். கொடுங் குணமுள்ளவன், துன்பப்படுகிற நோயாளியினிடத்து இரக்கம் கொள்ளாதானாவான். சூதாடிக்கு எப்போதும், எண்ணம் அதிற் செல்லுமே தவிர, வேறு வழியிற் செல்லாது. ஏவல் தொழிலோர்க்குச் சொல்வதைச் செய்தலன்றி, தம் சொந்த அறிவைக் கொண்டு செய்ய வேண்டுவதைச் செய்யும் புத்தி நுட்பம் இராது. பெருந் தூக்கமுடையவன், மனவூக்கமற்று எக்கருமத்தையும் முறையாக முடிக்கும் வன்மையற்றவனாவான். அரசன், தனது அதிகாரம் சம்பத்துமுதலியவைகளினால் அகங்காரம் கொண்டவனாவான். பசிக்கு உலக நாட்டம் இல்லை. ஆதலின் மேற் கூறப்பட்டவர் மருத்துவத் தொழிலுக்கு உரியர் ஆகார்.

ஆகவே, விசனமற்றவர்கள் அங்காதிபாத மென்னும் உடற் கூறு தெரிந்தவர்கள் பொருட்பண்பு நூல் உணர்ந்தவர்கள், பொருளில் பேராசையில்லாதவர்கள், உயிர்களிடத்து அன்புள்ளவர்கள், சூதாட்டம் முதலிய ஐம்பெரும் பாதகத் தொழிலை ஒழித்தவர்கள், யுத்தி புத்தியுள்ளவர்கள், தூக்கம் சோம்பல் இவைகளில்லாமல் சுறுசுறுப்புள்ளவர்கள், அதிகாரச் செருக்கு, பொருட் செருக்கு முதலியவைகளில்லாதவர்கள், இல்லறத்தில் வாழ்பவர்கள் ஆகிய இவர்களே, மருத்துவத் தொழிலுக்கு உரியவர்களாவார்கள் என்பது தெளிவாயிற்று.

இவ்விடத்துக் கூறிய ஐம்பெரும் பாதகங்களைக்

"காதல் கவராடல் கள்ளுண்டல் பொய்மொழிதல்
ஈதல் மறுத்தல்."

என்னும் நளவெண்பாவினால் அறிக.

(பதவுரை) காதல்—காமம், கவறாடல்—சூதாடல், கள்ளுண்டல்—கள்குடித்தல், பொய்மொழிதல்—பொய்சொல்லல், ஈதல் மறுத்தல்—பிறர்தானம் செய்வதைத் தடுத்தல்.

இவையல்லாமல் கொலையையும் ஐம்பெரும் பாதகத்தில் அடக்குவதுண்டு. இதைக் 'கொலை களவு கள்ளே காமம் கவறாடல்' என்னும் மேற்கோளால் அறிக.

மருத்துவன் அறியவேண்டுவன

''பலிப்பதற்கு வியாதியுள்ளோர் தேகக் கூறும்
பருத்தவுடல் மெலிந்தவுட னோயின் கூறும்
சலிப்பில்லா மலக்கூறும் சலத்தின் கூறும்
சாத்தியமு மசாத்தியமுந் தத்துவக் கூறும்
வலிப்பில்லாத் தாதுநித் திரையின் கூறும்
மங்கையர்க ளாசையின்மேல் மயக்கக் கூறும்
பலிப்பில்லாக் கன்மதன்ம நாட்டக்கூறும்
பார்த்தறிந்து பிறகுபார் மருந்தின் கூறே.''

(பொழிப்புரை) நீ செய்யும் வைத்தியம் பலித்துப் பிணியாளன் சுகம் பெறவேண்டுவையாயின், அவன் உடற்கூறும், பருத்த மெலிந்த உடல்களின் தன்மையும், நோயின் நிலையும் மலம், சிறுநீர் இவற்றின் பாகுபாடுகளும், அப்பிணி நீங்கும், நீங்காது என்னும் தன்மையும், அதிகாரமிவைகளின் வகையும், முக்குற்றம், தூக்கம் இவைகளின் கூறுபாடும், பெண்களை விரும்புவதாகிய மோகத்தின் இயல்பும், தீக்கன்மம், நற்கன்மங்களின் பாகுபாடும் ஆகிய இவைகளையெல்லாம் நன்றாய் ஆராய்ந்தறிந்து பின்பு மருந்தின் வகைகளைத் தேர்ந்தெடுத்தலைக் கவனிப்பாயாக.

''கூர்பாரு; தாதினிலக் கணமும் பாரு;
கோள்பாரு; நாள்பாரு; குணமும் பாரு;
நேர்பாரு; தேசபேதங்கள் பாரு;
நிலைபாரு; கிரகவுச்ச நீசம் பாரு;
பேர்பாரு; இவனைநீ பிறகு பாரு;
பேரதிலே கீர்த்தியின் றன்மை பாரு;
வேர்பாரு; தழைபாரு; மிஞ்சினக்கால்
மெல்லமெல்ல பற்பசெந்தூரம் பாரே.''

(பொழிப்புரை) தாதுக்களி னிலக்கணத்தையும், நாள் நட்சத்திரங்களின் நன்மை தீமைகளையும், தேசங்களின் வேறுபாடுகளையும், நோயாளியினுடைய சாதகத்தில் கிரகங்கள் நிற்கும் உச்ச நீச நிலைகளையும், நோயாளியினுடைய பேர் பலன்களையும் பார்த்துவிட்டு, பின்பு நோயாளியைப் பார்க்கவேண்டும். இன்னும் இப்பெயருடையான் தரும காரியங்களினாற் புகழடைந்தவனாவென்றும் இவன் சுற்றம், இனம் இவை ஒழுக்கமுடையனவா என்றும் பார்த்து, இவையாவும் நலமுடையனவாயிருப்பின் இத்தகையானுக்கு பற்ப செந்தூர முதலிய மருந்துகளைக் கொடுக்க முயல்வாயாக.

''பாரப்பா வுலகத்தில் பெரியோ ருண்டு;
பகைகாரர் மெத்தவுண்டு; பாசாண்டியுண்டு;
தாரப்பா தராதரங்கண் டறிந்து செய்யக்
தன்மம்வரு மதனாலே கீர்த்தி யுண்டு
கூறப்பா யார்கவடஞ் செய்திட்டாலும்
கொடுக்கின்ற மருந்துகளிற் குற்றம் வேண்டா,
சீரப்பா கிருபைவைத்து மருந்தை யீந்தாற்
செய்தகன்ம மவரவரைச் சேருந்தானே.''

(பொழிப்புரை) கடல் சூழ்ந்த இவ்வுலகததின்கண் பெரியார்களும் விரோதிகள் பலரும், விடத்தன்மையுடைய பாதகர்களும் உண்டு ஒவ்வொருவருடைய தராதரங்களையும் நன்குணர்ந்து நீ மருத்துவம் செய்வாயாகில், புண்ணியமும் கீர்த்தியும் பொருந்தி வாழ்வாய் இவருள் யார் வஞ்சனை, செய்திடினும், நீ தரும் மருந்தில் யாதொரு குற்றமும் வேண்டா, இங்ஙனம் கிருபை வைத்து மருந்தில் ஈவாயாகில், அவரவர் செய்த கன்மம் அவரவரைச்சேரும் என்று அறியக்கடவாய்.

மருத்துவர்க்கு நூலறிவும் கையாக அறிவும் தேவை எனல்

''பாருமே நூலைவிட்டுப் பண்டிதத்தைப்
பார்த்தலைவார் பலனறியா மடையரப்பா
காருமே கைப்பாகந்தன்னை விட்டுக்
காதலாய்ப் பார்த்தவர்க்கு நரகமெய்தும்
ஏருமே யுழுதக்கால் பலனு மாகும்;
இதமாகப் பண்டிதத்தைப் பாரர் மூடர்
வேருமே யடிதொடுத் தேற லாகும்;
வீணாகப் பார்த்தக்கா லில்லை காணே.''

(புலஸ். வா. சூ. 300)

மருத்துவ நூலறிவில்லாத மருத்துவர்களும், மருந்துகளில், கைப்பாகம் செய்பாகம் அறியாத மருத்துவர்களும், மருத்துவத் தொழிலுக்கு உரியராகார்.''

வாதிகட்கு இவை தேவை எனல்

''காணவே சூதத்தை விட்டோர் கெட்டார்
காதலாய்த் திரிந்தோர்கள் உடல்கள் கெட்டார்
பூணவே பண்டிதங்கள் புடபா கங்கள்
போக்கோடே செய்யாதார் மருந்துங் கெட்டு

ஆணவே செத்தாலே யுயிர்கள் போச்சு
ஆகாகா இச்சையினால் மனது போச்சு
நாணவே மனங்குன்றி யேங்கி யேங்கி
நாடுதனிலலைவார்கள் வாதி தாமே.''

(புலஸ். வா. சூ. 300)

''வாதிமகன் வைத்தியனாம் வடிவு மாகும்
வகையறியான் பண்டிதங்கள் செய்ய மாட்டான்;
சாதியினால் பேசியே சுணங்கன் தானும்.
தீர்க்கமது பேசியே தெரிந்தாற் போலே
வேதியனார் போலவே யுறவு பேசி
வேதாந்த சாத்திரத்தை மெத்தப் பேசிக்
கோதியே கிளிப்பிள்ளை போலே பேசிக்
குணமாக அலைந்திடுவர் கோடி தானே.''

(புலஸ். வா. சூ. 300)

மருத்துவன் அறிய வேண்டுபவை (வேறு)

''பார்க்கின்ற சோதிடமே பிராயசாலம்
பகரும்விவ காரமொடு பிராயச் சித்தம்
ஏர்க்கும்வயித் தியமிந்த நான்கும் வல்லோர்
இதன்வழியே சிகிச்சைரட்சை செய்வாராகில்
ஆர்க்குமே தோடமிலை; இவைகள் யாவும்
அறியாதார் சாத்திரம் வல் லவர்கள் போலத்
தீர்க்கமடி பிடியாகச் செய்வா ராகில்
சீவபிர மத்திவதை சேர்வா ரன்றே''

(அ. சி. கோ.)

(பொழிப்புரை) கிரகச்சாரங்களைப் பார்க்கும் சோதிட சாத்திரம், வயதின் காலம், தொழிலின் முறைகள், பாபத்திற்குப் பரிகாரமாய்ச் செய்யப்படும் வேலை, இந்த நான்கு வகைகளும் நன்குணர்ந்து மருத்துவம் செய்வாராகில், யார்க்குமே குற்றமில்லை. இவற்றுள் ஒன்றும் அறியாமல், சகல நூல்களையும் தெரிந்தவர்களைப் போல நடித்து விடாப்பிடியாய்ச் சிகிச்சை செய்யத்தொடங்குவார்களாகின் இத்தகையவர்கள் சீவ பிரமஹத்தி செய்தவருக்கு ஒப்பாவார்கள் என்று செல்லப்படுகிறது.

''வாதுகுறி வயித்தியரே ! சொல்லக்கேளீர்;
வாகாகக் கண்மூன்று தலைகள் நான்கு
நீதமுடன் முகமைந்து கைக ளாறு
நிலைசரீ ரங்களெட்டுச் கால்கள் பத்து

வீதமிதன் பயனறிந்தார் வியாதி தீர்ப்பார்;
விதமறியார் மானிடரைப் பழியே செய்வார்;
சேதமாஞ் செய்மருந்து பலித்தி டாது;
செத்தபின்பு தீநரகிற் சேரு வாரே;''

(அ.சி.கொ.)

(பொழிப்புரை) வாது பேசுகின்ற வைத்தியர்களே! சொல்வதைக் கேளும்: கண்கள் மூன்று, தலைகள் நான்கு, முகங்கள் ஐந்து, கைகள் ஆறு, சரீரங்கள் எட்டு, கால்கள் பத்து என்னும் இவைகளின் கருத்தை நன்கு உணர்ந்தவர்களே வியாதிகளைத் தீர்க்க வல்லவர்களாவார்கள். இத்தகைய முறைகளை அறியாதவர்கள் மானிடர்களுக்குத் துன்பமே இழைப்பார்கள். இவர்கள் செய்கின்ற மருந்தும் பலிக்காமல் வீணாகும், அன்றியும் இவர்கள் இறந்த பின்பு கொடிய நரகில் சேர்வார்கள்.

''மருந்துசுத்தி குணநிகண்டு கண்கள் மூன்றாம்;
வாதப்பித்த சிலேத்ம தொந்தம் தலைகள்
நான்காம்;
அருந்துமறு சுவையறிதல் கைகளாறாம்;
அட்டவிதக் குறிப்பறிதல் சரீரம் எட்டாம்;
இருந்த தசநாடி தசவாய் விரண்டும்
இதமாகப் பார்த்திடில் கால்கள் பத்தாம்;
பொருந்தியதோர் பிண்டநிலை முகங்களைந்தாம்;
பொதியமலை யகத்தியனார் புகன்றவாறே''.

(அ.சி.கோ.)

(பொழிப்புரை) கண், தலை, கை, சரீரம். கால் பிண்டநிலை முதலியவற்றின் விவரங்கள்: மருந்து, சுத்தி, அதன் தன்மைஇவை தாம் என உறுதிப்படுத்தலாகிய கண்கள் மூன்று, வாதம், பித்தம் சிலேத்துமம், தொந்தம் ஆகிய தலைகள் நான்கு உண்கின்ற ஆறுசுவைகளையும் அறிதலாகிய கைகள், ஆறு எட்டுவிதக் குறிப்பையறியும் சரீரங்கள் எட்டு, தசநாடி தசவாயு ஆகிய இரண்டினையும் பார்த்தல், கால்கள் பத்து பிண்டநிலையோடுங் கூடிய சடப்பொருள்களாகிய முகங்கள் ஐந்து, இவைகளைப் பொதிய மலை யகத்திய முனிவர் சாற்றியுள்ளார்.

வைத்தியம் செய்ய முப்பு வேண்டுமெனல்

''வயித்தியனே யானாக்கால் முப்பு வேண்டும்;
மறந்துவீட்டுச் செய்வதனாற் கிருபை யென்ன?
சயித்தியமா முபசார வார்த்தை சொன்னால்
தம்பிக்கு வந்த நோய் தானே போமோ
நயத்தினிலே நவலோக பாடாணங்கள்
நற்பூண்டு தழையாலே பற்பஞ் செய்வீர்!
வயித்தியமோ வுங்களுக்கு நோய்கள் போக்கப்
பண்டிதமோ கண்டிதமாய்ப் பார்த்தி டிரே''.

பயனற்ற மருத்துவன் பண்பு

''பாராமற் செய்வதிலே தோடந்தோ டம்;
பழம்புண்ணாளி யரைவயித் தியனே யாவன்;
கூறா மலிருக்கவில்லை சாத்திரங்கள்
குணமுள்ள ராசி யென்றாற் பலிக்கும் நூல்கள்
தேராமல் சொல்கேட்டுப் பரிகாரத்தைச்
செய்வதிலே பழிபாவஞ் சிக்குஞ் சிக்கும் ;
கூறான உலகத்தி லுயிரை யெல்லாம்
கொல்லுதற்கே தலையெடுத்த கூற்றனாமே''.

தீயமருத்துவரியல்பு

''மருத்துவ நூலின் முறையை அறியாதவர் வாத பித்த கபங்களாகிய மூன்று நாடிகளை அறிய மாட்டாதவராய் கைகளைப் பிடித்துப் பார்த்து மனம் போலச் சொல்லுதல் சிறு நோயினரை அநியாயமாய் கொடுநோயினர் என்று பகர்தல், பிணியொன்றிருக்க மற்றொன்றை மாற்றி இயம்புதல் தம்மால் தீர்க்கமுடியாத நோயையும் தாம் தீர்த்துவிடுவதாக உறுதி கூறல், தாமே உயரிய மருத்துவர் என பெருமை பேசுதல், இத்தகைய தன்மை வாய்ந்த வைத்தியர்களுக்கு எக்காலமும் மோட்சமில்லை; நரகந்தான் கிட்டும்,; என அகத்தியர் அருளியதைக் கீழே காண்க :

''வாகடத்தின் பயனறியார் நாடிகாணார்
வளர்கையை பிடித்திழுத்து வார்த்தை சொல்வார்
ஆகடிய மாகவே நல்லோர் தம்மை
அசாத்தியநோயாளரென்றே அறைந்து போவார்;
பேரிருக்கப் பேர்சொல்வார் வியாதி கட்குப்
பிணிதீர்ப்போம் என்று சொல்வார் தீர்க்க
மாட்டார்.
ஓகோகோ வயித்தியர்தாமென்று சொல்வார்க்
கொருகாலும் மோட்சமில்லை நரகந் தானே.''

(அ.சி.கோ.)

வைத்தியர்க்கு அறிவு கூறல்

''அச்சமறு வயித்தியரே ! நோயுள்ளோர்கட்
கசாத்தியமும் சாத்தியமும் அறிந்து நன்றாய்ப்
பட்சமறக் குறிகுணமெய்ப் பரீட்சை பார்த்துப்
பரிகார மாய்மருந்து பகரா ராகில்

தச்சமறக் கிளைகுலங்கள் வேரோடற்றுத்
தரணிதனில் வெகுபாவம் தலைமேற்கொண்டு
இச்சைபெற எழுநரகில் அழுந்திப் பின்னும்
ஈடேற்ற மில்லாம லிருப்பர் தாமே.''

(பொழிப்புரை) யாதோர் அச்சமில்லாத மருத்துவரே, நோயுள்ளவர்கட்குள்ள சாத்திய அசாத்தியத் தன்மைகளை நன்குணர்ந்து, பாரபட்சமில்லாமல், குறிகள், நோயின் குணங்கள் சரீரப்பரீட்சை ஆகிய இவைகளை ஆராய்ந்து இவைகட்குப் பரிகாரமான மருந்துகளைச் செய்யாராகில் நெருங்கிய சுற்றத்தாரோடு தம்குலமும் வேரோடற்று இவ்வுலகத்தின்கண் அதிக பாவமாகிய பெரிய மூட்டையைத் தலைமேற் சுமந்து எக்காலத்திலும் ஈடேறுதல் இல்லாமல் ஏழுவகைப்பட்ட நரகங்களில் ஆழ்ந்து துன்புற்றிருப்பார்கள்.

''தரணிதனில் அவுடதத்தின் சுத்தி கண்டு
தகைமைபெற நோயாளி சரீரம் பார்த்துக்
கரநியா சத்தின்வகை கண்டு பின்னுங்
கைப்பரீட்சை மெய்ப்பரீட்சை கருத்து நாடித்
திரநிகரில் குருமுகமாய்ப் புத்தி யாகித்
தெளிந்தோர்கள் யோசனையாஞ் செய்தி கேட்டு
முரணினா லிந்தவகை செய்யா ராகில்
மூவேழு சுற்றமும்வே ரற்றுப் போவே.''

(பொழிப்புரை) இப்பூவுலகின் கண் மருந்தின் சுத்தி முறைகளை நன்குணர்ந்து நன்மையடையும் பொருட்டு நோயாளரின் உடற் கூறுகளையும் பார்த்து அவர்தம் கையினாற் செய்யும் தொழிலினையும் கண்டு பின்னர் நாடிகளின் நிலை, உடல்வன்மை யாகியவற்றில் கருத்தைச் செலுத்தி குருவினிடம் புத்திவைத்து கற்றுணர்ந்த கலை வல்லார்களின் யோசனையையும், செயல்களையும் கேட்டு மருத்துவம் புரிதல் நன்மையாகும். இங்ஙனம் மாறுபாடில்லாத முறைகளைக் கடைப்பிடிக்கவில்லையேல் அம்மருத்துவரின் இருபத்தொன்று தலைமுறை சுற்றமும் வேரற்றுப்போய் விடும்.

வஞ்சகர்களுக்கு மருத்துவம் போதித்தல் ஆகாது

''மந்திரமும் வாகடமும் பழைய நூலும்
வருவிக்கும் பெரியோரே ! வன்மை கேளீர்;
தந்திரமாய்க் காந்தமுக மூசி பெற்றுத்
தன்மையது போற்றொடர்ந்து தரிப்பா ராகில்

சுந்தரமாம் புகழுடைய குலமா னாலும்
துட்டர்களுக் கிம்மூன்றுஞ் சொன்னாராகில்
அந்தரமா யெழுநரகில் அழுந்திப் பின்னும்
அறிவில்லாச் சண்டாள ராவார் பாரே.''

(பொழிப்புரை) மந்திரம், மருத்துவ நூல், பழைய நூல் இவைகளை யாய்ந்துணர்ந்த அறிவுடையவர்களே! உறுதியான நியாய முறைகளைக் கேளுங்கள். நயவஞ்சகத்தோடு தந்திரமாய் காந்தம் ஊசியை இழுக்கும் தன்மைபோலக் கேட்கக் கூடிய பரம சண்டாளர்களுக்கு, முன் சொன்ன மூன்று விஷயங்களையும் சொல்லுதல் கூடாது. அவர்கள் அழகான கீர்த்தி வாய்ந்த குலத்திலுதித்தவர்களாயினும், அத்துஷடர்களுக்கு இம்மூன்றும் சொன்னாராகில் அத்தகையவர் ஏழு நரகங்களிலும் அழுந்திப் பின்னர் ஞானமற்ற சண்டாளர் ஆவர்.

மருத்துவன் ஒழுக்கம்

''இருவர் வந்தழைத் திடினவர் இற்புகா திருத்தல்,
கருது நற்சகு னத்தினைக் கண்டுசென் றிடுதல்,
மருவு நோயினர் மஞ்சமா தியதொடா திருத்தல்,
அருகு கீழ்த்திசை முகமுற வாசனத் திருத்தல்.''

(பொழிப்புரை) தன்னை இரண்டு பேர் வந்தழைப்பாராயின் மருத்துவனாகிய தான் நோயாளியின் வீட்டிற்குச் செல்லாதிருத்தலும் தான் எப்போதும் நன்மையென நினைத்திருக்கும் நல்ல சகுனத்தினைப் பார்த்துப் போதலும், நோயாளியின் படுக்கை முதலானவைகளைத் தீண்டாதிருத்தலும், பிணியாளனுக்கருகில் கீழ்த்திக்கை நோக்கி உட்காருதலும் ஆகிய இவை மருத்துவனுக்கு உரிய நல்லொழுக்கங்களாம்.

XVI. எண்வகைத் தேர்வு.

பிணியறி முறைமை.

இது, பிணி+அறி+முறைமை என்னும் மூன்று சொற்கள் கூடிய இரு தொடராய், பிணி—உடலைப் பிணித்தலாய நோயை அறி—(தமிழ் மருத்துவ விதிப்படி ஒழுகித்) தெரிந்துகொள்ளுகிற, முறைமை—ஒழுக்கம் எனப் பொருள்படும்.

விதியும், ஒழுக்கமும்.

இது, 1. பொறியாற்றேர்தல், 2. புலனாலறிதல், 3. வினாதல் என்னும் விதிகளையும், அவற்றைத் துணைக் கோடாகப் பற்றி ஒழுகும் ஒழுக்கங்களையும் உணர்த்தும்.

1. பொறி.

பொறி, 1. மூக்கு, 2. நா (வாய்), 3. கண், 4. தோல் (மெய்), 5. செவி என ஐவகைப்படும்.

2. புல்ன்.

இது, 1. நாற்றம் (மணம்), 2. சுவை, 3. ஒளி, 4. ஊறு, 5. ஓசை என ஐவகைப்படும்.

3. வினா.

வினா என்பது கேட்டறிதல்.

பொறியாற்றேர்தல், புலனாலறிதல், வினாதல் என்பது, பிணியுற்றோனிடத்தும், பிணி தீர்ப்போனிடத்தும் உள்ள பொறி புலன்கள்; பிணிகளை உள்ளங்கை நெல்லிக்கனிபோலுணர்த்துமாகையால், மருத்துவன், தன்னை நோக்கி வந்த பிணியுற்றவனைப்பற்றி அறியவேண்டியவற்றை அறிந்தும், தன்பொறி புலன்களால் பிணியாளனுடைய பொறிபுலன் வழியாய் உணர்வதைக் கேட்டும், அவன் எக்காரணத்தினாலேனும் தான் கேட்பதைச் சொல்வதற்கியலாதவனாயிருப்பின் அவன் சுற்றத்தாரைக்கொண்டு அறியக் கூடியவரை அறிந்தும் பிணியைக் கணித்தலைப் பற்றியே குறிக்கும்.

எண்வகை தேர்வு

முற்கூறியபடி பிணியை அறியும் வழி, மருத்துவ நூல் வல்லோர்களால் எண்வகையாய் வகுக்கப்பட்டுள்ளது.

"மெய்க்குறிநிறம் தொனி விழிநா இருமலம்
கைக்குறி. '' என்னும் தேரையர் வாக்கினாலறிக.

இருமலம்

மருத்துவன், பிணியாளனது கழிவுப்பொருளை,

(a) மூக்கில் முகர்ந்தும்.

(b) நாவால் சுவைத்தும்.

விழி

மருத்துவன் தன் கண்களால், நோயாளியின் பொறிகளாகிய மூக்கு, நா (வாய்) கண், தோல் (மெய்) செவி மற்றும் சில அவயவங்கள் ஆகியவற்றின் இலக்கணங்களையும், கழிவுப்பொருள்களின் தன்மைகளையும் அறிதல் வேண்டும்.

அவற்றின் விளக்கம்

1. **மலம்**—இதன் நிறம், நுரை, இறுகல், இளகல்.

2. **நீர்**—இதன் நிறம், எடை, மணம், நுரை, எஞ்சல்.

3. **சுக்கிலம்**—இதன் நிறம், இளகலாதித்தன்மை.

4. **கண்**—இதில் காணும் நிறம், ஒளி, சாறும் பீளை, வழியும் நீர்.

5. **காது**—இதில் கழியும் குறும்பி, அழுக்கு, மலின் நீர், சீழ் இரத்தம்.

6. **மூக்கு**—இதில் வெளிப்படும் சளி, குருதி, அழுக்கு மற்றும் மலினங்கள்.

7. **நா (வாய்)**—இதில் சுரக்கும் எச்சில், நிறம், வாயின் வழியாய் வெளிப்படும் கோழையின் நிறம், கனம், பேச்சின் தன்மை.

குறிப்பு :—(a) நீரைக் காய்ச்சியபின் அதினின்றுண்டாகும் மணமும் அடங்கும்.
(b) இஃது அவ்வளவு பொருத்தமானதன்றாகையால் ஈ, எறும்பு இவைகளைக் கொண்டு அறியலாம்.

8. மெய்—இதில் வடியும் வியர்வை, நிறம், தன்மை.

9. மயிர்—நிறம், வளர்ச்சி, வெட்டு, வெடிப்பு, உதிர்ப்பு.

10. நகம்—நிறம், கீற்று, வெடிப்பு, வளர்ச்சி, வழவழப்பு, மினு மினுப்பு.

11. உதடு—நிறம், உருவம், வெடிப்பு.

12. நெற்றி—நிறம், ஒளி, சுருங்கல்.

13. பல்—நிறம், உடைச்சல், ஒளி, படிந்துள்ள மாசு, சொத்தை தேய்வு முதலியன.

14. புருவம்—ஏற்றம், இறக்கம்.

15. அண்ணம்—நிறம், மற்றைய நிலைமை.

மெய் தோல்

இன்னும், மருத்துவன், நாடி (தாது) இயக்க நிலைமையையும் தட்ப வெப்பங்களையும், மற்றுமுள்ள பிற உறுப்புகளின் தன்மையையும் தொட்டேனும், தடவியேனும், ஊன்றியேனும், விரலாலழுத்தியேனும், அளந்தேனும், தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

செவி.

சிலபோது மருத்துவன், தன்காதால், சுவாசாசயம், இருதயம் போன்ற உறுப்புகளின் நிலைமையையும் பேச்சின் ஒலிக்குறிப்பையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

நோயாளியின் குடும்ப வரலாறு, அவனுடைய வயது, உடல் வன்மை, மனவுறுதி, பண்பு, செரிப்புத்தன்மை, இயற்கையுணவு தொழில், வாழுமிடம், அவ்விடத்தின் தன்மை, நோயின் வயது, நோய் தோன்றிய காலம், இடம், நோயுண்டாவதற்குமுன் நோயாளியின் நிலைமை முதலியவற்றையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுதல் மருத்துவனது கடமையாகும்.

இவை நிற்க, நோயுற்றோன், பொருள்களின், மணத்தையும், சுவையையும், காட்சியையும் எவ்வகையில் அறிகின்றான் என்பதையும், பொருள்களைத் தொட்டும், தடவியும், அழுத்தியும் உணரும் அவனுடைய உணர்ச்சி எந்நிலையில் உள்ளது என்பதையும் தான் கேட்ட ஒலியைப் பிறருக்கு இயற்கையாய்த் தெரிவிக்கின்றானா, அன்றி வேறு வகையில் தெரிவிக்கின்றானா என்பதையும் அறிந்துகொள்ளவேண்டுவது மருத்துவனுக்கு இன்றியமையாததாகும்.

மலக்குறி

மலத்தால் முக்குற்றமறிதல்—வயித்திய சிந்தாமணி

1. கறுத்த நிறமுள்ளதும், சிக்கலுள்ளதும், வாத நோய்க் குள்ளமலமாம்.

2. சிறுத்தும், வெம்மையாயும், சிவந்தும், மஞ்சள் நிறமாயும் உள்ளவை பித்த நோய்க்குள்ள மலமாம்.

3. சீதமாகவும், வெண்மையாகவும் உள்ளன சீதள நோய்க் குள்ள மலமாம்.

4. எல்லா நிறங்களும் கலந்தன கலப்பு (தொந்த) நோய் மலமாம்.

''கறுத்தமலம் பந்தமலங் காலாகும் பித்தஞ்
சிறுத்தமுஷ்ணஞ்செம்மை சேரும்—வருத்தமுறை
சீதமலம் வெண்மையாம் சேர்ந்தபல ரோகியின்
ஏதமல மெந்நிறமு மே.''

வேறு

'' மலமது கட்டி முட்டி யாயிடும் வாதத்திற்கு
மலமது தம்பலம்போல் மஞ்சளாம் பித்தத்திற்கு
வலமறச் சிக்க லாக வெளுத்திடு மையத்திற்கு
மலமதின் லட்ச ணத்தை வகுத்தனர் முனிவர் தாமே''

(புலிப்பாணி)

''மேவு வாத முடையவரீ மெய்ம்மலம்
சீவி தாகக் கறுத்திடுஞ் செம்மையாய்ப்
பாவையே பித்தத் தோர்மலம் பார்த்திடில்
ஆவி யோடெழு மந்நிற மஞ்சளே.''

''மன்னுஞ் சேத்துமத் தோர்மலம் வீழ்குறி
இன்னல் தீர விழும்வெளுப் பென்னவே
சொன்ன விக்குண மன்றிமுத் தொந்தத்தே
நின்ற மூன்று நிறமல மெய்துமே.''

மலப்பரிட்சை

''பீதசுமை யாரத்தை பீருவெரி மீளிமன்கொ
பீதகமை யாரத்தை பெடிகுன்மம்—பீத
வுருவானாலாகாது மொண்மையெனின் மைய
வுருவானா லாகாதை யும்''.

(தே. ய.)

(பதவுரை) பீதகமை யாரத்தை பீருவெரி மீளிமன்கொ மலமானது மஞ்சள் நிறமானால், பயங்கர சுரமென்றும், வாத சேட்ப சுரமென்றும், சுத்தவாத சுரமென்றும், பீதகமை—மலத்தின் சாமார்த்தியமான ஆரத்தை— சங்கினது, நிறமானால் பெடி—பயித்தியம், குன்ம—குன்ம வியாதியின் விகற்பமென்றும், பீதவுருவானால்—முல்லைப்பூ நிறமாயிருந்தால், ஆகாதும்—செவிப் புண்ணுக்கு இடமான நோயென்றும், ஒண்மையெனில்—மின்னலைப் போலப் பளபளப்பாயிருந்தால் மைய அனுபான ரோகத்தினாலே நலிப்படுத்தி நாளாதி வரையிலே கொல்லப்பட்ட ரோக மென்றும், உருவானாலாகாதையும்—வாளினது உறையைப்போல உள்ளே குழலாக மேலே புன்மை நிறத்துடனே குழையாகக் கூராகிக் கீழே தொங்கிக்கொண்டு, மலம் விழுமேயானாலது நம்பக்கூடாததான சேட்ப தொந்த வினையென்றும் பேராகி யெப்படியு மாரகத்தைத் தருமாதலால தனை நம்பவொண்ணாதென்றவாறு.

''எப்படி யென்னு மிசைந்த மலக்குறி
யப்படி வானுறை யாகிய நன்றால்
வெப்படி யாகி விளைந்த கபத்தா
லொப்படி யாகுவ ரும்பரின் மீதே.''

பின்னுமிவ்வாறே வாராநின்ற உதாரணத்தினாலே யறிக வென்பதாம்.

மலக்குறியால் சாதல் சாவாமை அறிதல்

சாதல்

மலம் வெள்ளாட்டுப் புழுக்கையைப் பார்க்கிலும், உலர்ந்து கெட்டிப்பட்டு வரண்டிருக்குமானாலும், பிணவெடி நாற்றம் சார்ந்திருந்தாலும் அப்படி மலம் போகும் நோயாளி இறந்துபடுவான்.

சாவாமை

1. மலமானது கொஞ்சம் பக்குவமான குழம்பு போன்றும், இலைச்சாறு போன்றுமிருக்குமானால், நன்மையைப் பயப்பதாம்.

2. கடினமும் தளர்ச்சியுமில்லாத செம்பாகமாயிருக்குமானால் மிகவும் நன்மை ப பப்பதாம். இதுவே திடமாம்.

3. முன் மலத்தைப் பார்க்கிலும், மிகவும் செம்பையொத்த சிவந்த நிறமாயிருக்குமானால், நல்ல நடுத்தரமான மலமென்று தெரிந்து கொள்வாயாக.

யாமகவெண்பா

மலக்குறி

'' சாகப் புழுக்கை தனிலு மிறுகுமெனிற்
சாகப் புழுக்கையறி சற்றுநன்று—சாகப்பு
செம்பாக நன்மை திடமா மதினுமிகச்
செம்பாக நன்மையென்று தேர்.'' (தே.ய.)

மலத்தினுணரும் சுரக்குறியாம் சாக்குறியும்

''மலமூத்திரக் குறிசெப்பிடின்
மலைமேற் பதிவிளக்காம்
மையற்கொரு கணையாகிய
மெளவற் கிணையாமே
மலமானது புயலாமெனில்
மன்னிற் பெறுசுரமே
மலருங்கவி ரானாலஃ
தமைச்சன் பெறுசுரமாம்
மகவான்கரி யானாலது
மறவன் சுரமாமே
மஞ்சட்கிணை யானாலது
மன்னைத் தொடுகபமே
மலிபாடலி யானாலது
மயங்குங் கபவளியே
மஞ்சாடிய தானாலது
மரணக் குதவளியே
மந்தாரைய தானாலது
மடிக்குஞ் சனிவளியே
மண்டூகம தானாலிரு
மதிக்கப்புறமிலையே.'' (தேரன் கரிசல்)

1. நோயாளியின் மலமானது மேகம் போன்று கறுப்பு நிறமாயிருந்தால், வாயுவாலுண்டான சுரமாம்.

2. முள்முருக்கம்பூப் போன்று சிவந்த நிறமுள்ளதாயிருந்தால், பித்தத்தாலுண்டான சுரமாம்.

3. இந்திரன் ஊர்தியான யானையைப் போன்று வெள்ளை நிறமுள்ளதாயிருந்தால், சீதளத்தால் உண்டான சுரமாம்.

4. பசு மஞ்சளை யொத்த நிறமுள்ளதாயிருந்தால், வாயுவுடன் கபஞ் சேர்ந்த (வாதகப) சுரமாம்.

5. பாதிரிப் பூவைப் போன்று வெண்சிவப்பின் நிறமுள்ளதாவிருந்தால், கபத்துடன் வாயுசேர்ந்த (கபவாத) சுரமாம்.

சாதல்

6. மஞ்சாடி மரத்தின் பூவென செம்மஞ்சள் நிறமுள்ளதாயிருந்தால், சாதலை உண்டாக்கும் மூலவாயுவாகும்.

7. மந்தாரை மரத்தின் மலர்போன்று ரோஜாப்பூ நிறமுள்ளதாயிருந்தால், கொல்லத்தக்க சன்னிவாத நோயாகும்.

8. தவளை போலக் கறுத்த நிறத்தையும், வரட்சியையும், கடினத்தையும் உடையதாயிருந்தால், அந்த நோயாளி இரண்டு திங்களில் இறந்து விடுவான்.

முப்பிணி மெய்ந்நிறம்

'' உரைத்தகறுப் பன்வாத ரோகிபித்த ரோகி
அரைத்தமஞ் சள்குளித்தோ னாவான்—இரத்தம்
குளித்தவனு மாவான் கொடுஞ்சேத்ம ரோகி
வெளித்திடுவான் தொந்தமெல்லா மே.''

(பொழிப்புரை) வாதரோகி கறுத்தும், பித்தரோகி மஞ்சள் நிறத்துடனும் அல்லது சிவந்தும், சேத்துமரோகி வெளுத்தும், தொந்தரோகி தொந்தத்திற்சேற்ப இரு கலப்பு நிறங்களைக் கொண்டும், சன்னிபாத ரோகி பல நிறங்களை அடைந்து மிருப்பன்

'' தேகத்தி னிறந்தானுஞ் செப்பக் கேளீர்
சிறுமையாய் வாதந்தான் கறுத்தி ருக்கும்
போகத்தின் பித்தநிற மஞ்ச ளாகும்
பெருஞ்சேத்ம ரோகிக்கு வெளுப்ப தாகும்
பாகத்தின் தொந்தரோகிக்குத் தானும்
பலபலவன் னமுமாகிப் பரந்து நிற்கும்.''

மெய்ந்நிறத்தால் சாதலையறிதல்

'' என்றுமதி செவ்வாய் இரணியன்சுங் கன்காரி
என்றுமதி செவ்வாய் இவையொடுமை—என்றுமதி
அஞ்சுமா தக்கணமேல் ஆறுதிங்க ளாமினுக்கேல்
அஞ்சுமா தக்கணமே யாம்.'' (தே.ய.)

(ப-ரை) என்று மினுக்கு—சூரியனைப் போன்ற (சிவந்த நிறம்), மினுக்கு (மிருக்குமாயின்), துமதி—இரண்டு திங்களிலும், மதி (மினுக்கு)—சந்திரனைப்போல் (வெண்ணிறமும்) மினுக்கு (மிருக்குமாயின்), துமதி அஞ்சு—இரண்டு மாதம் (கழிந்த) ஐந்து (மாதமாகிய)(மூன்று திங்களிலும்), செவ்வாய் மினுக்கு—அங்காரகனைப் (போன்ற நெருப்பு நிறமும்) மினுக்கு (மிருக்குமாயின்), துமதி ஆறு திங்கள்—இரண்டு மாதம் (கழிந்த) ஆறு மாதமாகிய (நான்கு மாதங்களிலும்), இரணியன் மினுக்கு—பிரகஸ்பதியைப் (போன்ற பொன்நிறமும்) மினுக்கு (மிருக்குமாயின்), அஞ்சு மாத—ஐந்து மாதங்களிலும், சுங்கன் மினுக்கு—சுக்கிரனைப் (போன்ற

வெண்ணிறமும்) மினுக்கு (மிருக்குமாயின்), ஆறு திங்கள்—ஆறு மாதங்களிலும், காரி மினுக்கு—சனியைப் (போன்ற கறுத்த நிறமும்) மினுக்கு (மிருக்குமாயின்), துமதி அஞ்சுமாதக்கணம்—இரண்டு மாதத்துடன் (சேர்ந்த) அஞ்சு மாதங்களாகிய ஏழு மாதங்களிலும், என்று செவ்வாய் மதி—(மரணமாவார்களென்று) செவ்வனே யூகிப்பாயாக, இவையொடு உமை என்மினுக்கு—கூறிய இவைகளோடு பார்வதியின் (நிறம்) என்று (சொல்லத்தக்க) சாமள நிறத்துடன் மினுக்கு (மிருக்குமாயின்), துமதிமேல் ஆறு திங்கள் ஆம்—இரண்டு மாதங்களின் மேல் ஆறு மாதங்கள் (சேர்ந்த) எட்டு மாதங்களில் (மரணம்) உண்டாகும், அஞ்சுமாதக் கணமே யாம்—(மேற்சொன்ன நிறங்கள் சரியாயிருக்குமாயின் நோய்) அச்ச முறுமாறு அப்போதைக்கப்போதே (மரணம்) உண்டாகும்.

(பொழிப்புரை)—

உடலில்—

1. சூரியனைப்போல் நற்சிவப்பும், மினுமினுப்பும் காணில் இரண்டு திங்களிலும்,

2. திங்களைப்போன்ற சிவந்த வெண்ணிறமும் மினுமினுப்புங் காணில் மூன்று திங்களிலும்,

3. செவ்வாயைப்போல் செந்நெருப்பு நிறமும் மினுமினுப்புங் காணில் நான்கு திங்களிலும்.

4. வியாழனைப்போல் பொன்நிறமும் மினுமினுப்புங் காணில், ஐந்து திங்களிலும்,

5. வெள்ளியைப்போன்ற வெண்ணிறமும், மினுமினுப்புங் காணில், ஆறு திங்களிலும்,

6. சனியைப்போல் கருநிறமும் மினுமினுப்புங்காணில், ஏழு திங்களிலும்.

7. உமையவள்போல் கரும்பச்சை (சாமள) நிறமும் மினுமினுப்புங் காணில், எட்டுத் திங்களிலும் உயிர் நீங்குமென்பதாம்.

8. உடலில் மேற்கூறிய நிறங்கள் யாதொன்றுமின்றி, வேறு மினுக்கு மாத்திரங் காணுமாகில், அதற்கு மருந்தால் பயன் ஏற்படாது; அந்தக் கணத்திலேயே அஃது அழியுமென்றும் அறிவாயாக.

உடலின் தண்மை வெம்மை

''வெம்மைகுறைந் தாலு மிகுந்தாலும் வாதபித்தம்
தம்மை நிரைநிரையாய்ச் சாற்றுவர்—வெம்மையின்றிச்
சீதமுமவ் வாருகிற் சேத்மமென்பர் தொந்தமென்பர்
மீதுமுனவ் வாறுகு மேல்.''

(பொழிப்புரை) வாதத்தால் பீடிக்கப்பட்ட நோயாளரின் உடல் சிறிது வெப்பமாயிருக்கும். பித்தப் பிணியோர்கட்கு உடல் மிகு வெப்பமாயிருக்கும். ஐயநோயினர்க்குத்தட்பமாய் இருக்கும். அன்றி, வியர்வை விடுவதுமாய் இருக்கும். கலப்பு நோயாளர்க்குக்கலக்குங் குற்றமளவாய் இருக்கும்.

இதனை,

''சேரும் வாத தேககுணம்
தேனே சீத மிகுந்திருக்கும்
பாரும் பித்த தேகமதைப்
பார்க்கில் வெச்சென் றேயிருக்கும்
கூறும் சேத்ம சடம்வேர்வை
கொண்டே யிருக்கு மிக்குணங்கள்
தேறுந் தொந்த ரோகசடம்
செப்புங் குணத்தி லறிவீரே.''

(திரட்டுநாடி)

''கொள்ளவே வாதத்தின் தேகந் தானும்
குளிர்ந்துமே சிறிதிடத்தே யுஷ்ண மாகித்
தெள்ளவே துடிதுடித்தே யிருக்கும் பித்தத்
தேகந்தா னதியூஷண மாயி ருக்கும்
தெள்ளவே சேத்துமத்தின் தேகந் தானும்
சிக்கென்று குளிர்ந்திருக்குந் தொந்த தேகம்
பள்ளவே பலவிதந்தான் பெற்றிருக்கும்
பரிந்துதொட்டுத் தேகத்தைப் பார்த்துச் சொல்லே.''

(நாடிநிதானம்—செ.30)

ஊறு

பரிசத்தால் சாதலையறிதல்

''இடங்கரா மைமயிலே யிந்துமத்தி வெம்மை
இடங்கரா மைமரங்க லித்தை—இடங்கரா
நாள முளியரமு நாலேழெட் டொன்பானை
நாளமுளியரமா நாடு''.

(தே.ய.)

(பதவுரை) இடங்கர் ஆ—முதலையின்[முதுகைப்போல் இருக்குமாயின்], முந்நால் [நாள்]—பன்னிரண்டு நாட்களிலும், ஆமை—ஆமையின் [முதுகைப்போல் கடினமும் வரட்சியுமாயிருக்குமாகில்]. ஏழெட்டு [நாள்]—ஐம்பத்தாறு நாட்களிலும், மயிலே—மீனின் [வாற் புறத்தைப்போல் சுரசுரப்பாயிருக்குமாகில்], ஒன்பான் ஐ [நாள்]—நாற்பத்தைந்து நாட்களிலும், இந்து—சந்திரனைப் [போல் குளிர்ச்சியதிகமாயிருக்குமாகில்], முந்நால் நாள்—பன்னிரண்டு [சாமங்களிலும்], மத்தி—சீதோஷணம் அதிகமா[யிருக்குமாகில்], [ஏழெட்டு நாள்]— ஐம்பத்தாறு [சாமங்களிலும்]

வெம்மை—அதி உஷ்ண [மாயிருக்குமாகில்], [ஒன்பான் ஐ நாள்]—நாற்பத்தைந்து [சாமங்களிலும்], இடம்—[முக்கியமான] பாகங்களில், கராமை—கையுள்ள மேகம் [போன்ற யானையின் தோலைப் போல் வன்மையா யிருக்குமாகில்], முந்நால் நாள்—பன்னிரண்டு [நாழிகையிலும்] மரம்—மரத்தைப் போற் [கெட்டியாயிருக்குமாகில்], ஏழெட்டு நாள்—ஐம்பத்தாறு [நாழிகைகளிலும்], கல்—கல்லைப்[போன்று திண்மையா யிருக்குமாகில்], ஒன்பான் ஐ நாள்—நாற்பத்தைந்து [நாழிகைகளிலும்], இத்தை—இவற்றையும், இடங்கர் ஆம் நாளம்—குடத்தைப் போன்றுள்ளதாகிய [தாமரை மலரின்] முள்ளை யொத்திருக்குமாகில் முந்நால் நாள்—பன்னிரண்டு விநாடியிலும், உளி—உளியைப் [போற் கூர்மையாயிருக்குமாகில்], நாள்—ஐம்பத்தாறு [விநாடிகளிலும்], அம்மா—அம்மா, நாள் அம் முளியர் நாடு —தங்கள் வாணாளின் அளவை முடிப்பார்களென்று நீ நாட்டங் கொள்வாயாக.

(பொழிப்புரை உடலில் முதலைத்தோல், ஆமை யோடு, மீன் வாற்புறம் ஆகிய இவற்றைப்போன்றபரிசமுடைய நோயாளிகளாயின், முறையே 12, 56, 45 நாட்களிலும், அதிகுளிர்ச்சி, அதிசீதோஷ்ணம், அதிவெப்பம் என்னும் இத்தன்மையுடைய நோயாளிகளாயின், முறையே 12, 56, 45 சாமங்களிலும், மரணமடைவார்கள். முக்கியமும் மிருதுவுமான இடங்கள், யானைத் தோல், மரம், கல் ஆகியவற்றின் பரிசமுடையவைகளாயிருக்கப் பெற்ற நோயாளிகளாயின் முறையே 12, 56, 45 நாழிகைகளிலும் மேற் கூறப்பட்ட அவ்விடங்களே, தாமரைமுள், உளி அரம் ஆகியவற்றின் பரிசமுடையவைகளாயிருக்கப் பெற்ற நோயாளிகளாயின் முறையே 12, 56, 45 விநாடிகளிலும் மரணமடைவார்களென்பதே.

நாள் என்பது தினத்திற்கும், முகூர்த்தத்திற்கும், கால அளவுகளும் பெயராகலின், இங்கு நாளுக்கும் சாமத்திற்கும், நாழிகைக்கும், விநாடிக்கும் பிரயோகித்தனர். இவ்வெண்பாவிலுள்ள 12 பொருள்களை, மும்மூன்று கொண்ட நான்கு பிரிவுகளாய்ப் பிரித்து, ஒவ்வோர் பிரிவிலுள்ள மூன்றுக்கும் முறையே முந்நால் ஏழெட்டு, ஒன்பான் ஐ என்னும் எண்களைக் கூட்டிக் கொண்டும், நான்கு பிரிவு கட்கு முறையே நாள், சாமம், நாழிகை, விநாடி என்னும் நான்கையும் சேர்த்துக்கொண்டும் பொருள் கொள்ளல் வேண்டும்.

ஐவகை வியர்வை

எண்சீர் விருத்தம்

'' குன்றாம லுடல்வேர்க்கும் விதமோ ரைந்தாம்
குணம்வினவி லதனைநனி கூறக் கேண்மோ

நன்றாக மலந்தங்கி னோர்க்கும் வெப்பு
நமுவியகன் றிட்டோர்க்கும் வாயு வேறி

நின்றாடு மேனியர்க்குஞ் சந்நி யேறி
நிறைவுபிணி யோர்தமக்குங் கண்டு சீவன்
அன்றேபோ கின்றவர்க்கும் வேர்வை யுண்டாம்
அதனிலைமை யின்னமெடுத் தறைகு வேனே.''

(கருத்துரை) இச் செய்யுள் வியர்வை விடுதல் ஐந்து வகை யாகு மென்று கூறுகின்றது.

(பதவுரை) குன்றாமல்—குறையாமல், உடல்—உடம்பில், வேர்க்கும் விதம்—வேர்வை விடும் வகை, ஓர் ஐந்தாம்—ஐந்தா கும், குணம் வினவில்—அவற்றின் தன்மைகளைக் கேட்பாயாகில் அதனை—அதை, நனி—மிகவும் தெளிவாய், கூறக்கேள்—சொல் லக் கேட்பாயாக, நன்றாக—முழுமையும், மலம் தங்கினோர்க்கும் —மலச்சிக்கலுள்ளவருக்கும், வெப்பு—சுரமடித்து, நழுவியகன் றிட்டோர்க்கும்—இறங்கப்பட்டவர்களுக்கும், வாயு—வாத மானது, ஏறி—மிகுதியாகி, நின்று ஆடு மேனியர்க்கும்—அதனால் வருந்துகின்ற உடம்பினர்க்கும், சந்நி ஏறி நிறைவு பிணியோர் தமக்கும்— சந்நி நோய் மிகுந்து நிறைந்த பிணியினர்க்கும், சீவன் அன்றே போகின்றவர்க்கும்—அன்றே உயிர் இழக்குந் தறுவாயில் இருக்கின்றவர்க்கும், வேர்வை உண்டாம்—வேர்வை விடும், இன் னம்—இன்னும், அதன் நிலைமை—அவ் வேர்வையின் தன்மை களை, எடுத்து அறைகுவேன்—எடுத்து நன்றாய்ச் சொல்வேன்.

(பொழிப்புரை) 1. மலச்சிக்கல் நோய், 2. சுரம் விட்ட உடம்பு, 3. வாத நோய், 4. நிறைந்த சந்நி நோய், 5. உயிர் நீங்குந் தறு வாய் இக்காலங்களில் நோயினர் உடலில் வியர்வை விடும்.

''அறைகின்ற சுரமுற்று மான பேர்கட்
கங்கமெல் லாம்வேர்க்கு மநில மங்கத்
துறைகின்ற பேருக்கத் தன்மை யேயாம்
உயர்மலந்தீ ராப்பேர்க்கு நெற்றி வேர்க்கும்
கறைகொண்ட கண்டத்தில் வேர்வை யுண்டாம்
கலந்திருந்த சீவன்விடு காலந் தன்னில்
நிறைகொண்ட சந்துகடோ றுந்தான் வேர்க்கும்
நிறைசந்நி பாதத்துக் கென்று கூறே.''

(கருத்துரை) இச்செய்யுள் அந்த ஐந்துவகை வேர்வைகளின் விளக்கம் கூறுகின்றது.

(பதவுரை) அறைகின்ற—சொல்லுகின்ற, சுரம்—சுரமானது, முற்றும் ஆனபேர்கட்கு—முழுதும் பரவி அடித்து விட்டபேர்க்கு, அங்கம் எல்லாம் வேர்க்கும் உடம்பு முழுமையும் வேர்வைவிடும், அநிலம் வாயுவானது, அங்கத்து உறைகின்ற பேருக்கு—உடம்பில் நிறைந்திருப்பவர்களுக்கு, அத்தன்மையே யாம்—அவ்வாறே உடம்பு முழுமையும் வேர்வைவிடும், உயர் மலந்தீரா பேருக்கு—மலச்சிக்கல் உள்ளவர்களுக்கு, நெற்றி வேர்க்கும்—நெற்றியில் வேர்வைவிடும், கலந்து இருந்த—உடம்

பில் கலந்திருந்த, சீவன்—உயிரானது, விடுகாலம் தன்னில் உடலை விட்டுப் பிரியும் காலத்தில், கறை கொண்ட அழுக்குப் படிந்த, கண்டத்தில் கழுத்தில், வேர்வை உண்டாம் வேர்வைவிடும், நிறை நிறைந்த, சந்நிபாதத்துக்கு சந்நிபாத சுரத்திற்கு, நிறை கொண்ட உடலில் நிறைந்த, சந்துகள் தோறும் வேர்க்கும் பூட்டுகள் அல்லது கீல்களிலெல் லாம் வேர்வை விடும், என்று கூறு—என்று சொல்வாய்.

(பொழிப்புரை) உடம்பில் வாயு நிறைந்தவர்களுக்கும், சுரம் முழுவதும் அடித்துவிட்ட பேர்களுக்கும் உடம்பு முற்றி லும், மலச்சிக்கல் நோயினர்க்கு நெற்றியிலும், உடம்பை விட்டு உயிர் நீங்கக் கூடிய நிலையிலிருப்பவர்களுக்குக் கழுத்திலும், சந்நிபாத நோயினர்க்குக் கீல்களிலும் வேர்வை வுண்டாகும் என்று அறிதல் வேண்டும்.

முக நிறம்

''வாத ரோக மனிதர்கள் மாமுகம்
ஒதி னுெங்கறுப் பாயிடு முண்மையே
வேத நீதி விளம்பிய பித்தத்தோர்க்
கேது வாய்முக மஞ்சளி னெய்துமே.''

''எய்து சேத்தும மெழுந்தவர் மாமுகம்
மெய்ய தாகவே மிகவும் வெளுத்திடும்
ஐய னுருறை செய்த வரும்பொருள்
செய்தி யான வயித்திய சிரேட்டரே.''

(திரட்டுநாடி செய் 46, 47)

வாதப் பிணியினர் முகம் கறுத்தும், பித்தப்பிணியினர் முகம் மஞ்சள் நிறம் பெற்றும், சேத்துமப் பிணியினர் முகம் வெளுத்துமிருக்கும்.

அன்றியும், பித்தப் பிணியினர் முகம் தழல் நிறமாகவும் இருக்கும் என்பதை அடியிற்கண்ட செய்யுளால் அறியலாம்.

''முகமது வாதத் துக்கு முகமது கறுத்துக் காணும்
தகைமைசேர் பித்தத் திற்குத் தழனிற மஞ்ச ளாகும்
அகமது ஐயத் திற்கு அதிகமாய் வெளுத்தி ருக்கும்
செகமதில் முனிவர் தாமும் தெரியவே யுரைக்க லுற்ருர்.''

பல்லின் நிறத்தால் முக்குற்றமறிதல்

''விளம்பிய வாத ரோகி தந்தமே வெளுத் திருக்கும்
பளப்படு பித்த பராகி பல்லுமஞ் சளித்தி ருக்கும்
உளங்கொளுஞ் சேத்ம ரோகி பல்வெளுப் பாகு முண்மை
துளங்கிடு தொந்த ரோகிக் கிவ்வகை தொகுத்துச்சொல்லே.''

வாய் நீர்ப்பரிட்சை

''வாய்நீர்ப் பரீட்சை மதுநெய்யெண் ணெய்முன்னேய்
வாய்நீர்ப் பரீட்சை மழைகளியை—வாய்நீர்
மறிமா னெயகால மஞ்ஞைகிளி கொக்கு
மறிமா னெயகைகை வாள்.'' (தே. ய.)

(ப.ரை.) வாய்நீர் பரீட்சை—நோயாளியினது வாய்நீரை எப்படி சோதிப்பதென்றால், மது நெய் எண்ணெய் முன்னேய்—கள்ளைப் போலிருந்தால் வாத சுரமென்றும், நெய்யைப் போலிருந்தால் பித்த சுரமென்றும், எண்ணெயைப்போலிருந்தால் சேட்ப சுரமென்றும், வாய் நீர்ப்பு—வித்தியாசமான ருசிகரமாயிருந்தால், அரீட்சை காக்கைவலி யென்றும், மழைகளியை வாய் நீர்—தண்ணீரானல் வாத சன்னியென்றும், குழம்பானல் பித்த சன்னியென்றும், மெழுகு பதம் போலேயானல் சேத்ம சன்னி யென்றும், மறிமானெயகால—எச்சிலையுமிழ்ந்தால் ஆட்டு வாயிலிருந்து ஒழுகும் உமிழ்நீர் போலானல் வாத சத்தி யென்றும், மானைப் போலப் பாய்ந்தால் பித்தமாரக சன்னி சத்தி யென்றும், முள்ளம் பன்றியைப் போலானல் சேத்ம சன்னிமூர்ச்சை யென்றும், மஞ்ஞைகிளி கொக்கு—மயிலிறகு வர்ணமானல் வாத மூல மென்றும், கிளியிறகு வர்ணமானல் பித்த மூல மென்றும், கொக்கிற்கு வர்ணமானல் சேத்ம மூலமென்றும், மறி மானெயகை கைவாள்—எச்சிலையுமிழ்ந்தவுடனே கீழே குறுக்கிட்டு விழுந்தால் கயரோக மென்றும், நீண்டு கிடந்தாற் போல விழுந்தால் அரோசக ரோக மென்றும், உருண்டையாய் விழுந்தால் ருத்திர மரண வாயு ரோக மென்றும் பண்டிதராலே சொல்லப்படும்.

எச்சில்

''எச்சிற் பரிவா யிளநீர்பால் வெண்ணெயலை
எச்சிற் பரிவா யிலகுநுரை—எச்சில்
களியடைமா நன்றுமுதற் கண்ணுன்கு முன்னிக்
சுளியடைமா மேவுபிட கா.'' (தே.ய.)

(பொழிப்புரை) எச்சிலானது,—

1. இளநீரைப் போன்றிருக்குமாயின் உத்தமோத்தமமென்றும்,

2. பாலைப்போன்று வெண்மையாயும் சற்று குழம்பாகவுமிருக்கின் உத்தம மத்திம மென்றும்.

3. வெண்ணெயைப் போலமுந்தி வெண்மையாயுமிருக்கின் மத்தி மோத்தம மென்றும்.

4. தயிரைப்போல வெண்மையும் சற்று அழுந்தியும் நீர் கலந்து மிருப்பின் மத்திம மத்திமமென்றும்,

5. குதிரை வாயினின்ருெழுகும் நுரையைப் போன்றிருக்குமாயின் அதமோத்தம மென்றும்,

6. களியைப் போன்று கடினமாயிருக்கில் அதம மத்திம மென்றும்,

7. ஓட்டிற் சுடப்பட்ட ஓட்டடையின் கடினத்தை ஒத்திக்கின் அதமா தமம் என்றும்.

8. மாவைப்போல வரட்சியாயிருக்குமாயின் அதமாத மத்திலு மதமம் என்றும்.

இவ்விறுதிக்குறி அதிக சமீபத்தில் மரணத்தைக் கொடுக்குமென்றும் அறியக்கடவாய்.

சுவை

''கைப்பினிமை யாம்பிரமை காரலுவர் கார்ப்பாறுங்
கைப்பினிமை யாம்பிரமை கான்மாறிற்—கைப்பினிமை
வாரமதி பக்கமின்றி வைக றிதியிருத்தை
வாரமதி பக்கமாள் வார்.'' (தே.ய.)

(பதவுரை) கைப்பு—கசப்பாகிய (பொருள்கள்), இனிமை—இனிப்பாகிய (பொருள்கள்), ஆம்பிரமை காரல்—புளிப்பான பொருள்கள் கார்ப்பான் பொருள்கள், உவர்—உவர்ப்பான (பொருள்கள்), கார்ப்பு—துவர்ப்பு (பொருள்கள்) ஆறும்—இவ்வாறு சுவை பொருள்களும், கைப்பின் இமை ஆம் பிரமை கான் மாறில்—வரிசை மாறி இமை நேரத்திற்குள் விளையும் விபரீத காலத்தைப்போல் மாறுபடுமாயின்.

(முறையே.)

வாரம் மதி பக்கம்—வாரத்திலும், திங்களிலும் பக்கத்திலும், வைகல் திதி இருத்தை —இப்பகலிலும், ஒரு நாளிலும், ஒரு நாழிகையிலும், கைப்பு இனிமை வாரம் மதிப்பக்கம் இன்றி மாள்வார்—வெறுப்பு, உவப்பு, அன்பு, அறிவு, பட்சம் (என்னும் இவைகள் அற்றவர்களாய்) இறப்பார்கள்.

(பொழிப்புரை) கசப்பான பொருள்கள் கைக்காமல் ஏனைய சுவையுள்ள பொருள்கள் கைத்தால் ஒரு வாரத்திலும், இனிபான பொருள்கள் இனிக்காமல், மற்றைய சுவையுள்ள பொருள்கள் இனித்தால் ஒருதிங்களிலும் புளிப்புச் சுவையுள்ள பொருள்கள் புளிக்காமல் மற்றைய பொருள்கள் புளித்தால்

15 நாட்களிலும், காரமாகிய பொருள்கள் காரமாயிராமல், ஏனைய பொருள்கள் காரமாயிருந்தால் 1/2 நாளிலும் உப்புக் கரிக்கும் பொருள்கள் உப்புக்கரிக்காமல், ஏனைய பொருள்கள் உப்புக்கரித்தால் ஒரு நாளிலும், துவர்ப்புள்ள பொருள்கள் துவர்க்காமல், ஏனைய பொருள்கள் துவர்த்தால் ஒரு நாழிகை யிலும் இறப்பார்கள் என்பதே.

குறிப்பு: இவ்விதம் சுவை மாறுபடக்காணும் நோயினன், பெரும்பாலும் ''சித்தப் பிரமை'' யுடனிருப்பன் என்பதே துணி பாம்.

சொல் ஒலி

''பலரோகி வார்த்தை பலவிதமாம் வாதத்
தலைரோகி வார்த்தை சமமாம்—நிலைகடந்த
பித்தரோ கிக்குயர்ந்த பேச்சுண்டாஞ் சேத்மந்தான்
சத்தமிசைச் சுரமாகுந் தான்.''

(பொழிப்புரை) வாத நோயாளிக்குச் சமவொலியும், பித்தநோயாளிக்கு உயர்ந்த ஒலியும் (சிரித்துக் குழறிய தொனி யும்), ஐய நோயாளிக்கு இன்னிசைபோன்ற ஈனத்தொனியும், கலப்பு நோயாளிக்குக் கலப்புக் குற்றச் சார்பான கலப்பொலி யுமாய் இருக்கும்.

ஒலிக் குறிப்பு.

''வீணையிசை நத்தோசை வேயோசை நாயோசை
வீணையிசை நத்தோசை வெற்போசை—வீணையிசை
தாரையியம் பேரியியந் தப்பாதொன் ருதிலக்கந்
தாரையியம் பேர்கனல்வீ தான்'' (தே.ய)

(பதவுரை)—வீணை இசை நத்து ஓசை வேய் ஓசை நாய் ஓசை —வீணையின் ஒலி, சங்கின் ஒலி, புல்லாங்குழலொலி, பாச் சிகை ஒலி, வீண் ஐ இசை நத்து ஓசை—விருதாவாகிய ஓர் வகைப் பறவையின் ஒலி, வெற்பு ஓசை—மலையினடிவாரத்தினின் றெழும் ஒலி, வீழ் நை இசை—(கிணற்றில்) வீழ்ந்து வருந்துவோர் ஒலி, தாரை இயம் பேரி இயம்— தாரையின் ஒலி, பேரியின் ஒலி (ஆகிய இத்தகைய தொனியுள்ள நோயாளிகட்கு), தப்பாது ஒன்று ஆதிலக்கம் தாரை இயம்பு ஏர் கன்னல் வீதான்—தவரு மல் ஒன்று முதலாகச் (சொல்லத்தக்க) எண்ணின் வரிசையைச் சொல்லுவாய் பொருந்திய நாழிகையில் மரணந்தானென்று.

(பொழிப்புரை) வீணை, சங்கு, புல்லாங்குழல், பாச்சிகை, பறவை என்னும் இவற்றின் ஓசையைப் போன்ற ஒலியும், மலையின் அடிவாரத்தினின்றும், கிணற்றுக்குள்ளிருந்தும், பேசு வோரைப் போன்ற ஒலியும், தாரை, பேரி என்னும் வாத்திய ஒலியை ஒத்த ஒலியும், உடைய பிணியாளிகட்கு முறையே ஒரு

நாழிகை, ஒன்றரைசாமம், 1 3/4 நாள், 16 3/4 நாள், 33 1/2 நாள், 50 நாள், 66 3/4 நாள், 83 1/2 நாள், 100 நாள் என்னும் இக்கணக்கின்படியான நாட்களில் மரணமாவார்கள் என்பதாம். ஒன்றாதிலக்கம் என்றது, ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், 2,000, 3,000, 4,000, 5,000, 6,000 என்பவையே.

கண்ணின் குறி

''வாதத்தோர் விழிகறுத்து வன்றிமை வாழ்ந்திருக்கும்
தீதுற்ற பித்தத்தோர்க்கு சேல்விழி மஞ்சளிக்கும்
கோதுற்ற சிலேற்பத்தோர்க்கு கூர்விழி வெளுத்திருக்கும்
மீதுற்ற தொந்தத்தோர்க்கு விருமல நிறமதென்னே.''

(பொழிப்புரை) வாத நோயாளிக்குக் கண்கள் கறுப்பாயும், கொஞ்சம் மப்பாயும், நீர் வடிந்துகொண்டிருக்கும், பித்த நோயாளிக்கு மஞ்சளாகவாவது சிவப்பாகவாவது இருக்கும், கபநோயாளிக்குப் பீளை சேர்ந்தாவது வெளுத்தாவது இருக்கும், சன்னிபாத நோயாளிக்கு மஞ்சள் கலந்த செந்நிறமாயிருக்கும். காமாலைப் பிணியாளர்க்கு மஞ்சளாகவே இருக்கும்.

காதின் தோற்றத்தால் முக்குற்றமறிதல்

''செவியினில் வாத மானால் சீழ்சடை யடைத்துக் கொள்ளும்
செவியினிற் பித்த மானால் தினவுடனூற லுண்டாம்
செவியினி லையஞ் சோரி சிந்திடும் வீங்கிக் குத்தும்
செவியினில் முக்குற் றங்கள் செய்திடும் வாறதாமே.''

(பொழிப்புரை) செவியினில் வாதம் சேர்ந்தால் சீழ்குறும்பி இவைகள் சேர்ந்து அடைத்துக்கொள்ளும், பித்தம் சேரில் நமைச்சலுடன் ஊறலுண்டாம். கபம் சேர்ந்தால், வீங்கிக் குத்தலுடன் இரத்தம் சொரியும்.

மணத்தன்மை

''ஆம்பல் கணிதாழை யார்மதலை சாதிமரை
ஆம்பல் கணிகடிகை யாமிதி—ஆம்பல்கணி
திங்க ளிருதயனஞ் செப்புமர ணக்குறிப்பு
திங்க ளிருதயன்றாள் சேர்.'' (தே.ய.)

(பொழிப்புரை) நோயாளி அடியிற்கண்ட பூக்களுக்குரிய இயற்கை வாசனையை அறியாமல், அதற்குப் புறம்பான மற்றப் பூக்களிடத்தில் அவ்வாசனையைப் பெறுவானாகில், அவன் அவ்வப் பூக்களின் கீழ்க் குறிப்பிட்ட காலத்தில் உயிர் துறப்பான் என்பதாம்.

(1) மூங்கிற் பூ எவ்வித வாசம் தருமோ அதை அவன் உணராது அவ்வாசனையை வேற்று மலர்களிடத்தில் காண்பானாகில் 7 வினாடியிலும், அவ்வாறே, (2) வேங்கைப் பூ, (3) தாழம் பூ, (4) அத்திப் பூ, (5) கொன்றைப் பூ, (6) சிறு சண்பகப் பூ, (7) தாமரைப்பூ இவைகளிடத்தில் காண்பானுகில், முறையே 7 நாழிகையிலும், 4 சாமங்களிலும், 7 நாட்களிலும், ஒரு திங்களிலும், இரண்டு திங்களிலும், ஆறு திங்களிலும் மரணமடைவான் என்பதேயாம்.

சுக்கிலத் தன்மை

''ஐயமனை பான்மோர்தே னாச்சியங்கள் கம்மிவையை
ஐயமனை யாதறிந்து கொள்வாய்—ஐயமளை
உத்தமத்தை முன்னே ருணரிந்த்ரி யப்பரிட்சை
உத்தமத்தை நூலதரை யோர்.'' (தே.ய)

(பொருள்):—

பிணியாளியின் சுக்கிலம் :

1. வெண்மையும் வெண்ணெய்க்கு நிகராயுமிருப்பின், உத்தமோத்தம மென்றும்,

2. வெண்மையும் தயிருக்கு நிகராயிருப்பின், உத்தமத்தில் இரண்டாந்தர உத்தமமென்றும்.

3. வெண்மையும் பாலுக்கு ஒப்பாகவுமிருப்பின் மத்திமோத்தமமென்றும்,

4. வெண்மையும் மோருக்கு ஒப்பாயுமிருக்கின், மத்திம மத்திமமென்றும்,

5. தேனையும் அதன் நிறத்தையுங் கனத்தையு மொத்திருந்தால், அதமோத்தம மென்றும்,

6. நெய்யையும் அதன் நிறத்தையும் கனத்தையு மொத்திருந்தால் அதம மத்திமமென்றும்.

7. கள்ளைப்போன்ற நிறமும் தடிப்புமிருப்பின் அதமாதமோத்தமம், அதாவது தீர்வதற்குச் சிறிதுங் கூடாததும், மிகப்பொல்லாங்கையே விளைவிக்கத்தக்கதென்றும்,

8. தண்ணீரைப்போலவிருப்பின் சாரம் முதலிய உடற்கட்டுகளிலும் சற்றும் சாரமற்றவனென்றும், உயிருடனிருந்தாலும் பிணத்துக்கு ஒப்பானவனென்றும் உணரக்கடவாயாக.

குறிப்பு : உத்தமமும் அதன் வகையுந் தவிர மற்ற நிலையிலுள்ள சுக்கிலத்தை நன்னிலைக்குக் கொண்டுவருவது கடினமென்றுலும், வெண்ணீரைப் பெருக்கி வன்மைப் படுத்தக் கூடிய சிறந்த மருந்துகளால், நுட்ப அறிவுள்ள மருந்துவன் தீர்ப்பான் என்பது மருத்துவ நூற்களின் துணிபு என்பதை அறிவாயாக.

மரண மறிதல்

''அழிந்திடுங்கை காநெற்றி கன்னந் தம்மில்
அடர்ந்துதுடிப் புறிலாண்டு திங்க ளாறு
மொழிந்ததிங்கள் மூன்றுநாள் பத்திலாவி
முடிந்துவிடு மிதுவொழிய செவியி லோசை
ஒழிந்திடில்நா லேழுகண்ணி லொளிதா னைந்தாம்
உயர்மண்மூன் றிரண்டுநா வுரைவே றுனல்
கழிந்திடுநல் லுயிரென்று கருதி யீசன்
கழலிணையைப் போற்றில்வினை கழிந்து போமே.''

(பொழிப்புரை) ஒரு பிணியாளனுக்கு கை, கால், நெற்றி, கன்னம் ஆகிய இவ்வுறுப்புகளில் தொடர்ந்து துடிப்பு நேரிட்டால் முறையே ஓராண்டிலேனும், ஆறு திங்களிலேனும், மூன்று திங்களிலேனும், பத்து நாட்களிலேனும் உயிர் துறப்பான்; இது நிற்க,

1. காது அடியோடு கேளாவிடின் 7 நாட்களிலும்,

2. கண்ணாளி ஒழிந்துவிடின் 5 நாட்களிலும்,

3. மணத்தன்மை நீங்கின் 3 நாட்களிலும்,

4. பேச்சு வேறானல் 2 நாட்களிலும் உயிர் நீங்கும் என்பதாம்.

*நீர் நிறக்குறி

கடவுள் வணக்கம்

''ஒருதிருப் பிரணவத் துதித்தகா ரியனை
ஒத்தின்முன் மொழிக்குரை யுரைத்தவா ரியனைக்
கருணையி னுதவிய கவுரிதன் பாகன்
கருதரும் பெரும்பெயர்க் கடவுட னுகள
நிறப்பது மச்சரண் நெஞ்சில் இருத்தி
நிறக்குறி இயலினை நிலவப் புகல்வாம்

(பொழிப்புரை) ஒப்பில்லாத மேன்மை கொண்ட இரண்டற்ற கடவுட்டன்மையுள்ள ஓங்காரத்தினின்று தோன்றிய விநாயக மூர்த்தியையும், வேதத்தின் முதன் மொழியாகிய ஓங்காரத்தின் பொருள் எடுத்தோதிய நம் குருவாகிய முருகவேளையும், பார்வதிபாகனும் யாராலும் கருதுவதற்கியலாத பெரும்

---

* தேரர் நீர்க்குறி நெய்க்குறி—'' ஒரு திருப்பிரணவத்து என்ற தொடக்கத்தையுடைய சூத்திரமுதல்'' கரும நோய் இவையெல்லாம்'' என்ற சூத்திரம் வரை.

பெயர்க் கடவுளுமாகிய சிவபெருமான்தான் தன் கருணையால் தந்தருளிய செந்நிறம் பொருந்திய முளரிமலர் போன்ற இரண்டு திருவடிகளையும் எம்மனத்தின் கண் பதிய வைத்துக்கொண்டு நீரின் நிறக்குறி இயலினை யாவருக்கும் விளங்கும்படி சொல்லு வாம்.

நிர்க்குறி நெய்க்குறி நிச்சயத்தற்குரிய நீர் இலக்கணம்

''அருந்துமா றிரதமும் அவிரோ தமதாய்
அஃகல் அலர்தல் அகாலவூண் தவிர்ந்தழற்
குற்றள வருந்தி உறங்கி வைகறை
ஆடிக் கலசத் தாவியே காதுபெய்
தொருமுகூர்த் தக்கனலக் குட்படு நீரின்
நிறக்குறி நெய்க்குறி நிருமித்தல் கடனே.''

(பொழிப்புரை) உண்ணுகின்ற அறுசுவைப் பொருள்களும் ஒன்றுக்கொன்று வேற்றுமை யடையாமலும், பசிக்குத்தக்கப்படி குறைத்தல், அதிகரித்தல், காலம் தப்புதல் முதலிய குற்றங் களுண்டாகா வண்ணம் புசித்து உறங்கி, விடியற் காலத்தில் படிகபாத்திரத்தில் நீரை ஆவிபோகாதபடி பெய்த 3 3/4 நாழி கைக்குள் அதன் நிறக்குறியையும், அதில் எண்ணெய் விட்டுப் பார்த்து, காணப்படுகின்ற குறியையும் கவனித்து, பிணிகளின் தீரும் தீராத குறிகளை மெய்ப்பித்தல் முறைமையாம்.

நோயுற்றோர்க்கு ரேமபடி விதிவிலக்காம்

''அருப்ப முற்றூர்க் கவ்விதி விலக்கே''

(பொ-ள்) மிகவும் நோயுற்றாருக்கு முற்சூத்திரத்தில் கூறிய விதிகள் விலக்காம்.

நீரின் பொதுக் குணம்

''வந்தநீர்க் கரியெடை மணம் நுரை எஞ்சலென்
றைந்திய லுளவவை யறைகுது முறையே.''

(பொ-ள்) இழிகின்ற நீருக்கு 1. நிறம், 2. எடை, 3. நாற்றம், 4. நுரை, 5. குறைதல் என்று ஐந்து இயல்கள் உண்டு.

நிறத்தொகை

''பீதம் செம்மைபை கருமை வெண்மையென்
றோதைங் கொழுமையை யொத்துகு நீரே.''

(பொ-ள்) நீரானது 1. மஞ்சள், 2. சிவப்பு, 3. பச்சை, 4. கருமை, 5. வெண்மை என்னும் தனித்தனி ஐந்து நிற முள்ளதாய் இருக்கும்.

ஒவ்வொரு நிறத்திலும் காணும் உட்பிரிவுகள்

"அரிசனத் தாறும் அருணத்து நான்கும்
அரிதத் தைந்தும் அஞ்சனத் தொருநான்கும்
வெண்மையுள் இரண்டுமாய் விள்ளுஞ் சுருதியே."

(பொ-ள்) மஞ்சள் நிறத்தில் ஆறு வகையும், சிவப்பில் நான்கு வகையும், பச்சையில் ஐந்து வகையும், கறுப்பில் நான்கு வகையும், வெண்மையில் இரண்டு வகையுமாய்ப் பிரியும் என்று மருத்துவ நூல் கூறும்.

மஞ்சள் நீர் விகற்பம்

"மஞ்சள்நீர் விகற்ப வன்னம் புகலுதும்."

(பொ-ள்) மஞ்சள் நிறமுள்ள நீரின் நிறவகையைச் சொல்லுவாம்.

சிரண அபக்குவ நீர் நிறம்

"நீரணும் வழுதுகு நீத்தம் நிறமெனின்
சீரணக் குறைவின் அபக்குவ நீரே."

(பொ-ள்) நீரானது, மழை முதலிய நீரால் நனைந்து, ஊறிய வைக்கோலிலிருந்து ஒழுகுகின்ற நீரின் நிறமாயிருக்குமாயின், அந்நீர் சீரணக் குறைவாகிய பக்குவக் குறைவால உண்டானதாகும்.

சிரண பக்குவ நீர்நிறம்

"பாரில் துரிஞ்சிப் பழநிறம் பொருந்தில்
சீரணப் பக்குவ நீரெனத் தேரே."

(பொ-ள்) நீரானது, துரிஞ்சிப் பழநிறத்தைப் பொருந்துமானுல், அந்நீர் சீரண பக்குவத்தால் உண்டானதென்று அறிந்து கொள்க.

மிக வெம்மையால் உண்டாகும் நீர் நிறம்

"செம்மையும் நிசியும் சேர்ந்தெழு நிறமெனின்
வெம்மை யுயர விளைந்தவிர் நீரே."

(பொ-ள்) நீரானது, சிவப்பும் மஞ்சளும், கலந்து இழியுமானுல், மிகு வெம்மையால் விளைந்த நீரென அது விளக்கும்.

சூட்டை தரற்குறிய நீர் நிறம்

“காட்டின் நரந்தக் கனிநிறம் காணில்
சூட்டைத் தரற்குத் தொடுகுறி நீரே.”

(பொ-ள்) காட்டு நாரத்தம் பழந்தோலின் நிறமாய் வெளிப் படும் நீர், சூட்டைக் கொடுப்பதற்கு உண்டான நீராகும்.

அதிவுட்டின நீர் நிறம்

“கொதியனல் நிறத்தின் கொள்கையே யாயின்
அதிவுட் டினத்தை யடைந்தநீ ராமே.”

(பொ-ள்) கொதிக்கின்ற தீயின் நிறத்தைப் பொருந்தி இறங்கும் நீர், மிகுந்த சூட்டினை யடைந்த நீராகும்.

முன்னிலும் அதிவுட்டின நீர் நிறம்

“பீதமுங் குங்குமப் பூவுமா ரெழிறரின்
ஏதிதன் மேல்வெப் பின்றெனும் நீரே.”

(பொ-ள்) நீர், மஞ்சள் நிறமும், அதில் அரைத்த குங்குமப்பூ நிறமும், வரிவரியாய்ப் பொருந்தி இருக்குமானால், இதற்கு மேலாக வெப்பு இல்லை என்று சொல்லத் தக்கதாகும்.

செம்மைநிற நீர் வேற்றுமை

“செம்மை நீர் விகற்பச் செய்தி நவிற்றுவாம்.”

(பொ-ள்) சிவப்பு நீரினது பேதத்தைக் கூறுவாம்.

இரத்தம் பொங்கிய நீர்

“அரத்தமுங் கருமையும் அண்ணிய கறைதரின்
இரத்தம் பொங்கலால் இறங்கிய நீரே.”

(பொ-ள்) செமமையுங் கருமையும் பொருந்திய நிறத்தைக் காட்டும் நீர் இரத்தம் பொங்குதலாலுண்டாகின்ற நீராகும்.

மிகு இரத்தக் கொதிப்பாலுண்டாகும் நீர்

“செக்கச் சிவந்தபன் னீர்ப்பூப் பகருறின்
மிக்கு திரக்கொதிப் பாலுகு நீரே.”

(பொ-ள்) நீரானது மிகுந்த செந்நிறமுள்ள பன்னீர்ப்பூ நிறத்தைப் பொருந்துமானல், அஃது அதிக இரத்தக் கொதிப்பினல் இறங்குகின்ற தாகும்.

முன்னிலும் அதிகமாகப் பொங்குதலால் உண்டாகும் நீர்

''கருமையுள் செம்மைசேர் கறையும் சிவப்பும்
குருதி பொங்கிய குறிபுகல் நீரே.''

(பொ-ள்) நீரில், கறுப்பும் அதில் சிறிது செம்மையும் கலந்த நிறமும், இவைகளை யன்றித் தனித்த அதிக சிவப்பு நிறமும, உண்டாயிருக்குமானல், அஃது இரத்தம் பொங்கிய குறியைக் கூறும் நீராகும்.

பச்சை நீர் வேற்றுமை இயல்

''பச்சைநீர் விகற்பம் பன்னுது மிவணே''

(பொ-ள்) பச்சைநீரின் பேதத்தை இங்குக் கூறுவாம்.

சீதள நீர்

'' கருமைச் சாமளக் கருவுறு மாயின்
வருசீ தளத்தால் வரப்படு நீரே.''

(பொ-ள்) நீர், கறுப்பு நிறத்தையும் சிறிது பச்சை நிறத்தையும் கலந்ததானால், சனித்துக் கொண்டிருக்கிற சீதளத்தினால் வருகின்றதாகும்.

விஷத்தாலுண்டாகும் சீதள நீர்

'' இடத்துறு குணத்தை யேய்க்கு மெனிலோ
விடத்துறு சீதளம் மேலிடு நீரே.''

(பொ-ள்) நீர், ஆகாய நிறத்தை யொத்திருக்குமானால், விஷத்தினாலுண்டான சீதளம் அதிகரித்தலால் உண்டானதாகும்

ஈண்டுங் கூறிய விஷமாவது (1) கிருத்திரம விஷம், (2) அகிருத்திரம் விஷம் என இருவகைப்படும். இவற்றுள் கிருத்திரம விஷமாவது; நாபி முதலிய பூண்டுகளையாவது. பாம்பு முதலிய ஜந்துக்களின் விஷங்களையாவது மற்றொரு வத்துவிற் கலந்து கொடுக்கப்படுவதாம். இது இடுமருந்தென்றும் சொல்லப்படும்.

அகிருத்திரம விஷமாவது : தாவரவிஷம், சங்கம விஷம் என இருவகைப்படும்.

தாவர விஷமாவது : பூண்டு, செடி, கொடி, புல், மரம் ஆகிய இவைகளின் கிழங்கு, வேர், பட்டை, பால், பிசின், இலை, பூ, காய், கனி முதலிய பொருள்களிலும் பாஷாணமுதலிய தாதுக்களிலும் இருக்கின்ற விஷமாம்.

சங்கம விஷமாவது : அரவம், கீடம், தேள், சிலந்திப் பூச்சி, நாய், நரி முதலியவைகளின் விஷமாம்.

மிகு சீதள நீர்

'' தகுமொரு நீலச் சாயைகாண் டிடினோ
மிகுசீ தளத்தால் விளைநீ ரிதனால்
மருத்துநோய் பால விருத்தர்க்கு மாமே.''

(பொ-ள்) நீரில் ஒருவித நீலச்சாயை காணுமானால் மிகுந்த சீதளத்தினாலுண்டானது எனக்கொள்க. இந்நீரினால் பாலர்களுக்கும் விருத்தர்களுக்கும் வாதரோகம் உண்டாகும்.

வாதபித்த கபங்களைக் கெடுக்கும் நீர்

'' அம்மநீ லத்துரு வார்ந்து தடிக்குமேல்
மும்மலச் சிதைவை முளைப்பிக்கு நீரே.''

(பொ-ள்) நீர், நீல நிறத்துடன் தடித்துமிருக்குமானால், அது வாத பித்த கபங்களுக்குக் கெடுதியை யுண்டாக்குவதாகும்.

மேற்கூறிய மும்மலங்களை மிகவும் கெடுக்கும் நீர்

'' சொக்கிலைப் பச்சையின் தோற்ற முளதேல்
மிக்கும் முமலங்கெட விழுநீா கொடிதே

(பொ-ள்) நீர், சொக்கமான இலைப்பச்சை போல நிறமுள்ளதாய் இருக்குமானால், வாத பித்த சிலேஷ்மங்கள் மிகவும் கெடுவதற்கு இழிகின்ற தாகும். ஆதலின், இது கொடிய நீராகும்.

கருமை நீர் நிற வேற்றுமை.

'' கருமைநீர், விகற்பம், கழறப் புகுவாம்.''

(பொ-ள்) கருமை நீர் வேற்றுமையைக் கூறுவாம்.

காமாலை நோயைத்தரும் நீர்.

'' வான்மீக வெழிற்குண் மைக்குண முறினது
தான்கா மாலைநோய் தருமஃ தின்றெனில்
பித்தநோ யேனும் பிறக்கப் பணிக்குமே.''

(பொ-ள்) குங்குமப்பூ நிறத்துள் கருமை நிறம் தோன்றுமானால், அந்த நீர் காமாலை நோயையேனும், பித்த நோயையேனும் உண்டாக்கும்.

உதிரக்கெடுதி

'' அம்மையுஞ் சிறிய செம்மையுஞ் சிவணினோ
அரத்தத் தழிவென் றறைதரு நீரே.''

(பொ-ள்) நீரானது முன் சொல்லப்பட்ட குங்குமப்பூ நிறத்துடன் கலந்த கரு நிறத்தோடு, சிறிது செம்மை நிறமுங் கலந்திருக்கக் காணில் அஃது இரத்தக் கெடுதியினாலுண்டாகிற நீராம்.

உதிரத்தழுக்கைக் காட்டும் நீர்

'' கார்க்குள் புன்னரிக் கருவிர வியதெனின்
ஆர்க்கத் தழுக்கை யறிவித்த நீரே.''

(பொ-ள்) நீரில், கரிய நிறத்துடன் சிறிது பச்சை நிறமுங் காணப்படின், அஃது இரத்தத்தினுடைய அழுக்கைத் தெரிவிப்பதாகும்.

சிலேத்தும வாதக் கெடுதி

'' மையும் வெளிறும் மருவிய சாயையேல்
ஐயுயிர் மிகக்கொதித் தழிவுறு நீரிது
காலா தீதக் கனல்பவத் துடையது
மாலாந் தருண சுரத்தர் விருத்தர்க்
குண்டாமை திரவியத் தூணாற் கொடிதே.''

(பொ-ள்) கரிய நிறமும் வெண்ணிறமும் சேர்ந்துண்டான நிறமுடையது போல் தோன்றின் அந்நீர் சிலேத்தும வாத தோடங்கள் அதிகமாய்க் கொதித்துக் கெடுதலைத் தருநீராம். அது நெடுங்காலத்திற்கு முன் வெப்ப உற்பத்தியினால் உண்டானதாகும். அது மயக்கங் கொடுக்கிற தருண சுரக்காரருக்கும், கிழவருக்கும் உண்டாவது. அஃது ஐயப் பொருளை மிகுதியாயுண்பதாலுண்டாகிறதாகையால், கொடிய நீராம்.

வெண்மை நீர் விகற்பம்

'' வெண்மை நீர் விகற்பம் விரித்தினி துரைப்பாம் ''

(பொ-ள்) இனி வெண்மை நிறமுடைய நீரினுடைய வகைகளை விரித்துச் சொல்லுவாம்.

சுத்த சீதளநீர்

'' வெண்மையு முற்று மிகத்தெளி வுடைத்தேல்
உண்மையாஞ் சுத்த சீதளத் துதகமாம்
இந்நீர் வசப்படா திவனுய் யுந்தரம்
முந்நீர்ப் பெருக்கமிழ் வான்உய்த லொக்குமே.''

(பொ-ள்) நீரானது வெள்ளை நிறத்துடன் மிகுந்த தெளிவையுமுடைத்தாயிருக்குமானால், உண்மையாகிய சுத்த சீதளத்தினாலுண்டாகிய நீராகும். இந்த நீரானது மருந்துகளுக்கு அடங்காது. இந்த நீருள்ள நோயாளி பிழைத்தல், கடல் பெருக்கில் முழுகியவன் பிழைப்பதை யொக்கும்.

சிலேத்மத்தின் கொதிப்பு

'' அறவெ ளிர்ப்பிலும் சளியைப்போல் விழினது
மறவன் அதிகொதிப் பால்வரு வனமே.''

(பொ-ள்) நீர் மிகவும் வெளுத்தாலும், அதில் சளியைப்போல் விழுந்தாலும், அந்த நீர் ஐயத்தின் மிகுந்த கொதிப்பால் வருகின்ற நீராம்.

க்ஷயம்

'' அமிழ்தரி யெனிலென் பறவுருக் கியநீர்
அஃதே கயநோய் ஆக்குமந் தத்தே.''

(பொ-ள்) நீரானது பாலின் நிறத்தைப் பெற்றிருக்குமானால், எலும்பை மிகுதியாய் உருக்கிய நீராகும். அந்நீரே கடைசியில் கயமென்னும் இளைப்பு நோயை உண்டாக்கும்.

கருப்ப விரணம்

'' காணிதில் சீழுங் கலந்திழி மணமுறின்
கருப்பநா பிகளுளுங் காமநா ளத்துளும்
விரணமுண் டின்றேல் எய்துமஸ் மரியல
திருத்தலே திண்ண மெனமனத் துன்னே.''

(பொ-ள்) இறங்குகின்ற இந்நீரில், சீயுங் கலந்து, கெட்ட நாற்றமும் வீசுமானால், கருப்பப்பையினுள்ளும், கொப்பூழிடத்தினுள்ளும், ஆண்குறித் துளையினுள்ளும் புண்ணிருக்கும். அவ்வாறு புண்ணில்லையானால், கல்லடைப்பு நோயுண்டாகும் என்றும், அல்லது அந்நோய் இருத்தலே திண்ணமென்றும் உள்ளத்தில் எண்ணக்கடவை.

கபம் சந்நிபாதம்

'' விந்துவைப் போன்ற நீர் விறல்கப நோயையும்
பந்தித்த சந்நிபா தத்தை யுந்தரும்

(பொ-ள்) இந்திரியத்தைப் போன்ற நீரானது, வன்மையுள்ள *கோழை நோயையும், உறுதியான சந்நி நோயையும் தரும்.

---

* குறிப்பு.—கோழை நோய் மூவகைப்படும். (1) க்ஷயம் (இளைப்பு நோய், (2) சுவாசம் (இரைப்பு) (3) காசம் (இருமல்).

உப்புறையாதது

" விடுமுழி உவருறு விடினது கொடிதே."

(பொ-ள்) நீர் விட்ட இடத்தில் அந்நீரினது உப்பு உறையா விட்டால், அந்த நீர் கெடுதியை விளைவிப்பதாகும்.

வெப்பம்

" தக்கிரம் பாலெனத் தனித்தனி யொழுகுமேல்
உக்கிர வெப்பத் துதிகால நீரே."

(பொ-ள்) நீரானது மோரைப் போலவும், பாலைப் போலவும் நிறமுள்ள தாய், தனித்தனி இறங்குமானால், அது கொடிய வெப்பத்தினால் உண்டான கூற்றுவனை யொத்த நீராம்.

குண்டிக்காய்க் துர்ப்பலம்

" தீப்புலால் கழுநீர்ச் செயலெனிற் குண்டிக்
காய்த்துர்ப் பலத்தால் கதித்த நீராமத்
துர்ப்பலக் கபமும் சோரியும் கொதிப்புறப்
பற்பக லாகப் பையப் பதிந்ததே."

(பொ-ள்) நீரானது, கெட்டுப் போன தசையைக்கழுவினநீரின் நிறம் பெற்றிருக்குமானால் குண்டிக்காயினது வன்மைக் குறைவா லுண்டான நீராம். அந்த வன்மைக் குறைவானது, கோழையுங் குருதியும் கொதிப்படைந்ததனால், பல நாட்களாய் மெல்ல மெல்ல மறைந்துண்டானதாகும்.

தீராத நோய்

" தடிக்கினு நெய்யின் தன்மையொத் திடினும்
படிக்கு ளிரண்டு பாணியுந் தீதே."

(பொ-ள்) நீரானது கனப்பாய் இருந்தாலும் நெய்ப்பசையை ஒத்திருந்தாலும் இவ்விரண்டு நீரும் இந்நிலவுலகத்தில் கொடியதே யாகும்.

நிற இலக்கணம்.

(மதாந்தரம்)

வாதப்பிணி.

'' பாண்டரி நெய்யரி பற்றிய நீரெலாம்
தாண்டரி நோயே தருமெனுஞ் சிலநூல்.''

(பொ-ள்) வெண்ணிறத்தையும் உதிர நிறத்தையும் பொருந்திய நீரெல்லாம் தாவுகின்ற வாதரோகத்தையே தருமென்று சில நூல் கூறும்.

பித்தப்பிணி.

'' கனிபொம் மன்மாசுக் கனிநிறம் போன்றும்
கனத்தசௌ வீரக் களையது போன்றும்
சனித்தெண் ணெயின்தன் மையைப் போன்றும்
சாரிய நீரிவை சீரிய மெய்க்குளாம்
பித்தப் பிணியாற் பிறந்தன வென்றே
சித்தசா ரனவம் தெளிய விரிக்குமே.''

(பொ-ள்) கனிந்த பொம்மன் மாசுப் பழத்தின் நிறத்தை ஒத்தும், கனமுள்ள சௌவீரத்தின் ஒளியைப் பொருந்தியும், எள் நெய்யின் நிறத்தைப் போன்றும் இறங்கிய நீர், பித்த கோபத்தினால் பிறந்த பித்த பிணியைக் குறிக்குமென்று '' சித்தசாரனவம்' என்னும் நூல் தெளிவுபட விரித்துக் கூறும்.

பித்த காமாலை நீர் நிறம்.

'' மந்திரி நிறமாய் வரப்படு நீரும்
உந்திய எருவையை ஒத்துகு நீரும்
பித்துகா மாலைக ளால்பிறந் தனவெனச்
சித்திய வித்தியா தரமது செப்புமே.''

(பொ-ள்) பித்த (மஞ்சள்) நிறமாய் இழிகின்ற நீரும், தள்ளப்பட்ட உதிரத்தை ஒத்து இறங்குகின்ற நீரும் பித்த காமாலை ரோகங்களால் பிறந்தன வென்று '' சித்திய வித்தியாதரம்'' என்னும் நூல் செப்பும்.

கபப்பிணி நீர் நிறம்.

'' அருச்சுனத் தொடுநுரை புற்புதம் எழினும்
அருந்துநீ ரொக்கினும் அவியினை ஒக்கினும்
கலப்பெழில் உறினுமக் காண்டம் கபநோய்
தலைப்படுங் காலையில் சார்ந்திடு மென்பரே.''

(பொ-ள்) வெண்ணிறத்துடன் நுரையும் குமிழியும் உண்டா னாலும், குடித்தற்குரிய சுத்த நீரைப் போலிருந்தாலும் நெய்யை ஒத்திருந்தாலும் நிறம் பல கலந்து தோன்றினாலும் அந்நீரானது கபரோகம் உண்டாங் காலத்து இழியு மென்பர்.

தொந்தப்பிணி நீர் நிறம்.

'' இன்னும் அம்மதமே இருந்தொந்த நீழல்நீர்
தன்னில் கருமைச் சாயையுண் டென்னுமே.''

(பொ-ள்) இன்னமும் வேறுபட்ட கொள்கையுடையார் தொந்த நிறத்துடன் உண்டாகும் நீரின்கண், கருமை நிறமும் உண்டாகுமென்று கூறுவர்

மேகரோகம் மகாரோகம் இவைகளின் நீர் நிறம்.

'' புண்ணீர் மேகப் புன்கண் மாப்பிணி
நண்ணில் நித்திய நாதியம் ஆமெனும்''

(பொ-ள்) நீரில் உதிரமானது காணப்படுமானால், மேகரோகம்' அல்லது மகாரோகம் உண்டாம் என்று '' நித்திய நாதீயம் '' என்னும் நூல் மொழியும்.

சுரப்பிணி நீர் நிறம்.

'' சுரப்பிணி அரிசனத் தோயங் காட்டுமே''

(பொ-ள்) சுரநோயில் மஞ்சள் நிறம் பொருந்திய நீர் வெளிப் படும் என்று பகர்வர்.

அசாத்திய நீர் நிறம்.

'' சுரமேனும் மேகத் துனியேனும் இருக்கில்
பெருகிய மூத்திரம் பிரிக்கும் உயிரையே.''

(பொ-ள்) சுரம் அல்லது மேகநோய் கண்டிருக்கும் காலத்தில் அதிகரித்த நீர் உயிரை நீக்கிவிடும்.

நிறை இலக்கணம்.

"அற்பமும் கனமற் றதிதெளி வுறுமெனின்
வற்புறு சீதளம் மன்னிக் கனத்துக்
கபத்தை இளக்கலால் கண்டநீர் இஃதே."

(பொ-ள்) நீர் சிறிதும் கனமின்றி இருத்தலுடன், மிகவும் தெளிந்து இருக்குமாயின், இத்தன்மையுடைய நீர், வன்மையுற்ற சீதளம் நிலைபெற்று, ஓங்கிய கபத்தை இளக்கலால் உண்டாகிய தெனக் கருதுக.

நீர்ப்பை, இந்திரியவுழி இவற்றின் மிக்கபலவீனத்தைக் குறிக்கும் நீர்.

"இதுநீர்ப் பையிந் திரியவுழி இவற்றுண்
முதிர்துர்ப் பலத்தான் முளைத்தெனக் கொள்க."

(பொ-ள்) இந்நீரானது, நீர்ப்பையிலும் இந்திரியம் தங்கும் இடத்திலும் மிகுந்த வன்மைக் குறைவால் உண்டாயிற்றென்று கொள்ளக் கடவை.

அன்றியும்,

"மிக்குத் தடித்து விழுமேல் மலங்களின்
நற்குண வழுவை நன்கோது நீரே
(இதனால்)
வீக்கமும் பிடகமும் மேவிடும் இவைமறு
நாட்குநாள் அல்கின் நலனாம் இவரின்
தொடில்சுடுங் கொடிய விடச்சுரம் அண்ணுமே."

(பொ-ள்) மிகத்தடித்து இழியுமாயின், வாதபித்த கபங்களின் நற்குணக் கெடுதியை நன்றாகக் காட்டும் நீராகும். இதனால், வீக்கமும் (சோபையும்) கட்டிகளும் அதிகரிக்கும். இவ்விரண்டும் கண்ட நாள் தொடங்கி நாளுக்குநாள் குறையுமானால் நன்மையாம் அதிகரிக்குமாயின் தொட்ட மாத்திரத்தில் சுடுவதான கொடிய விடவெப்புப் பிணி அணுகும்.

இயற்கை நீர்.

"மிகத்தடிப் பும்மிகத் தேறலும் இன்றெனில்
சுகத்தைத் தரும்மெய்ச் சுபாவநீர் நன்றே."

(பொ-ள்) மிகுந்த கனமும், அதிக தெளிவும் இல்லாவிடின், சுகத்தைத் தருவதான உடலியற்கை நீராகும். இது நன்மையே.

மணவிலக்கணம்.

''ஓதமணத் தோடவ் வோதமொத் திறங்குட்
சீதளங் கம்மிய தேகிக ளுக்கே.''

(பொ-ள்) சீதளங் கம்மிய தேகிகளுக்கு நீர்ப் பெருக்கத்துக் குள்ள நாற்றமுடன், அப்பெருக்கின் நிறத்தையும் கனத்தையும் ஒத்துச் சிறு நீரிறங்கும்.

சிறுநீர்ப்பை நாளப் புண்ணீர்.

''வெய்யதுர்க் கந்தம் வீசுநீர் மூத்திரப்
பைநாள மிவற்றைப் பற்றுபுண் குறியே
அம்மொழி யின்றெனி னனிலமே முதலிய
மும்மலச் சுதமே மூலமென் றுணரே''.

(பொ—ள்) கொடிய மணம் வீசுகின்ற நீர், மூத்திரப்பை, மூத்திர நாளம் இவைகளைப் புண்பற்றி இருக்குமென்கிற குறியைக் காட்டுவதாகும். அங்ஙனமின்றெனில், வாதபித்த கபங்களின் கெடுதியே துர்நாற்ற நீருக்குக் காரண மென்றுணரக் கடவை.

உட்டினரோக நீர்.

''மட்டிற் புளிமண மணந்திழிந் திடினஃ
துட்டினப் பிணிபிணிப் புற்றெழு நீரே
முடிவிலவ் வுட்டின முளரிவா யறல்போற்
படுசீ தளச்சம் பந்தமாக் கிடுமே''.

(பொ-ள்) அளவு கடந்த புளியின் மணம் கமழ்ந்து நீர் இறங்குமானால், அந்நீர் உட்டினப் பிணி பந்தப் பட்டதனால் உண்டாகின்ற நீராகும். கடைசியில் அவ்வுட்டினம் நோயாளியைத் தீயினின்று உண்டாகும் நீர் போலச் சீதளத்துடன் உறவாக்கிவிடும்.

உதிரம் மிகுதியால் உண்டாகும் நீர்.

''இனித்த மணத்தோ டிறங்கி னெய்மிக்குச்
சனித்த விருத்தியைத் தழுவிய நீரே
அல்லதவ் விருத்தியா லாம்பிணிக் குழாத்த
தல்லத்தில் லென்ப தாய்ந்தோர் மதமே.''

(பொ-ள்) இனித்த மணத்தோடு இறங்குமானால் அந்நீர் உதிரம் மிகுந்து உண்டாகிய விருத்தியைத் தழுவிய நீராகும். அஃதல்லாவிட்டால், உதிர விருத்தியால் உண்டாகிய பிணிக் கூட்டத்தைப் பொருந்திதேயன்றி வேறு ஆகமாட்டாது என்பது மருத்துவ நூல் ஆராய்ந்தோர்களின் கொள்கையாம்.

பித்த சுபாவ கெடுதி நீர்.

“கருமான் மணமே கமழுமென்றாலது
குரவன் சுபாவ குண கெடு நீரே.”

(பொ-ள்) கருநிறமுள்ள மானிடத்துண்டாகும் மணமே கமழுமானால், அது பித்தத்தின் இயற்கைக் குண விகற்பத்தாலுண் டாகிய நீராகும்.

சரீரப்பசைக் கெடுதிநீர்.

“ புலால்மணங் கமழிற் பூதியப் பசைக்கே
டலாதிலை யந்நீ ரக்குண மின்றெனில்
அடையுந் ததியென் றறையத் தான்மிகக்
கெடுதி யெனவுங் கிளக்குஞ் சுருதியே.”

(பொ-ள்) புலால் மணம் போல நீர் கமழுமானால். உடற் பசைக் கேடேயன்றி வேறொன்று மில்லை. அந்நீருக்கு அக்குணம் அச்சமயம் இல்லாதிருப்பினும் ,அக்குணம் அடைதற்கு அதுவே சமயமென்று அறிவாயாக. அந்நீரால் மிகக்கெடுதி நேரிடுமென்று மருத்துவ நூல் மொழியும்.

நுரை இலக்கணம்.

“ பந்தமெய்ப் பசையிள கப்படும் பருவத்
தந்தர்ப் பூதமாய் அநிலமூத் திரத்தில்
சம்பந்தப் படும் ததிநுரைப் புனலே.”

(பொ-ள்) அவலம்பகம், தருப்பகம், கிலேதகம், சந்திகம், போதகம் என்று உடலுறுதிக்காக இருக்கும் பசை இளகப்படுங் காலத்தில், ஒருவரும் அறியா வண்ணம் வாயு சிறுநீரில் சம்மந்தப் படும். அப்பொழுது நுரை பொருந்திய நீர் இழியும்.

காமாலை நீர்.

“ அந்நுரை, பீதம் கருமை செம்மை
மன்னுறு நிறந்தரின் வருங்கா மாலையென்
றுன்னிப் புரப்பர் ஒப்பில் பிடகரே.”

(பொ-ள்) மேற்கூறிய நுரை பொருந்திய நீர், மஞ்சள், கருமை செம்மை, நிறங்களைக் காட்டுமானால், காமாலை நோய் உண்டா கும் என்று எண்ணி மருத்துவ நூலாராய்ச்சியில் தமக்கு நிகரில் லாத வைத்தியர்கள் அதை வரவொட்டாமல் தடுத்துப் பாது காப்பார்.

வாத முதலிய மூன்றும் குறையும் நீர்.

"நுரைதேய்ந் தொழுகுநீர் நுவலரும் மும்மலம்
கரைய இளகிடும் காலத் தென்னே."

(பொ-ள்) நுரை குறைந்து இழியும் நீர், சொல்லுதற்குரிய வாத, பித்த, கபங்கள் தத்தம் வன்மையிற்குன்றித் தேயுங் காலத்து உண்டாவதென்று கூறுவாயாக.

எஞ்சலிலக்கணம்.

பாண்டு நோய் உற்பத்தியைக் காட்டும் நீர்.

"இயற்கை நீர் சுருங்கினும் இதுவும் சலப்பொருள்
செயற்கையா யருந்தினும் சிறுத்தநீ ரிதுவும்
பாண்டு நோய்ச்சம் பவத்தைத் தருமிதில்
தூண்டுறாப் பேதியும் சோர்வும் பிறக்குமே."

(பொ-ள்) ஒரு காரணமுமின்றி, இயற்கை யளவுக்குக் குறைந்து இழியும் நீரும், நீர்ப் பொருள்களை மிகுதியாய் உண்ணினும் குறைந்திழியும் நீரும், பாண்டுநோய் உற்பத்திக்கு வழியாகும். இதனால், நீக்கக் கூடாத பேதியும், பாண்டு நோயாலுண்டாகும் அயர்வும் உண்டாகும்.

நெய்க்குறி.

அகவல்.

"ஐக்குறி கொடுவட வானிழ லமர்ந்தோர்
கைக்குறி தெரிந்தநங் கடவுளைத் துதித்தே
மெய்க்குறி நிறந்தொனி விழிநா விருமலம்
கைக்குறி முழுவதூஉங் கற்றார் தம்மினும்
பொய்க்குறி மெய்க்குறி புகலு மெவர்க்கும்
நெய்க்குறி யதனையிந் நீணிலத் துரைப்பாம்."

(கருத்துரை) இச்செய்யுள் கடவுள் வணக்கத்தையும் செயப்படும் பொருளையுங் கூறுகின்றது.

(பதவுரை) ஐ—தலைவனான, குறி—வடிவத்தை, கொடு—கொண்டு, வட ஆல் நிழல்—வடவால மரத்தின் கீழ், அமர்ந்து—எழுந்தருளியிருந்து, ஓர்கைக்குறி—ஒப்பற்ற கைக்குறியினால், தெரித்த—நால்வருக்குச் சின்முத்திரை காட்டி—அதன் பொருளை விளக்கியருளிய தம்—தம்முடைய, கடவுளை—தென்முகஇறைவனை, துதித்து—போற்றி, மெய்க்குறி—உடற்குறி, நிறம்—அவ்வுடலின் நிறக்குறி, தொனி—பேச்சொலிக் குறி விழி—கண்குறி, நா—நாக்குறி, இருமலம்—சிறுநீர்க்குறி, (பவ்வீ என்னும்) மலக்குறி, கைகுறி—கையில் பார்க்கும் நாடிக்குறி என்னும் எண்வகை

ஆராய்கசிகளை, முழுவதும்—முழுமையும், கற்றார் தம்மினும்—கற்வர்களுள்ளும், பொய்க்குறி—ஒரு நோய்க்குரிய குறிகளாகாதவைகளை, மெய்க்குறி—அந்நோய்க்குரிய உண்மைக் குறிகளென்றும் உண்மைக் குறிகளாவன வற்றை ஆகாதவைகளென்றும், புகலும்—மயங்கிச் சொல்பவர்களாகிய, எவர்க்கும்—யாவர்க்கும் (அவ்வாறு மயங்காது) இருக்கும் நோய்களை உண்மையாக உள்ளதை உள்ளவாறே நேரே அறிவித்தற்குரித்தான, நெய்க்குறி அதனை—நீரில் எண்ணெய் விட்டுப் பார்த்து நோய்களை அறியும் நெய்க்குறி நூலை, இ—இந்த, நீள்—பெரிய, நிலத்து—உலகத்தில் உரைப்பாம்—சொல்லுவோம்.

(பொழிப்புரை) தென்முகத் தலைவனாய் வடிவங் கொண்டு கல்லால மரத்தின் கீழ் எழுந்தருளியிருந்து, ஒருகைக்குறியினால் (நால்வர்க்குச்) சின் முத்திரையின் மெய்ப்பொருளை விளக்கிக் காட்டியருளிய நம்முடைய கடவுளைப் போற்றி செய்து, எண் வகை ஆராய்ச்சிகளையும் முற்றும் உணர்ந்தவர்களும் அக்குறிகளில் மயங்கி ஒன்றை ஒன்றாய்க் கூறுகின்ற மயக்கந்தீர்ந்து, உண்மையைப் பெற்று நோய்களை உள்ளவாறுணர்தற் பொருட்டு, ஐயந்திரிபில்லாமல் நோய்களை எடுத்துக் கூறும் நெய்க்குறி (நீரில் எண்ணெய் விட்டுப் பார்க்கும்) நூலை இப்பெரிய உலகத்தில் சொல்வாம்.

" நீள் நிலத்துரைப்பாம் " என்றது உலகத்துள்ள யாவரும் தத்தம் உடலைத் தாங்களே நோய்வாய்ப் படாமல் காத்துக் கொள்ளவேண்டும் என்னும் குறிப்பை உணர்த்துகின்றது.

மயங்கிக் கூறலாவது : " பாவையே பித்தத் தோர்மலம் பார்த்திடில் ஆவி யேயெழு மந்நிறம் மஞ்சளே." எனவும்,

" மலமூத்திரக் குறிசெப்பிடின் மலைமேற்பதி விளக்காம்
மையற்கொரு கணையாகிய மௌவற்கிணை யாமே
மலமானது புயலாமெனிற் மன்னிற்பெறு சுரமே
மலருங்கவி ரானாலஃ தமைச்சன்பெறு சுரமாம்
மகவான்கரி யானாலது மறவன்சுர மாமே
மஞ்சட்கிணை யானாலது மன்னைத்தொடு கபமே."

என்னும் செய்யுளில் கடை அடி " மஞ்சட்கிணை யானாலது மன்னைத் தொடு கபமே " எனவும் ; புகன்றிருக்கும் இவ்விரு வகை மஞ்சள் மலங்களின் வேற்றுமையை நன்குணராமல், இவை பித்தத்தின் மலம் என்று கூறுதல் போன்றவையாகும். மற்றக் குறிகளையும் அவ்வாறே கொள்ளுதல் எனவும் கொள்ளல் வேண்டும்.

எண்ணெய் விட்டுப் பார்க்கும் நீரின் விதி.

" நிறக்குறிக் குரைத்த நிருமாண நீரிற்
சிறக்கவெண்.ணெய்யோர் சிறுதுளி நடுவிடுத்
தென்றுறத் திறந்தொலி யேகா தமைத்ததி
னின்ற வலைபோம் நெறிவிழி யறிவும்
சென்றது புகலுஞ் செய்தியை யுணரே."

(கருத்துரை) இச்செய்யுள் எண்ணெய் விட்டுப் பார்க்கும் விதியைக் கூறுகின்றது.

(பதவுரை) நிறக்குறிக்கு—நீர்நிறக்குறியால் நோயைக் கண்டு பிடித்தற் பொருட்டு, உரைத்த—சொல்லியிருக்கின்ற, நிருமாணம் — விதிபொருந்திய, நீரின்— சிறு நீரின், சிறக்க— மேம்பாடடைய, ஓர் சிறுதுளி எண்ணெய்— ஒரு சிறிய துளி எண்ணெயை, நடு விடுத்து—நடுவில் கையசைவினால் எண்ணெய்த் துளி சிதறாமல் விட்டு, என்று—வெய்யிலானது, உற—அந்நீரில், படும்படி, திறந்து —திறந்து, ஒலி —காற்றானது, ஏகாது—அதில் வீசி அந்த எண்ணெய்த்துளி ஆடாதபடி, அமைத்து—வைத்து, அதில் நின்ற—அச்சிறு நீரில் விடப்பட்டிருக்கின்ற, திவலை—எண்ணெய்த் துளியானது, போம்—செல்லுகின்ற, நெறி—வழியில், விழி—கண்ணறிவையும், அறிவும்—உயிரறிவையும், சென்று—செலுத்தி, அது புகலும்—அத்துளி தெரிவிக்கும், செய்தியை—நோய் விளக்கத்தை உணர்—நீ தெரிந்து கொள்வாயாக.

வாதம் என்னும் வளிநீர்.

" அரவென நீண்டிடின் அஃதே வாதம்."

(கருத்துரை) இது வளிநீரின் ஆராய்ச்சி கூறுகின்றது.

(பதவுரை) அரவுஎன—(நோயாளியின் சிறுநீரில் ஒருதுளி எண்ணெய் விட்டால், அந்த எண்ணெய்த் துளியானது) பாம்பைப் போல, நீண்டிடின்—நீளுமானால், அஃது—அந்தச் சிறு நீரானது, வாதம்—(அவனுடைய உடம்பிலிருக்கும்) வளி நோயைக்காட்டுவதாகும்.

(பொழிப்புரை) எண்ணெய்த்துளி, பாம்பைப் போல் நீண்டால் அது வளிநோயைக் காட்டுவதாம்.

விளக்கம் : பாம்பின் நீட்சியை மாத்திரம் கூறினாலும், அதில் சிறு வளைவும் வழக்கத்தில் காண்பதால் அதையும் கொள்ள வேண்டும்.

இதை,

" அணுகுநெய் பாம்பிற் காணில் அனிலநோய் "

என்னுஞ் செய்யுளாலு மறிக.

பித்தம் என்னும் அழல் நீர்.

" ஆழிபோற் பரவின் அஃதே பித்தம்."

(கருத்துரை) இஃது அழல் நீரின் ஆராய்ச்சி கூறுகின்றது.

(பதவுரை) ஆழிபோல்—எண்ணெய்த் துளியானது (இடைவிட்டு வட்டமாயிருக்கும்) மோதிரம் போல, பரவின்—பரவிக் காட்டினால், அஃது—அந்த நீரானது, பித்தமே—(அவனுடைய உடம்பிலிருக்கும்) பித்த நோயைக் காட்டுவதாகும்.

(பொழிப்புரை) எண்ணெய்த் துளி, மோதிரம் போல் இடைவிட்டுப் பரவினால் அந்நீர் பித்த நோயைக் காட்டுவதாகும்.

இதை " வட்டமாயின் தணிவிலாப் பித்த நோயாம் " என்னும் செய்யுளடியாலும் அறிக.

கபம் என்னும் ஐயநீர்.

முத்தொத்து நிற்கின் மொழிவதென் கபமே."

(கருத்துரை) இஃது ஐயநீரின் ஆராய்ச்சி கூறுகின்றது.

(பதவுரை) முத்து ஒத்து—முத்தின் வடிவத்தைப் போல் (எண்ணெய்த்துளி, நீரில் சிறிதும் பரவாமல் விட்டது விட்டவாறே) நிற்கின்—இருக்குமானால், மொழிவது என்—அந்நீர்ப்பற்றிச் சொல்லவேண்டுவதென்ன, கபமே—அவனுடைய உடலிலிருக்கும் ஐயநோயைக் காட்டுவதாகும்.

(பொழிப்புரை) எண்ணெய்த்துளி, விட்டது விட்டவாறே சிறிதும் பரவாமல் முத்துப்போல் நிற்குமானால், அந்நீர் ஐய நோயைக் காட்டுவதாகும். இதை, " முத்தெனின் ஐயநோய் தானே" என்னும் செய்யுளடியாலு மறியலாம்.

தொந்தக்குறி.

" அரவிலாழியும் ஆழியில் அரவும்
அரவின் முத்தும் ஆழியில் முத்தும்
தோற்றில் தொந்த தோடங்க ளாமே."

(பொ-ள்) பாம்பில் மோதிரம், மோதிரத்தில் பாம்பும், பாம்பில் முத்தும், மோதிரத்தில் முத்தும், இரண்டிரண்டாய்க் கலந்திருந்தால் கலப்புக் குற்றங்களாம்.

முக்குற்றக்குறி.

'' அழுந்து நெய்த்துளி அதுவுமும் மலத்தில்
எழுந்த குறிக ளெல்லா மொன்றில்
தோற்று வதுமுத் தோடமென் றுன்னே.''

(பொ-ள்) நீரில் எண்ணெய் விட்டால், அத்துளி அழுந்துவதும், முக்குற்றங்களில் தனித்தனி யுண்டான நெய்க்குறிகளெல்லாம் ஒன்றினிடத்திலேயே காணப்படுவதும் முக்குற்ற மென்றுணர்ந்து கொள்க.

தீரும் குறி.

'' விருத்தப் படிவமும் தரித்துப் பரவலும்
தெரித்தநெய்க் குறிக்கினி வருத்தமென் னுலகீர்
ஆங்கப் பரவல்போல் நீங்குமெப் பிணியுமே.''

(பொ-ள்) நீரில் விடும் நெய் வட்டவடிவாகவும், மெல்லப் பரவலுமாகக் காணப்படுமானால் அந்நோயாளியைப் பற்றிய வருத்த மொன்றுமில்லை. அந்நெய் எவ்வாறு பரவுகின்றதோ அவ்விதமே எவ்வித நோயும் நீங்கும்.

இதுவுமது.

''அரிவாகு நத்தை அரியா தனத்தை
அறிதரு குறியால் மறுவின் றுயிர்க்கே.''

(பொ-ள்) நெய்யானது திருமாலினது இடது தோளிலிருக்கும் சங்கினைப் போலவும், சிங்காசனத்தைப் போலவும் காணப்படு மானல், அந்நீரை யுடைய நோயாளியின் உயிர்க்கு யாதொரு குற்றமுமில்லை.

இதுவுமது.

''நாணயச் சத்தியை வீணையைக் காணினோ
நாகுயி ருடல்விடுத் தேகினும் மீளுமே.''

(பொ-ள்) நெய்யானது நல்ல குடை போலவும், யாழைப் போலவும் காணப்படுமானால், அந்நீரையுடைய நோயாளியின் உயிர், உடலை விடுத்து வெளிப்பட்டாலும் மறுபடி வந்து சேரும்.

இதுவுமது.

''முல்லை யரும்பு முளரிப் பூவுஞ்
சொல்லிய துளியுள் தோற்றிடு மாயின்
இல்லை யில்லைநோ யென்பது சரதமே.''

(பொ-ள்) நெய்யானது முல்லை மொட்டுபோலவும், தாமரைப் பூப்போலவும் காணப்படுமானால், அந்நீரையுடைய உடலில் நோயில்லை யென்பது உண்மை.

தீராக்குறி.

''எண்ணெய்விடின் சரேலெனப் பொங்கிப் பரவின்
திண்ணமப் பிணிக்குச் சிகிச்சையிங் கின்றே.''

(பொ-ள்) நோயாளியின் நீரில் விடும் எண்ணெய்த் துளியானது, விரைந்து பொங்கி அந்நீர் முற்றும் பரவுமாயின், அந்நோய்க்கு இவ்வுலகத்தில் மருந்தில்லை என்க.

இதுவுமது.

''விடுதுளி சிதறி வெவ்வே றொன்றாமல்
கடுகெனப் பரவின் கைவிடல் முறையே.''

(பொ-ள்) நீரில் விட்ட எண்ணெய்த்துளி, வெவ்வேறாகக் கடுகைப் போலச் சிதறிவிட்டால், அந்நோயாளிக்குப் பரிகாரம் செய்யாமல் விடுவதே நலம்.

இதுவுமது.

''அவியுமூத் திரமு மணைந்தொன்றி னாவி
அவியும் என்றல் கௌதமர் அறையே.''

(பொ-ள்) நீரில் விட்ட எண்ணெய்த்துளியும் நீரும், வேறுணா முடியாமல் ஒன்றுபடக் கலக்குமானால், அந்நோயாளியின் உயிர் நீங்குமென்பது கௌதமருடைய கொள்கையாம்.

வேறு.

''ஓதுநெய்த் துளியுள் ளழுந்தில் தீதென
மாதவ சுற்பம் மன்னப் பயிலுமே.''

(பொ-ள்) நீரில் விட்ட எண்ணெய் துளியானது, அந்நீருக்குள்ளே அழுந்திவிடுமாயின், அந்நோய் தீராதென்று ''மாதவ சற்பம்'' என்னும் நூல் உறுதியாய்க் கூறும்.

இதுவுமது.

''அம்புகட் கம்முச லம்சூல மொடுவாள்
குமபம்வெள் ளிலையெனக் குறிபடின் தீதே.''

(பொ-ள்) நீரில் விட்ட எண்ணெய்த்துளி, அம்பு, வாள், இருப்பு லக்கை, சூலம், ஈர்வாள், கும்பம், வெற்றிலை இவைகளில் ஒன் றின் குறியாகக் காணப்படின் தீராதநோயென அறிக.

''எருதறு கியாளம் இபம்புலி மறியரி
நரனர வுழுங்குபுள் நரிமர்க் கடகரம்
பூசைதே ளிவற்றைப் போலுரு தோற்றின்
பேசுவ தென்னைப் பிணிதணி யாவே''.

(பொ-ள்) நீரில் விடும் துளியானது, எருது, சிங்கம், ஆளி, யானை, புலி, ஆடு, பன்றி, மனிதன், பாம்பு, ஆமை, பறவை, நரி, குரங்கு, கழுதை, பூனை, தேள் இவற்றுள் ஏதேனும் ஒன்றாகத் தோன்றுமாயின், அந்நோயைத் தீர்ப்போம் என்று உறுதி சொல் வதில் பயனின்று (அந்நோய் தீராது என்பதாம்).

தீரும் தீராக்குறி.

(சாத்தியா சாத்தியக்குறி)

''சல்லடைக் கண்போல் தனித்தனித் துவாரமாய்ச்
சொல்லுமுன் அற்றிடில் தொடலென் கரமெனக்
கௌதமர் உரைப்பினும் கபத்தால் கண்படும்.
தவியா வணங்கது சாத்தியம் என்பரே.''

(பொ-ள்) நீரில் விடும் நெய்த்துளியானது, விரைந்து பல கண் களையுடைய சல்லடைபோல் காணுமானால், அந்நோயாளியின் கையைப் பிடிப்பதேனென்று கௌதமர் சொன்னாலும், உடலில் கபம் இருத்தலின், அவ்வாறு காணப்படுமாதலால், அந்நோய் தீரும் என்பாரும் உளர்.

கரும சாந்தியின் பயன்.

''கருமநோய் இவையெலாம் கண்ணுதல் அளித்தருள்
கருமகாண் டக்கடன் கண்டவ் வவற்றை
ஒழிதுயர் மருந்துணின் உம்பரைப் போலச்
செழித்துநாற் பொருளும் சேரவாழ் குவரே.''

(பொ-ள்) நோய்கள் கருமத்தால் உண்டாவதால் மக்கள் சிவனார் செய்த கருமகாண்டம் என்னும் நூலில் சொன்னபடி கரும சாந்தி செய்த பின்னர் உயர்ந்த மருந்துகளை உண்டால், நோய் தீர்ந்து தேவர்களைப் போலப் பல்லாண்டு நீடித்த வய துடன் நாற்பொருளும் (அறம், பொருள், இன்பம், வீடு) ஒருங்கு கைகூடி நலமாய் வழ்வார்கள்.

நீர்க்குறி.

''ஓங்கிய வாதத் தோர்க்கு
நீர்விழுங் குணமு ரைக்கின்

பூங்கொடி கடுத்து நொந்து
சிறுத்துடன் பொருமி வீழும்

பாங்குடன் பித்தந் தோர்க்கு
பசியநீர் சிவந்து காட்டி

ஏங்கவே சுருக்க தாக
வெரித்துடன் கடுத்து விழும்.''

(பொ-ள்) வாத உடலினர்க்கு நீர் விழும் போது கடுத்து நொந்து சிறுத்துப் பொருமி விழும். பித்த உடலினர்க்கு நீர், பசுமையாகச் சிவந்து எரிச்சலுடன் கடுத்திறங்கும்.

''வீழுமே சேத்து மத்தோர்
நீர்க்குணம் விளம்பக் கேளாய்

நாளுமே வெளுத்து றைந்து
நலம்பெற வீழுங் கண்டாய்

வாள்விழி மானே தொந்த
ரோகமா னிடர்க்குத் தானே

தாழுநீர் பலநி றந்தா
னென்னவே சாற்றி னோமே.''

(பொ-ள்) சேத்தும உடலினர் நீர், வெண்மை நிறமாகவும், உறைந்தும் இருக்கும். தொந்த உடலினர் நீர், பலநிறமாக அதாவது குற்றத்தின் சேர்க்கைக்குத் தக்கவாறு இருக்குமென்றறிக.

வேறு.

''மூத்திரம் வெளுத்தி ருக்கும்
முனைந்திடும் வாதத் துக்கு

மூத்திரம் சிவப்பு மஞ்சள்
நிறமது பித்தத் துக்கு

மூத்திர நுரைபோல் காணும்
முதிர்ந்திடு மையத் துக்கு

மூத்திர லட்ச ணத்தை
யுரைத்தனர் முனிவர் தாமே.''

(பொழிப்புரை) மூத்திரம் வாதத்தில் வெளுத்தும், பித்தத்தில் சிவப்பு மஞ்சளாகவும், ஐயமிகுதியால் நுரையைப் போலும் இருக்கும் என்று அறியக்கடவை.

வேறு.

நீர்நெய்க்குறி.

அறுசீர்விருத்தம்.

''பிணியுள்ளோர் நீரையேற்றுப் பொழுதுமுன் வைத்தபின்னர்
துணிவறு துரும்பி லெண்ணெய் தோய்த்தொரு துளியேவிட்டால்
அணுகிநீர்ப்பாம்பிற் காணின் அநிலநோய் வட்ட மாயின்
தணிவிலாப் பித்த நோயாந் தங்குமுத் தைய நோயே.''

(கருத்துரை) இச்செய்யுள் மூன்று பிணிகளின் நெய்க்குறிகளைக் கூறுகின்றது.

(பதவுரை) பிணியுள்ளோர் நீரை ஏற்று—நோயுள்ளவர்களின் அதிகாலை நீரை ஒரு சுத்தமான கண்ணாடிப் பாத்திரத்தில் பிடித்து, பொழுது முன் வைத்தபின்னர்—சூரியன் முன் வைத்த பிறகு, துணிவுறு துரும்பில்—துண்டித்த ஒரு துரும்பில், எண்ணெய் தோய்த்து—எண்ணெய் தொட்டு, ஒரு துளிவிட்டால்—(அந்த நீரில்) ஒரே ஒரு துளிவிட்டுப் பார்த்தால், அணுகி நீர்—அத்துளி அந்நீரில் சேர்ந்து, பாம்பின் காணின்—பாம்பின் வடிவம் போல் நீட்சியும் அதில் சிறு வளைவும் காணுமானால், அநிலநோய்—வளிஎன்னும் வாத நோயாம், வட்டம் ஆயின்—மோதிரம் போல் இடை விட்ட வட்டமாகக் காணப்பட்டால், தணிவு இல்லாப் பித்த நோயாம்—தணி தலையடையாத பித்த நோயும், முத்துதங்கு ஐயநோயே—முத்தைப் போன்ற வடிவமாய் நிலைப்பது சீதள நோயே யாகும்.

(பொழிப்புரை) நீரில் விடும் ஒரு துளி எண்ணெயானது பாம்பைப் போல் நீண்டால் வாதநோயும், மோதிரம் போன்று இடைவிட்ட வட்டமாயிருந்தால் பித்த நோயும், முத்துப்போல் அப்படியே இருந்தால் ஐயநோயுமாகும்.

''தொந்தநோ யுறுநீர் தன்னிற்
றுரும்பினி லெண்ணெய் தோய்த்தே
அந்தநீர் தன்மேல் விட்டால்
அதுபுல்லி னுனிபோ லாயின்
முந்துறு வாத பித்த
முயற்சியென் றறியக் காட்டும்
கந்துரு வென்ன வெண்ணெய்
நின்றிடில் கபமும் வாதம்.''

(கருத்துரை) இச்செய்யுள் வாதபித்தம், கபவாதம் என்னும் இவைகள் சேர்ந்த கலப்பு நீரின் நெய்க்குறிகளைக் கூறுகின்றது.

(பதவுரை) தொந்த நோய் உறுநீர் தன்னில்—கலப்பு நோயாளியின் நீரில், துரும்பினில் எண்ணெய் தோய்த்து—ஒரு துடைப்பக்குச்சியில் எண்ணெய் தொட்டு, அந்த நீர் தன்மேல் — முற் கூறிய நீரின் மேல் விட்டால் — (ஒரு

துளி) விட்டால், அது புல்லின் நுனிபோல்—அவ்வெண்ணெய்த் துளி புல்லின் நுனியைப் போல் காணப்பட்டால், முந்து உறு—அது முன்னரே இருக்கின்ற, வாத பித்த முயற்சி என்று அறியக் காட்டும்—வாதமும், பித்தமும் கலக்க முயற்சி செய்யும் குறி யென்றுதன் வடிவத்தால் காண்பிக்கும், எண்ணெய்—நீரில் விடப் பட்ட எண்ணெய்த் துளியானது, கந்துரு என்ன நின்றிடின்—கந்துவைப் போன்ற வடிவத்தைக் காட்டுமானால், கபமும் வாதம்—கபமும் வாதமும் சேர்ந்த நோயாம்.

(பொழிப்புரை) கலப்பு நோய் நீரில் எண்ணெய்த்துளி விட்டால் அது புல் முனைபோல் பரவினால் வாத பித்த கலப்பு நோயென் றும், கந்துருபோல் பரவினால் கபவாத கலப்பு நோயென்றும் தெரிந்து கொள்ளவேண்டும்.

'' வெய்யநீர் தன்னி லெண்ணெய்
 மேலர்த்தங் கீழிற் பாதி
அய்யவிப் படியே காணின்
 அதுபித்த கபநோ யாகும்

தய்யலே யுதிரம் போனீர்
 எண்ணெயும் சமித்துத் தாழின்
உய்யுமா றில்லை சந்நி
 வாதநீ ருரைத்த தாமால்.''

(கருத்துரை) இச்செய்யுள் பித்தகபநீர், சந்நிவாத நீர்களின் தன்மைகளைக் கூறுகின்றது.

(பதவுரை) வெய்ய—வெச்சென்றுள்ள, நீர்தனில்—சிறுநீரில் விடுகின்ற, எண்ணெய்—எண்ணெய்த் துளியானது, மேலர்த்தம் கீழிற்பாதி—பாதி நீர்க்கு மேலும் பாதி நீர்க்குள்ளும் அழுந்தியும் போகின்ற, இப்படியே காணில்—இந்த விதமாய்த் தோன்று மானால், அது பித்த கபநோய் ஆகும்—அந்த நெய்க்குறியானது பித்தமும் கபமுஞ் சேர்ந்த நோய் உடம்பிலிருக்கிற தென்பதை உணர்த்துவதாகும், உதிரம் போல் நீர்—இரத்தம் போன்ற நிறமாய் நீர் இருந்து, எண்ணெயும் சமித்துத் தாழின்—அதில் விடும் எண்ணெய்த் துளியும் தன் வடிவம் தெரியாதவாறு செரித் துக் கீழ் இறங்கிவிடுமானால், உய்யும் ஆறு இல்லை—அந்த நீர் உள்ள நோயாளி பிழைப்பதற்கு வழியில்லை, சந்நிவாத நீர் உரைத்தது ஆம்—இப்படிப்பட்ட இந்நீர் சந்நிவாத நோய் உள்ள தென்பதைத் தெரிவிக்கும் குறியாகும்.

(பொழிப்புரை) நீரில் விடும் எண்ணெய்த்துளி பாதி மேலும், பாதி கீழுமானால், அது பித்த கபநோயாகும். சிவந்த நீரில் விட்ட நெய்த்துளி நீரின் மேல் நிற்காமல் உள் அழுந்தி விடுமானால், அது சந்நி வாத நீராகும். இந்நீர்க் குறி அந்த நோயாளி பிழை யான் என்பதை உணர்த்துவதாகும்.

" தோற்றிய வழுரி மீதில்
துளியெண்ணெய் விட்டுப் பார்க்கின்
ஏற்றகண் ணாடி சிங்கம்
இயல்பக்கி யாமை செந்நாய்
மாற்றுகுக் குடம்வ ராகம்
வானரம் பூனை நற்றேள்
பார்த்திபர் சூலந் தோன்றில்
பகரசாத் தியம தாமே."

(கருத்துரை) இச் செய்யுள் அசாத்திய நீரின் தன்மைகளைக் கூறுகின்றது.

(பொழிப்புரை) கிடைக்கப்பட்ட நீரில் ஒரு துளி எண்ணெயை விட்டு அது பரவும் முறையை உற்றுப் பார்த்துக்கொண்டிருப்போமானால், ஏற்ற கண்ணாடி, சிங்கம், பறவை, ஆமை, செந்நாய் இவைகளைப் போலவும், குக்குடம், வராகம், வானரம், பூனை, தேள் இவைகளைப் போலவும், அரசர் கையிலிருக்கும் சூலம் போலவும், அந்த எண்ணெய்த்துளி பரவிக் காட்டுமானால், அந் நோய் தீராததாகும்.

" அங்கநீர் தன்மே லெண்ணெய்
துளிவிடி லணையும் சங்கம்
துங்கமாம் வீணை சொன்ன
குறளியும் பினாகம் வல்லி
இங்கியை யதுபோற் சாய்கை
யிருந்திடிற் பிணியுந் தீரும்
செங்கையின் நெல்லி போலத்
தெரிந்தவை செப்பி னோமே."

(கருத்துரை) இச் செய்யுள் சாத்திய (தீரும்) நோயின் நீர்க் குறிகளைக் கூறுகின்றது.

(பதவுரை) அங்கம் தன் நீர்மேல்—நீர்ப்பையிலிருந்து இழிகின்ற நீரின்மேல், துளி எண்ணெய் விடின்—ஒரு துளி எண்ணெய் விட்டுப் பார்த்தால், துங்கமாம்—சுத்தமாய், அணையும் சங்கம்—சங்கு, வீணை—வீணை, சொன்ன குறளி—சொல்லப்பட்ட பிசாசு உருவம் அல்லது குறியவள் உருவம், பினாகம் வல்லி—சிவன்வில், கொடி என்னும், இங்கு இயையது போல் சாய்கை இருந்திடில்—இவைகளைப் போன்ற வடிவமாய் அவ்வெண்ணெய்த் துளி பரவிக் காணுமானால், பிணியும் தீரும்—அந்த நோயும் தீரும் (இவைகளையெல்லாம்) செங்கையின் நெல்லி போலத் தெரிந்து—கையிலிருக்கும் நெல்லிக் கனியானது உள்ளும் புறம்பும் தனது இயற்கை வடிவத்தை யொளியாமல் காட்டுவது போல் நன்றாய் ஆராய்ந்துணர்ந்து, அவை செப்பினோம்—அவற்றைச் சொன்னோம்.

(பொழிப்புரை) நீரில் எண்ணெய் விட்டுப் பார்த்தால் அத்துளி, சங்கு, வீணை, குறியவள் உருவம், வில், கொடி என்னும இவற்றைப் போல் பரவிக் காட்டுமானால், நோய் தீரும்.

தீர்தல், திராமைகளைக் குறிக்கின்றது.

ஆசிரிய விருத்தம்.

"இரவினில் வட்டில் வைத்தே
    யேகின்ற சலத்தின் மீதே
இருளது புலருங் காலை
    எற்கவே எண்ணெய் கொண்டே
ஒருதுளி விட்டுப் பார்க்கின்
    உவந்துடன் பரவிற் றாயின்
உத்தம சாத்ய மென்றே
    யுரைத்தன ருலகோர் கேட்கப்
பரவுதல் மந்த மாயின்
    சாத்திய மந்த மாகும்
பவமஃ துதக மீதில்
    பரவிடாக் கட்டி யாயின்
அரனயன் தேவ ராலு
    மருந்தவ முனிவ ராலும்
அசாத்திய மென்று சொன்னார்
    அறிவுளீ ரறிந்து கொள்வீர்."

(கருத்துரை) இச் செய்யுள் தீர்தல், வன்மையில் தீர்தல், திராமை என்னும் மூன்று நீர்க் குறிகளையும் கூறுகின்றது.

(பதவுரை) இரவினில் வட்டில் வைத்து—நோயாளியினிடத்தில் ஒரு நாள் இரவில் ஒரு கண்ணாடிப் பாத்திரம் வைத்து, ஏகின்ற சலத்தின் மீது—விடியற்காலையில் விடுகின்ற நீரை, இருள்புலருங் காலை—சூரியன் புறப்பட்டவுடன் அந்நீரை வெய்யிலில் வைத்து அந்த நீரில், ஏற்கவே எண்ணெய் கொண்டு—நல்ல எண்ணெயைக் கொண்டுவந்து, ஒரு துளி விட்டுப் பார்க்கின்—ஒரு துளி விட்டு அவ் வெண்ணெய் பரவும் வகையைப் பார்த்துக் கொண்டேயிருப்பின், உவந்துடன் பரவிற்று ஆயின்—அந்த எண்ணெய்த்துளி உடனே பரவினால், உத்தம சாத்தியம் என்று உலகோர் கேட்க உரைத் தனர்—நோய் மிக்க நன்மையாகத் தீர்ந்து விடுமென்று உலகோர்க் குச் சொல்லினர், பரவுதல் மந்தம் ஆயின்—அவ்வெண்ணெய்த் துளியானது மெல்லெனப் பரவுமானால், சாத்தியம் மந்தமாகும் —நோயும் மெல்லத் தீரும், பவமது உதக மீதில்—எண்ணெய்த் துளி நீரின் மேல், பரவிடா—பரவாமல், கட்டி ஆயின்—விட்டபடி யே இருக்குமானால், அரன் அயன் தேவராலும்—ஈச்சுவரனாலும், பிரமனாலும், மற்றைய தேவர்களாலும், அருமைத் தவமுனிவரா லும்—அரிய தவஞ் செய்பவர்களான முனிவர்களாலும் தீர்க்க முடியாத, அசாத்தியம் என்று சொன்னார்—திரா நோயாகு மென்று சொல்லி வைத்தார்கள், அறிவு உள்ளீர்—இம்மருத்துவத் தில் பேரறிவுள்ளவர்களே நீங்கள் அறிந்து கொள்வீர்—இவ்விதி களைத் தெரிந்து கொள்ளுங்கள்.

(பொழிப்புரை) நோயாளி இரவில் நன்றாய்த் தூங்கி விடியற் காலையில் கழிக்கின்ற நீரை, ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் பிடித்து, அதை வெய்யிலில் வைத்து, அதன் மேல் ஒரு துளி எண்ணெய் விட்டுப் பார்த்தால், அஃது உடனே நன்றாய்ப் பரவுமாயின் நோய் விரைவில் தீருமென்றும், மெல்லப் பரவினால் நோய் மெல்லத் தீருமென்றும், விட்ட துளி விட்டபடியே பரவாமல் இருக்குமானால், அயன், அரன், தேவர்கள், முனிவர்கள் ஆகிய எவராலும் அந்நோய் தீர்க்க முடியாதென்றும் தெரிந்து கொள்ளவேண்டும்.

வேறு.

அறுசீர் விருத்தம்.

வாதம், பித்தம், காமாலை நீர்கள்.

" உடலுறு பிணியைக் காண
 வுண்மைவா கடநூல் சொல்லும்
படருமூத் திரக்கு றிப்பைப்
 பார்க்குங்கால் வாதம் வெள்ளை
திடமுறு பித்தஞ் சற்று
 சிவப்புமஞ் சள்போல் காணும்
புடைமிகச் சிவப்பு மஞ்சள்
 போன்றிடிற்கா மாலை யாமே."

(கருத்துரை) வாதநீர், பித்தநீர், காமாலை நீர்களைக் கூறுகின்றது.

(பதவுரை) உடல் உறுபிணியைக் காண—மனிதர்கள் உடம்பில் காண்கின்ற, உண்மைவாகட நூல் சொல்லும்—உண்மையான மருத்து நூல் சொல்கின்ற, படரும்—பரவுகின்ற, மூத்திரக் குறிப்பை—நீர்க்குறிகளை, பார்க்குங்கால்—ஆராய்ந்து பார்த்தால், வாதம் வெள்ளை—வாத நோயின் நீர் வெண்மையாயிருக்கும், திடம் உறு பித்தம்—வன்மையான பித்த நோயின் நீரானது, சற்று—கொஞ்சம், சிவப்பு மஞ்சள் போல் காணும்—சிவப்புக் கலந்த மஞ்சள் நிறமாய்க் காணப்படும், புடைமிக—மிகவும் அதிகமாகும், சிவப்பு மஞ்சள்—சிவப்புக் கலந்த மஞ்சள் நிறம்,. போன்றிடில்—ஒத்திருக்குமானால், காமாலையாம்—மஞ்சள் காமாலை நோயாகும்.

(பொழிப்புரை) உடம்பில் உண்டாயிருக்கும் பிணிகளை அறிவதற்கு உண்மையான மருத்து நூல் சொல்லும் குறிகளில், ஒன்றாக விருக்கும் மூத்திரக் குறியை யாராயின், அது வெள்ளை நிறமாயின் வாத நோயென்றும், சிவந்த மஞ்சள் நிறமாயின் பித்தநோயென்றும், மிக்க செம்மஞ்சள் நிறமாயின் காமாலை நொய் என்றுந் தெரிந்து கொள்ளவேண்டும்.

கபநீர் நிறம், வாதம், பித்தங்களின் நெய்க்குறி.

அறுசீர் விருத்தம்.

"நிலமிகு கபமே யாயின்
நிறை நுரை போன்றி ருக்கும்
இலகுமம் மூத்தி ரத்தில்
எண்ணெயை விட்டுப் பார்க்கில்
கலகஞ்செய் வாதத் திற்குக்
காணவே நீள மாய்ப்போம்
பெலனுறு மெய்யை வாட்டும்
பித்தமே சிதறிக் காட்டும்."

(கருத்துரை) இச் செய்யுள் கபநீரின் குறியையும், வளி, பித்தங்களுக்கு எண்ணெய்க் குறிகளையும் கூறுகின்றது.

(பதவுரை) நிலம்—இந்நிலவுலகில், மிகு கபமே ஆயின்—உடம்பில் அதிகமாகக் கபம் இருந்தால், நிறைநுரை போன்றிருக்கும்—நீர் மிக்க நுரையிருப்பது போலக்காணப்படும், இலகும்—விளங்குகின்ற, அ மூத்திரத்தில்—அந்தச் சிறு நீரில், எண்ணெயை விட்டுப் பார்க்கில்—ஒரு துளி எண்ணெய் விட்டுப் பார்த்தால், கலகம் செய்—மனத்தை மிக்க வருத்தும், வாதத்துக்கு—வாத நோய் இருக்குமானால், காண—விட்ட எண்ணெய் பரவுங் குறியைப் பார்த்தால், நீளம் ஆய் போம்—அது நீண்டு பரவும், பெலனுறு—வன்மையுள்ள, மெய்யை—உடம்பை, வாட்டும்—சூட்டால் வருத்துகின்ற, பித்தம்—பித்த நோய் இருக்குமானால், (அவ்வெண்ணெய்த் துளியானது) சிதறிக் காட்டும்—துளிதுளியாகச் சிதறும்.

(பொழிப்புரை) கபநோய்க்கு நீர் நுரை போலிருக்கும்: அந்நீரில் எண்ணெய் விட்டுப் பார்த்தால் அந்த எண்ணெய்த் துளி, உடம்பிலிருப்பது வாதநோய் ஆயின் நீளமாகவும், பித்த நோயாயின் சிதறியும் காண்பிக்கும்.

கபம், முக்குற்றம், சாத்தியம் அசாத்தியங்களின் நெய்க்குறி.

"சாற்றிய கபத்தி னுக்குச்
சல்லடைக் கண்போற் காணும்
தோற்றிய முத்தோ டந்தான்
சொல்மூன்று குறியுங் காட்டும்
வேற்றொரு துளியாய் நின்றால்
விருதாகும் சாத்தி யந்தான்
ஆற்றியே மெல்லப் பரவின்
அதுசுக சாத்தி யந்தான்."

(கருத்துரை) இச் செய்யுள் கபமுதலிய நீரின் எண்ணெய்க் குறி சொல்லுகின்றது.

(பதவுரை) சாற்றிய கபத்தினுக்கு—சொல்லப்பட்ட கபநோயில், சல்லடைக் கண் போல் காணும்—(நீரில் விடும் எண்ணெய்த் துளியானது) சில்லியடையின் தொளை போல் காணப்படும், தோற்றி முத்தோடம்—வெளிப்பட்ட முக்குற்றக் கலப்பு நோயில் சொல்—சொல்லப்பட்ட, மூன்று குறியுங் காட்டும்—வளி, அழல், ஐயம் என்னும் மூன்று குற்றங்களுக்கும் சொல்லப்பட்டிருக்கிற குறிகள் மூன்றுங் கலந்தாற் போல் தோன்றும், வேறு—மேல் சொல்லப்பட்ட குறிகளுக்கு மாறாக, ஒரு துளியாய் நின்றால்—விட்ட எண்ணெய்த் துளியானது விட்ட துளி போலவே பரவாமலிருந்தால், விருதா ஆகும்—வீண் ஆக்குகின்ற, அசாத்தியம்—அந்நோய் நீங்காததாகும், ஆற்றிய மெல்லப் பரவின்—அவ்வெண்ணெய்த் துளி மெல்லெனப் பரவினால், அது —அக்குறி, சுகம்—நன்மையை விளைவிக்கின்ற, சாத்தியந்தான்—தீருநோய்க் குறியாகும்.

(பொழிப்புரை) எண்ணெய்த் துளி கபநோய்க்குச் சல்லடைக் கண் போல் கண் விழுந்தும், முக்குற்ற நோய்க்கு மூன்றுக்குஞ் சொல்லப்பட்டிருக்கிற குறிகள் கலந்தும், காணப்படுவனவல்லாமல், தீரா நோய்க்கு விடப்பட்ட துளி பரவாமலும், தீரு நோய்க்கு மெல்லப் பரவியும் காட்டும்.

கௌதமர் என்பார் எண்ணெய்த்துளி சல்லடைக் கண் போல் விழுவதைத் தீரா நோய்க்குறி என்றும், அந்நோய்க்கு மருத்துவஞ் செய்யாமல் விட்டு விடுவதை நன்மை என்றும் கூறினர். தேரர் அவரது கொள்கையை மறுத்து அவ்வாறு கண் விழுதல் கபத்தாலென்றும், அது தீரு நோய்க்குறியே யென்றும் கூறினர்.

அதனை,

> ‘‘ சல்லடைக் கண்போல் தனித்தனித் துவாரமாய்ச்
> சொல்லுமு னற்றிடில் தொடலென் கரமெனக்
> கௌதம ரறையினுங் கபத்தாற் கண்படும்
> தவியா அணங்கது சாத்திய மென்பரே.’’

என்னும் அகவற்பாவால் அறிக.

இந்நூற்றலைவரும், அவரது கொள்கையிலேயே உடன்பட்டு, ‘‘ சாற்றிய கபத்தினுக்குச் சல்லடைக் கண்போற் காணும் ’’ என்றார்.

ஈண்டுச் ‘‘ சாற்றிய ’’ என்னுஞ் சொல், ‘‘ சாத்திய ’’ எனவும் பாடமுண்டு.

விடப்பட்ட எண்ணெய்த் துளியானது பரவாமல் அப்படியே யிருந்தால் அசாத்தியக் குறி என்றதை ;

" பவமது உதக மீதில்
பரவிடாக் கட்டி யாயின்
அரனயன் தேவ ராலும்
அருந்தவ முனிவ ராலும்
அசாத்திய மென்று சொன்னார்
அறிவுளீர் அறிந்து கொள்ளீர்."

என்பதாலுமறிதல் வேண்டும்.

இவைகளல்லாமல் கபநோயில் எண்ணெய்த் துளி சல்லடைக் கண்போல் காணப்படுவதைப் பல நோயில் கண்டதுண்டு. ஆனால், அதற்கு விரைந்து மருத்துவஞ் செய்யவேண்டும்.

தீரா நோய்க்குறி.

" நீரினி லமிழ்ந்து போனால்
நிகழ்ந்திடு மசாத்தி யந்தான்
வாரிடு முலையாய்! கேளாய்
வளையல்பாத் திரத்தி லன்றிப்
பாரினிற் குயவன் செய்மண்
பாத்திரந் தனிலா னாலும்
சாரநீ ருகுத்து வெய்யில்
தன்னிலே வைத்துப் பார்ப்பாய்."

(கருத்துரை) இச் செய்யுள் தீரா நோய் நெய்க்குறியையும் ஆராய்தற்கு மண் சட்டியும் உதவும் என்பதைக் கூறுகின்றது.

(பதவுரை) நீரினில் அமிழ்ந்து போனால்—விடப்பட்ட எண்ணெய்த் துளி யானது நீரில் அமிழ்ந்து போனால், அசாத்தியம் நிகழ்ந்திடும்—நோய் தீராதென்றேற் படும், வளையல் பாத்திரத்திலன்றி —கண்ணாடிப் பாத்திரத்தில் மட்டுமன்றி, பாரினில்—உலகத்தில், குயவன் செய்—குயவன் செய்கின்ற, மண் பாத்திரந் தன்னில் ஆனாலும்—மண் சட்டியிலானாலும், நீர்சார உகுத்து—நீரைவிட்டு, வெய்யில் தன்னில் வைத்துப் பார்ப்பாய்—வெயிலில் வைத்து அஃது அறிவிக்குங் குறியைப் பார்ப்பாயாக.

(பொழிப்புரை) நீரினில் விடும் எண்ணெய்த் துளியானது அதில் அமிழ்ந்து போனால், அந்நோய் தீராது. அவ்வாராய்ச்சிக்கு மண் சட்டியும் உதவும் என்பதாம்.

தீருநோய்க்குறி.

" இன்னமுங் குறிகள் கேட்கில்
இப்படிப் பல்வா றுண்டு
இன்னுமந் நீரி லெண்ணேய்
விட்டுநாம் பார்க்குங் காலை

மன்னிய வைப வங்கள்
மனிதர்போல் மச்சங் கோவில்
உன்னிய பிரகா ரம்போல்
உயர்ந்திடு ஆனை போலும்.''

(கருத்துரை) இச் செய்யுள் திரு நோய்க்குறிகளைக் கூறுகின்றது.

(பதவுரை) இன்னமும் குறிகள் கேட்கில்—இன்னும் பல குறிகள் உள அவைகளையும் கேட்பாயானால், இப்படி—இவ்வுலகத்தில், பலவாறு உண்டு—பல வகைகளாக இருக்கின்றன, மின்னும் அநீரில்—விளங்குகின்ற அந்த நீரில், எண்ணெய் விட்டு—எண்ணெய்த் துளியை விட்டு, நாம் பார்க்குங் காலை—நாம் பார்க்கிற போது, மன்னிய—நிலைத்த, வைபவங்கள்—உற்சாகச் சடங்குகள் போலவும், மனிதர் போல்—மக்கள் போலவும், மச்சம்—மீனைப் போலவும், கோவில்—கோவிலைப் போலவும், உன்னிய—நினைக்கப்படுகின்ற, பிரகாரம் போல்— கோவில் பிரகாரம் போலவும், உயர்ந்திடும் ஆனையைப் போல்—பெரிய யானையைப் போலவும் தோன்றும்.

(பொழிப்புரை) நீரில் எண்ணெய் விட்டால் அவ்வெண்ணெயானது வைபவங்கள், மக்கள், மீன், கோவில், கோவில்பிரகாரம், பெரிய யானை ஆகிய இவற்றைப் போலவும் தோன்றும்.

'' மலைகுடை விருக்கம் வெண்சா
மரையுடன் தாம ரைப்பூ
கொலை செய்யு மானைக்கொம்பு
குல்லாய்கண் ணாடி சங்கு
வலைவிழி யாளே கேளாய்
மகரதோ ரணங்கள் பூமி
தலைமையாம் வீணை போலும்
சவுக்கமா மனையே போலும்.''

(கருத்துரை) இச் செய்யுள் சில நோய்கள் தீருங் குறிகளைக் கூறுகின்றது.

(பொழிப்புரை) மலை, குடை, விருக்கம் (மரம்) வெண்சாமரை தாமரைப்பூ இவை போலவும், பிறரைக் கொல்லுந் தன்மையுள்ள யானையின் கொம்பு, குல்லாய், கண்ணாடி, சங்கு இவைபோலவும் மகர தோரணங்கள், பூமி போலவும், இசைக் கருவிகள் பல்வற்றுள்ளும் உயர்ந்த வீணை போலவும், சதுரமாயிருக்கின்ற வீட்டைப் போலவும் தோன்றும்.

திருநோய்க்குறி.

'' பாகலி னிலையே வண்டும்
பகருந்தா மரையின் மொக்கும்
ஏகசிங் காத னங்கள்
இவைகள்போல் உருவங் கண்டால்

தேகமா னிடரி டத்தில்
சேர்ந்திருந் திடுக்கண் செய்யும்
ரோகமே நிற்க மாட்டா
துரைக்குஞ்சாத் தியக்கு றிப்பே.''

(கருத்துரை) இச்செய்யுளும் சில நோய்கள் தீருங் குறிகளைக் கூறுகின்றது.

(பதவுரை) பாகலின் இலை வண்டு—பாகலின் இலை போலவும் வண்டு போலவும், பகரும்—சொல்லுகின்ற, தாமரையின் மொக்கும்—தாமரையின் மொட்டும், ஏக சிங்காதனங்கள்—சிங்காதனங்களும், இவைகள் போல்—இவற்றைப்போல, உருவங் கண்டால்—நீரில் விடப்படும் எண்ணெயில் வடிவம் காணப் படுமானால், மானிட தேகர் இடத்தில்—மனிதருடைய உடம்பில், சேர்ந்திருந்து—கூடியிருந்து, இடுக்கண் செய்யும் ரோகம்—துன்பங் களைச் செய்யும் நோய்கள், நிற்க மாட்டாது—அவ்வுடலில் நிலைத்திராது (ஆகையால் இவைகள்) சாத்தியக் குறிப்பு—தீரு நோய்க் குறிப்புகளென்றும், உரைக்கும்—சில நூல்கள் கூறும்.

(பொழிப்புரை) பாகலிலை, வண்டு, தாமரை மொக்கு, சிம்மா சனம் என்னும் இவைகள் போன்ற வடிவங்கள் காணப்படு மானால் இவைகள் தீருநோய்க் குறிகளென்று சில நூல்கள் சொல்லுவனவாம்.

தாமத சாத்தியக்குறி.

''மத்தளங் கொடியே பானை
மலமுண்ணும் பன்றி காட்டில்
வைத்திடு மிருக நாட்டில்
வாழ்ந்திடும் குயவன்பண்ணுஞ்
சுத்தமாஞ் சக்க ரம்போல்
தோன்றிடு முருவங் கண்டால்
சத்தியமாகச் சொன்னோம்
தாமத சாத்தி யந்தான்.''

(கருத்துரை) இச்செய்யுள் வன்மையிற் பொறுத்துத் தீரும் நோய்க்குறிகளைக் கூறுகின்றது.

(பதவுரை) மத்தளம் கொடி பானை—மத்தளம், காகம், பானை இவைகளின் வடிவம் போலவும், மலம் உண்ணும் பன்றி—மலத்தை யுண்ணும் பன்றியின் வடிவம் போலவும், காட்டில் வைத்திடு மிருகம்—காட்டில் வாழ்கின்ற மிருகம் போலவும், நாட்டில் வாழ்ந்திடும்—நாட்டில் வாழ்கின்ற, குயவன் பண்ணும்—குலாலன் வனைகின்ற சுத்தம் ஆம் சக்கரம்போல்—தூய்மை யாகிய திகிரியின் வடிவம்போலவும், தோன்றிடும் உருவம் கண்டால்—எண்ணெய்க் குறிகள் காணப்படுமானால்; தாமத சாத்தியம்—நோய் நிதானத்திற்றீர்வனவாகும் என்று, சத்திய மாகச் சொன்னோம்—உண்மையாகச் சொன்னோம்.

(பொழிப்புரை) மத்தளம், கொடி, பானை, பன்றி, காட்டு விலங்கு, குலாலன் திகிரி என்னும் இவற்றைப்போன்ற வடிவம் எண்ணெயில் காணப்பட்டால் தாமத சாத்தியமென்று உண்மையாய்ச் சொன்னோம்.

தீராக் குறிகள்.

''நாலுகா லொருகா லிந்த
ஞாலத்தி லுரைக்கு மூன்று
காலுள மனிதர் காயம்
கனக்கவே பெருத்த மாந்தர்
மாலுறத் தலையில் லாத
மாந்தர்முன் கையிற் கத்தி
சூலமே யுலக்கை வில்லு
தோன்றிடு மரிவாள் பாம்பே.''

(கருத்துரை) இச்செய்யுள் தீராத நோயின் எண்ணெய்க் குறிகளைக் கூறுகின்றது.

(பதவுரை) இந்த ஞாலத்தில் உரைக்கும்—இந்த உலகத்தில் சொல்லப்படுகின்ற, நாலு கால் மனிதர்—நான்கு கால்களை யுடைய மனிதர்கள் போலவும், ஒரு கால் மனிதர்—ஒரு காலை யுடைய மனிதர் போலவும், மூன்று கால் உள்ள மனிதர்—மூன்று கால்களையுடைய மனிதர் போலவும், காயம் கனக்க பெருத்த மாந்தர்—உடம்பு கனத்துப் பருத்த மாந்தர் போலவும், மால் உற—பிரமிப்பையடைதற்குரிய, தலையில்லாத மாந்தர்—தலையில்லாத மனிதர் போலவும், முன் கையில்—முன் கையினிடம், கத்தி—கத்தியும், சூலம்—சூலமும், உலக்கை—உலக்கையும், வில்—வில்லும், அரிவாள்—அரிவாளும், பாம்பு—பாம்பும் (தாங்கியிருக்கும் மனிதன் போன்றும்), தோன்றிடும்—காணப்படின் தீராவாம்.

(பொழிப்புரை) சிறு நீரில் இந்த உலகத்தில் சொல்லப் படுகின்ற ஒரு கால், மூன்று கால்கள், நான்கு கால்களையுடைய மனிதர் போலவும், உடல் பருத்த மனிதர்போலவும், தலையில்லாத மனிதர் போலவும், கையில் கத்தி, சூலம், உலக்கை, வில், அரிவாள், பாம்பு இவற்றைத் தாங்கியிருக்கும் மனிதன் போன்றும் காணப்படின் தீராவாம்.

''பூனையே யெலியே யம்பு
புகல்நண்டு சுரைக்காய் கேழி
கானிடைப் புலிகு ரங்கு
கண்ணழல் பொங்கு சிங்கம்

ஈனமில் குதிரை வெற்றி
லைக்கொடி மற்று முள்ள
ஊனமி லெருது காட்டில்
உழன்றிடுங் கரடி தானே.''

(கருத்துரை) இச்செய்யுளும் தீரா நோயின் எண்ணெய்க் குறிகளைக் கூறுகின்றது.

(பதவுரை) பூனை எலி அம்பு—பூனை, எலி, அம்பின் வடிவங்கள் போலவும், புகல்—சொல்லப்படுகின்ற, நண்டு சுரைக்காய் கோழி—நண்டு, சுரைக்காய், கோழி இவற்றின் வடிவம் போலவும், கான் இடைப்புலி—காட்டில் வாழ்கின்ற புலி, குரங்கு—குரங்கு, கண் அழல் பொங்கு சிங்கம்—கண்களில் நெருப்புப் போன்ற ஒளி வீசுகின்ற சிங்கம் இவைகளின் வடிவம் போலவும், ஈனம் இல் குதிரை—குற்றமற்ற குதிரை, வெற்றிலைக்கொடி—வெற்றிலைக்கொடி, மற்றும் உள்ள ஊனம் இல் எருது—மற்றும் இருக்கின்ற யாதொரு குற்றமற்ற எருது, காட்டில் உழன்றிடும் கரடி—காட்டில் திரிகின்ற கரடி ஆகியவற்றின் வடிவம் போலவும் தோன்றும்.

(பொழிப்புரை) பூனை, எலி, அம்பு, நண்டு, சுரைக்காய், கோழி, புலி, குரங்கு சிங்கம், குதிரை, வெற்றிலைக்கொடி எருது கரடி ஆகிய இவற்றின் வடிவங்களைப் போலவும் தோன்றும்.

''பறந்திடும் பட்சி யாமை
பகருநற் றேளைப் போலும்
சிறந்தெண்ணெய் விட்ட போதில்
சிறியதாய்ச் சுருங்கி னாலும்
புறந்தரும் கூந்தல் மானே
பொங்கியே பரந்திட் டாலும்
அறிந்திடுங் குறிக ளெல்லாம்
அசாத்தியக் குறிப்புத் தானே.''

(கருத்துரை) இச் செய்யுளும் தீரா நோயின் எண்ணெய்க் குறிகளைக் கூறுகின்றது.

(பதவுரை) பறந்திடும் பட்சி ஆமை—பறக்கின்ற பறவை, ஆமை பகருநல்தேளைப்போலும்—சொல்லப்படுகின்ற தேள் இவைகளின் வடிவம் போலவும் சிறந்த எண்ணெய் விட்ட போதில்—உயர்ந்த எண்ணெய்த்துளியை நீரில் விட்ட காலத்து, சிறியது ஆய் சுருங்கினாலும்—விட்ட அளவில் குறைந்தாலும், பொங்கிப் பரந்திட்டாலும்—சரேலன்று பொங்கிப் பரவினாலும், அறிந்திடுங் குறிகள் எல்லாம்—இப்படி உணரப்படும் எண்ணெய்க் குறிகளெல்லாம், அசாத்தியக் குறிப்புத்தானே—தீராநோயின் குறிகளாகும்.

(பொழிப்புரை) பறவை, ஆமை தேள், பரவாமை, பொங்கிப் பரவல் என்னும் இவைகளெல்லாம் தீராநோயின் குறிகளாவன வாம்.

''இவ்வித மூத்தி ரத்தி
னிலக்கண முற்று மந்தச்
செவ்விய மருத்து முன்னூல்
செப்பிய வகைக ளெல்லாம்
நவ்விபோல் விழியி னுளே
நாட்டின்மா னிடருக் காக
அவ்விய மில்லா நெஞ்சத்
தகத்திய னுரைத்த தாமே.''

(கருத்துரை) இச்செய்யுள் நூலாசிரியர் பேரைக் கூறு கின்றது.

(பதவுரை) இவ்விதம்—இந்த விதமாய், முத்திரத்தின் இலக்கணம் முற்றும்—சிறு நீரில் எண்ணெய் விட்டுப் பார்க்கும் ஆராய்ச்சிகளை யெல்லாம், அந்த—முன்னிருந்து, செவ்விய—செம்மை முறையின் முடிந்த, மருத்து, முன்நூல்—மருத்து வத்தைச் சொல்லுகின்ற பழைய தமிழ் நூலில், செப்பிய வகைகள் எல்லாம்—சொல்லப்பட்ட வகைகளெல்லாவற்றையும், நாட்டில் —இவ்வுலகத்தில் வாழும், மானிடருக்காக—மக்கள் பொருட்டு, அவ்வியம் இல்லாத—பொறாமையை ஒழித்த, நெஞ்சத்து—மனத்தையுடைய, அகத்திய முனிவர் உரைத்தது ஆம்—உரைத்ததாகும்.

(பொழிப்புரை) நீரில் எண்ணெய் விட்டுப் பார்க்குங் குறிகள் யாவும் தமிழ் மொழியில் முன்னோர்கள் சொல்லி யுள்ள மருத்துவ நூலின்படி அகத்திய முனிவர் சொன்ன தாகும்.

வேறு.

சந்நிவாத நோங், தீரும் நோய்.

''இருமுடலிற் பிணியிழிநீர்த் துரும்பா லிட்ட
எண்ணெய்செறிந் தசைந்துபுதைந் தொன்றிற் பாதி
மருவிமிதக் கிற்சந்நி வாத நோயாய்
மாறுமிழி கின்றதனி நீருள் வாய்ந்த
பரவரிய எண்ணெய்தா னான்கு மூலை
பதுமங்கண் ணாடிகுடை பணிலந் தேரின்
உருளைசாய் மரந்திகழ்குண் டலிபோற் றோன்றில்
ஊராநோய் மாறுமிதை யுணர்ந்து கொள்ளே.''

(கருத்துரை) இச் செய்யுள் சந்நிவாதநோய் தீரும் குறிகளைக் கூறுகின்றது

(பதவுரை) இரும் உடலில் —பெரிய உடம்பில் உண்டாகின்ற பிணி—நோய்களினால், இழி—இறங்குகிற நீர்—விதிப்படிகண்ணாடிக் குப்பியில் பிடிக்கப்படும் சிறு நீரில். துரும்பால் இட்ட—ஒரு துரும்பினுல் தொட்டுவிடப்பட்ட (ஒரேதுளியாகிய) எண்ணெய் செறிந்து—எண்ணெய் நெருங்கி, அசைந்து—ஆடி, ஒன்றில் பாதி புதைந்து—ஒரு துளியில் பாதி உள்ளழுந்தி, மருவி மிதக்கில்—பாதி நீரின் மேலேயே மிதந்தால், சந்நிவாத நோயாய் மாறும்—இந்நோய் சந்நிவாத நோயாய் மாறிவிடும், இழிகின்ற தனி நீருள் வாய்ந்த—இழிகின்ற ஒப்பற்ற சிறுநீரில் விடப்பட்டிருந்த பரவு அரிய எண்ணெய்—போற்றுதற்கரிய எண்ணெய்த்துளி, நான்குமூலை—நான்கு மூலைகளைக் கொண்ட சதுரமாகவும், பதுமம்—தாமரை மலர், கண்ணாடி குடைபணிலம்—கண்ணாடி, குடை, சங்கு, தேரின் உருளை—தேர்ச்சக்கரம், சாய் மரம்—சாய்ந்தமரம், திகழ்—விளங்குகின்ற, குண்டலி—குண்டலி சத்தி என்னும் கீழ்முகசக்தி, போல்—ஆகிய இவற்றைப்போல், தோன்றில்—காணப்பட்டால், ஊராம் நோய்—உடலில் வருத்து கின்ற நோய்கள் மாறும்—தீரும், இதை—இந்த ஆராய்ச்சியை, உணர்ந்துகொள்—மருத்துவ மாணவனான நீ நன்ருய் உணர்ந்து கொள்வாய்.

(பொழிப்புரை) நீரில் விட்ட ஒரு துளி எண்ணெயில் பாதி கீழ் அழுந்தியும், பாதி மேல் மிதந்தும் தோன்றில், சந்நிவாத் நோயும், சதுரவடிவம், தாமரை மலர், கண்ணாடி, குடை, சங்கு, தேர்உருளை, சாய்ந்தமரம், குண்டலி ஆகிய இவற்றைப்போற் காணப்படின் அந்நீருடையவனுடைய நோய்கள் தீர்வனவாகும்.

தீருங்குறி, தீராக்குறி.

''உணர்ந்தமெய் வழிநீரி லிட்ட எண்ணெய்
ஓங்கியசோற் றுக்கும்பங் குறள னுற்ற
இணங்கியவெற் றிலேகுதிரை யெருது போல
இருந்தாலே றியநோய்போ யினிது வாழும்
மணந்திகழ்புள் ளாமைநாய் சிங்கம் பன்றி
மாநாகங் குரங்குதேள் பூனை மனிதன்
இணங்கியஎண் ணெயிற்ருேன்றிற் செத்தா ரென்றே
இயம்புகநல் லறிவினு லிசைந்தோர் தாமே.''

(கருத்துரை) இச்செய்யுள் தீருங்குறி, தீராக்குறிகளைக் கூறுகின்றது.

(பதவுரை) உணர்ந்த மெய்வழிநீரில் இட்ட எண்ணெய்—உடம்பிலிருந்து இழிகின்ற நீரில் விட்ட எண்ணெய்த் துளியானது, ஓங்கிய சோற்றுக் குடும்பம் குறளன்—சோற்றுப்பானை, குள்ளன், உற்ற—மிகவும், இணங்கிய—பொருந்தின, வெற்றிலை

குதிரை, எருதுபோல இருந்தால்—வெற்றிலை, குதிரை, எருது என்னும் இவற்றைப் போல எண்ணெய்க் குறி தோன்றுமானால், ஏறிய நோய் போய் இனிதுவாழும்—மிகுதிப்பட்ட நோய்கள் தீர்ந்து உயிர் வாழ்வான், மணம் திகழ்—ஒரு வகையான நாற்றம் வெளிப்படுகின்ற, புள், ஆமை, நாய், சிங்கம், பன்றி, மாநாகம், குரங்கு, தேள், பூனை, மனிதன் என்னும் இவைகள் போல்; இணங்கிய எண்ணெயில் தோன்றில்—பொருந்திய எண்ணெயில் காணப்படுமானால், செத்தார் என்று—அவ்வாறான நீரையுடையவர்கள் இறந்து விட்டாரென்று, நல் அறிவினால் இசைந்தோர்—உயர்ந்த அறிவால் தெளிந்தவர்கள், இயம்புக—சொல்லக்கடவர்கள்.

(பொழிப்புரை) நோயாளியின் நீரில் விடப்பட்ட எண்ணெய்த் துளியானது, சோற்றுக்கும்பம், குள்ளன், வெற்றிலை, குதிரை, எருது என்னும் இவற்றின் வடிவங்கள் போல் காணப்படுமானால், மிகுந்த நோய் நீங்கி இன்பமாய் வாழ்வர் என்றும், பறவை, ஆமை நாய், சிங்கம், பன்றி, பாம்பு, குரங்கு, தேள், பூனை, மனிதன் என்னும் இவைகள் போலக் காணப்படுமானால், நோய் நீங்காது துன்புறுவர் என்றும் உணர்ந்து சொல்லக்கடவர்.

தீராக்குறி, தீருங்குறி.

''இசைந்தமெய்யிற் கழிந்தநீர் தனிலே யிட்ட
எண்ணெயிலே குறைத்தலைதோன் றிடுமே யாயின்
அசைந்தவுயிர் போனவனே யென்று சொல்க
அஃதொழிந்து நீரிலெண்ணெ யதனில் மேலே
பசந்ததொரு நாமவட்டம் பட்டி ருக்கில்
பற்றியநோய் தனிற்சாகான் பணைத்து வீங்கி
அசைந்துகனத் துப்புடைத்துத் திரண்டு விம்மி
அமுதகும்பம் போலுமுலை யணங்கி னுளே''

(கருத்துரை) இச் செய்யுள் தீராக் குறியையுங், தீருங்குறியையுங் கூறுகின்றது.

(பதவுரை) இசைந்த மெய்யில்—சிறு நீர் ஆராய்ச்சிக்குப பொருத்தமான உடம்பிலிருந்து, கழிந்த நீர் தன்னில்—இறங்கின சிறு நீரில், இட்ட—விட்ட, எண்ணெயில்—(ஒரு துளி) எண்ணெயில், குறைத்தலை—முண்டத்தின் வடிவம் போல், தோன்றிடும் ஆயின்—காணப்பட்டால், அசைந்து—உடலிலிருந்து ஆடிப்பாடியிருந்த, உயிர்—உயிரானது, போனவனே என்று சொல்க—உடலிலிருந்து வெளிப்பட்டுப் போனவனே (இறந்தவனே) என்று சொல்லக்கடவாய்; அஃது ஒழிந்து—அஃதல்லாமல், நீரில்—சிறு நீரில் விடப்பட்ட எண்ணெய் அதனின் மேல்—எண்ணெயில், பசைந்து—குளிர்ச்சியாய், ஒரு நாம வட்டம்பட்டு இருக்கில்—வடகலை நாமம் போல் வடிவம் காணப்பட்டால், பற்றிய நோய் தன்னில் சாகான்—தொடர்ந்த நோயால் சாகமாட்டான் எனக்கொள்க.

(பொழிப்புரை) உடம்பிலிருந்து இறங்கிய சிறு நீரில் விட்ட எண்ணெய், தலையில்லா முண்டம்போல் காணப்பட்டால் இறந்து விடுவான் என்றும், நாம வட்டம் போல் காணப்படுமானால் இறவான் என்றும் அறிந்து சொல்லக்கடவர்.

வேறு.

சுரநீர் விகற்பம்.

''சுரமதிற் றெளிந்த நீர்தான்
சுகமறும் வாதங் காணும்
சுரமதிற் சுருக்கும் பச்சை
சுரபித்த வெட்டை யாகும்
சுரமதிற் செவந்த நீர்தான்
தோடமுஞ் சந்நி யுண்டாம்
சுரமதிற் சுண்ணம் போலத்
தோய்ந்திட வசாத்தி யந்தான்.''

(கருத்துரை) இச்செய்யுள், சுரநீரின் வேற்றுமையை நிறத்தாலும் வண்டலாலும் கூறுகின்றது.

(பதவுரை) சுரமதில் தெளிந்த நீர்—சுரத்தின் தெளிவான நீர் இழியுமானால், சுகம் அறும் வாதம் காணும்—எவ்வித நன்மையையும் அடையவொண்ணாத வாதநோய் உண்டாகும், சுரம் அதில் சுருக்கும் பச்சை—சுரத்தின் மஞ்சள் நிறமாகவும், நீர்ச்சுருக்காகவும், நீர் இழிந்தால், சுரபித்த வெட்டை ஆகும்—பித்த வெட்டையால் வந்த சுரமாகும், சுரம் அதில் சிவந்த நீர்—சுரத்தில் சிவந்த நீர் இழிந்தால், தோடமும் சந்நி உண்டாம்—ஏழுவகைத் தோடங்களில் ஏதாவதொன்றும் சந்நியும் உண்டாம், சுரத்தில் சுண்ணம் போலத் தோய்ந்திட—சுரநீரின் அடியில் சுண்ணத்தைப் போலத் தோய்ந்து படியுமானால் அசாத்தியம் தான்—அந்நோய் தீருதல் அருமையாகும்.

(பொழிப்புரை) சுரத்தில், தெளிந்த நீர் இழியுமானால் வாத நோயும், நீர் சுருக்குடன் மஞ்சள் நீர் இழியுமானால் பித்த வெட்டையும், சிவந்த நீர் இழியுமானால் ஏழுவகைத் தோடங்களில் ஒரு தோடம் அல்லது சந்நியும் உண்டாகும், சுரத்தில் இழியும் நீரின் அடியில், சுண்ணம் போல் படிந்திருக்குமானால் அசாத்தியமாகும்.

வெகுமூத்திரக் குறி.

''அன்னமே கேணீ மாந்தர்
அருந்து நீர் மிகவும் பொங்கித்
தன்னுளே சுவறு வண்ணம்
தங்கியே மிகுதி யாகி

இந்திற மில்லா நாளு
மிடைவிடா திறங்கு மாயின்
வின்னமும் செய்யும் வெய்ய
வெகுமூத்தி ரத்தின வாறே.''

(கருத்துரை) இச்செய்யுள் வெகு மூத்திரம் என்னும் அதிக நீர்க்குறிகளைக் கூறுகின்றது.

(பதவுரை) அன்னமே—ஓ பெண்ணே! நீ கேள்—நான் சொல்வதை நீ நன்றுய்க் கேள், மாந்தர்—உலகத்திலுள்ள மக்கள் அருந்தும் நீர்—நாளும் குடிக்கும் நீரானது, மிகவும் பொங்கி—மிகப் பெருகி, தன்உள்—தன் உடம்பில், சுவறாவண்ணம்—அந்தந்த கருவிகளில் சேர்ந்து வற்றாமல், மிகுதியாகத் தங்கி—நீர்ப்பையில் அப்போதைக்கப்போது மிகுதியாகச் சேர்ந்து, இந்நிறம் இல்லா—ஒரு நிறமாயிராமல் ஒவ்வொருபோது—ஒவ்வொரு நிறமாய், நாளும்—தினந்தோறும், இடைவிடாது இறங்குமாயின்—அடிக்கடி கழிந்துகொண்டே இருக்குமானால், வின்னமும் செய்யும்—அவ்வுடலுக்கு பின்னத்தை விளைவிக்கக் கூடிய, வெய்ய—கொடுமையான, வெகு மூத்திரத்தின் வாறே—வெகு மூத்திரம் என்னும் நோயின் குறியாம்.

(பொழிப்புரை) வெகு மூத்திரத்தின் தன்மைகளாவன: தாம் நாள் தோறும் குடிக்கும் நீர், நீர்வேண்டப்படும் கருவிகளில் சேர்ந்து தங்காமல் நீர்ப்பையிலேயே தங்கிப் பெருகுந் தன்மையை யடைந்து, பல நிறமாக அடிக்கடி ஓய்வில்லாமல் இறங்கிக்கொண்டே இருப்பதாகும். இஃது அவ்வுடலுக்குக் கெடுதியை உண்டாக்கும்.

மேகநீர் விகற்பம்.

"நீரினிற் சுண்ணம் போல
நின்றிடி னெலும்பு ருக்கி
நீரினி னீர்மோர் நெய்போ
னின்றிடின் மேக வெட்டை
நீரினில் முன்னும் பின்னு
நின்றிடிற் பிரமி யந்தான்
நீரினி லெறும்பு மீக்கள்
நெருங்கிடி லசாத்தி யந்தான்.''

(பொழிப்புரை) நீரை ஒரு பாத்ரத்தில் பிடித்து வைத்தாலும், அல்லது நீரைவிடப்பட்ட இடத்தில் சுண்ணம்போல் படிந்து இருந்தாலும், எலும்புருக்கி நோயாம், நீரினில் நீர் கலந்த மோர்போலும், நெய்யைப் போலும் படிந்திருந்தால் மேக வெட்டையாம். நீர்போகும் முன்னும் நீர் கழிந்த பிறகும் நீர்துளையை அடைத்திடின் பிரமியமாம். விட்ட நீரில் எறும்பும், ஈக்களும் மொய்த்தால் அந்நீரையுடைய நோயாளியின் நோய் தீராவாம்.

மூத்திரவிலக்கணம்.

" வாதரோகந் தெளிந்தான் மஞ்சளித்தான் மற்றையது
சீதநுரைத் தாற்பலவாம் சேர்ந்தநோய்—ஈதகலா
மூத்திரத்தி னுண்மையை மொழிந்தாம் இனிச்சொல்வாம்
நாத்திறத்தி லுள்ளவகை நாம்."

(பொழிப்புரை) நீர் தெளிந்திருந்தால் வாத ரோகத்தையும், மஞ்சளித்திருந்தால் பித்தரோகத்தையும், வெளுத்து நுரைத்திருந்தால் கபரோகத்தையும், மேற்கண்ட இலக்கணங்கள் இரண்டிரண்டாய்க் கலந்திருந்தால் தொந்தரோகத்தையும் காட்டும். இந்நோய் இந்நிறங்களை விட்டு நீங்கா. ஆகையால் மூத்திர உண்மையைக் கூறினோம்.

நீர்குறிச் சிறப்பு.

"தர்க்கசாத் திரிக ளானோர்
தங்களிற் றேர்ந்து நாடி
வர்க்கமாம் நாடி தன்னில்
வருவது மயக்க மென்றே
உற்றநீர்ப் பரீக்ஷை யாய்ந்தே
யுரைத்தன ரிதற்கு நேராய்
மற்றொரு விதிநூ லில்லை
மருத்துவக் கலைவல் லோர்க்கே."

பொழிப்புரை) மருத்துவக் கலைவல்லவருக்கு நோயைக் கணிப்பதற்கு நீர்க் குறியைக் காட்டிலும், வேறில்லை யென்னலாம். ஏனெனில், மற்றக் கைக் குறியாகிய நாடியைக் கொண்டு நோயைத் திண்ணமாய்க் கணித்தற்கியலாது.

இரத்தமிகுதி நீர்.

"விட்டநீர் சிவந்தி ருக்கும்
வேற்றுமை கண்ட போது
மட்டிலா விரத்த மிஞ்சி
வளர்ந்ததாற் சிவந்து தோன்றும்
உட்டண மிகுந்த தாலே
யுற்றநீ ரிறுகிற் றென்றே
இட்டமா யறிவ தற்கிங்
கிடமென வியம்ப லாமே."

(பொழிப்புரை) விட்ட நீரானது மிக சிவந்திருக்குமானால்' அது குருதிக் கொதிப்பால் ஏற்பட்ட நீராம். இக்கொதிப்பு உட்டண மிகுதியினால் ஏற்பட்டு நீர் சுருங்குவதால் உண்டானதென்று கூறுதல் வேண்டும்.

பித்தகோபநீர் நிறம்.

''மெத்தநீர் சிவந்து தோன்றி
மெதுவுறத் தெளிந்து நின்றால்
பித்தத்தின் கோப மென்று
பேசுதற் கிடம தாகும்
இத்தைமூ லத்தின் வெப்பால்
எரிந்துநீர் சிவந்த தென்றும்
வற்றிய வரட்சி தன்னால்
வளமுறத் தெளிந்த தென்னே.''

(பொழிப்புரை) முற்கூறிய நீரின் நிறத்தைக் காட்டிலும், மிகவும் சிவந்திருந்தால், அந்நீர் பித்த மிகுதியினால் உண்டான தாம். இதை மூலச்சூட்டால் உண்டானதென்றும் செப்புவர்.

சேத்துமகோபநீர்.

''வளமுற வெள்ளை யாகி
வற்றி நீர் குறுகி நின்ருல்
தெளிவுறச் சேத்து மதின்
செய்கையென் றுரைக்க லாகும்
குளிர்மையி னலே வெள்ளை
யாகிய குணமா மென்றும்
இளகுபச் சிரத்தந் தன்னா
லிறுகின தென்றுஞ் சொல்லே.''

(பொழிப்புரை) நீர் வெண்மை நிறம் பொருந்தி அளவிலும் குறைந்திருந்தால். அது சேத்துமத்தாலுண்டான குணமாகும். குளிர்ச்சியினால் வெண்மை நிறமாகுமென்றும், குருதியின் குற்றத்தால் அளவில் குறையுமென்றும் கொள்க.

வாதகோபநீர்.

''சொல்லரும் வெள்ளை யாகித் தோயமும் தெளிவதானால்
வல்லப மிகுந்த வாதம் வருத்திய குணமென் றோதாய்
நல்லதோர் குளிர்மை தன்னால் நாடிய வெள்ளை யென்றே
அல்லல்சேர் வரட்சி யாலே யந்த நீர் தெதெளிவதாமே.

(பொழிப்புரை) நீர் வெண்மை நிறம் பொருந்தித் தெளிந் திருக்குமானால், அது வாத மிகுதியினால் உண்டானதாம். குளிர்ச்சி யினால் வெண்மை நிறமும், வரட்சியினாலே தெளிவும் ஏற்பட்ட தென அறிக.

இரத்தவாத பித்த கலப்புநீர்.

''அந்தநீர் கனத்திங் கிறுக லாய்நின்றா லிரத்த மிஞ்சி
வந்தவிக் குணங்க ளாகு மற்றது வல்லா லூனே
விந்தையா யந்த நீரில் மெல்லிதா யுகைத்து நின்றால்
தொந்தித்த பித்த மென்னுந் தொகையென வகைசொல்
வாயே.''

(பொழிப்புரை) நீரானது கனத்து இறுகலாய் நின்றால், அஃது இரத்தக் கொதிப்பால் ஏற்பட்ட நீராம், ஈதன்றியும் தசை மென்மையாகக் கரைந்து அந்நீரில் கலந்து வெளிப்பட்டால், அது பித்த வாதக்கலப்பால் உண்டான தென்று பகருவாயாக.

மக்கள் ஆண்டுக்குத்தக நீரின் மாற்றம்.

''சேட்டமுன் சொன்ன வெல்லாம்
சித்திடு மேதுக் கென்றால்
மூட்டிய வயதி னாலு
முதியகா லத்தி னாலும்
கோட்டுநட் சத்தி ரத்தின்
குணங்களி னுலும் வேறு
நட்டமாய்ப் பித்த மிஞ்சி
நவபல குணங்கள் காட்டும்.''

(பொழிப்புரை) இதுவரை நீருக்குச் சொல்லிய குணங்களெல்லாம், வயதினாலும், காலத்தினாலும் (பருவம்) உடுக்களின் மாற்றத்தினுலும் பித்தமானது அதிகப்பட்டுப் புதுப்புதுக் குணங்களை உண்டு பண்ணும் என்பதாம்.

உட்டண நீர்.

''நவமுறு சுரமுற் றோர்தந்
நளினநீர் வெள்ளை யாகி
உவருறத் தெளிந்து நின்றா
லுட்டண மென்று காண்பாய்.''

(பொழிப்புரை) புதியதாய்க் காய்ச்சல் கண்டவர்கட்கு நீர் வெள்ளை நிறத்துடனும், உவர் பொருந்தி தெளிந்து மிகுந்தால் உட்டண மென்று அறிவாய்.

முறைக்காய்ச்சல் நீர்.

''அவமுறைக் காய்ச்ச லானா
லந்தநீர் கனத்தி ருக்கில்
கவனமுற் றடர்ந்த காய்ச்சல்
கடுகவிட் டகன்று போமே.''

(பொழிப்புரை) முறைக்காய்ச்சலுள்ளவர்கட்கு நீர் கனம் பொருந்தி இருந்தால், அந்நோய் விரைவில் தீருமென்றறிக.

மூன்று நாள் மாறல் நீர்.

காமாலை உட்டண நீர்.

"விட்டநீர் சிவந்து தோன்றி
மிகவுமே தெளிவ தானால்
மட்டிது மூன்று நாளை
மாறலென் றுரைக்க வேண்டும்
இட்டமாய் முகனை தன்னி
லிருகியே சிவந்த பின்பு
கட்டுநீர் வெள்ளை யாகிற்
கபாலத்திற் சேரும் பித்தம்."

(பொழிப்புரை) நீரானது சிவந்தும் மிக்க தெளிவுற்று மிருந்தால், அந்நீர் மூன்று நாட்களுக்கொரு முறை மாறிவரும் காய்ச்சல் என்பதை யுணர்த்தும். நீரானது இறுகிச் சிவந் திருந்து பிறகு வெண்மை நிறத்தையடையுமானால், அந்நீரை யுடைய நோயாளிக்குக் கபாலத்தில் பித்தமானது சேரும் என்று நீ அறிவாயாக.

தலைகனப்பும், மயக்கமும்.

"என்னமுன் சொன்ன தல்லால்
ஏந்திய நீரின் மேலே
வன்னமாய்ப் பருவ முள்ள
வளையமாய்ப் பரந்து நின்றால்
சென்னியுங் கனத்து மெத்த
தியக்கமுற் றிருக்கு மென்று
பன்னுசாத் திரிக ளாய்ந்து
பகர்ந்ததைப் பகர்ந்த தாமே."

(பொழிப்புரை) நீரைப் பாத்திரத்தில் பிடித்து வைக்க, அந்நீரின் மேல் பரப்பில் வளையம்போல் பரந்து நின்றால், அந் நீரை யுடையவர் தலைகனத்து மயக்க முற்றிருப்பர் என மருத்துவ நூலார் ஆராய்ந்துரைத்ததைச் சொல்லியதாகும்.

இடத்தலை நோய்.

"பகருநீ ரடியிற்சூழ்ந்து
பற்றிய சிவப்பா னாலும்
நிகர்மஞ்சள் நிறமா னாலும்
நீர்கொஞ்சந் தெளிவா னாலும்
மிகவுமே சென்னி தன்னில்
விதமான விடது பக்கம்
இகல்புரி நோவுண் டென்று
மியம்புவா யியல்பி னாலே"

(பொழிப்புரை) நீரைப்பிடித்து ஒரு பாத்திரத்தில் வைக்க, அதன் அடியில் செந்நிறமாயிருந்தாலும், மஞ்சள் நிறமாயிருந்தாலும், நீர் கொஞ்சம் தெளிவுற்றிருந்தாலும், தலையின் இடது பக்கத்தில் மிகவும் கடுமையான நோயுண்டென்று நீ கூறுவாயாக.

வலத்தலை நோய்.

''இயல்பிலாச் சுரத்தோர்க் கின்ன
மியம்புநீர் வெள்ளை யாகிச்
செயமறக் கறுப்பு மாகித்
தெளிந்திடு நீரு மாகி
வயமுற விருந்தால் புத்தி
வளர்சென்னி வலது பக்கம்
துயருற நோவுண் டென்று
சொல்லலாந் துலக்க மாக.''

(பொழிப்புரை) சுரமுடையவர்க்கு நீர் வெண்மையாகியும் கறுப்பாகியும் தெளிந்திருக்குமானால். தலையின் வலப்பக்கத்தில் வருத்தத்தைத் தரக் கூடிய நோயுண்டென்று தெளிவாய்ச் சொல்லலாம்.

காய்ச்சலுடன் கூடிய மார்பு நோயைக் காட்டும் நீரின் நிறம்.

''துலங்குநீ ரடியிற் பாதி
தோயமுஞ் சிவந்து தோன்றிக்
கலங்கிமேற் றெளிவு மாகிற்
காய்ச்சலுங் கடின மாகி
மலங்கிட மார்பு நெஞ்சும்
வாதையுற் றிருக்கு மென்றே
இலங்குசாத் திரநூல் வல்லோ
ரியாவர்க்கு மியம்பினாரே.''

(பொழிப்புரை) நீரை ஒரு பாத்திரத்தில் பிடித்துவைக்க, அதன் அடிப்பாதி சிவந்தும் கலங்கியும், மேற்பாதி தெளிவுற்றிருப்பின், அந் நீரையுடையவனுக்கு, மார்பும் நெஞ்சும் வலித்தலும் மிக்க காய்ச்சலும், மிகுந்திருக்குமென்று மருத்துவ நூலில் வல்லுநர் இயம்பினர்.

நீர்க்குண்டிக்காயில் கல்லிருப்பின் அதனை யுணர்த்தும் நீர்.

''நார்த்ததி நீர்பால் போல
நவையுற்றங் கிழியு மானால்
மாரற்ப முற்ற நீரி
லடிமண்டிக் கிடந்த தானால்

பாரிந்த மெழுகு மாங்காய்
பற்றிய கல்லி னாலே
சீருற்ற செய்கை யென்று
தெரிவுறச் செப்பலாமே.''

(பொழிப்புரை) நீரானது தயிர் நீரைப் போலவும் (அதாவது தயிர்த் தெளிவைப் போலவும்) பாலைப் போலவும் இழியு மானாலும், அந்நீரின் அடியில் வண்டல் இருந்தாலும், இந்நீரை யுடையவனுக்கு நீர்க்குண்டிக்காயில் கல்லிருப்பதால் இக்குணம் ஏற்பட்டதென்று யாவரும் அறியச் செப்பலாம்.

இரத்த தொந்த வியாதி.

ஈரல் சுரம்

''செப்புநீர் சிவந்து சற்றே
தெளிவுமா யிருந்த தென்னில்
துப்புறு மிரத்தத் தாலே
தொந்தித்த வியாதி யென்பாய்
அப்புநீர் கலங்கிக் கொஞ்ச
மாகவே கறுக்கு மாகில்
வெப்பமஃ தீரல் தாவி
வெதுப்பிய சுரமுண் டாமே.''

(பொழிப்புரை) நீரானது சிவந்து சிறிது தெளிவுற்றிருந்தால் இரத்த தொந்திப்பால் உண்டான நீரென்றும், நீரானது கலங்கி சிறிது கறுத்திருக்குமாயின் வெப்பமானது ஈரலைத்தாக்கியதால் உண்டான காய்ச்சலென்று மறிவாயாக.

இதய நோய்.

''உண்டறு கின்ற நீர்தா
னுயர்தலை முடியே போல
கண்டிடு மெழுக தாமாங்
காயினில் வியாதி யென்று
விண்டிடச் செய்வா யிந்த
விதமுறு சாத்தி ரத்தைக்
கொண்டுதேர்ந் திருக்கு மேலோர்
கூறிய குணமி தாமே.''

(பொழிப்புரை) பெய்கின்ற நீரானது தலைமுடியின் நிறத்தை யொத்திருப்பின், தமரகத்தில் பிணியுண்டாகுமென்று மேலோர் செப்பிப் போந்தனர்.

நெய்க்குறி.

''கோதறு நீரி லுள்ள
குணங்களைக் கூறு கின்றோம்
ஈதலால் வியாதி தன்னை
யின்னதென் றறிய நல்ல
சோதனை தன்னை யாய்ந்து
சொல்லுவேன் துலக்க மாக
காதுறக் கேட்பீர் மிக்க
கல்விசாத் திரங்கற் றீரே.''

(கருத்துரை) இனி நீரிலுள்ள பிணிகளையறிய வேறொரு சோதனையாகிய நெய்க்குறியைக் கூறுவேன், கேட்பீராக',

நெய்க்குறிக்குரிய நீரைச்சேகரிக்கும் நேரம்.

''கல்விசாத் திரங்கள் கற்ற
கனதவ முனிவ ராய்ந்து
சொல்லுமூத் திரப்ப ரீட்சைச்
சோதனை யதனைக் கேளீர்
அல்லிருட் சாமம் ரண்டு
சென்றதற் கப்பால் நீரே
நல்லபீங் கானில் வாங்கி
நல்லெண்ணெய் விட்டுப் பாரே.''

(பொழிப்புரை) விடியற்காலை ஏறக்குறைய 4-மணிக்கு விழுகின்ற நீரை, பீங்கான் பாத்திரத்தில் பிடித்து வைத்திருந்து அந்நீரில் எண்ணெய் விட்டுப் பார்க்கவும்.

இரத்த மிகுந்த வெப்பு.

''விட்டதோர் துளியி னெண்ணெய்
வீசியே பரந்து தோன்றி
வட்டமாய் நின்ற தாகில்
வளர்ந்திடும் ரத்த மிஞ்சி.''

(பொழிப்புரை) நீரில் விட்ட எண்ணெய்த்துளி வீசிப்பரந்து வட்டமாய் நின்றால்; அஃது இரத்தம் பொங்கலால் உண்டான தென்று அறிவாயாக.

இரத்தக் குறைவு.

''விரைவுடன் கதிர்போல் நீண்டு
வேற்றுமைக் குணங்கள் கண்டால்
குருதிதான் கெட்டு நாசம்
குன்றிய குணம் தென்னே.''

(பொழிப்புரை) நீரில் விட்ட எண்ணெய்த் துளியானது சீக்கிரமாகத் திரைபோல நீண்டால் குருதிகெட்டுக் குறைந்த தால் உண்டானதென்று தெரிந்துகொள்.

பித்த மிகுதி.

''காயத்தி னீரி லெண்ணெய்
கதிர்முனை நீண்ட தானால்
தீயுற்ற பித்த மீறிச்
செய்குண மிதுவென் றெண்ணி
நீயுற்ற குளிர்மை கூட்டி
நெகிழ்ந்திடப் பேதி கண்டால்
நோயற்றுப் போகு மென்று
நுவன்றனர் நூல்வல் லோரே.''

(பொழிப்புரை) நீரில் விட்ட எண்ணெய்த்துளி கதிர் முனையைப்போல் நீண்டால், பித்த மீறியதால் உண்டான தென்றறி. இந்நோயில் பேதியுண்டானால், நோயற்றுப்போகும் என்று நூல்வல்லோர் நுவன்றனர்.

சீத மிகுதி.

''வல்லநல் லெண்ணெய் துளியா
வார்த்ததில் நெகிழா தாகில்
சொல்லருங் குளிர்மை மீறித்
தோஷமுற் றெய்து மென்றும்.''

(பொழிப்புரை) நீரில் விட்ட எண்ணெய்த்துளி நெகிழாமல் அப்படியேயிருந்தால், சீதமிகுதியால் உண்டானதென்று அறிவாய்.

அசாத்தியக் குறி.

''செய்யநல் லெண்ணெய் தன்னைச்
சிறுநீரில் விட்ட போது
ஐயம துறவே தாழ்ந்தா
லசாத்தியக் குறியே யாகும்
உய்வது மரிதா மாதி
யொருபொரு ளுடைய சித்தம்
எய்துவ தேயல் லாம
லெம்மனோ ரியம்பொண் ணாதே.''

(கருத்துரை) நீரில் விட்ட எண்ணெய்த்துளி நீரினுள் அமிழ்ந் தால் அசாத்தியம்.

குளிர்மை.

''செய்ய நாவரட்சி யில்லை
தெளிந்தநீர் சுவையு மில்லை
நய்யவே குளிரு மேனி
நடுங்கிடும் வாய்நீ ரூறும்
மெய்யுடல் கரமுங் காலும்
வெதும்பிடு மிரவி லேநீர்
பெய்வது மிகுதி யாகில்
பேசுவாய் குளிர்மை யென்றே.''

(கருத்துரை) நீர் தெளிந்திருந்தாலும், இரவில் அதிகமாக நீர் கழிந்தாலும் அஃது உடலின் அதிசீதளத்தைக் குறிக்கும்.

முலைப்பால் குறி.

''குழவியாண் பிள்ளை பெற்ற
கோதையர் முலைப்பால் வாங்கிப்
பழுதுறு வியாதி யுற்றோர்
பசியநீர் தன்னில் விட்டால்
களவறக் கலந்த தாகில்
காரிய மிகவு நன்றாம்
வளமுறக் கலவா தாகில்
மரணமென் றறிய லாமே.''

(பொழிப்புரை) ஆண் பிள்ளையைப் பெற்ற தாயின் முலைப் பாலைப் பிணியுற்ரேரின் நீரில் விட்டுப் பார்த்தால், அந்நீரில் அது கலந்தால் தீருமென்றும் கலவாவிட்டால் மரணமென் றும் அறிவாயாக.

மரணமறிய.

''மரணமென் றறிவ தற்கு
வராகத்தின் கொழுப்பை வாங்கிச்
சரணத்தின் மேலுங் கீழும்
தடவியே வழித்து நாய்க்குத்
தரணியிற் போடத் தின்றால்
சமித்திடில் மிகவும் நன்றாம்
அரணித்து வாந்தி பண்ணி
லவத்தையென் றறிய லாமே.''

(பொழிப்புரை) பன்றியின் கொழுப்பை, நோயுற்ரோரின் காலின் மேற் பக்கமும் கீழ்ப்பக்கமும் தடவிவழித்து நாய்க்கிட அது அதைத் தின்று செரித்துக் கொள்ளில் நற்குறியாம். அது நாய்க்குச் செரிக்காமல் வாந்தியானால் துர்க்குறியாம்.

குருதிக் குறி.

"குறியின்னங் கூறக் கேளாய்
குளிர்ந்த தண்ணீரை வாங்கி
இறுகிய வருத்தக் கார
ரிரத்தத்தி லிரண்டு துளியே
உறுதியாய் விட்டுப் பார்க்க
வுள்ளூறத் தாழ்ந்தா னன்று
மறுகியே நெகிழு மாகில்
மரணமென் றறிய லாமே."

(பொழிப்புரை) நோயுற்றோரின் இரத்தத்தில் இரண்டு துளியைக் குளிர்ந்த தண்ணிரில் விட, அஃது உள்ளழுந்தின் நன்றும், அது நெகிழுமாயின் மரணமாம்.

மூத்திரப் பரீட்சை.


"மாணிக்கம் பால்பிரச மஞ்ச ளிஃதுபிர
மாணிக்கம் பால்வரிசை மாறாநீர்—மாணிக்க
முத்தம மாதி யொருநாலு மந்தமுனே
யுத்தம மாதிமதி யுன்." (தே-ய.)

(சொல்லுரை) மாணிக்கம் பால் பிரசம் மஞ்சள்—மாணிக்கத்தைப் போலவும், பாலைப்போலவும், தேனைப்போலவும், மஞ்சளைப் போலவும், இஃது பிரமாணிக்கம் பால் வரிசை மாறா நீர் மாணிக்கம்—இவ் வண்ணம் நிச்சயமாய்ப் பாக முறைமை வேறுபடாத தன்மையுடைய கோசத்தில் வரும் நீரானது, உத்தமம் ஆதி ஒரு நாலும்—உத்தமம் முதலாகச் சொல்லத் தக்க ஒரு நான்கு வரிசைகளையும், அந்தம் முன்னே—கடைசியை முதலாகக் கொண்டு, மம அதி உற்ற மதி உன்—அதிர்ஷடத்தின் விசேஷத்தாலடைந்த அறிவினால் சிந்திப்பாயாக.

(பொழிப்புரை) நோயாளியின் மூத்திரமானது மாணிக்கத்தைப் போல செந்நிறமாயிருப்பது அதமாதமம் என்பதும், பால் போல் வெண்ணிறமாயிருப்பது அதம மென்பதும், தேன்போன்ற நிறமாயிருப்பது மத்திமமென்பதும், மஞ்சள் நிறமாயிருப்பது உத்தமமென்பதும் அறியலாம்.

உத்தமம், மத்திமம், அதமம், அதமாதமம் என்னும் நான்கையும் அவ்வரிசைப்படியே கடைசியை முதலாகக் கொண்டு அதமாதமம், அதமம், மத்திமம், உத்தமமென்று கொள்ள வேண்டுமென குறிப்பிப்பதற்காக "உத்தமமாதியொரு நாலுமந்த முனே" என்றுரைத்தார்.

XVII. தூதனிலக்கணம்.



தூதள் இலக்கணம்.

என்னும்

மருத்துவரை அழைப்போனல் ஏற்படும் அறிகுறிகள்

எண்வகைத் திசைகளில் கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு.

அறுசீர் விருத்தம்.

''மருத்துவன் றனைய ழைக்க
வந்தவன் றன்னைப் பார்த்துத்
திருத்தமாய்க் கிழக்கி லிந்திரன்
செப்பிடு நல்ல தாகும்
எரிக்குமக் கினியின் திக்கில்
இப்போதே மரண மென்க
பரித்திடு மெமன்றன் திக்கில்
பயமொடு மரணந் தானே.''

(கருத்துரை) இச்செய்யுள், மருத்துவனை அழைக்க வருவோன் நின்றழைக்கும் மூன்று திசைகளின் நன்மை தீமைகளைக் கூறுகின்றது.

(பதவுரை) மருத்துவனை அழைக்க—நோய் தீர்க்கவல்ல தன்மைகளையுடைய மருத்துவனை அழைப்பதற்கு, வந்தவன் தன்னைப்பார்த்து—வந்த தூதனை நன்ருய்ப் பார்த்து, இந்திரன் கிழக்கில்—(அவன்) இந்திரன் திசையாகிய நேர்கிழக்கிலிருந்து அழைத்தால், நல்லது ஆகும்—நன்மையுண்டாம் (நோய் தீருமென்று), திருத்தமாய் செப்பிடு—செவ்வையாய்ச் சொல்வாய், எரிக்கும்—சுடர் வீசுகின்ற, அக்கினியின் திக்கில்—தென் கிழக்கு மூலையாகிய அக்கினி மூலையிலிருந்து அழைத்தால்,இப்போதே மரணம் என்க—உடனே மரண முண்டாகுமென்று சொல்லுவாய், பரித்திடும்—உயிர்களை உடலினின்றும் பிரிக்கும். எமன் திக்கில்—இயமன் திசையாகிய நேர் தெற்கிலிருந்துஅழைத்தால், பயமொடு மரணமே—பயத்தோடு கூடிய மரணமுண்டாகுமென்று சொல்வாய்.

(பொழிப்புரை) மருத்துவனை அழைக்க வருகின்ற தூதுவன் மருத்துவனிருக்கும் இடத்திற்குக் கிழக்காகிய இந்திரன் திக்கிலிருந்து அழைத்தால், நோய் தீரும் என்றும், தென் கிழக்காகிய அக்கினி மூலையிலிருந்து அழைத்தால், உடனே இறப்புண்டாகுமென்றும் தெற்காகிய எமன் திக்கிலிருந்து அழைத்தால் மரண பயத்துடனே கூடின் மரண முண்டாகுமென்றுஞ் சொல்வாய்.

நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன்.

அறுசீர் விருத்தம்.

''நிருதியில் வந்த ழைக்கில்
நிச்சயஞ் சாவு சொல்வாய்
வருணனில் வந்த ழைக்கில்
மத்திமம் வாயு மூலே
திறமுடன் வந்த ழைக்கில்
தீராது ரோக மென்க
இருமைசொல் குபேர னன்மை
ஈசானம் நல்ல தாமே.''

(கருத்துரை) இச் செய்யுளும், மருத்துவனை அழைப் போன் நின்றழைக்கும் திசைகளின் தன்மைகளேயே கூறுகின்றது.

(பதவுரை) நிருதியில் வந்து அழைக்கில்—மருத்துவனை அழைக்க வந்தவன் தென்மேற்கு மூலையாகிய நிருதி திசை யிலிருந்து அழைத்தால், சாவு—சாதல், நிச்சயம்—உண்மை யென்று, சொல்வாய்—சொல்லித் தெரிவிப்பாய், வருணனில் வந்து அழைக்கில்—மேற்காகிய வருணன் திசையிலிருந்து அழைத் தால், மத்திமம்—தீர்ந்தாலும் தீரலாம் தீராது போயினும் போகலாம், வாயு மூலே திறமுடன் வந்து அழைக்கின்—வடமேற் காகிய வாயு மூலையிலிருந்து அழைத்தால், ரோகம் தீராது என்க—நோய் தீராதென்று சொல்வாய், இருமை சொல்— இம்மை, மறுமைகளை எடுத்துச் சொல்கின்ற, குபேரன்— வடக்காகிய குபேரன் திசையிலிருந்து அழைத்தால், நன்மை— நோய் தீர்ந்து நன்மையாகும், ஈசானம் நல்லது ஆம்—வட கிழக்காகிய ஈசான மூலையிலிருந்து அழைத்தால் நோய் நீங்கி நன்மையுண்டாகும்.

(பொழிப்புரை) தென்மேற்கு மூலையாகிய நிருதி திக்கி லிருந்து அழைத்தால், அந்நோயாளி இறத்தல் உண்மை என்றும், மேற்காகும் வருணன் திக்கிலிருந்து அழைத்தால், அந்நோய் நீங்குவது மத்திம மென்றும், வடமேற்காகும் வாயு திக்கிலிருந்து அழைத்தால், அந்நோய் தீராதென்றும் வடக்காகிய குபேர திக்கிலிருந்து அழைத்தால் அந்நோய்தீர்ந்து நன்மையாகும் என்றும், வடகிழக்கு மூலையாகும் ஈசானத்தி லிருந்து அழைத்தால் அந்நோய் தீருமென்றும் சொல்வாய்.

சிலர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து அழைத்தால், நோய் விரைவில் தீருமென்றும், வடக்கிலும் தெற்கிலுமிருந்தழைத் தால், நோய் நாள்படத் தீருமென்றும், நிருதி மூலேயிலும், ஈசான்ய மூலையிலுமிருந்து அழைத்தால் நோய் வெகு விரைவில் தீரு மென்றும், அக்கினி மூலையிலும் வாயு மூலையிலுமிருந்தழைத் தால், நோய் தீராதென்றும், சொல்லியிருக்கிறார்கள், இதனை—

''பூர்வ பஸ்சிமயோ: ஸீக்ரம்
தூரம் தூத்நர யாம்யயோ
நைர்ருதீ சான்ய யோஸ் சாரம்
நாஸ்த் யாக்நேய நபஸ்வதோ:''. என்பதாலறிக.

இச்சுலோகத்தின் கருத்திற்கும் தமிழ்த் தூதனிலக்கணக் கருத்திற்கும் மிக்க வேற்றுமைகள் உள்ளன.

மருத்துவன் செயலால் நள்மை தீமையறிதல்.

ஆறுசீர் விருத்தம்.

''தண்ணீர்க் குடமு மாமிசமும்
தயிர்பால் மீன்சந் தனம்பூவும்
வண்ணப் படியே தான்காண
வருவார் சாத்ய மென்றேசொல்
நண்ணுங் கால்கை முகஞ்சுத்தி
நற்பூ சையச னஞ்செய்ய
எண்ணிக் கருமந் தான் சொல்லி
எய்தும சாத்யந் தானறியே.''

(கருத்துரை) இச்செய்யுள் மருத்துவனை அழைக்க, அவன் வீட்டுக்குப் போகும்போது அம்மருத்துவன் செய்யும் தொழில் முதலியவற்றைக் கொண்டு நன்மை தீமை அறிதலைக் கூறுகிறது.

(பதவுரை) தண்ணீர்க்குடம்—நீர்க்குடம் கொண்டு தண்ணீர் முகத்தல், மாமிசம்—ஊன்வாங்கல், தயிர்பால்—தயிர் அல்லது பால் வாங்கல், மீன்—மீன் வாங்கல், சந்தனம் பூவும்—சந்தனம் இழைத்தல் பூத்திருத்தல் ஆகிய இவற்றுள் ஒன்றை மருத்துவன் செய்துகொண்டிருப்பதை, வண்ணப்படி அழகாய், தான் காணவருவார்—தூதனாகிய தான் காணும் படி வரநேரின், சாத்தியம் என்று சொல்—அந்நோய் நீங்க கூடியதே என்று சொல்வாய், நண்ணும்—பொருந்தியிருக்கின்ற, கால்—கால்களையும், கை—கைகளையும், முகம்—முகத்தையும், சுத்தி—கழுவித் தூய்மை செய்யும் காலத்தும்; நல்பூசை—மருத்துவன் (ஏற்புடைக் கடவுளையாவது) வழிபடும்போது, அசனம் செய்ய—சோறுண்ணும் காலத்தும், எண்ணி—தான் நினைத்த, கருமம்—காரியத்தை, சொல்ல—மருத்துவனுக்குத் தெரிவித்து அழைக்க, அசாத்தியம் எய்தும்—அது தீராத நோயாகுமென்று, அறி—நீ தெரிந்துகொள்வாய்.

(பொழிப்புரை) மருத்துவனை அழைக்கச் சென்ற தூதன், மருத்துவனிடம், செல்லுங்கால், அங்கு அம்மருத்துவன், தண்ணீர் முகத்தல், மாமிசம், தயிர், பால், மீன் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றை வாங்குதல், சந்தனம் இழைத்தல், பூத் திருத்தல் ஆகியவற்றைச் செய்துகொண்டிருப்பானுனல், அது

தீரும் நோய் எனவும், கால்கழுவல், கைகழுவல், முகங்கழுவல், பூசை செய்தல், உண்ணல் முதலியவற்றுள் ஒன்றைச் செய்துகொண்டிருப் பானுனல் அது தீராத நோய் எனவும் தெரிந்துகொள்ளவேண்டும்.

இவைகளல்லாமல், மருத்துவன் தண்ணீர் நிலையத்திலிருந்து குளித்தல், தன் இல்லாளுடன் உல்லாசமாயிருத்தல், தூங்குதல், வருத்தத்தோடிருத்தல், அழுதல், நோயால் வருந்தல், மலம், சிறுநீர் கழித்தல் முதலியனவும் நோய் தீராமையைக் காட்டுங் குறிகளாம் என்று உணர்ந்து கொள்ளவேண்டும்.

தூதனால் அறிந்துகொள்ளவேண்டிய தீராக்குறிகள்.

''அந்தரந் தன்னைப் பார்த்தாங்
  கழைத்திடில் மரண மாகும்
விந்தைக்கை கால்பி டித்து
  வேண்டவே வியாதி மாறா
முந்தவே முகஞ்சு ளித்து
  முன்கைகள் பின்கட் டாக
வந்தவ ரழைத்த போது
  மரணமென் றறிந்து சொல்லே.''

(கருத்துரை) இச்செய்யுள் தூதன் மருத்துவனை அழைக் குஞ் செயல் வேறு பாட்டால், தீரா நோய்களையும் மரண முண்டாக்குகின்ற நோய்களையும் கூறுகின்றது.

(பதவுரை) அந்தரந் தன்னைப்பார்த்து—தூதன் மருத்துவ னிடஞ் சென்று ஆகாயத்தையே பார்த்துக்கொண்டு, அங்கு அழைத்திடில்—அவ்விடத்தில் மருத்துவனை அழைத்தால், மரணம் ஆகும்—அந்த நோயாளி இறந்து விடுவான், விந்தை —ஆச்சரியமாக, கைகால் பிடித்துவேண்ட—மருத்துவனுடைய கைகளையும் கால்களையும் பிடித்துக்கொண்டு வந்து பாருங்க ளென்று மருத்துவனை வேண்டிக்கொண்டால், வியாதி மாறா— அந் நோய் தீராது, முந்த—முன்னதாக, முகம் சுளித்து—முகத்தை ஒருவாறு சுளித்துக்கொண்டு, முன்கைகள்—முற் பக்கமிருக்கிற இரண்டு கைகளையும், பின்கட்டு ஆக—பின் கட்டாகக் கட்டிக்கொண்டு, வந்து அவர் அழைத்தபோது— மருத்துவனிடம் வந்த தூதன் மருத்துவனை அழைத்தால், மரணம் என்று அறிந்துகொள்—அந்நோயாளி இறந்து விடுவா னென்று தெரிந்துகொள்வாய்.

(பொழிப்புரை) மருத்துவனை, தூதனானவன் ஆகாயத் தைப் பார்த்துக்கொண்டே அழைத்தால் அந்த நோயாளி இறந்து விடுவானென்றும், தன்னுடைய கால்கைகளைப் பிடித்து வேண்டிக்கொண்டால் அந்நோய் தீராதென்றும், முகத் தைச் சுளித்துக்கொண்டும், முன்கைகளைப் பின் கட்டாகக் கட்டிக்கொண்டும் அழைத்தால், அந்நோய் தீராமல் நோயாளி இறந்துவிடுவானென்றும் உணர்ந்து சொல்வாய்.

இதுவுமது.

''தலைதனை விரித்துக் கொண்டுந்
தடிகையிற் பிடித்துக் கொண்டும்
கலகலென் றழைக்கும் போது
கணமெனச் சாவு சொல்வாய்
நலமிலா துடல்சொ றிந்து
நகந்தனை கையாற் கிள்ளத்
தொலைவிலா அசாத்ய மென்று
சொல்லிடு தரணி யோர்க்கே.''

(கருத்துரை) இச்செய்யுள் தூதன் செயலால் மரணத்தையும் நோய் தீராமையையும் சொல்லுகின்றது.

(பதவுரை) தலைதனை விரித்துக்கொண்டும்—மருத்துவனை அழைக்கச் செல்லும் தூதனானவன், தன் தலைமயிரை விரித்துக் கொண்டும், தடிகையில் பிடித்துக்கொண்டும்—கையில் தடி பிடித்துக்கொண்டும், கலகல என்று—விரைந்து அழைக்கும்போது—மருத்துவனை அழைத்தால், சாவு—அந்த நோயாளி இறப்பது கணம் எனச் சொல்வாய்—மிக விரைவிலென்று சொல்லுவாய், நலம் இலாது—யாதொரு பயனும் இல்லாமல் வீணாக, உடல் சொறிந்து—தன்னுடம்பைச் சொறிந்து கொண்டு, நகந்தன்னை—தன் கைவிரல் நகத்தை, கையால் கிள்ள—மற்றொரு கையாற் கிள்ளினால், தொலைவு இல்லா—நீங்காத, அசாத்தியம் என்று—அசாத்ய நோயென்று, தரணியோர்க்கு—உலகினருக்கு, சொல்லிடு—நீ சொல்லிவிடுவாய்.

(பொழிப்புரை) மருத்துவனை அழைக்கச் செல்லும் தூதனானவன், தலை மயிரை விரித்திருந்தாலும், கையில் தடி பிடித்திருந்தாலும் விரைந்து அழைத்தாலும் அந்நோயாளி இறந்துவிடுவானென்றும், வீணாக உடம்பைச் சொறிந்து கொண்டும், கை நகங்களைக் கிள்ளிக் கொண்டும் நின்று அழைத்தால் அந்நோய் தீராதென்றும் சொல்லிவிடுவாய்.

இதுவுமது.

''சுவர்தூண் பிடித்துக் கொண்டழைக்கச்
சொல்லப் போகா தசாத்யந்தான்
விவரந் தப்பிப் பயப்படினும்
மிகக்கொட் டாவி நெட்டுயிர்ப்பும்
அவமாய் நாக்குத் தான்குழற
அழைத்தா லசாத்யந் தானறிவாய்
புவனம் போற்று மகத்தியனார்
புகலுந் தூத னிலக்கணமே.''

(கருத்துரை) இச்செய்யுளும் தூதன் செயலால் நோய் தீராமையைச் சொல்லுகின்றது.

(பதவுரை) சுவர்—சுவரையும் தூண் —தூணையும், பிடித்துக்கொண்டு—தூதனானவன் தன் கைகளால் பிடித்துக் கொண்டு நின்று, அழைக்க—மருத்துவனை அழைத்தால், சொலலப்போகாது—அந்நோய் தீருமென்று சொல்லமுடியாது. அசாத்தியம்தான்—அந்நோய் தீராததுதான், விவரம் தப்பி—சொல்வது இன்னதென்று தெரியாமல் தவறி, பயப்படினும்—பயப்பட்டாலும், மிக்க—மிகுந்த, கொட்டாவி—கொட்டாவி விட்டும், நெட்டுயிர்ப்பும்—பெருமூச்செறிந்தும், அவமாய்—வீணாக நாக்குழற—பேச்சுதட்டுத் தடுமாறி நாக்குக் குழறக் குழற, அழைத்தால்—மருத்துவனை அழைத்தால், அசாத்தியம்—அந்நோய் தீராதென்றும், அறிவாய்—நீ தெரிந்து கொள்வாய் என்று, புவனம் போற்றும்—மருத்துவ உலகத்தினரும் கற்றாரும் மற்றாரும் துதிக்கின்ற, அகத்தியனார்—அகத்தியர் என்னும் பேரையுடைய பெரியார், புகலும்—அருளிச் செய்த, தூதன் இலக்கணமே—தூதனுடைய (மருத்துவனை அழைக்கச்செல்வோன் அல்லது வருவோனுடைய) தன்மைகளைக் கூறும் நூலாகும்.

(பொழிப்புரை) தூதனானவன் மருத்துவனிடம் வந்து அங்குள்ள சுவரையாவது, தூணையாவது பிடித்துக்கொண்டு மருத்துவனை அழைத்தால், அந்நோய் தீராதென்றும், பயந் தழைத்தாலும், கொட்டாவி பெருமூச்சுவிட்டு நாக்குக் குழறிக் குழறி அழைத்தாலும் அந்நோய் தீராதென்றும் உணர்ந்து கொள்வாய் இஃது அகத்தியப் பெரியார் இயற்றிய தூதனிலக்கணம் என்னும் நூலாகும்.

வேறு.

தொடுகுறி.

''வந்து புறங்கால் தொடிற்றூதன்
 வருட மிரண்டில் மரணமென்க
முந்து முழங்கை தொடிலாறு
 மாத முதலாய்த் தீதாகும்
பிந்துங் காலைத் தொடில்மரணம்
 பின்னைக் காது தனைத் தொடினும்
சிந்திப் பாக மூன்று திங்கள்
 சென்றால் மரணந் தேன்மொழியே.''

(கருத்துரை) இச்செய்யுள் தூதன் மருத்துவமனை அழைக்குங்கால், தன் அங்கங்களைத் தொடுவதால், தீர்தல், தீராமை, மரணம் ஆகிய இவற்றின் கால அளவை உணர்த்துதல் சொல்லுகின்றது.

(பதவுரை) தூதன் வந்து புறம் கால் தொடில்— தூதன் மருத்துவனிடம் வந்து தன்னுடைய பின் காலைத் தொட்டுக் கொண்டு அழைப்பானானால், வருடம் இரண்டில் மரணம் என்க—அந்த நோயாளி இரண்டு ஆண்டுகளில் இறப்பானென்று சொல்லவேண்டும், முந்தும் முழங் கைதொடில்—முழங்கையின் முற்பக்கத்தைத் தொட்டுக்கொண்டு அழைத்தால், ஆறு மாதம் முதலாய்த் தீது ஆகும்—ஆறு திங்கள் வரை நோயாயிருந்து பின்னர் தீமை விளையும், பிந்தும் காலைத் தொடில்—இடது காலைத் தொட்டழைத்தால், மரணம்—மரணமுண்டாகும், பின்னைக் காது தனைத் தொடினும்—காதின் பின் பக்கத்தைத் தொட்டு அழைத்தாலும், சிந்திப்பாக—எண்ணிக் கொண்டிருந்து, மூன்று திங்கள் சென்றால் மரணம்—மூன்று திங்கள் கழிந்தால் அந்நோயாளி இறந்து விடுவான் என்று உணரவேண்டும்.

(பொழிப்புரை) தூதனானவன் மருத்துவனை அழைக்குங் கால் தன்பின் காலைத் தொடின் இரண்டாண்டுகளிலும், முழங்கையின் முன்பக்கத்தை தொட்டால் ஆறு திங்கள்களிலும், இடது காலைத் தொட்டாலும் காதின் பின்பக்கத்தைத் தொட்டாலும் மூன்று திங்கள்களிலும் மரணம் உண்டாகும்.

இதுவுமது.

''நெற்றி தொடினோ பதினைந்து
நீள்புரு வந்தொடி லொன்பதென்க
கத்துங் கழுத்து மூன்றேநாள்
கண்ணைத் தொடிலோ நாளஞ்சாம்
நத்து மூக்கு மூன்றேநாள்
நாவைத் தொடினா ளொன்றிற்சாம்
உற்ற குறியின் குணமிதென
உரைத்தார் தமிழா லுயர்ந்தோரே.''

(கருத்துரை) இச்செய்யுளும் அங்கங்களைத் தொடுவதால் நன்மை, தீமைகள் உணர்தலைக் கூறுகின்றது.

(பதவுரை) நெற்றிதொடின்—தூதன் தன் நெற்றியைத் தொட்டால், பதினைந்து—பதினைந்து நாட்களிலும், நீள்—நீண்ட புருவம் தொடில்—புருவத்தைத் தொட்டால், ஒன்பது—ஒன்பது நாட்களிலும், கத்தும் கழுத்து—ஒலிகாட்டுங் கழுத்தைத்தொட்டால், மூன்றே நாள்—மூன்று நாட்களிலும், கண்ணைத் தொடில்—கண்களைத் தொட்டால், அஞ்சு நாள்—ஆம்—அஞ்சு நாட்களிலும், நத்தும்—யாவராலும் விரும்பப் படுகின்ற, மூக்கு—மூக்கைத் தொட்டால், மூன்றே நாள் மூன்று நாட்களிலும், நாவைத் தொடின்—நாக்கைத் தொட்டால் நாள் ஒன்றில்—ஒரு நாளிலும், சாம்—சாதற்குரிய, உற்ற—பொருந்திய, குறியின் குணம் இது என—குறிகுணங்கள் இவையென்று, தமிழாலுயர்ந்தோர்—தமிழ் மருத்துவங்கற்ற பெரியோர், உரைத்தார்—கூறினர்.

(பொழிப்புரை) தூதன் மருத்துவனை அழைக்குங்காலத்தில், நெற்றியைத் தொட்டால் பதினைந்து நாட்களிலும், புருவத்தைத் தொட்டால் ஒன்பது நாட்களிலும், கழுத்தைத் தொட்டால் மூன்று நாட்களிலும், கண்ணைத் தொட்டால் அஞ்சு நாட்களிலும், மூக்கை தொட்டால் மூன்று நாட்களிலும், நாக்கைத் தொட்டால் ஒரு நாளிலும் சாவுண்டாமென்றும், தமிழ்ப் பெரியாராகிய மருத்து நூலறிஞர்கள் சொன்னார்கள்.

இதுவுமது

''சங்கக் கழுத்தைத் தொடில்பேறாம்
தரமாய்ச் செறியும் நெஞ்சாகில்

தங்கு முதரஞ் சல்லாபம்
தலையிற் றொடிலோ பக்கிஷமாம்

பொங்கு மரையிற் றொடிற்கேடாம்
பொலியு முதுகு பிணிமீறும்

எங்கும் பரந்த தமிழாய்ந்தோர்
இயம்புந் தூத னிலக்கணமே.''

(கருத்துரை) இச்செய்யுளும் அங்கங்களைத் தொடுவதால் நன்மை, தீமைகள் உணர்தலைக் கூறுகின்றது.

(பதவுரை) சங்கம் கழுத்தைத் தொடில்—சங்குபோலுந் திரண்டிருக்கும் பின்கழுத்தைத் தொட்டால், பேறு ஆம்—நன்மையுண்டாகும், நெஞ்சு ஆகில்—மார்பைத் தொட்டால், தரமாய்ச் செறியும்—உயர்தரம் என்னும் நன்மையுண்டாகும், தங்கும் உதரம் சல்லாபம்—வயிற்றைத் தொட்டால் மகிழ்ச்சியுண்டாகும் (நன்மையுண்டாம் என்பதாம்), தலையில் தொடில்—தலையைத் தொட்டால், பக்கிஷம் ஆம்—திடுக்கிடுந் தன்மையுண்டாகும், பொங்கும் அரையில் தொடில்—மகிழ்ச்சி விளைவிக்கின்ற அரையில் தொட்டால், கேடு ஆம்—கெடுதியுண்டாகும், பொலியும் முதுகு—விளங்குகின்ற முதுகைத் தொட்டால், பிணிமீறும்—பற்பலவான நோய்கள் தோன்றும் என்று, எங்கும் பரந்த தமிழ்—தமிழ் நாட்டின்கண்ணே யல்லாமல் உலகம் முழுமையும் பரந்திருந்த தமிழ் மொழியை ஆய்ந்தோர்—ஆராய்ந்த தமிழ் வல்ல அறிஞர், இயம்பும்—எடுத்து நன்றாய் விளக்கிச் சொன்னதூதன் இலக்கணமே—தூதனுடைய இலக்கண நூல் இதுவேயாகும்.

(பொழிப்புரை) பின்கழுத்தைத் தொட்டாலும், மார்பைத் தொட்டாலும், வயிற்றைத் தொட்டாலும் நன்மையுண்டாமென்றும், தலையிலும் அரையிலும் தொட்டால் தீமையுண்டாமென்றும், முதுகைத் தொட்டால் நோய் மிகு மென்றும் தமிழுணர்ந்த பெரியோர் கூறின் தூதனிலக்கணமாம்.

வேறு.

"முன்னமே ஆணாய் வந்து
மொழிந்தபின் பெண்ணாய் வந்தால்
முன்னமே கருமந் தீதாய்
பின்புநன் றுகு மென்க
முன்னமே பெண்ணாய் வந்து
மொழிந்தபின் ஆணாய் வந்தால்
சொன்னவை முன்பு நன்றாம்
பின்னிடு காட தாமே."

(கருத்துரை) இச்செய்யுள் ஆண், பெண் ஆகிய இருவர் தூதின் நன்மை தீமைகளைக் கூறுகின்றது.

(பதவுரை) முன்னம் ஆணாய் வந்து மொழிந்தபின்—ஆண் பிள்ளை முன்னதாக மருத்துவனிடம் வந்து அழைத்த பின்னர், பெண் ஆய் வந்தால்—பெண் ஒருத்தி வருவாளேயானால், முன்னமே கருமம் தீது ஆம்—அந்நோய் முன்னர் கெடுதிபோலத் தோன்றும், பின்பு நன்று ஆகும் என்க—பின்னர் நன்மையாகும், முன்னம் பெண் ஆய் வந்து மொழிந்த பின் ஆண் ஆய் வந்தால்—முன்னர் பெண் வந்து அழைத்த பின்னர் ஆண் பிள்ளை வந்தழைத்தால், சொன்னவை முன்பு நன்றாய்—முன்னர் நன்மையாகும், பின் இடுகாடு ஆம்—பின்னர் மரணம் உண்டாகும்.

(பொழிப்புரை) ஆண், பெண், இருவருள் முன்னர் ஆணும் பின்னர் பெண்ணும் வந்து அழைத்தால், முன்னர்க் கெடுதி போற் காட்டிப் பின்னர் நன்மையாகும். முன்னர் பெண்ணும் பின்னர் ஆணும் வந்து அழைத்தால் முன்னர் நன்மைபோல் காட்டிப் பின்னர் மரணமுண்டாகும்.

தூதன் செயலால் சாவறிதல்.

'கேளே முன்னே தூதன்வந்து
கிளந்த சொல்லை நோக்கனுமே
சூளே பித்த மேலேறிச்
சொல்லில் வார்த்தை பலவிதமாய்
வாளே பறந்து பறந்தழைக்கில்
வகையாய்ச் சொறியின் நிலங்கீறின்
சாளே சாவா னிவர்சொல்லில்
சடுதி போகா திருந்திடீரே.''

(கருத்துரை) இச்செய்யுள், தூதன் மருத்துவனிடம் சென்று செய்யும் செய்கைக் குறிகளால் அந்நோயாளியின் இறப்பை கூறுகின்றது.

(பதவுரை) தூதன் முன்னேவந்து—தூதனானவன் மருத்துவனிடத்தில் விரைந்து வந்து, கிளந்த சொல்லை—அழைத்த சொல்லின் குறியை, நோக்கலும்—பார்த்தபோது, அது பித்தம் மேல் ஏறி—பித்தம் மிகுதிப்பட்டவன் போலாகி, வார்த்தை பலவிதமாய்ச் சொல்லி—பலவிதமாய் மாறிமாறிப் பேசி அழைத்தாலும், பறந்து பறந்து அழைத்தாலும்—சீக்கிரம் வாருங்கள், சீக்கிரம் வாருங்கள் என்று சொல்லி அழைத்தாலும், வகையாய் சொறியில்—தன் உடம்பைச் சரிவரச் சொறிந்து கொண்டே அழைத்தாலும், நிலம் கீறின்—தன் கால்களால் பூமியைக் கீறிக்கொண்டே அழைத்தாலும். சாவான்—அவன் குறித்துவந்த நோயாளி இறந்து விடுவான் (ஆகையால், ஈதுணர்ந்த மருத்துவர்களாகிய நீங்கள்), இவர் சொல்லில்—இந்தத் தூதனுடைய சொல்லைக் கேட்டு, சடுதி—விரைவாக எழுந்து, போகாது இருந்திடீர்—விரைந்து போகாமல் இருந்து விடுங்கள், சூளே—நான் சொல்லும் இஃது உண்மையாகும்.

(பொழிப்புரை) தூதன் மருத்துவனை அழைக்கும் சொல்லை எண்ணிப் பார்த்து, அவன் பித்தம் மேற்பட்டவன் போலப் பலப்பலவாகப் பேசினாலும், விரைந்து அழைத்தாலும், அவன் தன் கால் விரலால் நிலத்தைக் கீறிக்கொண்டே நின்று அழைத்தாலும், தன் உடம்பைச் சொறிந்துகொண்டே அழைத்தாலும் அந்நோயாளி இறந்து விடுவான் என்று உணர்ந்து, அவன்சொல்லை நம்பி விரைந்து போகாமல் இருப்பீராக.

தொடு குறி.

''இருந்தீர் முகத்தில் கைவைத்தால்
ஏறும் பிணிக டீராவாம்
வருந்தி மார்பிற் கைவைத்தால்
வாங்கும் பிணிகள் மாலறியப்
பொருந்திக் கைகால் தோள்தொட்டால்
பொல்லாப் பிணிகள் தீர்ந்திடுமோ!
பரிந்து கேட்பாய் சுந்தரனே
பாங்கா யறைந்தேன் பலரறிய.''

(கருத்துரை) இச்செய்யுள் தூதன் மருத்துவனிடத்தில் வந்து அவனை அழைக்கும்போது தான் செய்யும் செய்கைகளைக் குறிகளாக கொண்டு நோயாளியின் நோய் தீரும், அல்லது திராதென்பதைக் கூறுகின்றது.

''செய்யபூச் செய்ய வாடை
செப்பிய வியாதி யாளன்
மெய்தலை மயிர்க ளைந்தோன்
விரிதலை யொற்றைக் கண்ணன்

மையுறை யாடை சுற்றல்
வார்த்தைவாய் குழறிப் பேசல்

கையிலே கயிறுங் கண்டால்
காலனென் றுரைக்க லாமே.''

(பொழிப்புரை) சிவப்புப்பூ, சிவப்பாடை, நோயாளி, உடல் முற்றும் மயிரை நீக்கினவன், தலையை விரித்துக் கொண்டிருப்பவன், ஒற்றைக்கண்ணுடையவன், கருப்புநிற ஆடையை அணிந்திருப்பவன், குழறிப் பேசுபவன், கையில் கயிறு கொண்டுவருவோன் ஆகிய இவர்களைக் கண்டால், அந்நோயாளி காலன் வசப்பட்டுள்ளான், பிழையான் என்று சொல்லி விடலாம்.

''கண்ணீர் ததும்பி நிற்றல்
கையினை விரித்து நிற்றல்

விண்ணினைப் பார்த்து நிற்றல்
விறகினிற் சாய்ந்து நிற்றல்

மண்ணினைக் காலாற் கீறல்
வன்கையாற் கோல் முரித்தல்

அண்ணலை யாரென் றில்லை
யவனியிற் சாவு தானே.''

(கருத்துரை) இச்செய்யுளும் தூதன் செயலால் தீமையறிதலைக் கூறுகின்றது.

(பதவுரை) கண்ணில் நீர்ததும்பி நிற்றல்—தூதன் கண்களில் கண்ணீர் மிகும்படி நிற்றல், கையினை விரித்து நிற்றல்—கைகளை விரித்து நிற்றல், விண்ணினை பார்த்து நிற்றல்—ஆகாயத்தைப் பார்த்து கொண்டு நிற்றல், விறகினில் சாய்ந்து நிற்றல்—கட்டையின் மேல் சாய்ந்து நிற்றல், மண்ணினைக் காலால் கீறல்—நிலத்திலிருக்கும் மண்ணை கால்களால் கீறுதல், வன்கையால் கோல் முறித்தல்—வலிய கைகளால் கொம்பை — ஒடித்தல், அண்ணலை—இப்படிப்பட்ட தூதனை அவனியில்—இவ்வுலகத்தில், யார் என்று இல்லை—வேறொருவனாக நினைத்தற்கில்லை (அவன்), சாவுதானே—சாக்குறி காட்டவந்த தூதனே யாவான், ஆகையால் அப்பிணியாளன் இறப்பவனென்றேகொள்க.

(பொழிப்புரை) தூதன் கண்களில் நீர் மூட்டி நீன்றாலும் கைகளை விரித்துக் கொண்டு நின்றாலும், ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு நின்றாலும், விறகின்மேல் சாய்ந்துகொண்டு நின்றாலும், தரைமண்ணைக் காலாற் சீத்தாலும் கைகளால் கொம்பை ஒடித்தாலும் அவன் எவருக்காக மருத்துவனை அழைக்கவந்தானோ அப்பிணியாளன் இறந்துவிடுவான்.

''தலையிடை யெண்ணெய் வார்த்தல்
தர்க்கமே பேசி நிற்றல்
நிலையுறக் காலைக் கட்டல்
நீளுடை சோர நிற்றல்
மூலையினற் சென்னி மேற்கை
வைத்திட லழுதல் வீழ்தல்
குலையவே வந்து தூதன்
குறிகளின் குறிகள் சாவே.''

(கருத்துரை) இச்செய்யுளும் தூதன் செயலால் தீமையறி தலைக் கூறுகின்றது.

(பதவுரை) தலையிடை எண்ணெய் வார்த்தல்—தலையின் மயிரில் எண்ணெய் தடவிக்கொண்டிருத்தல், தர்க்கம் பேசி நிற்றல்—தர்க்கம் பேசிக் கொண்டிருத்தல், நிலைஉற காலைக் கட்டல்—காலைக் கைகளால் அழுத்திக் கட்டிக்கொண்டிருத்தல், நீள்உடை சோர நிற்றல்—நீண்ட ஆடை அவிழும்படி நிற்றல், மூலையின் சென்னிமேல் கைவைத்திடல்—மார்பின் மேலும் தலை மேலும் கைவைத்துக்கொண்டிருத்தல் அழுதல்—அழுதுநிற்றல், வீழ்தல்—தரையில் விழுதல் ஆகிய இச் செய்கைகளால், குலைய—தன் இயற்கைநிலை கெட, வந்த தூதன் குறிகளின்—(பிணியாளன் பொருட்டு மருத்துவனை அழைக்க வந்த) தூதனிடத்து நேர்ந்த குறிகளின், குறிகள்—அடையாளங்கள், சா—(அப்பிணியாளனுடைய) சாவை யுணர்த்துவனவாகும்.

(பொழிப்புரை) எண்ணெய்த் தலை, தர்க்கம் பேசல், காலைக் கட்டிக்கொள்ளல், இடுப்பில் கட்டியிருக்கும் உடை நழுவல், மார்பிலும், தலைமேலும் கைவைத்துக்கொள்ளல், அழுகை, விழுதல் இவற்றால் தன் இயற்கை மாறல் என்னும் இக்குறிகள் பிணியாளன் இறத்தலை யுணர்த்துங் குறிகளாம்.

''வந்தவ னுயர நிற்றல்
மனையினிற் பதறிச் சேரல்
முந்திய கரத்தைச் சென்னி
மேலதாம் எட்டி முட்டல்
உந்திய கைகால் தொடலும்
உற்றதூண் பற்ற லென்ற
புந்தியாற் குறித்துக் கொண்ட
சேட்டைகள் பொல்லா வென்னே.''

(கருத்துரை) இச்செய்யுளும் தூதன் செயலால் நோயாளியின் தீமைகள் அறிதலைக் கூறுகின்றது.

(பதவுரை) வந்தவன் உயர நிற்றல்—தூதன் உயரமாயிருக்குமிடத்தில் நிற்றல், மனையினில் பதறிச் சேரல்— மருத்துவன் வீட்டில் நடுநடுங்கிச் சேர்தல், முந்திய கரத்தை—முன்னுள்ள

கையை, சென்னிமேவாய் எட்டி முட்டல்—தலைமேல் ஸ்ரீக்கி ஒன்றை எட்டித் தொடல், உந்தியகையால் தொடல்—மோதுகின்ற கைகளையும் கால்களையும் தொடல், உற்றதூண் பற்றல்—அங்கிருக்கும் தூணைப் பிடித்தல், என்ற ஏன்று— சொல்லப்படுகின்ற புந்தியால்— தூ தனுடைய உள்ளத்தால், குறித்துக்கொண்ட சேட்டைகள்—நினைத்துச் செய்யும் தகாச் செயல்கள், பொல்லா—கெடுதியை விளைவிப்பனவாகும், என்— என்று சொல்க.

(பொழிப்புரை) தூதன் உயர நிற்றல், மருத்துவன் வீட்டிற் பயந்து போதல் தன்கையைத் தலைமேற் கொண்டு ஒன்றை எட்டி முட்டுதல், கை கால்களைத் தொடல், தூணைப் பிடித்தல், என்னும் இவைகள் பிணியானது இறத்தலைக் குறிக்குங் குறிகளாம்.

> "கண்ணினைப் பிசைந்து நெற்றிக்
> கனிந்தெழு வியர்வு தோன்றல்
> எண்ணினை யளக்கல் நெஞ்சில்
> இருகரமமைத்து நிற்றல்
> புண்ணினைச் சொறிதல் நாவிற்
> புலவிநீர் துதைந்து நக்கல்
> ஏண்ணிலிக் குறிக ளெல்லாம்
> இறுதியிற் தொடர்ச்சி யன்றே."

(கருத்துரை) இச்செய்யுளும் தூதன் செயலால் நோயாளியின் தீமை அறிதலைக் கூறுகின்றது.

(பதவுரை) கண்ணினைப் பிசைதல்— தூதன் தன் கண்களைப் பிசைதல், நெற்றி— நெற்றியில், கனிந்து எழுவியர்வு தோன்றல்—மிக்க உருக்கத்தினால் வியர்வை விடல், எண்ணினை ஏதாவது—ஒரு கணக்கை, அளக்கல்—எண்ணிக்கொண்டு நிற்றல், நெஞ்சில்—மார்பினிடத்தில், இருகரம் வைத்து நிற்றல்—இரண்டு கைகளையும் பதித்துக்கொண்டு நிற்றல், புண்ணினை சொரிதல்— உடம்பில் எங்காவது புண் இருக்குமாயின் அதைச் சொறிந்து நிற்றல், நாவில்— நாவிலிருந்தும் சுரக்கின்ற, புலவு நீர்— ஊன் நீரை, துதைந்து நக்கல்— அடிக்கடி சுவைத்துக்கொண்டு நிற்றல் எண் இல்— (ஆகிய) விளவு சொல்ல முடியாத, இ— இந்த, குறிகள் எல்லாம்—செய்கைக் குறிகள் எல்லாம், இறுதியில்— சாங்காலத்தின் தொடர்ச்சி— தொடக்கக் காலத்தைக் காட்டுவதாகும்.

(பொழிப்புரை) மருத்துவனை அழைக்க வருந்தூதன், மருத்துவன் எதிரில் நின்று, அழுதல், நெற்றியில் வியர்வை தோன்றல், ஏதாவதொரு கணக்கை எண்ணிக்கொண்டு நிற்றல், மார்பில் இரண்டு கைகளையும் வைத்தல், உடம்பில் புண் இருந்தால் அதைக் கீறல், நாவில் சுரக்கும் நீரை நக்கி விழுங்கல் ஆகிய பல செய்கைகளைச் செய்யக்கண்டால், இவை அப்பிணியாளன் இறந்துபடும் நாளின் தொடர்ச்சிக் குறிகளென்றறிதல் வேண்டும்.

''நோயென வருவோன் காலை
நுடக்குடல் தலைக டம்பை
வாயெனத் தரையைப் பார்த்தல்
வரும்பெரு விரலாற் கீறல்
வாலென வுதட்டை நாவால்
வளைத்திட லுமிழ்ந்து வைகல்
ஸ்ரீயவிக் குணங்க டோன்றிற்
சுகமிலை மரணஞ் சொல்லே.''

(பொழிப்புரை) நோய் என்று சொல்லிக்கொண்டு வருபவன், காலை மடக்கி, உடலலையும் தலையையும் வளைத்துச் கொண்டும், தரையைப் பார்த்துக் கால் பெருவிரலால் பூமியைச் கீறிக்கொண்டும், நாக்கினால் உதட்டைக் குவித்துக்கொண்டும் எப்போதும் துப்பிக் கொண்டும் இருப்பிண் நோய்தீராது. மரணம் என்று சொல்.

''வந்தவன் வடக்கு நோக்கி
நிற்கினும் வாழ்க ரத்தைச்
சந்தமார் கரத்தாற் றீண்டல்
சார்வுறச் சொறியு மேனும்
முந்திய மயிரைத் ஸ்ரீற்றல்
முரியார் கால மென்னுஞ்
செந்துவர் வாமஞ் செவ்வாய்த்
திருவே கேள் தீரா தென்றே.''

(பொழிப்புரை) மருத்துவமனை யழைக்க வந்தவன் வடக்கு நோக்கி நிற்றல், ஒரு கையை மற்றொரு கையினால் தொடல், சொறிதல், மயிரைத்தூற்றல், ஆகிய இவைகளைச் செய்யின் நோயாளிக்கு எமனுடைய காலம் நெருங்கி விட்டது என்றறிக.

''கைகால் சொறிந்து கருபல்லுந் தான்குத்தி
மெய்ப்பிற் சிவப்புதலை மேலுடுத்தி— நய்ய
வயித்தியனுக் கெண்ணெய் மதிபோ தழைக்கின்
சயித்தியத்தாற் சாவானே தான்.''

(பொழிப்புரை) கையையும் காலையும் சொறிந்து கொண்டும் பல்லைக் குத்திக் கொண்டும். உடலிலும் தலையிலும் சிவப்புத் துணி உடுத்தும், வயித்தியன் எண்ணெய் தேய்த்து குளிக்கும் போதழைத்தால், நோயாளி சயித்தியத்தால், இறப்பான்.
போதழைத்தால், நோயாளி நோயாளி சயித்தியத்தால், இறப்பான்

வேறு

''சொல்லுவேன் கறுப்பனுடன் பழுதுரோசன்
சொல்குருடன் காதுமந்தன் பூனைக்கண்ணன்
வெல்லுவேன் ரோமங்கள் சிவந்திருப்போன்
மெய்நடுக்கன் துடித்தயர்வோன் வெடித்த சொல்லன்

பல்லுமே பழுதானேன் கண்சிமிட்டல்
பரந்தசொல் லிவர்களையே பார்த்தபோது
கொல்லுமே யவர்களைத்தான் கண்டுகொள்வாய்
கும்பமுனி சொல்வசன குறிப்பாங்கேளே.''

(பொழிப்புரை) கருநிறமுடையவன். பெருநோயினன் குருடன் செவிடன், பூனைக்கண்ணன், சிவந்த ரோமங்களையுடையவன் மெய் நடுக்கத்துடன் துடிப்பவன், கடுஞ்சொல்லுடையவன், பல் தேய்ந்தும் விழுந்தும் போனவன், கண் சிமிட்டுகிறவன், அதிக மாகப் பேசுகிறவன், இவர்களைப் பார்த்தபோதே இவை தீக் குறிகளென்றும், நோயாளி இறப்பான் என்றும் அறிந்து கொள்வாய். இவை குறுமுனி கூறுகின்ற குறிப்புகளாகும்.

தூதன் சொல்லால் தீர்தல் தீராமையறிதல்.

''சொல்லும் வசன முதலெழுத்தைச்
சூட்சமாக வேதுதித்தங்
கில்லி லிருக்கும் வியாதிகொண்டான்
இவன்பே ரெழுத்தை யுங்கூட்டி
நல்ல விருபத் தேழையுமே
நாளும் பக்கத் துடன்கூட்டி
வல்ல தொகையே ழிற்பெருக்கி
வகையா யெட்டிற் கழிப்பீரே.''

(பொழிப்புரை) தூதன் சொல்லுகின்ற சொல்லின் முதலெழுத்தையும், நோயாளியின் பெயரின் முதலெழுத்தையுங்கூட்டி, இருபத்தேழு என்னும் எண்ணை அதனுடன் கூட்டி, கூட்டிவந்த எண்ணை ஏழாற் பெருக்கி, வந்த எண்ணில் எட்டைக் கழிப்பீராக.

''நின்ற விலக்கந் தனைக் கண்டு
நெராஞ்செயமு மொன்றுபிணி
மண்டுந்தீரா விரண்டு திண்ணம்
வளரு ஷ்ன்று நாள் செல்லும்
என்றே நான்கு வினையேறா
இயல்பா லைந்து மரணமதாம்
கொண்டா லாறு லெகுபிணியாம்
குறையு மேழுந் தீர்ந்திடுமே.''

(பொழிப்புரை) நின்ற இலக்கம் ஒன்தறாயின் பிணி அதிகரிக்கும் இரண்டாயின் பிணி தீராது, மூன்றாயின் நாட்படத்தீரும். நான்காயின் நோய் விதிகப்படாது. ஐந்தாயின் மரணம். ஆறாயின் நோய்மிகும். ஏழாயின் நோய் குறைந்து தீர்ந்திடும்.

''நெடுந்தரை விரலிற் சாடல்
நெட்டுயிர்ப் பெறிந்து நிற்றல்
விடுந்துணைக் காலைத் தூக்கல்
வீறுகால் மடித்து நிற்றல்
அடுந்தொழிற் பரக ரித்தல்
அகலமீ தடித்தல் விக்கல்
படுங்குறி சாவென் றேநீர்
பரிந்தறிந் துணரு வீரே.''

(பொழிப்புரை) தரையில் விரலினால் அடித்தல் அல்லது தட்டல், பெருமூச்செறிதல், காலைத் தூக்கல், காலை மடித்து நிற்றல், மார்பின்மீது அடித்துக்கொள்ளல், விக்கல் இக்குறிகள் சாவைக்குறிக்கும் என்றுணருவாயாக.

''கோலொடுங் கயிற்றி னோடுங்
கொடுந்தலை விரித்த லோடு
மேல்கொடு மிளைத்த லோடும்
வெறிதேவாய் குளற லோடும்
கால்கொடு பின்ன லோடுங்
கண்டத்தைச் சொறித லோடும்
மால்கொடு வகைசெய் தாலும்
வளருயிர் குறைந்து மாள்தல்.''

(பொழிப்புரை) கையில் கோலும் கயிறும் தாங்கி, தலையை விரித்துக் கொண்டும், பெருமூச்சுவாங்கிக் கொண்டும், வெறிதே சொல் குளறிக்கொண்டும், கால் பின்னிக்கொண்டும், கண்டத்தைதச் சொறிந்துகொண்டும், மயங்கியும் காணப்படின், பிணியுற்றோன் உயிர், நாளுக்கு நாள் தேய்ந்து உயிர் துறப்பான் எனக்கொள்க.

''செவித்துளை கரஞ்சேர்த் தாலுஞ்
செறிமயிர் கடிந்திட் டாலும்
நவித்துளை யுபஸ்த தான
நகுகர நுழைத்திட் டாலுங்
கவிக்குணம் போல நின்று
காறடு மாறி னாலுங்
குவித்துயி ரழியு மென்னக்
கூறினர் கு ணநூ லோரே,''

(பொழிப்புரை) காதின் துளையில் கையை இடினும், நெருங்கிய மயிரை நீக்கினாலும், ஆண், பெண் குறிகளில் கையை வைத்தாலும், குரங்கைப் போன்று சில செயல்களைச் செய்து கொ ண்டு கால் தடுமாறினாலும், நோயாளியின் உயிர் நீங்கும் என மருத்துவநூல் கற்றவர் கூறினர்.

''அழுதிடல் பிதற்றி நிற்ற
லாவலா யிடையிற் கையைக்
கொழுதிட லடுக்குஞ் சொல்லாய்க்
கூறியே குனிந்து நிற்றல்
பழுதிடற் பலவும் பார்க்கல்
பலப்பல மொழிகள் கூறல்
முழுதிடக் கரத்தை நீட்டி
முறைமுறை யளக்கில் மீளார்.''

(பொழிப்புரை) அழுதல், ஏதேதோ பிதற்றிக் கொண்டு ஆவலுடன் இடையில் கையை வைத்துக்கொண்டு நிற்றல், சொற்களை அடுக்கிப் பேசிக் கொண்டே குனிந்து நிற்றல், எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தல், வாயில் வந்தபடி பற்பலவற்றைப் பேசுதல், இருகைகளையும் நீட்டி அளத்தல் இச் செயல்களையுடையவர் பிழையார்.

''இருதுளை நாசி சிந்த
லெரிதரச் சிரத்திற் கையைப்
பொருவற வழைத்து நிற்றல்
புண்படச் சொறித லானுந்
தருசிரம் புறங்கை முன்கை
தகுபிடர்ச் சொறிதற் றானும்
வருமிது குணங்க டம்மால்
மரணமென றறிவார் வல்லோர்.''

(பொழிப்புரை) இரண்டு மூக்குத்துளைகளிலும் நீர் சிந்துதல் தலைமீது கையைத் தூக்கிக் கூப்பிடுதல், உடலில் புண் உண்டாம்படி சொறிதல், தலை, பின்கை, முன்கை, பிடரி, இவ்விடங்களில் சொறிதல் இப்படிப்பட்ட குணங்களைக் கண்டால், மருத்துவத்தில் வல்லவர் அந்நோயாளிக்கு மரண மென்றறிவார்.

''மிகுநிதி யளிப்ப னென்னல்
வீழ்கடஞ் சிரத்திற் சேர்த்த
லுகுமெனத் தொழுதல் சோம்ப
லுயர்ந்த கொட்டாவி காணல்
வெகுவிதங் கைக ளோடு
வேணுரை பிதற்றல் வாயிற்
றகுமொழி வாய்நீர் சாடற்
சாதலின் சார்வி தாமே.''

(பொழிப்புரை) மிக்க பொருள் கொடுப்பேனென்று சொல்லுதல், தலைமீது கைகளைக் குவித்துத் தொழுதல், சோம்புதல், கொட்டாவி விடல் பல விதமாய்க் கண்டபடி பேசுதல் பேசும் போதெலாம் வாய் நீர் தெறித்தல் ஆகியவை சாதலின் குறிகளாம்.

''இணைக்கரம் பிணைத்து நிற்ற
லிருகையும் பிணைக்கை யாக்கற்
றுணைக்கொரு வருமே யின்றித்
தோன்றுதல் மூன்று தோன்றல்
கணக்குமு னைந்தேழ் காணற்
கவிழ்சிர மாக வெய்தற்
பணைப்புயக் காலன் பாகம்
பற்றுவர் குணத்தின் பண்பே.''

(பொழிப்புரை) இரு கைகளையும் இணைத்து நிற்றல், இரு கைகளையும் கட்டுதல், தனக்கு யாரும் துணையில்லாதது போலத் தோன்றுதல், தன்முன் மூன்று, ஐந்து, ஏழு ஆகிய இலக்கங்கள் தோன்றல், தலையைக் கவிழ்த்து இருத்தல் இவைகள் இயமன் நெருங்கும் காலத்தைக் குறிக்கும்.

''துரும்பினைக் கிழித்தல் கிள்ளல்
துணைநர்சி கரத்தைச் சேர்த்தல்
இரும்பினைக் கரங்கொண் டுற்ற
லெரிந்தவில் லம்பு காண
வரும்பினைச் சூடித் தோன்ற
லாந்தைபோற் பலவும் பார்க்கல்
சுரும்பணி குழலாள் பாகன்
சொற்றநூல் மரணஞ் சொல்லே.''

(பொழிப்புரை) துரும்பைக் கிழித்தல், கிள்ளல், மூக்குத் துளையில் கையை வைத்தல் இரும்பைக் கையில் வைத்திருத்தல், வில் கொண்டு எறிந்த அம்பைக் காணல், மலரணிந்து காணப்படல் ஆந்தை போல் பலவற்றையும் பார்த்தல் இவைகள் மரணத்தைக் குறிக்கும் என்று வண்டுகள் மொய்த்த மலரணிந்த பார்வதியின் பாகமமைந்த சிவபிரான் கூறினர்.

''வெறித்தசொல் லுரைத்தல் மேலு
மிகுமொழி விளம்பி நிற்றல்
குறித்தசொற் குளறிப் போதல்
கொடியசோம் பிழுதல் வாயா
லெறித்துக் கொட் டாவி தாக்க
லிணைமொழி மேலுஞ் சாற்றல்
பொறித்தபுன் றயக்கஞ் சொற்ற
புன்றொழில் மரணம் பேசே.''

(பொழிப்புரை) விறைத்துப் பேசுதல், மேன்மேலும் பலபலப் வார்த்தைகளும் பேசி நிற்றல், சொல்லவேண்டியவற்றைக் குளறிச் சொல்லல். சோம்பித் திமிர் முறுக்கி கொட்டாவி விடல், மறித்துப் பேசல், சற்றுத் தயங்குதல் ஆகிய இவ்வற்பச் செயல்கள் மரணத்தைக் குறிக்கும்.

"வெட்டுவாள் கூன்வாள் வெய்ய
வெஞ்சமர்க் கெடுத்த வெல்வாள்
கட்டளை நிலங்கள் வெட்டிக்
கதித்தவொண் பாரைத் தோட்டி
முட்டுகொல் கயிறு கம்பு
முடுவன் சுரிகை யங்கி
இட்டமா மிவைகண் டாலு
மிருமரண மென்று கூறே."

(பொழிப்புரை) வெட்டுவாள், வளைந்தவாள், கொடிய போரில் வென்ற படைவாள், கடப்பாரை, நிலங்கள் வெட்டி, அங்குசம், கயிறு, கம்பு, நாய்ப்படை, கத்தி, நெருப்பு (தீ) இவைகளைக் கண்டாலும் நோயாளிக்கு மரணமென்று சொல்க.

"என்றுகால் மடித்து நிற்ற
லொருவிரல் தரையி லூன்றல்
நன்றில்லா நகத்தைக் கோறல்
நகத்தினி லூற்றை நீக்கல்
துன்றுசொன் னெருக்கிச் சொற்றல்
துணைவிரல் பிடித்து நெட்டி
வன்றிசேர் முறித்த லேயு
மரணமென் றறிந்து கொள்ளே."

(பொழிப்புரை) காலை மடித்து நிற்றலுடன், ஒரு விரலைத் தரையிலூன்றல், நகத்தைக் கிள்ளல், நகத்தினின்று அழுக்கை நீக்குதல், பல்லைக் கடித்துப் பேசல், இரண்டு விரல்களைப் பிடித்துநெட்டை வாங்கல் இக்குறிகள் மரணத்தைக் குறிக்கும் என அறிக.

" மார்பிடை வயிறு கொப்பூழ்
மணிமுழந் தாளி னேடுஞ்
சார்பொடு புறங்கா லங்கை
தடவிய புறங்கை யுள்ளம்
பார்புறம் பிடரி மூக்கும்
பாரிய சகனங் கோசம்
ஆர்புறத் தடவி னாலு
மணுகிய மரணஞ் சொல்லே."

(பொழிப்புரை) மார்பு, இடை, வயிறு, கொப்பூழ், முழந்தாள், புறங்கால், அகங்கை, புறங்கை, முதுகு, பிடரி, மூக்கு, பிருட்டம், கோசம் இவ்விடங்களில் தடவினல் மரணமென்று சொல்.

"தண்டுமே லவர்க்குச் செந்நெற்
றங்கு செஞ்சாலி மிக்க
மண்டுகேழ் வரகு கம்பு
வளர்தினை சாமை வாலி

குண்டுமீன் றிரையில் மீன்கள்
கொண்டெதிர் வந்திட்டாலும்
அண்டரு மறியச் சொன்னோ
மாருயிர் பிழைக்கி லாரே.''

(பொழிப்புரை) செந்நெல், கேழ்வரகு, கம்பு, தினை, சாமை, மீன் இவைகளைக் கொண்டு ஒருவர் எதிர் வந்தால் அவை மரண குறியாம்.

''கால்மடித் தொருகால் தாங்கிக்
கைதலை மேலே வைத்து
மேலுதட் டதனை நக்கி
விழுமிய கீழ்வாய் தன்னில்
மால்பெறக் கையை வைத்து
வழங்கிய கீழ்வாய் நாடி
ஏலுற முழந்தாள் வைக்கி
லிறுதியென் றியம்பு வாயே.''

(பொழிப்புரை) காலை மடித்து ஒரு காலைத் தாங்கி, தலை மீது கையை வைத்து நாக்கால் மேலுதட்டை நக்கி, கீழ்வாயில் கையை வைத்து, ஆசனத்தில் பொருத்தும்படி முழந்தாளை மடித்து வைக்கில் இறுதிக்காலமென் றியம்பலாம்.

''உருத்தொரு காலைப் பாரி
லுறையவே யூன்றிப் பின்னும்
வருத்தமின் றொருகால் தன்னை
வளையவைத் துயர்த்தி யன்பான்
அருத்தநீள் தடியு மூன்றி
யனலிநெட் டுயிர்ப்புக் கொண்டால்
கருத்தொடு மரண மென்னக்
கண்டறிந் தியம்பு வீரே.''

(பொழிப்புரை) உருத்துக் காலை பூமியில் பொருந்த ஊன்றிப் பின்பு மற்றக் காலைவளையும்படி வைத்து உயர்த்தி நீண்ட தடியையும் ஊன்றி, பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தால் மரணமெனறு சொல்வீர்.

''திண்ணிய கரமி ரண்டாற்
பிடர்தலை மீதே வைத்து
நுண்ணிய தினவு கொண்டு
நுவலிதை மிசையா னோக்கின்
மண்ணினைக் கோலாற் கீறல்
வன்றலை கவிழ்த்துச் சேர்த்த
லெண்ணிய மரண மென்றே
யியம்புவா ரினிய நூலோர்.''

(பொழிப்புரை) இரண்டு கைகளையும் பிடரிமீதும் தலைமீதும் வைத்துச் சொறியினும், மண்ணைக் கோலால் கீறினும், தலையைக் கவிழ்க்கினும் இனிய மருத்துவ நூல் வல்லோர் மரணமென்றியம்புவர்.

துணிக்குறி.

''தூசினை முறுக்கி னாலுந்
தூசுநூல் களைந்திட் டாலும்
மாசுறத் தூசில் மேவு
மரும்பொறி நெருடி னாலும்
மாசுகொள் தூசாலெங்கு
மறைத்துடன் மூடி னாலும்
தேசுறு முயிர்போ மென்று
செப்புவர் தெரிந்த நூலோர்.''

(பொழிப்புரை) ஆடையை முறுக்கினாலும், அதன் நூலை நீக்கினாலும், ஐம்பொறிகளை வருடினாலும், உடல் முற்றும் அழுக்குள்ள ஆடையினால் மூடினாலும், ஒளி பொருந்திய உயிர் நீங்குமென்பர்.

''புயத்தின்மேற் றூசு சாத்திப்
புகலருந் தலைவி ரித்து
நியத்தகோ வணமு மங்கி
நீடிய தூசுற் றாலும்
பயத்தொடும் வியர்வை யோடும்
பல்லுநாத் தண்ணீ ரின்றி
வியத்துடன் வருவா ராகில்
மிகுமர ணம்வி ளம்பே.''

(பொழிப்புரை) தோளின்மீது ஆடை இட்டும், தலைமயிரை விரித்துக்கொண்டும், கோவணம் அங்கி முதலிய உடைகளில் மிக்க அழுக்குப் படிந்தும், பயந்தும், வியர்வை வடிந்து கொண்டும் பல்லிலும் நாவிலும் தண்ணீரில்லாமலும் ஒருவன் மருத்துவனை அழைக்கவரின் மரணமென்று சொல்லலாம்.

''ஏங்கிநின் றழுதிட் டாலு
மிருகரங் கூப்பி னாலும்
தாங்கிய தாட்சி யோடுந்
தக்கெனக் குளறி னாலும்
வீங்கிய வயிற்றிற் கையை
வைத்துமுன் னேகி னாலும்
தூங்கிய மரணமென்று
தேர்ந்தநூ லறிஞர் சொல்வார்.''

(பொழிப்புரை) ஏக்கங்கொண்டழுதிட்டாலும், இரண்டு கைகளையும் கூப்பி வணங்கினாலும், இரக்கத்துடன் குளறிப் பேசினாலும், வயிற்றில் கையை வைத்துமுன் சென்றாலும், நிலைபெற்ற மரணமென்று மருத்துவ நூல்களில் தேர்ந்த அறிஞர் பகர்வர்.

''உறங்கிமுன் னெழுந்து தோன்ற
 லுற்றபின் னுறங்கி வீழ்தல்
கறங்கெனச் சுழன்று நிற்றல்
 கண்ணினைப் பிசைந்து கொள்ளல்
இறங்கிமுன் னெடுக வீழ்த
 லெழுந்துகை தொழுது கூப்பல்
திறங்கெழு மறலி கைப்பாற்
 சேர்பவ ரெனவுஞ் செப்பே.''

(பொழிப்புரை) தூங்கி எழுந்து விழித்து மறுபடியும் தூங்கி வீழ்தல், காற்றாடியைப்போன்று சுழன்று நிற்றல், கண்களைப் பிசைதல், நெடுக வீழ்ந்து எழுந்து கைகூப்பித் தொழுதல் இக்குறிகள் யமன்பாற் சேர்பவர் என்பதைக் குறிக்கும் எனக் கூறுவாய்.

''இடையினிற் கரத்தைச் சேர்த்து
 மிலங்கிய காலைச் சேர்த்துங்
கடைமுடி நெருடி நின்றுங்
 கனவிலும் பனிச்சை சேர்த்துந்
துடைதனைச் சொறிந்து பின்னுஞ்
 சோம்புகொட் டாவி விட்டும்
மடையவ லரிசி பிட்டு
 நுகரினு மவையுஞ் சாவே.''

(பொழிப்புரை) இடுப்பிற் கையை வைத்தும், இரண்டு கால்களைச் சேர்த்தும், காலையும் தலையையும் தடவி நின்றும், பின் முடியைக் கட்டியும், தொடையை சொறிந்தும், சோம்பிக் கொட்டாவி விட்டும், அடை, அவல், அரிசி, பிட்டு தின்று கொண்டும் இருப்பின் மரணமேயாகும்.

''வீறுள விரல்கள் நெட்டி புரிந்திட
 விளங்கு கின்ற
மீறிய நகங்க டம்மில் நின்றென
 வழுக்கு நிற்றல்
ஊறிய உடம்பில் வியற்வை உதித்திட
 வுததி போலு
மாறிய காற்கு வீச லருமர
 ணங்கள் சொல்லே.''

(பொழிப்புரை) விரல்களை நெட்டியிடல், நகங்களில் அழுக்கிருத்தல், உடல் வியர்த்தல், கால்கள் குவிதல் ஆகிய குறிகள் மரணத்தைக் குறிக்கும் எனச் சொல்வாய்.

"வந்தவ னுரைத்த சொல்லை
வளம்பெறத் தொகைய தாக்கி
முந்திய பாகங் கூட்டி
முடிவரு மெட்டுக் கீய்ந்து
சந்துநே ரிரட்டை நான்கு
சார்ந்திடில் மரணந் தக்க
சிந்திடா தொன்று மூன்று
மைந்தெழில் தீரு மென்றே."

(பொழிப்புரை) தூது வந்தவன் இயம்பிய சொற்களைக் கூட்டி அத்துடன் முந்திய பிரிவையும் சேர்த்து அதை எட்டால் வகுக்குங்கால், அதில் இரட்டை யாகவோ அன்றி நான்கோ மிகுதி வரின், அந்நோயாளி மரணமடைவான் என்றும், ஒன்றோ மூன்றோ ஐந்தோ மிகுதிவரின் அப்பிணியாளனின் நோய் நீங்குமென்றும் குறிப்பாயாக.

இராசிப்பலனறிய.

"வாயுவி லங்கி தன்னில் வருந்தியே வந்த கன்றூன்
சாயுறு திசையில் மீளுந் தருணமாந் திசையி லேனும்
நோயுறு வோர்களென்றே நுவலுவோர் நிருதி யென்னிற்
காயசின் னச்ச மென்னக் கண்டுநீ கருதிப் பாரே."

(பொழிப்புரை) வாயு திசையிலும் அக்னி திசையிலும் நோயாளி வந்து திரும்பினாலும், மேற்கு திசை பக்கம் போனாலும் தீரும். கிழக்கு திசை ஆனல் நோயுறுவர். தென்மேற்கு திசையானல் சிறிய பயத்தைத் தரத்தக்கதாகும்.

திசைப்பலனறிய.

"மீனமு மேடந் தானும்
விளங்கிய வெருது தானுங்
கானமாம் கடகத் தோடுங்
கதித்திடும் விருச்சி கப்பேர்
தூனமா மகரத் தோடும்
தூதுவர் சார்வ ரென்னி
லீனநோய் தீரா தென்றும்
மரணமென் றியற்று வாயே."

(பொழிப்புரை) மீனம், மேஷம், ரிஷபம், கடகம், விருச்சிகம், மகரம் இவ்விராசி நடக்கும்போது தூதுவர், மருத்துவனை யழைக்கவரின் நோய் தீராதாம், மரணமென்று சொல்வாயாக.

அவசகுனமறிதல் (துர்நிமித்தங்கள்).

''தலைவிரி தட்டை மொட்டை தவசிசன் ஞசி தட்டான்
முலையிலா ளிரிஷி யோடு மூக்கறை விறகுக் கட்டு
நலைவிரி யொற்றைக் கண்ண ஞவிதன் செக்கான் பார்ப்பான்
படியிவ ரெதிரே வந்தாற் பலன்றராக் கருமந் தானே.''

(பொழிப்புரை) தலைவிரித்துக் கொண்டிருப்பவர், மொட்டை, தவசி, சன்னியாசி, தட்டான், கொங்கையில்லாதவள், இருடி, மூக்கறையன், விறகுக் கட்டுச் சுமப்பவன், ஒற்றைக் கண்ணன், நாவிதன் வாணிகன் பார்ப்பான் ஆகிய இவர்கள் எதிரே வந்தால் எடுத்தகாரியம் பயன் தாரா.

நற்சகுனமறிதல் (நன்னிமித்தம்).

''கன்னிய ரசுர வேசி
கனிபழம் யானை வண்ணான்
முன்னிய முரசு சங்கு
மங்கிலி கழுத்தி னோடு
தின்னிய தயிரும் பாலு
மாங்கிஷ மதுநீ ரோடு
இன்னிவை யெதிரே வந்தால்
யாத்திரை போகல் நன்றே.''

(பொழிப்புரை) கன்னிப்பெண்கள், அரசன், வேசி, கனிந்த பழங்கள், யானை, வண்ணான், முரசு, சங்கு, சுமங்கலி, தயிர் சோறு, பால், மாமிசம், மதுநீர் இவைகளுள் யாதேனும் ஒன்று எதிரேவரின் நன்னிமித்தமாம்.

தீ நிமித்தம்.

கட்டளைக் காலித்துறை.

''கொடுவா ளுடன்கத்தி கோடாரி,
தன்கையிற் கொண்டுவரில்
நெடுராத்ரி யுண்டந்த வேசிக்கண்
நித்திரை யேநினைவு
தடுமாறிப் பேசிக் குளறியே
வைத்தி யனையழைக்குஞ்
சுடுமாப்பி ரேதத்தை நீபோ!
வெனச்சொல்லுந் தூதனையே.''

(பொழிப்புரை) கையில் கொடுவாளுடனும், கத்தியுடனும், கோடாரியுடனும் வந்தாலும். வேசியுடன் நித்திரை செய்து அந்த நினைவுடன் தடுமாறிப் பேசிக் குளறி வைத்தியனை யழைக்க வந்தாலும், வந்தவனை நீபோய்ப் பிணத்தைச் சுடுவென்றுதான் சொல்லவேண்டும்.

நன்னிமித்தம்.

"முந்த வசன வயிரக்குர
ஓண்டு முகமலர்ந்து
சந்தனம் பூசி யடைக்கா
யருந்தித் தகுதியொடு
வந்தொரு தூதன் வைத்தியன்
றன்னை வருகவென்றா
லுந்தும் பிணிகள் ளொருகாத
மோடு மூகந்தறியே."

(பொழிப்புரை) சொற்கள் உரமாகச் சொல்லிக்கொண்டு முக மலர்ந்து சந்தனம் பூசி வெற்றிலை போட்டுக்கொண்டு, வந்த தூதன் வைத்தியனை அழைக்கப் பிணி அகலுமென்க.

மருத்துவனை யழைக்கும் தூதுவன் இலக்கணம்.

" வந்தவனி சத்தன் மகுடன் கிரகத்தன்
வந்தவனி சத்தன் மழன்சேயன்—வந்த
வுடல னலங்கார னுன்மத்தன் யோகி
யுடலனலங் காரனளி யோன் "

(தே.ய.)

(பதவுரை) வந்தவன் நிசத்தன், மகுடன், கிரகத்தன்—(அழைக்க) வந்தவன் சக்தியவானாகவும் பாகையுள்ளவனாகவும், இல்லறத்தானாகவும், அவனி வந்து சத்தன்—உலகத்துலாவும், காற்றை யொத்த தொனியுடையவனாகவும், மழன், சேயன்—இளவயதுடையவனாகவும், செந்நிறமுடைய வனாகவும், வந்த உடலன் அலங்கு ஆரன்—கவசந்தரித்த சரீரமுடையவனாகவும் அசைகின்ற மாலையுடையவனாகவும், உன் மத்தன் யோகி விடனுக வும் யோகவானாகவும், உடலன் அலங்காரன், அளியோன்—ஐஸ்வரியவானாகவும், இயல்பாய் அழகுள்ளவனாகவும், கிருபை உள்ள வனாகவும் இருந்தால் நன்மை.

(பொழிப்புரை) வைத்தியரை அழைக்க வருபவன், சத்திய வந்தனாகவும், பாகை முதலான தலைக்குட்டை தரித்தவனாக வும், இல்லறத்தானாகவும், மெல்லிய குரலொளி உடையவ னாகவும், இளவயதுடையவனாகவும், செந்நிற முடையவனாக வும், ஆபரணங்கள் முதலியவற்றை பூண்டவனாகவும், சட்டை யணிந்தவனாகவும், விடனாகவும், யோகவானாகவும், செல்வந்த னாகவும், இயல்பாய் அழகுடையவனாகவும், கிருபை யுடையவ னாகவும் இருக்கின் அந்த வைத்தியம் நலமளிப்பதாகும்.

மருத்துவனை அழைக்காதவர்கள் இவர்களெனல்.

''கண்டவரை யத்தர் கரியர்முது வர்முண்டர்
கண்டவரை யத்தர் கரியர்தவர்—கண்டவரை
யுள்ளவரா காகதொனி யோர்கதைய ரீனர்துனி
யுள்ளவ ராகாத்தீ யோர்.''

(தே,ய.)

(பதவுரை) கண்டவர்—மருத்துவரை அழைக்க வந்து பார்த்தவர்கள், ஐயத்தர் கரியர் முதுவர் முண்டர்—சந்தேகமுடையவரும், கருநீறமுடையவரும் வயோதிகரும் மொட்டையரும் கண்தவர் ஐயத்தர் கரியர் தவர்—கண்ணிழந்தவரும், யாசகரும், பொய் சாட்சி கூறுபவரும், தவம் புரிபவரும், கண்தவரை உள்ளவர்—மூங்கில் வில்லையுடையவரும், ஆகாக தொனியோர்—இனிமையைத் தராத காக்கை போன்ற குரலோசையுடையவரும், கதையர் ஈனர் துனியுள்ளவர்—தடியையுடையவரும் இழிவுள்ளவரும் துயருற்றவருமாகிய இவர்கள், ஆகாத் தீயோர்—மருத்துவரை யழைக்கத் தகுதியில்லாத தீதுடையவராவர்.

(பொழிப்புரை) சந்தேகியரும், கருநிறமுடையவரும், வயோதிகரும், மொட்டைத்தலையரும், கண்ணற்றவரும், பொய்ச்சான்று சொல்வோரும், தவத்தினரும், வில்லுடையவரும், இனிமையற்ற குரலோசையுடையவரும், தடிப்பிடித்தவரும், இழிவுற்றவரும், துயருற்றவரும் ஆகிய இவர்கள் மருத்துவரை அழைக்கத்தகாதவர்களாம். அவ்வைத்தியம் அனுகூலப்படாதென்பது கருத்து.

தீச்சகுனம்.

''ஏனுதி விலியன் வாணியன் ஏமாதுலன்
ஏமலன் வாச்சியன் ஏவலன் வசியன்
ஏனுதி யன்மடை யன்பனை வினையன்
ஏட்டையன் இந்தனி ஏட்டை யன்முன்
ஏகா சன்னி முண்டிதன் பள்ளி
ஏதிலன் வாதுவி ஏணி யாரம்
ஏழகம் ஆண்டலை ஏன்ங் கருப்பை
ஏடகன் சந்தன் ஏடகன் சந்தன்
ஏயிவர் முன்னே ஏலாது ஏல்பவை

(தே. கரிசல்)

(பொழிப்புரை) அம்பட்டன், வேட்டைக்காரன், வாணியன், தட்டான், பணிசெய்பவன், கிளிஞ்சல் சுடுகிறவன், மேளம் முதலாகிய வாத்தியங்கள் கொட்டுகிறவன், வேலைக்காரன், செட்டி எருதின்மேற் பொதி போட்டுக் கொண்டு வருகிறவன், சமையல் செய்பவன், கையில் பனையோலை கொண்டு வருகிறவன்,

விறகுகட்டை, விராட்டி இவற்றைக் கொண்டு வருகிறவன், தரித்திரன், மேலாடை மாத்திரம் போட்டுக்கொண்டு வருகிறவன், தலையை மழுக்கிக்கொண்டு மொட்டையாய் வருகிறவன், அடிமையன், அன்னியன், குதிரையை பழகுகிற குதிரைக்காரன், மான், பாம்பு, ஆட்டுக்கடா, சேவல், பன்றி, எலி, விபூதி பூசிக்கொண்டு வருகிறவன், கைக்கோளன் எந்நேரமும், தூது செல்பவன் ஆகிய இவர்கள் மருத்துவன் எதிரில் வரின் தீச்சகுனமாம்.

நற்சகுனம்.

''ஏகாலி வாரணி ஏணியன் கோவலன்
ஏதியன் அரசன், ஏடன், பண்டிதன்,
ஏனலன் மந்திரி ஏல்வையன் புலையன்
ஏடன் சதுர்த்தன் ஏமாப் பினன்வரன்
ஏரகனூர்திமா ஏரமூர் சாத்திரி
ஏர்விடை கருணி ஏணங் காண்டம்.''

(தே. கரிசல்)

(பொழிப்புரை) வண்ணான், மாவட்டிக்காரன், சாணான், குசவன், ஏனாதி, அரசன், தோழன், வித்துவான், ஏன்லனான குறவன், மந்திரி, பயிர்களுக்குத் தண்ணீர் காட்டுகிறவனான கம்புகட்டி, பறையன், ஏடனான பூமாலைக்காரன், சாதுரியமான், வன்மையன், ஏமாப்பினனான வெகுமதி பெற்றிருக்கிறவன், தெய்வத்தின் வரம் பெற்றிருக்கிற உத்தமன், முருகன் ஊர்தியான மயில் குதிரை நகாரு போட்டிருக்கிற எருது, காரு, டமாரம் பொறுக்கிற ஒட்டகம், ஏரில் பூட்டியிருக்கிற எருதுகள், பெட்டை யானை, கூடுடன் புனுகு பூனை, கரண்டம் என்கிற நீர்க் காக்கை இவைகள் எதிரில் வரின் நன்மையாம்.

பறவைச் சகுனம்.

வல்ப்பறவை.

''சொன்னதோர் நாரை காகம்
போத்திவை வலமே சூழின்
இன்னுமே கரும நன்றா
மியல் பெறக் காடை வாலான்
முன்னமே கருடன் கோழி
முற்றிவை யிடமே நன்றாம்
வன்ன்மாய் முனிவர் சொன்ன
வயித்திய மார்க்க மாமே.''

(பொழிப்புரை) நாரை, காகம், ஆண்மயில் ஆகிய இப்பறவைகள் வலப்பக்கமாய்ச் செல்லின் நன்றாம். காடை, வலியன், இகடன், கோழி முதலியன இடம் வரின் நன்றாம். இது முனிவர் இயம்பிய வயித்திய நெறியாகும்.

நற்சகுனம்.

''போடேநீ தேவதைகள் ராசா யானை
பொலிவான பூஷணமாம் பெண்கள் பிள்ளை
நாடேநீ பூரணமாங் கும்பத் தோடு
நலமான தயிரோடு பாலும் பானை
சூடேநீ குதிரையொடு மறையோர் கூட்டம்
சுகமான குடைசுருட்டி சிவிகை கள்ளு
ஆடேநீ சாமரையும் சுகந்த புட்பம்
அப்பனே வாத்தியங்கள் கேட்க நன்றே.''

(பொழிப்புரை) தேவதைகள் அரசன், யானை, ஆபரணங்கள், பெண்கள், பிள்ளை பூரண கும்பம், தயிர் பால் நிறைந்த பானைகள், குதிரை, வேதியர் கூட்டம், குடை விசிறி, பல்லக்கு, கள், வெண்சாமரை, நல்ல வாசனையுடைய பூக்கள் இவைகள் எதிர்ப்படலும் வாத்தியங்களின் ஒலி கேட்டலும் நற்சகுனங்களாம்.

வைத்தியம் செய்யச் செல்லும்போது ஆகாத சகுனங்கள்.

''பாக்க னிருளி பணிகுறுக்கு முன்னிகலன்
பாக்க னிருளி பனவனகயில்—பாக்கன்
குசவன் கனவட்டன் கொல்லன் கணக்கன்
குசவன் கனவட்டன் கொள்.'' (தே. ய.)

(பதவுரை) பாக்கன் இருளி பணிகுறுக்கு—பூனை, பன்றி, பாம்பு (ஆகிய இவை) குறுக்கே போகலாகாது, இகலன் பாக்கன் இருளி, பனவன், அயில் பாக்கன்—பகைவன், செம்படவன், வேடச்சி, பிராமணன், சமையல் செய்வோன், குயவன் கனவட்டன், கொல்லன், கணக்கன்—குயவன், குதிரைக்காரன், கருமான், கணக்கன், குசவன், கனவட்டன்—விறகுத் தலையன், தோட்டி ஆகிய இவர்கள் எதிரில் வந்தாலும் அந்த மருத்துவம் பலிக்காதென்று, கொள்—அறிந்து கொள்ளவேண்டுமென்பதாம்.

வைத்தியம் செய்யச் செல்லுகையில் நற்சகுனங்கள்.

''மந்திரி தந்தன் மகிபாலன் கைக்கோளன்
மந்திரி தந்தன் மடையனிறை—மந்திரிநாய்
வாரணமான் முன்பால் மயில்காரி நாரைவன்னி
வாரணமான் பாறணில்கொள் வாய்.''
(தே. ய.)

(பதவுரை) மந்திரி தந்தன் மகிபாலன் கைக்கோளன்—கள்விற்போன், தாடியுடையவன் (நிலத்திற்குடைய) வேளாளன், செங்குந்தன், மந்திரிதம்மடையன், தன் இறை—(குபேரனைப் போன்ற) செல்வமுடையவன், நூலுணர்ச்சியுள்ளவன், பூசாரி

வேந்தன், மந்திரிநாய்,வாரணம் மான்—மந்திரியும், நாய், யானை, மான் என்னுமிவைகளும், முன்—எதிரில் வரினும், பால்—இடப் பக்கத்திலிருந்து வலப்பக்கமாய், மயில் காரி நாரை வன்னி, வாரணம் ஆண் பாறு அணில் கொள்வாய்—மயில், காக்கை, நாரை, கிளி, கோழி, பசு, பருந்து, அணிப்பிள்ளை ஆகிய இவை கள் செல்லினும் நன்மையென்று அறிந்து கொள்வாயாக.

(கருத்துரை) வைத்தியம் பார்க்கச் செல்லுகையில் கள் விற் போனும், தாடியுடையனும், வேளாளனும், செங்குந்தனும், செல்வமுடையவனும், நூலுணர்ச்சியுள்ளவனும், பூசாரி யும், அரசனும், அமைச்சனும் எதிர்ப்படினும் நாய், யானை, மான் இவைகள் எதிரில் வந்தாலும், மயில் காக்கை, நாரை, கிளி, கோழி, பசு, பருந்து, அணிற்பிள்ளை ஆகிய இவைகள் இடப்பக்கமிருந்து வலப்பக்கமாய் வந்தாலும் அந்த வைத்தியத் தினால் பயன் உண்டாமெனை அறிந்து கொள்ளவேண்டும்.

தீச்சகுனம்.

''பாடினே னின்னமொன்று சொல்லக் கேளு
பண்பில்லாத் தலைவிரித்தல் மொட்டை யப்பா
நாடினேன் சந்யாசி செட்டி தட்டான்
நலமான குயவன்மூக் கறையன் செக்கான்
கூடியே நாவிதனும் பிணிநோ யாளன்
குணமில்லாக் கட்டையொடு விலங்கு யாக்கை
சூடினேன் கயிறுசக் கரியு மாகா
சுணைகெட்ட வழிக்குண்டி யாகா தென்னே.''

''ஆகாது புகையோடு பின்பு தும்மல்
அப்பனே அழுகையொடு முசலமாகா
வாகாது நீர்ப்பானை யுடைந்த போது
வழியிலே யடித்துவிழக்காணப் போகா
பாகாது மரம்வெட்டல் அடியுஞ் சண்டை
பண்பான கட்டிலொடு நாற்கால் முக்கால்
சோகாது இவை மூன்றும் வந்து கண்டால்
சுருக்கப்பா மரணமென்று சொல்லிப் போடே.''

(பொழிப்புரை) மருத்துவன் புறப்படுகையில் தலைவிரித்த வரும், மொட்டையும், சந்நியாசி, செட்டி, தட்டான், குயவன், மூக்கறையன், செக்கான், நாவிதன், நோயாளன், விறகு, விலங்கு பூட்டிய யாக்கை, பாம்பு, சக்கரி, கட்டுசாதம், புகை, தும்மல், அழுகை, உலக்கை, நீர்ப்பானையுடைதல், சண்டையிட்டு ஒருவ ருக்கொருவர் அடித்து வீழல், வீழ்தல், மரம் வெட்டுதல், அடிபிடி சண்டை, கட்டில், நாற்காலி, முக்காலி இவை எதிர்படின் எந்த நோயாளியைக் குறித்துப் புறப்படுகின்றானோ, அவன் மரணமா வான் என்று சொல்லிவிடலாம்.

வைத்தியம் செய்யும் நாளறிதல்.

"மதியாத வன்மதித்து மத்தியென்று சற்று
மதியாத வர்முதன்மை மைந்தர்—மதியாத
பாற்கடலை மானப் பளிங்காண் டளப்பான்சேய்
பாற்கடலை மானவைப்பார் பார்." (தே.ய.)

(பதவுரை) மதி ஆதவன் மதித்து—திங்களையும், சூரியனையும் உத்தமமாய் எண்ணியும், மத்தி என்று சற்றும் மதியாதவர்—மத்திமமென்று சிறிதுங் கணிக்கத் தகாதவர்கள், முதன்மை மைந்தர்—முதலிற் கூறிய (இருவரின்) புத்திரர்களான புதனும், சனியும் (சந்திரன் மகன்—புதன், சூரியன் மகன்—சனி), மதியாத பாற்கடலைமான—கடையாத பாற்கடலை யொப்பாய் (விளங்கும்), பளிங்கு ஆண்டளப்பான் சேய்—சுக்கிரனும் வியாழனும், செவ்வாயும், பாற்கு—மத்திம பாகத்திற்கு, அடலை மானவைப் பார் பார்—தங்கள் வல்லபத்திற் கேற்றவாறு உலகத்துள்ள பெரியோர்கள் பகுத்துரைப்பார்கள்.

(பொழிப்புரை) வைத்தியஞ் செய்வதற்குத் திங்கட்கிழமையும் ஞாயிற்றுக் கிழமையும் உத்தமம், வெள்ளிக்கிழமையும், வியாழக் கிழமையும், செவ்வாய்க் கிழமையும் மத்திமம், புதன்கிழமையும் சனிக்கிழமையும் அதம மென்பதே.

உலகத்திலுள்ள பெரியார் தங்கள் வல்லபத்திற்கேற்றபடி வகுத்துரைப்பார்களென்றமையால், உத்தமமாகிய இரண்டு வாரங்களுள் திங்கட்கிழமை உத்தமோத்தமம் எனவும், ஞாயிற்றுக் கிழமை உத்தமாதமம் எனவும், அதமமாகிய இரண்டு வாரங்களுள் புதன் கிழமை அதமோத்தம மெனவும், மத்திமமாகிய மூன்று வாரங்களுள் வெள்ளிக்கிழமை மத்திமோத்தமம் எனவும், வியாழக்கிழமை மத்திமா மத்திமம் எனவும், செவ்வாய்க்கிழமை மத்திமாதமம் எனவும், சனி அதமாதமம் எனவும் பகுப்பாரென்றறிக.

வைத்தியஞ் செய்யவேண்டிய திதி யறிதல்.

வெண்பா.

"அஞ்சுபத்து முன்னிருத்தை யாபத்தி ரைசதமி
யஞ்சுபத்து முன்னிருத்தை யட்டமிவீ—யஞ்சுபத்து
நல்லுவா வாறு நவமி பதினொன்று
நல்லுவா வாறுபதி னாலு." (தே. ய.)

(பதவுரை) அம் சுபத்து முன் இருத்து ஐயா—அழகிய சுகத்திற்காக முதன்மையாக வைத்துக் கொள்ளத் தக்க வைத்தியனே! பத்திரை சதமி அஞ்சு பத்து முன் இருத்தை அட்டமி—துவிதிகை, சப்தமி, பஞ்சமி, தசமி, சதுர்த்தி, அட்டமி (என்னும் திதிகள்)

உத்தமம், வீ அஞ்சு பத்து நல் உவா ஆறு நவமி பதினொன்று நல் உவா ஆறு பதினாலு—நீக்கத் தக்கவை பதினைந்தாவதாகிய கிருஷ்ண பட்சத்தமாவாசை, அதன் வழிவந்த (பிரதமை), நவமி. ஏகாதசி, பௌர்ணமி, சஷ்டி, சதுர்த்தசி என்பவைகளே.

(கருத்துரை) துவிதிகை, சதுர்த்தி, பஞ்சமி, சப்தமி, அட்டமி, தசமியென்னுமிந்த ஆறு திதிகளும் வைத்தியம் செய்யத் தொடங்குவதற்கு உத்தமமாம்.

பிரதமை, சஷ்டி, நவமி, ஏகாதசி, சதுர்த்தசி, அமாவாசை என்னும் இத்திதிகள் அதமமாம்.

எனவே உத்தமத்திதிகளும் அதமத்திதிகளும் நீங்க ஏனைய திரிதிகை, துவாதசி, திரையோதசி என்னுமித்திதிகள் மத்திமமாகுமென்பது கருத்து.

" ஏகாதசி நவம் ஏற்கு மற்றவையே."

(தே. கரி.)

என்பதாலும் அறிக.

வைத்தியம் செய்வதற்கு நட்சத்திரமறிதல்.

" அச்சுவதி கேட்டை யரவுபூ ரட்டாதி
யச்சுவதி கேட்டை யழிக்குமே—யச்சுவதி
கொக்கரிமான் பண்டி கொடுநுகமோ டந்தாசி
கொக்கரிமான் மத்தியிருக்கும்."

(தே. ய)

(பதவுரை) அச்சுவதி, கேட்டை, அரவு பூரட்டாதி—அசுபதி கேட்டை ஆயில்யம், பூரட்டாதி ஆகிய இந்த நான்கு நட்சத்திரங்களும், அச்சுவதி கேட்டை அழிக்கும்—அச்சந்தரும் துயரத்தை யொழிக்கும், அச்சுவதி கொக்கு அரிமான் பண்டி கொடுநுகம் ஓடம் தாசி கொக்கரிமான்—அந்த சுவாதி, மூலம், கார்த்திகை, மிருகசீரிடம், உரோகணி, மகம், இரேவதி, பரணி, திருவோணம் ஆகிய இவ்வொன்பது நட்சத்திரங்களும், மத்தியிருக்கும்—மத்திமமாயிருக்கும்.

(பொழிப்புரை) இதனால், அசுவினி, கேட்டை, ஆயிலியம், பூரட்டாதி என்னும் இந் நான்கு நட்சத்திரங்களும் வைத்தியம் செய்வதற்கு உத்தம மென்பதும், சுவாதி, மூலம், கார்த்திகை, மிருகசீரிடம், உரோகணி, மகம், இரேவதி, பரணி, திருவோணம் ஆகிய இவ்வொன்பது நட்சத்திரங்களும் மத்திமமென்பதும் எனவே இருபத்தேழு நட்சத்திரங்களுள் உத்தமமும் மத்திமமுமாகிய பதின்மூன்று நட்சத்திரங்கள் நீங்க ஏனைய பதினான்கு நட்சத்திரங்களும் அதமமென்பதும் அறிந்தோம். அதம நட்சத்திரங்கள் திருவாதிரை, புனர்பூசம், பூசம், பூரம், உத்திரம், அத்தம், சித்திரை, விசாகம், அனுடம், பூராடம், உத்திராடம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி ஆகிய இந்த நட்சத்திரங்களேயாம்.

இன்னும் உத்தமமான நான்கு நட்சத்திரங்களுள்ளும் அசுவினி உத்தமத்தில் உத்தமம், கேட்டை உத்தமத்தில் மத்திமம், ஆயிலியம் உத்தமத்தில் அதமம், பூரட்டாதி உத்தமத்தில் அதமாதமம் என்றும், மத்திமமான ஒன்பது நட்சத்திரங்களுள்ளும் சுவாதி, மூலம், கார்த்திகை ஆகிய இம்மூன்று நட்சத்திரங்களும் மத்திமத்தில் உத்தமம் என்றும், மிருகசீரிடம், உரோகணி, மகம் இந்த மூன்று நட்சத்திரங்களும் மத்திமத்தில் மத்திமம் என்றும், இரேவதி, பரணி, திருவோணம் இந்த மூன்று நட்சத்திரங்களும் மத்திமத்தில் அதமம் என்றும் ஒருவாறு சிலநூல்கள் கூறுகின்றன. ஆயினும் வைத்தியர்கள் இந்த நட்சத்திரங்களின் பலாபலத்தை அனுபவ சித்தமாய் உணர்ந்து நிச்சயித்து நடந்துகொள்ள வேண்டியதவசியமாகும்.

வைத்தியஞ்செய்ய மாதங்களறிதல்.

'' மாடா டரிவை மகரங்கோல் வின்மீன்
மாடா டரிவையரி மைதுனந்தேள்—மாடாடு
கும்பங் கடகங் குறிப்பி லிவைமூன்ரு
கும்பங் கடகமெனக் கொள். ''

(தே. ய.)

(பதவுரை) மாடு ஆடு அரிவை மகரம் கோல் வில் மீன்—இடபம், மேடம், கன்னி, மகரம், துலாம், தனுசு, மீனம் ஆகிய இவ்வேழு லக்கினங்களையும், மாடு ஆடு—(மத்திம) இடத்தில் வழங்குவாய், அரிவை—தள்ள வேண்டியவைகளும் கொள்ள வேண்டியவைகளுமான, அரி மைதுனம் தேள்—சிங்கம், மிதுனம், விருச்சிகம் ஆகிய இம்மூன்றும் தள்ள வேண்டியவைகள், மாடு ஆடு—செல்வமும் வெற்றியுமுள்ள, கும்பம் கடகம்—கும்பம் கர்க்கடகம் இவ்விரண்டும் கொள்ளவேண்டியவைகள், குறிப்பில் இவை மூன்ருகும் பங்கு—குறிக்குமிடத்து இவையே (இராசிகளின்) முப்பகுதிகளாகும், அடகம் எனக்கொள்—(இவைதாம்) இதனுள் அடங்கிய முக்கிய (கருத்தென்று) நீயறிந்துகொள்.

(பொழிப்புரை) வைத்தியம் செய்வதற்கு கும்பம், கடகம் என்னும் இநத இரண்டு இலக்கினங்களும் உத்தமம். இடபம், மேடம், கன்னி, மகரம், துலாம், தனுசு, மீனம் ஆகிய இந்த ஏழு லக்கினங்களும் மத்திமம், சிங்கம், மிதுனம், விருச்சிகம் ஆகிய இம்மூன்று இலக்கினங்களும் அதமமென்பதே.

'' ஏழையிரட்டை வில் ஏற்குமோரையே. ''

என்பதாலுமறிக.

(தே. கரி.)

வைத்தியஞ்செய்ய மாதங்களறிதல்.

" சித்திரைவை காசி திரமானி யாடிமத்தி
சித்திரைவை காசி சிதைக்குமே—சித்திரைவை
யங்கா ரகன்போ லனுகூல மாகவதி
யங்கா ரகன்மகிமை யை."

(தே.ய.)

(பதவுரை;) சித்திரை வைகாசி திரம்—சித்திரை மாதமும், வைகாசி மாதமும் (உத்தமம்) இது நிச்சயமானவை, ஆனி ஆடி மத்தி—ஆனி மாதமும், ஆடி மாதமும் மத்திமமானவை, சித்து இரை வைகு ஆசி சிதைக்கும்—அறிவு, உணவு, தங்கியவாழ்வு முதலியவற்றையும் அழிக்கும், சீதிரைவை—காந்தியுள்ள கடலி லிருக்கும், அங்காரகன் போல்—அங்காரகன் போலவும், அனுகூல மாக வதி—வடவாக்கினியைப்போலவும் கூடியிருந்து, மகிஅங்கம் ஆர்மையை அகல்—உலகத்தாரின் சரீரத்திற் பொருந்திய பிணிகளை நிவர்த்திப்பாயாக.

வைத்தியம் செய்வதற்குச் சித்திரை, வைகாசி ஆகிய இவ் விரண்டு மாதங்களும் உத்தமம். ஆனி, ஆடி ஆகிய இவ்விரண்டு மாதங்களும் மத்திமம். உத்தமத்தையும், மத்திமத்தையும் சொன்னமையின், இந்நான்கு மாதங்கள் நீங்க ஏனைய ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என்னும் எட்டு மாதங்களும் அதமமாகும் என அறிகின்றோம். எவ்வாறெனில், முதலில் குறித்த இரண்டு மாதங்களினும் சரீரத் திலுள்ள அசுத்தமாசுகள் வெளிப்பக்கம் நோக்கமுடையன வாகலின், அக்கால இயல்பால் உடலின் அசுத்த மாசுகள் இளகித் தாமே வெளியாகும். அக்காலத்தில் மருந்துண்பதனால் இயற் கையுதவி செயற்கையுதவி என்னும் இருவகை உதவிகளும் ஏற் படுகின்றன. ஆதலின், அம்மாதங்களிரண்டையும் உத்தமமென்றும் அவற்றிற்கடுத்த இரண்டு மாதங்களும், அவ்வளவு மேலானவைகள் அல்லவாகலின், அவற்றை மத்திமமென்றும் கூறினார்.

அவற்றின் பின் ஆவணி முதல் பங்குனி வரையில் முறையே யுள்ள எட்டு மாதங்களில், தேகத்திலுள்ள அசுத்த மாசுகள் வெளி வராமல் உள்ளடங்கியிருப்பதியல்பாகலின், அக்காலங்களில் எவ்வித மருந்தையுட்கொள்ளினும் பயன்படாதென்பதே.

வைத்தியன் உலகத்துள்ள நோயாளிகட்கனுகூலமாய் இருந்தே அந்நோயின் வேகத்தை அடக்கவேண்டுமென் றறிவித்தற்பொரு ட்டே கடலுடன்கலந்துறவாயிருந்து அதைப் பெருகவொட்டாமல் அடக்கும் வடவாக்கினியை உவமையாகக் கூறியுள்ளார்.

நோய் நட்சத்திரத்தின் பலாபலம்.

நட்சத்திரம்.	நட்சத்திரத்தின் பாதம். (1)	(2)	(3)	(4)
	நோய் தீரும் நாள்.			
1. அசுவினி	9	கொல்லும்	15	கொல்லும்
2. பரணி	3	7	15	15
3. கார்த்திகை	9	10	15	48
4. ரோகிணி	10	18	32	82
5. மிருகசீரிடம்	30	28	15	35
6. திருவாதிரை	9	தீராது மரணம்	10	25
7. புனர்பூசம்	7	10	18	மரணம்
8. பூசம்	7	12	9	27
9. ஆயில்யம்	9	20	90	39
10. மகம்	மரணம்.	30	85	5
11. பூரம்	மரணம்	25	26	81
12. உத்திரம்	8	30	52	மரணம்
13. அத்தம்	8	15	28	82
14. சித்திரை	9	15	12	41
15. சுவாதி .. .	12	மரணம்	88	12
16. விசாகம்	9	3	40	81
17. அனுஷம்	மரணம்	20	90	40
18. கேட்டை	மரணம்	20	31	82
19. மூலம்	மரணம்	9	10	18
20. பூராடம்	9	மரணம்	10	54
21. உத்திராடம்	7	20	50	40
22. திருவோணம்	11	10	8	மரணம்
23. அவிட்டம்	9	15	32	39
24. சதயம்	7	10	4	5
25. பூரட்டாதி	மரணம்	16	71	41
26. உத்திரட்டாதி ..	7	18	7	28
27. ரேவதி	மரணம்	11	18	26

(புலிப்பாணி வைத்தியம் 500.)

எக்கிழமையுடன் எந்நட்சத்திரம் கூடின் ஆகாதெனல்.

கிழமை.		நட்சத்திரம்.
1. ஞாயிறும்	—	பரணியும்
2. திங்களும்	—	சித்திரையும்
3. செவ்வாயும்	—	உத்திராடமும்
4. புதனும்	—	அத்தமும்
5. வியாழனும்	—	கேட்டையும்
6. வெள்ளியும்	—	பூராடமும்
7. சனியும்	—	ரேவதியும்

கூடிய நாட்களில் நோய் வந்தால் தீராது, நோயாளி மரணமடைவான்.

(புலிப்பாணி 500).

சுர நட்சத்திர நூல்

1. அசுவினி

வரத்திஞல் முனிவர் சொன்ன
வாகடத் தியல்பு கண்டு
சுரத்திஞல் அசுவி னியிற்
சுரமதை உரைக்கக் கேளாய்!
மரத்திஞ லேழா நாளில்
மருவியே விடாத போது,
விரத்திஞ லொன்ப தாநாள்
விடுமெனப் பதியிற் காணே.

2. பரணி.

கரும்பினி னினிய சொல்லாய்!
கருங்குழல் மானே கேளாய்!
விரும்பிய பரணி நாளில்
சுரமது விடுநா ளேதோ?
தரும்பியே அஞ்சா நாளில்
தானது கடினம் பண்ணித்
திரும்பியே எட்டாம் நாளில்
விடுமெனச் செப்ப லாமே.

3. கார்த்திகை.

கருங்குழல் மடமின் ஞளே!
கார்த்திகைச் சுரமே தோன்றில்,
சுருக்குற எட்டாம் நாளில்
சுருதியாய் விடாத போதில்
இருக்கவே இவர்க்கு இங்கே
இருப்பிடம் இல்லை என்று
வருகிற இருப தாம்நாள்
மரணமென் றியம்ப லாமே.

4. ரோகணி.

தாரணி உலகோர்க் கெல்லாம்
தமிழிஞல் உரைக்கக் கேளாய்!
ரோகணி தனிலே வந்த
சுரமது விடுநாள் ஏதோ?
கோரணி எட்டாம் நாளில்
குணமதாய் விடாத போது,
வாரணி இருப தாம்நாள்
வலியவே விட்டுப் போமே.

5. மிருகசிரிடம்.

கொஞ்சிய கிளியன் னாளே!
  கோசிக முனிவர் சொன்ன
மிஞ்சிய மிருக சீர்டம்
  பற்றின சுரத்தைக் கேளாய்
பஞ்சுபோல் எட்டாம் நாளில்
  பதறியே அகன்று போகும்
வஞ்சியே தமிழோர்க்கெல்லாம்
  வண்மையாய் உரைப்ப தாமே.

6. திருவாதிரை.

மதகரி நிறத்தை யுள்ள
  மனிதரா மண்ணு ளோர்க்கு,
நிதிதிரு வாதி ரையில்
  பற்றின சுரத்தைக் கேளாய்!
பதருமாம் அஞ்சா நாளில்
  பதறியே கடினம் பண்ணிக்
கதுவற முப்ப தாம்நாள்
  விடுமெனக் கருதிச் சொல்லே.

7. புனர் பூசம்.

படித்திடு நூலோர் சொன்ன
  பயன்களைக் கண்டு சொன்னோம்
கடுத்ததோர் புனர்தந் தன்னிற்
  கடுஞ்சுரம் விடுநா ளேதோ?
துடித்தோர் ஆறு நாளில்
  துன்பமும் ஒழிந்து போகும்
வடித்தமி ழுரைக்கு மாதே:
  வாகடத் தியல்பு தானே.

8 பூசம்.

அச்சமாய்ப் பூச நாளில்
  அறிவழி சுரமும் வந்தால்,
இச்சையாய் இரண்டாம் நாளில்
  இதத்துடன் விடாத போது,
பட்சமாய் எட்டாம் நாளில்
  பதறியே அகன்று போகும்
மிச்சமாய் முனிவர் சொல்லை
  விரும்பியே உரைக்க லுற்றேம்.

9. ஆயில்யம்.

கரும்பைப்போல் இனிக்கும் சொல்லாய்,
கவனமாய் உரைக்கக் கேளாய்!
அரும்பைப்போல் விழியி னாளே!
ஆயில்யம் சுரமே தோன்றில்,
சுரும்பைப்போல் ஏழாம் நாளில்
சுருதியாய்க் கடினம் பண்ணி
வரும்பைப்போல் இருப தாம்நாள்
மரணமென் றியம்ப லாமே.

10. மகம்.

மங்கையே உரைக்கக் கோளாய்
மகத்தினில் வெதுப்பு வந்தால்,
சங்கையீ ராறு நாளில்
சந்தயந் தீரா விட்டால்,
நங்கையே! பைத்தி ரண்டில்
நலமாய் ஆகும் என்று
பொங்கமாய்க் கேட்போர்க் கெல்லாம்
புகலுவா யுறுதி யாக.

11. பூரம்.

உரத்தினாற் பூர நாளில்
உறுதியாய்ச் சுரமும் வந்தால்,
கருத்துடன் பத்தாம் நாளில்
கருதியே விடாத போது,
விருத்தமாய் முப்ப தாம்நாள்
விடுமென இமையோர் சொல்ல
வரத்தினால் யானும் இந்த
வாகடம் உரைக்க லுற்றேன்.

12. உத்திரம்.

பத்திர மாகச் சொல்லப்
பண்டித மாரே கேளீர்!
உத்திர மான நாளில்
உண்மையாய்ச் சுரமும் வந்தால்,
சுத்தமாய்ப் பதினெட் டாம்நாள்
சுருதியாய் விடாத போது,
தெற்றென மூன்று மாதம்
செல்லுமென் றுமையாள் சொன்னாள்.

13. அத்தம்.

உற்றது கனவென் றெண்ணி
உண்மையாய் நினைக்கு மாதே !
அத்தத்தில் சுரமே வந்தால்,
அதுவிடும் இரண்டு நாளில்
மற்றது நினைக்க வேண்டாம்,
மானிடப் பேருக் கெல்லாம்
சுத்தமாய்ப் பதினைந் தாம்நாள்
சுருதியாய் மருந்து செய்யே.

14. சித்திரை.

சிறுநுதல் மடமின் னாளே !
சித்திரை சுரமே வந்தால்,
அறுதியாய் எட்டாம் நாளில்
அறிவுடன் விடாத போதில்,
உறுதியாய் மூன்று மாதம்
உண்மையாய் விடாது கண்டாய்;
சுருதியாய் இந்த நூலிற்
சுகப்பட உரைத்த தாமே.

15. சோதி.

விதியினால் சோதி நாளில்
விகடமாய் வெதுப்பு வந்தால்,
ததியினால் இரண்டு மூன்றில்
தண்மையாய்த் தணியா விட்டால்,
மதியினால் பத்து ஏழில்
ஒன்றினால் போகு மென்று
பதியினால் பார்த்துச் சொன்னோங்
பண்டித மாருக் கெல்லாம்.

16. விசாகம்..

வாரணி தனத்தி னாளே !
விசாகத்தில் சுரமே வந்தால,
கோரணி கொண்டெட் டாநாள்
குணமதாய் விடாத போது,
காரண கரும்பே ! மாதம்
ஒன்றினில் கடுகிப் போகும்
தாரணி உலகோர்க் கெல்லாம்
தமிழினால் உரைக்க லுற்றோம்.

17. அனுஷம்.

பஞ்சுபோல் தூய மேனிப்
பவளமாய்க் கொடியே கேளாய் !
அஞ்சல ரான பேர்க்கு
அனுஷத்தில் சுரமே வந்தால்,
கெஞ்சியீ ராறு நாளில்
கிருபையாய் விட்டுப் போகும் :
வஞ்சகம் இன்றிச் சொன்னோம்
வண்மையாய் அறிந்து கொள்ளே.

18. கேட்டை.

இட்டமாய்க் கேட்ட மாதே !
இன்புட னுரைக்கக் கேளாய் !
விட்டமாய்க் கேட்டை நாளில்
சுரமது விடுநா ளேதோ ?
தட்டவே அஞ்சா நாளில்
தயங்கவே கடினம் பண்ணி
முட்டவே முப்பதாம்நாள்
விடுமென மொழிவ தாமே.

19. மூலம்.

திருவைமா மயிலே ! கேளாய் !
சிரப்பட வேத நூலில்
உரிமையாய் மூல நாளில்
சுரமது விடுநாள் ஏதோ ?
கருமையாய் அஞ்சாம் நாளில்
கடுகவே விடாத போது,
அருமையாய் இருப தாம்நாள்
அகலுமென் றுரைக்க லாமே.

20. பூராடம்.

தீங்குநாள் பூரா டத்தில்
திமிரமாய் வெதுப்பு வந்தால்,
பாங்கினால் நாலி ரண்டில்
பதறியே விடாத போது,
வாங்கினாற் பத்தில் எட்டில்
வந்திடும் மரண மென்று
ஏங்கினும் தீரா தென்றே
இயம்பியே உரைக்க லுற்றோய்.

21. உத்திராடம்

உருண்டெழுந் தோளி னாளே !
உத்ராடச் சுரமே வந்தால்,
சுருண்டெழும் ஏழாம் நாளில்
சுருதியாய்க் கடினம் பண்ணி,
மருண்டெழு இருபத் தைந்தாம்
நாளினில் வலியப் போகும்
வரண்டெழும் உவமை கண்டு
வாகடத் துரைக்க லுற்றோம்.

22. திருவோணம்

ஓண நாள் சுரமே வந்தால்
ஒதுங்குநாள் ஏதோ கேளாய் !
காணவே ஏழாம் நாளில்
கருதியே விடாத போது,
தோணவே ஏழு மாதம்
சுத்தமாய் விடாது கண்டாய்,
கோணமாய் இந்த நூலைக்
குணமுடன் உரைக்க லுற்றேன்.

23. அவிட்டம்

அவிட்டத்தில் சுரமே வந்தால்
அஞ்சாநாள் கொல்லா தாகில்,
பவிட்டத்துப் பதினே ழாம்நாள்
பதறியே விட்டுப் போகும்
சிவிட்டத்து இந்த வண்ணம்
செப்பியே உரைப்பீ ராகில்.
நிவிட்டத்துப் பின்பு நீயும்
நெருங்கிநல் மருந்து செய்யே.

சதயம்

கண்டினுக்கினிய சொல்லாய்
கன்னியே உரைக்ககேளாய்
விண்டிலாச் சதய நாளில்
சுரமதுவிடுநாள் ஏதோ
மிண்டியே அஞ்சாம் நாளில்
வேதனை முழங்கப் பண்ணி.
தண்டியே பத்தில் அஞ்சில்
விடுமென்று தன்மை சொன்னோம்

பூரட்டாதி

பகட்டினார் பூரட்டாதி
சுரமது பகரக் கேளாய்
உகட்டினால் ஏழாம் நாளில்
உறுதியாய்க் கடினஞ் செய்து
தகட்டினாற் பதினஞ்சாம் நாள்
தானது அகன்று போகும்
திகட்டினால் முனிவர் பாடித்
தெளிந்தது நூல தாமே

உத்திரட்டாதி

உண்மையாய் உரைக்கக் கேளாய்
உத்திரட்டாதி சுரமே வந்தால்,
தண்மையாய் ஏழாம் நாளில்
தானது திரும்பா விட்டால்
வண்மையாய்ப் பதினஞ்சாம்நாள்
மரணமென்றுறுதி யாகக்
செம்மையாய் இந்த நூலைத்
தெரிந்துநீ செப்பலாமே.

ரேவதி

பாங்காய்க் சுரமும் ரேவதியில்
பதறிவந்ததென்றறிந்தால்,
தீங்காய்க் கொல்லும் எட்டாம் நாள்
திறமாய் மரண மிகவாகித்
தேங்காய் நல்ல வறிவதனால்
தேர்ந்து கொள்வாய் நூல்வழியே
ஆங் ாய் முனிவர் சொன்னார்கள்.
அறிந்து கொள்ளும்படிதானே.

மரணநாளறிய

ஆமேதான் மரணநா ளறியக் கேளாய்
அடவான மரணமென்ற நாள்தான் சொல்வேன்
வாமேநீ அருக்கநாள் பரணி யாகா
வளமான திங்கட்சித் திரையு மாகா
தாமேநீ செவ்வாய்க்கு உத்தி ராடந்
தயவான புதனுக்கு அஸ்த மாகா
நாமேநீ குருநாள்தான் கேட்டை யாகா
நலமான புகர்நாள்பூ ராடந் தீதே.

தீதான சனிநாள்ரே வதியு மாகா
    தீங்குவரு மின்னாளில் நோய்கள் கண்டால்
வாதான நமக்குமே அறுதி யாகும்
    வந்தநோய் தீராது மரணஞ் சொல்லும்
தானான வயித்தியரே நூலைப் பார்த்து
    தயவாக வத்தியங்கள் செய்ய வேணும்
கோனான போகருட கடாட்சத் தாலே
    கொற்றவனே புலிப்பாணி சொன்னேன் பாரே.

(புலிப்பாணி 500.)

தென்னாட்டினர் ஆட்சி

சௌரமான விதி.

'' காரியும் புதனுந் திங்கள்
    கருதிடில் மருந்து தீதாம்
சீரிய வெள்ளி நோயாம்
    தீர்பிணி செவ்வாய் வியாழம்

பாரினி லுள்ள பேர்க்குப்
    பரிகாரஞ் செய்ய வேண்டில்

ஆரிய னருளி னாலே
    யருக்கனாள் மருந்து செய்யே.''

(கருத்துரை) இச் செய்யுள், மருத்துவம் பார்க்கத் தகா நாட்களையும் தக்க நாட்களையும் கூறுகின்றது.

(பதவுரை) காரியும்— சனிக்கிழமையும் புதனும்—புதன் கிழமையும், திங்கள்— திங்கட்கிழமையும், கருதிடில்—மருந்து செய்யவும் மருத்துவம் செய்யவும்) நினைத்தால், மருந்து தீது ஆம்— மருந்துகெடுதியடையுமே யல்லாமல் நோய் நீங்காது, சீரிய— பலனளிப்பதில் சிறந்த, வெள்ளி— வெள்ளிக்கிழமையில் (மருந்து கொடுத்தால்), நோய் ஆம்— ஏற்கனவே இருக்கிற நோயுடன் இன்னும் சில நோய்கள் உண்டாவனவாம், பாரினில் — இவ்வுலகத்தில், உள்ளபேர்க்கு— நோயால் வருந்தியுள்ளவர்களுக்கு, பரிகாரஞ் செய்ய வேண்டில்— மருத்துவஞ் செய்து நோய்களை நீக்க வேண்டுமானால், செவ்வாய் வியாழம் அருக்கன் நாள்— செவ்வாய்க் கிழமை, வியாழக் கிழமை, ஞாயிற்றுக்கிழமை என்னும் இந்நாட்களில், மருந்து செய் மருந்து கொடுப்பாயாக, அவ்வாறாய விதியைக்கைக்கொண்டால், பிணி— நோய்கள், ஆரியன் அருளினால் தீரும்— மருத்துவாசிரியனுடைய திருவருளால் தீர்வனவாம்.

மருத்துவம் பார்க்கும் நாள்

(சாந்திரமான விதி.)

" உடுவரையன் மேதை பொனன்
உசனன்பின்வுதிரன் உதயனவன்
உதவுபொருள் உருவாகுமெழில்
உத்தம மத்திமம் உற்றறி கஷ்டமில்
உற்றது மிற்றதும் உற்பன மிற்றே." (தே. கரிசல்.)

(கருத்துரை) இச்செய்யுள் நோயாளிக்கு மருத்துவஞ் செய்ய வேண்டிய நாட்களைக் கூறுகின்றது.

(பதவுரை) உடு— நட்சத்திரங்களுக்கு, அரையன்— அரசனான சந்திரன் நாளாகிய திங்கட்கிழமை, உத்தமம்— மருத்துவம் பார்ப் பதற்கு உத்தமமான நாளாகும், மேதை— புதன் கிழமை, மத்திம மான நாளாகும், பொன்னன்— வியாழக்கிழமை (அதமமான நாளா கும்), உசனன்— வெள்ளிக்கிழமை (அதமாதம நாளாம்), உதிரன் — செவ்வாய்க்கிழமையும் அதிலும் தாழ்ந்த நாளாம், உதயன்— ஞாயிற்றுக் கிழமையும், அவன்— சனிக்கிழமையும் ஆகாத நாட்க ளாம், (ஆகையால்) உற்றதும்— மருந்து கொடுத்தால் தீரும் நாள் களையும் இற்றதும்— தீரா நாள்களையும், உற்று அறி— ஆராய்ந் தறிவாய், (அவ்வாறு அறிதல்) கஷ்டம் இல்—பின்னர் வருத்தப் படாமைக்கு வழியாகும், ஆதலால் அதை நன்றாயறிந்த பிறகு) பொருள் உதவு—உயர்ந்த மருந்தைக்கொடு, (அவ்வாறு கொடுத் தால்) உரு— உடம்பு, எழில் ஆகும்— நோய் நீங்குவதால் அழகைப் பெறும், உற்பனம் இற்றே (நோய்களை நீக்குவதற்கு) உண்மையான வழி இதுவே யாகும் என்று தேரர் தாம் செய்தரு ளிய மகா கரிசலில் சொல்லுகிறார்.

ஈண்டுக் கூறப்பட்ட இவ்விதி, சாந்திரமானக் கொள்கையுடை யவர்களாகிய வட நாட்டார் கையாள்வதாகும்.

குறிப்பு.— சாந்திரமானக் கொள்கை அமாவாசைக்கு மறு நாளான பிரதமைத் திதியை மாதப் பிறப்பாகக் கொள்ளுதல். இவ்வாறே மாதப் பிறப்பைப் பௌர்ணமி முதலாய்க்கொள்ப வரும், மூன்றாம் பிறையை முதலாகக் கொள்பவரும் உளர்.

— — —

XVIII. பரிகார முறைகள்

தமிழ் மருத்துவ நூல் வழியாய் நாம் அறியக்கிடக்கும் மருத்துவமுறை மூவகைப்படும். அவை தேவ மருத்துவம், மானிட மருத்துவம், நிசாசர மருத்துவம் ஆகும்.

1. தேவ மருத்துவம் : இது, மருந்து முறைகளின் உயர்வை நோக்கி இப்பெயர் பெற்றது ; இஃது இரச கந்தகபாடாணம்; உப்பு, உலோகவகைகளாற் செய்யப்பட்ட சுண்ணம், பற்பம், செந்தூரம், களங்கு, கட்டு மாத்திரை, மெழுகு முதலிய உயர்ந்த மருந்துகளைக் கொண்டு செய்யும் சிகிச்சைகளாகும்.

2. மானிட மருத்துவம் : அஃதாவது இந்நிலவுலகில் வாழும் மக்கட்குச் செய்யும் மருத்துவம். இதுவும் மேற்கூறியது போலவே மருந்து முறைகளின் பெயர்களைக் கொண்டு இப்பெயர் பெற்றது. இது தாவரங்களைக் கொண்டு செய்யப்பட்ட குடிநீர், சூரணம், சுரசம், பிட்டு, வடகம், இளகம், மணப்பாகு, மாத்திரை முதலியவைகளைக் கொண்டு செய்யும் பரிகாரங்களாகும்.

3. நிசாசர மருத்துவம் : இதுவும் மருத்துவ முறைகளின் வகைகளைக் கொண்டிப் பெயர் பெற்றது. அதாவது மேற்கூறப்பட்ட முறைகளால் தீரா நோய்களை, அறுவை, கீறல், கட்டிகை, அட்டைவிடல், குருதிவாங்கல், சலாகை, கொம்புகட்டல் முதலிய வகைகளால் பிணிகளைக் குணப்படுத்துவதாகும்.

'' வேர் பாரு தழை பாரு மிஞ்சினக்கால் மெல்ல மெல்ல பற்ப செந்தூரம் பாரு '' என்றவாறு மூலிகைகளால் செய்யப்பட்ட மருந்துகளால் தீராத பிணிகளைப் பற்ப செந்தூரங்களால் தீர்க்க வேண்டும்.

இவ்விருவகை மருத்துவ முறைகளால் நீங்கா நோய்களை, அறுவை அக்னி, காரம் இவைகளைக் கொண்டு நீக்குதல் வேண்டும் என்பது புலனாகின்றது.

இதனை,

'' சூதகந்தி தாதுபற்பம் சொன்னநாட் டார்சிகிச்சை
ஓதரிய மூலியிம்மண் ணூர்சிகிச்சை—வேதடரும்
சத்திர க்ஷா ராக்கினிநி சாசரச்சி கிச்சையென்றே
முத்தரத்த தாகும் மொழி ''.

(தேரையர்)

என்னும் மேற்கோள் பாவாலறியவும்.

பிணிகளை வகுக்கும் முறை

1. நோய் உண்டாகும் காரணத்தைக் கொண்டு வகுத்தல்

உதாரணம்.—(வாதநோய்) வளிநோய், தீநோய் (பித்தநோய்) ஐயநோய் (கபநோய்) என்பன.

2.நோயில் காணும் குறி குணங்களையும், நோயினால் தாக்கப்பட்ட உடற் கட்டுகளின் (தாதுக்களின்) நிறையையும் ஒட்டி வகுத்தல் :

உதாரணம்: வெப்பு, காய்ச்சல், (சுரம்), செரியாமை (அசீரணம்), அதிசாரம், காசம், சுவாசம், குன்மம், இடப்பாட்டீரல் விருத்தி (பிலீகம்), வலப்பாட்டீரல் பெருக்கம், தோலையொட்டிய நோய்கள் முதலியன.

3. நோயின் பரிகார வழிநோக்கி வகுத்தல் :

இவற்றை,

1. பேதிக்கு உரிய நோய்கள்.
2. வாந்திக்கு உரிய நோய்கள்.
3. பட்டினிக்குரிய நோய்கள்.
4. ஆவி பிடித்தற்கேற்ற நோய்கள்.
5. எண்ணெய் முழுக்கால் குணப்படும் பிணிகள்.
6. உடலை மர்த்தனம் (தொக்கணம்) செய்து பிடித்தால் தீரும் நோய்கள்.
7. வெயிலில் உடலைக் காயவைத்து குணப்படுத்தத் தகுதியுடைய பிணிகள்.
8. இரத்தத்தை வெளிப்படுத்துவதால் நீங்கும் பிணிகள் என்றும், இவைகளையன்றிப் பச்சிலை மூலிகைகளினால் நீங்கும் நோய்கள் என்றும்,

பச்சிலை மூலிகைகளினாலும் சில உபரசங்களினாலும் தீரும் பிணிகள் என்றும்,

தாதுப் பொருள்களினால் சிறப்பாகப் போகும் பிணிகள் என்றும் பிரிக்கலாம்.

உள் மருந்துகளாகிய தாது, தாவரசங்கமப் பொருளாகிய மருந்துகளால், முறையே தேவ மானிடப் பரிகாரங்களால் தீராப் பிணிகள், நிசாசர அதாவது அசுர மருத்துவமாகிய அறுவை, காரம், சுட்டிகை முதலியவைகளால் தீரும் நோய்கள் என்றும் வகுக்கலாம்.

அவற்றுள் ஈண்டுப் பேதிக்குரிய நோய்களும், அவற்றிற்காம் மருந்துகளும் ,அதைப் பயன்படுத்தும் காலம், அளவு முதலியவைகளு ம்முதலில் கூறப்படும்.

பேதி உறை கொள்ளத் தகும் தகாக் காலங்கள்

ஆனி, ஆடி, மாதங்களாகிய முதுவேனிற் காலத்திலே பேதியாகும் குடிநீர்களையும், கற்கங்களையும். எண்ணெய்களையும் கொடுக்கவேண்டும்.

1. குடி நீர் செய்வதற்காகும் மருந்துகள்

சிவதை, ரோஜாமொட்டு (பன்னீர்ப் பூ), கடுக்காய்த் தோல், சோம்பு, சூரத்து நிலாவாரை, கடுகுரோகணி, சரக்கொன்றைப் புளி, சீமை சாமந்திப்பூ, கொட்டைத் திராட்சைப் பழம், உலர்ந்த அத்திப் பழம் முதலியன.

இவற்றுள் நோயினர் வயதிற்கும் வன்மைக்கும் தக்கவாறு பொருள்களையும் அளவையும் வகுத்துக் குடிநீர் செய்து கொடுக்கலாம்.

2. கற்கங்களாய்ச் செய்தல்

ஆமணக்கு வேர்ப்பட்டையை, யானைக்கால் நோய்க்கு, அரைத்துக் கற்கமாய்ச் செய்து சுண்டைக்காய் முதல் கழற்சிக்காய் வரை கொடுக்கலாம். அதிகமாய்ப் பேதியாகும்.

பத்தியம் : பால், மோர், வெந்நீர் சாதம்.

பூவரசன் வேர்ப்பட்டையைப் பசுவின் பால் விட்டு இடித்துப் பிழிந்து குடிக்கப் பேதியுடன் வாந்தியும் ஆகும். இது சர்ம நோய்களுக்கு நல்லது.

பத்தியம் : பால் சாதமட்டுமே உண்ணலாம். உப்பை நீக்கவும்

அளவு : பட்டை, ஒரு பலம் பால் கால் ஆழாக்கு.

வெள்ளைக் காக்கட்டான் வேரின் உட்பட்டையை பழரசம் விட்டு அரைத்து, கொட்டைப் பாக்களவு காலையில் மட்டும் மோரில் கலந்து கொடுக்க வாந்தியும் பேதியும் ஆகும். இதை மூன்று நாட்களுக்கு மேல் கொடுக்கக் கூடாது. இது யானைக் காலுக்கு நல்லது.

பத்தியம் : பால் சாதம், மோர்ச் சாதம்.

எண்ணெய்கள்

1. வெள்ளெண்ணெய்—பூரம், சிற்றாமணக்கெண்ணெய்.

2. வாத நாசத் தைலம்—வாதநாராயண இலை ரசம், சிற்றாமணக்கு நெய், பூரம்.

3. கழற்சி எண்ணெய்—கழற்கொடி வேர்ப்பட்டை, கழற்சி இலை, கழற் கொட்டைப் பருப்பு, பூரம், வாளம், ஆமணக்கு நெய்.

4. மெருகன் கிழங்கெண்ணெய்—மெருகன் கிழங்கு, பூண்டு, சிற்றாமணக்கு நெய்.

5. மேகநாத எண்ணெய்—வெங்காய ரசம், கற்றாழை ரசம், மருதம்பட்டை ரசம், வெள்ளறுகுரசம், பழரசம், பிரம்மதண்டின் ரசம், பூரம், சிலாசத்து பற்பம், கல்நாறு பற்பம், சிற்றாமணக்கு நெய்.

6. இரசத்தைலம்—கருப்பு வெற்றிலைக் கற்கம், கோவை யிலைக் கற்கம், பாவட்டையிலைக்கற்கம் ஆமணக்கு நெய், ரசம்.

ஆவணி, புரட்டாசி மாதங்களாகிய கார் காலத்திலும், மார்கழி, தை மாதங்களாகிய முன்பனி காலத்திலும், மாசி, பங்குனி மாதங்களாகிய பின்பனி காலத்திலும் முற்கூறிய மூவகைப் பேதி உறைகளையும் கொடுக்கலாகா. ஆனால், மேற்கண்ட பருவங்களில் வாளம், பற்பலவகை கள்ளிப் பால், பாதரசம், உப்பு இவைகளின் கூட்டுறவினால் செய்யப்பட்ட பேதி உறைகளைக் கொடுக்க நன்மை தரும்.

வாளம் சேர்ந்த மருந்துகள்

1. மேகநாதக் குளிகை, 2. இலவங்காதி மாத்திரை, 3. அஷ்ட பைரவம், 4. தாழம்பூ மாத்திரை, 5. சூலை பூபதி, 6. பூர மாத்திரை, 7. முருக்கம் விதை மாத்திரை, 8. விரேசனபூபதி, 9. ஜலோதாரிமணி, 10. காக்கண மாத்திரை, 11. அகத்தியர் குழம்பு, 12. கௌசிகர் குழம்பு.

கள்ளிப்பால் சேரும் மருந்து

சித்தாதித் தைலம் (சில்லரைக் கோவை).

உப்பு சேர்ந்த மருந்துகள்

1. நவ உப்பு மெழுகு, 2. நவாச்சாரக் குழம்பு, 3. நாயுருவி உப்பாதிக்குழம்பு

நோய்களும் சிகிச்சைகளும்

வாதநோய்கள் :—1. பக்க வாதம்.

2. அருண வாதம்.

3. சர்வாங்க வாதம்.

அகத்தியர் குழம்பு குன்றி அளவு, கௌசிகர் குழம்பு குன்றியளவு, மேகநாதக் குளிகை 1 முதல் 2, வெள்ளை எண்ணெய், வாத நாசத் தயிலம் இவை முதலிய எண்ணெய்களை நோயின் வன்மைக்கும், பிணியாளனுடைய வன்மைக்கும், கால வய்து இவைகட்கும் தக்கவாறு வழங்கவேண்டும். 1/4, 1/2, 3/4, 1 அவுன்ஸ் வரையில் வழங்கலாம்.

கீல் வாதம்.—மெருகன் கிழங்கு எண்ணெய் 1/2 முதல் 1 அவுன்ஸ் தரவும். வாதநாசத் தைலமும், வெள்ளெண்ணெயுமவ் வாறே.

அண்ட வாதம் :—கழற்சி எண்ணெய் $\frac{1}{4}$ அவுன்ஸ்.

நரம்பு வாதம், தோள் வாதம், இடுப்பு வாதம்.—வெள்ளெண்ணெய், வாதநாசத் தைலம்.

குன்மநோய், வாத குன்மம்.—வெள்ளெண்ணெய், வாதநாசத் தைலம்.

பித்த சம்பந்தமானவைகளில்.—வல்லாரைக் கிருதம், வெள்ளெண்ணெய், மேகநாதத் தயிலம்.

சுரங்களில் மலக்கட்டிருப்பின், ஆரம்ப நிலையில், அஷ்டபயிரவம் 1 முதல் 2 மேகநாதக் குளிகை, இலவங்காதி மாத்திரை இவைகளையுங் கொடுக்கலாம்.

குடிநீர்கள் மலக்கட்டைத் தவிர்ப்பதுடன், காய்ச்சலையும் தணிக்கும்.

தாழம்பூ மாத்திரை.—சிறப்பாய் யானைக்கால் சுரத்தில், மலக்கட்டைத் தவிர்த்தல். வெப்பைக் குறைத்தல் ஆகியவற்றைச் செய்யும்.

சோகை.—பாண்டு —வெள்ளெண்ணெய், மேகநாதத் தயிலம்

நோய்கள்	மருந்துகள்
(மகோதரம்) பெருவயிறு—	
சூலை	
அண்டவாதம் முடக்குவாதம் நீர்க்கோவை வலிகுன்மம் நரம்பு வாதம் சூதக வாயு பாரிச வாயு	நவ உப்பு மெழுகு, அளவு—மிளகளவு. வெந்நீர் சாதம்.

நோய்கள்	மருந்துகள்
நீர்க்கட்டு மலக்கட்டு பெருவயிறு ஈரல் கட்டி மகோதரம்—பெரு வயிறு, நீராம்பல்	நவாச்சாரக் குழம்பு, அளவு— குன்றி எடை.
குன்மங்கள் வாத நோய்கள் பெரு வயிறு வலப்பாட்டீரல் | பெருக் இடப்பாட்டீரல் | கம்.	நாயுருவி உப்பாதிக் குழம்பு, அளவு— குன்றி எடை.
சூலை கவிசை தலையில் உண்டாம் இடி சூலை முதலியன. நீராம்பல் கல்லடைப்பு நிர்மலக்கட்டு சொறி—விரணம் கிரந்தி நாவாதம் ஊது வாய்வு குன்மம், விக்கல் அரையாப்பு பொருமல் பறங்கிப்புண் வலிப்பு புழுவெட்டு சூதக வாயு	சித்தாதி எண்ணெய், அளவு 1, 2, 5, 10 துளிகள்.
வெள்ளை (சீழ்மேகம்) வயிற்றுப் புண் நீர்க்கட்டு, நீரடைப்பு நீர் எரிவு, பித்தக் கை, கால் எரிவு. மலக்கட்டு வெட்டையால் உண்டான கீல்வாயு.	மேகநாதத் தைலம், அளவு—1/2 முதல் 1 அவுன்ஸ்.
வெள்ளை அரையாப்பு கிரந்தி இரணம் குஷ்டம் சர்மநோய்கள் வெடிப்புண்ணினம் கரும்புள்ளி கண்டமாலை	இரசத்தைலம்— அளவு 1/4 பலம், உப்பில்லாப் பத்தியம், வெந்நீர் சாதம்.

சூலை	சூலை பூபதி குன்றி அளவுகுளிகை.
குழந்தைகட்குண்டாம் மாந்தம் மாந்தசுரம் கிருமி மந்தம் சீதக்கட்டு வயிற்றுப்பிசம்	பூர மாத்திரை அளவு : கொத்தமல்லி யளவு குளிகை, துணை மருந்து தகுந்த குடி நீரில். முருக்கன் விரை மாத்திரை அளவு குன்றிமணி துணைமருந்து— பனை வெல்லம் இளநீர் நெய், பால், சீனி.
குழவிகட்குண்டாம் ஊதுமாந்தம்	காக்கண மாத்திரை அளவு : பயறளவு, துணைமருந்து சுக்குக் குடிநீர்.
பொருமல் வாதம்	விரேசன பூபதி அளவு : பாசிப்பய றளவு—குளிகை.
மாந்தம்	மாந்த எண்ணெய் அளவு : 1/4 முதல் 1/2 அவுன்ஸ்.
குடல்வாயு சுரம் வாயு மலசலக்கட்டு பெருவயிறு வண்டுக்கடி பூச்சிக்கடி குரங்குக்கடி காணாக்கடி விஷக்கடி	இலவம் விதை அளவு : மாத்திரை சலோதாரிமணி. அகத்தியர், கெளசிகர் குழம்பு, அளவு குன்றி அளவு தக்க துணை மருந்தில்.
விஷதோஷங்கள்	அஷடபயிரவம், லவங்கப்பூக்குடி நீர்.
பாம்புக்கடி பூரான்கடி காணாக்கடி பூச்சிக்கடி	சஞ்சீவி மாத்திரை, தேசிப்பழச்சாறு.
காசம்	வெள்ளெண்ணெய், மேகநாதக் குளிகை.
சுவாசகாசம்	மாந்த எண்ணெய் 1 தேக்கரண்டியளவு, தேன் 1, சிற்றாமணக்கு நெய் 3 வெதுப்பிக் கொடுக்கவும்.
காமாலை	பூரம் சேர்ந்த மருந்து, வெள்ளெண்ணெய், உப்பு சேர்ந்த மருந்து, சிவதைவேர்க் குடிநீர், மேகநாதக் குளிகை.

II. வாந்தி பரிகாரத்திற்குரிய பிணிகள்

கபநோயைச் சார்ந்த கபவாதசுரம், காசம், சுவாசகாசம் ஆகியவைகளிலும், குன்ம நோயிலும் வாந்தி செய்விக்கலாம் என்று நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன.

வாந்தி உண்டாகக்கூடிய பொருள்கள்

மருக்காரைக்காய், கடுகு, படிகாரம், நவாச்சாரம், பால்துத்தம், உப்பு, மயில்துத்தம், பேய்ச்சுரை, பேய்க்குமட்டி, பேய்ப்பீர்க்குப் போன்ற சரக்குகளை வாந்திக்குப் பயன்படுத்தலாம். இவைகளைக் குடிநீர் செய்தும், அப்படியே தண்ணீரில் கரைத்தும், சுடுதண்ணீர்ல் கரைத்தும், நோயாளியின் வன்மை, வயது, காலம் இவைகளுக்கேற்பப் பயன்படுத்த வேண்டும்.

சிறப்பாய்க் கபவாத சுரம், காசம், சுவாசம் இப்படிப்பட்ட பிணிகளில் நுரையீரலில் கெட்டியாய்க் கரையாமல் இருக்கிற சளியைக் கரைத்து வெளிப்படுத்த வழக்கமாக ஆடாதோடை, துளசி, கரிசாலை, முசுமுசுக்கை, கஞ்சாங்கோரை, வேலிப்பருத்தி இவை போன்றவைகளுள் ஒன்றையோ, இரண்டையோ, மூன்றையோ சேர்த்துச் சாறெடுத்து, சுரசமாக்கியோ, புட்டவியல் செய்தோ நோயின் வன்மைக்கும், நோயாளியின் வன்மைக்கும், வயதுக்கும், தக்கவாறு 1/4, 1/2, 1 அவுன்ஸ் அளவில் தேன் சேர்த்துக் கொடுக்க வேண்டும். அது சளியைக் கரைத்து வெளிப்படுத்துவதுடன், அதிக அளவில் கொடுக்க வாந்தியை உண்டு பண்ணிச் சுகத்தைத் தரும். முக்கியமாய்க் குழந்தைகளுக்கு அது வாந்தியினாற் காற்றுக் குழாயிலுள்ள சளியை வெளிப்படுத்தும். இன்னும் வாளஞ் சேர்ந்த மாத்திரைகள், எண்ணெய்கள் இவற்றைக் கொடுக்க, குழந்தைகள் வாந்தி செய்து சளியை வெளிப்படுத்தும் ; பேதியும் ஆகும்.

மேலும், மேற்படி மூலிகைகளுடன், திப்பிலி, அதிமதுரம், தாளீசபத்திரி, சிற்றரத்தை இவைகளையும் அளவுப்படி கொடுக்க மேற்படி பயனை அளிக்கும்.

விஷப் பொருள்களை உண்டு விட்டால், அதை வெளியாக்க உப்பைக் கரைத்துக் குடிக்கச் செய்து வாந்தி பண்ணுமாறு செய்வதுண்டு.

மயில் துத்தம் வாந்தியை உண்டு பண்ணும் இயல்புடையது எனக் கூறியிருப்பினும், அதைப் பயன்படுத்துவது அத்துணைச் சிறப்புடையதன்று. அத்தகைய சிகிச்சை இராட்க்ஷஸ சிகிச்சையென்றே கருத வேண்டும். மேலும் மயில்துத்தம் விஷப் பொருளிலொன்று.

பித்த வாதத்தினால் ஏற்பட்ட குன்ம நோயில் வாந்தி செய்விக்கலாமென்று கூறியிருப்பினும் அப்படிப்பட்ட பரிகாரங்களை நம்முடைய அனுபவத்தின்மேல் கவனமாகச் செய்யவேண்டும். அவற்றை யெல்லாம் நூலளவாகச் சொல்லி வைப்பதில் பயனில்லை என்று விடுக்கவும்.

மேற் கூறப்பட்ட வாந்தி செய்விக்கும் பொருள்களின் முறைகள் வந்துழிக் கண்டுகொள்க ; வல்லோர்வாய்க் கேட்டுணர்க.

யார்யாருக்கு வாந்தி பரிகாரம் கூடாது : இரத்த வாந்தி செய்பவர்கள், கருவுற்றவர்கள், அடிதள்ளல் (குதப்பிரம்ஸம்), குடல்வாயு முதலிய பிணிகளில் வாந்தி சிகிச்சையைக் கையாளக் கூடாது.

விஷம் உண்டவர்களுக்குப் பால்துத்தத்தை 3 முதல் 5 குன்றி வரை தண்ணீரில் கரைத்துக் கொடுக்க, வாந்தி உண்டாகி வயிற்றிலுள்ள விஷத்தை வெளிப்படுத்தும்.

மயக்கத்தைத் தரத்தக்க கஞ்சா, அபினி முதலியவைகளால் ஏற்படும் விஷத்திற்கு 1/4 பலம் கடுகுப் பொடியை 1 ஆழாக்கு வெந்நீரில் கலந்து கொடுக்க, வாந்தியை உண்டாக்கி விஷத்தை வெளிப்படுத்தும்.

III. பட்டினிக்குறியநோய்கள்

'' லங்கணம் பரம் அவுஷதம் ''

'' லகு அன்னம் பரம அவுஷதம் '' என்பன பழமொழிகள்.

சுரம் : சுரப்பிணியிற்றான் பட்டினியைப் பெரும்பாலும் கையாள்வதுண்டு.

சுரம் உண்டாவதற்கு ஆமாசயத்துண்டாம் கோளாறே முதற் காரணமெனக் கூறியிருத்தலால், அதை முதலில் நீக்க முயல வேண்டும். அதை நீக்குவதற்கு வழி, 1. பட்டினி, 2. பேதி, 3. வாந்தி ஆகியவைகளாகும். இவற்றுள் பட்டினியைப் பற்றி ஈண்டுக் கூறப்படும்.

நோய்கட் கேற்பப் பட்டினியின் நாளளவை விதிக்கப்பட்டுள்ளது.

'' வாத சுரத்துக் கோது நாளேழும்
பித்த சுரத்துக் குற்ற நாளாறும்
சேத்தும சுரத்துக் கேற்ற தொன்பதுநாள்
தொந்த சுரத்துக் கையந்தி ரண்டேநாள்
பட்டினி வைக்கப் பணியுஞ் சுரங்கள்
அவைவி டாதெனி லௌடதங் கொடுத்துக்
கஞ்சியுங் கொடுக்கக் கடுஞ்சுரம் விடுமே.''

(பொ-ள்) வாத சுரத்திற் கேழுநாள், பித்த சுரத்திற் காறுநாள், சேத்தும சுரத்திற் கொன்பது நாள், தொந்த சுரத்திற்குப் பத்து நாட்களாக பட்டினியிருக்கச் செய்ய, சுரவேகந்தணியும். தணியாவிடில், மருந்துகளைச் செலுத்திக் கஞ்சி போன்ற நீருணவைக் கொடுத்துவர, வெஞ்சுரங்களும் நீங்குமென்பதாம்.

வாத சுரமுள்ளவருக்கு மூன்று நாட்கள் பட்டினியும், பித்த சுரத்தோர்க்குக் குடிநீரும், சிறு உணவும், கபசுரத்தோர்க்கு மருந்தும், கஞ்சியும் கொடுத்துவர அவைகள் நீங்குமென்பது சிலர் கருத்து.

'' துன்னு மாதந்தர மென்னு மிலங்கணம்
உரைத்திடு வாத சுரத்துக்கு மூன்றுநாள்
பட்டினி யிருக்க விட்டிடுங் காய்ச்சல்
எத்தனை யாகிலும் பித்த சுரத்துக்குக்
கஷாயம் போசனம் இலகுவா யளிக்கச்
சேத்தும சுரத்துக் காதியே கஞ்சி
கொடுத்து மருந்து மிடத்தெளி வாகும்.''

இலங்கண விதி வேறு

'' வாதசுர மேழுநாள் வன்பித்த மாறுநாள்
சீதசுர மொன்பதுநாள் செப்பிடுக—ஓதிடினோ
சந்நிக்கு மூன்றுநாள் சந்நிசுரம் பன்மூன்றாம்
என்னிதுபோ லேநளிர்க்கு மெண்.''

(பொ-ள்) வாத வெப்புக்கு ஏழுநாள், வன்மையாகிய பித்த வெப்புக்கு ஆறு நாள், சீதக்காய்ச்சலுக்கு ஒன்பது நாள், சந்நிக்கு மூன்று நாள், சந்நிசுரத்திற்கும், நளிர்ச்சுரத்திற்கும் பதின்மூன்று நாள் பத்தியம் வைக்க மேற்கண்ட வெப்புகள் தீருமென்பதாம்.

வெப்ப பிணிக்குப் பத்திய கால விதி

'' சூமுற் றவருக் கருளும் பத்தியம்
கொடுக்குங் கால மெடுத்துரை செய்யின்
வாத சுரத்திற் கோதுவீ ரொன்பது
நாழிகை யளவின் வாழியென் றளிக்க
பித்தவெப் பிற்குப் பத்துநா ழிகையே
சேத்தும சுரமெனின் ஏற்றமத் தியானம்
ஆமென வைத்தியர் தாமுரைத் தனரே.''

வெப்புடையவர்கட்குப் பத்தியம் கொடுக்கும்பொழுதைச் சொல்லப்புகின், வளிவெப்புடையோர்க்கு ஒன்பது நாழிகைக் குள்ளும், பித்த காய்ச்சலுடையோர்க்குப் பத்து நாழிகைக்குள்ளும் ஐயவெப்பினருக்குப் பன்னிரண்டு நாழிகைக்குள்ளும் அந்தந்த நோயாளருக் கேற்றவாறு சிறுவுணவைக் கொடுத்தற்றகுதி யென்பது மருத்துவ நூல் வல்லோர் கூற்றாம்.

மூன்று நாள் பட்டினியின் முறை

சுரம் கடுமையோடு தோன்றிய அன்றைக்குப் பட்டினியிருந்து, மறுநாட் காலையில் பற்களை நன்றாய் விளக்கி நாவிற் படிந்துள்ள மாசுகளை வழித்து நீக்கி வெந்நீரால் வாய் கொப்பளித்த பிறகு, முகத்தைக் கழுவித் தலையுட்பட உடல் முற்றும் துணியால் மூடி மறைத்து, படுக்கையில் இடக்கையைக் கீழ் வைத்துப் படுக்குமாறு செய்யவும். இவ்வாறாகவே மூன்று நாட்கள் கழிந்த பின்னர், நான்காம் நாட் காலை காய்ந்த வெந்நீரைப் பருகித் தேற்றான் கொட்டை யொன்றை அருந்தும்படி செய்விக்க, எந்தச் சுர தோஷங்களும் நீங்குமென்று முன்னோர் கூறினர், இதனை,

> "மட்டில்லா சுரம் வந்தவன் றைக்குப்
> பட்டினி யிருந்து பகரிரண் டாநாள்
> காலமே பல்லை யேலவே விளக்கி
> நாக்கு வழித்துத் தாக்குவெந் நீரால்
> கொப்ப ளித்தபின் குளிர்முகங் கழுவி
> மெய்யுடன் றலைக்கு வேட்டியைச் சுற்றி
> இடக்கை கீழாகப் படுக்கவுஞ் செய்து
> வாஞ்சையாய் மூன்றுப வாசஞ் செய்தபின்
> காய்ஞ்சவெந் நீரைக் கருதியே பருகிச்
> சீற்றாங் கொட்டையைப் போற்றியொன் றருந்திடின்
> எந்தச் சுரதோஷங்களும் போமென்
> றிந்தத் தரணியி லிசைத்தனர் முன்னோர்."

மேற் கூறியவாறு இலங்கணம் செய்விக்க, சுரத்திற்கு முதற் காரணமாயிருந்த ஆமாசயக் குற்றங்கள் நீங்கி, சுரம் தணியுமென நூற்களிற் கூறியிருப்பினும், சித்தர்களிற் சிறந்தவரான தேரர் பட்டினி முறையைக் கீழ்க்காணுமாறு குறை கூறியுள்ளார்.

> "லங்கண மென்பது போட்டுப்—பொல்லா
> நாணய மில்லா மாட்டுப்
> பங்க வைத்தியர் கூட்டு—நகைப்
> பாரே மருத்துவர் கேட்டு."

இவ்வாறு இகழ்ந்து கூறியது எதற்கோவெனின், தென்னாட்டு மக்களின் உணவு வகை விரைவில் சீரணிக்கக் கூடியதும், அறிவைப் பெருக்கி உயிருடன் கூடிய உடலை நிலைத்திருக்கச் செய்வதுமாம். ஆதலின், இவ்வாறான உணவு முறையை அனுசரிக்கும் மக்கட்கு ஏழு நாள் முதல் பத்து நாள் வரை பட்டினி முறையைக் கையாளின், உடற்கு கெடுதியை விளைவிக்குமேயன்றி நன்மை பயவாதென்பதை அறிவித்தற்கே தேரர் இங்ஙனம் இயம்புகிறார். ஆனால், சுரமுற்ற காலத்தும், சுரமில்லாத காலத்து உண்டபடியே உணவருந்தலாம் என்பது தேரர் கருத்தன்று; சுரப்பிணியில் சுரத்தின் வன்மைக்குத் தக்கவாறு உணவை அளவிடல் வேண்டும் என்பது அவர் கொள்கை; இக் கருத்தைக் கொண்டே,

" ஆமே யேழு நாளளவும்
அசனந் தொடாதே பட்டினியாய்த்
தோமே கஞ்சி தண்ணீரும்
சொன்னபடியே தானதுவும்
ஆமே யேழு நாள் கழிந்தால்
அழன்றே வந்த சுரமதுவும்
போமே யேழு நாள் கழிந்தால்
பொருந்து மசனங் கொடுப்பதுவே.''

எனக் கூறியதால்,

வாத சுரத்துக்குப் பேர்உணவு கொடாமல் சிற்றுணவு கொடுக்க வேண்டுமென்பதும், ஏழுநாள் சென்றபின் பொருந்திய விதமாக உணவு கொடுக்கலாம் என்பதும் பெறப்படுகின்றன.

சுரம் நீங்குமட்டும் சோறு காட்டப்படாது என்பது திருமூலர் கொள்கை என்பது,

'' உற்ற சுரத்துக்கும் உறுதியாம் வாய்வுக்கும்
அற்றே வருமட்டும் அன்னத்தைக் காட்டாதே.''

என்னும் அடிகளாலும் அறியலாம்.

ஈதன்றியும், '' சிறு உணவு பெரு மருந்து '' என்ற மருத்துவப் பழமொழியாலும், சுரம் நீங்கும்வரை சோறு முதலிய பெரு உணவின்றிக் கஞ்சி கொடுத்து வரலே சிறப்பாகுமென்பதை அறியலாம்.

அளவு கடந்த பட்டினியால் ஏற்படும் துன்பங்கள்

அளவிற்கு மிஞ்சிய பட்டினியால்,

உடலின் வன்மை குன்றும், உடல் வறளும், சோம்பல், வாய் குமட்டல், களைப்பு, தூக்கம், மயக்கம், தாகம், வாந்தி, இருமல், கடினமூச்சு, விக்கல், அதிசுரம் இவைகள் உண்டாம். ஆதலின் உடலை இளைக்கச் செய்யும் சுரங்களிலும், சுரத்துக்கு முன் வேறு நோய்களால் மெலிந்த நிலையிலும், காதல், சினம், வருத்தம், பயம் போன்ற காரணங்களால் தோன்றும் சுரங்களிலும் பட்டினி னியை யறவே நீக்க வேண்டும்.

லங்கண பத்தியம்

" நாடி யறியானி லங்கண பத்தியமோர்
நாடி யறியானி நாளையஞ்சு—நாடி
யபத்திய மற்ற தறிந்திலவங் காதி
யபத்திய மற்றதறி யாய்.''

(தே.ய.)

விளக்கம் : நாடி நிதானந் தெரியாமல் லங்கணம் வைத்தாற் கெடுதியுண்டாம். ஆதலால், நாடி நிதானம் முதலில் அறிய வேண்டும். அதன்பின் லங்கண விதி இன்னதென்று தெரிந்து கொள்ளவேண்டும். அதன் பின் அப்பிணியாளி வசிக்கும் நாட்டின் சுபாவத்தையும் அவன் உடல் நிலையையும் தெரிந்து கொள்ள வேண்டும். அப்பால் லங்கணம் வைக்கின்ற நாட்கள் இருபத் தைந்துக்கு மேலில்லையெனத் தீர்மானித்தல் வேண்டும். அந் நாட்களுக்குள் ஒரு நாள் உத்தமம், ஐந்து நாள் மத்திமம், பத்து நாள் அதமம், பதினைந்து நாள் அதமாதமம், இருபது நாள் அநீதம், இருப்பத்தைந்து நாள் அநீதாநீதம் என்பதையுமறிய வேண்டும். பிறகு அப்பிணியாளிக்குச் சீரணிக்கக் கூடியதும், பத்தியமுமான பதார்த்தங்கள் இவையென்றும் தெளியவேண்டும். தன் பின் இலவங்கம், திப்பிலி, தினை, சாமை, கேழ்வரகு, ரகு, அரிசி, இத்தகைய பொருள்களைச் சந்தர்ப்பத்திற்கேற்ற படி உப்பு, புளி, கடுகு, கொள் முதலிய பத்தியமில்லாத பொருள் களை நீக்கிக் கொடுக்கவேண்டுமென்பதே இச்செய்யுளின் விரிந்த பொருளாகும்.

பட்டினி இன்னாருக்கு ஆகாதெனல்

" அதிசா ரப்பிணி யாகிய பேர்க்கும்
முதிர்கர்ப் பமதா மொய்குழ லார்க்கும்
திருத்த மான விருத்தர் தமக்கும்
தழைத்தருள் செல்வக் குழந்தை களுக்கும்
இளைத்த சரீர மிளைத்த வருக்கும்
நேத்திர வியாதிக் கார ருக்கும்
பொருகய ரோகம் பொருந்தி னருக்கும்
கிராணிக் கழிச்சலிற் கீழ்ப்பட்ட வர்க்கும்
பித்த ரோகம் பிறந்த வர்க்கும்
மெய்த்தவ மான விரதி யருக்கும்
தொந்த ரோகத்தில் நொந்த வருக்கும்
மாணிபங் கெடுமது பானி களுக்கும்
வெகுபெண் போகம் விரும்பி னருக்கும்
மனத்தில் வருத்த மான வருக்கும்
இனிமை யில்லாத முனிவுள வர்க்கும்
கிடவுட் காய்ச்ச லுள்ள வருக்கும்
இலங்கிய கரிபரி யேறு மவர்க்கும்
மெத்தவு மேமல பேதமுற் றவர்க்கும்
பட்டினி வைக்கிற் பங்கம தாமே.''

அதிசாரத்தால் பீடிக்கப்படுபவர்களுக்கும், கருப்பமுடைய மாதர்களுக்கும், விருத்தருக்கும், சிறு குழந்தைகளுக்கும், சரீர மிளைத்தவருக்கும், உடல் வன்மையற்றவருக்கும், கண்ணோயுள்ள வர்க்கும், இளைப்பு நோயினருக்கும் (க்ஷயம்), கிராணிக் கழிச்ச லால் வலிவு குறைந்தவருக்கும், பித்த ரோகத்தவருக்கும், தவ விரதமுடையவருக்கும், தொந்த ரோகத்தால் நொந்தவருக்கும், மதுபானிகளுக்கும், பெண்போகத்தை யதிகமாய் விரும்பு வோர்க்கும், மனவருத்தங் கொண்டுள்ளோர்க்கும், சாந்தமின்றி

கோபத்தையே அடைந்தவர்களுக்கும், என்பைப்பற்றிய சுரமுள்ளோர்க்கும், யானை, குதிரை, மீதேறி சவாரி செய்பவர்கட்கும், மலபேதமுடையவர்கட்கும் பட்டினி தீங்கை விளைக்கும்.

IV ஆவி பிடித்தற்கேற்ற நோய்கள்

உடலினின்றும் வியர்வையைப் பெருகும்படி செய்வதற்கு ஏற்றமுறைகளில் வேது பிடித்தலுமொன்றாகும். இம்முறையைப் பெரும்பாலும் சோகைப் பிணிகளிலும், ஒருபக்க வீக்கத்திலும் கையாளலாம்.

சோபை, யானைக்கால், தலை நீர்க்கோவை ஆகிய பிணிகளில் வேதுவை உபயோகித்து நீரையகற்றுவது வழக்கம். இது நீரை வெளிப்படுத்துவதன்றி, அவ்வப்பாகங்களிலிருக்கும் மலத்துவாரங்களைச் சுத்தி செய்து, மலங்களை யகற்றி அவற்றிற்கு ஓர் உற்சாகத்தையும் இலேசத்துவ உணர்ச்சியையும் அளிக்கும்.

வேது செய்முறை பலவகைப்படும்

1. நீரைச் சில மூலிகைகளுடன் சேர்த்துக் கொதிக்கவைத்து அதனின்றெழும் ஆவியைப்பிடித்தல்

2. நீரினுள் சிவக்கக்காய்ச்சிய மண், உலோகம் ஆகியவற்றைப் போட்டு அதினின்றெழும் ஆவியைப் பிடித்தல், இதைத் தேரர் யமக வெண்பாவில் ஒற்றடத்தின் கீழ்க்கூறப்பட்ட செய்யுளால் அறியலாம்.

வேது—“அரிசனை நொச்சிவெடி யட்டறல் செங்கல்லே”
பற்று—“அரிசனை நொச்சி வசம்பர்க்கை—அரிசனை”
ஒற்றடம்—“எண்ணெய்க் கடமெ லிடிகை யெருக்கிலை
நொய் எண்ணெய்க் கடன்மெய்யை யெய்.”

அரிசனை—மஞ்சட்பொடி புகையும்,
நொச்சி—நொச்சியிலைப் பொடியைச் சேர்த்துக் காய்ச்சின்
வெந்நீரின் ஆவியும்.
வெடி—சாம்பிராணி புகையும்.
அட்டறல்—காய்ச்சின் வெந்நீரின் ஆவியும்.

செங்கல்லே—சுட்ட செங்கல்லை வெந்நீரில் போடக்கிளம்பும் ஆவியும் ஆகிய இவைகளெல்லாம் வேது பிடிப்பதற்கேற்ற கருவிகளாம்.

நீர்க்கோவையில், எலுமிச்சம் பழவிதையை நீரில் போட்டுக் கொதிக்கவைத்து அதனின்றெழும் ஆவியைப் பிடிப்பதும், கொதிக்கும் நீரில் மஞ்சட் பொடியைத் தூவிப் பிடிப்பதும் வழக்கமாம்.

உடலில் வலி, திரள்வாயு, ஆகிய இவற்றிற்கு, கொதிக்கும் நீரை ஒரு வாயகன்ற பாத்திரத்திலூற்றி, அதில் உப்புப் பொடியை நிரம்பப் போட்டு, அதினின்றெழும் ஆவியை முகத்தில் படுமாறு செய்யலாம். இப்படிச் செய்வதால் வியர்வை உண்டாகி வேதனை தணியும். இதைத் குறித்துத் தேரர் தருவில்

''நீர்முகத்த முந்திவலி யாலுளைந் துடம்புதளர்
வாதனைக்க டங்கவடு வேதுவைப்ப மங்கணற
நிதமட்ட புனலுட்ட ணமிருக்க லவணத்தை
யதிலிட்டு முகமிட்டு டனிருக்க வேர்த்திடும்
மேனியிற்பொ ருந்துநளிர் வாதமிக்க வங்கமுளை
வாகுமிக்க ணந்தணலி லேயெரிக்க வெம்புமுடல்
வியாவுற்று நலிவுற்று லகுமிக்கு மிதுநிச்சய
நிருமித்த பிடகர்க்க வதியிட்ட வாய்ப்பிது—புர
மெலிவுமீது பற்றுளேகுமே.'' (தே.தரு.)

என்று கூறியதன்ாலறிக

ஓமம், உப்பு, சுண்ணாம்பு, பெருங்காயம், திப்பிலி இவைகளை வேண்டிய அளவு தண்ணீரில் அரைத்துப் பற்றுப்போடலாம், அவற்றைக் கொதிக்க வைத்து அதினின்றெழும் ஆவியையும் பிடிக்கலாம். இவற்றால் வாத உட்டணங்களாலேற்பட்ட உடல் வலி தீரும்.

''மீறியிட் டுடம்புநலி வாதவுட் டணங்களற
ஓமமுப் புடன்சுண மெய்காமன் மெய்க்கியன்ற புனல்
வெடியொக்க வரையட்ட திடுமெய்க்குளொரு பற்று
ளுலர்வுற்று நலியற்று நலமிக்க நாட்டிடும்.''
(தே.தரு.)

V ஒற்றடம்

ஒற்றடமிடக்கூடிய இடங்களும் பொருள்களும்

''ஒளிவட்ட மானகவுள் செவிநாசி குக்கி
ஒடுநெற்றி வெரிந்வாகு பதமுச்சி நாபி
ஒக்க லிடுப்பரை ஒக்கல் விடுத்தெறி
ஒட்ட லிரொப்பென ஒட்டி வலித்தே
ஒதிமெய் யொப்பென ஓசிந லிப்பிணி
ஒழிய நற்றுறை ஒரு வகை
ஒற்ற டத்தினைப் பரப்பி ஒற்றிடப்பறக்குமே
ஒலிசுதை யடலைகொள் ஓமமிட் டிகைநெல்
ஒலிதவி டட்டறல் ஓவு சிட்டமுமே
ஒன்பது மொன்று பொருந்தத்தீட் டுந்தீப்பால்
ஒடும்பொற் பாம்ஒன் றலறிந்தங் கிடுஞ்சற்றே''
(தே. கரிசல்)

''எண்ணெய்க் கடமெலிடிகையெருக்கிலைநொய்
எண்ணெய்க் கடன்மெய்யை யெய்.''

என்று தேரன் யமுகமும் கூறுகின்றது.

குறிப்பு—அருஞ்சொற்பொருள்—ஒளிவட்டமான கவுள்—கண்ணாடி போலுள்ள கன்னம்; குக்கி—வயிறு; வெரிந்—முதுகு; வாகு—தோள்; ஒக்கல்—பக்கம்; அரை—அரை; சுதை—பழஞ் சுண்ணாம்புக்காரை; அடலை—சாம்பல்; இட்டிகை—செங்கல்,

வெந்நீர் ஒற்றடம்

1. கம்பளித்துணி அல்லது பருத்தித்துணியைக் கொதிக்கும் வெந்நீரில் நனைத்துப் பிழிந்து வேதனையுள்ள இடங்களில் ஒற்றடமிட நீங்கும். இது கட்டிகட்கு நல்லது.

2. தைலங்களை நோயுள்ள இடங்களிற் பூசி, நொச்சி, எருக்கு, தழுதாழை, ஆமணக்குப் போன்ற இலைகளை ஆமணக்கு நெய் விட்டு வதக்கி ஒற்றடமிட, வாதத்தால் உண்டான வீக்கமும் வலியும், நீங்கும்.

3. மஞ்சள், உப்பு இவ்விரண்டையும் பொட்டணமாய்க் கட்டி, கொதிக்கும் எண்ணெயில் தோய்த்துச் சற்று ஆறியபின், அடிப்பட்ட வீக்கங்களுக்கு நோயுள்ள இடங்களில் ஒற்றடமிடலாம். இவ்வாறே எலுமிச்சம்பழத்தையும் அரிந்து, துணியிற் கட்டி எண்ணெயில் தோய்த்து ஒற்றடமிடலாம்.

தருவில் கூறியவாறு, கருங்கற்பாறைத்தூள் இருப்புச் சிட்டத்தூள், அரிசித்தவிடு, காய்ந்த சுண்ணாம்புக் காரைத்தூள் செங்கற்றூள் இவற்றுள் ஒன்றை வறுத்துத் துணித்துண்டில் முடிந்து மார்பு, தலை கன்னம், தோள்கள், முதுகு, இடுப்பு, முழங்கால், காலடிகள் ஆகிய இவ்விடங்களில் சூடுண்டாகும்படி ஒற்றடமிடலாம். இவ்வொற்றடம் உடம்பை வருத்தக்கூடிய நோய்களைப் போக்கும்.

ஈதன்றியும் முட்டைச் சாம்பல், கொள்ளுமா, ஓமம், நெல், நெருப்பிற் காய்ச்சிய எண்ணெய்க்கலயம் இவைகளும் ஒற்றடமிட ஏற்ற பொருள்களே யாம்.

மேற்கூறிய இடங்களேயல்லாமல், மூக்கு, வயிறு, தொப்புள், இரண்டு விலாப்பக்கம், இடுப்பு, அரை ஆகிய இவ்விடங்களிலும் ஒற்றடமிடலாம்.

ஒற்றடமிடக்கூடிய பொருளும் அதன் குணமும்

1. கருங்கற்பாறைத்தூள்—விஷசுர சன்னி போம்.

2. அரிசித் தவிட்டுத் தூள்—சேத்தும உஷ்ணத்தாலுண்டான உடல் வலி போம்.

3. சுண்ணாம்புக்காரைத் தூள்—வாதசந்நி, சளி போம்.

4. செங்கற்பொடி—சீதள நோய் போம்.

5. முட்டைச் சாம்பல்—வாத நோய், கப நோய், பித்த சுரம், சீதள சுரம் போம்.

மேலே கூறியவற்றுள் இருப்புக் கிட்டத்தூள் ஒற்றடம் இடுவதில்லை.

கோதுமை தவிட்டொற்றடம் மார்புச் சளியைக் கரைத்து வெளியிற் கொண்டுவரும்.

இது சீதளத்தால் உடலிலுண்டாகும் வலிக்கும் நல்லது.

நொச்சி, தழுதாழை, எருக்கு, வாதநாராயண இலை—வாத நோய், கீல் வாதம், பக்கவாதங்கட்கு நலந்தரும்.

பிரமி இலை—மூட்டுவீக்கத்தைப் போக்கும்.

எருக்கிலை, நொச்சியிலை—வலிப்புக்கு நல்லது.

ஆமணக்கு விதை ஒற்றடம்—வயிற்று வலிக்கு நன்மையைத் தரும்.

ஆமணக்கிலை, வெற்றிலை ஒற்றடம்—பிள்ளை வயிற்று வலியைப்போக்கும்.

வெந்நீர் ஒற்றடம்— கட்டிகட்கு நல்லது.

எண்ணெய்க் கலய ஒற்றடம்—பல்வலி நீங்கும்.

ஓமம், செங்கற் பொடி ஒற்றடம்—கை கால் சில்லிட்ட, குரக்கு வலியைப் போக்கும்.

இவைகளெல்லாம் அநுபவத்திலுள்ளன.

VI சுட்டிகை

இதைச் சுட்டிகை என்றும், இராட்சஸ சிகிச்சை என்றும் சொல்லலாம். சுட்டிகை, நோய்களைப் போக்குவதற்கு, ஆதாரமாயுள்ள மருந்து முறைகளிலொன்று. (கெட்டுப்போன பதார்த்தங்களை, நெருப்பில் வாட்டி அவற்றை எவ்வாறு பதப்படுத்துகின்றோமோ, அவ்வாறே மிகுதியும் பீடிக்கக்கூடிய சேத்துமம் முதலிய பிணிகளைச் சுட்டிகையினால் வாட்டி, உடலை வன்மைப்பெறச் செய்யலாம்).

அவை : உலோகம், மரம், மண், கால், காந்தி.


உலோகம் : உலோகம் என்பதில் பஞ்சலோகங்களும் அடங்கும். இவற்றுள் ஒன்றினாற் செய்யப்பட்ட கம்பி போன்ற கருவிகளால் சுட்டிகை இடுவது வழக்கம்.

அவ்வாறு சுட்டிகை இடுவதற்கு ஏற்ற இடங்கள்

உச்சி, நெற்றி, முதுகு, நெஞ்சு, கால்கள்.

உலோகங்களினால் செய்யும் சுட்டிகைகள்

முத்திரை போடுவது போன்ற முறையிலமையும், அவைகளின் அமைப்பு கீழே தரப்படும்.



மரச்சுட்டிகைகளுள், பெரும்பாலும் வேர்களே உபயோகப் பட்டு வருகின்றன. அவற்றுள் அநேகமாய் மஞ்சள் கொம்பே பயன்படுத்தப்படுகின்றன. மஞ்சள் கொம்புக்குச் சூடு ஏற்றி, சற்று ஆற்றி, சுடவேண்டிய இடத்தின்மீது வைத்துவிட வேண்டும்.

மஞ்சள் கொம்பால் சுடக் கூடிய இடங்கள்	நீங்கும் நோய்கள்
1. நாசியின் அடித்தண்டு	சந்நி பாத நோய்
2. மேலுதட்டின் மேற்பள்ளம்	பற்கிட்டும் சந்நி நோய்

3. அதரம் (கீழுதடு)	கப நோய்
4. புருவங்களின் மேற்புறம்	விரண சிலேத்தும நோய்கள்.
5. புறங்கால்	அண்ட வாயு
6. ஆண்குறியின் மேல் பாகம்	விதை வீக்கம்
7. மார்பின் கீழ்	சூலை, குன்மம்.
8. காற்பரடு	பாண்டு நோய்கள்.

குறிப்பு.—உலோகங்களால் இடும் சுட்டிகை, நோயின் குற்றங்கள் அதிக அளவுபெருகி இருப்பின், கையாளவேண்டும்.

மேற்கூறிய இடங்களல்லாமல், இன்னும் வேறு இடங்களிலும், மரக் கொம்பினால் சுடலாம், அவை கைதேர்ந்த வைத்தியனால், நோய் பேதங்கட்குத் தக்கவாறு செய்யப்படும்.

மண் சுட்டிகை : இஃது எண்ணெய் பழகிய சாதாரண குடுவையை நெருப்பிலிட்டுச் சூடாக்கி, துணியில் பிடித்துக் கொண்டு, உச்சி, நெற்றி, முதுகு, மார்பு, கால் இவற்றின்மேல் நொச்சியிலையைப் பரப்பி, அதன் மேல், அக்குடுவையை வைக்க, சன்னி விஷ சுரம், பிடிப்பு, தாகம், வலி; ஒற்றைத்தலை வலி ஆகியவை நீங்கும்.

ல் சுட்டிகை : என்பது வெப்பமிகுந்த காற்றுகளை, உடலில் தாக்கும்படி செய்யும் முறை. இவ்வாறு செய்வதால், உடலில் வியர்வை பெருகும். அதன் வாயிலாய் நோய்களும் குணப்படும்.

காந்தி சுட்டிகை : வெயிலில் காய்தலை, காந்தி என்று கூறுவர். இது வாதத்துடன் ஆகிய சந்நி நோய்களுக்கு விசேஷமானதென்று கூறப்பட்டிருக்கிறது. தலையைத் தவிர மற்றைய உறுப்புகளை வெயிலில் காயவிடலாம்.

காலை வெயில் ஆகாது. ''காலை இளங்கதிர் தீது''. என்று தேரையர் பகர்ந்துளளார். இக்கருத்தை, ''காலை வெயில்'' என்னும் பதார்த்த குணசிந்தாமணி செய்யுளிலும் காணலாம்.

''காலைவெயிற் காய்ந்தார்க்குக் காணாப் பிணியனைத்தும்
பாலைவெயிற் போலப் பரவுங்காண்—மாலைவெயிற்
காய்ந்தார்க் குறுபிணிமுற் காசறுமி லக்கணநூ
லாய்ந்தார்க் குறுவழுச்சொ லாம்.'' (ப.கு.சி.)

(பொழிப்புரை) உதயகால வெயில் காய்ந்தவர்களுக்கு முன்பு இல்லாத பிணிகளெல்லாம் விரைவில் பாலை நிலத்து வெயிலைப் போல மிகக் கடுமையுடன் பரவும். மாலைக் காலவெயிலில் காய்ந்தவர்க்கு உள்ள நோய்கள் குற்ற மற்ற இலக்கண நூல்களை ஆராய்ந்து கற்ற புலவர்களிடம் நெருங்காமல் வழுவுள்ள சொற்கள் விலகுதல் போன்று நீங்கிவிடும்.

சுட்டிகை

(சிந்து)

"சுட்டிகையின் குணமெடுத்து—நன்றாய்ச்
சொல்லுகிறேன் முறைதொடுத்து
கெட்ட பதார்த்தத்தை நெருப்பில்—வாட்டக்
கண்ணிய மாகுமே பொருப்பில்
அப்படிப்போலே யிவ்வுடலை—வாட்டி
யப்பாலறி பிணிவிடலை
நல்லசிட்டை யிதுபோலே—இல்லை
ஞாலத்திலே யினிமேலே
புனல்பிணி யாலுடல் சோகம்—கொண்ட
போதிது செய்ய வியூகம்
கனற்பொருளா லிந்தலோகம்—வேதங்
கட்டவறிதல் விவேகம்
ஆதலினுற் சுபமசுபம்—வினை
யானதெல்லாமது விசுபம்
செய்யுமிச்சுட்டிகை யஞ்சு—விதஞ்
செப்புகிறேனது விஞ்சு
லோகமரமண் கால் காந்தி—யிது
நோயையடு முபசாந்தி
அயமுதலாகிய லோகம்—பண்ண
லாகாது மிஞ்சிய வேகம்
ஆயினுமிஞ் சியபோது—செய்ய
லாகுந் தடுக்க வொண்ணாது
உச்சிப்புருவம் வெந்கண்டம்—நுத
லோட்டமுரங் கன்னந்துண்டம்
வாகு விரலதரங்கை—யிடை
வாமம் பரட்டிருகொங்கை
ஆகுமட்டாதச விடமும்—பண்ண
லாகு மதிலுறுந்திடமும்
அஞ்சு விதங்களி லந்தம்—முத
லாதியளவு மோர்தொந்தம்
இப்படி யாகவே புரியுந்—திற
மென்னசொல் வேனது தெரியும்." (ந. தரு.)

காந்தி

"காந்தி யெனுங் கதிர் வெவ்யில்—வன்னி
கடுக்குமது பட மெய்யில்
வாதத்துடன் சந்நியடர்ந்து—தொடர்
வாதனை போய்விடு முடைந்து
உத்த மாங்க மொன்று தள்ளி—மற்ற
உறுப்பெலாங் காயலாமுள்ளி
காலையிளங் கதிர் தீது—உச்சிக்
காலைக் கதிர் சாயும் போது." (தே. தரு.)

கால்

''காலெனுஞ் சுட்டிகை யங்கி—யெரி
காங்கை வளிச்சுவாலை தங்கி
வீசுந்தி காய்த லெங் கெங்கும்—பட
மேலிட்ட நோயெல்லாஞ் செங்கும்
வேர்வை புறப்பட்ட போதே—பிணி
விட்டு தென்றே யறிமீதே.''

மண்

''மண் சுட்டிகை யெனல் குடுவை—எண்ணெய்
வாழ்ந்ததாகக் கொண்டது வடுவை
அங்கிச் சூட்டை யதற் கேற்றிக்—கலை
யாற் பற்றிக் கொண்டனல் மாற்றிப்
பக்குவ மாயதை நொச்சி—மிசைப்
பையப் பைய வைப்பா யுச்சி
நெற்றி முதுகுரம் பாதம்—வைக்க
நீங்கும் பிணியின் விரோதம்
சன்னி விடசுரம் பிடிப்பு—வலி
தாகமொடு தலை யிடிப்பு
கம்ப மிலாத பன்னோயு—மிதைக்
கானு முன்னேகெட்டு மாயும்.'' (தே. ரு.)

மரம்

''மரச் சுட்டிகை தனை நம்பு—உருண்
மையாகிய மஞ்சட் கொம்பு
சூடதனுக் குளதாக்கி—யந்தச்
சூட்டதனைச் சில போக்கி
நாசி யடித்தண்டு மேலே—வைக்க
நாசமாஞ் சந்நி நாய்போலே
ஒட்டத்தின் மேற் பள்ளந்தன்னி—விட
வோடும் பல்கிட்டின சந்நி
அதரத்தடியினி லிடவே—தனை
யையைக் கொல்லும் பயப்படவே
புருவத்தின் மேற் புறங்காட்ட—வுரப்
புண்ணைப் புறப்படு மாட்ட
அடியின் புறத்தினிற் சுடவே—கப
அண்ட வலியை யதடவே

உருவிலே யிடு பதைக்க—விரை
யூடண்ட வாயுவை வதைக்க
கொங்கை யடியினி லமைக்கச்—சூலைக்
குன்மங்களை யெல்லாம் குமைக்க
பர்ட்டினிலே நடு வைக்க—விட
பாண்டுவை யைக் கொலுந்தைக்க
பின்னு மது மெயத்தானம்—புகல்
பேதங்கடன்னி னிதானம்
மேவப் பொருத்தி வியாதி—தனை
வேரறக் கண்டிடு சேர்தி.'' (தே. தரு.)

லோகம்

''அப்புற மாகிய லோகம்—அய
மானதிற் பேதம நேகம்
ஊசியெனச் சிறுகம்பி—தனி
லூட்டி யன்லற நம்பி
மண்ணுக்குச் சொல்லிய தானம்—பினும்
வண்மை யிடத்திட வூனம்
நீங்கு மிதுநலி மிஞ்சி—விடம்
நேரிட்டபோது செய் விஞ்சி
இந்தச் சிகிச்சைக்கு மேலே—யொன்று
மில்லை யிதைப் புரி மேலே
லோகத்திலே யிந்த லோகச்—சுடல்
நோக்கு மிருகங் கட்காக
நாளு மருவுமிதன்றி—யலை
நாடு மருக்கத்தை வென்றி
யாகமண் சுட்டிகை யென்னப்—புரி
யண்ணும் பிணியறு முன்ன
மேதகு மிந்த நன்முறையைச்—செயில்
வீக்கும் பிணி மனக்குறையே.'' (தே. தரு.)

ஓற்றடம்

''பற்றென்று சொல்வது மித்தொழிலிலுட்பட்ட
பண்பாகு மதனை வினவிற்
பாறையின் பொடிதவிடு சுதை செங்கலடலையிவை
பண்பா யிடித்தரித்து
வற்றலெனவே வறுத்தது பதமெண்ணியொரு
வத்திரத்திடை முடித்து
மார்சிரசு கன்னமொய்ம் பரமிபடை சானுபதம்
வைப்பததன் வெப்ப முறவே
வெற்றுடலெனிற் சடலநைய மிரணங்காணும்
வேதனைகளடரு மெலியும்
வேறே மனக்கவலை கொள்ளவறு முனுமுணவு
வேதிக்கு மாகையாலே

யுற்ற நலிவகை பிரிவு ளொன்று தவறாமலே
யோசித்து விவரமாக
வோதுமிவை செய்யின லியுள்ளவை யெலாமகலு
முயிர் நிலைக்கிக லிராதே.''

(தே. தரு.)

VII. பற்றுகளின் குணங்கள்.

''பாறையின் பொடிவிட சுரச்சன் னியைப்பற்று மேற்ற
விட்டின்றுள்
பையுளாகிய சேத்தும வுட்டணப் பருவர னலிசாடும்
கூறுவெண் சுதைத்துகள் வளியினங்களைக் கூடிய சனிரோகக்
குடும்ப மத்தனை யுங்கொலுங் கபப்பிணிக் குழுவை
மிகச்சாடும்
பூறுவத்திரமாகிய செங்கலின் பொடியது குணங்கேட்டி
புயங்க மாமெனத் தெறுமுடற் பந்தனை பூட்சியிற்
மாறு மோதிய வடலை யின்று கடசவாத நோயற னோய்கள்
வன்னி யாமெனுஞ் சுரப்பிணி பயித்திய மழைப்பி ணியறு
மாதோ.''
''குலுத்த மாவின் குணமு மிவைகளிற் கோடியாகுங் குடலத்
தைச் செய்கிற
பலுத்த வாயுவைப் பற்றிய சன்னியைப் பற்றறுத் துடற்பை
யுளைச்சாடுமே
யுலுத்த மென்னும் பிடிப்பை யடுத்தவை யுரோகமோ
டவுதைக்கு முதவியா
யலுத்த மெய்யை யடுத்த விடப்பிணி யத்தனைக்கு மரியஃ
தாகுமே.''

(தே. தரு.)

VIII. எண்ணெய் முழுக்கால தீரும் பிணிகள்

கபாலம்—இதைப்பற்றி உண்டாகும் சூலை, ஒற்றைத்தலை வலி, சூரியாவர்த்தம் (எழு ஞாயிறு), சந்திரா வர்த்தம் (படு ஞாயிறு) இவைகட்கு அரக்குத் தைலம்; சுக்குத் தைலம், இஞ்சித் தைலம், மிளகுத் தைலம் தேய்த்து முழுகத் தீரும்.

நோய்	தைலம்
மூர்த்தத் தெழுங்கம்பம்	உளுந்துத் தைலம்.
காது நோய் செவிடு	உளுந்துத் தைலம், மிளகுத் தைலம், சுக்குத் தைலம், இஞ்சித் தைலம்.

நோய்	தைலம்
காதடைப்பு காது குத்து.	மிளகாய்த் தைலம், மிளகுத் தைலம், நொச்சித் தைலம்.
தொண்டை நோய் தொண்டைக்கட்டு	நொச்சித் தைலம்.
உண்ணாக்கு வளர்ச்சி ..	உளுந்துத் தைலம்.
குரற்கம்மல்	சுக்குத் தைலம், மிளகுத்தைலம், இஞ்சித் தைலம், கரிப்பான் தைலம்.
மூக்கு நோய், மூக்கடைப்பு, மூக்கில் சீழ் ஒழுகல். ..	நொச்சித் தைலம்.
பீநச நோய் ..	பீநசத்தைலம், இஞ்சித்தைலம்
தடைப்பீநசம், சோரி .. லீழல் பக்கெழல்	நாசிகாரோக நாசத் தைலம.
கண் ..	சீரகத்தைலம்
விழிமாசு ..	நாசிகாரோக நாசத் தைலம்
விழியடர்ப்புகை ..	சகதேவித் தைலம்
பித்த காசம் ..	பிருங்காமலக தைலம்

இவைகளல்லாமல், இரத்தக் கொதிப்பால் ஏற்படும் மூளை வியாதிகட்குத் தைலங்களைக் கொண்டும்; மோரில் சில மருந்துகளை அரைத்துக் கலக்கியும், குடிநீரிலும் ''தாரை'' செய்வதும் குடநாட்டுப் பரிகார முறைகளுள் ஒன்று.

XI உடலை மர்த்தனம் பிடிப்பதால் தீரும் நோய்கள்

இதை மர்த்தனம் என்றும் வழங்குவர். இது வாதத்தால் உண்டாகும் எல்லா நோய்களையும் நீக்குவதில் சிறப்புடையது.

நாடியில் வல்ல ஒரு மருத்துவன், உடல் வன்மையுள்ள மல்லர்களுடைய உதவியால், தொக்கணத்தைச் சரிவர நடத்தி வாத நொய்களையே, அல்லாமல், பித்த, கபப்பிணிகளையம் அகற்றி விடுவான், நொண்டியையும் நடக்கும்படி செய்யலாம்.

இதன் செய்முறை ஒன்பது வகைப்படும் : தட்டல், இறுக்கல், பிடித்தல், முறுக்கல், கட்டல், அழுத்தல், இழுத்தல் மல்லாத்துதல், அசைத்தல்.

1. தட்டுதல் அல்லது குத்துதல் : இச்சிகிச்சையை உடலின் எப்பாகத்திலும் கையாளலாம். இதனை மந்தம், மத்திமம், சண்டம் என மூன்று விதமாய்ச் செய்யலாம். இது மாதத்திற்கு ஒரு முறை செய்யப்படும். நிற்க வைத்தும், நடக்க வைத்தும், குந்த வைத்தும், மல்லாந்து படுக்க வைத்தும், ஒரு பக்கத்தில் சரிவாய் வைத்தும் தட்டலாம்.

2. இறுக்கல் : இதனை மேற் கூறிய நிலைகளில் நிகழ்த்லை நீக்கி, மற்ற நிலைகளிற் செய்யலாம். நீண்ட எலும்புள் பொருந்திய உறுப்புகளை இறுக்கலாகாது.

3. பிடித்தல் : தைலத்தைத் தடவியேனும், தடவாமலேனும் தட்டுதற்குரிய ஐம்முறைகளிலும் செய்யலாம். இது வாத நோய்க்கு மட்டுமேயன்றிச் சிறப்பாய்ப் பாரிசவாதம், தனுர் வாதங்கட்குப் பயன்படும்.

4. முறுக்கல் : இதை முற்கூறிய ஐந்து நிலைகளுள் படுக்கும் போதும், நடக்கும் போதும், எலும்புகள் பொருந்திய இடங்களிலும், நோயாளி விரும்பாத காலத்தும் செய்தல் கூடாது.

5. கை கட்டல் : இதனை நடக்கும் போது செய்தால், பழு எலும்புகள் முறிந்துவிடும். உட்கார்ந்திருக்கும் போதே செய்ய வேண்டும். தயிலங்களைத் தேய்த்துச் செய்தலே நல்லது. இதனால் கால் கைகளை முடக்கி வைத்திருக்கும் வாதநோய்க் கூட்டம் பரிகரிக்கப்படும்.

6. அழுத்தல்: நிற்கும் நிலை, உட்கார்ந்திருக்கும் நிலையிலழுத்துதலைச் செய்யலாம். கணைக்கால், விலாப்பக்கம், தலை இவ்விடங்களில் அழுத்தலாகாது, இடுப்பில் நன்றாய் அழுத்தலாம். இஃது உள் வீச்சு, புற வீச்சு, பக்க இசிவு இவைகளுக்கு நல்லது.

7. இழுத்தல் : இதனைத் தயிலத்தைப் பூசியே செய்ய வேண்டும். மல்லாந்து படுத்திருக்கும் நிலையிலும். உட்கார்ந்திருக்கும் நிலையிலும் இதனைச் செய்யலாகாது. எலும்புகள் நன்றாய்த் தெரியுமிடங்களிலும், தலையிலும் மந்தமாகவே உருவவேண்டும். இப்பரிகாரத்தால் நரம்பில் ஊறி வருத்துகின்ற வாயுகள், பிடிப்புகள், சுளுக்குகள் குணப்படும்.

8. மல்லாத்துதல் : இதனை உட்கார்ந்திருக்கும்போது தான் செய்யவேண்டும். மந்தம், மத்திமம், சண்டம் என்ற அளவில் செய்யலாம். உடம்பை நன்றாக வளைக்கும் போது, முற்புறமாகவும், பிற்புறமாகவும், கால்கள் செவியில் படுமாறும் செய்யவேண்டும். இதனால், முக்குற்றங்கள் தன்னிலைப்படும். ஸ்தூலமும், மலடும் போய்விடும்.

9. **அசைத்தல்** : இதை ஐந்து நிலைகளிலும் செய்யலாம் ஆனால், நடக்கும் போது செய்யலாகாது; மந்தம், மத்திமம் சண்டமென்ற அளவிலும், தயிலத்துடனும் தயிலமில்லாமலும் செய்யலாம். இதனால், உடற்கடுப்பு, திமிர் நீங்கும்.

இது தென்னாட்டிற்கே சிறந்ததென்பதை, இந்நாட்டில் சாதாரணமாய் மக்கட்கு வாதநோய்கள் வரின் உள்மருந்தின்றி, தொக்கணத்தையே பெரிதும் நம்புதலோடு, அவ்வெளிப் பிரயோகத்தினாலேயே நோய்களும் நீங்குகின்றன என்பது தமிழ் நூல்களில்— தேரன் தருவில் காணலாம். அதனை வெகு விளக்கமாய் குறிக்கப்பட்டுள்ளது.

தலை முழுகும் போதும் எண்ணெயைக் கொண்டு மர்த்தனம் செய்து முழுகுதல் சிலர் வழக்கம்.

பாரிச வாதம், முடக்கு வாதமிவைகள் நாட்பட்டுப்போனால் மருந்தால் நீங்குவதரிது. ஆனால் தொக்கணத்தால் நீங்குவதை கண்கூடாகக் கண்டிருக்கிறோம்.

மர்த்தனம்— தரு

''மர்த்தனமாகிய தொக்கணத்தின்செயல் வகுப்பேனே—
சதா
நித்தமும் வாதம் பிணித்த பிணிப்பைச் செகுப்பேனே
மல்லகாரன் பிடகர்கையென்கிற வாளாலே— பிணி
வல்லியை மெய்யிலிற் சேதிப்பராந் திறமை வாளாலே
தட்டலிறுக்கல் பிடித்தல் முறுக்கல்கை தைவந்து— கரங்
கட்டலமுத்த லிமுத்தல் மலாத்துதல் தைவந்து
அசைத்த லிவ்வொன்பது மத்தனத்தின்றிற மானாலும்—
இதில்
இசைந்த குணங்களைச் சொல்லப் போமோ வடியேனாலும்
தட்டுத லென்பதுங் குத்துதலென்பதுந் தானொன்றே
இந்தச்—
சட்டக நாடிகள் மூன்று மறிவது தானன்றே
கணையுந் தனுவும் பழுவும் விலாவுங் கங்காளமும்—
தோபலா
டணையுமெலும் புகளஞ்சு மிபதடையாளமும்
அஞ்சிலு நாடு மயிர்தசை மெய்கமா மெய்யை— வாத
மிஞ்சிய நற்றிரள் வீசி யெழும்பிடு. மேலையை
வாயுபத் துங்கரநாடிபத் துங்கை செய்வர் யாரே— யவர்
ஆயுபத்து மிரு மூன்று முடையவ ராவாரே
ஊரும் பவனி யிளைப்புக்கு மிம்மருந் தொன்றென்று—
மன்னர்
ஆரும் பரவ மூங்குகின் றாத னாலின்று
தயிலத்தைக் கொண்டுமல்லாமலுஞ் செய்வர்தரமாக—
இரு

செயலுக்கு முன்சொன்ன வொன்பதுமே தொழில்தீ தேக
கையறி மல்ல கரிப்படிச் செய்திடிற் காயத்தில்—முடம்
நைய வவங்க முனங் களுண்டென்னும் மொனார்யத்தில்
அண்டிய வாத முதற்பிணி யைக்கெடுத் தாதாரம்—படு
நொண்டியை யுந்தள்ள லாலிது நீதத்து சேதாரம்
ஒன்பது வர்க்கமு மோதுகிறேனொவ் வொன்றாக—
அதின்
முன்பது தட்டல் வினவுதி நீமுறை நன்றாக''.

(தே. தரு.)

1. தட்டல்.

நித்தியமுஞ் செயலாகு மிக்குத்து தனீதத்தில்—சண்ட
மத்திம மந்தமி மூன்று மூதலொரு மாதத்தில்
இடைபட்ச மீறெப்பொழுது மாமித் தட்டலின் சீரே—
நிற்றல்
நடை குத்துதல் கிடைசாய வெனுமஞ்சு நவில்வாரே
தட்ட லெனுங் குத்தல்கங்காள மாதிதனு வெங்கும்—சுழி
தொட்ட முந் நாடியடங்கச் செய் வாதத்துடி மங்கும்.

(தே. தரு.)

2. இறுக்கல்.

இறுக்க லெப்போது மியங்குதலிற் செயலின்னாதே—அவை
மறுக்க வொண்ணாத முழுவெலும் பிற்செய்து மன்னாதே
தயிலத்துடன் செய்தலண்ட முரண்டு தசவாதை கெட்டுச்
சயிலத்தை நேரென வாக்கையுரம் பெறுதல் பாதை
அல்லா மலுமுடற் பங்கமு நீங்கு மதுபோக—வெண்ணெ
யல்லா மலுஞ்செயிற் காணலா மெய்யில ஞரேக.

(தே. தரு.)

3. பிடித்தல்.

பிடித்த லியங்கு மமைதி யினுந்தகும் பிந்தாதே—
எண்ணெய்
யுடுத்தது செய்யிற் றசவளி யூனுட லுந்தாதே
வேற்றது செய்யினுஞ் சூசிகை பாரிசை விட்டோடும்—புலி
போத்தது வாயுவு மற்றது மேனலிப் பொட்டோடும்
பிடித்த பிடிமல்லக் கரத்தில் வெகுபேதங்கள்—வகை
படித்த வக்காத்திரர்க்கே தெரியுமுதற் பாதங்கள்
சோதனையாவது கைப்பிடியே யது சொல்லாரே—பல
வாதனை யுந்தெறு மல்லக மல்லரில் வல்லாரே. (தே. தரு.)

4. முறுக்கல்.

முறுக்கல் கிடத்த லியங்க லிரண்டினு மூட்டாதே—யவர்
வெறுக்க வரிற்பல நோயுள தாயினு மீட்டாதே
நோயத் தியற்றுவை யாகின் மருந்தின நில்லாதே—முக
மாயத்தி லுங்கணை யாகு மெலும்பொடு மல்லாதே
பழுவையடைந்த விலாவெனு மத்தியைப் பற்றாதே—அது
வழுவு முடம்பிற் பிணியெனுஞ் சாகரம் வற்றாதே.
(தே. தரு.)

5. கட்டல்.

''கட்டலி னாற்கரங் கட்டும் பவனங்கள்
கண்டாயே—கையைத்
தொட்டு நடத்தலிற் செய்யிற்
பழுவிறுந் துண்டாயே
எண்ணெயிற் செய்யிலுங் குந்துத
லேதிட மெக்காலும்—தனு
நண்ணத் தநுவைப் பந்திக்கப்
பிணிகளெக்காலும்
பாரிச வாயுவெனும் பிணியைத்
தெறும் பாசத்தால்—காலே
யாருதல வளியத்தங் கெடுக்குமா வேசத்தால்.'' (தே. தரு.)

6. அழுத்தல்.

''அழுத்த னிற்ற லிருத்தற் கன்றி
மற்றொன்றுக் காகாதே—கணை
பழுத்தனுவான களேபரத்திற்
செய்யப் போகாதோ
வளிக்கண மாயு மிடுப்புர மாமிது
மாறாதே—புறம்
நெளிக்க வரும் பங்க
முங்கெடு மற்றது நீறாதே.'' (தே. தரு.)

7. இழுத்தல்.

''இழுத்தல் கிடத்த லிருத்த
லிரண்டிற்கு மேறாமே—என்பில்
முழுத்தனு வண்ணு கங்காள
மந்த கதி சீராமே
உருவுத லென்பது மித்தொழி
லேநரம் பூராகி—மனம்
வெருவுறு மூன வினைகளை
மெய்யடும் வேறாகி

வளக்குறு மெண்ணெயி லேயிது செய்வது
வல்லாண்மை—உடற்
சுளுக்களுர் போக்கிச் சுளுக்கென
வாவதித் தொல்லாண்மை.'' (தே. தரு.)

8. மல்லாத்துதல்.

''மல்லாத்து தல்செயிற் கங்காள
மொன்றத்தால் வாங்காதே—வதி
யெல்லாத்திலு முத்தம் மேயிருத்
தல்வதி யேங்காதே
ஆகிலு மந்த மிடை சண்ட
மென்ப தடைவாக—லகு
வேக மிலாமல் மூன்று
வரினு மிடைவாக
விந்நிலை நாலினில் மண்டில
மாவளை வில்லாக—மறை
சொன்ன செவியள வாக
வடல் வளை சூலேக
வாத பித்தங்கப மூன்றுந்
தம நிலை வாஞ்சிக்கச்—செய
மாதார மான வுயிர்நிலை
நீத்திய மாஞ் சிக்க
வந்திமை யான மலட்டையு
நீக்கிடு மானார்க்கு—அவர்
தொந்தி மலட்டுக் குடலைத்
திருத்திடுஞ் சூனார்க்கு.'' (தே. தரு.)

9. அசைத்தல்.

''அசைத்த லிலக்கண மெத்தவுண் டப்படி
யார் செய்வார்—சற்றே
அசைத்தவ ராயிடி லாரிப்
படிமிசை யாருய்வார்
நடத்தலொன் றன்றிய நாலுவதிகளு
நன்றாமே—செயுந்
திடத்துட னேயது செய்யினும்
வன்மைகள் சென்றாமே
கங்காள மாதி யெலும்புக ளைந்து
கருவாகும்—தொனி
யுங்காரமீற முவேச
முஞ்செய்வ துருவாகும்

எண்ணெயு மெண்ணெயை யின்றிய
மத்தன மீதென்னத்—தொழில்
பண்ணையி லேமல்ல சாம்பிர
தாயப் படிதுன்ன.'' (தே. தரு.)

மல்லக சாம்பிரதாயம்

''நாடிகளேறு முரோமத் துவார நளிவாத—மனல்
கூடிய வேலையின் மேலிடு சன்னிக் குறியீதே
மான வியாதிப் படலத்தைச் சாடி யசையாமல்—வலி
யீனமி லாவினை யைத்தெறுந் தீதுக் கிசையாமல்
நாடி களிலுயிர் நாடிய நாடி நடுமார்பிற்—புறங்
கூடிய நாடி வெரிந்பழு விற்படர் கொள்சார்பிற்
சுழிக்கரு காயரு காநரம்பின் சுழலென்று—மறை
யொழுக்க ருரைத்தனர் வஞ்சகர் நெஞ்சை யுழலென்று
கீல்க ளசையவ வயவங் கம்பித்தல் கோளென்பு—தசை
தோல்க ளிவைகளில் சொன்னவவதியின் றொழில்வன்பு
தன்னிற் பழகப் பழ ப் பிடிப்பது நீ தப்பாதே—அதை
யுன்னிற் புகலத் திரிகரணங்களுக் கொப்பாதே
பேதைக்கொரு வரனங்கவின் பத்திறம் பேசாமல்—கற்றுக்
கோதற்றல் போலப் பருவத்தி லேவருங் கூசாமல்
ஆத னாலிது வேத சிருட்டி யறிவாயே—அறி
பேதமை யின்றி யறிவா லறிதி பிரிவாயே
பாண்டிதத் தோடிஃதுஞ்சம மென்கிற பண்பாலே—இதை
வேண்டியு ரைத்தனன் றேனைய ளாவிய வெண்பாலே
கற்பவர் கற்கின் றவர்கற்றுக் கொண்டவரா மூன்று—வகை
உற்றவர்க் கும்மிது பங்க நெறிக்குர மாமூன்று
வாகடர்க் கிம்முதல் மத்தன மேகை வழிநாடி—யறி
யூகைவி ரனெட்டை போக்கிப் பிடிப்ப தொருகோடி
ஆகையி னாலிதை வாகடர் பார்க்கு மனுமானம்—இன்றி
வாகையினாற்கற்றுக் கொண்டனன் மரபு மனுமானம்
ஓதுநன்மேலோர் முன்னம் உரைத்த படிபோலும்—பொருள்
மேதக வோதினன் செந்தமிழ் நடைவள முறவாலும்.''
(தே. தரு.)

X. இரத்தத்தை வெளிப்படுத்துவதால் தீரும் பிணிகள்

உடல், உணவு செயல் இவைகளின் காரணங்களால் பிணி படும். அவ்வாறு பிணிபடும் போது, சாரம் முதலிய ஏழு உடற்கட்டுகளும் ஒன்றன்பின் ஒன்றாய்ப் பிணிப்படக்கூடும். அவ்வாறு உண்டாம் பிணிகளைத் துவக்கத்தில் பேதி, வாந்தி, வியர்வை, மூத்திரம் இவற்றைப் பெருக்கல் ஆகிய பரிகார முறைகளால் குணப்படுத்தலாம்.

குருதி முதல் மற்றைய உடற்கட்டுகள் கெட்டிருப்பின் குற்றமுற்ற குருதியை வெளிப்படுத்திப் பரிகரிக்க வேண்டும்.

குருதியை வெளிப்படுத்தும் முறை மூவகைபபடும்

1. அட்டைவிடல், 2. கொம்புறிஞ்சல், 3. குருதிவாங்கல்.

பழக்கமாய் குருதியைக் கீறி வெளிப்படுத்தி, உடலைக் குற்ற மின்றி வைத்திருக்கும் மக்களிடத்து நோய்கள் அணுகா.

செந்நீரைக்கீறி வெளிப்படுத்தற்குரிய நோய்கள்

பயித்தியம், தலைவலி, கண்ணோய், காதுநோய், நாக்கு நோய், சூலை, பக்க சூலை, ஏரண்டம், கண்டமாலை, யானைக் கால், கணுக்கால் வீக்கம், நரித்தலை வாதம், மூடக்கு வாதம், இடுப்பு வாதம், இரத்த பித்தம், இரத்தவாதம், இராசப் பிளவை, தோலில் உண்டாம் சொறி இந்நோய்களில் இரத்தத் தைக் கீறி, வெளிப்படுத்தல் வேண்டும்.

இரத்தத்தைக் கீறி வெளிப்படுத்துவதற்குத் தகுதியற்ற நோய்கள்

இளைப்பு நோய் (கயம்), இருமல் (காசம்), உடல் முற்றும் உண்டாம் வளிநோய், காக்கைவலி, காமாலை, பாண்டு முதலி யன.

ஈதன்றிப் பயந்தவன், குடியன், வெறியன், கூத்தாடி, சிற்றின்பத்தில் ஈடுபட்டவன், ஆண்தன்மை அற்றவர்கள், குழந்தைகள், கிழவர்கள், நோயின்றி நீங்கினவர்கள் ஆகிய இவர் களுக்குச் செந்நீரை வெளிப்படுத்தல் கூடாது. இவ்வாறு கூறியிருப்பினும், நஞ்சுக்கடியினால் உயிருக்கு இறுதி நேரிடும் சமயத்தில் கீறி குருதியை வெளிப்படுத்தலாம்.

இரத்தத்தை வெளிப்படுத்தக் கூடிய காலம்

கார்மேகம் கம்மி இருக்கும் காலத்திலும், காற்று வீசும் போதிலும் குளிர்ச்சி மிகுந்திருக்கும் போதும் கீறிக் குருதியை விடக்கூடாது. ஏனெனில், செந்நீர் சரிவர வெளியாகாது, அப்படிவரினும், விரைவில் உறைந்து விடும். இரத்தப் பெருக்கு அடைபடுவதால் வெட்டுவாயில், குற்றம் உண்டாகும்.

குருதி வாங்கும் முறைகளாகிய அட்டைவிடல், கொம் புறிஞ்சல் முதலியவைகளின் விரிவை இரண மருத்துவத்தில் காணலாம்.

முக்குற்றங்களை நீக்கும் வழி

(எண்சீர் விருத்தம்).

''ஓதுகின்ற மலக்கட்டை யொழிய வைத்தால்
உடலிலுள்ள வாதையெலா மொடுங்கிப் போகும்
தாதுற்ற சிறுநீரைத் தெளிய வைத்தால்
சடத்திலுள்ள வேகமெலாந் தணிந்து போகும்
கோதுற்ற உமிழ்நீரை முரிய வைத்தால்
கூட்டிலுள்ள பகையெல்லாம் குலைந்து போகும்
கோதடர்ந்த இவைமூன்றும் களங்க மற்றால்
கொல்லவந்த காலனையும் வெல்ல லாமே.''

(கருத்துரை) இச் செய்யுள் வாத பித்த, ஐயமென்னும் முக்குற்றங்களையும் நீக்கும் வழிகளைக் கூறுகின்றது.

(பதவுரை) ஓதுகின்ற—(பிணியாளர்) சொல்கின்ற, மலக்கட்டை—மலச் சிக்கலை, ஒழியவைத்தால்—போக்கினால், உடலிலுள்ள வாதை எல்லாம்—உடலில், நோய்களை உண்டாக்கி வருத்துகின்ற வாத துன்பங்களெல்லாம், ஒடுங்கிப்போகும்—அடங்கிவிடும் தாது உற்ற—வன்மை பெற்ற, சிறுநீரை—மூத்திரத்தை, தெளிய வைத்தால்—சூடு,பல நிறங்கள் முதலியவையில்லாமல் தெளியும் படி செய்தால், சடத்தில் உள்ள—உடலிலுள்ள, வேகம் எல்லாம் —பித்த வேகமெல்லாம், தணிந்து போகும்—தண்ணியதாய்விடும் கோது உற்ற கெடுதியை யடைந்துள்ள, உமிழ்நீரை—எச்சிலை முரிய வைத்தால் —கோழையைப் போலிராமல் நீரை போல் தெளிவாகும்படி செய்தால், கூட்டில் உள்ள—உடம்பிலுள்ள, பகை எல்லாம்—ஐய நோய்ப் பகை எல்லாம், குலைந்து போகும்— கெட்டுப்போகும், கோது அடர்ந்த—நிறைந்த குற்றங்களை யுடைய, இவை மூன்றும்—வாத, பித்த, ஐயங்களாகிய இம் மூன்றும், களங்கம்அற்றால்—தங்களிடம் இருக்கும் நோய்க் குற்றங்கள் நிங்கப்பெற்றால், கொல்லவந்த—உயிரை உடலிலிருந்து பிரிக்க வந்த காலனையும்—நமனையும் வெல்லல் ஆம்—வென்று விடலாம்.

(பொழிப்புரை) மலச்சிக்கலை நீக்கினால் வாதமும், சிறு நீரைத் தெளியும் படி செய்தால் பித்தமும், எச்சிலைத் தெளியும் படி செய்தால் ஐயமும் தத்தம் வலிகெடும். ஆகையால், நமனுக்கு வேலையில்லை என்பதாம்.

வாதம் மலத்தில் அடங்குவதாலும், பித்தம் சிறுநீரில் அடங்குவதாலும், இவ்வாறு கூறினர். இதை,

'அறிந்திடும் வாதம் அடங்கு மலத்தினில்
பிறிந்திடும் பித்தம் பேராஞ் சலத்தினில்.''

பவற்றாலும், 'வாயுவைவிரலே மலசலங் கட்டிடும்.' என்ட

XIX நீக்கம்.

நீக்கம் என்பது என்ன? உடலைப் பெற்ற ஒருவன், அதனை நெடுங்காலம் காப்பதற்குரிய நெறிகளைக் கடைப்பிடித்து நடக்கத் தவறுவானாயின், வளி முதலிய மூன்று நோய்களால் துன்பமடைவான். அங்ஙனம் வருவித்துக்கொண்ட பிணிகளைப் போக்கும் விதிகளே 'நீக்கம்' எனப்படும்.

நீக்கம் நான்கு பகுதி ளை உடையதாகும்

1. பிணியுற்றவன்	3. மருந்து
2. பிணிதீர்ப்பான்	4. மருந்தியற்றுவான்

இதனை அடியிற்கானும் தமிழ் மறையாலுணர்க

' உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பானாற் கூற்றே மருந்து''.

பிணியுற்றவன் நடக்கை

பிணியுற்றவன், (1) பொருளுடைமை, (2) மருத்துவன் சொல் வழி நிற்றல், (3) நோய் நிலையுணர்தல், (4) மருத்துவத் துன்பம் பொறுத்தல் ஆகிய இந்நான்கு குணங்களைப் பொருந்தியவனாயிருத்தல் அவசியம். மேலும்,

''அருப்பமுறி னரசெனினுந் தீர்ப்பா னைக்கண்
டழைத்தலனை யாதியரு மவனென் றோர்தல்
விருப்பமுறத் தவிசிருத்தல் மெய்யன் பாடல்
வேண்டுடலீந் திடலுறையேற் றுண்ட லத்தைத்
திருப்பவருந் துயராற்றற் சரதங் கூறல்
செப்புளொடுங் கற்பன்மருந் தொழித்த லூழா
மிருப்பகற்று முறைகுயிற்ற லிவையுள் ளானேல்
இவனாமம் புகலுநர்க்கு மின்று நோயே.''

(தே.தை.வ.)

(பொழிப்புரை) அரசனேயாயினும் பிணியுற்றால் மருத்துவரை உபசாரத்துடன் வரவேற்றல், தாய், தந்தை, குரு, தெய்வம் நமக்கு இம் மருத்துவரே என்று நினைத்தல், அவர் மகிழ்ந்து விரும்புமாறு இருக்கை கொடுத்து அவரிடம் உண்மையான அன்பு பாராட்டல், மருந்துக்கு வேண்டிய பொருளைக்கொடுத்தல், அவர் கொடுக்கின்ற மருந்தை இரண்டு கைகளாலும் பணிவுடன் வாங்கி உண்ணுதல், இம் மருந்து வேண்டா என்று வேறு மருந்து மாற்றுங்கால் உண்டாகும் வருத்தத்தைப் பொறுத்துக் கொள்ளல் மருந்து சாப்பிடுவதனால் தனக்கிருக்கும் குணாகுணங்களை உள்ளபடியே உண்மையாய்ச் சொல்லுதல், அன்றியும், அவர் சொல்லுக்கு அடங்கியிருத்தல், பலமருந்துகளை யுண்ணாமல் நீக்குதல்

பழைய வினையால் பிணிதோன்றுவதால், அவ்வினையைப்போக்கிக் கொள்ளுதல் என்னும் இக்குணங்கள் பொருந்தியவனாயிருப்பனாகில், இத்தகையவன் பெயரைச் சொல்லுவோர்களையும் பிணியணுகாது.

மேற் செய்யுளில் கூறப்பட்ட அனையாதியரும், அவனென்றோர்தல் என்பதனையும் தவிசிருத்தல் வேண்டும் என்பதனையும் கீழ்க்குறிப்பிடும் செய்யுளிலும் காண்க.

''நோயறி கின்றான் றன்னை
நொய்யவே யழைத்து வந்து
பாய்தனி லிருத்தி வைத்துப்
பரிவுடனவனை நோக்கித்
தாய்தந் தையர்போ லெண்ணித்
தாழ்மையாய் நாடி காட்ட
ஆவியைச் சொல்ல வல்லன்
அவன்றந்தை குருவு மாமே.''

'உறையேற்றுண்டல்' என்பது.

''ஆய தாய்தந்தை குருதெய்வம்
அனைத்துநீ யென்றே
நேய மெய்ம்மையா மன்பொடு
நிறைவுறு மனத்தின்
ஏய வெம்மருந் தாயினும்
ஈந்ததைச் சுருதி
நாய கன்றரு வமுதமி
தாமென நயந்தே.''

'மெய்யன் பாடல்' சரதங் கூறல்' வேண்டுட வீந்திசில்' என்பவற்றைக் குறிக்கும்.

*குறிப்பு, 'வேண்டுட லீந்திடல்', என்பது நோய்க்குத் தகும் பொருளீதலின் அளவு.

''கேளப்பா தோடத்துக் கீர்பத் துப்பொன்
கெணிதமாய்ச் சுரத்துக்குப் பத்துப் பொன்கேள்
வாளப்பா க்ஷயமுதல்நீ ரிழிவு காசம்
வரிசையாய் மூன்றுபத்துப் பொன்னே கேளாய்
நாளப்பா மருந்தீட்டு முக்கால் வாங்கு
நலமில்லாப் பிளவைபவித் திரமுங் குட்டம்
சூளப்பா வீரைந்து பொன்னே வாங்கு
துடியான தாதுநட்ட மீரைந்து வாங்கே''.

(கருத்துரை) இச்செய்யுள், தோடம், சுரம், க்ஷயம், நீரிழிவு, காசம், பிளவை, பவுத்திரம், குட்டம், தாதுநட்டம் என்னும் இந்நோய்களுக்கு மருத்துவர்பெறும் பொன்னளவு கூறுகின்றது.

(பதவுரை) தோடத்துக்கு—(சுரத்தின் முதல், இடை, கடை என்னும்மூன்று காலங்களில்எக்காலத்தில்நேரிடும் அபத்தியமானாலும், அதில் உண்டாகும் ஏழுவகைத்) தோஷங்களுக்கு மருந்து கொடுத்து அவற்றை நீக்க, ஈர் பத்துப்பொன்—இருபது பொற்காசும், சுரத்துக்கு—எவ்விதக் காய்ச்சலுக்கும், பத்துப்பொன்—பத்துப் பொற்காசும், கேள்—கேட்பாய், க்ஷயம்—க்ஷயம் என்னும் இளைப்பு நோய், நீரிழிவு—நீர்நோய், காசம்—ஈளைநோய், வரிசையாய்—முதலாய்ச் சொல்லப்பட்ட நோய்களுக்கு, மூன்று பத்துப் பொன்—முப்பது பொற்காசு, வரிசையாய்க் கேளாய்—ஒவ் வொன்றிற்கும் மதிப்போடு கேட்டு வாங்கு, மருந்து இட்டு—உயர்ந்த மருந்து கொடுத்து, முக்கால் வாங்கு—(கேட்ட தொகையில்) முக்காற்பங்கு வாங்கிக்கொள்வாய்; நலம் இல்லா—உடம்புக்கு யாதொரு நன்மையும் தாராத, பிளவை—பிளவை நோய், பவுத்திரம்—பவுத்திரநோய், குட்டம்—குட்டநோய் (என்னும் இந்நோய்களுக்கு), ஈர் ஐந்து பொன்—பத்துப்பொற்காசும், துடியான—உடம்புக்கு வன்மையைத் தரக்கூடியதான, தாதுநட்டம்—இந்திரியக்குறைவுக்கு ஈரைந்து வாங்கு—பத்துப்பொன்வாங்குவாய்.

(பொழிப்புரை) ஏழுவகைத் தோடங்களுக்கும் இருபது பொற்காசும்; சுரத்துக்குப் பத்துப் பொற்காசும்; க்ஷயம், நீரிழிவு காசம் என்னும் நோய்களுக்கு முப்பது பொற்காசுகளும்; பிளவை, பவுத்திரம், குட்டம் என்னும் நோய்களுக்குப் பத்துப் பொற்காசும்; இந்திரியக்குறைவுக்குப் பத்துப் பொற்காசும் பெறல்வேண்டும். இக்காசுகளைப் பெறும்வழி, முன்னர் மருந்து கொடுத்து முக்காற்பங்கு பொன்பெற்று, நோய்தீர்ந்த பின்மற்றக் காற்பங்கு தொகையைப் பெறல்வேண்டும்.

''வாங்குவாய் மேகமென்ற சூலைக் கெல்லாம்
வரிசையாய்ப் பணம்பத்து மைந்துங் கூட்டி
நீங்கிடவே பணமிருபத் தைந்துங் கேளாய்
நிலையில்லாச் சத்திகுன்மம் வயிற்றின் நோய்க்கும்
தாங்கிட்ட மகோதரமும் ரத்த பித்தம்
தங்குமிலிங் கப்புற்றுச் சோபா ரோகம்
பாங்குபெறப் பதினைந்து பணமே கேளாய்
பழுதுசொன்னல் மருத்துப்பை கட்டிப் போடே.''

(கருத்துரை) இச்செய்யுள், மேகசூலை, சத்திகுன்மம், மகோதரம், இரத்தபித்தம், இலிங்கப்புற்று, சோப நோய் என்னும் இவற்றிற்கு மருத்துவர்பெறும் பொன்னளவையும், அது கொடாவிடின் மருந்து கொடுக்க வேண்டாமென்பதையும் கூறுகின்றது.

(பதவுரை) மேகம் என்ற சூலைக்கு எல்லாம்—எல்லா மேகச்சூலைகளுக்கும், வரிசையாய்ப் பணம் பத்தும் ஐந்தும் கூட்டி—முறைப்படி பதினைந்து பொற் பணம், வாங்குவாய்—பெற்றுக்கொள்வாய், நிலையில்லா—நிலையாத, சத்தி குன்மம் வயிற்றின்

மீநோய்க்கும்—வாந்தி குன்மம் வயிற்று வலி என்னும் இவைகளுக்கும், நீங்கிட—இவைகள் நீங்கி நன்மையடைய, இருபத்தைந்து பணமும் கேளாய்—இருபத்தைந்து பணம் கேட்பாய்; தாங்கு இட்ட—நிலைத்த, மகோதரம் இரத்த பித்தம் தங்கும் இலிங்கப்புற்று சோபா ரோகம்—மகோதரம் முதலிய இந் நோய்களுக்கு, பாங்குபெற—நன்மையடைய, பதினைந்து பணமே கேளாய்—பதினைந்து பணம் கேட்பாய்; பழுது சொன்னால்(அவ் வாறு கேட்பதிற்) குறை சொன்னால், மருத்துப்பை—மருந்திருக்கும் பையை, கட்டிப்போடு—கட்டிவைத்துவிடுவாய்.

(பொழிப்புரை) மேகசூலைக்குப் பதினைந்து பொற்பணமும். சத்தி குன்மம் வலிகுன்மங்களுக்கு இருபத்தைந்து பொற்பணமும். மகோதரம் இரத்த பித்தம், இலிங்கப்புற்று சோபைரோகம் என்னும் இவைகளுக்குப் பதினைந்து பொற்பணமுங் கேட்பாய். கொடேனென்று சொன்னால் மருந்துப்பையைக் கட்டிவிடுவாய். (மருந்து கொடாதே என்பதாம்.)

''போடப்பா விந்தமுறை பொருளே தந்தால்
 பூட்டகலு மவிழ்தங்கள் கொடுத்துத் தீர்ப்பாய்
கோடப்பா கோடியண்ட ரோகமெல்லாம்
 குறிப்பாகப் பாடுவதற் கென்னால் கூடா;
தேடப்பா கேளந்த வயித்தி யர்க்குச்
 சிறப்பளித்த மட்டுமட ருரோகந் தீரும்;
நாடப்பா நிதியாசை பிரியா தப்பா
 நாவினு லவிழ்தவிலை சொல்லி னேனே'

(கருத்துரை) இச்செய்யுள், 'கேட்டபடிபொருள்தந்தால் மருத்துதவஞ் செய் எண்றும் நோய் வகைகளைத் தன்னால் எடுத்துச் சொல்லமுடியாதென்றும், மருத்துவர்க்குச் சிறப்பளித்த அளவில் நோய் தீரும் என்றும், 'மருந்துகளுக்கு விலைசொன்னேன்,' என்றுஞ் சொல்லுகிறது.

(பதவுரை) இந்தமுறை—(நான்சொன்ன) இந்த அளவில் பொருள் தந்தால்—பொற்காசுகொடுத்தால், பூட்டு—நோயின் கலப்பு, அகலும்–நீங்குகின்ற, அவிழ்தங்கள்—மருந்துகளை, கொடுத்து—ஈந்து தீர்ப்பாய்—(நோய்களைக்) குணப்படுத்துவாய் கோடப்பாகோடிஅண்ட ரோகம்எல்லாம்—அண்ட நோயின்வேற்றுமைகளை குறிப்பாய்ப்பாடுதற்கு என்னால் கூட வகைப்படுத்திப் பாடஎன்னால் முடியாது; கேளாத—மருத்துவஞ் செய்யப் பொருள்கேளாத, வயித்தியர்க்கு—மருத்துவர்களுக்கு (அளவுபடி பொன் கொடுத்து), சிறப்பு அளித்த மட்டும்—பெருமை படுத்தின அளவுக்கேற்ப அடர் உரோகம் தீரும்—மிக்க நோய்கள்நீங்கும் நாடப்பாநிதி [மேற்கூறியபடிசெல்வத்தை விரும்புவாய்; ஆசை பிரியாது—செல்வத்தில்ஆசைவிடாது அவிழ்த விலை—மருந்தின் விலை, நாவினால் சொல்லினேன்—சொன்னேன் (அவ்விதிப்படி பிணியாளர்களும் மருத்துவர்களும் நடந்துகொள்ள வேண்டும் என்பது குறிப்பு.]

(பொழிப்புரை) மேலே சொல்லப்பட்டபடி பொற்காசுகள் கொடுத்தால் மருந்துகொடுத்து நோய்களைத் தீர்ப்பது முறைமையாம்.

''சொல்லாத அவிழ்தங்கள் தம்மை வேண்டிச்
சோர்வில்லா தென்தேகம் வலுத்துப் போச்சு
எல்லாரு மிப்படியே கொண்டா ராஞல்
எமமிருத்துக் தட்டுமடா வென்று சொல்லி
நில்லார்கள் வரைதப்பு மென்று சொல்லி
நிச்சயமாய்ச் சாபமிட்டார் சாபந் தீர்ந்து
வல்லாரும் வாதிமகன் வைத்யன் தீர்ப்பான்
வணங்கி வந்தால் பிணியாளர் தகைந்து தீரே.

(கருத்துரை) இச் செய்யுள் முன்னோர்களிட்ட சாபத்தை மருத்துவனே தீர்ப்பானென்று கூறுகின்றது.

(பதவுரை) சொல்லாத—விலைசொல்லாத, அவிழ்தங்கள் தம்மைவேண்டி—மருந்துகளை விரும்பி உண்டு, சோர் வில்லாது—சோர்வை அடையாமல், என்தேகம் வலுத்துப்போச்சு—என்உடல் வன்மையை யடைந்து விட்டது, எல்லாரும் இப்படியே கொண்டார் ஆனல்—உலகிலுள்ள யாவருமே இப்படி மருந்தருந்து வாராஞல், எமமிருத்துத்தட்டும்—எமனல் ஏற்படும் மரணவாதனை எல்லாருக்கும் இல்லாமற் போகும், என்று சொல்லி—என்றுபகர்ந்து, நில்லார்கள்—ஒரு நெறியில் நிற்கமாட்டார்கள் வரைதப்பும்—வரம்பு தவறுவார்கள், என்று சொல்லி—என்று கூறி நிச்சயமாய்ச் சாபம் வைத்தார்—உண்மையாய்ச் சாபம் கொடுத்துவிட்டார் வல்லாரும் வாதிமகன்—வாதத்தில் வல்லமை பொருந்தியவஞன, வயித்தியனே—மருத்துவனே, தீர்ப்பான்—அச்சாபந்தீர்ப்பவனவான், பிணியாளர் வணங்கி வந்தால்—பிணியாளர் வணக்கத்துடன் வருவார்களாஞல், தகைந்துதீரோ—அவர்களுடைய நோயை அன்புவைத்துத் தடுத்துத் தீர்ப்பாயாக

"தீரென்பா னுபகாரம் நிரம்பச் சொல்வான்
தீர்ந்தவுட னரைக்காசு மீயான் பாவி
தீராத பி ரிதிரும்பி பெருவ யிற்ருல்
செகமெல்லாந் திரிந்தாலுந் தீரா தப்பா
தீராத சாபத்தாற் பொருளு மற்றுத்
திரும்பிவந்து வைத்தியரைக் கும்பிட்டாலும்
தீராதிந் நோயென்று கணித்துச் சொல்லிச்
செப்பிடுவீ ரவனோயுந் தேகத் தாமே''.

(கருத்துரை) இச்செயுள் பிணியளான் தன்மைகளையும், மருத்துவனுக்கு அறிவையும் கூறுகின்றது,

(பதவுரை), தீர் என்பான் (மருத்துவரிடம்)வநது இந்நோயை தீர்த்து விடுங்களென்று சொல்வான், உபசாரம் நிரம்பச் சொல்வான்—மிக்க இனிய மொழிகளைச் சொல்வான், தீர்ந்தவுடன்—(அவனுபசாரத்தின்) வலைப்பட்டு நோயைத்தீர்த்து விட்டால் தீர்ந்தவுடன், அரைக்காசும் ஈயான்—அரைக்காசும் கொடுக்க மாட்டான், பாவி—அன்னுன் பாவம் மிகவும் உள்ளவனுவான் (அவனுக்குவந்த) அப்பிணி—அந்த நோய், தீராது—நீங்காது—திரும்பி—அந்நோய் அவனை மறுபடியுந் தொடர்ந்து, பெரு வயிற்ருல்—மகோதர நோயால், (அதைத் தீர்த்துக்கொள்ளஅவன் செகம் எல்லாம் திரிந்தாலும்—உலகம் முழுமையும் திரிந்து பல மருத்துவரிடம் சென்ருலும், தீராது அப்பா—அப்பனே அவன்நோய் தீராது. தீராதசாபத்தால்—(முன்னேர்கள் கூறிய) நீங்கா சாபத்தால், பொருளும் அற்று—அவன் தேடின பொருள்களெல்லாம் ஒழிந்து, (பிறகு) திரும்பிவந்து—மீண்டும்வந்து, வயித்தியரைக்கும்பிட்டாலும்—மருத்துவர்களை வணங்கினுலும், இந்நோய்—இந்த நோயானது தீராதுஎன்று—நீங்காதென்று, கணித்து சொல்லி செப்பிடுவீர்—அந்நோய் உணர முன்னேர்கள் சொல்லியிருக்கின்ற எண்வகை ஆராய்ச்சி முதலியவற்ருல் கணித்துச் சொல்வாய் அவன் நோயும்—அவனுடைய நோயும், தேகத்து ஆம்—அவனுடம்பின் கண்ணே நிலைத்திருக்கும்.

(பொழிப்புரை) பிணியாளன், மருத்துவனிடம் வந்து இந்நோயைத் தீர்த்து விடுங்கள் என்று இனிய மொழிகள் பலசொல்வான்; நோய்தீர்ந்தவுடன் அரைக்காசும் கொடான்; அவன் பாவமே ஒருவடிவெனக் கொண்டவனுவான்; அவனுக்கு அந்நோய் தீராமல், திரும்பி, மகோதரமாகமாறி, அதைத்தீர்த்துக் கொள்ள வழி தெரியாமல் பல நாடுகள் திரிந்ததனுல் கைப்பொருள்கள் மொழிந்து விடும். மீண்டும் அவன் முன்வயித்தியினிடம் வந்து வயித்தியனை கும்பிடுவான். ஆயினும், மருத்துவன் பல வழிகளாலும் ஆராய்ந்து, இந்நோய் தீராது என்று சொல்லிவிட வேண்டும். அதனுல், அந்தநோய் அவன் உடம்பிலேயே அழுந்திக் கிடக்கும்.

''கண்டதன் வியாதி தன்னைக்
களங்கம தறவே பேசிப்
பண்டிதர் தம்மைக் கண்டால்
பத்தியும் பரிவுங் கூர்ந்து
அண்டியா சனத்தில் வைத்தங்
கடைகாயு மிலையு மீந்தே
ஒண்டொடி மறையோர்க்கான
வொருதன மீத லாமே.''

என்பதனுல்,

''சரதங் கூறல்'' என்பதையும்
''உண்டு பத்தியம் சொற்றிடு
முறைப்படியு ஞற்றிக்

கொண்ட நோய்த்திறம் படிறின்றிக்
குறைவறக் கூறிக்
கண்ட பேரெலா மொன்றதாக்
கருதுவோர் தமக்கு
மண்டலம்புகழ் மருத்துவர்
பண்டிதம் வகுக்க''.

என்பதன்றால்.

''ஊழாம் இருப்பகற்று முறைகுயிற்றல்''

என்பதனையும்

''பண்டுதான மாந்தர் செய்த
பாவத்தால் வந்த நோய்கள்
கண்டுதா னவற்றைத் தீர்க்குங்
காவலர் தம்மை நோக்கி
விண்டுதான் குறைகள் சொல்லி
மேவிய தூபங் காட்டிக்
கொண்டுதாம் பூல மேந்திக்
குருக்கள்போல் நினைப்ப தாமே''.

என்னும் இச்செய்யுளா லறிக.

பிணியாளக்கு அறிவுறுத்தல்

''கருத்துறவே வாதிமகன் வைத்தியஞ் செய்தால்
கதிகெட்ட நோயாளி பணிய வேண்டும்;
கருத்துறவே மருந்துக்குப் பத்யம் வேண்டும்
கைமுறையாச் செய்கின்ற வைத்தியர்க்குக்
கருத்துறவே மனதுவர நடக்க வேண்டும்;
கழுதைபோ லேயிருந்தால் பலியா தொன்றும்
கருத்துறவே யிதற்கல்லோ சித்தர் சாபம்
காட்டினார்; மனதுவர நடந்துகொள்ளே.''

(பொழிப்புரை) வாதஞ் செய்ய வல்லவனான மருத்துவன் உள்ளம் வந்து வைத்தியஞ் செய்வானுனல், வேறுவழியிற்சென்று தன்னுடலைக் காத்துக்கொள்ளற்கியலாத நோயாளியானவன் அம்மருத்துவனை வணங்க வேண்டும்; அவன் சொன்ன பத்திய வழியில் இருக்கவேண்டும்; பல நோய்களைத் தீர்த்துத் தீர்த்து வழக்கப்பட்ட வைத்தியர்கள், உளமுவந்து வயித்தியம் செய்யும்படி அவர்களிடத்தில் நடந்துகொள்ளல் வேண்டும்; அவ்வாறு செய்யாமல் கழுதைபோலச் சும்மா இருந்து விட்டால் அவர் கொடுக்கும் மருந்தொன்றும் பலியாது. இவ்வாறு வணங்காத நோயாளிகளுக்கு மருந்து பலிக்கக்கூடாதென்று சித்தர்களெள்

லாரும் கூடிச் சாபமிட்டிருக்கின்றார்கள். ஆகையால், பிணியாளன் தனக்கு உண்டாயிருக்கும் நோயை நீக்கிக்கொள்ள விரும்புவானானால், மருத்துவர் மனம் வந்து நன் மருந்து கொடுக்குமாறு நடந்து கொள்வானாக.

''வாதி மகன்'' என்பதற்கு இவ்வாறு பொருள் கொள்ளாமல் ''வாதிக்கு மகன்'' என்று பொருள் கொண்டால் வாதிகளுக்குப் பிறந்த பிள்ளைகளெல்லாம் மருத்துவர்களாகாமையின், அது பொருந்தாமையறிக.

நடந்துகொள்ளு நோயாளி ராசா வாக
நாட்டினு லவர்க்கங்கே மருந்துா'ன்றுது
தொடர்ந்துபோ யவரிடத்திற் பத்தி வைத்தால்
துரும்பாகப் போகுமடா நோய்களேது
அடர்ந்துபோ யவர்வாசல் காத்தா ராலுல்
அக்கினியிற் பஞ்சுபோலகலு நோய்கள்
சடந்தனக்கு நோய்வந்தால் குருவே யென்பான்
சாதுரிய மாய்த்தீர்த்தால் தம்பியாமே.''

பொழிப்புரை!—நோயாளியானவன் தன்னை அரசனாய் எண்ணிக் கொண்டு மருத்துவனிடத்தில் அதிகாரவகையில் மருந்து வாங்கின் அந் நேயாளிக்கு அவ்வைத்தியன் கொடுக்கும் மருந்து பலியாது ஆகையால், நோயாளியானவன் மருத்துவனிடத்தில் தொடந்து அன்பு வைத்தால், அவன் நோய், துரும்பு காற்றில் பறந்தோடுவது போலப் போய்விடும். இன்னும் அவ்வைத்தியய் வீட்டிற்குச் சென்று காத்திருந்து மருந்து வாங்கினுல், அவன் நோ அக்கினியிற்பட்ட பஞ்சைப்போல, உருவற்றுப் போய்விடும் நோயாளியானவன் உடம்புக்கு நோய்வந்தால் வயித்தியக் குரு வென்று சொல்வான். அவனுல் அந்நோய் தீர்ந்துவிட்டால் அம்மருத்துவனை ''என்ன தம்பி என்று தனக்கும் சிறியவனாக் கருதி விளிப்பான்.

நோயாளி வைத்தியன் வீட்டில் காத்திருக்க வேண்டு மென்மா பதை

'பிஷக்குகள் வாசல் ஆர்த்தர் கட்டணமாய்க் கிடக்கு ப் போலே, எனத்திருப்பாவை வியாக்கியானத்திற் புகன்றிருத்யத காண்க.

மருத்துவனைக் குரு என்று சொல்லும் வழக்கத்தையுடைவ் நோயாளி அவ்வாறு சொல்லுதலல்லாமல், நோய்தீர்ந்தபின்னர் வேண்டிய உபகாரஞ் செய்வதாயும் பகர்வான். ஆனுல், அல் வாறு செய்யான். ஆகையால் வயித்தியர்களின் மனம் வருந் தும் அதனுல், அவர்கள் அவனுக்குத் திரும்பவும் சிகிச்சை செய்ய ஒத்துக்கொள்ளமாட்டார்கள் ஆகையால் வயித்தியர்களின் மனம் வருந்தாதவாறு நடந்து அவர்களிடத்தில் மருந்து வாங்க வேண்டும்.

அவ்வாறு நன் மருத்துவரிடத்திலிருந்து மருந்தை வாங்கியுண்டால், எத்தகையநோயும் நீங்குப் நோயாளனுன நீ நன் மருத்துவரிடத்தில் அன்பு வைப்பது உண்மையானுல், அவர் கொடுக்கும் மருந்தைப்பெற்று உண்ணவும் வேண்டுமா? வேண்டா. அவ்வைத்தியர்கள் கைப்பட்டாலும் நோய் நீங்கிவிடும். அவ்வாறு வைத்தியபகளிடம் நம்பிக்கையும் அன்பும்வையாமலும், அவர்களுக்கு கொடுக்கவேண்டிய பொருளைக் கொடாமலும் ஏமாற்றினுல், அவ்வைத்தியர்களால் சாபம் நேரிடுவதுண்டு. அச்சாபம் நீங்காது.

மருத்துவன் இட்ட சாபத்தை பிணியாளன் நீக்கிக் கொள்ள உபாயம் கூறல்

''வாங்கியே விசுவாச மாகக் கொண்டால்
மருந்தென்ன வைத்தியன்கை பட்டாற் போதும்
ஏங்கியே திரியாதே வைத்தியம் சாபம்
ஏகிடவே சாபத்தின் நிவர்த்தி கேளு:
ஓங்கிலியோம் விந்துவுடன் நாதம் கூட்டி
உறவாகச் சிங்ஙன்ப தொருலட் சந்தான்
பாங்கியே வடுகனுடைச் சாத்தி யந்தான்
பார்பிரமன் மாயனெடு பகரக் கேளே.''

எங்ஙனமெனின் ''ஓம்கிலிம்சிங்'' என்பவற்றுடன் விந்துநாதங் கூட்டி ஒரு லட்சமுறை சொல்லி எண்ணினுல் அச்சாபம் நீங்கிப் போய்விடும். விந்து நாதங்களை, மந்திர நூலாராய்ச்சியுள்ளவர்பால் கேட்டுணர்க.

வயித்தியரிடும் சாபத்தை,

'' .. .. முழுதுந்தீர்த்த
வேதியர் தமையுள்ளாத விலங்கினரினமு நோயினுர்புத்தி
ராதியோடே நாளுக்கு நாட் டேய்வுற்று
நமபுரத் தேகுவார் .. ..''

எனத்தேரையர் தைலவர்க்கச் சுருக்கம் விரண சஞ்சீசிவித்தயிலச் செய்யுளாலும் உணர்க.

மருத்துவ முறைமைக்கு கட்டுப்படாதவர்

''பயந்தவரை மூத்தவரைப் பாலரைப்பெண் டீரைப்
பயந்தவரை மைத்துனரைப் பாறப்—பயந்தவரை
நட்டவரை வாகடத்தி னட்டினு லோட்டில்விதை
நட்டவரை நேர்க்குவீர் ஞள்.''

(தே.ப.)

(பதவுரை) பயந்தவரை—தன்னை ஈன்ற தாய்தந்தையர் களை, மூத்தவரை தனக்கு மூத்தவர்களான அண்ணன் அக்காள் முதலானவர்களை, பாலரை—பிள்ளைகளை, பெண்டீரை—மனைவியரை, பயந்தவரை—இயல்பாகவே அச்சமுள்ளவர்களை மைத்துனரை—மைத்துனர் முறையுள்ளவர்களை, பாறு அப்பு அயந்தவரை—ஓடுகின்ற (வியர்வை) நீரால் தளர்ந்தவர்களாகிய பித்த சேத்தும உடலையுடையவர்களை, நட்டவரை—சிநேகித் தவரை, வாகடத்தில் நாட்டினால்—மருத்துவமுறையில் நிறுத்தி னுல், ஒட்டில்விதை நட்டவரை நேர்குவர்—விதைமுளைத்துப்பயி ராம் நிமித்தம், ஓட்டில் நல்ல விதைகளை விதைத்தவருக்கு ஒப் பாவர், அவர்கள் யாதொரு பயனும் அடையாவாறு போல, மருத்துவரும் பயணடையமாட்டார், வீண்நாள்—(மருத்துவம் செய்து கொள்ளும் நோயாளியின் நாட்களும்) வீணாளாகும்.

(கருத்து) தாய்தந்தையரையும், அண்ணன் தமக்கைகளையும் பிள்ளைகளையும், மனைவிமாரையும், இயல்பாகவே அச்சமுள்ள வர்களையும், மைத்துனர்களையும், பித்தசேத்தும உடலையுடை யவர்களையும், நண்பர்களையும் மருத்துவமுறையில் வைத்தால், ஓட்டில் விதைநட்டவர்களைப் போலப் பயனையடையாமற் போவார்.

ஏனெனில், தாய்தந்தையரும், அண்ணன் தமக்கைகளும் அலட் சியத்தினாலும், பிள்ளைகளும், மனைவியரும் அறியாமையினுலும், சுபாவமாகவே அச்சமுள்ளவர்கள் மருந்தினுலெது விளையுமோ என்னும் ஐயத்தினுலும், மைத்துனர்கள் பரிகாசத்தினுலும், பித்த சேத்தும ரோகிகள் தங்கள் உடலின் இயற்கைக்குத் தக்கவாறு அவர்கள் துரிதப்படுகிறது போல எம்மருந்தும் ஒவ்வாமையாலும் நண்பர்கட்குப் பயமின்மையாலும், மருத்துவ முறைமைக்கு இணங்கி நடவார்கள்; ஆதலின், இவர்கட்கு மருத்துவம் செய் தல் பயனற்றதாகும்.

நோயாளிக்கு அறிவுறுத்தல்

"பாணித் தலத்தைப் பரிகாரி தீண்டுதற்குப்
பாணித் தலத்தைப் பரிகரித்துப்—பாணி
யமுதத்தை யொவ்வியபோ லாதரித்துப் போற்றி
யமுதத்தை நேர்வதியை யா."

(தே.ய.)

(பதவுரை) ஐயா—ஐய! பாணி தலத்தை பரிகாரி தீண்டுதற்கு —கையாகிய இடத்தை மருத்துவர் தொடுவதற்கு, பாணித்தல் அத்தை பரிகரித்து—தாமதித்தலாகிய அத் (துர்க்குணத்)தை நீக்கி, பாணி அமுதத்தை ஒவ்வியபோல் ஆதரித்து போற்றி—நீரானது பாலைக் கலந்ததுபோல, அமுதத்தை நேர்வதி—அமுதத் தை யொத்து இருப்பாய்.

நோயாளியே! உனது கையை மருத்துவர் தொட்டுப் பார்ப்பதற்கும் மற்றும் நோயின் விவரங்களை மறைவின்றித் தெரிவிப்பதற்கும் நேரத்தைக் கடத்தாமல் உன் துர்க்குணத்தையொழித்து நீரானது பாலுடன் கலந்துஒன்றானது போல, மருத்துவர் மன விருப்பத்திற் கிணங்கி, அவருக்கு விருப்பத்துடன் வணக்கம் செய்து, அவர் சொற்களைப் பகுத்துத் தர்க்கியாமல், கிளியைப் போல் மறவாமல் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருப்பாய் என்பதே இதன் கருத்து. எனவே, நோய் வந்தவுடனே மருத்துவர்க்குக் கை காட்டி மருத்துவம் செய்து கொள்ளாதிருப்பதும், தன் மனம் போனவழி நடப்பதும், மருத்துவரிடத்தில் உண்மைப் பத்தியும் உபசாரமும் இல்லாதிருப்பதும், அவர் வார்த்தைகளைப் பகுத்துப் பகுத்துத் தர்க்கிக்க எண்ணுவதும் துர்க்குணங்களென்பது குறிப்பு.

இதுவுமது

''பத்தியத்தை நோயையனு பானத்தை லங்கணத்தைப்
பத்தியத்தை முன்மருவன் பண்ணலிற்கொள்—பத்தியத்தை
யேகமா யார்த்தாலு மேறாச் செவிபோனே
யேகமா யார்த்தாலு மெய்.''

(தே.ய.)

(பதவுரை) பத்தியத்தை நோயை அனுபானத்தை இலங்கணத்தை—பத்தியத்தையும் நோயையும் அனுபானத்தையும் இலங்கணத்தையும், பத்தி அத்தை—(ஆகிய) இவ்வரிசையை, முன் மருவு அன்பு அண்ணலின் கொள்-வெகுநாள் பழகிய விருப்பமுள்ள பொருள்களை அடைவதைப் போலக் கொள்வாயாக, பத்து இயத்தை ஏகமாய் ஆர்த்தாலும் ஏறா செவி போல்—பத்து வாத்தியங்களை ஒருங்கே வாசித்தாலும் கேளாத காதைப்போல நோய் ஏகமாய் ஆர்த்து ஆலும்—நோய்கள் பல ஒரே காலத்தில் வந்து சேர்ந்தாலும் அவற்றின் துன்பம் உன்னை வருத்தாது ஒழியும், அன்றியும், ஆரவாரத்துடன் ஆனந்தத்தையும் ஆடல் பெறுவாய், எய்—(நீ இதை) அறிந்து கொள்.

பத்தியத்தினாலும், நோயினாலும், அனுபானத்தினாலும், இலங்கணத்தினாலும் உண்டாகும் அருவருப்பை இலட்சியப்படுத்தாமல், நெடுநாட்கள் பழகிய இனியபொருள்களைப் பெறுவது போன்று அவற்றை மனக்களிப்புடன் ஏற்றுக்கொள்வாயானால், நோய்களெல்லாம் நீங்கப் பெற்றவனுயும் இழந்து போன பழைய உடல்நலம் புதுமையாய் உண்டாகப் பெற்றவனாயும் நீ மகிழ்வையடைவாயென்பதே இதன் கருத்து.

மருத்துவம் பெறத்தக்கவர்

''வேதிய வேடத் தோர்க்கும் விளங்கிய குருக்கள் மார்க்கும்
நீதியா யுள்ள பேர்க்கும் நெறிமுறை யுள்ள பேர்க்கும்
சாதியா யுள்ள பேர்க்கும் தவநெறி யுள்ள பேர்க்கும்
தீதிலா மருந்து தன்னைச் செய்திடப் பிணிபோ மென்றூர்''

(பொழிப்புரை) அந்தணர்களுக்கும், குருக்களுக்கும், நீதியும் நன்னெறியும் ஒழுக்கமுமுடைவர்களுக்கும், நற்குலத்தில் தோன்றினவர்களுக்கும், தவநெறியுள்ளவர்களுக்கும், மருந்து செய்து தந்திடப் பிணி நீங்கும்.

''தரித்திரப் பட்ட பேர்க்கும் தருமத்தை யடைந்தபேர்க்கும்
கருத்துடன் பிணிதீ ரென்று கபடின்றிமெய்சொல் வோர்க்கும்
பெருத்திடும் பொருளை யீந்து 'பிணிதீரும்' என்றபேர்க்கும்
உருக்கமா யுண்ணும் பேர்க்கும் வைத்தியஞ் செய்கு வீரே''.

(பொழிப்புரை) தரித்திரர்கள், தருமம் பெறுபவர்கள், கபடின்றி மெய்சொற் கூறித் தம் பிணி தீரவேண்டுமென்னும் கருத்துடன் வருபவர்கள், பிணி நீங்கவேண்டுமென்னும் எண்ணத்துடன் பெருந்தனம் கொடுப்பவர்கள் கொடுக்கும் மருந்தை உருக்கமுடன் கொள்பவர்கள் ஆகிய இவர்கட்கு மருத்துவஞ் செய்தல் கடமையாகும்.

இன்னார்க்கு வைத்தியம் செய்யலாமென்பது

''மருத்துவரை நோயினர்த மாதாபி தாவா
மருத்துவரை யென்னவருள் வைக்க—மருத்துவரை
கையடை யாளந்தக் காரியத்தி லென்றுநம்பிக்
கையடையா ளந்தந்தக் கால்.''

(தே.—ய.)

(பதவுரை) மருத்துவரை—மருத்துவரை, நோயினர்—பிணியாளிகள் தம்மாதாபிதாவா—தம்முடைய தாய்தந்தையராகவும், மருத்துவரையென்ன—சஞ்சீவிமலையாகவும் (எண்ணி), மருத்து உவர் ஐ—வளி, தீ ஐயம் (என்னுமிவைகள்), கைஅடை ஆள்அந்த காரியத்தில் என்று—ஒழுங்கு பெறும்படி அருள்வீராக என்றுரைத்து, நம்பிக்கை அடையாளம் தந்தக்கால் அருள்வைக்க—உண்மையும் அடையாளமும் பொருளையும் பாராட்டினாய கருணைவைத்து மருத்துவம் செய்க.

(பொழிப்புரை) பிணியாளிகள் மருத்துவரைத் தம்முடைய தாய்தந்தையர்களாகவும், சஞ்சீவிமலையாகவுப் எண்ணி, உடலிலுள்ள வளி, தீ, ஐய நாடிகள் தத்தம் முறைகளைப்பெ றும்சடியருள் செய்வீராக என்றுரைத்து, நம்பிக்கையான அடையாளமாகப் பொருள் முதலியவைகளைக் கொடுப்பார்களாயின், அத்தகையோர்க்கு மருத்துவம் செய்க. டுப்பார்களாபின்,

மருத்துவம் பெறத்தகாதவர்கள்

''அன்னியதா ரத்தாசை கொள்வோன் வஞ்சன்
ஆனகஞ்சா கள்ளுமபி னுண்போன் றீமை
துன்னியசூ னியக்காரன் சண்டைக் காரன்
துரும்புகிள்ளி விருந்துண்பான் திருடன் துட்டன்
குன்னியநித் திரைமிகுத்தோன் கொடாத லோபி
குணமிலான் மதியில்லான் மான மில்லான்
பன்னியபண் டிதர்பகைஞன் செவிடன் ஊமை
பாசுபத மறியானைப் பார்க்கொணாதே.''

(பொழிப்புரை) அன்னிய மாதர்களின்மேல் மோகங் கொள்பவன், வஞ்சமனத்தையுடையவன், கஞ்சா, கள், அபினி முதலிய மயக்கப்பொருட்களை உண்பவன், தீமைபொருந்திய சூனியத்தை செய்கின்றவன், வீண்சண்டையிடுபவன் துரும்பைக்கிள்ளுகின்றவன், எப்போதும் விருந்துண்பவன், கள்ளத்தனமுடையவன், துஷடன், அளவு கடந்து நித்திரை செய்வோன், ஈகைபுரியாத உலோபி நற்குணமில்லாதவன், நுட்பமதி இல்லாதவன், மானமற்றவன், மருத்துவனுக்குப் பகையாயுள்ளவன், செவிடன், ஊமை, உயிரனைத்தும் காத்தருளும் காருணியக் கடவுளின் அருளைப் பெறுதவன் ஆகிய இவர்களைப் பார்க்கவும் கூடாது. (அங்ஙனமாயின் இத்தகையோர் வைத்தியஞ் செய்து கொள்வதற்குத் தகுதியற்றவர்.)

''கன்னெஞ்சன் வழிப றிப்போன் கண்டதன் பிறகே செல்வோன்
வன்னெடுங் கோப முள்ளோன் மாதர்மே லாசை யுள்ளோன்
பொன்னையே புதைத்து வைத்துப் பிடகர்க்குப் பொய்யைச்
சொல்வோன்
இன்னெடுங் கொடிய பாவிக் கிடுமருந் தேறு தன்றே.''

(பொழிப்புரை) கடிய நெஞ்சமுடையவன், வழியே செல்பவர்களுடைய பொருளைக் கொள்ளையடிப்பவன், பார்த்த ஒரு பொருளின் மீது விருப்பங் கொண்டு அதன் பின்னே செல்பவன், அடங்காக் கோபமுடையோன், மங்கையர் மேல் ஆசை கொண்டு நிற்பவன், தான் தேடிய பொருளைப் புதைத்து வைத்து இத வார்த்தைகளைப்பேசி, வைத்தியரிடம் பொருளில்லையெனப் பொய் சொல்லுபவன், இவ்விதத் தன்மை வாய்ந்த கொடிய பாவிகட்குக் கொடுக்கும் மருந்து பலியாது.

''பஞ்சமா பாத கர்க்கும் பழிதனை நினைப்ப வர்க்கும்
கெஞ்சியே மருந்து செய்து கேடுகள் நினைப்ப வர்க்கும்
அஞ்சிடா வஞ்ச கர்க்கும் அநியாயக் கார ருக்கும்
நஞ்சினுங் கொடிய வர்க்கும் நாடிய பிணிதீ ராதே''.

(பொழிப்புரை) பிறமாதரை விரும்பல், கொலை புரிதல், கள்ளுண்டல், பொய் மொழிதல், ஒருவர் மற்றொருவர்க்குச் செய்யும் தருமத்தை மறுத்தல் ஆகிய ஐவகைக்கொடிய பாதகங்கள்

செய்பவர்கட்கும், பழிக்கிடமான காரியங்களைச் செய்யக்கருது பவர்கட்கும், நயம்படக் கூறி மருந்தை வாங்கியுண்டு மருத்து வனுக்குக் கேடு நினைப்பவர்க்கும், பயப்படாத வஞ்சகர்கட்கும், நியாயத்தைச் சிறிதும் எண்ணாமல் அநீதியைப் புரிபவர்கட்கும், விடத்தைக் காட்டிலும் கொடிய தீங்கைச் செய்பவர்கட்கும், அவர்களைத் தேடி வந்த பிணி என்றும் நீங்காவாம்.

மருத்துவர்க்குப் பொருள் கொடாத நோயாளி நரகம் அடைவான் என்பதை

''வஞ்சமற்றா ரென்றபிணி யாளர் தம்மை
மகவதினும் பதின்மடங்கு மருந்து செய்யின்
நெஞ்சிநோ யாளியின்றன் பிணிநி தானம்
நிறுத்துமவ் வைத்தியர்க்கு நிதிகொ டாமல்
பஞ்சைமொழி பகருமரும் பாவி யோரைப்
பாழ்நரகி லழுத்தியமன் பாசத் தாலே
அஞ்சவிழுத் தேயடித்துத் தள்வா னென்றே
அகத்தியரு மிந்நூலி லருள்செய் தாரே''

என்னும் செய்யுளாலுமறிக.

நன்றி இல்லாப் பிணியாளன், இயல்

''தம்பியென்பான் நோயெல்லாந் தீர்ந்த பின்பு;
தாய்தந்தை குருவென்பான் தீருமுன்னே;
வெம்பியவன் ே நாய்களவை தீர்ந்தபின்னர்
வேணவுப சாரம்பின் னுகட் டென்பான்;
கும்பியே கொதித்துமிக வுள்ளம் வாடிக்
குருவான வயித்தியர்தம் மனது நொந்தால்
சம்பியே முகம்வாடித் தாம்வா ரார்கள்
சாற்றினே னிவையறிந்து மருந்து வாங்கே''

மருந்தியற்றுவரன்

''பிணியர்க் குரியர் பிடக்குளத்தை யொப்பர்
அணியிற் சிறந்தநட்ப ராம்பற்—பணியர்க்குட்
டுப்புறை யுண்மைமிகு தூய்மையிவை யார்ந்தாரை
யொப்புறையை யாடற் குவந்து.''

(தே.வை.வ.)

(பொழிப்புரை) பிணியுற்றார்களிடத்திலிருந்து மருந்து பகரு வஞ் செய்கின்றவர்கள் அவர்களுக்கு, உரிமையுள்ளவர்களும், மிகுந்த நன்மை புரியும் நண்பர்களும், மருத்துதுவர் மனத்தை

ஒத்தவர்களுமாய் இருத்தல் வேண்டும். அத்தகையர் வாய்க் காதபோது மற்றப்பணியாளர்களுள், உடல் வன்மையும், பிணி யாளர்களுடைய ஆயுள் பெருக்கத்தை விரும்புதலும், புத்தி நுட்ப மும், மெய்ம்மையும், உள்ளும் புறமும் தூய்மை என்னும் நற் குணமும் ஆகிய இவற்றை உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து மருந்தியற்ற அமைத்துக் கொள்ள வேண்டும்.

சுருங்கக் கூறின், (1) நோயினன்மாட் டன்புடைமை, (2) மனம் மொழி மெய்கள் தூயவாதல் (3) மருத்துவன் சொற்படி செய் தலில் வன்மை, (4) அறிவுடைமை ஆகிய இந்நான்குமே மருந்தி யற்றுவானது சிறந்த குணங்களாகும்.

விதிக்கு மருந்தின்றெனல்

''அல்லலென்று நீதா னறிந்த மருந்தெல்லாஞ
செல்லவென்று தானினைந்தாற் செல்லுமோ—எல்லார்
வல்லோன் வகுத்த வரும்விதிக் குன்மருந்து [க்கும்
செல்லென்று லேன்செல்லுந் தேர்.''

(பொ-ள்) நோயாளி பிணியினல் வருந்துகிருனென்று தெரிந்து உன்னிடத்திலுள்ள மருந்துகளை யெல்லாம் அவனுக்குப் புகட்டி, அந் நோயை நீக்கிவிடலாம் என நினைப்பினும், நீங்கிவிடுமா? (நீங்காது) எல்லாம் வல்ல இறைவனுல் விதிக்கப்பட்ட விதியை மருந்தினல் தீர்க்க முடியாது என்பதாம்.

இதனை அடியிற் காணும் அடியும் வலியுறுத்துகின்றது.

''அவமாகப் பிரமலிபி யவ்வளவே யாயின்
ஆசித்துப் பேசிவிட்டு மரண மாவன்.''

நோய்க்குக் குறித்த மருந்தை ஊட்டும் உபாயம்.

''கொண்ட மருந்தாய்க் குறித்த கஷாயத்தைக்
கண்டநோ யாளிக்குக் காட்டிநீ-அண்டையிலே
வைத்துக் கஷாயம் வடித்துக் குளிகைசேர்த்
துய்த்திடுவை யுண்மருந்தை யோர்''.

மருந்தூட்டுங்காலம்

''அனிலநோ யர்க்கசன மாகாமுன் பித்தத்
துனியர்க் கசனநடுத் துயை—யெனுநோயர்க்
காகாரப் பின்னு மருத்திலுறை யப்பிணியாற்
சாகாரப் பின்னுலகிற் ருன்.''

(ப. கு. சி.)

(பொழிப்புரை) வாதரோகிகளுக்கு உணவு செய்வதற்கு முன்னும், பித்த ரோகிகளுக்குப் பாதி உணவு செய்தவுடனும், சிலேட்டும ரோகிகளுக்குப் உணவருந்திய பின்னும் அவுடதம் உண்ணக் கொடுத்தால், அவர்கள் அந்த வியாதியினல் சமுத்திரஞ் சூழ்ந்த லகத்தில் இறவார்.

உ

மருந்தருந்திய பின்பு வாயிலிடும் பொருள்கள்

''சீவல் கணமதுதி ராட்டைதும்பை மூக்குகிராம்
பூவற் சரநெற் பொரி சசித் தூள்—பூவில்
இருந்துண்ட நீர்மைகுன்ரு தேற்றுமேன் மக்கள்
மருந்துண்ட வாய்க்கிவையா மால்.''

(ப.கு.சி).

(கருத்துரை) இவ்வெண்பா, மருந்தருந்திய பின் வாயிலிடும் பொருள்களைக் கூறுகின்றது.

(பதவுரை) சீவல்—கொட்டைப்பாக்கு என்னும் இயற்கைப் பாக்குச்சீவல், கணம்—சிறுநாகப்பூ, மது—தேன், திராட்சை—திராட்சைப்பழம், தும்பை மூக்கு—வெற்றிலையின்காம்பு, கிராம்பு—இலவங்கம், வற்சரம் நெற்பொரி—ஓர் ஆண்டு பழகின பழைய நெல்லின் பொரி, சசித்தூள்—பச்சைக் கர்ப்பூரத் தூள் (என்னும் இவைகளை), பூவில்—உலகத்தில், இருந்து—வாழ்ந்து, உண்ட—உட்கொண்ட, நீர்மை—மருந்தின் தன்மைகளை, குன்ருது—குறையாமல், ஏற்றும்—அதிகப்படுத்தும் (ஆகையால்) மேன்மக்கள்—அறிவால் உயர்ந்தோர், மருந்து உண்ட—மருந்தருந்தின, வாய்க்கு—வாயில் போட்டுகொள்வதற்கு, இவை—மேலே சொல்லப்பட்டவைகள், ஆம்—உதவுவன ஆம் (ஆகையால், மருந்துண்டபின் இவற்றில் ஏதாவ தொன்றில் கொஞ்சம் கொடுத்தல் வேண்டும்.

(பொழிப்புரை) மருந்தருந்துவோர் வாயிலிட்டுக்கொள்ளும் பொருள், கொட்டைப்பாக்குச்சீவல், நாகப்பூ, தேன், திராட்சைப் பழம், வெற்றிலைக் காம்பு, இலவங்கம், ஒரு வருஷத்துப் பழைய நெற் பொரி, பச்சைக் கர்ப்பூரத் தூள் என்பவைகளாம்.

நோயினர் பகல் தூக்கத்தை நீக்கி மருந்தூட்டும் விதம்

''வேசையர்கூத் தொன்ருெழித்த வேறுவே ருங்கூத்தால்
ஆசியத்தால் கீதத்தா லற்புதத்தால்—வீசுபகல்
தூக்கமருள் நீக்கியுறை துய்ப்பித்த ணங்கையுளார்க்
காக்கமருள் வார்மருத்து வர்''.

(ப.கு.சி.)

(கருத்துரை) இவ்வெண்பா, பிணியாளர்க்குண்டாம் பகல் தூக்கத்தைத் தடுத்து மருந்தருத்துவதற்கு உபாயங்கள் கூறுகின்றது.

(பதவுரை) வேசையர்கூத்து—தேவமாதர் நாட்டியமாகிய, ஒன்று—ஒரு கூத்தை, ஒழித்த—நீக்கின, வேறு வேறும் கூத்தால்—மற்றக்கூத்துகளாலும், ஆசியத்தால்—விகடத்தாலும், கீதத்தால்—பாட்டுகளாலும், அற்புதத்தால்—ஆச்சரியச் செய்கைகளாலும், வீசு—மேலிடுகின்ற, பகல் தூக்க மருள்—பகலில்வரும் தூக்கத்தின் மயக்கத்தை, நீக்கி—போக்கி, உறை—மருந்தை, துய்ப்பித்து—உண்பித்து, அணங்கை உள்ளார்க்கு—நோயுள்ளவர்களுக்கு, மருத்துவர்—வயித்தியர், ஆக்கம் அருள்வார்—மகிழ்ச்சியைக் கொடுப்பார்.

(பொழிப்புரை) பிணியாளர்க்குண்டாகும் பகல் தூக்கத்தைத் தவிர்க்க மருத்துவர்கள், தாசிகளின் கூத்தைத் தவிர்த்து, மற்றக் கூத்துக்கள், விகடம், இசைப்பாடல், ஆச்சாரியப்படக் கூடிய நகைச்சுவைச் செயல்கள் என்னு மிவற்றைக்கானுமாறு செய்து, நோயாளிக்கு மகிழ்ச்சி யூட்டி மருந்தருத்துவர்கள்.

பகல் தூக்கமானது 'தண்டம்' முதலாகச் சொல்லப்படும் பதினெட்டு வாத நோய்களை உண்டாக்கும் என்பது வட நூலார் கொள்கையாகும். ஆனல், அவ்வாறன நோய்கள் இங்கு வரக் கண்டதில்லை. அவ்விதி குளிர்ச்சிப் பூமிக்கு ஒருவாறு பொருந்தலாம்; குளிர்ச்சியில் வாதம் மிகுதிப்படல் இயற்கையாகலாம்.

இத்தென்னட்டில், ''பகலுறக்கம் வளிப்பெருக்கம்,'' என்று சொல்லப்பட்டிருப்பதன்படி, தூங்கி எழுந்தவுடன் வாயுவாற் சிறுதிமிர், வாயில்கோழை தங்கல், சோம்பல் முதலியவற்றைக் காண்பதல்லாமல் அப்பதினெட்டு வாதங்கள் வரக்கண்டிலம்.

எனவே, அவ்விதி இத்தமிழ் நாட்டிற்குப் பொருந்தாது. இது வெம்மைப் பூமி என்றுணர வேண்டும்.

பேதி மருந்தின் வேற்றுமையும் அருந்துங்காலமும்

''குடிநீர்க்கற் கந்தயிலம் கோடைக்காம் பேதி
கடுமாரி மூடுபனிக் காயின்—கெடுமிவைகள்
சோபிக்கு மெக்களிக்குஞ் சூதமுப்பிற் கும்பேதி
சோபிக்கு மெக்காலுஞ் சொல்.''

(ப.கு.சி).

(கருத்துரை) இவ்வெண்பாச் செய்யுள், காலத்துக் கேற்றபடி பேதி மருந்துகளைக் கூறுகின்றது.

(பதவுரை) குடிநீர்—உண்ணீர், கற்கம்—அரைத்த மருந்துகள் தயிலம்— ஆமணக்குநெய் (என்னும் இம்மூன்றுவகைகளும்) கோடைக்கு ஆம் பேதி-கோடைக்காலத்துகுரிய பேதி மருந்துகளாகும்; இவைகள்—மேலே சொல்லப்பட்ட இம்மூன்று வித

மருந்துகளும், கடுமாரி—மிக்க மழைக்காலம், மூடுபனிக்கு—மூடு பனிக்காலம் ஆகிய இவற்றிற்கு, ஆயின்—ஆனல், கெடும்—நன் மை செய்யாமல் கெடுதி யடையும், சோபிக்கும்—நேர்வாளத்திற் கும், எக்கள்ளிக்கும்—எவ்விதமான கள்ளிப்பாலுக்கும், சூதம் —இரச சம்பந்தப்பட்ட பேதி மருந்துகளுக்கும், உப்பு—உப்பு வகையான பேதி மருந்துகளுக்கும், எக்காலத்தும்—எந்தக்காலத் திலும், பேதி சோபிக்கும்—பேதியாகுமென்று, சொல்—சொல் வாய்.

(பொழிப்புரை) குடிநீர், கற்கம், ஆமணக்குநெய் என்னும் இவைகள் கோடைக்காலத்திற்கு உதவும் பேதி மருந்துகளாம், இவை பனிக்காலங்களுக்கு உதவமாட்டா. வாளம், பலவகைக் கள்ளிப்பால்கள், இரச சம்பந்த மருந்துகள், உப்பு வகைகள் என்னும் இவைகள் எக்காலத்திலும் பேதியாகக் கொள்ளக்கூடிய மருந்துகளாம்.

மேற்படி வெண்பாவில் தயிலம் என்னும் ஒருதற்பவச் சொல் ஆளப்பட்டிருக்கிறது. அச்சொல் எள்ளினல் ஆகின்ற நெய்யைக் குறிக்குமே யன்றி ஆமணக்கு நெய்யைக் குறிக்காது.

இவ்வாறு எண்ணெயை நெய்யென்றும், நெய்யை எண்ணெய் என்றும் ஆளும் ஆட்சி பண்டைக் காலத்திருந்தே பழக்கத்தில் வந்து விட்டது ஆனலும், இக்காலத்துக் கல்வியறிவுள்ள மருத்து வர்கள் நெய்யை நெய் என்றும், எள் நெய்யை எண்ணெய் என் றும் ஆளவேண்டுவது கடமையாகும். இவை,

''ஏடலர் நறும்பூ எள்ளில் எடுத்தநெய் தயில மெண்ணெய்
தேடுமா மணக்கு நெய்யே சித்திர சயில மென்ப
நாடுறுமொவ்வோர் வித்தின் நெய்யத னதன்பே ராமே''

என்னுஞ் செய்யுளாலறிக.

மருந்தூட்டும் பாத்திரம்

மதாந்தரம்

''வாதமுதல் முப்பிணியோர் வைத்துறையுண் பாத்திரத்தின்
பேதமுறை யேகேள் பெருங்கஞ்சம்—சாதகும்பம்
தாம்பரமா மின்றென்னிற் சக்கிரிகைப் பாத்திரந்தான்
ஆம்பரமா யுட்கொடுக்கு மாங்கு.''

(ப.கு.சி.)

(பொழிப்புரை) வாதரோகிக்கு வெண்கலப் பாத்திரத்திலும் பிந்தரோகிக்கும் தங்கப்பாத்திரத்திலும், ஐயரோகிக்கும் தாம் பிரப்பாத்திரத்திலும் மருந்து கொடுக்க வேண்டும்; இப்பாத்தி ரங்கள் இல்லையானல், மூன்று ரோகிகளுக்கும் மட்பாத்திரத் திலேயே மருந்து கொடுப்பது மிகவும் நன்மையைத் தருவதாகும்.

மருந்தூட்டும் பாத்திரம்

''வெள்ளி பாத்திர மருந்துண்ண லாகுமே; மேலா
விள்ளு செம்பொனே மிகுபய னீயுமே; மண்ணால்
கொள்ளு பாத்திர முத்தமம்; கூறிய பொருட்கே
எள்ளு வெண்கல மத்திம மாமென விசைத்தார்''.

(பொழிப்புரை) வெள்ளிப் பாத்திரத்தில் வைத்தருந்தும் மருந்துமேன்மையே; ஆயினும், பொன் பாத்திரத்தில் வைத்துண்பது மிகுபலனைத்தரும்; மண்பாத்திரத்தில் வைத்துண்பது எல்லாவற்றைப்பார்க்கிலும் மிகச் சிறந்தது. வெண்கலப் பாத்திரத்தில் வைத்துண்பது மத்திம பலனைக்கொடுக்கும் என்பர்.

ஆண்டுக்குத் தக்கபடி அருந்தும் மருந்து

''எண்ணெய் கொள்ளுநாள் முப்பதா மாண்டினு ளென்ப;
வண்ண லேகியங் கொள்வது மேலொரு பத்தாம்;
திண்ணச் சிந்துர மறுபதா மாண்டினுள் தின்க;
பண்ணு பற்பநா லைந்தின்மேற் பருகனூ றுண்டே.''

(பொழிப்புரை) ஒருவன் தன்னுயுள் நாட்களில், முப்பது ஆண்டுகள் வரையும் எண்ணெய்களையும், நாற்பது ஆண்டுகள் வரையும் இலேகியங்களையும், அறுபது ஆண்டுகள் வரையிலும் செந்தூரத்தையும், இருபது வயது முதல் நூறுவயது வரையிலும் பற்பதையும் அருந்தலாம்.

கற்கம் தூள் நசியம் இவற்றைக் கொள்ளும் அளவு

''கற்கமது முக்கழஞ்சு கொள்ளுவது காசினிக்குள்
மிக்க தூளிவ்வாறு மேவுங்காண்—பொற்பாக
நாட விடுநசியம் நண்ணுமொ ரேதுளிதான்
ஓடவிடு மென்ன வுரை''.

(பொ-ள்) கற்கம்—முக்கழஞ்சு அல்லது $3\frac{3}{4}$ வராகனெடை; சூரணம்—முக்கழஞ்சு அல்லது $3\frac{3}{4}$ வராகனெடை; நசியம்—துளி அளவாகும்.

நோய்களுக்கு மருந்தருந்துங்கால அளவு

''தாதுநட்ட மபஸ்மாரஞ் சுவாச காசம்
தனியுன்மா தம்மிவைக்காண் டுறையா மென்பர்;
மோதுகிரிச் சரம்விரணம் கல்ல டைப்பு
முதிர்மேக நீர்க்குமருந் தீரைந் திங்கள்;
ஓதுமுதா வர்த்தமர்த் தாங்க மேழென்
றுரைவித்தி ரதிக்குமருந் தரையாண் டன்றி
மீதுவேண் டாவுரைத்த விம்மட் டுண்ணில்
விலகுமவை சேடமற விரும்பிக் காணே.''

(ப.கு.சி.)

(கருத்துரை) இச்செய்யுள் இன்னின்ன நோய்களுக்கு இதனைத் திங்கள் அல்லது இத்தனை ஆண்டுகள் மருந்து கொடுக்க வேண்டும் என்பதைக் கூறுகின்றது.

(பதவுரை) தாது நட்டம்—சுக்கிலக்கேடு, அபஸ்மாரம்—அறிவு மாறல், சுவாசகாசம்—இரைப்பு நோய், தனி—ஒப்பற்ற, உன் மாதம்—உன்மத்தம் என்னும் பயித்தியும், இவைக்கு—என்னும் இந்த நோய்களுக்கு, ஆண்டு உறை ஆம் என்பர்—பன்னிரண்டு திங்கள் மருந்து கொடுக்கவேண்டும் என்பர், மோது—மிகுதியாகின்ற, கிரிச்சரம்—நீரடைப்பு, விரணம்—விரண நோய்கள், கல்லடைப்பு—கல்லடைப்பு நோய்கள், முதிர்—முற்றின, மேகநீர்க்கு—நீரிழிவு என்னும் இந்நோய்களுக்கு, ஈரைந்திங்கள் மருந்து—பத்துமாதங்கள் மருந்து கொடுக்க வேண்டும்; ஓதும்—சொல்லப்படுகின்ற, உதா வர்த்தம்—உதாவர்த்த நோய்க்கு, அர்த்தாங்கம் ஏழ் என்று— அர்த்தாங்க நோய்க்கு ஏழு மாதங்கள் மருந்து கொடுக்க வேண்டும் என்று சொல்; வித்திரதிக்கு மருந்து அரை ஆண்டு—விப்புருதி என்னும் நோய்க்கு, ஆறுமாதங்கள் மருந்து கொடுக்க வேண்டும்; அன்றி—அல்லாமல், மீது வேண்டா—அதற்கு மேல் மருந்து கொடுக்க வேண்டுவதில்லை, உரைத்த—சொன்ன, இம் மட்டும் உண்ணில்—இக்கால அளவு வரைக்கும் மருந்து உண்டால், அவை—அந் நோய்கள், சேடம் அற—மிச்சம் இல்லாமல், விலகும்—நீங்குவனவாகும், விரும்பி—இவ் விதியை விரும்பி, காண்—அவ்வந்நோய் களுக்குரிய மருந்துகளைக் கொடுத்து ஆராய்ந்துபார்த்துக் கொள்வாய்.

(பொழிப்புரை) சுக்கிலக்கேடு, அறிவுக்கெடுதி, இரைப்பு நோய் பயித்திய நோய் என்னும் இவைகளுக்கு ஒர் ஆண்டும்; நீரடைப்பு நோய், விரண நோய், கல்லடைப்பு நோய், நீரிழிவு என்னும் இவைகளுக்குப் பத்து மாதங்களும், உதா வர்த்த நோய்க்கு ஏழு மாதங்களும், விப்புருதி நோய்க்கு ஆறுமாதங்களும், ஆக அவற்றிற்குரிய மருந்துகளை அருந்த வேண்டும். இவ்விதிக்கு மேற்பட்ட காலம் உண்ணவேண்டுவதில்லை. இந்த விதியைக் கொண்டு இதன்படி நடந்தால் நோய்களெல்லாம் கொஞ்சமும் உடலில் நில்லாமல் நீங்கி விடுவனவாகும்.

இதுவுமது

''சோகபகந் தரமூல முதிரச் சூலை
சூலைகுரு திக்குன்மம் சுர்க்கு நோயாம்
நாகமுப யாஷ்டில நோய் திமிரங் குன்மம்
நாறுகய மிவைக்குறைகே ணன்காந் திங்க
ளாகமடி மூர்ச்சைதவுல் லியகி ரந்தி
யாமிலபித் தஞ்சீத பித்த முட்டீ
யேகவரு மதிமந்தஞ் சோம ரோகம்
இவைக்குறைமும் மதியுண்ணி னிமீ ளாவே.''

(ப.கு.சி.)

இதுவுயது

''வாந்திவிக்கல் கணமாந்தம் பேதி கட்கு
மண்டலமொன் றுறைவாதங் காமி லங்கட்
கேந்திருமண் டலமுறைபற் பாண்டு சோபை
எண்மகோ தரம்பிரிதி துனிகட் கூக்கம்
ஓய்ந்திடமும் மண்டலநல் லுறைநாட் சென்று
ஒழிவில்சுரங் கட்குறைமண் டலநான் குன்னி
மாந்திடுபோ மித்திரனே சகல நோய்க்கும்
மருந் துாட்டின் மீட்டுமவை வாட்டா வாறே.''

(ப.கு.சி.)

மருந்து செய்தற்கும் கொடுத்தற்கும் உரிய பொழுது இவையெனல்

''ஆதித்த னுதித்த மூன்றே முக்கால்
அறிந்து பிணிக்கு மருந்து செய்வீர்
ஆதித்த னுதித்த மூன்றே முக்கால்
அறிந்து பிணிக்கு மருந்து கொள்வீர்;
ஆதித்த கிரண மிருளும் போது
அறிந்த வுடனே மருந்து செய்வீர்
ஆதித்தன் சாட்சி யாய்ப்பிணி தீரும்
அயனம் விருத்த மும்வா ராதே.''

(கருத்துரை) சூரியன் உதித்த மூன்றே முக்கால் நாழிகைக்குள்ளாக மருந்துகளைச் செய்யுங்கள்; மருந்துகளை உண்ணும்படி செய்யுங்கள். அதேபோல மாலையிலும் சூரியன் மறைந்தவுடன் மருந்தை உண்ணும்படிச் செய்யவும். இவ்வாறு செய்தால் சூரியனுடைய சாட்சியாய் நோய் தீரும்.

''சோதி வந்திடு முன்காலை
சோதி பொன்றிடு முன்மாலை.''

(தே.கா.)

நேயாளியை நோககி மருந்து செய்யும் காலத்தில்
கைம்பெண ஆகாதெனல்

''ஓடதி யொன்றை ஒருபாத் திரட்டுத்
தேடரிய மாமருந்து செய்யுங்கால்—நீடும்
அமங்கலியா ளாகா ளரைக்கத் துழாவச்
சுமங்கலியே யாமென்று சொல்.''

மருந்துவைக்கும் பாத்திரம்

"தெங்கின் குடுக்கை திகிரிதந்தப் பாத்திரத்தார்
நன்கிராப் புன்மருந்தும் நன்மருந்தாம்—வெண்கலத்தால்
மையிரும்பாற்கட்டைகளால் மாக்கொம்பால்பாத்திரங்கள்
செய்யினிரண் டாம்பட்சஞ் செப்பு."

(ப.கு.சி.)

(கருத்துரை) இவ் வெண்பாச்செய்யுள், மருந்து வைக்குங் கலங்களின் நன்மை தீமைகளைக் கூறுகின்றது.

(பதவுரை) தெங்கின் குடுக்கை—தேங்காய்க் குடுக்கையிலும், திகிரி—மூங்கில் குழையிலும், தந்தப் பாத்திரத்து—தந்தத்தால் செய்யப்படும் பாத்திரங்களிலும், ஆர்—செய்து வைக்கப்பட்டிருக்கின்ற, நன்கு—உயர்ந்ததாக, இரா—இல்லாத, புன்மருந்தும்—தாழ்ந்த மருந்தும், நல் மருந்தாம்—உயர்ந்த மருந்து ஆகும், வெண்கலத்தால்—(கலப்பு லோகமாகிய) வெண்கலத்தாலாவது, மையிரும்பால்—கருத்த இரும்பாலாவது, கட்டைகளால்—வேறு கட்டைகளாலாவது, மாக்கொம்பால்—மிருகக் கொம்புகளாலாவது, பாத்திரங்கள்—மருந்து வைக்குங் கலங்கள், செய்யின்—செய்து வைத்தால், இரண்டாம் பட்சம்—நடுத்தரக் குணத்தையடையுமென்றும், செப்பு—சொல்வாய்.

(பொழிப்புரை) மருந்தை வைக்கும் பாத்திரங்களாவன; தெங்கின் குடுக்கை, மூங்கிற்குழை, தந்தம் என்பவற்றால் செய்யப்படும் பாத்திரங்கள் முதல் தரம் என்றும், அவற்றில் வைக்கப்பட்ட தாழ்ந்த மருந்தும் உயர்ந்த மருந்தாகும் என்றும், வெண்கலத்தாலாவது, கறுத்த இரும்பாலாவது, கட்டைகளாலாவது, மற்ற மிருகக் கொம்புகளாலாவது செய்யப்படும் பாத்திரங்கள் இரண்டாந் தரம் என்றும் தெரிந்துகொள்ள வேண்டும்.

இவைகளல்லாமல்,

"மேதிச் சிமிழ்வைத்து வேண்டிப் பணவெடைதான்
பாதிபனை வெல்லத்திற் பாய்ச்சு."

சன நச காண்டம் மண்டூர மெழுகிலும்,

"மதியோடு பனையின் கொட்டை யிலிட்டை
வழலங்காய்ப் பிரமாண மதுண்—வாதகுலங்கள்
வாதற்றேகிடும் வன்பத்திய மிலை மாதொன்றே."

எனத் தும்மட்டி மெழுகிலும், முறையே எருமைக் கொம்பு, பனங் குடுக்கையும் சொல்லப்பட்டிருப்பதால், அவையும் கொள்ளற்குரியனவே என அறிதல் வேண்டும்.

இவைகளல்லாமல், இக்காலத்தில் ஒரு வகை வெள்ளைக் களி மண்ணுலும், வெள்ளை மணலாலும் செய்யப்படும் பீங்கான், கண்ணுடியினுல் செய்யப்படும் பாத்திரங்கள் ஆகியவற்றுள் மருந்து கள் வைப்பது வழக்கத்தில் வந்துவிட்டது.

களிமண்ணும், மணலும் பிருதிவி பூதப்பொருள்கள் ஆதலாலும். அப்பிருதிவி எல்லாவற்றையும் தூய்மை செய்யும் இப்றகை குணம் உள்ளதாத்லாலும், அவை தவருகா; கொள்ளச்குரியனவே என்று உணர்தல் வேணடும்.

பண்டைக் காலத்திருந்த மருத்துவர்கள் சூரணம் முதலியவற்றை மண் பாத்திரத்தில் வைத்தலும், மண்பாண்டத்தில் சமையல் செய்யலும் வழக்கமாயிருந்ததை எண்ணிப்பார்க்கப் பிருதிவியின் உயர்வு தோன்றும்.

மருந்துவைக்கும் பாத்திரத்தின் குணம்

''வெண்பொன் செம்பொனு லியற்றிய சிமிழது மேலாம்;
பண்பில் செம்பிலும் சீருளாம் பரணியின் மருந்தை
உண்ப தன்று; தெங்கின்சுரை யுத்தமம்; மரம்வேய்
கண்ப தாவிலங் கின்மருப் பிவைநலஞ் சிறிதே.''

(பொழிப்புரை) வெள்ளி, தங்கம் இவைகளாற் செய்த சிமிழ் மேன்மையாகும். செம்பு, ஈயம் இவைகளாற் செய்த சிமிழ்களில் வைக்கும் மருந்து உண்பதற்குதவாது. தெங்கின் குடுக்கையில் வைக்கப்படுவது சிறந்த மருந்தாகும்; மரக்கட்டை, மூங்கிற் குழல், விலங்குகளின் கொம்பு இவைகளாற் செய்யப்படுகின்ற சிமிழ்களில் வைத்துக்கொடுக்கும் மருந்துகள் சிறிய பலனையே தரும்.

XX. மருந்து

இஃது இருவகைப்படும். அவை (1) அக மருந்து, (2) புற மருந்து. இவ்விருவகை மருந்துகளும் தத்தம் வகையில் முப்பத் திரண்டு வடிவமுடையனவாகும்.

அகமருந்து 32 ம் அவற்றின் ஆயுளளவும்

''உள்மருந் தேசுரசஞ் சாறுகுடி நீர்கற்க
முக்களி யடையோர் சாமம்
உயர்சூர ணம்பிட்டு வடகம்வெண் ணெய்நான்கி
னுயிர்மூன்று திங்க ளாகும்
விள்மணப் பாகுநெய் ரசாயன மிளகநால்
மேவுமறு திங்க ளெண்ணெய்

விரவிடு முயர்ந்தமாத் திரைகடுகு பக்குவம்
மிளிர்தேனி னூறல் நீர்
கொள்ளாறு மோராண்டு மெழுகொடு குழம்பைந்து
கோப்பதங் கம்பத் ததாம்
குருதிபொடி யெழுபானொ டைந்தாண்டு நீறுகட்
டுருக்குக் களங்கு நானூ
றெள்ளிடாச் சுண்ணமைந் நூறுகற் பஞ்சத்து
குருகுளிகை மிக்கா யுளென்
றெவருமகிழ் சித்தர்முப் பத்திரண் டகமருத்
திசைத்தவா யுள்ள ளவரோ''.

வேறு

''பேசிடு சுரசங் கற்கங் கியாழம் பெலனு மொருசாமம்
பின்திரி வடகம் சூரணம் வர்த்தி பெலனது திரிதிங்கள்
ஆசறு கிருதம் ரசாயன லேகியம் அதன்பலன் அறுதிங்கள்
அவனித னிற்றை லத்தின் பெருமை ஆண்டிற் கதிகமினை
வீசுறு பற்பம் செந்தூர சுன்னம் வெகுவித ரத்தினங்கள்
விரவிய நன்மாத் திரையோர் கற்ப மிருந்தா லும்பலனும்
ஈசுர முன்னாள் நந்திக் குரைசெய் எண்ணூன் காண்டமதில்
எழில்பெறு அவுடத பலனிது வென்றே இசைத்தார்
[முனிவோர்க்கே.''

இவ்வுள் மருந்துகள் முப்பத்திரணடின் கால அளவுகள்

(1) ஒரு சாமம் என்னும் ஆங்கில மூன்று மணி நேரம்

வன்மையுள்ளவை

1. சுரசம், 2. சாறு, 3. குடிநீர், 4. கற்கம், 5. உட்களி, 6. அடை என்பன.

இவற்றுள் எதைச் செய்வதாயிருந்தாலும், அவ்வவ் வேலையில் புதிதாய்த் தயார்செய்து 3 மணி நேரத்திற்குள்ளாக, கையாள வேண்டும்.

(2) மூன்று திங்கள் வன்மையுள்ளவை

7. சூரணம், 8. பிட்டு, 9. வடகம், 10. வெண்ணெய் என்பன.

இவற்றுள் எதைச்செய்து கையிருப்பில் வைத்துக்கொண்டாலும், மூன்று திங்கள்களுக்குமேல் இவற்றைக் கையாளக்கூடாது அப்படிச் செய்யாமல் அவ்விதிக்கு மாருகக் கையாண்டால், அவைகள் நோயின் மேல் நன்ருய் வேலை செய்யாது. அதாவது அவற்ருல் நோய்கள் தீரா என்றுணர வேண்டும்.

3 ஆறுதிங்கள் வன்மையுள்ளவை

11. மணப்பாகு, *12.* நெய், *13.* சுவைப்பு (ரசாயனம்), *14.* இளகம் (இலேகியம்) என்பன.

இவைகள் ஆறு திங்களுக்கு மேல் வன்மை கெடுவனவாகும். ஆகையால், இம்மருந்துகளை ஆறு திங்கள்களுக்குமேல் நோய்க்குக் கையாளக்கூடாது. தவறின் நன்கு வேலை செய்யா.

4 ஓராண்டு வன்மையுள்ளவை

15. எண்ணெய், *16.* மாத்திரை, *17.* கடுகு, *18.* பக்குவம், *19.* தேன் ஊறல், *20.* தீநீர் என்பன.

இவைகளை ஓராண்டுக்குமேல் நோய்களுக்குக் கையாளக் கூடாது.

5 ஐந்தாண்டு வன்மையுள்ளவை

21. மெழுகு, *22.* குழம்பு என்பன.

இவைகளை ஐந்தாண்டுகளுக்குமேல் நோயாளாருக்குப் பயன் படுத்தக் கூடாது.

6 பத்தாண்டு வன்மையுள்ளவை

23. இரசப்பதங்கம்.

இது பத்தாண்டுக்குமேல் உதவாது.

7 எழுபத்தைந்தாண்டு வன்மையுள்ளவை

24. செந்தூரம்.

இவைகள் எழுபத்தைந்தாண்டுக்குமேல் பயன் பெறு.

(8) நூறுண்டுகள் வன்மையுள்ளவை.

25. நீறு, *26.* கட்டு, *27.* உருக்கு, *28.* களங்கு.

(9) ஐந் நூறுண்டுகள் வன்மையுள்ளவை.

29. சுண்ணம்.

(10) மிக்க ஆண்டுகள் வன்மையுள்ளவை.

30. கற்பம், *31.* சத்து, *32.* குருகுளிகை.

அக மருந்து

இவற்றின் ஒவ்வொன்றின் விளக்கமும் கீழ்க்கூறப்படும்:—

1 சுரசம்

''ஐந்துறுப் புகளி லுண்டாம் அறலதைச் சூடு பண்ணித்
தந்திடல் சுரச மாகும்.''

இஃது இலை, வேர், பட்டை, பூ, காய், இஞ்சி, இஞ்சியைப் போன்றசரக்குகள் ஆகிய இவற்றில் ஒன்றை இடித்தேனும், கல்லி விட்டரைத்தேனும், துணியிலிட்டுப் பிழிந்தேனும் வந்த சாற்றை யாவது, சுக்கைப்போன்ற உலர்ந்த சரக்குகளை இடித்துப்பொடித் துத் தண்ணீர் விட்டரைத்துப் பிழிந்த நீரையாவது ஒரு மட்பாண்டத்திலிட்டுக் கொதிக்கவைத்து, அதை முரித்து எடுத்துக் கொள்வதாகும்.

2 சாறு

''தனிவெந்தை நீரே சாறும்.''

இஃது இலை, வேர், பட்டை, பூ, காய், முதலிய ஐந்துறுப்பு களில் ஏதாவதொன்றையாவது, ஐந்தையுமாவது இடித்துப் பிழிந் தாவது, இடித்துப் பிட்டவித்துப் பிழிந்தாவது, அரைத்துப் பிழிந் தாவது எடுத்துக் கொள்வதாம்.

3 குடிநீர்

''மருந்துநீர் குடிநீ ருண்ணீர் வழங்கிய கஷாயப் பேராம்.''

இது மருந்துநீர், உண்ணீர், வாய்குடித்திடும்புனல் என்னும் பேர்களாலும் சொல்லப்படும். இதை, ஆயுர்வேத மருத்துவர் கள் கஷாயம் என்பர்.

இஃது உலர்ந்த சரக்குகளையாவது, ஈரமாயுள்ள சரக்குகளை யாவது, வேறு பொருள்களையாவது இடித்து, அதற்குச் சொல்லப் பட்டுள்ள அளவின்படி தண்ணீர் விட்டு, இரண்டுக்கு ஒன்றுகவா வது நான்குக் கொன்றுகவாவது, ஆறுக்கொன்றுகவாவது, எட்டுக் கொன்றுகவாவது, பதினாறுக் கொன்றுகவாவது, இருபத்துநான் குக் கொன்றுகவாவது காய்ச்சி வடிகட்டி எடுத்துக்கொள்வதாம்.

குறிப்பு : இது, தொகைக் குடிநீர் வழியாகவும் செய்யப்படும் இஃது ஐங்கோலக் குடிநீர் (பஞ்ச கோலக் குடிநீர்) ஐவேர் குடிநீர் (பஞ்ச மூலக் குடிநீர்) போன்ற தொகைச் சரக்குகளால் மேற் சொல்லப்பட்டபடி காய்ச்சி வடிகட்டி எடுத்துக் கொள்வதாகும்.

''குடிநீர்வினை யறமோதிடு குடிநீரினி தறைவாம்
குதிர்பஞ்ச மூலக் குடிநீர் வகைகேள்
குறிமுக் கடுகரி குடசவேர் மணிவேர்
குல்லிவை யடுவது குடிநீர் பருகிடீர்.''

(தே-கரிசல்.)

என்பது போன்ற செய்யுளாலும்,

நான்குக் கொன்றாகவாவது எட்டுக்கொன்றாகவாவது என்பதை,

''கண்ணினடு வேருங் கரியமா லின்தொடையும்
நண்ணு மலையாளி நாகரமும்—திண்ணமுடன்
திக்குக் குடிநீர்செய் தேன்விட் டருந்திவிடு
பக்கவா தச்சுரம்போம் பார்''.

என்னும் வெண்பாவால் அறியலாம்.

குடிநீர்க்குரிய நீரிலக்கணம்

''சேற்றுநீர்ப்பா சிச்சுக்கான் சீதஞ் சரகுப்புக்
காற்றுநீ ரன்றேரி கால்குளத்து—மாற்றுநீர்
ஊற்றுநீ ரென்கினுநோ யோட்டு மருதநிலத்
தாற்றுநீர் * நிர்த்துகத்திற் காம்.''

(தே. தை. வ.)

(பொழிப்புரை) சேறு, நீர்ப்பாசி, சுக்கான், சீதளம், சரகு, உப்புக்காற்று இவைகளின் சம்பந்தமான நீர் எதுவும் குடிநீர் வைப்பதற்கு உபயோகப்படுவதன்று. ஆனல், ஏரியிலும், கால் வரத்துள்ள குளத்திலும் பழமையுறாது மாற்றப்படுகின்ற நீர், ஊற்றுநீர், ஆகியவை அக்குடிநீர் வைப்பதற்கு பயன்படுமென்று சொல்வாராயினும், பிணியைப் போக்குகின்ற மருத நிலத்துள்ள ஆற்றுநீர் ஒன்றுமே அதற்குப் பயன்படும்.

குடிநீரளவை விதி

''குறியிராப் பாண்டக் குடிநீ ரளவை
யறியினீ ருண்ட சரக்காக்கிக்—குறிநீர்விட்
டக்குறிகைக் கோன்மிசைவைத் தம்பெல்லா மூற்றெரியம்
பக்குறிநிற் கிற்குடி நீராம்.''

(தே.தை.வ.)

(பொழிப்புரை) குறியிட்டிராத பாண்டங்களில், குடிநீரின் படியளவைக் கண்டு வடிக்கவேண்டுமாயின், அப்பாண்டத்தில் இட்ட சரக்குகளை நீருண்ட சரக்கெனக் கூறும்படிக்கு நனைத்து, மட்டமாய்ப் பரப்பி, எவ்வளவு குடிநீர் வேண்டுமோ அவ்வளவு நீரை

அதில் விட்டு, அந்த நீரளவை ஒரு சிறியகோலினால் குறியிட்டெடுத்து வைத்துக்கொண்டு, பின்பு விடவேண்டிய நீரையெல்லாம் விட்டெரித்து, அக்கோலின் குறிக்குச் சரியாய் நிற்குமளவுட் காய்ச்சி யிறக்குக. அஃதே அளவைக் குடிநீராம்.

குடிநீர் காய்ச்சு பேதமும் வடிபேதமும்

''குடிநீர் வடிவிதியைக் கூறின்மிகு நெய்க்காங்
குடிநீர் வடிவிதியைக் கூறுங்—குடிநீ
ரளவையங்கங் காயரத்த மாதிவகை காய்ச்சு
முளவையங்கள் கூறியவா றோர்ந்து.''

(தே.தை.வ.)

(பொழிப்புரை) குடிநீர் காய்ச்சி வடிக்கும் விதிகளை விரிக்கிற் பெருகும். அது நிற்க, தைலங்களிற் சேர்க்கும் குடிநீர்களின் அளவையும் அக்குடிநீர்களுக்குரிய திரவியம், நீர் இவைகளின் அளவையும், அவ்வவ்விடங்களிற் காண்க.

இங்ஙனம் குடிநீர் வடிக்கும் விதியையும், அரக்கு முதலிய திரவியங்களைக் காய்ச்சும் நுணுக்க விதியையும் மருந்து நூற்களில்கூறியவாறு ஓர்ந்து கூறுவாம்.

இதுவுமது

''துப்புபல நிரியாசஞ் சிறிதழ்ப்பூ பிட்டந்
தோகமுறு விதைமிதந்தே தோற்றுவகை முழுது
மப்பிலிட்டுக் காய்ச்சுங்காற் கிழிகட்ட லூன்றொக்
கடைபலங்காய் தானியம்வெவ் வேறட்ட னான்காய்ச்
செப்புவன்மை வேராதி களைவெவ்வே றிடித்துச்
சிவனீயத் துாறச்செய் தாக்கற் குடிநீ
ரொப்பிலடை பஞ்சமூ லாதியெனு மிலக்கத்
துள்ளவையொன்றுறச்சுருக்க லோத்தினுரை யுணரே''

(தே.தை.வ.)

(பொழிப்புரை) குடிநீர் வருக்கத்தில் கிழிகட்டிக் காய்ச்சப்படும் திரவிய வகைகளாவன: கொம்பரக்கு, பலவிதப்பிசின்கள், சிறிய இதழையுடைய பூக்கள், மாவுகள், நுண்ணிய வித்துகள், நீரில் மிதக்கப்படுகின்ற பொருள்கள் என்பனவாம். தனித்தனியே காய்ச்சப்படுகின்ற வகைகளாவன: தசை, பட்டை, இலை, பழம், காய், தானியம் என்னுமிவைகளாம்.

நைய இடித்து, நீரிலூறிய பின்பு காய்ச்ச வேண்டிய வகைகளாவன: மரம், செடி, கொடி, புல் என்னும் நான்கு கூட்டத்தாலுண்டாகின்ற வயிரமுள்ள வேர்கள் முதலியவைகளாம்.

இந்நான்கு வகையிலுள்ள வேர், கிழங்கு, பட்டை, கட்டை, பிசின், இலை, பூ, கனி, வித்து, என்னும் 8 பொருள்களையும். காரசார முதலிய திரவியங்களையும் ஒன்றுபட இடித்து ஒரு பானையில் அளடத்துக் காய்ச்சுவது அடைக்குடிநீர்என்றும், சரக்குகளின் தொகையால் பெயரிடப்பட்ட ஐ வேர் குடிநீர் முதலான குடிநீர்க் கூட்டங்களைத் தொகைக் குடிநீர் என்றுஞ் சொல்லுவது மருத்துவ நூல் மரபென்றுணர்க. ஆதலால், அச்சரக்குகளைத் தனித்தனியே காய்ச்சக் கூடாது.

இவ்வகைத் திரவியங்களை இத்தனை நாள் காய்ச்சில் ரசம் வருமெனல்

" காழாதி வல்லிதந்தி காயிலைதோ லூன்பலங்கீ
மூழா திவர்தா னியவகைநான்—கூழாதி
யோர்ந்திருசட் டேழுமூன் றொன்றிந்நாட் காய்ச்சிடத்தைப்
பேர்ந்திருசத் தம்பில்வரும் பேசு.''

(தே.தை.வ.)

(பொழிப்புரை) வயிரக்கட்டைகளை—12-நாள், வன்மையுள்ள வேர்களை 7-நாள், கொடி நரம்பு என்னும் இவைகளை 3-நாள், இலை, பட்டை, தசை, கிழங்கு, தானியம் ஆகிய இவைகளை ஒவ்வொரு நாள் காய்ச்சில், அவை களிலிராநின்ற சத்துகள் குடிநீரில் வரும்.

மாதாந்தரம்

''வேராதி யெட்டாய் விரிபதார்த் தங்களையுந்
தாரார் மணியுபர சங்களையுஞ்—சேரா
விடியிடிநுண் டூளா யிடித்துக் குடிநீர்
வடிவடியெ னுஞ்சில் மதம்.''

(தே.தை.வ.)

(பொழிப்புரை) வேர் முதல் வித்து ஈறாகவுள்ள 8 விதத் திரவியங்களையும் ஒன்பது மணிகளையும், உபரசங்களையும் நுண்ணிய தூளாயிடித்து, ஒன்றுசேர்த்துக் குடிநீர் காய்ச்சி வடித்துக் கொள் என்று சில மதாந்தரங்கள் கூறுகின்றன.

குடிநீருக்கும் பாலுககும் புறநடை

சரக்களவை நீரளவை சாற்றா விடத்தச்
சரக்களவைக் கீரிரண்டு தண்ணீர்—பரக்கவிட்
டத்தொகைக்கோர் கூறுகடா யங்கொட் பயசுதயி
லத்தொகைக்கெண் கூறமைக்கி னாம்.''

(தே.தை.வ.)

(பொழிப்புரை) சரக்கினது எடையும், நீரினளவும், குடிநீர் இறக்குகின்ற அளவும் இவ்வளவெனச் சொல்லாவிடத்து, குடிநீர் செய்ய எடுத்துக் கொண்ட சரக்கின் அளவிற்கு 4 பங்கு நீரை விட்டு, அதை ஒரு பங்காகக் காய்ச்சித் தைலங்களில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சில தைலத்தில் பசுப்பால் சேர்க்கும் அளவைச் சொல்லியிருப்பினும், வேண்டுமெனின், அத்தைலத்திற்கு எட்டுப் பங்கு சேர்க்கலாம்.

குடிநீர்களின் பிரிவு முதலியன.

அடைக்குடி நீரினளவு—3 நாள்

தினமிடு கியாழத்தினளவு—2 வேளை

ஒவ்வொரு வேளையும் அப்போதைக்கப்போது செய்து கொள்கிற பாகமே உத்தமமானது.

செய்யும் பாகத்தில் எட்டிலொன்றாய்ச் சுண்டக் காய்ச்சியெடுத்துக் கொள்ளல் முறையாகும்.

எந்தக் குடிநீர்கட்கும் எட்டிலொரு பாகமாய்ச் சுருக்கியெடுத்துக் கொள்ளல் மேன்மையாகும்.

எந்தெந்தக் குடிநீர்கட்கு எந்தெந்தத் தீயிட வேண்டியதோ அந்தந்தத் தீயினை இட்டெரித்துக் கொள்ளல் முறையாகும். இங்ஙனம் தீயினளவு.

1. தீபாக்கினி
2 கமலாக்கினி
3. கதலியாக்கினி
4. காடாக்கினி

''அடைகியாழத் தினள்வுதான் மூன்றதா மொருநாள்
இடுகியாழத் தினளவிரு வேளையா மியம்பின்
படியிலொவ் வொருவேளையு மடுவதே பாகம்
அடுகையோர் படியட்டமத் தொன்றதா வருக்கல்.'

''எவ்வகைக் குடிநீர்கட்கு மெட்டொன்றா மருக்கல்
செவ்வையா மென்பதீ யிடுமுறை வனமுதற்றீ
எவ்வநீக் கியகதலி தாமரை விளக்கென்ப
தவ்விநோக்கி நீரருக்கலு மிம்முறை நான்கே.''

4. கற்கம்

"வந்திடு சரக்கைக் கல்லில் கல்லுற வரைத்தல் கற்கம்"

இஃது தூய்மை செய்த இரும்புத்தூள், இரும்புச்சிட்டத்தூள் என்னும் இவற்றுள் ஏதாவதொன்றுடன், ஈரமாயுள்ள சரக்குகளையாவது, உலர்ந்த சரக்குகளையாவது, சில இலைகளோடாவது சேர்த்துக் கல்லொடு கல்லாய் ஒட்ட அரைத்துக் கெட்டியாய் எடுத்துக் கொள்வதாகும்.

கற்க மருந்து அரைக்கும் விதி

பூத வெண்பொருள் சட்டி ரதஞ்சுசி
பொன்னி ரத்தின முபரச நெய்மணம்
பேத வெண்ணெண் ணவுடத மாதியாய்ப்
பேசு வத்துக்க ளேகற்க மாயிவற்
றோத வன்மையு மென்மையு மொவ்வியுள்
ளூற்ற சத்துக்க ளெல்லாம் புணர்ப்பிற்ப
காத விந்துவெ ளிப்படல் போல்வெளி
காணு மட்டிழை கற்கஞ் சிறுக்கவே (தே.தை.வ.)

(பொழிப்புரை) ஐம்பூத சம்பந்தமான வேர் முதல் வித்தீறாகிய எட்டுப் பொருள்கள், அறுசுவை, இரச முதலான பாடாணம், பொன் முதலிய உலோகங்கள், நவமணிகள், உபரசங்கள், நெய், வாசனை, சுக்கு முதலிய 64 சரக்குகள் ஆகிய இவற்றின் கூட்டப் பொருள்களே கற்க மருந்துகளாகையால், இவைகளை, ஆறு உடற்கட்டுகட்கும் அப்பாலுள்ள சுக்கில தாதுவானது புணர்ச்சியினால் எப்படி வெளிப்படுமோ, அப்படி வன்மை மென்மையுள்ள சரக்குகளும் ஒன்றுபட்டு உள்ளிருக்கின்ற சத்துகள் வெளிப்பட்டு கற்கஞ் சிறுக்குமட்டும் சேர்த்திழைக்க வேண்டும்.

5. உட்களி

"முந்துறு முட்க ளிப்பை மூடலுட் களியா மென்னே."

இஃது, உள்ளில் களிப்பும், மேலில் சிறு வறட்சியுமடைவதால் இதற்கு இப்பேர் வழங்கலாயிற்று.

இது, பச்சரிசியையாவது, புழுங்கலரிசியையாவது வறுத்து மாவரைத்தும், உளுந்தை மாவரைத்தும், விதைகளைப் பொடியாக இடித்தும், அப்பொடிக்குத் தக்க நீர் விட்டுப் பிசைந்தும் அதற்குத் தக்க சர்க்கரையையாவது வெல்லத்தையாவது சேர்த்துக் கரைத்து, ஒரு மண் சட்டியில் ஊற்றி அடுப்பேற்றி களிப்பதம் வருகிற வரைக்கும் வேகவிட்டுக் கிளறி, கொஞ்சம் நெய் விட்டுக் கைகளில் ஒட்டாப் பக்குவமாய்ச் செய்து எடுத்துக் கொள்வதாகும்.

6. அடை

''பல்வகை மாவ ரைத்துப்
பரப்பியே தட்டிக் கையால்
புல்லியே நெய்யைப் பூசிப்
போட்டது வெந் தெடுத்தல்
நல்லடை.''

இஃது, அரிசிமாவுடன் சில இலைகளைக் கூட்டி அரைத்து, சட்டியை அடுப்பில் வைத்து அதில் கொஞ்சம் நெய் தடவி, அதில் மேற்படி யரைத்த மாவை அடையாகத் தட்டிவிட்டு, வெந்தபின் எடுத்துக் கொள்வதாம்.

7. சூரணம்

இஃது உலர்ந்த சரக்கானால் அப்படியே எடுத்தும் ஈரச் சரக்கானால் உலர்த்தியும், தூய்மையாகவும் புதியனவாகவும், வறுக்க வேண்டியவைகளை வறுத்தும், வறுக்க வேண்டாதவைகளை உள்ளது போலவும், தனித்தனி இடித்துத் துணியில் வடிகட்டி, எடை எடுத்துக் கலந்து கொள்வதாகும். இவ்வாறு செய்யப் படும் ஒவ்வொரு சூரணமும், தூய்மை செய்யப்பட வேண்டு மென்பது முன்னோர்கள் கொள்கை. ஆகையால், எந்தச் சூரணங்களைக் கையாள வேண்டியிருந்தாலும், அவற்றை லேகிய மாகச் செய்து கொள்ள வேண்டியிருந்தாலும், முன்னர் அச் சூரணங்களைத் தூய்மை செய்தேயாக வேண்டும்.

சூரணத் தூய்மை

சூரணங்களுக்கு வேண்டிய சரக்குகளை எடுத்து, தனித்தனி உலர்த்தித் தனித்தனி இடித்து, துணியில் வடிகட்டி, தனித்தனி எடைப்படி நிறுத்துக் கலந்து, பிறகு அச்சூரணத்தைக் கொஞ்சம் பசும்பால் விட்டுப் பிசைந்து ஒரு மண் குடைவு சட்டியில் பசுவின் பாலும் நல்ல தண்ணீரும் சரியளவாய்க் கலந்து ஊற்றி, அச் சட்டியின் வாயில் ஒரு தூய்மையான துணியைச் சிறிது பள்ள மிருக்குமாறு கட்டி, அதில் மேற்படி சூரணத்தைப் பிட்டுமா வைப்பதுபோல வைத்து, மேல் சட்டி மூடி, சந்து வாய்க்கு ஆவி போய் விடாதபடி துணி சுற்றி, அடுப்பின்மேல் வைத்து, பால் சுண்ட எரித்தெடுத்து, அப்பிட்டை வெயிலுலர்த்தி, மறு படியும் இடித்துப் பிட்டுத் துணியில் வடிகட்டி எடுத்துக் கொள் வதாகும்.

பிட்டு

''. . மாவைத் தண்ணீர்
நாட்டியே சீலை கட்டி
வல்லவா மாவை யிட்டு
மலர்வித்தல் பிட்ட தாமே.''

இது, சரக்குகளைத் தனித்தனி இடித்துக் கலந்து தூய்மை செய்யப் பட்ட பொடியை. ஒரு குடைவு மண்சட்டியில் பசுவின் பாலும் தண்ணீரும் சரியளவு கலந்து விட்டு, மேலே துணி கட்டி, அதன்மேல் மேற்படி பொடியில் பசுவின் பால் விட்டுப் பிசைந்து, பிட்டுச் சுடுவதற்கு மாவைப்பது போல் வைத்து, மேல் ஒரு சட்டி மூடி, ஓர் ஆவி வெளிக் கிளம்பு மட்டும் எரித்து, அப்பிட்டை ஒரு மட்பாண்டத்திலிட்டு, நாட்டுச் சர்க்கரை யாவது வெல்லமாவது சேர்த்துப் பிசைந்து எடுத்துக் கொள்வ தாகும்.

9. வடகம்

இது, சரக்குகளைத் தனித்தனியிடித்துத் துணியில் வடிகட்டிச் சேர்க்க வேண்டிய எடை எடுத்துக் கலந்து, அத்துடன் நாட்டுச் சர்க்கரையாவது வெல்லமாவது கலந்து வைத்துக் கொண்டு, ஒரு குடைவு மண்சட்டியில் பசுவின் பாலும் தண்ணீரும் சரி யளவு கலந்து ஊற்றி, சட்டி வாய்க்குத் துணி கட்டி, அத் துணியின் மேல் மேற்படி பொடியைப் பிட்டுமா வைப்பது போல வைத்து, மேற்சட்டி மூடி அடுப்பேற்றி, பால் வரளும் வரை எரித் தெடுத்துப் பிரித்து, மேற்படி பிட்டை சூடாறுவதற்கு முன்பு உரலிலிட்டு இடித்து, வேண்டிய அளவு உருட்டி உலர்த்திக் கொள்வதாகும்.

10. வெண்ணெய்

இது, சரக்கை அல்லது சரக்குகளை அளவுப்படி எடுத்து, நன்றாய்ப் பொடி செய்து, ஓர் இருப்புக் கரண்டியில் போட்டுச் சரக்கெடைக்கு இரண்டு பங்கு பசு நெய் சேர்த்து, அடுப்பிலிட்டு எரித்து, அந்தச் சரக்குகள் நன்றாய் உருகி நெய்யுடன் கலந்த பொழுது, அதைத் தண்ணீர் வைத்திருக்கும் வேறொரு மண் சட்டியில் ஊற்றி, மத்திட்டுக் கடைந்து எடுத்து வைத்துக் கொள்வதாம்.

11. மணப்பாகு

இது, சில சரக்குகளையாவது, வேர்களையாவது, பூக்களை யாவது. பழங்களையாவது, கொடிகளையாவது தனித்தனிக் குடிநீர் செய்து, சில பழங்களிலிருந்தெடுக்கும் சாறுகளையாவது ஒரு மண்சட்டியில் விட்டு, அதற்குத் தகுந்த கற்கண்டாவது, வெள்ளைச் சர்க்கரையாவது எடைப்படி சேர்த்து எரித்து, மணம் வரும் பக்குவத்தில் இறக்கி, ஆற்றி வைத்துக் கொள்வதும், அப்பக்குவ காலத்தில் சிலசரக்குப் பொடிகளைத் தூவிக் கிளறி இறக்கி, ஆற்றி எடுத்து வைத்துக் கொள்வதாம்.

12. நெய்

இது, பசுநெய்யுடன் தனி இலைச்சாறு அல்லது தனிக்கிழங்குச் சாறு சேர்த்தாவது, பல இலைகளின் சாறு அல்லது பல கிழங்குகளின் சாறு அல்லது இரண்டு வகைகளின் சாறும், கற்கங்களும் சேர்த்தாவது, அல்லது சில சரக்குகளின் குடிநீராவது சில பச்சிலைகளின் குடிநீராவது சாறுகளாவது சேர்த்தாவது ஒரு மண் சட்டியில் ஊற்றி, அடுப்பேற்றி எரித்து, நெய்ப்பக்குவத்தில் காய்ச்சி இறக்கி, வடிகட்டி வைத்துக் கொள்வதாகும்.

13. இரசாயனம்

இது, சரக்குகளைச் சூரணஞ்செய்து, சர்க்கரை, நெய், எடைப் படி சேர்த்து, இளகலாகப் பிசைந்து எடுத்துக் கொள்வதாகும்.

இதைக் குழம்பாகச் செய்து கொள்வதும் ஒரு வகை. இதைச் குழம்பென்னும் தலைப்பில் காண்க.

14. இளகம் இலேகியம்

ஈது, குடிநீர்வகைகள், சாறுவகைகள் ஆகிய இவைகளைத் தனித்தனியாகவாவது கலந்தாவது வைத்துக்கொண்டு, அதற்குச் சேர்க்கவேண்டிய அளவு சர்க்கரை கூட்டி, அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து, சாறு சுருங்கி மணம் வருங்காலத்தில் சூரணஞ் செய்து வைத்துக்கொண்டிருந்த சரக்குப்பொடியை அதில் சிறுகச் சிறுகத் தூவி, விடவேண்டிய நெய்யை முன்னரும், தேனைப் பின்னருமாய் விட்டுக் கிளறி, பக்குவத்தில் எடுத்து வைத்துக் கொள்வதாகும்.

வேறு

சர்க்கரையாவது, கரும்புவெல்லமாவது, பனைவெல்லமாவது (கருப்புக் கட்டி) சேர்க்கவேண்டிய அளவு நிறுத்தெடுத்து, ஒரு மண்சட்டியை அடுப்பிலேற்றி, அதில் விடவேண்டிய அளவு தண்ணீரையாவது, பசுவின் பாலையாவது விட்டு, அதில் மேற்படி வெல்லத்தையிட்டு, அது மணக்குங் காலத்தில் தேனையிட்டு ஒரு பொங்கு வரும்போது சரக்குப் பொடியைச் சிறுகச்சிறுகத் தூவிக் கிளறி, பிறகு தேனையும், நெய்யையும் விட்டுப் பக்குவத்தில் எடுத்து வைத்துக்கொள்வதாகும்.

15. எண்ணெய்

இம்மொழி, எள் நெய்—எண்ணெய் என்றாயினமையின் எள்ளிலிருந்து எடுக்கப்படும் நெய்யே எண்ணெயாம்.

இது போலவே வடமொழியில் திலத்தினின்றும் எடுக்கப்படும் நெய் தைலம் என்றாயிற்று திலம் என்ருல் எள். திலசம்பந்தம் தைலம். இது சமவாய சம்பந்தம்.

ஆகலின், விதை, கொடி, பட்டை, கிழங்கு ஆகிய இவற்றினின்றும் பசு முதலியவற்றின்றும் உட்கிடையாயுள்ள நெய்ப்புப் பொருளே நெய் என்று சொல்லப்படுவதாகும்.

இவ்வாறு அளவை நூல் வழியிருப்பதால், வடமொழிச்சொல்லாகிய ''தைலம்'' என்னும் சொல்லையே, விதைகளிலிருந்து எடுக்கப்படும் ஆமணக்குநெய் போன்றவைகளைச் சேர்த்துச் செய்யப்பெறும் பொருள்களுக்கும், பட்டை, கொடி, வேர், கிழங்கு, கொட்டை முதலியவற்றால் குழிவழியாய்ச் செய்யப்படும் பொருள்களுக்கும் தைலம் எனப்பேரிட்டு வழங்குதல் முரணும்.

அதுபோலவே, ஆமணக்குமுத்து முதலியவற்றிலுண்டாகும் நெய்களாற் செய்யப்படும் பொருள்களுக்கெல்லாம் எண்ணெய் என்று பேரிட்டு வழங்குதல் நேரிதன்றாம்.

வித்துக்களிலிருந்து எடுக்கப்படும் நெய்களை அவ் வித்துக்களின் பெயராலேயே வழங்கவேண்டுமென்பதை,

''நாடுறு மொவ்வோர் வித்தின்
நெய்யத னதன்பே ராமே
வாடுறு மருங்கு னங்காய்
வகையிதை யறிந்து கொள்ளே.''

என்ற அடிகளால் அறியலாம்

ஆகையால், எண்ணெய்க் கலப்புள்ளதை வடமொழிப் பெயராகிய தைலம் என்று அழைப்பதை நீக்கி, '' ''எண்ணெய்'' என்றும், மற்றவற்றைக் கூறுங்கால், அவற்றில் தனித்தனி எந்தப் பொருளின் நெய்கலந்து செய்யப்படுகிறதோ அந்தப்பேரையிட்டும் வழங்கவேண்டும்.

இப்படிப்பெயர் வைக்குமிடத்து, அவை தனிச்சரக்குப் பேராகவும் இரண்டு முதல் கலந்த பேராகவும், சிறப்புச் சரக்குப் பேராகவும், தொகைச் சரக்குப் பேராகவும், நோய்ப் பேராகவும், செய்யும் பண்பின் பேராகவும் இருக்கலாம்.

1. வல்லாரை நெய்.—இது தனிச்சரக்கினாலும், நெய்யாலும் பேர் பெற்றது.

இதைப் போலவே தூதுளைநெய் பிரமிநெய் முதலியனவாம்.

2. சிவனார் வேம்புக் குழி நெய்.—இது சிறப்புச் சரக்கினாலும் செய்கைப் பொறியினாலும் தன்னுள் உள்ள நெய்ப்பசை வெளிப்படுத்தப்பட்டதாகலான், சிறப்புப் பெயர் ஒன்றினாலேயே பேர் பெற்றது.

3. கந்தகச் சுடர் நெய்.—இது சிறப்புச் சரக்காலும், அதில் விடும் நெய்யாலும், செய்கைப் பெரும் பொருளாகிய சுடராலும் பேர் பெற்றது.

4. ஒணாண் சுடர் நெய்.—இது சிறப்புச் சரக்காலும், வேப்ப முத்து நெய்யாலும் செய்கைப்பெரும் பொருளாகிய சுடரிணாலும் பேர் பெற்றது. ஆனல், சுடர் என்கிற சொல் சேர்த்தும் சேர்க்கா மலும் சொல்லுகிருர்கள். இது குற்றமேயாகும். ஆயின், இதை ''ஒணன் சுடர்த் தயிலம்'' என்றும் வழங்குவர். ஆனல் இதில் எள்ளின் நெய் இல்லாமையால், அப்படி வழங்குவது தவறே யாகும்.

நந்தமிழ் மொழியில் எண்ணெய் என்ற பேர் நேர் காரணமாக விருக்க, அதை விட்டுப் பிறமொழிப் பெயராகிய தைலம் என்று வழங்குவதிற் பயன் என்ன?

மேக நெய்.—மேகம் என்னும் நோயின் பெயரும், அதில் சேர்க்கப்படும் நெய்யும் சேர்ந்து பேர் பெற்றது.

பெரு நோய் நெய்.—பெரு நோய் என்னும் நோய்ப்பேரும் அதில் சேர்க்கப்படும் நெய்யும் சேர்ந்து பேர் பெற்றது.

ஐங் கூட்டு நெய்.—ஐந்து நெய்களைச் சேர்த்து, அதில் சில சரக்குகளைக் கூட்டிக் காய்ச்சப்படுவது. ஆகையால் இஃது ஐந் தென்னும் தொகைப் பேர் பெற்றது.

மேலே எடுத்துக் காட்டப்பட்டவற்ருல் மேற்படி வழக்குகளை உணர்ந்து, எள் நெய் சேர்க்கப்பட்டவற்றை ''எண்ணெய்'' எனவும், மற்றவற்றைச் சேர்க்கப்பட்டவற்றை நெய் என்றும் இயம்புவது மிகவும் நலமாம்.

இதன் விரிவு

இதன் பிறப்பு வகை 12

''துதியிழுதுற் பவம்பெயர்மிக் கெனினுமவை
யீராறுட் சுருங்கு மந்த
விதியுணருங் கருத்துளதேற் சுருதிமுறை
யிட்டபடி விரித்து ரைப்பாம்
கொதியுருக்கு புடம் பட்டித் தீநீரா
தவநனைவிற் கூவ ணேக்கம்
பதியிறும்பு நீராவி சுடரெந்தி
ரங்களிலுற் பவமா நெய்யே.''

1. கொதி நெய்.—ஆமணக்கு முத்து முதலியவற்றை வறுத் திடித்துத் தண்ணீரில் கலந்து, அடுப்பேற்றிக் கொதிக்க வைப்ப தினின்றும் பிறப்பது.

3. உருக்குநெய்.—வெண்நெய், கோழி முட்டைக் கரு முத லிய பொருள்களை உருக்குவதால் உண்டாவது.

3. புட நெய் அல்லது குழிப்புட நெய்.—அடியில் சிறுசிறு தொளைகளிட்ட ஒரு குடத்தில், சேங்கொட்டை, சிவனுர் வேம்பு முதலியவற்றைச் செய்ய வேண்டிய மாதிரி செய்து நிரப்பி, மேல் மூடி, வாய்க்கு மண் சீலை செய்து, ஒரு குழி தோண்டி, அடியில் ஒரு சிறு பீங்கானையாவது சட்டியையாவது வைத்து, மேலே சரக்குப் போட்ட குடத்தை வைத்துப் புடம்போடுவதால், அடி யிலிருக்கும் சட்டியில் இறங்கியிருப்பதாம்.

4. தீநீர் நெய்.—சந்தனக் கட்டை முதலிய மணமுள்ள பொருள்களைத் தூளாக்கி, பானையிற் போட்டுத் தண்ணிர் விட்டு, பட்டி கட்டி இறக்குகிற தீநீரிஞற் பிறப்பது.

5. சூரிய புட நெய் அல்லது ஆதவ நெய்.—எள்ளுடன் சில சரக்குகளைச் சேர்த்தரைத்த கற்க மருந்தை, சூரியனது வன்மை யுள்ள வெயிலில் வைக்க, அச்சூட்டால் வெளிப்படுவது.

6. மண்நெய்.—ஓதமில்லாத பூமிக்குள்ளிருந்து கொப்புளித் துத்தானே வெளித் தோன்றுவது.

7. மரநெய்.—மரத்தில் வெட்டப்படும் இடத்தினின்றும் உண்டாவது.

8. சிலை நெய்.—உயர்ந்த மலைகளிலிருந்து வழிவது.

9. நீர் நெய்.—புழுகுச் சட்டம் முதலியவைகளை நன்ருய் நசுக்கித் தண்ணீரில் ஊறவைப்பதிஞல் பிறப்பது.

10. ஆவி நெய்.—மட்டுப் பால், சாம்பிராணி முதலிய சரக்கு களை நெருப்பிற் காய்ந்த மட்சட்டியிற் போட்டு அதன்மேல் தண்ணீர் நிறைந்த தட்டு ஒன்றை வைக்க, அந்தப் புகையால் பிறப்பது.

11. சுடர் நெய்.—கந்தகம் முதலிய சரக்குகளை எந்த நெய் யாற் செய்யச் சொல்லப்பட்டிருக்கிறதோ, அதனுல் அரைத்து, ஒரு புதுத் துணித்துண்டைத் தண்ணீரில் நனைத்துக் கசக்கி, அதி லிருக்கும் கஞ்சியைப் போக்கி உலர்த்தி, அந்த துணியில் தடவி இருப்புக் கதிரில் சுற்றிக்கட்டி ஒரு முனையிற்கொளுத்திப் பிடிக்கச் சுடருடன் இறங்குவது.

12. பொறி நெய் அல்லது இயந்திர நெய்.—எள் முதலிய விதைகளிலிருந்து காணம் (செக்கு) முதலிய கருவிகளால் எடுக்கப் பெறுவது.

குறிப்பு. இவ்வாறுரைக்கப்பட்ட பன்னிரண்டு வகை நெய் களும் அடியிற் கூறப்பட்ட ஐவகை ஆட்சிகளில் அடங்கும்.

ஐவகை நெய்களாவன

''பருதியொளி தைலவருக் கச்சுருக்க நூற்குட்
படுதைல மைவிகற்பப் படுமவையா வனவோர்
சுருதிமொழி முடித்தயில முடங்குகுடித் தயிலந்
தொக்கிலிடு பிடித்தயிலந் துளைச்சிகிச்சைத் தயிலங்
குருதிவழி சிலைத்தயில மென்பவையாஞ் சிலநெய்
கூறுமைந்து நான்குமூன் றிரண்டொன்றிற் காங்காண்
கருதிமுதற் றயிலமுதன் மேகரா ஜாங்கங்
கடையிடையி லுணர்வரெலாங் கற்கு மருத்துவரே.''

(தே.தை.வ.)

அவை.—1. முடி நெய், 2. குடிநெய், 3. பிடி நெய், 4.தொளை நெய், 5. சிலை நெய் என்பன.

விளக்கம்

1. முடிநெய்.—தலைக்கிடும் எண்ணெயாகும்.

2. குடிநெய்.—குடிக்கிற நெய், இஃது எண்ணெய், ஆமணக்கு நெய், நெய் ஆக மூவகையாகும்.

3. பிடிநெய்.—உடல் மீது தடவிப் பிடிக்கின்ற நெய்யாகும்.

4. தொளை நெய்.—உடலிலுள்ள ஒன்பது தொளைகளின் வழியாய்ச் செலுத்துக்கின்ற நெய்யாகும்.

5. சிலை நெய்.—புரைகளின் வழியாய்க் குருதி, சீ முதலியவைகளை ஒழுகப் பண்ணுகின்ற கெட்ட இரணங்களுக்கு இடும் நெய்யாகும்.

16. மாத்திரை

''உரைத்திடு மாத்தி ரைப்பேர் உரைப்பரே யுருண்டை
வட்டம்.''

இது சில சரக்குகளைச் சேர்த்தும் சில இலைச்சாறுகளாலாவது, இஞ்சிச்சாறு போன்றவைகளாலாவது, குடிநீர்களாலாவது, முலைப்பாலாலாவது அரைத்து, பல அளவுகளாய் உருட்டி உலர்த்தி எடுத்து வைத்துக் கொள்வதாகும்.

இதற்கு, மாத்திரை, உருண்டை, குளிகை என்னும் பேர்கள் வழங்குவதுண்டு.

மாத்திரை என்ருல் அளவு. எந்த அளவினல் இம்மருந்து கொடுக்க வேண்டுமோ, அந்த அளவிலேயே செய்யப்படுவதால் இதற்கு அப்பெயர் வாய்ந்தது. உருண்டை வடிவத்தால் உருண்டை ஆயிற்று.

17. கடுகு

சில மருந்து சரக்குகளை நெய் முதலிய தைலப் பொருள்களால் சேர்த்துக் காய்ச்சி, அச்சரக்குகள் திரண்டுவரும் பக்குவத்தில் எடுத்து, அக்கடுகை உள்ளுக்குச் சாப்பிட்டுத் தைலத்தை மேலே பூசுவது.

குறிப்பு

''நாடுறு மொவ்வோர் வித்தின் நெய்யத னதன்பே ராமே
வாடுறு மருங்கு னங்காய் வகையிதை யறிந்து கொள்ளே
மருத்துநீர் குடிநீ ருண்ணீர் வழங்கிய கஷாயப் பேராம்
உரைத்திடு மாத்தி ரைப்பேர் உரைப்பரே யுருண்டை
வட்டம்''

''ஐந்துறுப் புகளி லுண்டாம்
அறலதைச் சூடு பண்ணித்
தந்திடல் சுரச மாகும்
தனிவெந்தை நீரே சாறும்
வந்திடு சரக்கைக் கல்லில்
கல்லுற வரைத்தல் கற்கம்
முந்துறு முட்க ளிப்பை
மூடலுட் களியா மென்னே''.

''பல்வகை மாவ ரைத்துப்
பரப்பியே தட்டிக் கையால்
புல்லியே நெய்யைப் பூசிப்
போட்டது வெந்தெடுத்தல்
நல்லடை மாவைத் தண்ணீர்
நாட்டியே சீலை கட்டி
வல்லவா மாவை யிட்டு
மலர்வித்தல் பிட்ட தாமே.''

(தசாங்கநிகண்டு)

18. பக்குவம்

1. இது, பக்குவஞ் செய்ய வேண்டிய கடுக்காய் போன்றதை, பச்சரிசி கழுநீரிலாவது, நீரிலாவது ஊறப்போட்டு, அது மெலிந்த பின், மோர், எலுமிச்சம் பழசாறு, இஞ்சிச்சாறு, சில இலைகளின் சாறு முதலியவற்றில் கடைச்சரக்குகளின் பொடியைக் கூட்டிப் பக்குவம் செய்வதொன்று.

2. எலுமிச்சங்காய் போன்றவைகளை ஐந்துப்பு முதலியவை சேர்த்து வேக வைத்துப் பக்குவஞ்செய்வது மற்றொன்று.

''பாவனக்கடுக்காய்'' போன்றவற்றால் அறிக.

19. தேனூறல்.

இஃது, இஞ்சி, நெல்லிக்காய், கடுக்காய் முதலியவற்றைத் தண்ணீரில் ஊறவைத்து, மேலில் ஊசியாலாவது, முள்ளினாலாவது பல தொளைகள் குத்தி, தண்ணீரை யாற்றிச் சர்க்கரைப்பாகில் போட்டாவது, தேனில் ஊறப்போட்டாவது வைத்துக் கொள்வது.

20. தீநீர்.

இஃது இரண்டு வகைப்படும்: 1. சரக்குகளைச் சேர்த்து வாலையிட்டுத் தண்ணீர் சேர்த்து, அடுப்பேற்றி எரித்து இறக்குவது ஒன்று. இது தீநீர் எனப்படும்.

2. உப்பு வகைகளை வாலையிட்டு எரித்து இறக்குவது மற்றொன்று. இது புகை நீர் எனவும், திராவகம் எனவும் சொல்லப் படும்.

இவ்விரண்டிற்கும் ''சத்திநீர்'' எனவும் வழங்குவதுண்டு.

இதை,

''கரிவெடி படிகி காந்த நறும்பூ
பொரிகட னுரையோர் பலம்பூ மதுவரை
விரவிடு ரவியில்வை விடுமது முத்தரம்
கரையது சத்திநீ ராய்வடி யெடு''.

என்பதாலறிக.

21. மெழுகு.

இஃது இரண்டு வகைப்படும். அவை:—1. அரைப்புமெழுகு, 2. சுருக்கு மெழுகு என்பன.

1. **அரைப்பு மெழுகு.**—இது, சில ரசக்கலப்புள்ள சரக்குகளைத் தனிமையாயாவது, இவற்றுடன் சில கடைச்சரக்குகளைச் சேர்த்தாவது, உப்புகளைத் தனிமையாயாவது அவற்றுடன் கடைச்சரக்குகளைச் சேர்த்தாவது, சில சாறுகளாலேனும் தேனினாலேனும் அரைத்து மெழுகுப் பக்குவமாய்ச் செய்து கொள்வது.

2. சுருக்கு மெழுகு.—சில ரசக்கலப்புள்ள சரக்குகளையாவது பாஷாணங்களையாவது, பலவகை மூலிகைகளின் சாற்றினுலேனும் சில நெய்ப்புப் பசையுள்ள தைலங்களினுலேனும் சுருக்குக் கொடுத்து, அவை இளகி மெழுகு பதமாகும்போது எடுத்து, குழிக் கல்லிலிட்டுப் பக்குவமாய் அரைத்து எடுத்து வைத்துக்கொள்வது.

22. குழம்பு.

இது, சில சாறுகளைக் கலந்தாவது, தனிச்சாருகவாவது, ஒரு சட்டியிலிட்டு, சர்க்கரை கூட்டிச் சில சரக்குகளைப் பொடி செய்து துணியில் வடிகட்டி அதில் போட்டுக் குழம்புப் பக்குவத்தில் காய்ச்சி வடித்து எடுத்துக்கொள்வதாகும்.

உதாரணம் கேசரிக்காய் (எலுமிச்சை) குழம்பு இதுவல்லாமல், சில சரக்குகளைச் சேர்த்து நெய்ப் பசையுள்ள பொருள்களைக் கொண்டு அரைத்துக் குழம்புப் பக்குவத்திலெடுப்பது குழம்பாகும்.

உதாரணம் அகத்தியர் குழம்பு, கௌசிகர் குழம்பு.

23. பதங்கம்.

இஃது. இரசத்தை மாத்திரம் தனியாகவாவது, அதனுடன் இரசக் கலப்புள்ள மருந்துகளையாவது ஒரு மண் சட்டியில் உப்பு செங்கல் மாத் தூளும் போட்டு, அதன் மேல் மேற்கூறியதை அப்படியேயாவது, ஒரு மூசையில் போட்டாவது வைத்து, மேலே, உப்பு மூடி, மேல் சட்டி மூடிச் சீலை மண் செய்து, அடுப்பேற்றி, அதற்குச் சொல்லப்பட்டிருக்கிற நாழிகையளவாகவும், சொல்லப் பட்டிருக்கிற தீயினளவாகவும் எரித்து, அசையாமல் கீழிறக்கிப் பிரித்து மேற்சட்டியில் ஏறியிருக்கும் மருந்துகளைப் பக்குவமாய் வழித்தெடுத்து வைத்துக் கொள்வதாகும்.

அன்றி, சில பாடாணங்களைச் சில இலைச்சாறுகளால் அரைத்து, மூசையும் நடுவில் தொளைவைத்த மேல் மூடியும் செய்து, அம்மூசைக்குள் இரசம் விட்டு, ஒருசட்டியில் போட வேண்டிய அளவு உப்பிட்டு, அதன்மேல் அம்மூசையை வைத்து மேல் சட்டிமூடி, மண்சீலை நாள் ஒன்றுக்கு ஒரு சீலையாய் ஏழு நாளைக்கு ஏழு சீலை செய்து எரிப்புக்குச் சொல்லியிருக்கிற சாமம் வரையும் அதற்குச் சொல்லப்பட்டிருக்கிற தீயளவாய் எரித்து சிறிது ஆறினபின் அதை அசையாமல் எடுத்து, மெதுவாய்ப்பிரித்து மேற்சட்டியில் ஏறியிருக்கிற மருந்தைத் துடைத்து எடுத்து வைத்துக் கொள்வதாகும்.

24. செந்தூரம்.

இஃது உலோகங்களையேனும், பாடாணுதிகளையேனும் சில இலைச்சாறுகளாலாவது உப்புப்புகை நீரிலாவது, செய்நீரிலாவது, அரைத்து, புடம் போட்டாவது, எரித்தாவது, வறுத்தாவது, அரைத்து, வெயிலில் வைத்தாவது சிவக்குமாறு செய்து எடுத்துக் கொள்வதாகும்.

1. எரித்துச் சிவக்கச் செய்வது; பூரணசந்திரோதயம் போன்ற மருந்துகள்.

2. வறுத்துச்சிவக்கச் செய்வது; அயவீர செந்தூரம் போன்ற மருந்துகள்.

3. அரைத்துச் சிவக்கச் செய்வது; சண்டமாருத செந்தூரம் போன்ற மருந்துகள்.

4. அரைத்து வெயிலில் வைத்து எடுப்பது; சுயமாக்கினி செந் தூரம் போன்றவைகள்.

5. மற்றவை, வழக்கத்திலிருக்கும் அயச்செந்தூரம், காந்த செந்தூரம், அப்பிரகசெந்தூரம் போன்றவைகளாகும்.

25. நீறு வெண்ணீறு அல்லது பற்பம்.

இஃது உலோகங்களையேனும், பாடாணங்களையேனும், உபரசங்களையேனும், சில இலைச் சாறுகளினுலாவது உப்புப்புகை நீரினுலாவது, செய் நீரினாலாவது, அரைத்துப் புடமிட்டேனும், வறுத்தேனும், எரித்தேனும், ஊதியேனும் வெளுக்கும்படி செய்து எடுத்துக் கொள்வது.

பற்பங்களின் நிறம்;

அகத்தியர் வைத்திய காண்டம்—600

''நீறிருந்த படிக வெல்லாம்
  நிறமது வெளுப்பே யாகும்
வேறிந்த வெளுப்பை யல்லால்
  வெறுநிறம் பற்ப மன்று
கூறிந்தத் தங்க மாத்ரம்
  குலம்பொய்யா நிறமு மஞ்சள்
வாறிந்தப்படியே யல்லால்
  மற்றெல்லா மருட்டுத் தானே.''

என்னுஞ் செய்யுளால் தங்க நீற்றின்நிறம் மாத்திரம் மஞ்சளென்றுணர வேண்டும்.

26. கட்டு (மாத்திரைக்கல்).

இது, பாடாணங்களைத் தனித்தனியாயேனும், இரண்டு முதற் கலந்தேனும், சில சரக்குகளைச் சேர்த்திறக்கப்பட்ட புகை நீரா லாவது, செய்நீராலாவது, இலைச் சாறுகளாலாவது, குடிநீர்களா லாவது, தேனினாலாவது, முலைப்பாலாலாவது, சில சரக்குகள் சேர்ந்த குழிப்புட நெய்யாலாவது, தனிச்சரக்குக் குழிப்புட நெய் யாலாவது சுருக்குக் கொடுத்துக் கட்டிக் கொள்வது.

ஈதன்றி, சில சரக்குகளைத் தனியாயாவது, பற்ப செந்தூ ரங்களாய்ச் செய்தாவது கூட்டிச் சாறுகளாலேனும், முலைப்பா லாலேனும் அரைத்து உருட்டிக் கொள்வதாகும்.

27. உருக்கு.

இது, பாடாணங்களையேனும், உலோகங்களையேனும் நட் புச் சரக்குகளைக் கூட்டியாவது, பகைச்சரக்குகளைக் கூட்டியா வது மூசையிலிட்டு மேல்மூடி, மண் சீலை செய்து, கட்டைகளின் இயற்கைக் கரியிட்டு ஊதி இளகச் செய்து ஆறவிட்டு எடுப்பது.

28. களங்கு.

இது, பாதரசம் முதலிய சரக்குகளை, இலைகளின் சாறுகளா லாவது, செய் நீர்களாலாவது, புகை நீர்களாலாவது, சுருக்குக் கொடுத்துப்புடம் போட்டு, கட்டிக்கரியிலிட்டு ஊதி, மணியாக்கி உருக்கி, தங்கம் நாகம் கூட்டி ஆற வைத்து எடுத்துக்கொள்வது.

29. சுண்ணம்.

இது, பாதரசத்தைத் தனியாயேனும், பாடாணங்களைத் தனி யாயேனும், லோகங்களைத் தனியாயேனும், கலந்தேனும் கல் வத்திட்டு, சில சாறுகளாலாவது, செய்நீர்களாலாவது, புகைநீர் களாலாவது அரைத்துருட்டி, உலர்த்தி, மூசையிலிட்டுச் சீலை செய்துலர்த்தி, கரிநெருப்பிலிட்டு ஊதி எடுத்து, ஆறவைத்துப் பூத்தபின் எடுத்துக்கொள்வது. இது மஞ்சளுக்குச் சிவக்கும்

30. கற்பம்.

இது, சில இலைகளையாவது, வேர்களையாவது, சரக்குகளை யாவது, உப்பு, உலோகம், உபரச சத்துக்களையாவது அவ்வவ றிற்குச் சொல்லப்பட்டுள்ள பத்தியப்படியும், நாளளவுப்படியும் ஏற்றியும், இறக்கியும் உண்டுவரச் செய்வது.

இது, நாள்தோறும் தயார் செய்து சாப்பிடுவதும், முன்னர் முடித்து வைத்திருந்து உண்பதுமென இரண்டு வகைப்படும்.

அவற்றுள் நாள்தோறும் தயார்செய்வது, இலை, வேர், சரக்கு முதலியன.

முன்னர் முடித்து வைத்திருந்து உண்பது: உலோகச்சத்து உபரசசத்து முதலியன.

மூலிகைக் கற்பங்களாவன: தேரர்யமகவெண்பாவிலும், மற்றச் சித்தர் நூல்களிலும் சொல்லப்படும் மூலிகைகளாகும்.

முன்னர் முடித்து வைத்திருக்கும் சத்துக்களாவன: அகத்தியர் செந்தூர முந்நூறு முதலிய நூல்களில் சொல்லப்படுவன.

31. சத்து.

இது, காந்தம், இரும்புத்தூள், மற்ற உபரசம் முதலியவற்றோடு சில பாடாணாதிகளைச் சேர்த்து, வெண்கருச் செய்நீரினுல் அரைத்துலர்த்தி, மூசையிலிட்டுச் சீலை செய்து, மூன்று முறை ஊதி எடுக்கவரும் சத்துக்களோடு, தங்கம், ரசம், கந்தகம் சேர்த்து அரைத்துக் குப்பியிலிட்டு எரித்துச் செந்தூரம் ஆக்கிக் கொள்வது.

32. குருகுளிகை.

இது, வாலை ரசத்தை சில சரக்குகளால் கட்டி மணிமணியாய் செய்து கோத்துக் கொள்வது.

இம்முப்பத்திரண்டு மருந்துகளும் கீழ்க்கூறப்படும் செயல்களில் அடங்கும் எனல்.

1. கருக்கல்
2. அரைத்தல்
3. கசக்குதல்
4. கலக்குதல்
5. வறுத்தல்
6. கழற்றுதல்
7. உருக்குதல்
8. இறுத்தல்
9. உலர்த்தல்
10. உறைத்தல்
11. குழப்புதல்
12. உடைத்தல்
13. நறுக்குதல்
14. உருட்டுதல்
15. நகத்துதல்
16. நசுக்குதல்
17. பொசுக்குதல்
18. நனைத்தல்
19. எரித்தல்
20. வழிக்குதல்
21. இறுக்குதல்.
22. இழைத்தல்.
23. குழைக்குதல்.
24. எடுக்குதல்.

''கருக்கு மருந்துக ளரைக்கு மருந்துகள்
கசக்கு மருந்துகள்மேல்
கலக்கு மருந்துகள் வறுக்கு மறுந்துகள்
கழற்று மருந்துகள்தீ

யுருக்கு மருந்துக ளிறுக்கு மருந்துக
ளுலர்த்து மருந்துகள்மே
லுறைக்கு மருந்துகள் குழப்பு மருந்துக
ளுடைக்கு மருந்துகள்மே
னருக்கு மருந்துக ளுருட்டு மருந்துக
ணகத்து மருந்துகள்கை
நசுக்கு மருந்துகள் பொசுக்கு மருந்துகள்
நனைக்கு மருந்துகள்தீ
எரிக்கு மருந்துகள் வழிக்கு மருந்துக
ளிறுக்கு மருந்துகள்கல்
லிழைக்கு மருந்துகள் குழைக்கு மருந்துக
ளெடுக்கு மருந்துகளே.''

எனத் தேரர் தருவில் கூறியிருப்பதால் அறியலாம்.

புறமருந்துகள் 32-ம் அவற்றுள் சிலவற்றின் ஆயுள் அளவும்

1. கட்டுதல்	17. நீர்
2. பற்று	18. வர்த்தி
3. ஒற்றடம்	19. சுட்டிகை.
4. பூச்சு	20. சலாகை
5. வேது	21. பசை
6. பொட்டணம்	22. களி
7. தொக்கணம்	23. பொடி
8. புகை	24. முறிச்சல்
9. மை	25. கீறல்
10. பொடிதிமிர்தல்	26. காரம்
11. கலிக்கம்	27. அட்டைவிடல்
12. நசியம்	28. அறுவை
13. ஊதல்	29. கொம்புகட்டல்
14. நாசிகாபரணம்.	30. உறிஞ்சல்
15. களிம்பு	31. குருதிவாங்கல்
16. சீலை	32. பீச்சு

இவற்றுள் மை, கலிக்கம், நசியம், பசை, பீச்சு இவைகள் ஓராண்டு வன்மையுள்ளனவாம்.

நாசிகாபரணம், நீர், வர்த்தி, பொடி இவைகள் மூன்று திங்கள் வன்மையுள்ளனவாம்.

களிம்பு, சீலை இவைகள் ஆறு திங்கள் வன்மையுள்ளனவாம்.

இதனைக் கீழே கூறப்படும் செய்யுளாலறிக :—

''வெளிமருந் தேகட்டு பற்றொற்ற டம்பூச்சு
வேது பொட்டணந் தொக்கணம்
மென்புகைமை ப்பொடிதிமிர் தல்கலிக்க நசியமூதல்
மேவுநா சிகாப ரணமும்
களிம்பு சீலைநீர்வர்த்தி சுட்டிகை சலாகைபசை
களிபொடி முறிச்சல் கீறல்
காரமட் டையறுவை கொம்புறிஞ் சல்குருதி
கண்டு வாங்குதல் பீச்சிவை
வெளிமருத் துவமுப் பத்திரண் டென்றனர்
விண்ணுலவு சித்த ராமால்
மேலவற் றிற்பசை பீச்சுமை நசியமும்
மென்கலிக் கங்க ளோராண்
டொளிவர்த்தி பொடியுநீர் நாசிகா பரணமிவை
யொருமூன்று திங்க ளாகும்
உயர்சீலை களிம்பிவைக ளறுதிங்க ளாகுமென்
றோதினா ராயு ளுமரோ.''

1. கட்டுதல்.

இலைகளையாவது, பட்டைகளையாவது சில பறவைகளையாவது நைய இடித்தோ, அரைத்தோ, வதக்கியோ, புளித்தநீர் முதலிவற்றில் வேகவைத்தோ கட்டுதல். இவைகளல்லாமல் பாஷாணம் முதலியவற்றைக் கட்டுதலுமுண்டு.

இவற்றுள் ஏதாவதொன்றைச் சன்னிக்குத் தலையிலும், கண்ணோய்க்குக் கண்ணிலும், கைகாலெரிவுக்கு உள்ளங்கை உள்ளங்காலிலும். கடுவனுக்கும் கால்வீக்கத்திற்கும் காலிலும், விதை வீக்கத்திற்கு, விதையிலும், அரையாப்புக்கு அரையிலும் கட்டுதலாம் என்றறிக.

2. பற்று.

இலை, பட்டை, வேர் இவற்றின் சாற்றையாவது, சில சரக்குகளை அரைத்தாவது, சுடவைத்தாவது, சுடவைக்காமலாவது நோயுள்ள இடங்களில் திண்மையாய் அப்புதல்.

3. ஒற்றடம்.

சுண்ணும்புக்காரை, தவிடு, செங்கற்பொடி, கொள்ளுமா, ஓமம், மணல், சில இலைகள் முதலியவற்றுள் ஏதாவதொன்றை வறுத்து, துணித்துண்டில் முடிந்து நோயுள்ள இடங்களில் ஒற்றுதல்.

4. பூச்சு

சில இலைச்சாறுகளைக் கொதிக்கவைத்தாகிலும், தைலத்தையாகிலும் நோயுள்ள இடங்களில் பூசுவது.

5. வேது

சில சரக்குகளைத் தூளாக இடித்து, துணித்துண்டில், வைத்துத் திரித்து, ஒரு மண் அகலில் வேப்ப நெய்விட்டு அந்தத்திரியை அதிலிட்டுக் கொளுத்தி முக்காடிட்டு அப்புகையை உள்ளே வாங்கி வேர்வை உண்டாக்கிக் கொள்வதும், வெந்நீரிலாவது;, நொச்சித்தழை மஞ்சள் பொடி முதலியவற்றை இட்டுக்காய்ச்சிய குடிநீரிலாவது செங்கல்லைச் சிவக்கக்காய்ச்சி அதிலிட்டு, அதினின்றெழும் ஆவியைப்பிடிப்பது.

6. பொட்டணம்.

சில சரக்குகளை இடித்துச் சிறு முடிச்சுக் கட்டி; வேப்பெண்ணெய் அல்லது வேறு நெய்யைச் சுடவைத்து, அம்மூட்டையை அதில் நனைத்து நோயுள்ள இடங்களில் ஒற்றடம் போடுவதாம்.

ஈதன்றிப் பெண்களுக்குப் பேறுகாலத்தில் பெருங்காயத்தைத் துணித் துண்டில் முடிந்து காதிலும், மூக்கு நோயுள்ளவர்களுக்குச் சில மருந்தின் பொடிகளைத் துணியில் முடிந்து மூக்கிலும், ஆசன நோயுள்ளவர்களுக்கு ஆசனத்திலும், வங்குவாசல் தளர்ச்சிக்குத் துவர்ப்பு பொடிகளைத் துணித் துண்டில் முடிந்து யோனியிலும் வைப்பதற்குப் பொட்டணம் எனப்படும்.

7. தொக்கணம்.

வாத முதலிய முக்குற்றப் பிணிக்கலப்பால் உண்டாகும் உடல் வலியை நீக்க உடலைப்பிடிப்பது.

இது வெறுங்கையால் பிடிப்பதும் தைலங்களைத்தடவிப் பிடிப்பதும் என இருவகைப்படும்.

இதன் குணம்.

''தொக்கணத்தி னாலிரத்தந் தோல்ஊ னிவைகட்கு
மிக்கு சவுக்கியஞ்ச மீரனும்போ—மெய்க்கதிக
புட்டி யுறக்கம் புணர்ச்சி யிவைகதிக்கும்
பட்ட அலைச்சலறும் பார்''.

(ப.கு.சி.)

8. புகை.

இது மயிலிறகு, சீரகம் முதலியவற்றைத் துணித்துண்டில் வைத்துத்திரி கொளுத்தியாவது, விலங்குகளின் குளம்புச்சீவல் மாடு, எருமை இவைகளின் கொம்புச் சீவல், நல்ல பாம்புச்சட்டை பன்றிப்புட்டை முதலியவைகளை இடித்து நெருப்பிலிட்டாவது உண்டாக்குவது. இவைகளல்லாமல், அகத்தியர் குழம்பு, கௌசிகர்மை போன்றவைகளைத் துணியில் தடவித்திரியாகத் திரித்து அதைச் சிற்றாமணக்கு நெய்யில் தோய்த்துக்கொளுத்தியும் உண்டாக்குவது.

9. மை.

சில சரக்குகளை அஞ்சனக்கல் (நீலாஞ்சனம்) முதலியவற்றோடு சேர்த்து, இலைச்சாறுகள் விட்டு உலரஉலர அரைத்து உலர்த்தி, பிறகு தேன் விட்டு மை போல் அரைத்துக் கொள்வதும், சில சரக்குகளைக் கருக்கித் தேனில் அரைத்துக் கொள்வதும், சில குடிநீர்களில் சிலசரக்குகளையும் களாப்பூச்சாறு முதலியவைகளையும் சேர்த்துத் தேன் விட்டுக் காய்ச்சிக் கொள்வதுமாம்.

10. பொடிதிமிர்தல்.

இது கொள்ளுமா, மஞ்சள்பொடி இவைகளைச் சூடனோடு சேர்த்தாவது, தனியாகவாவது,சில இலைகளை அரைத்தாவது உடம்பில் தேய்த்து உருட்டி உதிர்த்தல்.

11. கலிக்கம்.

இது, சிலசரக்குகளைச் சில சாறுகளால் அரைத்து, உருட்டி மாத்திரையாக்கி, தேனிலாவது, முலைப்பாலிலாவது, வேறுசாற்றிலாவது உரைத்துக் கண்ணில் போடுவது.

12. நசியம்.

சில சரக்குகளைச் சாறுகளால் அரைத்து மாத்திரையாக்கி, வேண்டும்போது அதைத் துணியில் முடிந்து, முலைப்பாலிலேனும், வேறெந்தச்சாற்றிலேனும் ஊறவைத்தும், தனி இலைகளையாவது, பூக்களையாவது, கசக்கியும் மூக்கில் பிழிவதும், தைலம் முதலியவைகளை மூக்கில் விடுவதுமாகும்.

13. ஊதல்.

சில இலைகள், உப்புச்சரக்குகள் முதலியவற்றில் எதையாவதொன்றைவாயிலிட்டுமென்று காது முதலியவற்றில் செலுத்த ஊதுவது.

14. நாசிகாபரணம்.

சில சரக்குகளையாவது, வேர்களையாவது தனியாகவேனும் சிலசாறுகளிலாவது பால்களிலாவது ஊறவைத்தேனும் நிழலில் உலர்த்தி இடித்துத் துணியில் வடிகட்டி மூக்கில் போடுவது.

15. களிம்பு.

சில பாடாணங்களைத் துவர்ப்புள்ள காய்ச்சுக்கட்டி, கடுக்காய்பபூ, மாசிக் காய்போன்ற சரக்குகளுடன் பொடியாக்கிப் பசு வெண்ணெய் சேர்த்து நன்ருய் அரைத்து வைத்துக் கொள்வது.

16. சீலை.

இது சில நச்சுச்சரக்குகளைத் தண்ணீரிலாவது சாறுகளிலாவது அரைத்துக் குழம்பாக்கி, அதில் துணித்துண்டைத் தோய்த்து விரணங்களுக்கு உபயோகிப்பது.

17. நீர்.

இது விரணங்களைக் கழுவுவதற்காகச் சில சரக்குகளை நீரில் ஊறவைத்தாவது, குடிநீராய்க் காய்ச்சியாவது சில நச்சுச் சரக்குகளை மிக்க நீரில் அரைத்துக் கலந்தாவது நீர்மயமாய்வைத்துக் கொள்வது.

18. வர்த்தி.

இது சில நச்சுச் சரக்குகளைப் பொடி செய்து சில சாறுகளால் அரைத்துக் குழம்பாக்கி, சீலையை அதில் நனைத்தாவது, சில சரக்குப் பொடிகளைத் துணித்துண்டில் வைத்தாவது திரித்து, ஆராத இரணங்கட்கும் புரையோடும் இரணங்கட்கும் வைப்பது.

19. சுட்டிகை.

இது சுடுகை என்பதன் வழக்கு; சிட்டிகை எனவுங் கூறுவர். இதுவே சூடுபோடுதலாம். மண், மரம், ஊசி முதலியவற்றைக் கொளுத்திச் சூடேற்றி, நோயுள்ள இடங்களில் இழுப்பது.

20. சலாகை.

இஃது ஒரு சிறிய மெல்லிய கருவி ; இது, சதையாலாவது, கல்லாலாவது வேறு வாயு முதலியவைகளாலாவது நீர்த்துளையை மூடி, நீரை வரவொட்டாமல் தடுக்குங்கால், அந்நோய்களுக்குக் கையாள்வது.

இது, ஒருவகை முருக்கனிலைக் காம்பைப்போன்று முனை மழுக்கமாயிருக்கும். இதனைக்கொண்டு புரையோடும் புண்களின் ஆழத்தை அறியலாம்.

21. பசை.

இது குங்கிலிய முதலியவைகளை மெழுகுடன் சேர்த்து அல்லது சிற்றாமணக்கு நெய்யுடன் சேர்த்து உருக்கிப் பசையாக வைத்துக் கொள்வது. இதை உருக்கித் துணித்துண்டில் தடவிப்புண் மேல் போடலாம்.

22. களி.

இஃது ஆளிவிதை போன்ற சில விதைகளை, அரிசிமாவுடன் கூட்டிப் பசுவின் பால் அல்லது நீர் விட்டரைத்து. கரண்டியிலிட்டுக் கிளறிச் கட்டுவதற்குக் களிபோல் செய்துகொள்வது.

23. பொடி.

இது வெங்காரப் பொரி அல்லது சில துவர்ப்புள்ள சரக்குகளின் பொடிகளை இரணத்தின் மீது தூவுபொடியாய்ப் பயன் படுத்துவதாம்.

24. முறிச்சல்

இது கைகால் முதலிய உறுப்புகளில் ஏதாவது பிறழ்ந்து சரீயான நிலையிலில்லாமல் மாறியிருந்தால், அதைச் சரியாகத் தள்ளுவதற்குத் தெரிந்து செய்யும் ஒரு தொழில்.

25. கீறல்.

இது கட்டி, பரு, கொப்புளம் முதலியவற்றில் ஏதாவதொன்றில் சீயாவது, குருதியாவது, நீராவது கோத்துக் குத்தல் முதலிய துன்பங்கள் நேரிட்டால், எளிதாக மேற்படி சீழ் முதலியவற்றை வெளிப்படுத்தி அவ் வருத்தத்தை நீக்குவதற்குச் செய்யப்படும் ஒரு தொழில்.

26. காரம்.

இது இரணநோய்களுக்குச் சில நஞ்சுள்ள மருந்துகளைக் கூட்டி இரணத்தை ஆற்றுதற்கேனும் ஆக்குதற்கேனும் வைக்கப்படும் மருந்து

27. அட்டைவிடல்

இது நோயுள்ள வீங்கின இடத்தில் குருதியை வாங்கிவிட வேண்டியிருந்தால். அக்காலத்தில் அட்டையை அவ்விடத்தில்பற்றும்படி விட்டால், அது கடித்து உள்ளிருக்கிற தீய இரத்தத்தையெல்லாம் குடித்து விழுந்து விடும். வீக்கமும் வாங்கிவிடும். இதுவே அட்டை விடலென்பதாம்.

28. அறுவை.

இது அறுத்துச் செம்மைப் படுத்தவேண்டிய இடங்களில்அறுக்கும் கருவிகளைக் கொண்டறுத்து, கெடுதிகளையெல்லாம் நீக்கிவிட்டுத் தைத்துவிடல்.

29. கொம்புகட்டல்.

இது நோயாளியின் உடலில் எவ்வுறுப்பு உடைந்து போகிறதோ, அவ்வுறுப்பை இணைத்து மீண்டும் ஒட்டிக்கொள்ளும்படி செய்வதற்காக அவ்வுறுப்புகளில் கொம்பு வைத்துக் கட்டுதலாகும்.

30. உறிஞ்சல்.

இது இரணங்களிலுள்ள சீழ், குருதி முதலியன வெளியாகாவிட்டால், அவைகளை வெளிப்படுத்த கருவிகளை வாயில் வைத்து உறிஞ்சி எடுத்தலாகும்.

31. குருதி வாங்கல்.

இது நோயாளியின் உடம்பில் மிக்க இரத்தமிருக்குமானல், அதைத் குறைப்பதற்குக் கார் இரத்தக்குழாயைக் கீறி, இரத்தத்தை வெளிப்படுத்துதலாம்.

32. பீச்சு.

இது, கீழ்வாயினின்றும் மலம் வெளிப்படமால் வருந்துங்காலத்தில், மலத்தை வெளிப்படுத்தக் குழாய் வழியாய்த் தண்ணீரையாவது, வழுவழுப்பான தண்ணீர் போன்ற பொருள்களையாவது பீச்சுதல்.

புறமருந்து முப்பத்திரண்டின்விரிவு, மேல் இரணமருத்துவத்தில் கூறப்படும்.

மருத்துவம் மூன்று வகைப்படுமெனல்.

''சூதகந்தி தாதுபற்பம் சொன்னநாட் டார்சிகிச்சை
ஓதரிய மூலியிம்மண் ணூர்சிகிச்சை—வேதடரும்
க்ஷத்ரக்ஷா ராக்கினிநி சாசரச்சிகிச்சையென்றே
முத்தரத்த தென்று மொழி.''

எனப் பொருள் பண்பு நூல் கூறுகின்றமையால், **மருத்துவம்** மூன்றெனப்படும். அவை முறையே விண்ணவருறை, மக்களுறை, சூருறையென்பனவாம்.

விண்ணவருறை — இரச கெந்தகத்தாதுப்பொருள்களின் பற்பச் செந்து ராதிகளைக் கொண்டு செய்யும் மருத்துவமாம்.

மக்களுறை : மூலிகைகளைக் கொண்டு செய்யும் சூரணம், குடிநீர், வடகம் முதலியவைகளைக் கொண்டு செய்யும் மருத்துவமாம்.

சூர்உறை : காரம், அறுவை, கட்டுதல், சுட்டிகை முதலியவைகளைக் கொண்டு செய்யும் பரிகாரமாம்.

XXI. மருந்துறையுள்

1. அளவை.

2. மருந்து செய்யுமிடம்.

3. கருவி :

அடுப்பு.
புலமினுக்கி.
மட்கலம்.
சட்டி.
ஆகும் ஆகாப்பாத்திரங்கள்.
ஒரு தைல பாத்திரம் மற்றொரு தைலத்திற்காகதெனல்.
பாத்திரம் பழக்கும் விதி.
பாத்திர ஆற்றலும் விதியும்.
குந்தணை இலக்கணம்.
உரல், உலக்கை வகை.
சில்லியடை.
அம்மி, குழவிவகை.
மூழி இலக்கணம் (அகப்பை).
மூழி விகற்பம்.
அடுப்பின் பக்கங்களில் இருக்கவேண்டிய கருவிகள்.
அந்தந்தத் தொழிற்குரிய கருவியும் தைலந்துழாவு விதியும்.
பிடிச்சீலை—பற்றகற்றி—வடிகருவிகளின் பேதம்.
குழிக்கல்—(குழியம்மி—கல்வம்)

கல்வஞ் சுரண்டி.

உருக்குக் குகை செய்வகை.

பஞ்ச சுன்னக் குகை.

பஞ்ச பூதக் குகை.

குப்பி எரிமுறை.

நீராடு தொட்டியினிலக்கணம்.

ஊதுகுழல்.

குறடு.

நீர்காறு.

கரண்டி.

பணை.

சுத்தி.

வெட்டரம்பு.

அரம்.

பிடிசாவி.

வாள்.

உளி.

அகல்.

சாணைக்கல்.

பொறி (வாலை—மெழுகுதைலபானை—பதங்கச்சட்டி அல்லது பா முதலியன).

மருந்து முடிந்த பின் வைக்கும் பாத்திரம்.

அளவை.

நிறுத்தல்.

நிகழ்கால இரச உபரச பாஷாண முதலியவைகளின் **அளவை.**

32. குன்றி	..	..	1 வராகனெடை.
10 வராகனெடை	..	..	1 பலம்.
8 பலம்	..	..	1 சேர் (கச்சா)
5 சேர் (40 பலம்)	..	..	1 வீசை
50 பலம்	..	..	1 தூக்கு
2 தூக்கு	..	..	1 துலாம்.

குறிப்பு.

1 1/7	..	1 குன்றி
180 gr	..	1 தோலா.
$2\frac{1}{2}$ தோலா	..	1 (அவுன்ஸ்).
437.5gr.	..	1 02
8 குன்றி	..	1 மாஷா (15 gr.)
12 மாஷா	..	1 தோலா (180 gr.)

சென்னை, செங்கற்பட்டு முதலிய விடங்களில் வழங்கும் முகத்தல் அளவை.

360 நெல்	..	1 செவுடு
5 செவுடு	..	1 ஆழாக்கு
2 ஆழாக்கு	..	1 உழக்கு
2 உழக்கு	..	1 உரி (அரை நாழி)
2 உரி	..	1 நாழி (படி)
8 நாழி	..	1 மரக்கால் (குறுணி)
2 மரக்கால்	..	1 பதக்கு
4 மரக்கால்		1 தூணி (இரண்டு பதக்கு)
5 மரக்கால்	..	1 பறை
12 மரக்கால்		1 கலம் (மூன்று தூணி)
400 மரக்கால்		1 கரிசை (80 பறை, 33? கலம்)

குறிப்பு.—

$2\frac{1}{2}$ ஆழாக்கு	..	1 பயிண்ட்
$3\frac{1}{2}$ ஆழாக்கு	..	1 புட்டி
20 ஆழாக்கு		1 காலன்
6 காலன்	..	1 டின்

''ஆயுள்வேதியரறைந்தனர் நாழியி னளவை
ஏய காற்சதத் தொடியென வித்தொடிக் களவோ
தூய குன்றிமுந் நூற்றிரு பானெனத் தொகுத்தார்
ஆய நாழியெண் ணுவதே குறுணியி னளவே.''

(கருத்து) முந்நூற்றிருபது குன்றியெடை கொண்டது ஒரு பலம். இருபத்தைந்து பலம்கொண்டது ஒரு நாழி. எட்டு நாழி கொண்டது ஒரு குறுணி.

மண்டல நாள்—வெருகடி அளவை.

''மண்ட லம்மது மண்மக னோனரயில் வதியும்
நன்ற தாகுநாள் நாற்பதின்மே லைந்தாய் நவில்வர்
கொண்டி டும்வெரு கடியது மூவிரல் கொள்ளும்
பண்ட மென்பதே யாமெனப் பகர்ந்தன ரன்றே.''

(பொ-ள்) சிற்சில மருந்துகளைக் கொள்ளும் மண்டல நாள் தொகை மாறுபடினும், நாள் தொகை கூறாது, மண்டலங் கொள் எனவருமிடத்துக் கொள்ளவேண்டிய நாள், பூமகனாகிய அங்காரகன் ஒரு ராசியைவிட்டு மற்றொரு ராசியில் தங்கும் நாளாகிய 45நாளையும், வெருகடி மருந்து கொள் என்ற விடத்து, மூவிரல்களைக் கொண்டு அள்ளி எடுக்கும் மருந்தளவையும் கொள்ளுதல் வேண்டும்.

குறிப்பு :— செய்யுளில் வெருகடி என்பதற்கு மூவிரல்களைக் கொண்டு அள்ளி எடுக்கும் அளவு எனக் கூறியிருப்பினும், வெருகடி என்பதற்குப் பூனையின் பாதம் எவ்வளவு அளவுள்ளதோ அவ்வளவோ எனக் கொள்ளுதல் சாலப் பொருத்தமுடையது

மூல முதலியவை கூறல்.

விவரிக்காமல் மூலம் என்று குறித்தவிடத்தில் சமூலம் என்று கொள்ளவும்.

அளவை கூறாதவிடத்து சம அளவாகக் கொள்ளல் வேண்டும்.

மருந்து சாப்பிடுங் காலத்தின் அளவு கூறாதவிடத்து மூன்று நாள் மட்டும் கொள்ளவேண்டும்.

பத்தியஞ் சொல்லாதவிடத்து இச்சா பத்தியம் என்று தீர்மானித்தல் வேண்டும். இதனை அடியிற் கூறிய செய்யுளா லுணர்க.

''மூலங் கூறிடாப் பொருள்கள் ச மூலமாம் வகுத்துச்
சாலும் பாகம தறைந்திடாப் பொருள்சம பாகம்
காலங் கூறிடா மருந்துகொள் காலமுந் நாளாம்
ஏலப் பத்தியம் புகல்கிலா விடினிச்சா பத்யம்.''

வைத்திய சாலை விதி.

' குழிபடுமண் டெற்குமேற் குயர்வினிப்புத் தென்பாற்
கூழ்முதலொன் பானலமிக் குறியெழுநன் னிலத்தில்
வழிபடுதை வதங்குருபண் டிதன்சிகிச்சை களுக்கா
மானமொடீ ரைம்பொருத்தம் வைத்துயர்வாத
தெழுங்காற்

செழிபடுநன் மரங்கருஞ்சாந் திட்டிகைசுண் ணத்தூற்
சிற்பமுண ரக்குயிற்றத் திருவளர்மந் திரத்திற்
பழிபடுமுற் கருமசாந் திச்சாலை வேள்வி
பணிவைத்திய நாதர்பவ னம்பவனப் பாலே.''

(தே.தை.வ.)

(பொழிப்புரை) வடக்கு முகமாக நின்றுகொண்டு, ஒரு சதுரப்பூமி மத்தியில் ஒரு முழ ஆழமும், சதுரத்துக்குச் சதுரம் ஒரு முழ அகல நீளமுள்ள ஒரு குழியை மண் வெட்டியினால் வெட்டி, வெட்டிய மண்ணை அந்தக் குழியில் நிரப்ப அது அதிகமானாலும், அந்நிலமே தெற்கும் மேற்கும் உயர்ந்திருந்தாலும் அந்த மண்ணை நாவிலிட இனித்தாலும், அந்நிலத்தைத் தென் பாரிசத்தினிருந்து கொத்திச் சோதிக்குமிடத்தில் நற்சகுனங்களாகிய பொன், தானியம், இரத்தினம், செங்கல், தவளை பசுமாட்டுக்கொம்பு, அரணை, நண்டு, நன்னீர்ஊற்று ஆகிய இவ்வொன்பது வகைகளுள் ஏதேனும் ஒன்று தோன்றினாலும், அது உத்தம பூமியாம்.

அதில் வழிபடுதெய்வம், ஆசான், பண்டிதன், சிகிச்சை என்னும் இந்நாற் பெயருக்குள், ஒரு பெயருக்கிணங்கிய மானம், தீர்க்கம், தேகம் என்னும் முப்பொருத்தத்தோடு தசவிதப் பொருத்தமும் வைத்து †வாஸ்து, புருஷன் எழுங்காலத்தில் அஸ்திவார முதல் சுவர்களும் எழுப்பி, அதில் நல்ல மரங்கள், சேறு, செங்கல், சுண்ணம் என்னுமிப் பொருள்களைக்கொண்டு சிற்ப நூல் விதிப்படி இல்லமமைத்து அதில் வாயு திக்கில் ஆயுள் மருத்துவத்திற்கு முதல்கருத்தாவாகிய வைத்திய நாதர்க்கிடமும், கரும சாந்திச் சாலையும், வேள்விச் சாலையும் அமைக்க.

இதுமவுது.

''பாற்கரியோன் றிகைநீருப் பியமனுணர் சுனகன்
பலகலையீன் றற்றுயிலா சான்குடக்கு வடக்கி
னூற்கரிகொள் பிடக்குறைபற் சிகிச்சைநிரை யரன்பா
னோற்றனவ தானியங்கட் கேற்றநிவே சனஞ்செய்
மாற்கரியோ னுதல்விழிப்பாற் கீட்டிகையிற் றெளிநீர்
மரப்பேழைப் பித்திகைப்பல் கணிமுகுரக் ககனம்
மேற்கரிய நிறத்தூமம் போக்கிமுத லமைய
மேலையியல் கொடுபலவாஞ் சாலைகளும் புரியே.''

(தே.தை.வ.)

. தசவித பொருத்தமாவன: ஆகாயம், செலவு, யோனி, வாரம், திதி, நட்சத்திரம், ராசி, அங்கிசம், சாதி, வயது என்பவையாம்.

†வாஸ்து புருஷன் எழுங்கால நிர்ணயமாவது, சித்திரைத் திங்கள் 10 தேதி வைகாசித் திங்கள் 21 தேதி, ஆடி ஐப்பசித் திங்களில் 11 தேதி, ஆவணித் திங்கள் 6 தேதி, கார்த்திகைத் திங்கள் 8 தேதி, தைத் திங்கள் 12 தேதி, மாசித்திங்கள் 20 தேதி யாகும். இவைகளை விரிக்கிற் பொருளும், ஆதலால், மயன் நூல் முதலான சிற்ப நூற்களிற் காண்க.

‡ அறைமாறி எனுஞ் சொல், அலமாரி என மருவியது.

(பொழிப்புரை) இந்திரத் திக்கில் நீராடுதற்கும் லவணம் வைப்பதற்கும், இயமதிக்கில் உண்பதற்கும், நிருதி திக்கில் பல சாத்திரம் வைப்பதற்கும், பிரசவத்திற்கும், வருண திக்கில் சயனத்திற்கும், ஆசான் வசிப்பதற்கும், குபேர திக்கில் பண்டிதர் இருப்பதற்கும், மருந்து வைப்பதற்கும், சிகிச்சை செய்வதற்கும், பசுத் தொழுவங் கட்டுவதற்கும், ஈசான திக்கில் தவஞ் செய்வதற்கும், நவதானியங்கள் வைப்பதற்கும் வீடுகளமைத்து, அக்கினி திக்கில் அப்பாகத்துக்குள்ள கீழ் திசையில் தெளி நீர்கேணியும், சுற்றிலும், அறைமாறி வைத்துக் கட்டிய சுவரும், பலகணி வாசல்களும், கண்ணாடி பதித்த ஆகாயமும் புகைக் கூண்டும் அமைப்பதன்றிப் பாகசாலைக்காகத் தோன்றிய இலக்கணத்தைக்கொண்டு பற்பலசாலைகளையுஞ் செய்வாய்.

இதுவுமது.

''புரிபுனித வுலைபுடமுப் பூப்புடநெல் லுமிவெண்
புடைவையிருந் தைமயனப் புடமுதற்சாலைகளு
மெரிசுடரோ டிருசுடர்கா லுறையுறைவிற் கூட
மெற்றறட்டற் போழல்வினைக் கெஃகுநிறை கோல்கள்
வரிகறையெந் திரவலரை சிலைகுமிழ்ப்பு வடித்தல்
மணிவடகஞ் சுதைபொடிசிந் தூரவைப்பு குடிநீர்
விரிதிரவ நீர்படங்கு சாயனலே காதி
விளைச்சு லிச்சா லைகள்பலுறைச் சாலைகளும் விதியே.''
(தே. தை. வ.)

(பொழிப்புரை) சுத்தி செய்கிற சாலை, உலைச்சாலை, புடச்சாலை,* மூவிதமாகிய பூப்புடச்சாலை, நெற்புடச்சாலை, உமிப்புடச்சாலை, சீலைப்புடச்சாலை, கரிப்புடச்சாலை, மயனப்புடச்சாலை, தீபப்புடச்சாலை, சூரியப்புடச்சாலை, சந்திரப்புடச்சாலை, காற்றுலவுஞ்சாலை, காற்றுலவாச் சாலை, கூடச்சாலை, நறுக்கல், பிளத்தல், முதலிய தொழிற்குரிய ஆயுதச்சாலை, நிறுக்கிற துலைச்சாலை, உரற்சாலை, எந்திரச் சாலை, நன்னிக்கல் அம்மிச்சாலை, முறம் முதலிய வற்றால் கொழிக்கிற சாலை, வடிகட்டுகிற சாலை என்னும் இவைகளும், மாத்திரை, வடகம், சுண்ணம், பற்பம், சிந்தூரம், குடிநீர், திராவகம், தீநீர், படங்கு, ரசாயனம், லேகியம் இவைகளை விளைவிக்கின்ற அடுப்புச்சாலைகளும் (சத்திரம், க்ஷாரம், அக்கினி) என்னும் மூவிதச் சிகிச்சைக்குரிய கருவிச்சாலைகளும், இன்னும் பற்பல ஔடதச்சாலைகளும் செய்வாய்.

* குறிப்பு.—மூவிதப் பூப்புடங்களாவன மணவைப் பூப்புடம், குழிப் பூப்புடம், பூப்தணப்புப்புடம் என்பனவாம்.

கூடம்—சம்மட்டி.

படங்கு—பதங்கம் என வழங்குகின்றது.

இதுவுமது.

''விதித்தவடுப் பினிலனந்த பேதமவற் றுள்ளோர்
விகற்பமறை குதுந்தைல கிருதவகைக் கெல்லாந்
திதித்தவிலிற் றென்கிழக்கிற் குறுஞ்சுவரொன் றியற்றித்
தீக்கப்பா னெறியிப்பால் வட்டணைவாய் மணவை
கதித்தவெடி யெழிற்குருசு நீணாள முழுதுங்
கற்றானுக் கலங்காரக் குறடுதகத் திண்ணை
பதித்தகீழ்க் கடம்பொருந்தும் வடிச்சதுக்கஞ் சுருதி
பரவுவிநா யகபீட முதலுறையப் பண்ணே.''

(தே.தை.வ.)

(பொழிப்புரை) பாக சாத்திரங்களில், அநந்தபேத அடுப்புகளைக் கூறியிருக்கின்ற அவற்றுள் தைல கிருதாதிகளுக்காகும் ஒரு பேதத்தை மாத்திரம் கூறுவாம். முன்பியற்றிய வைத்திய சாலையினுடைய அக்கினி திக்கில் அமைத்த பாகசாலைக்குள் கிழக்குச் சுவரில் நின்றும் (11 அடிக்கு மேற்காக $2\frac{1}{2}$ அடி கனமும், 6 அடி உயரமும், தெற்குச் சுவரையொட்டி 23 அடி நீளமுமுள்ள) சிறிய சுவரொன்று எழுப்பி, அந்தச் சுவர்க்குக் கீழ்புறத்தில் தீமூட்டுவதற்கு வழியும், மேற்புறத்தில் பாண்டம் வைப்பதற்கு வட்டவடிவமான வாயையுடைய அடுப்பும், அதற்குத் தென்புறத்தில் புகை போதற்கு நீளமாயும் ஒழுங்காயுமுள்ள ஒரு குழாயும் அமைத்து அதற்கு மேற்புறத்தில் ஆயுள்வேதம் முழுதுங் கற்றுணர்ந்த பண்டிதன் உட்காருவதற்கு அலங்காரத் திண்ணையும், அதற்கு வல புறத்தில் தண்ணீர் நிரப்பி வைப்பதற்குக் கட்டிய ஒரு சதுக்கமும், புரியணைமேல் பொருந்தவைக்கின்ற வடிப் பாத்திரத்தில் தைலம் வடிப்பதற்காக அப்பாத்திரத்தை வைக்கின்ற வடிச் சதுக்கமும், வேதங்கள் துதிக்கும்படியான விநாயக பீடம், நந்தி பீடம் முதலியனவும் செய்வாயாக.

புலமினுக்கி இலக்கணம்.

''பாற்புலடை யேடகணி பாளை கவரிவகை
யாற்புலமி னுக்கியிழைத் தாசகற்றி—மேற்புலவர்
யாகசாலை யைப்பொருத வான்மெழுக்கிட் டச்சலந்தூய்
பாகசாலை யைப்புனிதம் பண்.'' (தே.தை.வ.)

(பொழிப்புரை) இயல்புள்ள தருப்பை, மாவிலை, தெங்கு, பனை இவ்வோலைகளின் அகணி, பாளைகள், கவரி ஆகிய இவற்றுள் ஏதேனும் ஒன்றால் புலமினுக்கி செய்து பதவியிலுள்ள தேவர்க்குணவளிக்கச் செய்கின்ற யாக சாலையைப்போல், பரிசுத்தப்படவிளக்கி, கோமயகோசலத்தால் பாகசாலையைச் சுத்தி செய்யக்கடவை.

மட்கலவிலக்கணம்:

"உவர்சவரு மற்றநீர் நிலக்குடிச்சக் கிரிகை
யுருவிவழித் திடுமணில்வா லுகமளவி யிழைத்துத்
துவர்மருவப் புளிப்பேற்றி யொருபக்கந் துவைத்துத்
தூருகனத் தோடேயெத் தொழிற்கும்பா சனஞ்செய்
அவிரனலேற் றிடுகுடிநீர் தைலமா திகட்கென்
றமைப்பதில் வெண் பருமணலை யடிக்கடியிற்
பொதிந்தே
சுவரடருஞ் சுள்ளைநடுக் கண்ணுறச்சுட் டெடுத்துச்
சொற்படிக்குண் மேலளவைக் குறியிலக்க மெழுதே."

(தே.தை.வ.)

(பொழிப்புரை) உப்பும் சவரும் இல்லாத நன்னீரையுடைய பூமியில் வசிக்கும் குயவன், திகிரியில் பாண்டங்கள் வனையும் போது கையை யுருவியுருவி வழித்துச் சேர்க்கும் மண்ணைச் சேகரித்து, அதற்கு நான்கில் ஒரு பங்கு மணலைக் கலந்தரைத்து, துவர் ஏற்றிப் புளிக்கவைத்து 15 நாட்கள் வரைக்கும் நாடோறும் மிதித்து, அந்த மண்ணில் அடிகனமுள்ளதாய் எவ்வகைத் தொழிற்கும் பயன்படும் மட்பாத்திரங்களைச் செய்வாயாக. இவற்றுள், ஒளியுள்ள தீயையுடைய அடுப்பில் ஏற்றப்படுகிற குடிநீர் தைல முதலிய வகைகளுக்கென்று நிருமித்துச் செய்கின்ற பாண்டங்களின் அடித்தூரில், வெளுத்த பருமணலை யப்பிப் பதித்துக் காயவைத்து, கண்விழும் படிக்குச் சுவரடர்ந்த சூளையிற் சுட்டெடுத்து, உபயோகத்துக்குத் தக்கவாறு, அக்காலங்களில் 1 படி முதல் 64 படி வரையில் குடிநீரளவையறிவதற்காக உட்புறத்தில் குறியும் வைத்து, வெளிப்புறத்தில் இலக்கமும் எழுதுவாயாக.

இதுவுமது.

"எழுதிடநேர் விரலறுநான் கிருபதிற்றே ழாயி
னியற்றுவா யெட்டிலக்கா யெந்தவெந்நீர்க் கடமும்
முழுதுமண நெய்மயனம் படங்குபூப் புடங்குய்
முகர்குடுவைப் பறியுறிபான் மோரெண்ணெ யுதகந்
தொழுதுபெறு தைவதமங களமிசையா திகளாய்ச்
சொல்லும்வகைக் கடங்களின்வாய் சுருங்கலிலக்
கணங்காண்
பழுதுறா தெடுத்தூற்றத் தாங்குகல மெல்லாம்
பண்டியினும் வாயகலப் பண்ணுவது முறையே."

(தே.தை.வ.)

(பொழிப்புரை) குடிநீர், தீநீர்ப் பானைகட்கு அகட்டினது குறுக்களவின் அங்குலம் 24 ஆகவும் உயரத்தின் அங்குலம் 27 ஆகவும் செய்யில் வாயின் அகலத்தை 8 அங்குலமாய்ச் செய்ய வேண்டும். ஈதன்றியும், முழுதும் மணப்புள்ள *சந்தனநெய், மெழுகுத் தைலம், படங்கு; பூப்புடத்தைலம், புகையாலுண்டாகிய திராவகம், குடுவைப்பறி, கொப்புளம் எழும்புவதற்காக வாயினால் காற்றை யுறுஞ்சுகிற ஒரு விதப்பாண்டம், பால், மோர், எண்ணெய் இவற்றை வைத்தல், தண்ணீர், தெய்வ ஆராதனை, மங்களகாரியம், சங்கீதம் முதலியவற்றிற்குப் பயன்படுதல் ஆகிய இவைகட்குச் செய்யும் குடங்கட்கு வாயானது தகுந்தபடி சுருங்கியிருப்பதே விதியாம். அன்றியும், சிந்தாமல் எடுத்து ஊற்றுகின்ற பொருள்களைத் தாங்குகிற பாத்திரங்களுக்கெல்லாம், இவைகளின் வயிற்றைப் பார்க்கிலும் வாயை விரிவாய்ச் செய்வது விதி யென்றறிக.

சட்டிகளினிலக்கணம்.

கல்லையொத்தவ் வெல்லைமுற்றுங் காவ றனைப்பூணின்
மல்லையொத்துக் கம்பீரம் வாய்ந்திருக்கி– னொல்லை
வறலுக்காஞ் சட்டியது மாந்துங் குவாத
வறலுக்காஞ் சட்டி யறி'' (தே.தை.வ)

(பொழிப்புரை) கலத்தைப்போலச் சுற்றிலும் வரம்புள்ளதாயிருக்கில், அது வறுக்கின்ற பொருளுக்குதவுஞ் சட்டியாம்.. மல்லையை (கப்பரை) ப்போல் ஆழமுள்ள தாயிருக்கில், அது அருந்துகின்ற சிறு குடிநீர் சுரச முதலியவைகளுக்கு உதவுஞ் சட்டியாம்.

புரியணைவகை: இதுவே புரிமணையாம்.

''தூத்திரக் கூர்ச்சம்பை யோடதி மூவட்சித் தொக்கரம்பை
வேத்திரச் சாய்கண்டற் பூதக் குயங்கள்வை வேய்பிரம்பாம்
பூத்திர ளாதிக ளாலாழி போற்பொருந் தப்பொருந்தாப்
பாத்திரத் தூரு சுமக்கும் புரிய ணை பண்ணுவரே.''
(தே.தை.வ.)

(பொழிப்புரை) தூய்மையான ஆண் தருப்பை, பச்சைக்கொடி, தெங்கின் நார், வாழை நார், பிரப்பங்கோரை, தாழை விழுது, ஆலம் விழுது, வைக்கோல், மூங்கில், பிரம்பு, பூங்கொத்து முதலியவைகளால் வட்டமாகக் கடத்தினது அடித்தூரைச் சுமக்கவும், இதைப் பூமியிற் படாமற் செய்யவுமான புரியணையைச் செய்வார்கள்.

---

*குறிப்பு—சந்தனநெய்—அத்தர்.

இவ்விதப் பாத்திரம் ஆகும் ஆகாதெனல்

''எக்குவா தந்தைலங் கிருத மாதி
 யெரிக்குங்கா னவலோகங் கடங்க ளொவ்வா
வொக்குமெனிற் பகைக்கஞ்சா வன்மை வேண்டு
 முலோகமஃ தின்றென்னி லதைப்புக் காகு
மிக்குறைகா ரனக்கனந்த மாமா ரற்கே
 மிலேச்சமைக்காங் கலங்களெனப் புலம்பு வார்க
ளக்குயில்முப் பிணிக்கருத்துங் கலங்க ளேயா
 மறைந்தவைகட் கெவ்விதத்துந் திறந்தான் மண்ணே.''

(தே.தை.வ.)

(பொழிப்புரை) எவ்விதக் குடிநீர், தைலம், நெய், முதலியவைகளைக் காய்ச்சப் புகுங்கால், நவலோகபாத்திரங்கள் ஒவ்வாவாம்; ஒவ்வுமென்னில், அந்தந்தப் பாத்திரங்களைக் கெடுக்கும் சத்துருச் சரக்குகள் சேர்த்தரைத்த கற்க மருந்துக்குப் பயன்படாததன்மை இருக்கவேண்டும். அஃது இன்மையால் ஒவ்வாதென்றறிக. இருப்புப் பாத்திரத்தில் சத்துருவின்றிய கற்கஞ் சேர்ந்த தைலாதிகளைக் காய்ச்சில், அவை சோபை வியாதிகளுக்காகும்.

வாதம், பித்தம், சிலேஷ்மம் என்னும் முப்பிணிக்கும், முறையே வெண்கலம், தங்கம், செம்பு பாத்திரங்களில் காய்ச்சலாமென்று சொல்லுவார்கள். அவை மூவகை உடலினர்க்கும் மருந்தூட்டுங் கலங்களே யல்லாமல், காய்ச்சு வகைக்கு ஆகாவாம் இங்குக் கூறியவைக்குள் எவ்விதத்தும் மட்கலமே உறுதியாம்.

மேலும் இதனைக் கீழ்க் காணும் செய்யுள் வலியுறுத்தும்.

''ஓர்மருந்துசெய் பாண்டமோர் மருந்தினுக் கொருவல்
சீரதாகுமட் பாண்டமே சிறப்பெவற் றினுக்கும்
 தேருவாய்த்தை லத்தினிற் கயத்திற்செய் பாத்திரம்
 சேருலோகத் திலீயம்பூ சியகலன் சிறிதாம்.''

ஒரு தைலப்பாத்திரம் மற்றொரு தைலத்திற் காகாதெனல்.

''ஒருதைலப் பாண்டத் தொருதைலங் காய்ச்சி
 னொருதைலப் பண்புகெட லொன்றோ— கருது
 மளவிலுற்றான் மெய்யுந்தீர்ப் பான்புகழுஞ் சான்றோர்
 கிளவியுநூன் மெய்யுங் கெடும்.''

(தே.தை.வ.)

(பொழிப்புரை) ஒரு தைலங்காய்ச்சிய பாத்திரத்தில் மற்றொரு தைலத்தைக் காய்ச்சினால் ஒப்பற்ற அப்பெரிய தைலத்தினது நற்குணங்கெடுவதொன்று மட்டுமோ? யோசிக்குமளவில், நோயாளியின் உடலும் மருத்துவன் புகழும், நிறைமொழிமாந்தர் மொழியும், மருத்துவ நூலின் உண்மையுங் கெடும்.

பாத்திரம் பழக்கும் விதி.

''எவ்வகைநெய்க் குங்கடமே தேற்கும் புதுக்கடத்தை
யவ்வகைநெய் யானனைத்தம் பட்டியம்மை—கவ்விப்
பிடிக்கவொட்டா மற்கழுவிப் பின்புணக்கி நெய்யைக்
குடிக்கவொட்டா மற்பழக்கிக் கொள்'' (தே.தை.வ.)

(பொழிப்புரை) எந்த வகை தைலங்களுக்கும் பழகிய பாத்திரமிராது, வேண்டுமாயின் யத்தனித்த தைலங்களுக்கேற்ற புதுப்பாத்திரத்தை அவ்வவ்வகை நெய்யால் நனைத்து, அதில் நீரை விட்டு விட்டுக் காய்ச்சி யூற்றிவிட்டு, அந்தக் காய்பலுண்டாகிய கருமையானது அடியில் கவ்விப் பிடிக்காதவாறு அப்போதைகப்பபோது கழுவி, அது கையிலொட்டாமல், அப்பாத்திரத்தை மாத்திரங் கறுக்கச் செய்யும் நேரத்தை அறிந்து எடுத்துக் கழுவிக் காயவைத்து அதில் விடுகின்ற நெய்வகைகளைக் குடிக்கவொட்டாமல் பழக்கிக்கொள்க.

பாத்திராற்றலும் விதியும்.

''கொள்ளுகட மீதடியிற் கூர்தந் திரிகைசுற்றித்
தெள்ளுமண்ணுங் கோவிட்டுஞ் சேர்த்தப்பி—யுள்ளுறவே
காயவிட்டுத் தீநீர்க் கடவிதிசெய் தீதினெய்யை
யேயவிட்டுக் காய்ச்சுவடு வில்.'' (தே.தை.வ.)

(பொழிப்புரை) முற்செய்யுளில் கூறியபடி, பழக்கிக் கொண்ட பாத்திரத்தின் மேல் கழுத்திலிருந்து அடிவரைக்கும் இருப்புத் தந்தியை (பூரண கும்பத்திற்கு நூல் சுற்றுவது போலச் சுற்றி). இறுக்கிச்சுற்றி, அதின்மேல் புற்று மண்ணும், சாணமும் அரைத்துப் பூசி, நிழலிற் காயவைத்துப் புனிதப்படுத்தி, குடிநீர்ப்பாத்திரத்திற்குச் சொல்லிய விதியை முடித்து, இதில் நெய்களை விட்டுக் காய்ச்சக் குற்றம் வாராது.

குந்தணை யிலக்கணம்.

''பணையடுப்பிற் றயிலாதி பருவமுற்
றுறாமுனடிப் பழுது றிற்குந்
தணையிருத்திப் பதத்தெடுப்ப ரக்கருவி
யெக்கலமீ தகடு மட்டு

மிணையநீக் கறத்தகடுங் கொளக்கீழ்த்தீ
 மிச்சிலெரிக் கிடப்பத் தப்பாற்
கணைமருவச் சாளரவா யிலுமமையக்
 கரும்பொன்னாற் கலஞ்செய் யீதே.'' (தே.தை.வ.)

(பொழிப்புரை) உயரமுள்ள அடுப்பில் தைலநெய்கள் காய்ச்சும்போது, பாகம் வந்ததும் வாராததுமாய் இருக்கிற தருணத்தில் அப்பாத்திரத்தில் பழுது நேருமாயின், அதைக் குந்தணையிற் சேர்த்துப் பக்குவம் வருமளவுங் காத்துத் துழாவிப் பதத்தில் சேகரிப்பார்கள்.

அக்குந்தணையின் விளக்கம்: தைலபாத்திரத்தின் வயிறு மட்டுங்கொள்ளும் அகலமும் உயரமும் இணக்கமும் உள்ளதாய், அடியில் கரிநெருப்பின் புகையானது வெளிப்படும்படியான துவாரங்களைப் பொருந்தி, உள்ளில் ஆகாயம் நிறைந்த வட்ட வடிவான பாதமுள்ள ஒரு அண்டாவைப் போல இரும்பினாற் செய்வதாம்.

உரல்வகையும் உலக்கைவகையும்.

''கல்லிருப்பொண் கஞ்சங் கறையா முனையிரண்டிற்
பல்லிருப்பொன் றொன்றுசமன் பாரைகளாங்—கல்ல
வழிக்கக் கொழுமூழி வைகைக் கடைப்பாரை
செழிக்கவமை சேகுமாஞ் செய்.'' (தே.தை.வ.)

(பொழிப்புரை) கருங்கல் இரும்பு, ஒளிபொருந்திய வெண்கலம் என்னும் இவற்றால் தனித்தனியே உரல்களும், ஒருமுனை பலாமுட்களைப் போலப் பற்களையுடையதாகவும், ஒரு முனை சமமாகவுமுள்ள இருப்புலக்கையும், இடித்த சரக்குகளைக்கிளற, வழிக்க ஒரு முனை கொழுவைப்போலும், ஒரு முனை அகப்பையைப் போலும் அமைத்த சிறிய கடைப்பாரையும் செய்வதன்றி, வயிரம் பொருந்திய மரத்தினாலும் உலக்கை செய்யக்கடவை.

சில்லியடை யிலக்கணம்.

''சாதிவங்க மிரதிகளாற் படகமிரண்
 டகமிணையுந் தகைமைத் தாய்க்கீழ்
பாதியிலுட் புறவரம்பிற் றடுத்தாழி
 வலையமொன்று பதித்துட் பாங்கர்
மீதிலணுத் தமர்களமைத் தவையுழிநார்
 தந்துதந்தி மிடையப் பின்னி
யோதியமுன் னோர்மூடத் திறக்கவிழை
 சில்லியடை யுருவ மீதே.'' (தே.தை.வ.)

(பொழிப்புரை) தேக்குமரம், வெள்ளி, பித்தளை என்னும் இவற்றுள் ஏதேனும் ஒன்றால், தம்பட்ட உருவமாகவும், மூடுங் கால் இரண்டினது ஆகாயமும் ஒன்று படுவதாகவும் (உள்ளிலும் வெளியிலும் பிதுக்க மின்றி அழகுறப் பொருந்துவ தாகவும்) கீழ்மேல் என்கிற அடையாளந்தோன்றுவதாகவுமுள்ள இரண்டு கருவிகள் அமைத்து (இவற்றுள் கீழ்க்கருவியின் உட்புற வரம்பில் 1/8 அங்குல ஆழமும், 1/2 அங்குல அகலமுமாய்ச் சுற்றிலும்) தடுத்து (மட்டசுத்தஞ் செய்து தடுத்த பள்ளத்தின் உயர்வும், உள்வெளியில் பிதுக்கமும், வெளியில் தூக்குவதற்காக அதன் இரண்டு பக்கங்களிலும் இரண்டு மோதிர வளையமும் அமைத்துள்ள வெள்ளியிலாவது பொன்னாலாவது செய்த) ஒரு வளையம் பதித்து, அதன் உட்புற வரம்பைச் சுற்றிலும் அணுப் போன்ற சிறுசிறு துவாரங்களிட்டு, அத்துவாரங்கள்தோறும் நார்பட்டு நூலால் முறுக்கிய இழைகளையாவது, பொன், வெள்ளி இவைகளின் கம்பிகளையாவது நுழைத்து, நெருங்கப் பின்னி, முன் கூறிய மேற்கருவியைக் கவிழ்த்து மூடி, அது திறக்க வும் மூடவுமாய்க் கீல்களிசைத்துச் செய்யக்கடவை. இதுவே சில்லியடை என்கிற சல்லடையாம்.

அம்மிவகை குழவிவகை.

''பொருதலைப் புனன் மருந்தும்
பொடியரை குழியம் மிக்குட்
டருதலைப் பருகாட் டம்மி
தனிப்பசை யுறைம சிக்கு
மொருதலைக் குழவி யம்மி
யுயர்மருந் திழைத்தற் கொவ்வு
மிருதலைக் குழவி யம்மி
யெக்கற்க வகைக்கு மேற்கும்.'' (தே.தை.வ.)

(பொழிப்புரை) அலைபொருந்திய வெள்ளம் போல் நீர்ப் பெருக்குள்ள பொருள்களையும், நீரையே விட்டு அஃது அலை யும்படி ஆட்டுகின்ற மருந்துகளையும் பொடியாகவாவது, கற்க வடிவமாகவாவது செய்யப்படும் பொருள்களையும், கல்வம் என்று சொல்லப்படுகிற குழியம்மியில் அரைக்கவேண்டும். கொடுக்கும் பொருள்களை உள்ளிழுக்கும் படியான ஆட்டு அம்மியானது, பிசின் போன்ற பசையுள்ள பொருள்களை மசியப் பண்ணும். ஒரு தலைக் குழவியம்மி, உயர்ந்த மருந்து வகைகளை இழைப்பதற்காகும். இரு பக்கம் தலையுள்ள குழவி அம்மி எல்லா வகையான கற்கவகைக்கும் உதவும்.

மூழியிலக்கணம்—இதுவே அகப்பை.

''பல்லாய தாழிகட்கவ் வுயர்வைநாற் பகுப்பாப்
பகுத்ததன்மே லிருபகுப்புப் பானைகளுக் கிந்தச்
சொல்லாய பகுப்பின்மிசை மூவரையாம் பகுப்புந்
தோன்றுமள வாய்த்தாளைத் துந்திவைத்துத் துறுத்துப்

புல்லாய மரக்கனியோ டிருப்பினுழைக் கேற்பப்
புகறயிலா திகட்கெல்லாம் புரிமூழி யிவற்றுள்
வில்லாய வாய்வாய்ச்சி வாயஞ்ச வமைப்பாய்
விண்டவற்று ளுளதுசில விகற்பமினி யுரைப்பாம்.''

(தே. தை. வ.)

(பொழிப்புரை) தைலம் முதலியவைகளைச் செய்கின்ற வாயகன்ற பற்பல தாழிகட்கும், உயரமுள்ள பானைகட்கும் அகப்பைகள் அமைக்கவேண்டும். அவற்றின் விதியாவது முற் கூறிய தாழிகளின் உயர்வுக்குச் சரியாய் ஒரு கோலையளந் தெடுத்து, அவ்வளவுகோலை *நான்கு பங்காகப் பகுத்து—2 பங்கை அக்கோலின் அளவுடன் சேர்த்து, அந்த அளவின்படி நீளமும் சிறிது முன் வளைவுமுள்ளதாகிய காம்பைப் பாண்டங் களின் வாய்க்குப் பொருந்திய வாறே செய்த தெங்கினது ஓடு களிலும், இருப்புக் கிண்ணங்களிலும், நுழைத்துக் கொள்வதாம், பானைகளுக்கோ வென்றால், அவ்விதமே 4—பங்காக்கி அந்தக் கோலின் மேல் இன்னும் $1\frac{1}{2}$ பங்கு கூட்டி அந்த அளவின் படிக்குத்தாளிட்டுக்கொள்ளவும், வில்லை ஒத்த முனை வளைவை யுடைய சில அகப்பைகளின் வாயை, வாய்ச்சியினது வாயும் அஞ் சும்படிக்குக் கூர்மைப்படுத்துவதுந்தவிர, இவ்விதமாகவே இரும்பி னாலும் அமைத்துக்கொள்க. இப்போது சொன்ன அகப்பை களில் சில வேறுபாடுண்டு, அவைகளையும் கூறப்படும்.

மூழிவிகற்பம்.

''உரைத்தலெனை மடக்குவட்டத் தகட்டகப்பை யந்த
வுருவமொத்துச் சில்லியடை மூழிகீழ் மேலும்
நிரைத்ததுளைக் கிட்டிகுவை முட்டைதிரி யக்கு
நீடுகச்சங் கசிதமத்த நேரலகா திகளாம்
விரைத்தைல முனிப்புறுநெய் பாறயிர்காய் குடிநீர்
வீயிரசா யனம்பாகிவ் விதங்களுக்கு மிரத
மரைத்தபா டாணகற்க மரவிடஞ்சேர் தைல
மாதிகட்கு மிருப்பகப்பை யிருப்பையகற் றுவரே.''

(தே. தை. வ.)

(பொழிப்புரை) முற்கூறிய அகப்பைகளிற் சில வேறுபாடுகள் உண்டு, தட்டை வடிவமாகிய மண்மடக்குப்போல வட்டமாக வும், பரந்த பள்ளத்தையுடையதாகவும் இருப்பது தகட்டகப்பை.

குறிப்பு.—.பாத்திரத்தில் தைல முதலியவை காயும்போது புகை கம்முவதினால் இவ்வளவு இருக்கிற தென்று கண்களால் பார்த்தறிவதற்குக் கூடாமையின், மூழியினால் அளவை யறியவேண்டுவதற்காக அதன் காம்பை நான்கு பகுப்பாகப் பகுக்கவும். துழாவும் போது கையில் சுடுகை ஏறாமலிருப்பதற்கு அந்த நான்கு பகுப்பின் மேல் இரண்டு பகுப்பு இருக்க வேண்டுமெனக் கூறினாரென்க.

அந்த உருவம் போன்று சல்லடைக் கண்களைப்போற் சிறு சிறு தொளைகளையுடையது சில்லியகப்பை. துளைகள் நிறைந்துள்ள இரண்டு இருப்புக் கிண்ணங்களைத் தடையிற் பதித்த கொல்லன் கைக்குறடு போல விரிக்கவும் குவிக்கவுமாய் இருப்பது துளைக்கிட்டியகப்பை. கூன் போல் குழியையுடையது குவையகப்பை. கோழிமுட்டை பதியும் பள்ளமுள்ளது முட்டையகப்பை. குறுக்காக நீண்டிருப்பது திரியக்கு அகப்பை, மரக்காலென்னும் அளவைக் கருவிபோல, வடிவமும் நீண்ட தாளுமுள்ளது கச்சகப்பை. இவைகளல்லாமல் துடுப்பு, மத்து, சலாக்கு முதலியவைகளும் ஆம். இவற்றுள் இருப்பகப்பை, பரிமளத்தைலம், இனிப்புள்ள மருந்து நெய்கள், பால், தயிர், பழம், இவைகளிற் செய்கின்ற குடி நீர், பூக்கள் சேர்ந்த இரசாயனம், பாகு முதலியவை கட்கும், இரசம், பாடாணம், தாவர நஞ்சு ஆகிய இவைகளைக் கூட்டி யரைத்த கற்கஞ்சேர்ந்த தைல முதலியவைகட்கும் விலக்கென்று அறிவாயாக.

அடுப்பின் பக்கங்களிலிருக்கவேண்டிய கருவிகள்.

''கொதியடக்கச் சிவிறிநெய்த்தீ யணைத்தலுக்கவ்
வாய்ச்சட்டி கோர கைக்குட்
பதிசுடுகற் கம்வழித்தற் கிருவாய்க்கைச்
சுரிகைசுடர் பாதத் துட்டீ
யதிகரித்த குந்தணைமு ழிக்கடத்தோ
டிணைப்பாண்ட மமைத்த லன்றிப்
பதிமினுக்கி யாதிதுணைக் கருவிகளு
மமைமணவைப் பாங்கிற் றானே.'' (தே.தை.வ.)

(கருத்து) தயிலம், மருந்து, நெய்கள் ஆகியவை காய்ச்சும் போது அடுப்பின் பக்கங்களில் முக்கியமாய் இருக்கவேண்டிய கருவிகளாவன :—

1. கொதியடக்குவதற்கு விசிறி.

2. தைலத்தில் தீப்பிடித்தால் அணைப்பதற்கு அந்தத் தாழி வாய்க்குச் சரியான ஒரு சட்டி.

3. அகப்பைக்குள் பற்றிக்கொள்கிற சுடுகையுள்ள கற்கம் வழிப்பதற்கு இரு புறமுங் கூர்மையுள்ள சிறிய கத்தி.

4. பதிவிளக்கு.

6. அடியிற் சுடுகையுள்ள குந்தணை.

6. துழாவுகின்ற அகப்பை வைத்தற்கு ஒரு சட்டி,

7. அடுப்பிலிருக்கிற பாண்டத்திற்கு அபாயம் நேரிடுங்கூ மாற்றுவதற்கு மற்றொரு பாண்டம்.

8. விளக்குமாறு முதலியனவாம்.

அந்தந்தத் தொழிற்குரிய கருவியும்—தைலந் துழாவு விதியும்.

''கடைவகையின் மத்துழலல் கைபாகங் கற்க
மடைவகைநெய்க் குத்துடுப்ப கப்பை—விடைமேற்
சொலுவதென்று ழாவலுறைத் தோயநிறைந் துள்ள
கலுவவரைப் பின்கதியைக் காண்.'' (தே.தை.வ.)

(பொழிப்புரை) கைப்பாகமாய்க் கடையப்படுந் தொழிற்கு மத்தும், கற்க வடிவத்தை யடைகின்ற களிமுதலிய லேகிய வகைத் தொழிற்குத் துடுப்பும், பொங்கிக் கொதிக்கின்ற தைல மருந்து, நெய் முதலிய வகைத் தொழிற்கு அகப்பையும் கருவிகளாம், இனி, தைல முதலியவைகளைத் துழாவுகின்ற பாக விதியைச் சொல்லுவதென்ன? கலுவத்திற் கனத்த மருந்தளாவிய நீரைநிறைத்து குழவியைக் கொண்டு எப்படி யரைக்க வேண்டுமோ, அப்படித்துழாவக்கடவை.

பிடிச்சீலைவகையும்—பற்றகற்றியும்.

''பருந்தந் திரட்டுவெண் படாம்வளைநார்ச் சீலை
மருந்தந்தம் வெங்கலவ கைக்குப்—பொருந்தும்
பிடிச்சீரை பற்றகற்றி பேருரியோ ரெஃகாத்
தடிச்சீரைப் பற்றறச்செய் தான்.'' (தே.தை.வ.)

(பொழிப்புரை) அடுப்பில் கொதிக்கின்ற தைலமுதலிய மருந்துகளின் முடிவில், சுடுகையுள்ள அப்பாத்திரத்தைப் பிடித்திறக்குவதற்கு, ரெட்டும், வெள்ளைத்துகிலும், வலைக்கோணியும், பிடிச்சீலைகளாம். தைலங்கள் காய்ச்சும்போது துழாவுதல் தவறுமாயின், கோழை போலும் பந்தமுள்ள கற்க மருந்தானது, கெட்டியாய்ப் பிடித்துத் தடித்து, அவ்விடத்து நெய்பசையை யொழித்து, அந்தப் பாண்டத்தினது அடியைப் பிளவுறுமாறு செய்யும், ஆதலால், அப்பற்றை உடனே அகற்றுவதற்காகப் பற்றகற்றி என்கிற ஒரு கருவியை இரும்பினால் செய்து கொள்ளக் கடவை. அது சக்கிலியர் ஆளுகின்ற பிறையுருவமுள்ள ஒரு வகைக் கருவியாம்.

வடிகருவிகளின் பேதம்.

''கண்ணிருக்கும் புத்தாடை கம்பளநார்ச் சீலைகட்சி
விண்ணிருக்கு நெய்யரியு மேயாகும்—வண்ணக்
குடிநீர் வகையுங் கொதிநெய் வகையும்
வடிநீர் வகையும் வடி.'' (தேதை.வ.)

(பொழிப்புரை) குடிநீர் வகையையும், கொதிக்கும் தைல முதலிய வகையையும், இன்னும் வடிக்கவேண்டிய நீர்வடிவமான பொருள்களையும் கண்களையுடைய புதிய துணி, சம்பளம், கோணி, பறவையின் கூடு, பன்னாடை ஆகிய இவைகளைக் கொண்டு வடித்துக்கொள்ளவேண்டும்.

கல்வங்களின் குணம்.

''கருங்கற்கல் வத்தவுடதங் காணினுடற் கின்பஞ்
நெருங்கிரத்தக் கல்தோடம் நீக்கும்—ஒருங்குவெள்ளைக்
கன்மருந்தோ வீரமொடு காரமுமில் மஞ்சளம்மி
யின்மருந்தோ நோய்விலக்க வெண்.'' (தே.தை.வ.)

(பொழிப்புரை) கருங்கற்கல்லினால் செய்யப்பட்ட கல்வங்களில் அரைக்கப்படும் மருந்துகள் உடற்கு இன்பத்தைத்தரும், சிவப்புக்கல் கல்வத்திலரைக்கப்படும் மருந்து தோடங்களை நீக்கும், வெள்ளைக்கல் கல்வத்திலரைக்கப்படும் மருந்துகட்கு வீரமும், காரமும் இல்லையாம், நோய்கள் விலகுவதற்கு மஞ்சட் கல் கல்வம் நன்மைதரும்.

''கருமை செம்மைய தாகிய கற்களைக் கொண்டு
உரிமை யாய்ச் செயுங் கலுவங்க ளுத்தம மாகும்
பெருமை யாம்வெள்ளைக் கல்லினா லியற்றுகல் வமதோ
அருமை யாமருந் தின்பல னத்தனை யிலதே.''

(பொழிப்புரை) கருமை நிறக்கல்லினாலும் செம்மை நிறக் கல்லினாலும் செய்யப்பட்ட கல்வங்கள் முதன்மையானதாம். வெள்ளை நிறக்கல் கல்வம் அவ்வளவு சிறப்புடையதாக மாட்டா தென்பதாம்.

கலுவஞ் சுரண்டியின் குணம்.

''இருப்பி னாற்கலு வஞ்சுரண் டியபொரு ளியற்றின்
துருப்பி யான்மருந் தின்குணஞ் சுருங்கிடு முருக்கு
விருப்ப தாகிய வெள்ளியு முத்தமம் விருட்சம்
மருப்பி னாற்புரி கருவியோ மத்திம குணமாம்.''

(பொழிப்புரை) கல்வத்திலிட்டரைக்கும் மருந்தை வழிக்கும் சுரண்டியானது, இரும்பினால் செய்யப்படின், இதன் துருப்பால் அரைக்கும் மருந்தின் குணம் தாழ்ந்து போம்; உருக்கு, வெள்ளி இவற்றால் செய்யப்பட்டவை உத்தம குணத்தையுண்டாக்கும்; மரம், விலங்கின்கோடு இவைகளாற் செய்யப்படும் சுரண்டிகள் மருந்திற்கு மத்திம குணத்தைக் கொடுக்கும்.

உருக்குக்குகை செய்வகை.

''வாதி யறிந்து வகையாகச் செய்தாக்கால்
பேதிக்குஞ் சிந்துாரம் பெலப்படுங்காண்—சேதிதனை
நவலோக சத்து நலமாக வேயுருக்க
பிலமாய்க் குகைவகைகள் பிரபலமாய்—நலமாகச்
சொல்லுகிறேன் கேளு சொற்பெரிய மூசைதனை
வெல்லவே சொல்வேன் விருப்பமாய்—நல்லாய்
களிப்பொறுக்குப் பத்து காரணமாய்க் கொல்லன்கிட்டன்
துளிப்பப் பலம்பத்து தாக்கியே—வளியாக

கழுதைலத்தி ரண்டு காரணமாய் வெண்கல்லும்
பழுதாய்ப் பலமிரண்டும் பாத்துமே—வழுவாதே
சீலைசுட்ட சாம்பல் சீராய்ப்பலமிரண்டு
வாலைக் கடுக்காய் வகையாக—காலத்தில்
கியாழமிட்டு விட்டரைத்து கட்டவே மூசை
தயாளி நிழலுணத்தித் தான்பாரு—வியாழமா
யிட்டுருக்கச் சத்து இன்பமா யுருகுமென
பட்டுமே நல்ல பதமிதுகாண்—கட்டும்

உபரசங்க ளெல்லா முருகுமே மூசைதனில்
அவசரத்தில் செய்து அலையாதே—வசமாய்
ஒன்றைவிட் டொன்று வுறுதியாய்ச் செய்து
யென்றைக்கு நின்றலைந்து மேங்காதே—நின்றே
வுருக்குமுகம் பாரு வுருக்கினத்தைத் தானெடுத்துப்
பெருக்கவே கீழே பிலமாக—இருக்க
எடுக்கயிலே கோலோடு இன்பமா யொன்றாகத்
திடுக்கிட் டெடுத்தூது செயமாகும்—அடுத்து

ஈரத்தி லூற்றாதே யினியவே ஆறி
பாரமா வெடுக்கப் பக்குவமாய்—கோரமாய்
உடைத்து அரைத்து வுண்மையாய்த் தானுருக்கு
படைத்தமணி யாகிப் பலிக்கும்—திடத்தை
அறிந்துமே செய்து அறிவாகச் சத்தெடுநீ
பிரிந்து போகாது பெருமையாய்—நரித்து
மூசைதான் சொன்னேன் முதன்மையாய்க் கேளும்
தாளாக மூசை தனைவைத்து—வாழாக.''

(யூகிவாத காவியம்.)

வேறு.

''திடமான குகைத்திட்டஞ் சொல்லக் கேளாய்
திகழ்வான கழுதைலத்தி பலமிரண்டு
வடமான வுமிக்கருகல் சீலைகடு சாம்பல்
வகைக்கிரண்டு பலமாகுங் களிமண்ணீ ராறு
குடமான கடுக்காயின் குடிநீர் விட்டுக்
குமூறவே யாட்டிமைபோற் குகைதான் பண்ணு
படவான மேற்சில்லு பதிலே பண்ணு
பற்றகுகை யுருக்கினத்திற் பலமா காதே.''

பஞ்ச சுன்னக் குகை.

''பிலமாகுஞ் சுன்னமென்ற துறைகட் கெல்லாம்
பேசுகிறேன் அஞ்சுசுன்னக் குகையைக் கேளு
அலமான நண்டுநத்தை சங்கு சிப்பி
அண்டோடு மிவை ஐந்துங் கல்வத்திட்டு
விலமான வர்க்கம்பால் தன்னா லாட்டி
வில்லைதட்டிக் காயவைத்துப் புடத்தைப் போட்டு
நலமான சுண்ணாம்பாங் கல்வத் திட்டு
நாடியரை வெண்கருவும் அர்க்கப் பாலும்
நலமான கல்சுன்ன நீரும் விட்டு
நலக்கரைத்துக் குகையின்மேல் சில்லுசெய்து
பிலமான இதில்வைத்துப் புடத்தைப் போடப்
பிலத்துமே கடுஞ்சுன்ன மாகும் பாரே.''

பஞ்ச பூதக் குகை.

''இருக்கவல்லோ சொன்னே னின்பரச வாதிகளே
பெருக்கபஞ்ச பூதக் குகைசொல்வேன்—இருக்கக்
கடல்நுரையு மஞ்சு கனக்கவே கற்சுன்னம்
திடமாக நீர்விட்டு திரமாகப்—படவரைத்து
அரைத்து வில்லை காயவைத்து அன்பாக் கரியில்வைத்துப்
பரைத்துடனே யூதப் பதமாக—நிறைத்துக்
கடுஞ்சுன்ன மாகும்—கடுமையாய்ச் சாரந்தான்
படுமுன் னெடைக்குப் பதமாக—இருவாக
அரைத்துசுன்ன நீர்விட்டு அன்புடனே யூதி
தெரிபடவே யெடுத்துச் சீராகப்—பரிவுடனே
யெடுத்துமே பாதி யியல்பான கல்லுப்பு
அடுத்துடனே சேர்த்து அரைத்தூது—படுத்து

ஊதக் கடுஞ்சுன்ன முண்மையாய்ச் சீனம்
பாதவே யூதிடவே பதிவாக—சேதப்
படாமலே சேத்துப் பாங்காகற் சுன்னநீ
றடைவாகச் சேர்த்து அரைத்தூது—திடமாகும்
பஞ்சபூதச் சுன்னம் பதிவாய்க் குகைபண்ணித்
தஞ்சமாய் தார மதில்வைத்து—நெஞ்சே
புடம்போட நீறும் பேறாய்க் குருவாகும்
நடம்போட வெல்லாம் நயக்குமே—படமாகப்

பாஷாணஞ் சுருக்கிட்டுப் பத்தியாய்த் தானேடுத்துத்
தாழ்வான யிச்சுன்னந் தாட்டிகமாய்க்—கோளாகப்
புடமிட் டெடுக்கப் பெரிய குருவாகும்
திடமுடனே யெல்லாஞ் சிறப்பதாம்—நடமாடி
வாதிகளாய்க் கூடி வகையறியா மற்றானும்
சேதிகளே கேட்டுச் செய்வோரும்—நாதியாய்த்
திட்டாமற் கூடித் திரிந்து நகைமூலி
நட்டுமே செய்து நடப்போரும்—முட்டவே

பஞ்சபூதக் குகையைப் பண்ணவே மாட்டாமல்
கெஞ்சி மணியமெனச் செய்வோரும்—மிஞ்சியே
குன்மம்வலி யெல்லாங் கெட்டுமே போகும்
வன்மமெல்லாம் போகும் வகையாகச்—சின்மயமாய்
உடலுயிரு போல முண்மையாய்ச் சொல்வேன்
திடமாக மூசைகளைச் செய்து—படமாகக்
கட்டுஞ் சரக்கையெல்லாங் காதல்ர வாதிகளே
பட்டுமே போகாப் பதமாகும்—முட்டாகப்

பூதக் குகையில் பொருந்தவே வைத்துச்
சேதப் படாமல் செயமாக—வாதமாம்
எரிக்கச் சரக்கு இதமாகத் தான்கட்டும்
பரிக்கக் கரியில் பதிவாக—இருக்கும்
கரியில் நின்று ஆடும் காதலாய் வேதை
பரியாக விக்குகையைப் பண்ணவே—வரியாக
கேட்கு மினிதே சேதமில் லாப் பொருளும்
சீக்கிரமாய் வந்து சேருமே—பார்க்க.''

(யூகிவாத காவியம்.)

குப்பி எரி முறை.

''ஆகவே செந்தூர வைப்புக் கெல்லாம்
அப்பனே குப்பியுட முறையைக் கேளு
போகவே பூநீறு குப்பி வாங்கிப்
புகழான கழுத்துவரை சீலை செய்து
ஈடகவே குடத்துக்கு மேல்க ழுத்தி
லிருவிரற் கடையளவு செய்து நீயும்
நேகவே சீலைசெய்த மட்டும் போது
நீண்டிருக்கும் குப்பிவா யுடையக் கேளு
தோகையே தீபதுணி சுற்றிக் கூட்டிச்
சுண்டிடவே கத்திரிப்பாய்த் துண்டித் திடுவாய்.''

''போமென்ற குப்பிக்கரை வாசி மருந்து
போட்டுநீ புதுச்சட்டி தன்னிற் கேளு
தாமென்ற மணலினடி நுனியும் தள்ளிச்
சட்டியில்நால் விரற்கடைதான் மணலை யிட்டு
ஆமென்ற குப்பியதின் மேலே வைத்து
அதின்மேலே மணல்கொட்டி அமிழ்த்தி நன்றாய்
ஏமென்ற குப்பியுட கழுத்து மேலே
யிருவிரற் கடைதெரிய விட்டு மூடிக்
கோமென்ற தளச்செந்தூ ரந்தானானால்
குப்பிவாய் மூடாதே சிலாகை யிட்டு
வாமென்ற ஏறுசெந் தூர மானால்
வளப்பக்கல் கொண்டுகுப்பி வாயை மூடே.''

குப்பியின் முறை.

காசிக் குப்பிக்குக் கழுத்துவரை சீலை செய்து, குப்பிவாயை சுற்றி ஒரு சாதாரண துணியினாலிறுக்கிக் கட்டி, அந்தத் துணியைக் கொளுத்திச் சூடான பிறகு துண்டித்துவிடவும். இப்படிப் பட்ட குப்பியில் அரைவாசியிருக்கும்படி மருந்தைப் போட்டு, ஒரு சட்டியில் நான்கு விரற்கடை மணலைக்கொட்டி அதன் மீது மேற்படி குப்பியை வைத்து, குப்பியின் கழுத்துவரை சுற்றியும் மணல் கொட்டியழுத்தவும். ஆனால் குப்பியின் கழுத்து இரண்டு விரற்கடை மேலே தெரியவேண்டும். தளச் செந்தூரங்கள் செய்யவேண்டுமானால், குப்பியின் வாயை மூடாமலே எரிக்கவும். வேண்டும் போதெல்லாம் குப்பியில் சிலாகையிட்டுப் பார்த்துக் கொள்ளவும் சாதாரண எரிப்புச் செந்தூரங்கட்கு வளப்பமாகக்கல்லால் மூடி செய்து போடவும். வளப்பமாக்கல் அடைப்பான் நடுவில் ஒரு சிலாகை நுழையும் படியான துவாரம் இருக்கவேண்டும்.

நீராடு தொட்டியினிலணகம்.

"ஆறு மடுவி லகர்முகமப் பாடுநருக்
காறு மடுவினெய்யப் பாடுநருக்—கேறுமடி
யெட்டகத்துத் தற்சதுர மேற்றமூன் றீதுபமோர்
மட்டகத்துத் தொட்டிவனை வார்.''

(தே.தை.வ.)

(பொழிப்புரை) ஆற்றிலும் தடாகத்திலும் காலையில் நாடோறும் மூழ்குகிறவர்கள், ஆறும் தடாகமும் இல்லாத இடத்தில் முழுகுவதற்கும், தைலம் தேய்த்து மூழ்குவதற்கும் பொருந்துமாறு 8 அடி தற்சதுரமாயும், 3 அடி உயரமாயும் இரண்டு தொட்டிகளை வேண்டுமிடத்தில் அமைத்துக் கொள்வார்கள். நெய்ச்சிக்கு அரைப்பு இவைகளைப் போக்குவதற்கு ஒன்றும், பிறகு சுத்தமுழுக்கிற்கு ஒன்றும் வேண்டுவதாகையால், இரண்டு தொட்டிகள் என்றார்.

தீ

சுசியக்கினி
விறகின் வகையும் குணமும்
எருவின் அளவும் குணமும்
தீயின் பெயரும் அதற்குரிய விறகின் இலக்கணமும்
புடபாகம்
ஊற்றுமுறைக்குத் துருத்திவகை

காலம்

ஊற்றுக்காலம்
செய்நீர் செய்காலம்
செந்தூரஞ் செய்யுங்காலம்,

செய்முறை.

சரக்குகளைக் கட்டும் பொருள்கள்
சரக்குகளைக் கட்டுதல் முதலியவற்றிற்குரிய ஐந்து நீர்
சிந்தூரமாக்கும் சரக்குகள்
நீற்றின மாக்கும் சரக்குகள்
சரக்குகளை வைத்து எரிக்கக் கடுஞ் சுண்ணம்
செம்பு, ஈயமூலிகைகள்
சாறுவரா மூலிகைகளில் சாறெடுக்கும் வகை.

சுசியக்கினி.

''அரணிகருங் கல்லெரிப்பூ தாதிபுடங் கட்காந்
தரணிசசி வேள்வித்தீ சாற்றும்—பரணிகளி
லிட்டவையெ டாமுன்வெறி யேறிமருங் கேகினவை
கெட்டவைவீ ரஞ்சுவைபோங் கேள்.''

(தே.தை.வ.)

(பொழிப்புரை) தைலம், மருந்து, நெய் வகைகளைக் காய்ச்சும் அடுப்பு, துருத்தியுலை, புடம் முதலியவைகளுக்கு, தூயநெருப்பு வேண்டும், அஃதாவது அரணி, சிகிமுகி, ஞாயிறு, கர்ப்பூரம், நாள் தீ (நித்தியாக்கினி) என்னும் இவ்வகைகளில் ஏதேனும் ஒன்றில் எடுக்கின்ற நெருப்பாம். இது நிற்க, அடுப்பின் மிசை வைத்திருக்கின்றவைகள் பாகமாகி இறக்குவதற்கு முன்னம், அவ்வடுப்பின் நெருப்பில் சிறிதேனும் மற்றொரு தொழிற்குச் செலுத்துகையில், விகற்பமுறுவது மன்றி அவை கட்குரிய அழகும் வீரியமும் சுவையும் நீங்கும்.

விறகின் வகைகள்.

''மெய்யனற்போக் கருந்தைலங் கட்கேம
புட்பிபலை விழிமூக் கட்டா
ணெய்யருந்து நெய்யாதி களுக்குசிலங்
கோற்கொடியா நீவிப் பூசும்
வெய்யபிடித் தைலாதி களுக்கிருப்பை
புளியாதி விறகா மின்றேற்
கெய்யவிகட் கவ்வவற்றிற் கேற்றவோர்
குலக்காட்டத் தீநன் றாமே.''

(தே.தை.வ.)

(பொழிப்புரை) உடலில், வெப்பு முதலிய பிணிகளை நீக்குகின்ற உயர்ந்த தைலங்கட்கெல்லாம், ஆவரை விறகும், சிற்றாமுட்டி விறகுமாம். கண், மூக்கு, செவி, பாதம் ஆகிய இவ்விடங்களில் இடுகின்ற நெய்களுக்கும், குடிக்கின்ற

தைலங்கட்கும், மருந்து நெய் இவைகட்கும், உசிலம் விறகும் இலந்தை விறகுமாம். தடவிப் பூசுவதாகிய சூடுள்ள பிடித்தைல வகைகட்கெல்லாம், இலுப்பை, புளி முதலிய மரங்களின் விறகுமாம். இவைகள் கிடையா விடத்தில், காய்ச்சுகின்ற தைலங்களின் தன்மைக் கேற்ப ஒரே வகையான விறகினது தீயாலெரிப்பது சிறப்புடையதாம்.

விறகின் குணம்

''மெய்யாஞ் சுரம்போக்கு மேலாங் கஷாயமதை
எய்யாமற் காய்ச்ச வெரிவிற —கையாகேள்
சீரான செவ்விலந்தை சிற்றமுட்டி யாவாரை
நேரான வூஞ்சலென்பாய் நீ.''

(பொழிப்புரை) உடலில் உண்டாகும் காய்ச்சலைப் போக்கக் காய்ச்சும் குடிநீர்கட்குச் செவ்விலந்தை, சிற்றாமுட்டி, ஆவாரை உசில் இவைகளின் விறகு பயன்படும்.

''வாதப் பிடிப்பதனை வாட்டுங் கஷாயமதைப்
போதப் புளிவேம்பு பூவரசு—மாதேகேள்
நல்லிலுப்பை யிவ்வைந்தி னாட்டுவிற கொன்றால்
வல்லமையாய்க் காய்ச்சி வடி.''

(பொழிப்புரை) வாதநோய்க்குச் செய்யும் குடிநீர்க்குப் புளி, வேம்பு பூவரசு, இலுப்பை. அரசமரம் இவற்றின் விறகுகளாம்.

பட்ட விறகு பல நாள்முன் வெட்டிய விறகு பச்சை விறகு இவைகளின் குணம்

''பட்ட விறகிற் பயனில்லை பன்னாண்முன்
வெட்டும் விறகு மிகுபயனில்—திட்டமுடன்
பச்சை விறகு பயன்போக்கு மும்மதிமுன்
எச்ச விறகை யிடு.''

வயிர விறகு பட்டை உமி சருகுகளின் குணம்

''வயிர விறகால் வளருமே வெப்பம்
செயிரான பட்டை தினவாக்கும்—உயிரீயும்
சாலியுமி நேர்மைதருஞ் சாற்றும் சருகோசொல்
பாலின்மொழி யேபயனு மில்.''

(பொழிப்புரை) அடுப்பெரிக்க—மருந்துகள் செய்ய வயிரவிறகைப் பயன்படுத்தினால் பித்தம் பெருகும். பட்டையை எரித்தால் தினவுண்டாகும். நெல் உமி நல்லது. சருகு, மிகவும் பயனற்றது.

கரிவரட்டியின் குணம்

''சுட்ட கரியாற் சுரக்குமே யெப்பயனும்
தட்டும் வரட்டியினாற் றான்பயனென்—இட்டமுறு
லேகியமெண் ணெய்கிருத நேர்த்தியா யோர்வருக்கம்
ஆகும்விற கானீ யடு.''

(பொழிப்புரை) விறகுகளைக்கொண்டு சுட்டெடுத்த கரியைப் பயன்படுத்தி எரித்து வாங்கியுபயோகிக்கும் மருந்துகள் மேன்மையானவையாகும், கையினாற்றட்டும் வரட்டியாலெரித்து வாங்கும் மருந்துகள் யாதொரு பயனையுந்தாராதென்பர், இலேகியம், எண்ணெய், கிருதமிவைகளைச் செய்வதற்குக் காய்ந்த புதிய விறகே மேலானதாகும்.

எருவின் அளவும் குணமும்

''எருவின தகலஞ் சாண்மே லங்குல் மூன்ற தாகும்
பருமனோர் விரலதாகும் பகருவாயீர மற்றம்
சுரபியின் சாண முன்னாஞ் சொல்மேதிச் சாணம் பின்னாம்
விரவு சாணத்தாற் செய்த வியனெரு கடைய தாமே.''

(பொழிப்புரை) சுரபி—பசு (கபிலநிறப்பசு), வரட்டியின் அகலம் 6 அங்குலமும் பருமன் ஓர் விரளலவுமாம். பசுச் சாண எருமுட்டை சிறப்புடையதாம். எருமைச்சாண எரு முட்டை இரண்டாந்தரம், கலப்புச்சாண வரட்டி கீழ்த் தரமாம்.

''வனத்திடு வரட்டி யிட்ட
மருந்தது சிறந்த தாகும்.
கனத்தகா ராட்டின் சாணங்
கடுவேக மருந்திற் கீயும்
மனைப்படு வரட்டி யாலே
மங்குமே மருந்தின் வேகம்
நினைத்திடா யழுகற் சாண்
நீக்குவாய் மருந்தி னுக்கே.''

(பொழிப்புரை) மருந்துகள் புடம்போடக் காட்டு வரட்டியைப் பயன்படுத்தல் நன்றாம். ஆட்டுச்சாண வரட்டி மருந்துக்குக் கடுவேகந்தரும். வீட்டில் தட்டப்படும் வராட்டியினால் மருந்தின் வேகம் மங்கிவிடும். அழுகல் சாணத்தால் வரட்டி செய்யப்படாது. செய்தாலும் அது மருந்திற்குதவாது.

தீயினளவு நான்கு வகைப்படுமெனல்

''விளக்கை யொத்திடு தீயது தீபமா மேவிக்
குளத்தி னம்புயப் பூநிகர் தீக்குளிர் கமலம்
தளத்த கன்னியின் பூநிகர் தீத்தளிர் கதலி
வளத்த காட்டுறு தீயதே காடவன் னியதாம்.''

(பொழிப்புரை) தீ அளவு நான்குவகைப்படும். விளக்கின் சுடரைப் போல் உள்ளதீக்குக் தீபாக்கினி என்றும், மலர்ந்த தாமரைப்பூவைப்போல் உள்ள தீக்குக் கமலாக்கினி என்றும், வாழைப்பூவைப்போல் உள்ள தீக்குக் கதலியாக்கினி என்றும், இந்த அளவுகட்கு மிகுதிப்பட்ட தீக்குக் காடாக்கினிஎன்றுங் கூறுவர்.

''விரகி ரண்டு விறற்கன நீளஞ்சாண்
மருவி ளக்கது மரைமலர் கதலியும்
வருகா டாக்கினி வகையொன்றி ரண்டொடு
பெருகு மூன்றுநால் பெய்முறை யீதரோ.''

(பொழிப்புரை) அக்கினிக்கு விறகின் அளவு—நீளம் சாண்.

தீபாக்கினிக்கு 1 கட்டை கனம் இருவிரல்
கமலாக்கினிக்கு 2 கட்டை
கதலியாக்கினிக்கு 3 கட்டை
காடாக்கினிக்கு 4 கட்டை

புடபாகம்.

காடைப்புடம் —ஒருவரட்டி
கவுதாரிப்புடம்—மூன்று வரட்டி (சிலர் இரண்டென்றுங் கூறுவர்).
கோழிப்புடம் (குக்குடப்புடம்) 10 வரட்டி
பன்றிப்புடம்—50 வரட்டி
கனபுடம்—800 வரட்டி
கஜபுடம்—1000 வரட்டி (ஒருகனகெச குழிபிடிக்குமளவு என்பர்).

ஊற்று முறைக்குத் துருத்தி வகை

சுன்னத்திற்கு—ஒரு துருத்தி
சத்து உருக்குவதற்கு—இரண்டு துருத்தி
செம்பு, இரும்பு இவைகளை ஊதிச்சத்தெடுக்க | நான்கு துருத்தி வேண்டும்

ஊற்று காலம்

''அற்பசி கார்த்திகை யடர்ந்திடு மார்கழி
நற்பசி யூற்று நலம்பெறுங் காலந்தான்
வற்பிசை சத்துக்கள் வருமே யுருக்கினால்
கற்பிசை யூற்றுக் கலந்திடுங் காலமே.''

செய்நீர் செய்யவேண்டிய காலமும் அதன் பெருமையும்

தை, மாசி, பங்குனி.

செய்நீரினால் உப்பு, உபரசம், உலோகம் நவமணி இவைகளைச் சுண்ணமாக்கலாம். இது பாஷாணங்களைக் கட்டுவதற்கும் உருக்குவதற்கும் பயன்படும்.

செந்தூரம் செய்வதற்குறிய சிறப்புத் திங்கள்

''சிங்கமதி கன்னிமதி சிலைத்திங்கள் குடமாசம்
சித்திரை மாதமுமாம் சித்தியுறா தேனையவை.''

ஆவணி, புரட்டாசி, மார்கழி, மாசி, சித்திரை, செந்தூரம் செய்வதற்குச் சிறப்பு மாதங்கள். மற்றவை பயன்படா.

ஆடி, ஆவணி, புரட்டாசி ஆகிய இம்மாதங்கள் ஆகுமென்று யூகிவாதகாவியத்தில் உணரலாம்.

சரக்கைக் கட்டும் பொருள்கள்

கண்ணம், தைலம், புகைநீர் (திராவகம்), செய்நீர் இவைகளால் சுருக்கிட்டு, நெருப்புக்குப் புகைந்தோடும் சரக்குகளை நெருப்பிற்குப் புகைந்தோடாமற்படிக்குக் கட்டலாம். அல்லது சுக்கான் நீர் பதக்கில், சரக்கை அதன் அடியில் வைத்து, நீர் சுண்டுமட்டும் எரித்து எடுக்கவும், பிறகு சுக்கான் நீரில் சுருக்கிட வேண்டும். இவ்வாறு ஐந்து முறை செய்ய நெருப்பிற்கோடாது.

சரக்கை கட்டும் ஐவகை நீர்

கோழிமுட்டை, வெண்கரு, முலைப்பால், புகைநீர், சுண்ணாம்புத் தெளி நீர், எலுமிச்சம்பழச்சாறு இவைகளை விட்டரைக்க, ஏந்தச் சரக்கும் செந்தூரமாகும். இந்த ஐந்து நீரினால் சரக்குகளுக்குச் சுருக்கிடச் சரக்குகள் கட்டும்.

ஐவகை நீர்

கலி வெண்பா

"அஞ்சுநீர் சொல்வன் அடைவாகும் வெண்கருவும்
கொஞ்சு முலைப்பாலும் கொள்கையால்—மிஞ்சும்
புகைநீரு மாகும் பொருகின்ற சுண்ண
வகையான நீராகும் வன்மை—தகையா
எலுமிச்சஞ் சாறாகு மின்பமா மைநீர்
பலக்கவே விட்டரைக்கப் பாக்யம்—வலிவாய்ச்
சுருக்கிட் டெரிக்கச் சுகமாகக் கட்டும்
இறுக்கி யிருக்கு மிதிலே—பெருக்கவே
சொன்னசொல் தப்பாச் சுருதியை யாராய்ந்து
பின்ன ருலாவைப் பிரியமாய்—நன்னயமாய்ப்
பார்த்துமே யெச்சரக்கும் பாகாய்ச் சுருக்கிட்டுச்
சேர்த்துமே சுண்ணமிகு சீர்பெறவே—பார்த்தங்
கெரிக்கக் குருவாகு மின்பச் சரக்கும்
பரிசிக்க வேதைமுகம் பாறும்—தெரிந்து
பிழிந்தால் சாறுவரும் பேதைமட—வாதி
அறிந்தால் சரக்கை யடைவாய்த்—தெரிந்து
சரக்கை யிறுக்கும் சடுதியில் வாதம்
பெருக்கவே யேவல் பெறும்." (யூகிவாத காவியம்.)

(கருத்துரை) இக்கலிவெண்பா ஐந்து நீர்இவையெனக் கூறுகின்றது.

(பதவுரை) அஞ்சுநீர் சொல்வன்—சரக்கு முடிக்கும் ஐவகை நீரைச் சொல்லுவேன், அடைவு ஆகும்—முறையான, வெண் கருவும்—கோழிமுட்டையின் வெண்கருவும், கொஞ்சும்—குழந்தைகள் கொஞ்சிக் கொஞ்சிக் குடிப்பதற்குரிய, முலைப் பாலும்—தாய்ப்பாலும், கொள்கையால் மிஞ்சும்—யாவரும் மருந்து முடிப்பதற்குச் சிறந்த தென்னும் கொள்கையால்உயர்ந்த தாகிய, புகைநீரும்—திராவகமும், பொருகின்ற—சரக்குகளை மடிக்கின்ற, சுண்ணம் வகையானநீரும்—கற்சுண்ண சம்பந்தப் பட்ட நீரும், வன்மைதகையா—தன்வன்மையிற் குறையாத, எலு மிச்சம் சாறும் ஆகும்—எலுமிச்சம் பழத்தின்சாறும் ஆவதாகும், இன்பம் ஆம்—(மருந்து முடிவதால்) இன்பமுண்டாகின்ற, ஐநீர்—இந்த ஐந்துவகைநீரையும், பலக்கவிட்டு—மருந்துகள் வன்மை யையடையும் வண்ணம் விட்டு அரைக்க ஒன்றாகச் சேர்க்க—அரைத்தால், பாக்கியம்—மருந்துகள் நன்மையாக முடியும், வலிவாய்—வன்மையாய், சுருக்கிட்டு—(இவற்றால்) சுருக்கிட்டு எரிக்க—எரிப்பதினால், சுகமாகக்கட்டும்—நன்மையாக கட்டும், அத்துடன் இறுக்கியிருக்கும்—அழுத்தியிருக்கும்,—இதில்—இதில் பெருக்க—விரிவுபடுத்த, சொன்னசொல்தப்பா சுருதியை ஆராய்ந்து—சொல்லி வைத்த பெரியோர் சொல்லை ஆராய்ந்து, பின்னர்—பிறகு, உலாவை—என்னார் பாடப்பட்ட யூகிமுனி உலாவை, பிரியமாய்—விருப்பத்துடன், நன்னயமாய்ப் பார்த்து

துமே—நன்றாய்ப் பார்த்து, எச்சரக்கும் பாகாய்ச் சுருக்கிட்டு —எந்த சரக்கையும் பக்குவமாய்ச் சுருக்கிட்டு, சேர்த்துமே, சுண்ணமிடு—சீர்பெறவே—சிறப்புப்பெற சுண்ணம் செய்வாயாக ாத்தங்கொரிக்க உகுருவாகும்—பக்குவமாக எரிக்க குருவாகும். இன்பச் சரக்கும் பரிசிக்க வேதைமுகம்—அச்சிறந்த சரக்கானது மற்றச் சரக்குகள் பரிசிக்க வேதிக்கும், தெரிந்து பிழிந்தால் சாறுவரும்—சாறுவரா மூலிகைகளுடன் சேர்த்துப் பிழிய சாறு வரும். பேதை மடவாதி அறிந்தால் சரக்கை அடைவாய்த் தெரிந்து சரக்கை யிறுக்கும்—பேதமைக் குணத்தையுடைய வாதி இதனைத் தெரிந்து கொண்டால் நெருப்புக்கு ஓடும் சரக்குகளை எல்லாம் கட்டுகளாகச் செய்துகொள்வான், சடுதியில் வாதம் பெருக்கவே, யேவல்பெறும்—சீக்கிரத்தில் வாதம் கைவரும்.

சிந்தூரத்திற்கு ஆதி சரக்குகள்

உபரசம், பாடாணம், உப்பு, இவைகளைச் சிந்தூரிப்பதற்காக கந்தகம், வெடியுப்பு, சீணம் (படிகாரம்) இவைகளைச் சேர்த்தால் சிவக்கும். கல்லாப்பு, நாகம், தங்கம், இரும்பு, கெளரி, நிமிளை இவைகளும் ஆகும்.

நீற்றினத்திற்கு சாதி சரக்குகள்

புழுகு (புனுகு), வீரம், பச்சைக் கற்பூரம், குருவண்டு, சூடன்.

சரக்குகள் வைத்தெரிப்பதற்குக் கடுஞ்சுன்னங்கள்

கல்லுப்பு சுன்னத்தில் தாளகத்தை வைத்தெரிக்க, உருகி மணி யாகும்.

வேறு

கற்சுன்னம் படி 2—இவ்விரண்டையுங் கரைத்துத் தெளி பூநீறு படி 10— விறுத்துக் காய்ச்சி, குழம்புப் பக்கு வத்தில் இறக்கி வெய்யிலில் வைக்க உப்பாகும். இந்த உப்பினால் எல்லாச் சரக்கும் மடியும். இதனால் ஆக்கப்பட்ட மருந்து எதுவும் நெருப்புக்கு ஓடாது.

நெருப்பிலிட்டு ஊதி எடுக்கின்ற சுண்ணம் முதல் தரம். பூ நீறுடன் சேர்த்துச் செய்யும் சுன்னம் இரண்டாந்தரம். உப ரசத்துடன் சேர்த்து செய்யும் சுன்னம் மூன்றாந்தரம்.

சுன்னங்கள் செய்யுங்காலம்

பங்குனி சித்திரை

செம்பு முலிகை

''காணப்பா மூலிகையிற் செம்பு சொல்வேன்
கலந்தவுரி யோரிதழ்த் தாமரையும் கேளு
பூணப்பா புளியரணை கோவை யோடே
புகழ்சிவந்த கொடிவேலி சிறிய கீரை
ஆணப்பா செந்திராய் பிடாரமுகி
யப்பனே கரிசாலை யங்க பாதி
தோணப்பா செவ்வல்லி கறுத்த செம்பை
சுகமான செங்கீரை கௌதும்பை காணே.''

(இஃதோடு பொற்றலைக் கையாந்தகரையுமாம்.)

அங்கபாதி—செருப்படை பிடாரமுகி—வெண்ணாயுருவி

ஈய முளிகை

''கடிந்துநின்று மூலிகையி லீயம்வரச் சொல்வேன்
கண்டபடி யேசொல்வேன் களங்கெண்ணாதே
படிந்துநின்ற சுரைசீந்தி பொன்னாங் காணி
பருவமுடன் சிறுபீளை விழுதி யோடு
படிந்துநின்ற செருப்பையும் முசட்டையோடை
மருவியதோர் முத்திருக்கும் செவிதான் கேளு
அடிந்துநின்ற வேலியொடு வெள்ளைக் குன்றி
அப்பனே வெள்ளைச்சாரணையுங் கூட்டே
கூட்டப்பா வெள்ளறுகு வெள்ளைக் காக்கன்
குலாவியதோர் வெட்பாலை வெதுப்ப டக்கி.''

வெதுப்படக்கி—தலைச்சுருளி, பேய் மட்ருடி, முத்திருக்கும் செவி—எழுத்தாணிப் பூண்டு, நிலக்கடம்பு இனம்.

சாறு வரா முலிகைகளில் சாறு எடுக்க

1. வெங்காரத்தைக் கழுவி எருக்கன் பாலில் தோய்த்துத் தோய்த்து வெய்யிலில் காயவைக்கவும், இவ்வாறு 5 முறை செய்யவும். கல்மதத்தை விளக்கொளியில் காட்ட உருகும். அதிப வீரம் போடவும். வீரம் (கல் மதத்தில்) கரைந்த பிறகு, வெண்காரத்திற்குக் கவசமிட்டு, வெய்யிலில் காய வைக்க அது பூத்து போம்.

2. நாயுருவிச் சாம்பல் ஒரு படி ஒரு பாண்டத்திலிட்டு, வாழைக்கிழங்கு நீர் 4 படி ஊற்றிக் கரைத்து, தேற்றான் கோட்டைச் சாந்தை அதிலிட்டுத் தெளியவைத்து, அத்தெளிவில் ஒரு பலம் பூரத்தை விட்டு, நீர் சுண்டும் வரை எரிக்க உப்பாகும். இதற்குப் பூர உப்பு என்றும் கர்ப்பூர உப்பு என்றும் பெயர்.

3. முடக்கறுத்தான் சுட்ட சாம்பல் ஒரு படியை ஒரு பாண்டத்திலிட்டு, கோமூத்திரம் 4 படி விட்டுக் கரைத்துத் தெளிவிறுத்து அதில் ஒரு பலம் வெங்காரம் போட்டுக் காய்ச்சி எடுக்க, வெண்மையான உப்பு உண்டாகும். இதற்கு வெண்கார லவணம் என்று பெயர்.

சாறு வராத மூலிகைகட்கு மேற்சொன்ன சுன்னங்களில் ஒன்றைச் சிறிதளவு இட்டுக் கசக்கிப் பிழியச் சாறுவரும்.

மருந்தின் பக்குவா பக்குவகுணம்

''பக்குவபா கத்தையுறு பஞ்சின்மருந் தும்பிறழ
பக்குவபா கத்துப் பருமருந்தும்—மெய்க்குறுங்கால்
அக்கால மும்பருணும் ஆழிமருந் துஞ்சேடன்
சுக்கால முப்பொருந்துங் காண்.''

(ப.கு.சி.)

(பொழிப்புரை) எளிய முறையினாற் செய்யப்பட்ட மருந்துகளே யானாலும், பக்குவ பாகத்தைப் பொருந்துமானால், அவை தேவர்கள் உண்ணத் திருப்பாற்கடலில் உண்டான அமிர்தத்திற்கொப்பாகும்; பெருமுறையினாற் செய்யப்பட்ட மருந்துகளேயானாலும், செய்பாகம் கெடுமானால், அவை திருப்பாற் கடல் கடைந்த காலத்தில் வருத்தம் பொறாத ஆதிசேடன் கக்கிய விடத்திற் கொப்பாகும்.

பக்குவப்படுத்தினது மீண்டும் பக்குவப்படுத்த நஞ்சாம்

''பாகமொடட் டிக்குளிர்ந்த பாணியிர சாயனநல
வேகவிலே கங்குடி நீர் மெய்ச்சுரம்— ஏகுமிரா
மீந்த வெஞ்ச னாதிகளை மீளவொருக்கா லட்டி
மாந்தநஞ்சம் வேறிருக்குமா .''

(ப.கு. சி.)

(பொழிப்புரை) ஒரு முறை பக்குவத்தோடு செய்யப்பட்டு ஆறிவிட்ட நீர், ரசாயனம், இலேகம், குடிநீர், சுரசம் இரவில் மிகுந்த பொருள்கள் ஆகிய இவைகளை மீண்டும் ஒருமுறை பக்குவப்படுத்தி உண்டால் அவை நஞ்சைசுத் தன்மையுடை செய்வனவாம்.